விகடன்
பிரசுரம்

ஆடத் தெரியாத கடவுள்



நீதிபதி எஸ்.மகராஜன்



நீதிபதி எஸ்.மகராஜன்

நீதிபதி எஸ்.மகராஜன் 1913-ல் திருச்சியில் பிறந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி. பட்டம் பெற்றார். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமைப் பெற்றவர். 1935-ல் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டு பாளையங்கோட்டையில் தொழில் தொடங்கினார்.

மாவட்ட முன்சீப்பாக அமர்த்தப்பட்டு சப்-ஜட்ஜாகவும் மாவட்ட நீதிபதியாகவும் பதவி உயர்வு பெற்றார். புதுச்சேரியின் தலைமை நீதிபதியாகவும், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் பணிபுரிந்தார்.

தமிழ்நாடு சட்டத் துறை ஆட்சிமொழி ஆணையத்தின் தலைவராகப் பணிபுரிந்த காலத்தில், ‘குற்ற விசாரணை முறைச் சட்டம்’, ‘இந்திய சாட்சியச் சட்டம்’, ‘இந்திய தண்டனைச் சட்டம்’, ‘சட்டச் சொல் அகராதி’ ஆகிய நூல்களை ஆணையம் வெளியிட்டது.

தமிழ்நாடு சிறப்பு இலக்கிய மொழிபெயர்ப்புத் திட்ட வல்லுநர் குழுத் தலைவராகவும் பணிபுரிந்து இருக்கிறார். 1978-ல் சென்னை தமிழ் இசைச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1982-ல் இயற்கை எய்தினார்.

ஆடத் தெரியாத கடவுள்

நீதிபதி எஸ்.மகராஜன்

விகடன்
பிரசுரம்

Title :
AADA THERIYADHA KADAVUL

ISBN : 978-81-8476-437-6

விகடன் பிரசுரம்: 671

நூல் தலைப்பு:
ஆடத் தெரியாத கடவுள்

நூல் ஆசிரியர்:

முதற்பதிப்பு : ஜூன், 2012

விலை : ₹ 150

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
இரா.சரவணன்

முதன்மை பொறுப்பாசிரியர்:
பொன்ஸீ

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எஸ்.கோபால், எம்.நாகமணி, கே.பாசுமணி

உதவி ஆசிரியர்:
சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

தலைமை வடிவமைப்பு:
அ.அன்பழகன்

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: pubonline@vikatan.com

 5-1

இலக்கியமும் நீதியும் இரு கண்கள்!

நீதி பரிபாலனத்தையும் இலக்கியத்தையும் ஒருசேர தன் வாழ்நாளில் போற்றிப் பாதுகாத்தவர்கள் மிகச்சிலரே! காரணம், இரண்டும் இரு துருவங்கள். இரண்டுக்கும் இருக்க வேண்டிய ரசனையும், மன ஒருமைப்பாடும் வெவ்வேறு. நீதித் துறையின் சாதிப்புக்கும் நேர்மைக்கும் நிகராக இலக்கியத்தில் இரண்டறக் கலந்து வியக்க வைத்தவர் நீதிபதி எஸ்.மகராஜன். ரசிகமணி டி.கே.சி-யின் பேரன்பு பெற்ற மாணவர். அவர் எழுதிய அதியற்புதக் கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

கம்பனின் வார்த்தை நயங்களை வாழ்வியலோடு ஒப்பிட்டுப் பார்க்கும் சிலிர்ப்பு நிலை தொடங்கி தன் மன ஓட்டத்தின் அத்தனைவிதப் பதிவுகளையும் இங்கே இறக்கி வைக்கிறார் நீதிபதி எஸ்.மகராஜன். திருக்குறளின் ஆழம், குற்றாலக் குறவஞ்சியின் ஆனந்த நடனம், தனிப் பாடல்களின் வீதி உலா, ஔவையின் வாழ்வியல் தத்துவங்கள், காரைக்கால் அம்மையாரின் இறையார்வம் எனப் புத்தகத்தின் மொத்தப் பக்கங்களும் இலக்கியச் சோலையாக நிச்சயம் உங்களை ஈர்க்கும். இலக்கியம், ரசனைக்கானது மட்டும் அல்ல... அது நம் வாழ்வியலின் வடிவம் என்பதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது இந்தத் தொகுப்பு.

டி.கே.சி-யைப் பற்றி நீதிபதி எஸ்.மகராஜனின் சிலிர்ப்பைச் சொல்ல வேண்டுமா என்ன! டி.கே.சி-யின் மேன்மையான குணங்கள், விட்டுக்கொடுத்து வாழ்ந்த பெருந்தன்மை, இடுக்கண் வந்தபோது நண்பர்களைக் கைவிடாமல் காத்த கருணை மனம், தன் சுய கௌரவத்தை மட்டுமே பார்க்காமல் எதற்கும் துணை நின்ற பக்குவம் என நீதிபதி எஸ்.மகராஜன் விவரிக்கும் உண்மைகள் நம் வாழ்க்கைக்கான வழிகாட்டல்கள். இன்றைய தலைமுறை தெரிந்துகொண்டு, கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் கூறுகளை நீதிபதி எஸ்.மகராஜன் விவரித்த விதம் அலாதியானது. தமிழ்த் தலைமுறை தன் பெரும் சொத்தாகப் பேணிக் காக்க வேண்டிய அரிய தொகுப்பு இது!

– ஆசிரியர்



நூறாண்டு கண்டவர் நூற்றாண்டுகள் வாழ்வார்

- கவிப்பேரரசு வைரமுத்து

நீதியரசர் மகராஜன் என்ற மாமனிதர் தோன்றி நூறாண்டு நிறைகின்ற காலம் இது. அந்த அறிஞர் பெருமகன் பல நூற்றாண்டுகள் நினைக்கப்படுவதற்கான அரும் பணிகள் ஆற்றியிருக்கிறார்.

சட்டம் படித்த பலர் இலக்கியம் அறியார். இலக்கியம் படித்த பலர் சட்டம் அறியார் என்பது தமிழ்நாட்டின் கல்வி நியதி. இந்த நியதியை உடைத்து எறிந்த மிகச் சில மேதைகளுள் ஒருவர் நீதியரசர் மகராஜன்.

சட்டம் ஒரு கண்ணாகவும், இலக்கியம் ஒரு கண்ணாகவும் வாய்க்கப்பெற்ற நீதியரசர் இந்த உலகத்தை அந்த இரு கண்கள் வழியே துழாவி இருக்கிறார்; துய்த்தும் இருக்கிறார்.

வேறு எந்தச் சட்ட மேதைக்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு நீதியரசர் மகராஜனுக்கு உண்டு. ஷேக்ஸ்பியர் என்ற மகாகவியின் கவிகளை மொழிபெயர்த்துத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியதும் கம்பன் என்ற மகாகவியின் கவிகளை மொழிபெயர்த்து ஆங்கிலத்துக்கு அறிமுகப்படுத்தியதும் வேறு எவரும் ஆற்றியிராத - தனிச் சிறப்பு.

கிங் லியர் - மேக்பத் - ஹேம்லட் என்ற ஷேக்ஸ்பியரின் முப்பெரும் நாடகக் காவியங்களை அவரைப்போலத் தமிழுக்கு மொழி பெயர்த்தவர்கள் யாரும் இல்லை என்றே துணிந்து சொல்லலாம்.

ஆங்கில மொழியின் நீள, அகலமும், தமிழ் மொழியின் ஆழ, அகலமும் அறிந்த ஒரு மேதை மட்டுமே இந்த இலக்கியச் சாதனையை நிகழ்த்த முடியும். அதேபோல மகாகவி கம்பனின் காவியத்தை எளிய, தெள்ளிய ஆங்கிலத்தில் அவர் செய்த மொழிபெயர்ப்பு கண்டம் கடந்து கம்பனை அழைத்துச் சென்றது. தமிழ்மொழியின் பெருமிதத்தை ஒருவாறு உணர்த்தி முடித்தது.

ஆசைத் தமிழ் வளர்த்த ரசிகமணி டி.கே.சி. என்ற மீசைத் தமிழரின் ரசிக வாரிசு என்று நீதியரசர் மகராஜனை மட்டுமே சொல்ல முடியும்.

5-1

‘ஆனந்தமே கடவுள்; கடவுளே ஆனந்தம்’ என்பதுதான் நீதியரசர் மகராஜனின் வாழ்வியல் தத்துவம். மனிதனே ஆனந்தத்தின் குழந்தைதான்; கடவுளே ஆனந்தத்தின் தேடல்தான். இதைத் தன் ஆசான் ரசிகமணி மூலமாக நெஞ்சார உணர்ந்துகொண்டார். அந்த ஆனந்தத் தத்துவத்தின் வழியே உலகத்தையும் இலக்கியத்தையும் பார்க்கப் பழகிக்கொண்டார்.

தமிழ்ப் பண்பாட்டில் ஊறி, சமய இலக்கியத்தில் திளைத்து, திருமூலருக்குள் கரைந்து, தனிப் பாடல்களில் கலந்து, ஷேக்ஸ்பியரில் தோய்ந்து, கம்பனில் மூழ்கிப்போனவர் நீதியரசர்.

கம்பரும் ஷேக்ஸ்பியரும் இணையான மகாகவிகள்தாம். கம்பரோ மனிதர்களின் சிறுமைகளைப் புறம்தள்ளிப் பெருமைகளை மட்டுமே பாடிப் பேரிலக்கியம் படைத்தவர். ஷேக்ஸ்பியரோ மனித வாழ்வின் சிறுமைகளையும் இருண்மைகளையும்கூட விட்டுவைக்காமல் அவற்றில் ஊடாடிப்பாடி உலக இலக்கியம் படைத்தவர் என்று இரு மகாகவிகளுக்கும் இலக்கணம் படைத்தவர் நீதியரசர் மகராஜன்.

அந்த மாமனிதரோடு நான் பழகிய நாட்கள் சுகமானவை. தமிழ் நாடு சட்டத் துறை ஆட்சிமொழி ஆணையத்தில் அவர் தலைவராகவும் நான் ஓர் அலுவலராகவும் பழகிக்கொள்ளவில்லை. தந்தை மகன் என்ற பாசத்தோடு பழகிவந்தோம்.

எப்போதும் சிரித்த முகம். நெற்றியில் குறுகுறுக்கும் ஒரு குங்குமப் பொட்டு. கண்ணாடி வழியே உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் கண்கள். கம்பனைச் சொல்ல ஆரம்பித்தால் உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் ஆனந்தம். தான் ஒரு மேதை என்பதை மறந்துவிடும் குழந்தைமை. அன்பின் வடிவம். பண்பின் தத்துவம். இவற்றின் கூட்டுக் கலவையே நீதியரசர் மகராஜன்.

அவர்தம் படைப்புகளை எல்லாம் பல்கலைக்கழகங்கள் போற்றிப் பாதுகாக்க வேண்டும். தன்னாட்சிக் கல்லூரிகளில் எல்லாம் அவை பாடமாக வேண்டும். நூறாண்டுக்கு ஒருமுறைகூடத் தோன்ற முடியாத, அந்தத் தமிழ் மேதையின் நினைவுகளைத் தமிழ்நாட்டின் இலக்கிய அமைப்புக்கள் கொண்டாடிப் பரப்ப வேண்டும்.

நீதியரசர் மகராஜன் சட்டத்தை இலக்கியமாக்கியவர். இலக்கியத்தைச் சட்டமாக்கியவர்.

பொதிகைக் காற்று குற்றாலத்தில் வீசும் காலம் வரை தமிழ் உலகில் அவர் புகழ் வீசிக்கொண்டே இருக்கும்!

வாழ்க நீ எம்மான்

– மகராஜன் சிதம்பரம்

முதல் நினைவு

1957-ம் ஆண்டு. எனக்கு வயது 4. புதுக்கோட்டையில் அப்பா சப்-ஜட்ஜாக இருந்தார். எங்கு சென்றாலும் இரட்டை மாடு பூட்டிய 'வில்' வண்டி அல்லது குதிரை வண்டியில்தான் செல்வார். அவர் வண்டியில் சென்றதுதான் அப்பாவைப்பற்றிய முதல் நினைவு.

கார் வாங்கிய கதை

ஒருமுறை இலக்கியக் கூட்டம் ஒன்றில் பங்கேற்பதற்கு நண்பர் ஒருவர் அப்பாவை தன் காரில் அழைத்துச் சென்றார். கூட்டம் நடந்தபோது நண்பர் தன் காரை எடுத்துக்கொண்டு ஏதோ வேலையாக வீடு திரும்பிவிட்டார். கூட்டம் முடிந்ததும் காரைக் காணாமல் அப்பா திகைத்துவிட்டார். நடந்தே வீடு திரும்பினார். சொந்தமாக கார் வாங்கிவிட வேண்டும் என்று அன்றே தீர்மானித்து 'லேண்ட் மாஸ்டர்' காரை வாங்கினார். அப்பா கார் வாங்கியதைக் கண்டு பொறாமைப்பட்ட மற்றொரு நீதிபதி, அப்பா தவறான வழியில் பணம் சேர்த்து கார் வாங்கியதாக சென்னை உயர்நீதிமன்றத்துக்கு மொட்டைக் கடிதம் ஒன்றை அனுப்பினார். அப்பாவின் வருத்தத்துக்கு அளவேயில்லை. தான் தினசரித் தியானிக்கும் அம்பாளிடம் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு வேண்டி மனமுருக முறையிட்டார். என்ன ஆச்சர்யம்! மொட்டைக் கடிதம் எழுதிய நீதிபதி தன் லெட்டர் ஹெட்டிலேயே, தன் கைப்பட மன்னிப்புக் கடிதம் எழுதி அப்பாவுக்கும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கும் கடிதம் அனுப்பினார். அன்றிலிருந்து அப்பா தனது தியானத்தில் அவருக்காக அம்பாளிடம் தினசரி பிரார்த்தனை செய்தார்.

ஆன்ம விசாரம்

இளமைக் காலத்தில் கடவுள் நம்பிக்கை இல்லாத அப்பாவை மாற்றியது என் பெரியம்மா (அப்பாவின் முதல் மனைவி) கோமதியம்மாளின் அகால மரணம். மூன்று குழந்தைகளை விட்டுவிட்டு மறைந்துவிட்டார். அவருடைய மறைவு அப்பாவுக்குப் பேரிடி. அதன் பிறகுதான், 'எங்கிருந்து வந்தோம்? எங்கே போகிறோம்? கடவுள் தத்துவம் என்ன? இந்த

வாழ்க்கையின் அர்த்தம் என்ன?' போன்றவற்றை ஆராய ஆரம்பித்தார். ஆவி உலக ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். பின்பு, ஆவியை அழைத்துப் பேசுவது உகந்தது அல்ல என்று தெளிந்து அதை நிறுத்தினார்.

பாண்டிச்சேரி அன்னை

பாண்டிச்சேரியில் தலைமை நீதிபதியாக பணியாற்றியபோது அடிக்கடி 'அன்னை'யை தரிசித்தார் அப்பா. ஒருமுறை அன்னையிடம், "அன்னையே! நாம் இருவரும் சேர்ந்து தனியாகத் தியானம் செய்ய வேண்டும்" என்று தன் ஆசையைத் தெரிவித்து அதன்படியே இருவரும் 15 நிமிடங்கள் தனி அறையில் தியானம் செய்தது மறக்க முடியாத அனுபவம் என்று அப்பா கூறியிருக்கிறார்.

ஞானானந்தகிரி சுவாமி

திருக்கோவிலூரில் இருந்த ஸ்ரீஞானானந்தகிரி சுவாமியை அப்பா பல தடவை சந்தித்திருக்கிறார். சுவாமி சொல்லியதன் பேரில் வேறொரு சித்தரை அப்பா காணச் சென்றார். ஆனால், அவரோ அப்பாவிடம் பேசவில்லை; கண்டுகொள்ளவே இல்லை. இதைப்பற்றி சுவாமியிடம் அப்பா குறைபட்டுக்கொண்டார். சுவாமியோ, "நீங்கள் ஆற்றில் குளிக்கிறீர்கள்; அருவியில் குளிக்கிறீர்கள். ஆறோ, அருவியோ உங்களிடம் பேசுகிறதா? ஆனால், உடம்பில் இருக்கும் அழுக்கு போகிறது அல்லவா? அதைப்போல சித்தர்கள் உங்களிடம் பேசாவிட்டாலும் அவர்கள் அருகில் சென்றாலே உங்கள் உள்ளத்து அழுக்கு எல்லாம் போய்விடும்" என்றார். இந்தப் பதிலைக் கேட்டு அப்பா ஆனந்தம் அடைந்தார்.

காஞ்சி முனிவர்

காஞ்சி காமகோடி சுவாமியை தரிசிக்க அப்பா காஞ்சிபுரம் சென்றிருந்தார். அவரைப் பார்க்க வருபவர்கள் அவர் காலில் விழுந்து வணங்குவது மரபு. ஆனால், அப்பாவோ தன் முதல் குருவான கண்ணப்ப சுவாமி கேட்டுக் கொண்டபடி, 'யாருடைய காலிலும் இனிமேல் விழ மாட்டேன்' என்று அவருக்கு வாக்குறுதி கொடுத்திருந்தார். அப்பாவுக்குத் தர்மசங்கடம். காஞ்சிபுரத்து மரபா? வாக்குறுதியா?

அப்போது முக்காலமும் உணர்ந்த காஞ்சி முனிவர், "வெளியே ஜட்ஜ் மகராஜன் வந்திருக்கார். அழைத்து வா... இன்று யாரும் என் காலில் விழக் கூடாது என்று சொல்லிவிடு" என்று கூறி அப்பாவின் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்!

ரசிகமணி டி.கே.சி.

ரசிகமணி, அப்பாவுக்குத் தாயாக, தந்தையாக, மாணவனுக்கு குருவாக, சிறந்த நண்பனாக, நல்லாசிரியனாக, காதலனாக இருந்தார். ஒருவருள் ஒருவர் ஐக்கியமாகிக் கிடந்தார்கள். டி.கே.சி-யின் அருமை பெருமைகளை அப்பா தன் வாழ்நாள் முழுவதும் எடுத்துச் சொல்லிக்கொண்டு இருந்தார். தனக்கும் வேலம்மாள் அத்தைக்கும் டி.கே.சி. எழுதிய கடிதங்களைப் பாதுகாத்து, 'ரசிகமணியின் கடிதங்கள்' என்ற தலைப்பில் புத்தகமாக அப்பா வெளியிட்டார். தற்போதைய தலைமுறைக்கு இன்றளவும் ரசிகமணியை அந்தப் புத்தகமே அறிமுகப்படுத்திக்கொண்டு இருக்கிறது.

டாக்டர் என்.தேவநாதன்

சிறந்த ரசிகரும், வடமொழி விற்பன்னருமான டாக்டர் என்.தேவநாதன் அப்பாவின் வாழ்க்கையில் முக்கிய அங்கம் வகித்தவர். ஆந்திர முதலமைச்சராக என்.டி.ராமாராவ் இருந்தபோது அவருடைய ஆலோசகராக இருந்தார். திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழுவில் அங்கத்தினராக இருந்தவர். சென்னை 'பிரார்த்தனா' டிரைவ்-இன் தியேட்டரின் உரிமையாளர்.

அடிக்கடி வீட்டுக்கு வந்து மணிக்கணக்கில் இலக்கிய உரையாடலில் ஈடுபடுவார். இருவரும் உணவு அருந்திவிட்டு இரவு 10 மணிக்குத் தொலைபேசியில் பேச ஆரம்பித்தால் பேச்சு 1 மணி அளவில்தான் முடிவடையும். அந்தப் பேச்சுக்களை அருகில் இருந்து கேட்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியது.

உயர்நீதிமன்ற நீதிபதியாக அப்பா இருந்து ஓய்வு பெற்றவுடன் சொந்த ஊரான திருநெல்வேலிக்கே திரும்பிவிடலாம் என்று எண்ணி இருந்தோம். அப்போதுதான் நாங்கள் குடி இருந்த வீட்டை அதன் உரிமையாளர் விற்கப்போவதாகத் தெரிவித்தார். 'அந்த வீட்டை விலைக்கு வாங்கி விடுங்கள்' என்று உரிமையுடன் கட்டாயப்படுத்தி, விலை பேசி, அதில் இருந்த சிக்கல்களை எல்லாம் போக்கி, நல்ல விதமாக வாங்குவதற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தவர் தேவநாதன். இறைவனே தேவநாதன் உருவத்தில் வந்து இந்த உதவியைச் செய்ததாக நாங்கள் எல்லோரும் பேசிக்கொள்வோம்.

திருப்பதி வேங்கடாசலபதியின் தீவிர பக்தரான இவர் திருமலையில் தரிசனம் முடித்துவிட்டு வெளியே வந்தபோது உயிர் நீத்தார் என்பதிலிருந்து எந்த அளவுக்கு அவர் வேங்கடவனின் பக்தர் என்பது தெரியும்!

உள்ளே...



மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில்
இந்திரா காந்தியுடன்...



பலராம் ராஜா, அவருடைய சகோதரர்,
மீ.ப.சோமு, லட்சுமணசாமி



பி.ஸ்ரீ-ஆசார்யாவின் ஆசீர்வாதம்



பாண்டிச்சேரி தலைமை நீதிபதியாக கவர்னர்
ஜாட்டிக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைக்கிறார்



சிவயோகி ரத்தினசபாபதி பிள்ளை



காமராஜருடன்...



ரா.பி.சேதுப்பிள்ளையின் முன்னிலையில் மேடைப் பேச்சு



மகன், டாக்டர் சுப்பிரமணியனின் திருமணத்தில்
அன்றைய முதல்வர் கருணாநிதியை வரவேற்கிறார்

I வாழ்வியல் கட்டுரைகள்



பாண்டிச்சேரி தலைமை நீதிபதியாக...



முதல் மனைவி கோமதி அம்மாளுடன்



தென்காசி திருவள்ளுவர் கழகம்...
இடது பக்கத்திலிருந்து இரண்டாவதாக, கைத்தடியுடன் இருப்பவர்

1. ஆடத் தெரியாத கடவுள்

புண்பட்ட நெஞ்சுக்குச் சிரிப்பைப்போல இதமான மருந்து வேறு கிடையாது. உலக வாழ்க்கையில் இருக்கும் ஏற்றத் தாழ்வு, இன்ப துன்பம், பித்தலாட்டம் இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு, சிரிக்கத் தெரியாமலும் நாம் இருந்தோமேயானால், என்ன ஆகும் நம் கதி? பைத்தியம் பிடித்துவிடும். பைத்தியம் பிடிப்பதிலிருந்து நம்மைத் தடுப்பதற்காகவே நமக்குச் சிரிப்பு என்ற தெய்வீக சக்தி கொடுக்கப்பட்டு இருக்கிறது.

நகல்வல்லர் அல்லார்க்கு மாஇரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்

-என்று சொன்னார் குறளாசிரியர்.

சிரிக்கத் தெரியாதவனுக்குப் பட்டப் பகலும் அமாவாசை இருட்டாகத்தான் இருக்கும் என்பது இந்தக் குறளின் பொருள். தெளிவு இல்லாத காரணத்தால் சிரிப்பற்று இருக்கிறோம். உள்ளத்தில் தெளிவு வந்துவிட்டாலோ, வாழ்க்கையே ஒரு சிரிப்பாக இருக்கும். The world is a comedy to those who think and a tragedy to those who feel என்று ஓர் அறிஞர் சொன்னார். அதாவது, சிந்தனைத்

தெளிவுள்ளவனுக்கு இந்த உலகம் ஒரு ஹாஸ்ய நாடகமாகத் தோன்றுகிறது, உணர்ச்சிவசப்பட்டவனுக்கு இந்த உலகம் சோக நாடகமாகக் காட்சி கொடுக்கிறது என்று சொன்னார்.

மிருக வர்க்கங்களிலேயே சிரிக்கும் ஆற்றலைப் பெற்ற பிராணி, மனிதன் ஒருவன்தான். ஆனால், இந்த அரிய ஆற்றலை மனிதனுக்குப் பயன்படுத்தத் தெரியவில்லையே என்று ஆற்றாமைப்படுகிறார் வள்ளுவர்.

அணுகுண்டுக்கு இல்லாத சக்தி சிரிப்புக்கு இருக்கிறது என்பதை ஒரு புராணக் கதை விளக்குகிறது. திரிபுரத்தில் அட்டகாசம் செய்துகொண்டு இருந்த அரக்கர்களை சிவபெருமான் அழித்தார். எப்படி அழித்தார்? ஹைட்ரஜன் குண்டு போட்டல்ல, ஒரு சிரிப்பு சிரித்தார். அவ்வளவுதான், தீமையே வடிவாக வந்த அரக்கர்கள் தீய்ந்து ஒழிந்தார்கள்.

சீராரூர் மேவும் சிவனே – சிரிப்பன்றோ
நேராரூர் அட்ட நிலை

-என்று பாடினார் கவிஞர்.

சிரிப்பு புற இருளை மாத்திரமல்ல, அக இருளையும் அகற்றி, துன்பத்தைத் துடைத்து இன்பத்தை நல்குகிறது.

விவேகானந்தரிடத்திலே சிஷ்யையாக இருந்தார் நிவேதிதா என்ற ஆங்கிலப் பெண்; நற்குணங்கள் நிறைந்த பெண். இருந்தாலும், எப் போதும் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டே இருப்பார் நிவேதிதா. அவரைப் பார்த்து விவேகானந்தர், “அம்மா! நீ ஆனந்தமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; கலகலப்பாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் நீ விரும்பும் ஜீவன் முக்தி உனக்குக் கிடைக்கும்” என்றார். இந்த அறிவுரையை வலியுறுத்துவதற்காக ஒரு சுவையான கதையையும் சொன்னார்.

ஒரு காலத்தில் நாரதர் வானுலகத்தைவிட்டு, பூமியில் இறங்கி, ஓர் அடர்ந்த காடு வழியாகப் போய்க்கொண்டு இருந்தார். நடுக் காட்டில் ஒரு ரிஷி தலை கீழாக நின்று தவம் செய்துகொண்டு இருந்தார். இந்தக் காட்சியைக் கண்டதும் நாரதருடைய நண்பர், “நாரதரே! இந்த ரிஷிக்கு எப்போது ஜீவன் முக்தி கிடைக்கும்” என்று கேட்டார். உடனே நாரதர், “இவனுக்கு இன்னும் மூன்று பிறவிகளுக்குப் பின்னால் முக்தி கிடைக்கும்” என்று சொன்னார். இதைக் கேட்டுக்கொண்டு இருந்த ரிஷி ‘ஓ’ என்று அலறினார். “ஐயோ, இன்னும் மூன்று பிறவிகளா? என்னால் பொறுக்க முடியாது” என்று கதறினார்.

ரிஷியைத் தாண்டிச் சென்றார் நாரதர். நூறடிக்கு அப்பால் ஓர் இடையன், மாமரத்தடியில் உல்லாசமாக ஆடு மேய்த்துக்கொண்டு இருந்தான். "இவனுக்கு எப்போது ஜீவன் முக்தி?" என்று நாரதரைக் கேட்டார் அவர் நண்பர். நாரதர், "இந்த மாமரத்தில் எத்தனை இலைகள் உண்டோ, அத்தனை பிறவிகளுக்குப் பின் இவனுக்கு முக்தி கிடைக்கும்" என்றார். இதைக் கேட்ட இடையனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. "எனக்குக் கூடவா ஜீவன் முக்தி கிடைக்கப்போகிறது?" என்று சொல்லிக்கொண்டே ஓர் ஆட்டம் ஆடினான் அவன். அந்தக் கணத்திலேயே அவனுக்கு ஜீவன் முக்தி கிடைத்துவிட்டது.

ஆனந்தம் இல்லாத வாழ்க்கை, பயனற்ற வாழ்க்கை. ஆனந்தம் இல்லாத சமயம், பயனற்ற சமயம். ஆகவே, நீட்ஷேச (Nietzsche) என்ற ஜெர்மன் தத்துவ ஞானி 'How can I believe in god who would not dance?' என்றார். அதாவது, 'ஆடத் தெரியாத கடவுளை நான் நம்பத் தயாரில்லை' என்றார்.

நீட்ஷே காலத்தில் இருந்த ஐரோப்பிய கிறிஸ்துவர்கள் சிலுவையின் உட்பொருளாகிய தியாகத்தை மறந்து புறப்பொருளாகிய துன்பத்தைப் பாராட்டி, அல்லல்படுவதே வாழ்க்கையின் நோக்கம் என்று தவறாகக் கருதி வந்தார்கள். இந்தக் கருத்தின் விளைவாக ஐரோப்பிய சமுதாயத்தில் துன்ப உணர்ச்சி பரவியது.

'இறைவன் இன்ப வடிவானவன், துன்ப வடிவானவன் அல்ல' என்பதை வற்புறுத்துவதற்காகவே, நம் முன்னோர்கள் அவனை ஆடல் வல்லான் என்றும், ஆடல் அரசன் என்றும் போற்றி வணங்கினார்கள்; நடராஜ தத்துவமே ஆனந்த தத்துவம் என்பதை உணர்ந்து அனுபவித்தார்கள்.

ஆட வல்லார் நெறி ஆட அறிகிலேன்
பாட வல்லார் நெறி பாட அறிகிலேன்

-என்று சொன்னார் திருமூலரும்.

ஆனந்தம் மேலிடும்போது, மயில் தன் தோகையை விரித்து ஆடுகிறது. நடனமே ஆனந்தத்தின் பரிபூரண வெளியீடு. அப்படியானால், இன்ப வடிவான இறைவன் ஆடிக்கொண்டுதானே இருக்க வேண்டும்? ஆடும் தன்மை அவனுக்கு இல்லை என்றால், அவனுக்கு ஆனந்தம் இல்லை என்றாகிவிடும். ஆனந்தம் இல்லை என்றால், அவனைக் கடவுள் என்று எவ்வாறு ஒப்புக்கொள்வது? ஆகவேதான், 'ஆடத் தெரியாத கடவுளை நான் நம்பத் தயாரில்லை' என்று சொன்னார் நீட்ஷே.

2. வேதம் ஊன்றும் பலா

தமிழ்நாட்டில், ஒவ்வொரு கோயிலுக்கும் ஸ்தல விருட்சம் என்று ஒன்றுண்டு. திருக்குற்றாலத்துக் கோயிலுக்குள் போனால் அங்கே ஒரு பலா மரத்துக்குப் பூசை நடப்பதைப் பார்க்கலாம். பலா மரத்துக்குள்ளே இறைவன் கொலு வீற்றிருக்கிறான் என்பதை நம் முன்னோர்கள் எப்படியோ கண்டுகொண்டார்கள்.

சென்னையிலிருந்து புதுவைக்குப் பலாப்பழத்தை பார்சல் செய்து கூட்ஸ் வண்டியில் அனுப்பினால், பாதி அழுகிப்போய் விடும். கால்வாசி திருட்டுப்போய்விடும். இங்கு பத்திரமாக வந்து சேர்வது எல்லாம் 100-க்கு 25 பழந்தான்.

ஆனால், கோடானுகோடி ஆண்டுகளாகப் பலா மரம் என்ற தத்துவம் பலாப்பழத்தை எவ்வளவு எச்சரிக்கையோடு பாதுகாத்து வந்து இருக்கிறது! வித்தைப் பாதுகாப்பதில்தான் அந்த மரத்துக்கு எவ்வளவு அக்கறை! வித்தை இனிப்பான மஞ்சள் சுளையிலே பொதிந்து, சுளை கெட்டுப்போகாமல் இருக்க வேண்டுமே அதற்காகச் சுளைகளுக்கு வைக்கோல் பேக்கிங் கொடுத்து, பலாக்காயைக் குரங்கு துளைத்துவிடாமல் இருக்க வேண்டுமே அதற்காக முள் நிறைந்த தோட்டிலே பக்குவமாகச் சுற்றிவைத்து, எவ்வளவு எச்சரிக்கையாக நம் கையிலே கனியைக் கொண்டுவந்து கொடுக்கிறது பலா மரம்!

இதை எல்லாம் கூர்ந்து கவனித்து அதிசயித்தார்கள் நம் முன்னோர்கள். பலா மரம் நம்மைப்போல், பி.ஏ., எம்.ஏ., பட்டம் வாங்கவில்லையே! பாட்டனி அதற்குத் தெரியாதே! அது எப்படி இந்த அற்புதங்களைச் செய்ய முடிந்தது என்று சிந்தித்தார்கள். அப்பாவி மரமா இந்த விந்தைகளைச் செய்தது? இல்லை, மரத்துக்கும் தெரியாத ஒரு தெய்வீக சக்தி, மரத்துக்குள் இருந்து கொண்டு இந்த அற்புதங்களைச் செய்து இருக்கிறது என்று உணர்ந்தார்கள். உணர்ந்தவுடனேயே பலா மரத்தினுள் தொழிற்படும் இறை தத்துவத்தை நினைந்து வணங்கினார்கள். அதற்கு ஆறு கால பூசை நடத்தினார்கள். மேள தாளத்தோடு அதற்கு விழா கொண்டாடினார்கள். குறுகிய பலா மரத்தில் வீற்றிருக்கும் இறைவனைக் 'குறும்பலா ஈசர்' என்று பெயரிட்டு வாழ்த்தினார்கள்.

வேதம் என்ன செய்ததாம்? இறைவனைப்பற்றிச் சொல்லால் வர்ணித்து வர்ணித்துப் பார்த்ததாம். மனிதனுக்கு அது விளங்க வில்லை, குழப்பந்தான் ஏற்பட்டது. எப்படி மனிதனுக்கு

இறைவனைப் புரியவைப்பது என்று வேதம் நீண்ட காலம் யோசனை பண்ணி, கடைசியாக ஒரு தந்திரம் செய்தது. ஒரு பலாவின் வித்தைக் குற்றாலத்து மண்ணிலே ஊன்றிவிட்டுப் போய்விட்டதாம் வேதம். அந்த வித்து முளைவிட்டு, இலை பரப்பி, கொப்பும் கவருமாக வளர்ந்து, காய்த்துக் கனிந்ததைப் பார்த்தான் மனிதன். பலா மரத்தினுள்ளிருக்கும் இன்ஜினீயரிங் ஜாலங்களையும், ரசாயன வித்தைகளையும், தாவர மர்மங்களையும் பார்த்தவுடன், இறைவனுடைய திருவிளையாடலைப் புரிந்துகொண்டான். வேதத்தைப் படித்தும் பிடிபடாத உண்மை, பலா மரத்தைக் கவனித்ததும் தெளிவாகிவிட்டது. இந்த அரிய கருத்தை,

வேதம் ஊன்றும் பலா உள்ள நாடு

-என்று குறவஞ்சி ஆசிரியர் குறிப்பிடுகிறார். மாசற்ற காட்சியுடையவர் அவர். அவருடைய காட்சியில் பலா மரம் இறைவனுடைய உருவமாகவே தோன்றுகிறது.

கிளைகளாய்க் கிளைத்த பல கொப்பு எலாம்
சதுர் வேதம், கிளைகள் ஈன்ற
களை எலாம் சிவலிங்கம், கனி எலாம்
சிவலிங்கம், கனிகள் ஈன்ற
சுளை எலாம் சிவலிங்கம், வித்து எலாம்
சிவலிங்க சொரூபம் ஆக
விளையும் ஓரு குறும்பலவின் முளைத்து எழுந்த
சிவக் கொழுந்தை வேண்டுவோமே.

3. கேடா வரு நமன்

சங்கரன்கோவில் கோமதி அம்மனை நோக்கி வரம் கேட்கிறார் ஒரு பக்தர்.

பிறவி என்றும், மரணம் என்றும் நாம் சொல்வது எல்லாம் நம்முடைய ஆணவ மயக்கத்தில் தோன்றும் தோற்றங்கள்தான். இந்த மயக்கம் தீர்ந்துவிட்டால், பிறவியில்லை, மரணம் என்பதும் இல்லை. 'மயக்கத்தைத் தீர்த்துவை, தாயே! பித்தத்தைத் தெளிய வை, தாயே' என்று முறையிடுகிறார் பக்தர்.

கேடா வரு நமனைக் கிட்ட வராதே தூரப்
போடா...

-என்று நீ உத்தரவிட்டால், அந்த நமன் பஞ்சாகப் பறந்துவிடுவானே, தாயே என்று சொல்கிறார்.

நமன் எப்படி வருகிறானாம்? மெல்ல, மெல்ல நம்மை அணுகுகிறான். தலை மயிர் நரைக்கிறது என்றால் என்ன பொருள்? நமன் நமக்கு அச்சாரம் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான் என்று தானே பொருள்? கவி தாகூருக்குக் காதுக்குப் பின்னால் ஒரு நரை மயிர் தோன்றியது. அதைக் கண்ணாடியிலே பார்த்துவிட்டார் அவர். உடனே அவர் "Death has placed his visiting card behind my ear (என் காதுக்குப் பின்னால் நமன், 'விசிடிங் கார்டை' செருகிவிட்டுப் போயிருக்கிறான்)" என்றார்.

நரை விழுந்த பிறகு காது கொஞ்சம் மந்தமாகிறது, கண் மங்குகிறது, பல் ஒவ்வொன்றாக விழுகிறது. இப்படியாக மெல்ல மெல்ல, பையப் பைய வருகிறான் நமன். அவன் வரவை எண்ணி அஞ்சுகிறோம். கோமதித் தாயை வணங்கினால், அந்த அச்சம் நீங்கிவிடும்.

மரண ப்ரமாதம் நமக்கில்லை

-என்று அருணகிரிநாதரைப்போல் நாமும் முழங்கலாம். அவளுடைய திருவடிகளை நினைக்க நினைக்க நாம் நம்மை மறக்கிறோம்; ஆனந்தம் பிறக்கிறது; மரண பயம் அழிகிறது.

தாயிடத்தில் உரிமையோடு வரம் கேட்கிறார் பக்தர்; அதிகாரத்தோடு கேட்கிறார்; அதட்டியே கேட்கிறார். அம்மை அல்லவா, அப்பா என்றால்தானே அஞ்சி, அஞ்சிக் கேட்க வேண்டும்.

கேடா வரு நமனைக் கிட்ட வராதே தூரப்
போடா என ஓட்டி பொற் கமலத் தாள் நிழற் கீழ்
வாடா என அழைத்து வாழ்வித்தால், அம்ம, உனைக்
கூடாது என்று யார் தடுப்பார், கோமதித் தாய் ஈஸ்வரியே?

"அம்மை நீ, குழந்தை நான். என்னைக் காப்பாற்ற விரைந்து வர வேண்டாமா நீ? வராமல் இருக்கிறாயே! யாரே 'கூடாது' என்று உன்னைத் தடுக்கிறார்கள்?" என்று கேட்கிறார்.

அருமையான பாடல். திருநெல்வேலி அழகிய சொக்கநாத பிள்ளை என்ற கவிஞர் பாடிய பாடல்.

'கேடா' என்று துவங்கும் முதல் வரியில் அச்சம் என்ற பாவம் பேசுகிறது.

'போடா' என்று துவங்கும் இரண்டாவது வரியில் கோபச் சுவை வெளிவருகிறது.

'வாடா' என்று தொடங்கும் மூன்றாவது வரியில் அருமைப்பாடு என்ற உணர்ச்சி பொங்கித் ததும்புகிறது.

'கூடாது என்று யார் தடுப்பார்?' என்ற கடைசி வரியிலே, இடித்துக் கூறும் பாவம் மேலிடுகிறது.

நான்கு விதமான உணர்ச்சிகளையும் கவி எப்படி எடுத்துச் சொல்கிறது!

4. சிரிக்கும் திறன்

வைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள்ளே போய்க் கவனித்தால், ஒரு சுவையான உண்மை துலங்கும். அங்குள்ள நோயாளிகள் பலர் நம்மைப் பார்த்துப் "பைத்தியமே!" என்று அழைப்பார்கள். நாம் பைத்தியமில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், அந்தப் பைத்தியக்காரர்களோ நாம் எல்லோரும் பைத்தியம் பிடித்தவர்கள் என்று உறுதியாக நம்புகிறார்கள். அவர்களுடைய உறுதிப்பாட்டை எளிதில் அசைக்க முடியாது. எப்போது அந்த உறுதிப்பாடு தளர்கிறதோ, எப்போது அந்த நோயாளிகள் தமக்கு உள்ளத்தில் நோய் பிடித்து இருக்கிறது என்று எண்ணத் தொடங்குகிறார்களோ, அப்போதுதான் அவர்களுடைய நோய் குணப்பட்டு வருகிறது என்று வைத்தியர்கள் சொல்வார்கள்.

தலை மயிரைப் பிய்த்துக்கொண்டும், கட்டியிருக்கும் வேட்டியைக் கிழித்து எறிந்துகொண்டும் இருக்கிற பைத்தியக்காரன், தலை அலங்காரம் செய்து, சீருடையணிந்து, காரண காரியத் தொடர்போடு சிந்திக்கும் வல்லமை பெற்ற நம்மைப் பார்த்து, "அட, பைத்தியமே" என்று அழைக்கும்போது, நமக்குச் சிரிப்பு வருகிறது. பைத்தியம் நமக்கில்லை, அவனுக்குத்தான் என்ற தெளிவிலிருந்து வருகிறது நம்முடைய சிரிப்பு.

நாம் பைத்தியக்காரர்கள் இல்லை என்பதை அறிந்து பெருமைப் பட வேண்டியதுதான். ஆனாலும், நம்முடைய சிந்தை நோயற்றது என்று சொல்ல முடியாது. அதற்குள் எத்தனையோ திருகல்கள், கோணல்கள்! பித்த மயக்கத்தால் ஒன்றை மற்றொன்றாக நாம் காண்கிறோம், ஆணவ மயக்கத்தால், எல்லாம் நம்முடைய செயல் என்று நம்புகிறோம், உறுதியாகவே நம்புகிறோம். அந்த ஆஸ்பத்திரிக்குள் பார்த்தோமே, அவர்களுடைய உறுதிப்பாடு நமக்கும் இருக்கிறது. இந்த உறுதிப்பாடு எப்போது தளர்கிறதோ

நமக்கும் பித்த மயக்கம் இருக்கிறது என்று எப்போது நாம் உணரத் தொடங்குகிறோமோ அப்போதுதான் நமக்கு நோய் குணப்பட்டு வருகிறது என்று ஞான வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

பித்தத்தில் இருந்து தெளிந்தவர்கள் ஞானிகள்; எல்லாம் இறைவன் செயல் என்பதை ஸ்வானுபவத்தில் உணர்ந்தவர்கள் அவர்கள். ஆனால், நாம் அவர்களைப் பார்த்து, "நீங்கள் பித்தர்கள்" என்று சொல்கிறோம். பித்தம் இருப்பது நம்மிடத்தில்தான் என்று தெளிந்தவர்கள் ஞானிகள். அந்தத் தெளிவிலிருந்து பிறக்கிறது அவர்களது தெய்வீகச் சிரிப்பு.

மாணிக்கவாசகர் சிறந்த ஞானி; பித்த மயக்கத்திலிருந்து விடுபட்டவர்; இறைவனுடைய திருமேனியைக் கண்டு பேரானந்தம் அடைந்தவர். ஆனந்தக் களிப்பில் அவர் தன்னுடைய அனுபவங்களை உலகத்தாருக்குச் சொல்லிக்கொண்டு இருந்தார். என்ன சொன்னார்?

"இறைவன் எனக்குக் காட்சி கொடுக்கிறான். பாறாங்கல் போன்ற என் இதயத்தைப் பிசைந்து உருக்கிவிட்டான். 'இதைச் செய், அதைச் செய்' என்று கட்டளையிடுகிறான். அவனுக்குப் பணி செய்வதில் எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது" என்றெல்லாம் சொல்லி வந்தார். இதைக் கேட்டுக்கொண்டு இருந்த அண்டை வீட்டுக்காரர்கள் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள். அவர் வாக்கு மூலத்தை அவர்கள் நம்பவில்லை. "விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்குமே தென்படாத கடவுள் இந்த மாணிக்கவாசகனிடத்தில் வந்து பேசுகிறாராம். இவன் உள்ளத்தை உருக்கிவிட்டாராம், இவனைப் பணிகொள்கிறாராம். பேஷ் பேஷ், பித்தம் தலைக்கேறிவிட்டது இவனுக்கு" என்று, ஊரார் சிரிக்கத் தொடங்கினார்கள்.

இந்தச் சிரிப்பை நினைத்து நினைத்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர். பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே உள்ளவன் நம்மைப் பார்த்து, 'பைத்தியம்' என்று சொல்லிச் சிரித்தானே, அதை எப்படி நாம் அனுபவித்தோம், அதைப்போலவே நம்முடைய அசட்டுச் சிரிப்பைப் பார்த்து அனுபவிக்கிறார் மாணிக்க வாசகர்.

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம் வந்து நம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்டு உலகம் எல்லாம்
சிரிக்கும் திறம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ?

பித்தர்கள் சூழ்ந்த இந்த உலகத்தில், நமக்குப் பித்தம் தெளியும்படி செய்துவிட்டானே அந்த அருளாளன் என்று தெரிந்ததும், 'அடி, முழக்கு, தெள்ளேணம் கொட்டு' என்று மாணிக்கவாசகர்

ஆர்ப்பரிக்கிறார். நன்றியும், பக்தியும், ஹாஸ்யமும் கலந்த பாடல் இது. அபூர்வமான பாடல்.

5. வாழும் நெறி

லியோ டால்ஸ்டாய் என்ற ஞானி ஒருவர் ரஷ்யாவில் வாழ்ந்தார். அவர் காலத்தில் ரஷ்யாவில் பிச்சைக்காரர்களுடைய தொல்லை அதிகம். மாஸ்கோ நகரத்தின் 24-வது சாலையில் அவர் நடந்து சென்றுகொண்டு இருந்தபோது, ஒரு பிச்சைக்காரன் அவரை வழிமறித்து, அவர் சட்டையைப் பிடித்திழுத்து, "ஐயா, பிச்சை" என்று கேட்டான். டால்ஸ்டாய் இரக்க மனமுடையவர்; பரிவு நிறைந்தவர். பிச்சை கொடுக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் தன் நீண்ட கையைச் சட்டைப் பைக்குள் விட்டுத் துழாவித் துழாவிப் பார்த்தார். பைக்குள் ஒரு காசுகூட இல்லை.

மன வேதனையோடு பிச்சைக்காரனைப் பார்த்து, "பையிலே பணமில்லையே, தம்பி, பணமில்லையே" என்று சொன்னார். இதைக் கேட்டவுடன் பசியால் வதங்கிப்போயிருந்த பிச்சைக்காரன் முகத்தில் என்றும் இல்லாத ஓர் ஒளி பிறந்தது. "பிச்சைக் காசு இல்லை என்பதற்காக நீங்கள் வருந்த வேண்டாம். பிச்சை கொடுப்பதைக் காட்டிலும் பெரிய உதவி ஒன்றை நீங்கள் எனக்குச் செய்துவிட்டீர்கள். ஐயா, தம்பி என்றல்லவா என்னை அழைத்து விட்டீர்கள்! அது போதும்" என்றான் பிச்சைக்காரன். கொஞ்சமும் தன்னை மதிக்காத இந்த உலகத்தில், தன்னையும் ஓர் உருப்படியாக மதித்து, தம்பி என்று உறவு கொண்டாடிய டால்ஸ்டாயிடத்தில் பிச்சைக்காரனுக்கு அளவுகடந்த மதிப்பு ஏற்பட்டுவிட்டது. கேவலம், பணத்தினால் கிட்டாத மகிழ்ச்சியும், ஊக்கமும் பரிவினால் கிட்டிவிடுகிறது.

உலகத்திலுள்ள துன்பங்கள் பலவற்றுக்கும் காரணமாக இருப்பது பரிவின்மைதான். அந்தப் பரிவைப் பெறுவது எப்படி? நாள்தோறும் கொஞ்ச நேரமாவது நம்மைப்பற்றிய சிந்தனையினின்றும் நம்மை விடுவித்துக்கொண்டு, கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, மற்றவர்களுடைய இதயத்தில் அமர்ந்து, அவர்களுடைய கண்கள் வழியாக உலகத்தைப் பார்க்க முயல்வோமேயானால், டால்ஸ்டாய்க்கு ஏற்பட்ட பரிவு உணர்ச்சி நமக்கும் கைவரும்.

நியூயார்க் நகரத்தில் இருந்த உள மருத்துவ நிபுணரிடத்தில், ஆலோசனை கேட்பதற்காக வந்தாள் ஒரு பெண். "நான் ஒரு

தொழிற்சாலையின் தலைமை அலுவலரிடத்தில் சுருக்கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன். என்னுடைய அதிகாரி ஒரு சிடுமூஞ்சி. எனக்கு அவனுடைய கோபதாபங்களை எல்லாம் தாங்க முடிய வில்லை. அவனுடைய கொடுங்கோன்மையை நினைத்தால் இரவில் தூக்கம் வருவதில்லை. வேலையைவிட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்து இருக்கிறேன். அதற்கு முன் உங்கள் ஆலோசனையையும் கேட்கலாமே என்று வந்தேன். என்ன சொல்கிறீர்கள்?" என்று பரபரப்போடு கேட்டாள். வைத்தியர் "அம்மா, நான் ஒரு யுக்தி சொல்கிறேன். அதன்படி மூன்று மாதம் நடந்துவிட்டு மறுபடியும் என்னிடம் வா. பிறகு ராஜினாமாவைப்பற்றிச் சிந்திப்போம்" என்றார்.

அவர் சொன்ன யுக்தி இதுதான்: "சிடுமூஞ்சியிடத்திலும் சில நற்குணங்கள் பதுங்கிக்கொண்டு இருக்கும். அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, வாயார அவற்றைப் பாராட்டு. ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக்கொள்" என்று சொல்லி அனுப்பினார்.

இந்த ஆலோசனையை மேற்கொள்ளத் தலைப்பட்டாள் சுருக்கெழுத்துப் பெண். மறு நாள் சுருக்கெழுத்து எழுதுவதற்காக எஜமானனிடம் போனாள். அவன் அணிந்திருந்த சட்டை அழகாக இருந்தது. அதை உள்ளன்போடு பாராட்டினாள். அடுத்த நாள் அவனுடைய ஆங்கில எழுத்து நடையின் நுணுக்கத்தை உணர்ந்து பாராட்டினாள். இப்படியாக, பாராட்டு ஏற ஏற, எஜமானனுடைய சிடுமூஞ்சித்தனம் குறைந்துகொண்டே வந்தது. கதையை வளர்ப்பானேன்! சிடுமூஞ்சியாயிருந்தவன் காதலனாகிவிட்டான். மூன்று மாதங்கள் கழித்து மருத்துவரைப் பார்க்கச் சென்றாள் பெண். என்னம்மா, ராஜிநாமா பண்ண வேண்டியதுதானே என்று கேட்டார் அவர். ஐயோ, ராஜிநாமாவா? என்னை அவர் நாளைக்குத் திருமணம் செய்துகொள்ளப்போகிறார். பாருங்கள் இதை என்று சொல்லி அவர் பரிசாகக் கொடுத்திருந்த வைர மோதிரத்தைக் காட்டினாள். பரிவினால் வந்த விளைவை அது டால் அடித்துக் காட்டிக்கொண்டு இருந்தது.

நம்மைச் சுற்றி உள்ளவர்களிடத்தில், நம்மிடம் இருப்பதுபோலவே, பல குற்றங்கள் இருக்கலாம். அவற்றைக் கொஞ்ச நேரமாவது மறந்துவிட்டு, அவர்களிடம் இருக்கும் ஒரு துளி நல்ல குணத்தை முயன்று கண்டுபிடித்து, நாம் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டால், நம்மிடம் இருக்கும் பொறாமை நம்மைவிட்டு அகலும்; இங்கிதம் பெருகும்; சமுதாயத்தில் மங்களம் பொங்கும்.

6. விளக்கை விளக்கும் விளக்கு

மனித உணர்ச்சிகளை அப்படி அப்படியே எடுத்துச் சொல்வதற்கு மனித மொழிக்குப் போதிய ஆற்றல் ஏற்படவில்லை. கேவலம் வயிற்று வலியை எடுத்துக்கொள்வோம். அதன் பம்மல், பாய்ச்சல், துள்ளல்களை எல்லாம் சொல்லால் விளக்க முடிவதில்லை. நல்ல வேளையாக டாக்டருக்கும் நம்முடைய அனுபவம் ஏற்பட்டு இருக்கிறது. அதனால்தான், வயிற்று வலி என்று சொன்னவுடனேயே அவருக்கு நம்முடைய நோய்க்கூறு விளங்கிவிடுகிறது. தகுந்த மருந்தைக் கொடுத்து, எப்படியோ குணப்படுத்திவிடுகிறார்.

காலத்துக்கும், இடத்துக்கும் கட்டுப்பட்ட வயிற்று வலி அனுபவத்தையே சொல்லால் நமக்கு வர்ணிக்க முடியவில்லை என்றால், காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்கும் அனுபவங் களைப்பற்றி எப்படிச் சொல்வது?

அனுபவப் பாதையிலே சென்ற நம் ஞானிகள் இந்தப் பிரச்னையை எவ்வாறு சமாளித்து இருக்கிறார்கள் என்று பார்ப்போம்.

அவர்கள் செய்த முதற் காரியம் என்னவென்றால், இளைத்துப் போன உரைநடையை ஒதுக்கிவிட்டு, உணர்ச்சி ததும்பும் கவிச் சொல்லிலே பேசினார்கள். மேளதாளங்களோடு கவி பேசும்போது, வெற்றுச் சொல்லுக்கு இல்லாத திறமையும், வேகமும் அதற்கு ஏற்பட்டுவிடுகிறது.

பேச்சு மூச்சு அற்ற பேரின்ப வெள்ளம் உற்று
நீச்சு நிலை காணாமல் நிற்கும் நாள் எந்நாளோ?

-என்று சொல்லி ஏங்குகிறார் தாயுமானவர். வெள்ளத்தைப் பார்த்து இருக்கிறோம்; அதில் நழுவி விழுந்து நீச்சு நிலை காணாமல் தத்தளித்து இருக்கிறோம்; பேச்சு மூச்சு இல்லாமல் திக்குமுக்காடி இருக்கிறோம். இந்த அனுபவத்தைக்கொண்டு பேசரிய பேரின்ப அனுபவத்தை ஜாடையாகக் காட்டிவிடுகிறார் கவிஞர்.

சில ரகசியங்களை வெட்ட வெளிச்சமாகச் சொல்லிவிட்டால், மக்கள் அவற்றை மதிக்காமல் போய்விடுவார்களோ என்ற அச்சம் நம் ஞானிகளுக்கு இருந்திருக்கிறது. ஆகவேதான், உண்மைகளைப் பாதி மறைத்தும் பாதி மறைக்காமலும், குறியீடுகள் மூலம் சுட்டிக் காட்டுகிறார்கள். சொல்லினால் அவர்கள் போடும் முடிச்சுக்களை குருவின் உதவி இல்லாமல் அவிழ்க்க முடியாது.

உதாரணமாக, ஞானப் பயிற்சி ஒன்றை சிவவாக்கியர் எப்படி விவரிக்கிறார் என்று பார்ப்போம்.

மூலமாங் குளத்திலே முளைத்து எழுந்த கோரையை
காலமே எழுந்திருந்து நாலு கட்டு அறுப்பீரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிரம்மம் ஆகலாம்
ஆலம் உண்ட கண்டர் பாதம், அம்மை பாதம் உண்மையே

மிகுந்த நிச்சயத்தோடு அம்மையப்பர் பாதத்தில் அடித்து சத்தியம் பண்ணிக்கொடுக்கிறார் சிவவாக்கியர். ஆனால், மூலமாகிய குளம் எங்கே இந்த உடலில் இருக்கிறது, குளத்தில் முளைத்து எழுந்த கோரை எது, அதில் நாலு கட்டு அறுப்பது எப்படி, அறுத்தால் எவ்வாறு பரப்பிரம்மம் ஆகலாம் என்பது எல்லாம், கேவலம் புலமையினால் அறியக்கூடிய காரியங்கள் அல்ல.

இதைப்போலவே, சொல்லினால் பாம்பாட்டிச் சித்தர் செய்கிற நெசவும், நம்மைத் திணறடிக்கிறது.

வடக்கும் கிழக்குமாய் நூலிழைப்போம்
மற்றுஞ் சுழலிலே பாவு பூட்டுவோம்
நடக்கும் வழியிலே உண்டை சேர்ப்போம்
நடவா வழியிலே புடைவை நெய்வோம்

-என்று பெருமிதத்தோடு அவர் பாடுகிறார். ‘நடவா வழியிலே எப்படிப் புடைவை நெய்வது?’ என்று நாம் புருவத்தை நெறித்துக் கொண்டு இருக்கும்போது, இடைக்காட்டுச் சித்தர்,

வெட்ட வெளிக்குள்ளே பால் கற

-என்று ஒரு போடு போடுகிறார். சித்தர்கள்தான் இப்படி எல்லாம் சொல் மரபைச் சிதற அடிக்கிறார்கள், சொல்லைத் தாறுமாறாகப் பயன்படுத்துகிறார்கள் என்று நினைப்பது தவறு. ஞானப் பாதையில் நடந்த கவிஞர்கள் எல்லோருமே, திருமூலரிலிருந்து ராமலிங்க அடிகள் வரை, இந்தப் பொல்லாத பிரவர்த்தியில் ஈடுபடுகிறார்கள்.

ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்,
சாறுபடுவன நான்கு பனை உள;
ஏறற்கு அரியதோர் ஏணியிட்டு, அப்பனை
ஏறல் உற்றேன்; கடல் ஏழுங் கண்டேனே!

-என்று முழங்குகிறார் திருமூலர். அவர் ஏறிய ஏணி மேல் ஏறிக் கடல் ஏழையும் அதாவது ஏழு நிலைகளையும் கண்டு இருக்கிறார் ராமலிங்க அடிகளும். ஆனால், தான் கண்ட காட்சியை அடிகள் விவரிக்கும் முறை வேறு.

சோதி மலை ஒன்று தோன்றிற்று, அதில் ஒரு
வீதி உண்டாச்சுதடி, அம்மா,
வீதி உண்டாச்சுதடி.

அந்த வீதியில் செல்லும்போது வீதியின் நடுவே, ஒரு மேடையைக் கண்டார். அந்த மேடை மேலேறினால், ஒரு கூடம்!

கூடத்தை நாட, அக்கூடம் மேல் ஏழ் நிலை
மாடம் இருந்ததடி, அம்மா,
மாடம் இருந்ததடி.

ஒவ்வொரு நிலையிலும் ஓர் அற்புதக் காட்சியைக் கண்டார்; கருநீலம் செய்ய பவளமாயிற்று; மரகதப் பச்சை செம் மாணிக்கம் ஆயிற்று; பெருமுத்துவச் சிரம் பேர் மணியாயிற்று; பவளத் திரள் வெண்மணியாயிற்று; பன்மணி பொன்மணியாகவும், பகர்மணி படிகமாகவும் ஆயிற்று என்று சொல்லிக் கூத்தாடுகிறார் ராமலிங்க சுவாமிகள். அவருடைய அனுபவத்தில் அவருக்கு எவ்வளவு நிச்சயமும், தெளிவும் இருந்தது என்பதற்கு அவருடைய பாடலே சாட்சி.

ஆனால், பாடலைப் படிப்பவர்களுக்குப் பொருள் எளிதாக விளங்குவதில்லை. 'புலன் அறிவே அறிவு' என்று இருக்கும் நமக்கு, புலனுக்கு எட்டாத அனுபவங்களை ஞானிகள் எடுத்து விளக்க வேண்டி இருக்கிறது; அதுவும் நம்முடைய பொய்மை மிகுந்த சொல்லிலும், மொழியிலும் விளக்க வேண்டி இருக்கிறது; நம்முடைய மொழியோ மாசு நிறைந்தது; ஒன்றாகக் காணும் ஆற்றல் அற்றது, பேதம் நிறைந்தது; நான் என்றும், நீ என்றும், அவன் என்றும் சொல்லிச் சொல்லி பேதத்தைப் பெருக்கி மயக்கத்தை வளர்ப்பது.

பேதமற்ற காட்சியைப் பேதம் நிறைந்த சொற்களில் எப்படிச் சொல்வது? சொல்லைத் தறித்து, முறித்துத் தலைகீழாகத் தொங்கவிட்டால், நமக்கு ஓர் அதிர்ச்சி ஏற்படும் அல்லவா? அந்த அதிர்ச்சியிலே நம்முடைய புலன் மரபு கெட்டு, ஆணவம் தடுமாறி உண்மைக் காட்சியைக்கூட ஒருவகையாக நாம் உணர்ந்து விடலாம் என்று ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். சக்கிமுக்கிக் கல்லை உரசி, தீ உண்டாக்குவதுபோல, சொல்லோடு சொல்லை எப்படித் திருமூலர் உரசுகிறார் என்று பாருங்கள்.

எழுதாத புத்தகத்து ஏட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந்து ஓத
மலராத மொட்டின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணம் உண்டவாறே

-என்பது திருமந்திரம். எழுதாத புத்தகத்துக்கு ஏடேது, பொருளேது? தெருளாத, அதாவது, தெளிவு இல்லாத கன்னி எப்படித் தெளிந்திருந்து ஓதினாள்? மலராத மொட்டுக்கு மணம் ஏது, மது ஏது? பிறவாத வண்டு, மணத்தையாவது, உண்பதாவது! இப்படி இடக்குத்தனமாகச் சொல்லை ஆண்ட தமிழ்க் கவிஞர்கள் வேறொருவருமே இல்லை, திருமூலரைத் தவிர. சொல் அதிர, நம் மனம் அதிர இப்படி எல்லாம் பேசிவிட்டு, 'நல்ல குருவை நாடிக் கேள். பொருள் விளங்கிவிடும்' என்று சொல்லி நமக்கு ஆறுதல் வேறு கொடுக்கிறார் திருமூலர்.

இப்படி அவர் உபதேசம் செய்யும்போதே, சொல்லை வைத்து ஒரு விளையாட்டு விளையாடுகிறார். 'பேருண்மை என்ற விளக்கு இருக்கிறதே, அது கோடி சூரியப் பிரகாசத்தோடு ஒளி வீசிக்கொண்டு நிற்கிறது. ஆனால், அது உங்கள் குருட்டுக் கண்ணுக்கு புலப் படுவதில்லை. உங்களுக்கு அந்த உண்மையைக் காட்டுவதற்காகவே தீவட்டி வைத்துக்கொண்டு காத்துக்கொண்டு இருக்கிறார்கள் குருமார்கள். அவர்கள் விளக்கினால், விளக்குக்கு உடையவனாகிய இறைவன் உங்கள் கண்ணுக்கும் காட்சியளிப்பான்' என்று சொல்கிறார். ஆனால், இப்படியா சுவை இல்லாமல் அவர் சொல்வார்?

விளக்கை விளக்கும் விளக்கு உடையவர்கள்
விளக்கில், விளங்கும் விளக்கவர்தாமே

-என்று பாடுகிறார்.

ஆசான் மூலமாக அறிய வேண்டிய ரகசியங்களைத்தான் திரை போட்டு மூடி வைப்பார்கள் நம் ஞானிகள். ஆனால், ஆன்ம உலகத்தில் அவர்கள் கண்ட அடிப்படை உண்மைகளை, முடிந்த முடிவுகளை, சித்தாந்தத்தை மனந் திறந்து வாய்விட்டுப் பேசுகிறார்கள்.

மனிதனுக்குத் துன்பத்தைத் தருவது அவனுடைய ஆணவமே, 'நான்' என்ற மயக்கமே. அந்த மயக்கத்தில் இருந்து விடுதலை அடைந்தவுடனேயே அவனுக்கு ஆனந்தம் கைகூடிவிடுகிறது.

பரம்பொருளானது பேரண்டம் முழுவதுமே முட்டித் ததும்பிக் கொண்டு நிற்கிறது; ஒவ்வோர் அணுவுக்குள்ளும் தோய்ந்து நிற்கிறது, அதைவிட்டு நீங்கித் தோயாமலும் நிற்கிறது. அந்தப் பர வஸ்துக்குள் பேதம் என்பதே கிடையாது. ஒரே தன்மையானது அது. இந்த வஸ்துவுக்குள் ஆணவம் என்ற விதை எப்படியோ விழுந்தது. அது முளைவிட்டு, வளர்ந்து, கப்புங் கவருமாகச் செழித்தோங்கி அந்தப் பர வஸ்துவையே மறைத்துக்கொண்டு நிற்கிறது. இந்த வேடிக்கையை உணர்பவனே ஞானி. உணர்ந்த

மாத்திரத்தில் அவனுடைய ஆணவம், அகங்காரம் எல்லாம் மடிந்துவிடுகிறது. ஆணவத்தில் இருக்கும்போது எட்டாக் கனியாக இருந்த பேரின்பம் அவனுக்கு எட்டிவிடுகிறது. இந்த உண்மையைப் பட்டினத்தார் உணர்ந்து அனுபவித்துப் பாடுகிறார்:

ஓங்காரமாய் நின்ற வஸ்துவிலே ஒரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயன் அறிந்தாற் பதினாலு உலகும்
நீங்காமல் நீங்கி, நிறையா நிறைந்து நிறை உருவாய்
ஆங்காரமானவர்க்கு எட்டாக் கனி வந்து அமர்ந்திடுமே

சித்தாந்தப் பாதையிலே சென்ற ஞானிகள், தம்முடைய அனுபவங்களை என்றும் இறவாத பாடல்களில் பொதிந்து நமக்குத் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். உணர்வு உடையவர்கள் படித்துப் பயன் பெறலாம்.

7. அருள் வெளி

'டைம் மஸ்ட் ஹேவ் எ ஸ்டாப்' என்ற நூலில் ஆல்டஸ் ஹக்ஸ்லி உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவை, இந்து சம்பிரதாயத்தை ஒட்டி விளக்கி இருக்கிறார். மனிதன் சாதாரணமாக இரண்டு மண்டலங்களில் சஞ்சாரம் செய்கிறான். அவனுடைய உடம்பு பௌதிக உலகத்தில் வாழ்க்கை நடத்துகிறது. ஆனால், அந்த உடலுக்குள் இருக்கும் ஆன்மா சூட்சும உலகத்தில் சஞ்சரிக்கிறது.

மேற்சொன்ன நூலிலே யூஸ்டஸ் பார்னக் (Eustace Barnack) என்ற அருமையான ஒரு பாத்திரத்தை சிருஷ்டித்திருக்கிறார் ஹக்ஸ்லி. உடம்பே பிரதானம் என்று அவன் நம்புகிறான். ஐம்புலன் மூலமாக அனுபவிக்கக்கூடிய இன்பம் ஒவ்வொன்றையும், மிச்சம், சொச்சம் வைக்காமல் அனுபவிக்கிறவன். 'இன்று கிடைக்கக்கூடிய சிற்றின்பத்தை நாளை நுகரலாம் என்று வாய்தா போடாதே' என்பதே அவனுடைய சித்தாந்தம். விலாப் புடைக்கச் சாப்பிடுகிறான், வெறிக்க, வெறிக்க மது மாந்துகிறான், திகட்டத் திகட்டக் கலவிக் கடலிலே முங்கி, மூழ்குகிறான், மாய்கிறான். மாய்ந்தபின் அவனுடைய ஆன்மா விண்ணுலகத்தின் ஆனந்த லகரியிலே இரண்டறக் கலக்க மறுக்கிறது. உடம்பை இழந்த பின் உடல் மூலம் பெறக்கூடிய சிற்றின்பத்தைப் பெற முடியாமல் அவன் ஆன்மா வாடி வதங்குகிறது.

உடம்பு இருக்கும்போதாவது மனிதன் செயலில் ஈடுபட்டு தன்னுடைய இன்னல்களை எல்லாம் மறக்க முடிகிறது. ஆனால், உடல் கழன்று விழுந்த பிறகோ, 'மறதி' என்ற அருமருந்து அவனுக்குக் கிட்டுகிறதில்லை. ஆசையும், அதைப் பூர்த்திபண்ண முடியவில்லையே என்ற ஏக்கமும், ஏமாற்றமுமே ஆன்மாவின் இணை பிரியாத நண்பர்களாகிவிடுகிறார்கள். ஆனால், 'ப்ருனோ ரான்டினி' என்ற மற்றொரு பாத்திரம் இதற்கு நேர்மாறானவன். உடல் என்பது ஆன்ம வளர்ச்சிக்காக நமக்கு இறைவன் அருளிய வரப்பிரசாதம். விடுதலை அடைவதற்காக நமக்கு ஏற்பட்ட கருவி அல்லது சாதனம். லட்சியத்தை மறந்து சாதனத்தையே லட்சியமாகக் கொள்வது மடமை என்று அவன் கருதுகிறான்.

இந்த சித்தாந்தத்தைத்தான் திருமூலர் பல நூற்றாண்டுகளுக்கு முன் எடுத்து விளக்கி இருக்கிறார். ஸ்வானுபவத்தால் ஏற்பட்ட அதிகாரத்தோடு விளக்கி இருக்கிறார்.

உயிரை உய்விக்க வந்த கருவி உடல் என்பது உண்மைதான். ஆனால், அது நம்மைப் படுத்திவைக்கிற பாடு இருக்கிறதே, அதில் நாம் நம்மையும், நமது உயிரையும் மறந்து, உடல் தத்துவத்திலேயே முழுக்க முழுக்க ஈடுபட்டுவிடுகிறோம்.

உதாரணமாக, காமம் என்ற சக்தி எப்படி எல்லாம் மனிதனை ஆட்டி வைக்கிறது! உடம்பை மாத்திரம் அல்ல, உணர்ச்சியையும், அறிவையுமே பேயாட்டம் ஆடச் செய்துவிடுகிறது. திருமூலர்கூட காமச் சூறாவளியில் அகப்பட்டு மூக்கறுபட்டவர்தான்.

வையகத்தே மடவாரொடும் கூடி என்
மெய்யகத்தோர் உளம் வைத்த விதி அது

-என்று சொல்லி, அந்தப் பொல்லாத விதியைச் சுட்டிக்காட்டிப் பெருமூச்சு விடுகிறார். ஆனால், காமத்தினால் நன்மையும் ஏற்படுகிறது என்பதைத் திருமூலர் உணர்ந்தவர். காமத்தால் பீடிக்கப்பட்டவன் தன் உடம்பை மறந்து மற்றோர் உடம்பை நினைத்து நினைத்தாவது உருகுகிறான். அந்த மட்டுக்கும் தன் உடம்பின் பிரதானம் கரைந்து குறைகிறது. ஈரேழு உலகங்களும், சந்திர சூரியர்களும், ஏன், பிரபஞ்சம் முழுவதுமே தன்னைச் சுற்றி இயங்குவதாக நம்பினான் ராவணன். ஆனால், ஜானகியிடத்தில் அவனுக்கு ஏற்பட்ட காமம், அவனது ஆணவத்தைச் சிதறடித்து, தெம்பை அடக்கி ஒடுக்கி, பத்துத் தலைகளோடும் அவள் கால்மாட்டிலே விழுந்து பணியும்படி செய்யவில்லையா? ஆகவே, இந்தப் புலால் துருத்தியே பிரபஞ்சம் என்று கருதுகிறவனைக்கூட, அதற்குப் புறம்பாயிருக்கும் பொருட்களிடத்திலேயும் ஈடுபடும்படி செய்துவிடுகிறது காமம். சிற்றின்ப அனுபவத்தில் சிறிது நேரமாவது,

மனிதன் காலம், தூரம் என்ற உணர்ச்சிள் அற்ற அகண்டாகாரத்தில் அமிழ்ந்துவிடுகிறான்.

புணர்ச்சியுள் ஆயிழைபால் நட்புப்போல்,
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்

-என்று காமுகனையும், யோகியையும் சம நிலையில் வைத்துப் பாராட்டுகிறார் திருமூலர்.

காம ரசத்தை அனுபவிப்பவர்கள், கட் குடியர்களைப்போல, கேவலம் பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டால் கேடு விளைவது நிச்சயம். பழக்கத்தின் கொடுங்கோன்மை இருக்கிறதே அது உடலோடு நின்றுவிடுவதில்லை. மனதையும், ஆவியையுமே விலங்கிட்டுச் சீரழிக்கிறது. காமத்தால் கிடைப்பது துன்பமாக இருந்தாலும், பழக்கத்தை உதறித் தள்ள மாட்டாமல், மனிதன் அதில் ஈடுபடுகிறான்.

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடர் உற்றவாறே.

கை மேல் இருக்கும் பலாவின் கனியை அனுபவிக்கும் திறமையை இழந்துவிட்டு, ஈச்சம்பழத்தை நினைத்து, நினைத்து சொப்பன அவஸ்தையில் இருப்பார்கள். ஈச்சம்பழம் ஏன்? வேப்பங்காயை நினைத்துக்கூட அங்கலாய்ப்பார்கள். பழக்கத்தின் கொடுமை இது. இப்பேர்ப்பட்ட பழக்கத்துக்கு இளக்காரம் கொடுத்துவிட்டாலோ, அது சைத்தானைப்போல நம்மை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்கிறது. பிரபஞ்சம் முழுவதும் நமது உயிருக்குச் சொந்தம் என்ற அகண்ட உணர்வு மாறி, அது வேறு, நாம் வேறு என்ற வேற்றுமைப் புத்தி வலுப்பெறுகிறது.

ஆனால், காமத்தினால் விளைவது எல்லாம் துன்பம் என்று ஒப்பாரி வைப்பதும் தவறு. அதற்கு அழிக்கும் சக்தி எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவு ஆக்கும் சக்தியும் இருக்கிறது. காமத்தின் உதவியால்தான் மனிதன் காதல் உலகத்தை அடைய முடிகிறது.

நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணும்தோறும் குரிசிற்கும் அன்னதேயாம்.

காதலால் ஏற்படுகிற ஆயிரம் நயனத்தையும், ஆயிரம் இதயத்தையும் வைத்துக்கொண்டு உலகத்தை உணர்ச்சிப்பெருக்குடன் பார்க்கும்போது, நம்முடைய எண் சாண் உடம்பு வெடிபட்டு, விட்டு வாங்குகிறது; உள்ளே சிறைப்பட்டது போலிருந்த 'செங்கட்சீயம்' விஸ்வரூபக் காட்சியளிக்கிறது. இரண்யனுடைய

காமத்துக்கும், ராவணனுடைய காமத்துக்கும் அடிப்படை பேதம் ஒன்று உண்டு. காம அனுபவத்தில்கூட இரண்யன் தன் ஆணவத்தை மறக்க இயலாதவனாக இருந்தான். தன்னுடைய வீரத்திலும், வாள் வலியிலும் அவனுக்கு இருந்த இறுமாப்பு, அவனது ஆன்ம வளர்ச்சிக்குப் பெரிய இடையூறாக இருந்தது.

வாளினைத் தொழுதல் அல்லால் வணங்குதல், மகளிர் ஊடல்
நாளினும் உளவோ? என்னா அண்டங்கள் நடுங்க நக்கான்.

"மகளிரோடு ஊடும் காலத்தில்கூட நான் அவர்களை வணங்கியது இல்லையே. இந்த அரியையா வணங்கச் சொல்கிறாய்?" என்று பிரஹலாதனைப் பார்த்து நகைக்கிறான். ஆனால், ராவணனுடைய மனமோ, காதலால் பண்பட்டது. தன்னை மறந்த லயத்தில் அவனை அழுத்திவிட்டது காதல். ஆகவே, காதல் மூலம் அவன் உடலை மறந்து, தன்னை மறந்து, பேத நிலையற்று, பூரணத்தோடு ஐக்கியமடைந்தான், சூர்ப்பணகையைப்போல. காமத்துக்கு இரண்டுவித சக்தியும் இருக்கிறது. அதன் உதவியால் மனிதன் உடலை மறந்து, உயிரை வளர்க்கலாம்; உயிரை மறந்து, உடலையும் வளர்க்கலாம்.

காமத்தைக் காட்டிலும் கொடியது கோபம். அது எப்போதுமே நமக்கும், மற்றவர்களுக்கும் இடையே பேதம் கற்பித்து, விரோத பாவத்தை மூட்டி, ஐக்கிய புத்தியை, பிரம பாவனையைக் கெடுக்கிறது; மனதைக் கல்லாக்கி, மருளை ஊட்டுகிறது. ஆகவே, தான், திருமூலர் வெகுளியை அறவே வெல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

வெல்லும் அளவும் விடுமின் வெகுளியை
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளொடு தூங்கினால்,
கல்லும் பிளந்து கடு வெளியாமே.

-என்று பாடுகிறார்.

காமத்தையும், கோபத்தையும்விடக் கொடுமை வாய்ந்தது லோபம். காமமும், கோபமும் உடலிலே ஏற்படுகிற சேஷ்டைகள். பசி ஏற்படும்போது, உணவு அருந்தினால், பசி நீங்கிவிடும்; பசியால் ஏற்படுகிற மனக் குழப்பமும் நீங்கிவிடும். காமத்தையும், கோபத்தையும் அவ்வாறே தீர்த்துக்கொள்ளலாம். ஆனால், பண ஆசை என்பதைத் திருப்தி செய்வது கஷ்ட சாத்தியமான காரியம். ஏனென்றால், அது உடம்பைப் பொறுத்ததல்ல, மனதிலேயே வேரூன்றி வளர்வது; திருப்தி செய்ய முடியாதது. ஆகவே, அது இடைவிடாமல் மனிதனுடைய நடத்தையைப் பாதித்துக்கொண்டே இருக்கிறது. அன்பையும், இரக்கத்தையும் அது கொல்கிறது; பயன்

தெரியாத மிருக வாழ்க்கையை வளர்க்கிறது; திருமூலரின் கோபத்துக்கு இலக்காகிறது.

வட்டி கொண்டு ஈட்டியே, மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன் அறியாரே

-என்று அவர்களைச் சபிக்கிறார் திருமூலர்.

ஆகவே, காமக் குரோத லோபங்களை அடக்காவிட்டால், மனித மனம், மெய்ப்பொருளோடு ஐக்கியம் பெற முடியாமல் விகற்பம் அடைந்து அல்லல் உறுகிறது.

விண்ணுலக யாத்திரையிலே வளர்ச்சியுற்றுத் தடைப்பட்டு நின்றது உயிர். உடல் மூலம் கர்மங்கள் செய்து, கர்மங்கள் மூலம் அனுபவம் பெற்று, அனுபவத்தின் மூலம் ஆன்ம வளர்ச்சி அடைய வேண்டும் என்று அற்புதமான ஓர் உடலைக் கொடுத்தான் இறைவன். ஆனால், உடல் என்ன செய்கிறது? தன்னகத்தே வந்தடைந்த உயிரை ஏமாற்றி, காமக் குரோத லோபங்களின் உதவியால் 'உயிரைக் காட்டிலும் உடலே பிரதானம்' என்ற மயக்கத்தை ஊட்டிவிடுகிறது. 'இன்று கிட்டுகிற சிற்றின்பத்தை, நாளைக்கென்று வாய்தாப் போடாதே' என்ற பல்லவியை யூஸ்டஸ் பார்னக்கோடு நாமும் சேர்ந்து பாடுகிறோம்.

8. உறவும் உணர்வும்

குழந்தையோடு குலாவும் தாய் உள்ளத்தில் அன்பு வெறி ஏறுகிறது.

உச்சிதனை முகந்தால் – கருவம்
ஓங்கி வளருதடீ!
மெச்சி உனை ஊரார் புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ!

-என்று மலடியால் சொல்ல முடியாது; தகப்பனால்கூடச் சொல்ல முடியாது; தாய்தான் சொல்ல முடியும். உறவு நெருங்க நெருங்க, உணர்வு பெருகுகிறது.

ஆனால், உறவில் எல்லாம், மிக்க உன்மத்தத்தைக் கொடுக்கும் உறவு எதுவென்றால், காதலன்-காதலி உறவுதான். மனிதனுடைய குடுமியைப் பிடித்து ஆட்டிவைக்கும் மாபெரும் சக்திகள் இரண்டு. பசியும் காமமும். மனித வரலாற்றை ஊன்றிப் படிக்கும்போது இந்த உண்மை விளங்குகிறது.

இங்கிலாந்து என்ற ஒரு சிறிய தீவில் மக்களுக்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. பசியைத் தீர்ப்பதற்காக, காடும் கடலும் கடந்து பல நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தும், போரிட்டும் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஆங்கிலேயர் நிலை நாட்டினார்கள். இந்த வெற்றிக்கு எல்லாம் அடிப்படையாக இருந்தது பசி.

இப்படி எல்லாம் கிடைத்த மகத்தான ஒரு சாம்ராஜ்யத்தைத் 'தூ'வென்று உதைத்துத் தள்ளிவிட்டார் எட்டாவது எட்வர்ட் மன்னர். அதற்குக் காரணமாக இருந்தது காதல். காதல் உறவில் அவ்வளவு வன்மை இருக்கிறது. அந்த உறவில் மனிதன் உணர்வின் உச்ச நிலையைத் தொட்டுவிடுகிறான்.

மனித வாழ்க்கையில் உள்ள பலவிதமான உறவு நிலைகளில் நின்று, தம் உணர்வுச் செல்வத்தைப் பெருக்கியவர்கள் நம் ஞானிகள். அந்த உணர்வுச் செல்வத்தை எல்லாம், இறைவனோடு ஊடாடுவதில் பயன்படுத்திப் பேறு பெற்றார்கள் அவர்கள்.

இறைவனுக்கு நாமம் இல்லை, உருவம் இல்லை என்ற அறிவு அவர்களுக்கு இருக்கத்தான் இருந்தது. ஆனால், நமது புலனுக்குத் தெரியாத அந்தச் செம்பொருளோடு நெருங்க வேண்டுமே! ஆகவேதான், அந்தப் பொருளுக்கு நாமத்தையும் உருவத்தையும் கற்பித்தார்கள். அத்துடன் நிற்கவில்லை. மனித வாழ்க்கையில் தாம் அனுபவித்த உறவுகளை இறைவனோடு இணைத்து, உணர்வையும், ஈடுபாட்டையும் வளர்த்தார்கள்.

தயிருக்குள் வெண்ணெய் ஒளிந்துகொண்டு இருக்கிறது. நமது கண்ணுக்கு அது தெரிவதில்லை. ஆனால், அதற்குள் மத்தை நட்டுப் பொறுமையோடும், ஆர்வத்தோடும் கடைந்தால், வெண்ணெய் திரண்டு கண்முன் வந்து நின்றுவிடுகிறது. அதுபோலவே, உள்ளத்தினுள் ஒளிந்துகொண்டு நிற்கிறது இறை தத்துவம். அதற்குள், 'உறவு' என்ற கோலை நட்டு, 'உணர்வு' என்னும் கயிற்றினால் கடைந்தால், ஒளிந்து நிற்கும் பரம்பொருள் வெளிப்பட்டுவிடும் என்று கண்டார்கள் நம் முன்னோர்கள்.

உறவு கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய, முன் நிற்குமே

-என்றார் அப்பர் சுவாமிகள்.

வெட்ட வெளியாகப் பரந்து நிற்கும் இறை தத்துவத்தைப் பார்த்து, "ஏ, மச்சான்" என்று சொல்லித் தோள் மேல் கைபோட்டு உறவாட முடியாது. ஆனால், அந்தப் பொருளுக்குக் 'கண்ணன்' என்ற நாமத்தைச் சூட்டி, ஆயர்பாடியில் யசோதை மடியில் விளையாடும் குழந்தை என்று நினைத்துவிட்டோமானால், அந்தப்

பரம்பொருள் நமக்குக் கிட்டேயே வந்துவிடுகிறது. நாமே யசோதை என்று நினைத்துவிட்டால், சொல்லவே வேண்டியதில்லை; கையில் எடுத்து, மார்போடு தழுவிக் கொஞ்சிக் குலாவுவதற்கு உரிய நமது உடைமையாகிவிடுகிறது அந்தப் பரம்பொருள்.

தாய்மை உறவைப் பெரியாழ்வார் எப்படிப் பயன்படுத்துகிறார், அதனால் அவருடைய உணர்வு எப்படிச் செழிப்படைகிறது என்று பார்ப்போம். கண்ணனைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுகிறார் பெரியாழ்வார். மூவுலகையும் அளந்த கால்களுக்குத் துணித் தொட்டில் எம்மாத்திரம்? ஒரே உதையாக உதைத்துத் தொட்டிலைக் கிழித்துவிடுகிறது குழந்தை. உடனே கண்ணனை எடுத்துக் கொள்கிறாள் தாய். அவ்வளவுதான். அவளுடைய இடுப்பில் ஒரு மிதி மிதிக்கிறான் கண்ணன்; இடுப்பு முறிந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்படிப் படுத்துகிற பிள்ளையிடத்தில் தாய்க்கு அதிகப் பாசம் ஏற்படுகிறது. அப்படியே கண்ணனை ஒடுக்கி மார்போடு அணைத்துக்கொள்கிறாள். அந்தச் சமயத்தில் வயிற்றில் ஒரு பாய்ச்சல் பாய்கிறான் அவன். இப்படிப் படாதபாடு எல்லாம் பட்டுக் கண்ணனை வளர்க்கிறாள். அவளுடைய உடம்பு தேய்ந்து மெலிகிறது. மெலிந்தால்தான் என்ன? தாய்க்கு இந்தப் பொல்லாத குழந்தையைப்பற்றிப் பேசும்போதெல்லாம் உள்ளூர ஓர் ஆனந்தம் ஏற்படுகிறது. பாடுகிறார் பெரியாழ்வார்:

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்,
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்,
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்,
மிடுக்கு இலாமையால் யான் மெலிந்தேன், நங்காய்.

தாய்க்கும் சேய்க்கும் இடையே இருக்கும் உறவு, நமக்குத் தெரிந்த உறவு, நம் அனுபவத்துக்கு உட்பட்ட உறவு, நம் உணர்வைத் தட்டி எழுப்பவல்ல உறவு. அந்த உறவை, இறைவனிடத்திலே இணைத்து அவனோடு நாம் ஊடாடும்போது, நம் உணர்வு பெருகுகிறது; ஆணவம் கரைகிறது; ஆனந்தம் மேலிடுகிறது.

குழந்தையாகத்தான் இறைவனைப் பார்க்க வேண்டும் என்பது இல்லை. அவனைத் தாயாகக்கொண்டு வணங்கும்போது, உள்ளத்தில் அச்சம் அறவே நீங்கித் தெம்பும் தெளிவும் ஞானமும் பிறக்கின்றன.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் நெல்லையில் வாழ்ந்தவர். நெல்வேலியில் கோயில்கொண்டு இருக்கும் வேய்முத்தரையும், வடிவம்மையையும் நாள்தோறும் வணங்கும் பரம பக்தர். 'தகப்பனைக் காட்டிலும் தாய்க்குக் கருணை அதிகம்' என்று தம்

குடும்ப வாழ்க்கையில் உணர்ந்தவர். தம்முடைய குறைகளை எல்லாம் வேய்முத்தரிடத்தில் சொல்லிச் சொல்லிக் கதறுகிறார். ஆனால், வேய்முத்தருக்கு மனம் இளகவில்லை. என்ன செய்வது? தாயினிடத்தில் முறையிட்டால் தகப்பனிடத்தில் சிபாரிசு செய்ய மாட்டாளா என்று நினைக்கிறார்.

'அவர் திரிபுரத்தை எரிக்கப் புறப்படும்போது என்னைப்பற்றிச் சொல்லிவிடாதே, அம்மா. இளக்கமாக இருக்கும் நேரம் பார்த்து, அவரிடம் நயமாக என்னைப்பற்றிச் சொல்லக் கூடாதா? அப்படிச் சொன்னால், உன் வாயில் இருக்கும் முத்து சிந்தியா போகும்?' என்று தாயினிடத்திலே இடித்துச் சொல்கிறார்:

ஆய் முத்துப் பந்தரின் மெல்லணை மீது உன் அருகிருந்து
'நீ முத்தம் தா' என்று அவர் கொஞ்சும் வேளையில், நித்தநித்தம்
வேய்முத்தரோடு என் குறைகள் எல்லாம் மெல்ல மெல்லச்
சொன்னால்
வாய் முத்தம் சிந்திவிடுமோ? நெல்வேலி வடிவம்மையே.

அப்பாலுக்கு அப்பால் இருக்கும் பொருளைத் தாயாகக் கருதி உறவாடும்போது, அது இப்பாலுக்கு இப்பால் வந்து நம் இதயத்தோடு ஒட்டிக்கொள்கிறது.

இனி, காதல் உறவு எப்படிப் பக்தி உணர்வைத் தூண்டிவிடுகிறது என்று பார்ப்போம். 'மனுஷப் பயலுக்கு வாழ்க்கைப்பட மாட்டேன். நாராயணனையே என் அழகிய மணவாளனாகக் கொள்வேன்' என்று உறுதியோடு நோன்பு இருக்கிறாள் ஆண்டாள். கண்ணன் என்ற அந்தக் கருந் தெய்வத்தைச் சதா நினைந்து உருகிக்கொண்டு இருக்கிறாள். அவளுடைய உடல் வாட்டத்தைக் கண்ட தோழிகளுக்கு அவளுடைய இதயத்தின் நிலை தெரியவில்லை. "டாக்டரை அழைத்து வரட்டுமா?" என்று அசட்டுத்தனமாகக் கேட்கிறார்கள்.

நொந்துபோயிருக்கும் ஆண்டாளுக்கு இந்த அசட்டுக் கேள்வி மேலும் எரிச்சலை உண்டாக்குகிறது. "வைத்தியமாவது, ஒன்றாவது; என் நோயைத் தீர்க்க, ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது" என்று சொல்கிறாள். என்ன மருந்து அது?

"என்னுடைய தீராக் காதலைத் தெரிந்தும் தெரியாததுபோலப் பாசாங்கு செய்யும் அந்த அரங்கப் பெருமான் இருக்கிறானே, அவனுடைய திருமேனியில் படிந்து கிடக்கும் பட்டுப் பீதாம்பரத்தை எடுத்து வாருங்கள். அவனுடைய வேர்வை மணத்தோடுகூடிய பீதாம்பரத்தை என் முகத்தருகே கொண்டுவந்து வீசுங்கள். என் வாட்டம் எல்லாம் தணிந்துவிடும்" என்று சொல்கிறாள்:

கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சி பழகிக் கிடப்பேனைப்
புண்ணில் புளிப் பெய்தாற்போல் புறம் நின்று அழகு பேசாதே,
பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடைகொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே.

-என்று ஆண்டாள் பாடும்போது, காமம் பக்தியாக மாறும் ரசவாத வித்தையைக் கண்டு அதிசயிக்கிறோம். நாயக - நாயகி பாவத்தில் கொஞ்ச காலமாவது நின்று இறைவனோடு உறவாடிப் பார்த்தவர்களுக்குத்தான் அந்த உறவால் ஏற்படும் எல்லை மீறிய உணர்வு வளத்தைச் சுவைத்து அனுபவிக்க முடியும். ஆனால், காதல் பாதையில் சென்று இறைவனை அடைவது என்பது சாமானிய மக்களுக்கு எளிதான காரியம் அல்ல. காதலால் ஏற்படும் சுகம் ஒரு பக்கம் இருக்க, அதனால் ஏற்படும் அல்லல், ஆனந்தம், பொறாமை, ஏமாற்றம், பிரிவாற்றாமை இவற்றை எல்லாம் சமாளிக்க வேண்டும் என்றால், தன்னையே தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். ஆண்டாள், மாணிக்கவாசகர் போன்ற துணிச்சல்காரர்களே காதல் பாதையில் சென்று இறைவனை அடைய அருகதை உடையவர்கள்.

இறைவனைத் தாயாகக் கருதி உறவாடுகிறவர்களுக்கு இப்படி எல்லாம் அல்லல்கள் ஏற்படுவதில்லை. என்ன குற்றம் செய்தாலும் மன்னித்து அருள வேண்டியது தாயின் பண்பு. அச்சம் இல்லாமல் தாயோடு பழகலாம். வெற்று விரலைத் தாயின் வாயில் வைத்து, "அம்மா, இந்தா சோறு" என்று சொல்கிறது குழந்தை. "அமிர்தமாக இருக்கு, கண்ணே" என்று தாய் அதை அனுபவிப்பாள். காதலி வாயில் வெற்று விரலை வைத்தால், என்ன செய்வாள்? கடித்தே போடுவாள்.

நம்மை அடிமையாகவும், இறைவனை ஆண்டவனாகவும் பாவித்து உறவாடும் போதும் அபாயம் ஒன்றும் ஏற்படுவதில்லை; பொறுப்பு முழுவதையும் அவன் ஏற்றுக்கொள்கிறான்; நம் தலை மேல் இருக்கும் பாரம் இறங்கிவிடுகிறது. ஆண்டவன் பாராமுகமாக இருந்தால், அவனோடு வழக்காடுவதற்கு அடிமைக்கு உரிமை இருக்கிறது; துடுக்குத்தனமாகக்கூட வழக்காடலாம்.

திருச்செந்தூர் முருகனிடத்தில் போய் இப்படி வழக்காடுகிறார் படிக்காசுப் புலவர் என்ற பக்தர். "இத்தனை நாளும் நீ சிறு பிள்ளையாக இருந்தாய். பொறுப்பு இல்லாமல் சுற்றிக்கொண்டு இருந்தாய். இதுவரையிலும் என்னைக் கவனிக்காமல் இருந்தது சரி. இப்போதோ, நீ மீசை முளைத்த ஆடவனாகிவிட்டாய். அன்னமும் மயிலும்போல இரண்டு பெண் கொண்ட ஆண்மகன் நீ. இனிமேலும், என்னைக் கவனிக்காமல் இருக்கலாமா? உனக்குப் பொறுப்பு வேண்டாமா?" என்று உரிமையோடு கேட்கிறார்.

முன்னம் நின் அன்னை அமுது ஊட்டிப்
பொட்டு இட்டு மை இட்டு முத்தம் இட்டுக்
கன்னமும் கிள்ளிய நாளல்லவே,
என்னைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்ஞையும் போல் இரு
பெண்கொண்ட ஆண் பிள்ளை நீ
இன்னமும் சின்னவன்தானோ?
செந்தூரில் இருப்பவனே!

"கடவுளுக்கு எதற்குப் பெண்டாட்டி?" என்று ஒரு பெரியவர் கேட்டார். கடவுளுக்குப் பெண்டாட்டி வேண்டியதில்லைதான். ஆனால், அவனோடு நாம் இப்படி எல்லாம் நெருங்கி உறவாடுவதற்கு நமக்கு நாமே வசதி செய்துகொள்ள வேண்டும் அல்லவா? அதற்காகவாவது, 'அன்னமும் மஞ்ஞையும் போல் இரு பெண்ணை அவனுக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டும்'. அப்படிச் செய்யும்போது, உறவு வளர்கிறது. உணர்வு பெருகுகிறது, இறை இன்பம் கிட்டுகிறது. ஆகவேதான், சுவானுபவத்தில் இந்த உண்மையை உணர்ந்த அப்பர் சுவாமி அப்படிப் பாடினார்.

9. நீலத் திகிரி

பூமியின் சுற்றளவு 25,000 மைல். இவ்வளவு பெரிய உடம்பை தூக்கிக்கொண்டு மனோ வேகத்தில் சுற்றிக்கொண்டே இருக்கிறது பூமி. சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் இருக்கும் தூரம் 9 கோடி மைல். தான் சுற்றுவதுமல்லாமல் சூரியனையும் பிராகாரமாகச் சுற்றி வருகிறது பூமி. இந்தப் பிராகாரத்தின் சுற்றளவு 54 கோடி மைல். ஒரு பிராகாரம் சுற்ற ஒரு வருஷமாகிறது. பூமியைப்போலப் பல அண்டங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனும் அதன் பரிவாரமான கிரகங்களும் எட்டாத வெட்ட வெளியில் சுற்றிக் கொண்டு இருக்கின்றன. இதைப்போல எத்தனை எத்தனையோ சூரியர்கள், நட்சத்திரங்கள்போல் காட்டிக்கொண்டு வான வெளியில் வட்டம் சுற்றிக்கொண்டே இருக்கின்றன; ஒரு கணக்குப் படி சுற்றுகின்றன; இவ்வாறு சலியாது சுற்றும் அண்டங்களும் பிரமாண்டங்களும் கவிஞர் கண்ணுக்கு உருளைகளை அல்லது சக்கரங்களை நிகர்த்திருக்கின்றன. இந்தப் பேரண்ட சக்கரங்களை ஞாலத் திகிரி என்றழைக்கிறார் கவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். (திகிரி: சக்கரம் அல்லது உருளை)

ஒவ்வோர் அண்டமும் சுற்றுவதோடு நில்லாமல், ஒவ்வோர் அண்டத்தில் இருக்கும் பொருட்களும் உருமாறி வட்டம் சுற்றுகின்றன. உதாரணமாக, கடல் நீர் சூரிய வெப்பத்தின் உதவியால் ஆவியாக மாறுகிறது. நீராவி பூமிக்குப் பத்து மைல் உயரம் வரை சென்று குளிர்ந்து இறுகி மேகமாக உருக்கொள்கிறது. மேகம் சூல்கொண்டு இருண்டு கறுத்து மழையாக மலை மேல் பொழிகிறது. ஆறாகப் பாய்ந்து கடலோடு கலக்கிறது. மறுபடியும் சக்கரம் சுழல்கிறது. ஆவி - மேகம் - மழை - கடல் என்று. இவ்வாறு வட்ட வளையம் சுற்றும் இயக்கத்தை முதுநீர்த் திகிரி என்று அழைக்கிறார் கவிஞர். (முதுநீர் - கடல் நீர்) முதுநீர்ச் சக்கரத்தைப்போலவே, பருவச் சக்கரமும் சுழல்கிறது - வசந்தம், கோடை, காற்று, மழை, பனி, மறுபடியும் வசந்தம் என்று பருவங்கள் எல்லாம் ஒரு நியதிப்படி வளைய, வளைய வருகின்றன. பிறப்பு - இறப்பு என்ற சக்கரம் வேறு சுழன்றுகொண்டே இருக்கிறது.

ஒரு கடிகாரத்தைத் திறந்து பார்த்தால், அதற்குள் வில்லோடு ஒட்டிய மூலச் சக்கரம் ஒன்றிருக்கும். அது சுற்றும்போது, அதோடு இணைந்து ஒரு பெரிய சக்கரம் அதைக் காட்டிலும் வேகமாகச் சுற்றும். பெரிய சக்கரத்தோடு அதைக் காட்டிலும் பெரிய சக்கரம் இணைந்து சுற்றும். இப்படியாக எத்தனையோ சக்கரங்கள் கடிகாரத்தினுள் சுற்றிக்கொண்டு இருக்கும். ஆனால், எல்லாச் சக்கரங்களும் மூலச் சக்கரத்தின் உந்து சக்தியால்தான் சுற்றுகின்றன.

ஞாலத் திகிரி, முதுநீர்த் திகிரி முதுலியவற்றைச் சுற்றச் செய்யும் மூலத் திகிரி எது என்றால், காலம் என்ற கண்ணுக்குத் தெரியாத திகிரிதான். பிரமாண்டமான ஆல மரம் ஒன்றை இன்று பார்க்கிறோம். அதற்கு 200 வயது இருக்கும். 200 ஆண்டுகளுக்கு முன் அது ஒரு சிறு ஆல விதையில், ஒளிந்துகொண்டு இருந்தது. காலச் சக்கரம் சுழன்று, சுழன்று விதையில் ஒளிந்துகொண்டு இருந்த ஆல மரத்தை மெல்ல, மெல்ல இழுத்து வெளிக் கொணர்ந்திருக்கிறது.

பிரபஞ்சத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாமே காலச் சக்கரத்தின் சுழற்சியால் வெளி வந்தவைதான்.

சென்னையிலிருந்து மதுரை போகும் வழியில் திருச்சி வருகிறது. இல்லாத திருச்சியா திடீரென தோன்றுகிறது? முன்னமேயே இருந்த ஊர்தான் திருச்சி. இடத்தைவிட்டு இடம் பயணம் செய்யும்போது முன்னமே இருந்த திருச்சி ஊரை நாம் சந்தித்து இருக்கிறோம். நம் வாழ்க்கையில் இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பின்னால், நிகழப்போகும் நிகழ்ச்சிகளும் நிகழ்பவையல்ல. 200 மைல்களுக்கு

அப்பால் இருந்துகொண்டு இருக்கும் திருச்சியைப்போல, 10 ஆண்டுகளுக்கு அப்பால் கால மண்டலத்தில் அந்த நிகழ்ச்சிகள் இருந்துகொண்டு இருக்கின்றன!

தூரம் என்ற திரை திருச்சியை மறைத்துக்கொண்டு இருப்பதைப்போல, காலம் என்ற திரை அந்த நிகழ்ச்சிகளை மறைத்துக்கொண்டு இருக்கிறது. இந்த உண்மையை வேறு விதமாகவும் சொல்லலாம். காலம் என்ற வாகனத்தில் நாம் பயணம் செய்யும்போது முன்னமேயே இருந்துகொண்டு இருக்கும் அந்த நிகழ்ச்சிகளை நாம் சந்திக்கிறோம். இடப் பயணத்தில் நாம் திருச்சியைச் சந்திப்பதைப்போல, காலம் என்ற தத்துவம் எல்லா நிகழ்ச்சிகளையும் பூத்து விரியச் செய்கிறது. ஆகவே, நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் சூத்திரதாரராக இருக்கிறது காலம் என்ற திகிரி. "ஞாலத் திகிரி முதுநீர்த் திகிரி நடாத்தும் அந்தக் காலத் திகிரி" என்று சொல்லி அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பாராட்டினார் கவிஞர்.

நீளம், அகலம், உயரம் என்ற மூன்று அளவைகளோடு கலந்து பிரிக்க முடியாத நான்காவது அளவை ஒன்றிருக்கிறது. அதுவே காலம் என்ற அளவை என்பதை விஞ்ஞான முறையில் நிலைநாட்டினார் ஐன்ஸ்டீன். காலத்துக்கு மேல் ஐந்தாவது அளவை ஒன்றிருக்கிறது என்று ஊஸ்பென்ஸ்கி என்ற ரஷ்ய விஞ்ஞானி சொல்கிறார்: விஞ்ஞானிகள் இன்னும் பலப்பல அளவைகளைப் புதிதாகக் கண்டுபிடிக்கலாம். ஆகவே, அவற்றுக்கும் இடங்கொடுக்க வேண்டும் என்று எண்ணி, 800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்,

ஞாலத் திகிரி முதுநீர்த் திகிரி நடாத்தும் அந்தக்
காலத் திகிரி முதலான யாவும்

-என்று பாடினார்.

காலம் முதலான மூலச் சக்கரங்களுக்கு எல்லாம் விசை கொடுத்து முடுக்கிவிட்ட உள் மூலச் சக்கரம் ஒன்று இருக்கிறது. அதைப்பற்றி பேசப் போகிறார் கவிஞர். அவர் சொல்லப் போவதைப் புரிந்துகொள்வதற்காக ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்னர் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

நீலகிரி மலையின் உச்சியில் இப்போது ஒய்யாரமாக அமர்ந்து இருக்கும் உதகமண்டலம் அந்தக் காலத்தில் இல்லை. அது மனித சஞ்சாரம் இல்லாத ஒரே மலங்காடாக இருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியில் வேலை பார்த்த ஓர் ஆங்கிலேயர் தற்செயலாக மலை மேலேறிச் சுற்றி வந்தபோது, இப்போது உதகமண்டலம் இருக்கும்

மலை உச்சியில் அழகிய நகரம் ஒன்றை நிர்மாணிக்கலாம் என்று எண்ணினார். இங்கிலாந்திலிருந்து ஒரு சிற்பியை வரவழைத்து, கோடைக் கொடுமையினின்றும் தப்பி ஆங்கிலேயர் வாழ்வதற்கு உரிய ஒரு நகரத்தை அமைக்கும்படி ஏவினார்.

நகரத்தை அணிசெய்வதற்காக மனதுக்கு இதமான ஒரு பூங்காவையும் அமைக்க வேண்டும் என்று ஒரு பெரிய திட்டம் போட்டார் சிற்பி. அவருடைய கற்பனையில் விதம் விதமான பூஞ்செடிகள் பூத்துக் குலுங்கின; விதம் விதமாக மரங்கள் கப்பும் கவருமாக வளர்ந்து வானைத் தொட்டுக்கொண்டு நிற்கின்றன. அவர் உள்ளத்தில் உதயமான சோலையை அவரோடு ஒத்துழைத்தவர்கள் காணவில்லை.

ஒரு பனை மட்டையைக் கையில் வத்துக்கொண்டு சுண்ணாம்புத் தண்ணீரில் அதை முக்கி, முக்கி கோலம் போட்டுக்கொண்டே போனார் சிற்பி. பின் சென்றவர்கள் அவர் கட்டளைப்படி அந்தக் கோலத்தின் புள்ளிகளிலும் வளைந்து நெளியும் கோடுகளிலும் விதைகளை விதைத்தார்கள், பதியன்களைப் பதித்தார்கள், செடிகளை நட்டார்கள்; பலப்பல ஆண்டுகள் உருண்டோடின. அதன் பின்தான் இப்போது உதகையில் நாம் பார்க்கும் அற்புதமான பூங்காவை நனவாக்கிய சிற்பியின் கனவை மற்றவர்களும் கண்டு மகிழ முடிந்தது. மற்றவர்களுக்கு அருவமாக இருந்த சிற்பியின் அகக் காட்சி, இப்போது மற்றவர்களுக்கும் காணக் கிடைத்த புறக் காட்சியாக உருவாயிற்று.

இதைப்போலவேதான் இறைவன் என்ற சிற்பியின் அகக் காட்சியில் உதித்தது பேரண்டம்; பின்னர் அது புறக் காட்சியாக மாறியது. வெறும் பாழாக இருந்த எல்லையிலாப் பர வெளியில் பல்லாயிரங் கோடி அண்டங்கள் பூத்து மலர்ந்தன. சூரிய சந்திரர்களும் விண்மீன்களும் தோன்றி மாபெரும் உருளைகளைப் போல் வெட்ட வெளியில் சுழன்றன; சுழல்கின்றன. ஒரு கணக்குப் படி ஒன்றோடு ஒன்று மோதாமல் யாரோ இட்ட கோலங்களின் கோடுகளிலும் புள்ளிகளிலும் ஆணைக்கு அடங்கி நின்று, ஆனால் கற்பனை கடந்த வேகத்தில் சுழல்கின்றன. அந்த ஆங்கிலச் சிற்பி இட்ட கோலத்தினுள் இட்ட விதைகளினின்றும், பதித்த பதிகளி னின்றும், காலத் திகிரியின் சுழற்சியிலே, வெளிவந்த உதகமண்டலப் பூங்காவைப்போல, பேரண்டப் பூங்காவும் வெட்ட வெளியில் இட்ட காலங்களினின்றும் வெளிவந்து விரிந்து பெருகிச் சுழன்று கொண்டு இருக்கிறது.

வெட்ட வெளியில் கோலத்தை இட்டது யார்? நமது திருவரங்கத்தில் பள்ளிகொண்டு இருக்கும் பெருமாள்தான்.

பாற்கடலைக் கடைந்தபோது, ஒரு நீல மலையை மத்தாக வைத்துக் கடைந்தார் அவர். அந்த மத்தைப்போல நீல மேனியை உடையவர் நம் அரங்கர். அறிதுயிலில் இருக்கும் அவர் பாதங்கள் நோவ எழுந்து சென்று பனை மட்டையைக் கையில் வைத்துக்கொண்டு சுண்ணாம்புத் தண்ணீரில் அதை முக்கி முக்கியா வெட்ட வெளியில் கோலத்தைப் போடுவார்? இல்லை. நியதிக் கோலத்தைப் போட வேண்டும். அதற்கு அடங்கிப் பேரண்ட உருளைகள் உருள வேண்டும் என்று அறிதுயிலில் இருந்தவர் தீர்மானித்தார். அவ்வளவுதான்!

உடனே அவர் கையில் இருக்கும் அழகிய சக்கரம், கோலத் திகிரி, அவர் கையைவிட்டு அகன்று பாய்ந்து, வெறும் பாழில் சுழன்று சுழன்று சென்று ஒரு மாபெரும் கோலத்தை இட்டுவிட்டு மீண்டும் அவர் கையில் வந்து அமர்ந்துகொண்டது. மூலத் திகிரி இட்ட கோலத்தில் காலத் திகிரி பயபக்தியோடு உருண்டு சென்றது. காலத் திகிரியினின்றும் பிறந்து அதோடு இணைந்து நிற்கும் ஞாலத் திகிரி, முதுநீர்த் திகிரி முதலிய திகிரிகள் எல்லாம் நியதி தவறாமல் தொடர்ந்து சுழன்றன. இந்தத் திகிரித் தொடரைப் பார்த்து, கடிகாரத்தினுள் இருக்கும் சக்கரத் தொடரை நாம் அனுபவிப்பது போல, அனுபவிக்கிறார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்:

ஞாலத் திகிரி முதுநீர்த் திகிரி நடாத்தும் அந்தக்
காலத் திகிரி முதலான யாவும் கடல் கடைந்த
நீலத் திகிரி அனையார், அரங்கர், நிறைந்த செங்கக்
கோலத் திகிரி தலை நாளில் கொண்ட கோலங்களே.

படைத்துக்கொண்டே இருக்கும் கையை 'நிறைந்த செங்கை' என்றார். செங்கை எப்படிப் படைக்கிறதாம்? பாற்கடலைக் கடையக் கடையப் புதுப் புது பொருள்கள் உண்டாகின்றன. விண்ணில் தோன்றுகிற குறிப்பிட்ட நட்சத்திரக் கூட்டத்தை 'மில்கிவே' அல்லது பாலோடை (பால்வெளி) என்று ஆங்கிலேயர் அழைக்கிறார்கள். இந்தப் பாலோடையைப் பாற்கடல் என்று அழைத்தார்கள் நம் முன்னோர்கள். இந்தப் பாற்கடலின் தனிச் சிறப்பைப்பற்றித் தற்கால விஞ்ஞானிகள் அதிசயித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

பேரண்டத்தில் வேறு எங்கும் நடக்காத ஒரு நாடகம் அங்கு நடந்துகொண்டு இருக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம் ஒரு பொருள் உருவம் மாறி மற்றொரு பொருளாகுமே ஒழிய, சூன்யத்திலிருந்து ஒரு பொருளும் உண்டாவதில்லை. ஆனால் பாலோடை மாத்திரம் இதற்கு விதிக்கு விலக்காக அமைந்திருக்கிறது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். ஏன்? வெறும் பாழிலிருந்து,

அதாவது இன்மையிலிருந்து, ஹைட்ரஜன் அணுக்கள் பால் வெளியில் எப்படியோ படைக்கப்படுகின்றன. இந்த அற்புதம் விளங்கவில்லையே என்று தற்கால விஞ்ஞானிகள் வியக்கிறார்கள். கோலத் திகிரியைக் கையில் வைத்துக்கொண்டு பால்வெளியில் துயிலும் அந்த நீலத் திகிரி அனையாருக்கே அது வெளிச்சம்.

10. இறைவனும் இசைக் கலையும்

உலகத்திலேயே ஈடு இணை இல்லாத இசைக் கருவி என்றால் அது நாகஸ்வரம். அதில் மிக்க புலமை வாய்ந்த தலைவர் திருவீழிமிழலை எஸ்.சுப்பிரமணிய பிள்ளை அவர்களே! அழகிய மணவாளனாக இங்கே வீற்றிருக்கும் என் இள நண்பர் தி.மு.நாராயணசாமி பிள்ளை அவர்களே! அண்ணாமலை வள்ளல் மரபில் தோன்றிய செட்டி நாட்டரசர் அவர்களே! திரு. சிதம்பரம் செட்டியார் அவர்களே! இசை வாணர்களே! பெரியோர்களே! நேற்றுப் பேசிய எனது மாண்புமிகு தோழர் இஸ்மாயில் அவர்கள் "எனக்கு இசை நுணுக்கங்கள் தெரியாது; ஏதோ ரசிகன் என்ற முறையில், ரசிகப் பெருமக்களின் பிரதிநிதியாக வந்து நான் இதைத் திறந்து வைக்கிறேன்" என்றார்.

நானும் அந்தப் பட்டியலில் சேர்பவனே. நான் ஒரு 'தெர்மா மீட்டர்'போல. அது, காய்ச்சலின் அளவைக் காட்டுமே ஒழிய, காய்ச்சலின் விவரம் அறியாது. அதைப்போல ஒரு நல்ல சங்கீதம் இல்லையெனில் நான் குத்துக்கல்லாக, விறகுக்கட்டைபோல் அமர்ந்திருப்பேன்.

ஆனால், நல்ல சங்கீதம் எனில், அது என் செவிக்குள் புகுந்து உடம்பை எல்லாம் ஓர் ஆட்டு ஆட்டிவிடும். நரம்புக்குள்ளே அந்த இசை புகுந்து, என் உடலையே வேறு ஒரு பொருளாக ஆக்கிவிடுகிறது. அப்போது ஒகோ இது ஒரு நல்ல இசைபோல இருக்கிறது என ஊகித்துக்கொள்வேன். உண்மையிலேயே, 'பாப்' இசையை என்னால் ஒரு நொடியும் கேட்க முடியவில்லை.

என் பேராசிரியரான டி.கே.சி. இதனைப்பற்றி, "இது இளக்கமான மனதினையும் கல்லாக்கிவிடும். இதனை வைத்துச் சுவர் எழுப்பலாம்" என நகைச்சுவையாகக் கூறுவார். ஆனால், நல்லிசை, மனமாகிய கல்லைப் பிசைந்து கனியாக்கிவிடுகிறது. அப்படி நம்மோடு நெருங்கி உறவுகொள்ளும் பாங்கு இசைக் கலைக்கு இருக்கிறது.

வால்டர் பேட்டர் என்ற ஆங்கிலப் புலவர் பெருமான், 'All arts aspire towards the condition of music' எனக் கூறினார். அதாவது, எல்லாக் கலைகளுமே இந்த இசைக் கலையினுடைய நிலைமை தங்களுக்கு ஏற்படவேண்டுமென ஏங்கிக்கொண்டுள்ளதாம்.

1947-ல் ஸ்ரீவில்லிபுத்தூரில் நான் 'முன்சீப்'பாக இருந்தேன். அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் 5 மணி நேரம் இசைக் கச்சேரி நிகழ்த்தினார். என்னுடைய தலைமையில் நடந்தது. மிகப் பிரம்மானந்தமாக இருந்தது. எல்லாம் முடிந்த பிறகு, முன்பு கூறிய கருத்தைக் கூறி விளக்கினேன்.

'அதாவது, சிற்பி இருக்கிறான். ஆனால், அவன் கல்லுக்கும், உளிக்கும் அடிமைப்பட்டுள்ளான்; கவிஞர் இருக்கிறார். சொல்லுக்கு அடிமை; ஓவியன் அதேபோல் வண்ணத்துக்கும், தூரிகைக்கும் அடிமை; ஆனால், இசைவாணர்களாகிய இவர்களோ ஒன்றுக்கும் அடிமையில்லை.

இவர்கள் நாதக் குதிரை மேல் ஏறி ஒரு தட்டுத் தட்டினால் நம்மை எல்லாம் அது விசுவவெளிக்கே இழுத்துச் சென்றுவிடுகிறது. ஆகவே, எல்லாக் கலைகளும் இறைவனே! இசைக் கலைக்குள்ள முழு சுதந்தரத்தை எங்களுக்கும் அளிக்க வேண்டும் எனத் தவமிருக்கிறதாம்.'

இந்த விளக்கத்தைக் கேட்ட அரியக்குடி, "என்னுடைய இந்த 5 மணி நேரக் கச்சேரியைவிட இந்த 5 நிமிடக் கருத்தே எனக்குப் பிரம்மானந்தமாக இருக்கிறது" எனக் கூறினார்.

உண்மையிலேயே இசைக் கலை இன்னது எனக் கூற முடியாத அளவு சிறப்பு வாய்ந்தது. இதனை மேலை நாட்டார் செங்கல் வைத்துக் கட்டுகிற கணக்கில்தான் பேசுவார்கள். கணக்கும் ஒழுங்கும் இருந்தால் போதும் அவர்களுக்கு. செங்கல், சுண்ணாம்பு, சிமெண்ட் ஆகியவற்றைக் கலந்தால் அது சிற்பமாகிவிடுமா? குட்டிச் சுவர்தான். அதேபோல், சுரங்களைக் குவித்துவிட்டால் அது இசையாகிவிடாது. அதற்கு உள்ளூர ஓர் உணர்ச்சி இருந்து அதனை ஒருமைப்படுத்த வேண்டும். அதுதான் மிக முக்கியம்.

இப்போது இங்குள்ள 'டைரக்டர்' அருணாசலம் கூறுவார். அவர் ஒருமுறை டி.கே.சி-யிடம் ஒரு பாகவதரை அழைத்துப் போயிருந்தாராம். அப்போது கம்ப ராமாயணப் பாடல் ஒன்றை டி.கே.சி. பாடிக் காட்டினாராம். பாகவதர் வெளியில் வந்த பிறகு இவரிடம், "எங்களால் பாட முடியாத அளவுக்குச் 'சங்கராபரணம்' அவ்வளவு சுத்தமாக இருந்தது" என்று கூறினாராம். நான் அவரிடம் ஒருமுறை, இவ்வளவு சிறப்பாக நீங்கள் பாட முடிவது எப்படி என்று கேட்டபோது, அவர், "நான் ஒரு பாடலைப் பாடும்போது

அந்த உணர்ச்சியிலேயே மூழ்கி நின்றுவிடுகிறேன். அந்த உணர்ச்சியே என் இதயத்தில் வந்து நின்று ஒரு சங்கராபரணமாகவோ, சாவேரியாகவோ, பைரவியாகவோ வடிவம் கொடுத்துவிடுகிறது" என்று கூறினார்.

எனவே, உணர்ச்சியற்றுப் பாடுதல் கழைக் கூத்தாடித்தனமாக அமைந்துவிடும். உள்ளத்தே உணர்ச்சி பொங்கப் பாடினால், அதுவே அந்த ராகத்தை, அதன் பாவத்தை அமைத்துக் கொடுத்து விடுகிறது.

'ஸ்வெட்லானா' என ரஷ்ய மாது ஒருவர் என் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் தமிழினை நன்கு அறிந்தவர். நாங்கள் 3 மணி நேரம் பேசிக்கொண்டு இருந்தோம். பேசிக்கொண்டு இருந்தபோது, அவர் கூறிய ஒரு விஷயத்துக்கு நான் "அப்படியா!" எனக் கூறினேன். அவர்கள் "ஆகா! என்ன அழகான ஒரு சொல் அது? அதற்குள்ளே எப்படிப் பாவத்தினைத் திணித்துவிடுகிறார்கள் தமிழர்கள்" என வியந்து அதனையே பல முறை கூறி அதனை ரசிக்கத் தொடங்கிவிட்டார். அதனுள் சுருதி அடங்கியுள்ளது. அவருக்குத்தான் தெரிகிறது. நமக்குத் தெரியவில்லை.

'அவன் வந்தான்' என்பது ஒரு ஸ்டேட்மென்ட். அவன் வந்தானா எனக் கேட்கும்போது ஒரு லயம். அதற்கு மேல், வந்தானோ எனும்போது பாவம் மாறுகிறது. வந்தானே, வந்தானே எனும்போது வேறு பாவம் தோன்றுகிறது. ஆனால், வந்தானோ என இயற்றமிழில் இழுத்துக்கொண்டே இருக்க முடியுமா? ஆனால், இதை இசைக் கருவியில் இழுக்கலாம். ஒரு மணி நேரத்துக்கு ஓர் ஒலிக்கோலத்தைப் பாடலாம்; ஓர் உணர்ச்சியில் நிற்கலாம். அளபெடைக்கு மேல் இயற்றமிழில் அதனை நீட்ட முடியாது. இதைப்போல உள்ள பொருட்கள் பல உள்ளன.

நாயகன், நாயகி பாவத்தில் முத்துத் தாண்டவர் பாடல்கள்போல் வேறு எந்த மொழியில் உள்ளது? இறைவன் வருகிறார். அவரைப் பார்த்துக் காதல்கொண்டவள் பாடும் கட்டம்.

தெருவில் வாரானோ? என்னைச் சற்றே
திரும்பிப் பாரானோ?

இதனை ஜெயம்மாள் பாடக் கேட்டால் வேறு உலகத்துக்கே நாம் போய்விடுவோம். இப்படி நம்மை உணர்ச்சி மயமாக்கிவிடும் நமது தமிழ் இசை. பாவ வேறுபாடுகளை அவ்வளவு துல்லியமாக எடுத்துக் காட்டிவிடும் இசை.

இங்கேதான் மொழிப் பிரச்னை பிறக்கிறது. இசை யாவர்க்கும் பொதுவானது; ஆகவே, எந்த மொழியில் இருந்தால் என்ன? எனக்

கேட்கின்றனர். நம் மொழியில்தானே நமக்கு நன்கு விளங்கும்? இல்லை என்றால் சாகித்யங்களே தேவையில்லையே. வெறும் ராக ஆலாபனையுடன் நிறுத்திக்கொள்ளலாமே.

என் அருமை நண்பர் சோமு ராக பாவம், அர்த்த பாவம் என்று ஓர் அருமையான கட்டுரையைக் கல்கி ஆசிரியராக இருந்தபோது எழுதியிருந்தார். ஒரு சாகித்யத்தை எடுத்துக்கொண்டால் ராகத்துக்குத் தனி பாவமுள்ளது; ஒரு சொல்லுக்கு தனிப் பொருள் உள்ளது. எனவே, கட்டாயம் தமிழில்தான் இருந்தாக வேண்டும் நமது தமிழிசை. இதனைத் தமிழ்நாட்டில்தான் நாம் சொல்லித் தொலைக்க வேண்டியுள்ளது!

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய், பழத்திடைச் சுவை ஒப்பாய்

-என இறைவனை அனுபவித்திருக்கிறார் சுந்தரர். பண்ணில் தமிழைக் குழைத்துக் கொடுக்கும்போது ராக பாவமும் அர்த்த பாவமும் ஒன்றோடு ஒன்று இணைந்து நம்மை காலம், இடம் என்ற கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து, ஆனந்த நிலையை அடையும்படிச் செய்கிறது. 40,000 டாலரில் ஒரு விண்வெளிக் கப்பலைச் செய்யலாம். ஆனால், சங்கராபரணத்தையோ, மேகராகக் குறிஞ்சி போன்றவற்றையோ எத்தனை செலவழித்தாலும் உண்டாக்க முடியாது. தமிழிசை 2000, 3000 ஆண்டுகளாகவே வளர்ந்துகொண்டு வந்துள்ளது எனக் கூறுவதே தவறு.

ஜூலியன் ஹக்ஸ்லி என்ற விஞ்ஞானப் பேராசிரியர் மனித இனம் தோன்றி 48,000 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று கூறினார். தமிழிசை 30,000 ஆண்டுகளாக வளர்ந்து வருகின்றது என்று டி.கே.சி. அடிக்கடி சொல்வார். தொல்காப்பியம்தானா நமக்கு லேண்ட்மார்க்? அது இலக்கணம். அதற்கு முன்னரே இலக்கியம் இருந்து வந்திருக்கிறது. மேலும், அகத்தியமும் இருந்துள்ளது. இலக்கியத்துக்கு முன்னாலேயே, தமிழிசை வளரத் தொடங்கி விட்டது.

இதோ ரோஜா மலர் இருக்கிறதே இதனைப் பல வழிகளில் உபயோகிக்கலாம்; அனுபவிக்கலாம். அதேபோல் மனித உணர்ச்சிகளை எல்லாம் 30,000 ஆண்டுகட்கு முன், ஞானிகள் தியான நிலையிலிருந்து ஆராய்ச்சி செய்தார்கள். ஒவ்வோர் உணர்ச்சிக்கும் ஒலி வடிவம் கொடுத்தனர். அதுவே ராகம். இப்படியாகப் பிறந்த பண்ணிடம், எவ்வாறு வேண்டுமானாலும் பாடலாம் என உரிமை எடுத்துக்கொள்ளல் தவறு. மரபைக் காத்தல் மிக அவசியம். ஞானிகள் தவ நிலையிலிருந்து உணர்வுகளை உணர்ந்து, அதன் தன்மை என்ன, பாங்கு என்ன என விஞ்ஞான ஆராய்ச்சி செய்து ஒலி வடிவம் கொடுத்த காரணத்தால் அதைச் சிதைவு செய்தல் தவறு.

அரிச்சுவடியைக்கூடத் தோடியில் பாடலாம். ஆனால், பொருள் உள்ளதாக இருக்க வேண்டும். உலகத்தில் வேறு எங்கும் செய்யாத ஒன்றினை நம் ஞானிகள் செய்துள்ளனர். அது மட்டுமல்ல, இயற்கை அன்னைக்கு ஒவ்வொரு காலத்தில் ஒரு பாவம் உள்ளது எனக் கண்டுபிடித்தனர்.

பல மொழிகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். கோதண்டபாணிப் பிள்ளை, 'பழந்தமிழ் இசை' என்ற நூலில் என்ன அழகாக எழுதியுள்ளார்! அந்தந்த நேரத்துக்கு ஏற்றாற்போல் ஒரு ராகம் வகுத்தது நம்ப முடியாத ஒன்று. பாவங்களுக்கு ஏற்றாற்போல் இலக்கியத்தையும், கவிதையையும் பாட வேண்டும்.

செவ்வழி தற்காலத்திய எந்தப் பண்ணோடு சேர்ந்தது எனச் சோமுவிடம் கேட்டேன். அவர் யதுகுல காம்போதிக்குக் கிட்டத் தட்ட வரும் என்றார். இதை எங்கே பாடலாம்? நெய்தல் நிலத்தில், கருக்கல் நேரத்தில் பாடலாம். தொல்காப்பியத்தில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. ஏக்க பாவத்தில் இதனைப் பாட வேண்டும். நெய்தல் யாழ் என ஒரு கருவியும் இருந்தது.

எற்பாடு நெய்தல் ஆதல் மெய் பெறத் தோன்றும்

-என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

நம்மை ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு மோகம் பிடிக்கும். நமக்கு வரவேற்கும் தன்மை மிக உண்டு. அவற்றைக் 'காப்பி'யடிக்கும் திறமையும் உண்டு.

டி.கே.சி. சொல்வார்கள். சடை பின்னி, தாழம்பூ சூட்டி, ராக்கொடி வைத்து, திருப்பதி மலைக்குப் போவார்கள். திரும்பி வரும்போது சுத்தமாக மொட்டையடித்துக்கொண்டு வந்து விடுவார்கள். இதுபோல் இங்கேயிருந்த தமிழிசை வடக்கே போய், இந்துஸ்தானி இசையாக நம்மிடமே திரும்பி வந்துவிட்டது. உங்களுக்கு எல்லாம் தெரிந்த கதை ஒன்று. 'ஹாமில்டன் பிரிட்ஜ்' என்று ஒன்று இருந்தது. அதனை 'அம்பட்டன் பிரிட்ஜ்' எனச் சொல்லப்போய், அது மொழிபெயர்க்கப்படும்போது 'பார்பர்ஸ் பிரிட்ஜ்' என்றானது.

இந்தத் தமிழிசையில் பணியாற்றுகிற யாவரையும் நான் மிக மதிக்கிறேன். வழக்கறிஞர்களின் வாதத் திறமையினை மிஞ்சி உள்ளார்கள் இங்கு உள்ளவர்கள். கும்பகோணம் சுந்தரேசம் பிள்ளை நன்கு வாதாடியுள்ளார்.

கம்ப ராமாயணப் பாடலில் சீதை வருவதுபோல் ஒரு கட்டம்.

'நைவளம் எனத்தக நண்ண வரலோடும்' என்று சீதையின் நடை, நைவளம்போல் நைந்து, நைந்து அமைந்தது. நாட்டியத்துக்கே உரிய ராகம் நைவளமாகும்.

தமிழ் நாட்டின் பழைய பண்ணான ஆற்றுப்படையில் அழகுற இடம்பெற்றுள்ள பண்ணான நைவளம், இங்கிருந்து வடக்கே போய், 'நாட்டை'யாகித் திரும்பவும் இங்கே வந்து, 'நட்ட பாடை' என்று வழங்குகிறது. டி.கே.சி. சொன்ன, 'திருப்பதி மொட்டை கதை'தான். இதுபோல் இந்த 30,000 ஆண்டுகளாகவே, தமிழிசைக்கு விபரீதங்கள் நடந்துகொண்டே வந்துள்ளன. மொழிபெயர்ப்பது, பின் மறுமொழிபெயர்ப்பது போன்ற பல நடந்தன. அவ்வளவு புதிய மோகம் நமக்கு.

மதுரைக்காரன் ஒருவன் சேர நாட்டுக்குப் போனான். கோழி கூவத் துயிலெழும் சேர நாட்டாரைப் பார்த்து,

நான்மறைக் கேள்வி நவில் குரல் எழுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லது
ஆழிய வஞ்சியும் கோழியும் போல
கோழியின் எழாஅர் எம் மூதூர் தாமே

-என்று பாடினான். கோழி கூவி எழ மாட்டார்களாம் பாண்டிய நாட்டு மக்கள். அந்தணர்களின் வேத இசை கேட்டே அவர்கள் துயில் எழுந்துவிடுவார்களாம். இதில் காணும் நகைச்சுவைதான் என்னே!

எனக்குத் தெரிந்து, 50 ஆண்டுகட்கு முன்னர் தாமிரபரணியில் பல பக்தர்கள் சிவ பூசை செய்துகொண்டு இருப்பார்கள். ஆற்றங்கரையின் இரு மருங்கும் நெடிதோங்கி வளர்ந்திருக்கும் மருத மரங்கள். 'ஸ்னேட்ச் ஆஃப் தி சாங்' என்றபடி, மருத மரத்தில் அமர்ந்துள்ள கிளி இப்போது பாட்டுப் பாடுகிறது.

'ஆடல் உகந்தான் அரன்' என்றும், 'மூவர் தமிழ்ப் பாடல் உகந்தான் பரன்' என்றும், 'கூடலில் நன்னெறி வாசித்து நடை பயக்கும்' என்றும் கிளிகள் பாடுகின்றனவாம். இது கின்னரி இசை வாசிக்கும் கிளிகள் என்று கூறப்படுகிறது.

கின்னரி என்பதில் ஒரு நரம்புதான் இருக்கும். பிச்சைக்காரர்கள் எல்லாம் வாசிப்பர். கிளிகள் எல்லாம் பாடும் அளவுக்கு அவ்வளவு இனிமையாக, சிறப்பாக இருக்கிறது அது.

திருவிளையாடற் புராணத்தில் ஒரு சுவையான கதை உண்டு. வடநாட்டிலிருந்து ஏமநாதன் என்னும் யாழ்ப் புலமை பெற்ற கர்வங்கொண்ட புலவன் ஒருவன் வருகிறான். இசையில் தன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்கிறான். மன்னன் வரகுண

பாண்டியனிடம் பரிசு பெற்றுச் செருக்குடன் ஒரு தனி வீட்டில் அமர்ந்துள்ளான். பாணபத்திரன் என்னும் நேர்மையான இசைப் புலவனின் வேண்டுகோளினை ஏற்றுச் சோமசுந்தரக் கடவுள் விறகு ஆளாக வடிவங்கொண்டு, 'பாணபத்திரனால் வயது முதிர்ந்ததன் காரணமாகத் தள்ளப்பட்டுவிட்ட கடைச்சீடன்' என்று கூறிக் கொண்டு, ஏமநாதன் வீறார்ந்த செருக்குடன் தங்கியிருக்கும் மாளிகைத் திண்ணையின் மேல் வந்து அமர்ந்துகொண்டு சாதாரிப் பண்ணில் ஒரு பாடலைப் பாடுகிறார்.

விரைசார் மலரோன் அறியா விகிர்தன்
அரசால் மதுரை அமர்ந்தான் என்னே!
அரசாய் மதுரை அமர்ந்தான் அவன் என்
புரைசார் மனனும் புகுந்தான் என்னே!

-பரஞ்சோதி திருவிளையாடல்; விறகு விற்ற படலம்: 33

விறகு ஆளாக வந்த சிவபெருமான் இசைத்த இசை பின்வருமாறு அமைந்ததாகப் பரஞ்சோதியார் கூறுவர்.

போதுளான் பரமன் பாதப் போதுளான் ஆனான் வேலை
மீதுளான் பரமானந்த வேலை மீது உள்ளான் ஆனான்
தாதுளாங் கமலக் கண்போற் சத மகன் உடலம் எல்லாங்
காதுளான் அல்லேன் என்றான் கண் உளான் கானங் கேட்டு.

-பரஞ்சோதி திருவிளையாடல்; விறகு விற்ற படலம்: 39

பிரமனும் திருமாலும் சிவபெருமானின் இனிய இசை கேட்டு மயங்கினர்; பாற்கடல் துயின்ற பெருமான் பரமானந்தக் கடலில் துயிலலானார். இந்திரனோதான் ஆயிரங் கண்களைக் காதுகளாகப் பெறாமற் போனோமே என்று துயரங்கொண்டான் என்று பரஞ்சோதியார் குறிப்பிடுவார்.

டி.கே.சி., தம் கையால் எழுதிய பல நோட்டுப் புத்தகங்களை என்னிடம் தந்துவிட்டுப் போயிருக்கிறார். அவற்றில் ஒன்றில், டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் இந்தப் பண்கள் எல்லாம் மறைந்ததற்கான காரணத்தை, ஆனந்த விகடனில், 'என் சரித்திரம்' என்னும் கட்டுரையில் எழுதியவற்றை டி.கே.சி. அப்படியே எழுதியுள்ளார்.

'சங்கீதத்திலும், சாகித்தியத்திலும் வல்ல வித்வான்கள் பலர் தமிழில் பல சாகித்யங்கள் இயற்றி இருக்கிறார்கள். பாடுவோரும், பாராட்டுவோரும் இல்லாமையால் அந்தக் கீர்த்தனங்கள் மறைந்து போயின. ஆயிரக்கணக்கான தமிழ்க் கீர்த்தனங்கள் இந்த நாட்டில் முன்பு வழங்கி வந்தன.

கர்நாடக ராக கதிக்கு மிகவும் பொருத்தமாக அவை அமைந்து இருந்தன. அன்று நான் கேட்ட அவை இன்று இருந்த இடம்

தெரியாமல் மறைந்து போய்விட்டன. தமிழில் கீர்த்தனங்களே இல்லை எனச் சிலர் கூறவும் அஞ்சுவதில்லை. எல்லாம் ஏறக்குறைய 60 ஆண்டு காலத்தில் நிகழ்ந்த மாறுபாடு. இந்த மாறுபாட்டின் வேகத்திலே, லிங்கப்பையரின் சாகித்யங்களும் அகப்பட்டு மறைந்தன. இதற்கு நம்மை நாமேதான் குறைகூறிக்கொள்ள வேண்டும்."

தமிழ் இசையில் திரி மூர்த்திகள் என்று தியாகையர், தீட்சிதர், சாஸ்திரிகள் ஆகியோரை அழைக்கிறோம். இவர்கள் அற்புதமான சாகித்யங்களை இயற்றியுள்ளபடியால், நான் மிகவும் அவர்களை மதிக்கிறவன். தியாகையர் பாடல்களை நான் கேட்கும்போது விளையாட்டுப் பிள்ளையின் உற்சாகம் ஏற்படும். ஆனால், தீட்சிதர் பாடல்களைக் கேட்கும்போது ஞான நிலையே அடைந்துவிடுகிற ஓர் அமைதி ஏற்படும்.

ஆனால், நம்முடைய துரதிர்ஷடம் அவர்கள் தமிழில் கீர்த்தனைகளை எழுதாமல் போனதுதான். ஆனால், அவர்கள் 30,000 ஆண்டுகளாக இருந்த தமிழ் இசையை அடிப்படையாக வைத்து எழுதினார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நம் அலட்சியத்தால் நாம் இதை எல்லாம் இழந்து வருகிறோம்.

தண்டாமரையோடுடன் பிறந்தும்,
தண்டேன் நுகரா மண்டூகம்

என்றபடி, தாமரையோடு உடனுறையும் வாழ்வு பெற்ற தவளை, அதன் தேன் மணம் அறியாத, அறிந்து நுகர முடியாத நிலையில் உள்ளது போன்றே, பண்கள் பலவற்றைப் பெற்ற தமிழனும் அந்தப் பண் இசையினைத் துய்க்கும் திறன் இன்றி வாழ்ந்து வந்திருக்கிறான். இந்த நிலையில், இப்படிப்பட்ட இருண்ட காலத்தில் தமிழிசை இயக்கத்தினைத் தொடங்கியவர் நம்முடைய அண்ணாமலை வள்ளல் ஆவர். தமிழுக்கும், தமிழ் இசைக்கும் அவர் செய்தது கொஞ்சநஞ்சம் அல்ல.

நேற்று என் நண்பர் இஸ்மாயில் அவர்கள் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களைப்பற்றி ஒரு பட்டியல் அடுக்கினார். ஆனால், ஒன்றினை மறந்துவிட்டார். காயல் பட்டணத்தில், சீதக்காதி என அழைக்கப்பெற்ற சையத் காதர் என்பவர் இருந்தார். அவரைப்பற்றி ஒரு புலவன் பாடியது அண்ணாமலை வள்ளலை எனக்கு நினைவூட்டுகிறது.

காய்ந்து சிவந்தது சூரிய காந்தி, கலவியில்
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங் கண்கள் ஒண்பல நூரல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம், அனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக்காதி இரு கரமே

அண்ணாமலை வள்ளலின் வள்ளன்மைக்கு உள்ளுணர்வாக இருந்தவர் டி.கே.சி. என்பதை மறந்துவிடக் கூடாது.

தமிழன் எப்பேர்ப்பட்ட தமிழ் இசையை இழந்துவிடுவான் என்ற கழிபேரிரக்கத்தில், ராஜாஜியோடும், கல்கியோடும் பல முறை பேசி அவர்களையும் இந்தத் தமிழிசைக்கு இழுத்து தூண்களாக ஆக்கிய பெருமை ரசிகமணியையே சாரும். அந்தச் சிறந்த மரபை நம் அழகிய மணவாளன் அவர்கள் காத்து வருகிறார். அதற்கு மேல் கை தட்டுகிற ராஜா சர் முத்தையா செட்டியாரும் அவர்களுடைய இளவல் சிதம்பரம் செட்டியாரும் அந்த மரபை கண்ணைக் காக்கும் இமையைப்போல் காத்து வருகின்றனர். அவர்களுக்குத் தமிழுலகம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கும்.

இந்தப் பண் ஆராய்ச்சிகளை எல்லாம் வெளியிட்டு இருக்கின்றனர். ஒரு 10 ஆண்டுகட்கு உரியனவற்றை நான் படித்தேன். நான் இசையில்போலல்லாமல், இலக்கியத்தில் நன்கு மூழ்கியவன். சென்ற 15 ஆண்டுகளாக இயற்றமிழில் நடந்த ஆராய்ச்சியை இந்த இசைத் தமிழில் நடந்த ஆராய்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது இசைத் தமிழ் ஆராய்ச்சி ஆயிரம் மடங்கு மேலானது என்பதனைத் தெரிந்துகொண்டேன். இதற்கு எல்லாம் தலைமை வகித்த சாம்பமூர்த்தி அவர்களைக் கட்டாயம் நாம் நினைக்க வேண்டும். நிறை குடம் அவர்கள். அவையில் பலர் அவசரப்பட்டுத் துடுக்குத்தனமாகப் பேசியபோது, மிகப் பொறுமையாக இருந்து, தர்ம ராஜாவாகவே இருந்து புலமை நிரம்பிய பண்பை எல்லாம் காட்டியுள்ளார். அவரால் தமிழ் இசை ஆராய்ச்சி மிகவும் முன்னேறியுள்ளது.

அதைப்போலவே, கும்பகோணம் சுந்தரேசன் அவர்கள் வாதப் பிரதிவாதங்கள் மிக அழகாக இருக்கும். அவ்வளவு சிறந்த இசை அறிவு அவருக்கு. அதைப்போலவே ஓதுவா மூர்த்திகள் இருவர். கோதண்டபாணி பிள்ளை, வெள்ளைவாரணன். எல்லாத் துறைகளிலும் வல்ல எனது அருமை நண்பர் சோமு அவர்கள் எழுதிய கட்டுரை ஆகியவற்றை எல்லாம் மிகவும் பாராட்ட வேண்டும். தமிழ் இசை ஆராய்ச்சியில், இவை யாவும் மைல் கற்கள். லெ.ப.கரு.ராமநாதன் செட்டியாரைப் பாராட்ட வேண்டும். சங்கரன் அவர்கள் வீணை தனம்மாள் குடும்பத்தில் தோன்றியவர்கள்.

இவர்களை எல்லாம் நீங்கள் எவ்வாறு தேர்ந்தெடுத்து வைத்து இருக்கிறீர்கள் என்பதே எனக்குத் தெரியவில்லை. உரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒரு வல்லமை ராஜா அவர்களிடத்தில் இருக்கிறது. குழந்தை தன் பயம் நீங்க தாயை ஆலிங்கனம் செய்து

படுத்திருப்பதைப்போல, மனிதன் பயம் இல்லாமல் போக, இறைவனை இசையினால் புல்ல வேண்டும். பயம் எல்லாம் அப்போது அபயமாகிவிடும். இதனை ஒரு வைணவப் பாடல் கூறுகிறது.

நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ? பூவுண்டு
வண்டுறங்கும் சோலை மதிலரங்கத்தே உலகை
உண்டுறங்குவான் ஒருவன் உண்டு.

ஆகவே, இந்த அபயத்தை உண்டாக்க வேண்டுமெனில் இந்தப் பண் ஆராய்ச்சிக் கழகம் தழைத்தோங்கிப் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என வாழ்த்தி எனது நீண்ட உரையை முடித்துக் கொள்கிறேன்.

11. ஒலிச் செல்வம்

தமிழோடு பழகின காதுக்குத் தமிழ் ஒலி சுகத்தைத் தர வேண்டும். பேச்சில் ஆனாலும் சரி, எழுத்தில் ஆனாலும் சரி. ஒலியினால் ஏற்படும் இன்பத்தை அசட்டை செய்வது தவறு.

தெரு வழியாகப் போய்க்கொண்டு இருக்கிறான் ஓட்டை, உடைசல் சாமான்களை ஒக்கிட்டுத்தரும் ஆசாமி. அவன் தமிழ் ஒலியின் சுகத்தை அனுபவிக்கிறான். ஆகவேதான் அவன் போடுகிற ஓலத்தில் நமக்கு ஒரு கவர்ச்சி ஏற்படுகிறது.

பித்தளைப் பாத்திரம், செப்புப் பாத்திரம்,
பேர் போடணுமா பேர்?

-என்று கத்திக்கொண்டு போகிறான். தமிழ் ஒலியின் மர்ம ஸ்தானங்களை உணர்ந்தவன் அவன். எதுகை மோனைகள் செய்யும் விந்தைகளை அறிந்து இருக்கிறான். அதோடு, நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தி நீட்டி, ஒலிக்க வேண்டிய இடங்களில் நீட்டி ஒலித்து, அழுத்தங் கொடுக்க வேண்டிய இடங்களில் அழுத்தம் கொடுக்கிறான்.

'செப்புப் பாத்திரம் பித்தளைப் பாத்திரம் பேர் போடணுமா பேர்' என்று மாற்றிச் சொல்லிப் பார்த்தால், காதுக்கு அவ்வளவு நயம் ஏற்படவில்லை. 'பித்தளைப் பாத்திரம்' என்று ஆரம்பித்து 'பேர் போடணுமா பேர்' என்று சொல்லும்போது, 'பித்தளை' என்ற சொல்லோடு 'பேர்' என்ற சொல் இணைந்து இன்பத்தைக் கொடுக்கிறது.

'பேர் போடணுமா?' என்று சொல்லி நிறுத்திவிட்டால், மொட்டையாக நின்றுவிடும். 'பேர் போடணுமா, பேர் போடணுமா?' என்று இரட்டித்துச் சொன்னாலும் திருப்தி ஏற்படுவதில்லை. 'பேர் போடணுமா பேர்' என்று அந்தச் சொல்லை மறுபடியும் சொல்லி நிறுத்தும்போது முத்தாய்ப்பு வைத்த திருப்தி ஏற்படுகிறது. பேர் என்ற சொல் எழுந்து நின்று, தலை தூக்கி அதிகாரம் பண்ணவே செய்கிறது. இப்படியாகத் தமிழ்ப் பேச்சும் கவியும், நம் காதுக்கும் கருத்துக்கும் இசைந்து ஒலிக்கின்றன. செவிக்கு இணங்காத சொல் இலக்கிய அந்தஸ்தைப் பெற முடியாது.

மொழிகள் எல்லாமே ஒலிகளை அடிப்படையாகக்கொண்டவை. உதட்டுக்கும் செவிக்கும் இடையே ஒரு பாலத்தை அமைக்கிறது சொல் ஒலி. 'ஊ' என்று உதட்டைக் குவிக்கும்போது மூச்சுவிட்டோமானால், ஊதுதல் ஏற்படுகிறது. ஊதுவது உதடு. காற்று அடிப்பதைப் பார்த்தான் தமிழன். 'ஊ' என்ற ஒலியோடு காற்று அடித்தது. அந்தக் காற்றுக்கு 'ஊதை' என்று பேரிட்டான். இப்படியாக, காற்று செய்யும் ஒலியை அதற்கிட்ட பெயரின் ஒலியில் காண்கிறோம். இதைப்போல எத்தனை எத்தனையோ சொற்கள். சொல்லின் ஒலியே பொருளின் தன்மையை எடுத்துக் காட்டும் முறையில் அமைந்து இருக்கிறது.

ஒலியின் மூலமாகப் பொருளை எடுத்துக்காட்டுவதோடு உணர்ச்சி பாவங்களையும் எடுத்துக்காட்ட முடியும். கோபம் வரும்போது, 'தண்டா, தஸ்கா' என்று பேசுகிறோம். குழந்தையோடு பேசும்போது, 'அம்மா, அரசே' என்று குழைகிறோம். அவசரத்தில், 'சட் புட்' என்று வேலையைச் செய்து முடிக்கிறோம். சோம்பலாக இருக்கும்போதோ, இழு இழு என்று இழுத்துக் கடத்துகிறோம். அந்தந்தச் செயலுக்கும் உணர்ச்சிக்கும் தகுந்த ஒலியுள்ள சொல்லை, தமிழ் நமக்குத் தந்து உதவுகிறது.

பட்டிக்காட்டுக்காரி தன் பெண்ணை மாப்பிள்ளை வீட்டுக்கார னுக்கு வர்ணிக்கிறாள்: "பட்டுத் தலைகாணியில் பஞ்சடைச்ச மாதிரி இருப்பாள் பெண்" என்று சொல்கிறாள் (தலைகாணி = தலையணை). தமிழ் ஒலி மரபு அறியாத நாவலாசிரியர், பத்துப் பக்கம் எழுதினாலும் பெண்ணழகை இவ்வளவு ஆற்றலோடு வர்ணிக்க முடியாது.

பட்டுத் தலைகாணியிலே பஞ்சடைச்ச மாதிரி

பட்டுக்கும், பஞ்சுக்கும் போடுகிற முடிச்சுக்குள்ளே, அழகு எப்படியோ அகப்பட்டுக்கொள்கிறது.

மரபை ஒட்டி வருவதினால்தான் ஒலிக்கு இன்பம் ஏற்படுகிறது. மரபுக்கு ஒவ்வாத ஒலிகள், அபசுரங்களைப்போல காதில் குத்தலை

உண்டுபண்ணுகின்றன. அதோ, தெருவில் வந்துகொண்டு இருக்கிறாள் ஒரு பெண். அவள் தலைமேல் வட்டில். வட்டிலுக்குள் கொட்டிக்கிழங்கு. பாரம் தாங்க மாட்டாமல், அவளுடைய மருங்கு - இடை - துவள்கிறது. கோடை நேரம். பாதத்தில் சூடேறுகிறது. இதை எல்லாம் கவனிக்காமல், அவள் 'கொட்டிக் கிழங்கோ கிழங்கு' என்று சொல்லும்போது, அவளுடைய குரல் ஏறி இறங்குகிறது. அந்த ஒலியின் இன்பத்தைக் கேட்டு மயங்குகிறான் கவிஞன்.

இட்ட அடி நோவ எடுத்த அடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து மருங்கு அசைய – கொட்டிக்
கிழங்கோ, கிழங்கு என்று கூறுவாள் நாவில்
வழங்கு ஓசை வையம் பெறும்.

தமிழ் உயிரோடு வாழ்வது ஏட்டில் அல்ல. அந்தக் கிழங்குக் காரியின் நாக்கில்தான். அவள் நாவில் வழங்கும் ஓசைக்கு ஈடாக இந்த உலகத்தையே கொடுக்கலாம் என்கிறான் கவிஞன்.

பழக்கத்திலுள்ள ஓசை அவ்வளவு இதமாக இருக்கிறது. பிள்ளை அவர்கள், ஐயர் அவர்கள் என்றால் காதுக்கு ஒத்துக்கொள்கிறது. மிஸ்டர் நந்தனார் அல்லது ஸ்ரீமான் மாணிக்கவாசகர் என்று சொன்னால் காதில் குத்தல் எடுக்கிறது.

கட்டடம் கட்டுவதற்குச் செங்கல் முக்கியம். வசனம் எழுதுகிறவனுக்குக் கருத்து முக்கியம். அதை எப்படியாவது சொல்லித் தீர்ப்பதற்கு அவன் வார்த்தையைக் கையாள்கிறான். ஆனால், கவிதை எழுதுகிறவனுக்கு எது முக்கியம் என்றால், கருத்து கூட இல்லை. சொல்லும், சொல்லின் ஒலி நயமும்தான் அவனுக்குப் பிரதானம். சொல்லின் ஒலி அமைப்பின் மூலம் அவன் ஆனந்தத்தை வழங்குகிறான்.

சாமானியமான விளையாட்டுப் பாடல் ஒன்றைப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். 'பலிஞ் சடுகுடு' விளையாடுகிறார்கள் சிறுவர்கள். 'தம்' பிடித்து ஆட்டம் போடுவதற்கு தாளத்தோடு கூடிய சொற்கட்டு வேண்டும். கருத்து அவசியமில்லை. அவர்கள் என்ன சொல்லிக்கொண்டு விளையாடுகிறார்கள்?

சடுகுடு மலையிலே ரெண்டானை – அதில்
தவறி விழுந்தது கிழட்டானை.

இந்தப் பாட்டில் பொருள் விசேஷமாக இல்லை. ஆனால், அதில் இருக்கிற ஒலி நயம் எப்படியோ மனதைக் கவருகிறது. இந்தச் சொற்களை வாயில் போட்டுச் சுவைக்கச் சுவைக்க ஓர் இனிப்புத் தட்டுகிறது. அலுக்காமல் மணிக்கணக்கில் சிறுவர்கள் இந்த

அடியை மாறி மாறிச் சொல்வதைப் பார்க்கிறோம். ஏன்? வயதானவர்கள்கூட இதைச் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

இதைச் சொல்லும்போது, நம்முடைய மனம் ஒலி மலை உச்சி ஒன்றில் இருந்து வழுக்கி வழுக்கி வருகிற சொகுசான உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது.

தாளத்துக்குக் கட்டுப்பட்ட ஒலி, ஆனந்தத்தைக் கொடுப்பதோடு, கேட்போர் மனதில் பலவிதமான உணர்ச்சிகளையும் உண்டாக்குகிறது. இந்த ரகசியத்தை உணர்ந்த கவிஞர்கள், சொல் ஒலியையும் தாளத்தையும் உணர்ச்சிக்கு ஏற்றவாறு எல்லாம் மாற்றி அமைத்து நம்மை லயப்படுத்துகிறார்கள்.

அஞ்சி, அஞ்சிச் செத்துக்கொண்டு இருந்த நம்மவர்களை பாரதியாரின் ஒலி எப்படித் தூக்கி நிறுத்துகிறது?

அச்சம் இல்லை, அச்சம் இல்லை, அச்சம் என்பதில்லையே;

உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதினும்
அச்சம் இல்லை, அச்சம் இல்லை, அச்சம் என்பதில்லையே...

கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசு போதினும்
அச்சம் இல்லை, அச்சம் இல்லை, அச்சம் என்பதில்லையே...

வீறுகொண்டு ஒலிக்கும் இந்தப் பாடலுக்கு முன்னால் கோழைத் தனத்துக்கு இடம் எங்கே?

வீரம் அப்படி இருக்கட்டும். சிருங்காரத்தின் தொனி எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். சூர்ப்பணகை ஓர் அரக்கி. ராமனிடத்தில் காதல்கொள்கிறாள். அரக்க உருவத்தோடு அவன் முன்னால் போனால், அவன் ஏற்றுக்கொள்ள மாட்டானே என்று நினைத்து, நல்ல அழகியாக உருமாறிக்கொண்டு ராமன் முன்னிலையில் போய் நிற்கிறாள். காதல் வெறி அவளைப் பிடித்து ஆட்டுகிறது. ஆனால், அதை வெளிக்காட்டாமல் சமாளிக்கிறாள். ராமனை மயக்க வேண்டும் என்பது அவள் நோக்கம். ஆனால், பராமுகமாக இருப்பதுபோல் பாசாங்கு செய்கிறாள். ஒய்யார நடை நடந்து ஜதியோடு வந்து நிற்கிறாள். இந்த ஒய்யாரத்தையும் அதற்குள் ஊடாடுகிற சிருங்காரத்தையும் கம்பர் ஒலியின் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

அவ்வயின், அவ்வாசை தனில் ஆழ்ந்துடைய அன்னாள்,
செவ்வி முகத்து அண்ணல் அடி செங்கையின் இறைஞ்சா,
வெவ்விய நெடுங் கண் அயில் வீசி அயல் பாரா,
நவ்வியின் ஒதுங்கி, இறை நாணி அயல் நின்றாள்.

பாட்டின் ஒலி அமைப்பில், சூர்ப்பணகையின் சாகசத்தையும் போலித் தயக்கத்தையுமே காண்கிறோம். பொருளை மறந்துவிட்டு,

பாட்டை மீண்டும் ஒரு முறை படித்து அதன் ஒலியையும் தாளத்தையும் கவனிப்போம்.

கம்பனுடைய சொல் வீச்சில் சூர்ப்பணகையின் உல்லாசக் கண் வீச்சையும் கை வீச்சையும் காண்கிறோம். உல்லாசத்தின் ஒலி உருவம் இப்படி.

இனி, சோகத்துக்கு ஒலி உருவம் உண்டா என்பதை அடுத்த பாட்டில் கவனிப்போம்.

எதிர்பாராதபடி இந்திரஜித் யுத்த களத்தில் இறந்துபட்டான். தந்தை ராவணன் சோகத்தால் அலறுகிறான்.

மைந்தவோ எனும்; மாமகனே எனும்;
எந்தை ஓ! எனும்; என் உயிரே எனும்;
முந்தினேன் உனை; யான் உளனோ எனும்,
வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மையான்.

சோகத்தின் விம்மலையும் ஏக்கத்தையும் பாட்டில் உள்ள நீண்ட ஒலிகள் எடுத்துரைக்கின்றன.

'வால்டர் பேட்டர்' என்ற ஆங்கிலப் புலவன் சொன்னது போல சிற்பம், சித்திரம், கவி முதலிய எல்லாக் கலைகளுமே இறைவனை நோக்கித் தவம் செய்கின்றன. "இறைவனே சங்கீதத்தில் உள்ள பரிபூரண சுதந்திரத்தை எனக்குக் கொடுக்க வேண்டும்" என்று ஒவ்வொரு கலையுமே தவம் இருக்கிறதாம். மற்ற கலைகள் எப்படி ஆயினும் சரி, இந்தத் தவத்தில் வெற்றிபெறும் ஆற்றல், கவிதைக்கு நிச்சயம் இருக்கிறது.

சிற்பி தன் உளிக்கும், கல்லுக்கும் அடிமைப்பட்டு இருக்கிறான். கவிஞனோ சொல்லுக்கு அடிமைப்பட்டு இருக்கிறான். இசை வாணன் மாத்திரம் பரிபூரண சுதந்திரத்தோடு சஞ்சாரம் செய்கிறான். நாதக் குதிரை மேலேறி அவன் ஒரு தட்டுத் தட்டுகிறான். அது நம்மை விஸ்வ வெளிக்கே இழுத்துச் சென்றுவிடுகிறது.

கம்பனைப் போன்ற கவிச் சக்கரவர்த்தியின் கையில் கவிதைக்கும், கிட்டத்தட்ட அந்த சுதந்திரம் கிடைக்கிறது. இசையில் ஸ்வரம் செய்கிற வேலையை சொல்லின் ஒலி செய்து காட்டுகிறது கவிதையில். இப்படி வளமான ஒலிச் செல்வத்துக்கு எல்லாம் வாரிசாக இருக்கிறான் தமிழன்.

12. கவியும் கேமிராவும்

இயற்கைக் காட்சிகளை வர்ணிப்பதில் இரண்டு மரபுகள் உண்டு. ஒன்று உள்ளதை உள்ளபடியே வர்ணிப்பது. அதாவது, ரெண்டும் ரெண்டும் நாலு என்ற தோரணையில் வர்ணிப்பது. இப்படி வர்ணிப்பதற்கு ஒரு கவிஞன் அவசியமில்லை; ஒரு சாமான்ய விஞ்ஞானியே இதைச் சமாளித்துவிடுவான். ஏன், ஒரு கேமிராவே இதைச் சாதித்துவிடும். கேமிராவுக்குள்ளே, ஜீவ தத்துவம் அற்ற சில்வர் நைட்ரேட் தட்டு ஒன்று இருக்கிறது. அது இயற்கைக் காட்சிகளை அப்படியே வாங்கிக்கொண்டு உள்ளதை உள்ளபடியே காப்பியடித்துக் காட்டிவிடும்.

ஆனால், உண்மைக் கவிஞனுடைய மனது இயற்கைக் காட்சிகளைப் பார்க்கும் விதமே வேறு. பார்க்கும்போதே தனக்கும் அந்தக் காட்சிக்கும் இடையில் ஓர் உறவை உண்டாக்கிக்கொள்கிறது அவன் மனது. இயற்கைக் காட்சிகளோடு கவிஞன் உறவாடி விளையாடும்போது, அவனுடைய இதய பாவம் காட்சிகளோடு கலந்துவிடுகிறது. ஆகவே, கவிஞனுடைய வர்ணனையில், காட்சிகளை மாத்திரமல்ல அவனுடைய இதய முத்திரையையும் அனுபவிக்கிறோம். சில்வர் நைட்ரேட் பிளேட்டில் விழுகிற நிழல் படத்துக்கும், கவிஞனின் இதயத்தில் தோய்ந்து எழுகிற உயிர்ச் சித்திரத்துக்கும் அவ்வளவு வேறுபாடு இருக்கிறது.

கம்பர் இயற்கைக் காட்சிகளை எத்தனை எத்தனையோ விதங்களில் அனுபவிக்கிறார். ஆறு ஓடுவதை நாமும்தான் பார்க்கிறோம். மணல் தெரிகிறது. நீரோடுவது தெரிகிறது. ஆனால், நம் கண்ணுக்கு ஆறு வெறும் உயிரற்ற, ஜடப் பொருளாகவே காட்சி அளிக்கிறது. கம்பர் அதே ஆற்றைத்தான் பார்ப்பார்; அந்தக் காட்சிக்குள் மனுஷ பாவத்தை ஏற்றிவிடுவார். அதன் மூலம் ஆற்றுக்கு உடலும், உயிரும், உணர்வும் ஏற்பட்டுவிடுகிறது.

உதாரணமாக, சரயு நதியை கம்பர் எப்படி வர்ணிக்கிறார் என்று பார்ப்போம். விஸ்வாமித்திரனோடு செல்கிறார்கள் ராம லட்சுமணர்கள். ரிஷிகள் வாழும் ஆசிரமங்களைக் கடந்து மலைச்சாரல்கள் வழியாகச் செல்கிறார்கள். சரயு நதி மலைச் சரிவில் சிற்றருவியாகக் குதித்து குதித்து அடிவாரத்தை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறது. மலையில் படிக்கட்டு கட்டிவிட்ட மாதிரி, தட்டுத் தட்டாக சரிந்துகொண்டே போகிறது மலைப் பிரதேசம். 20 அடி நீளம் சமதளமான ஒரு தட்டு. அதில், தயங்கித் தயங்கி, நின்று நின்று ஓடுகிறது நதி. பிறகு ஒரு செங்குத்தான

இறக்கம். அதில் 'கலீர்' என்று ஒலித்துக்கொண்டு பத்து அடி கீழேயுள்ள தட்டுக்கு அருவியாகப் பாய்கிறது. மறுபடியும் 20 அடி சம பூமி. அதற்குப்பின் பத்து அடி இறக்கம். இப்படியாக, ஒரு தயக்கம், ஒரு குமுறல் மாறி மாறி வருகிறது. இதைக் காது கொடுத்துக் கேட்கும் கம்பருக்கு, அடே! இந்தச் சரயு நதி தாள லயத்துக்குக் கட்டுப்பட்டு அல்லவா செல்கிறது என்று தெரிகிறது. உடனே நாட்டியப் பெண்ணின் பாத சர ஒலியும், விட்டுவிட்டுக் கேட்கும் நடன ஜதியும் அவர் ஞாபகத்துக்கு வருகின்றன. சொல்கிறார் கம்பர்:

அரங்கின் ஆடுவார் சிலம்பின், நின்று, நின்று,
இறங்குவார் புனல் சரயு எய்தினார்.

இப்படியாக, சும்மா ஓடிக்கொண்டு இருக்கும் ஆற்றுக்கு பரத நாட்டியம் கற்பிக்கிறார் கவிஞர். வெறும் மணலும், நீரும் கலந்த சரயு என்ற ஜடப் பொருள், உடல் பெற்று, உயிர் பெற்று, உணர்வோடு நடமாடும் ஒரு தையலைப்போல் காட்சி தருகிறது.

இயற்கைக் காட்சிகளை இன்னொரு விதமாகவும் பார்க்கிறார் கம்பர். மனித வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களில் இயற்கை அன்னையும் பரிவு காட்டிப் பங்குகொள்கிறாள்; நமது இதயத்தோடு ஊடாடித் தோழமைகொள்ளும் கருணையும் இயற்கைக்கு இருக்கிறது என்று கம்பர் பாவனை செய்கிறார்.

ஒரு நாள் இரவு நேரம். கைகேயி தசரதனிடம் முரண்டுபிடித்து, பொல்லாத அந்த இரண்டு வரங்களை வாங்கிக்கொள்கிறாள். தசரதன் வரத்தைக் கொடுத்துவிட்டு மூர்ச்சையாகி விழுந்து விடுகிறான். கைகேயிக்கோ பரம திருப்தி; குறட்டைவிட்டு உறங்கவே ஆரம்பித்துவிடுகிறாள். இரவு கழிந்து, சூரியன் உதிக்கப் போகும் நேரம். கிழக்கு வெளுத்தது என்று சொல்லிவிட்டுப் போகலாம் கவிஞர். ஆனால், அப்படித் தட்டிக் கழிக்க மனம் வரவில்லை அவருக்கு. கைகேயியின் கொடுமையை நினைத்து ஆற்றாமைப்படுகிறார். அவளுடைய செயல் பெண் இனத்துக்கே அவமானத்தை உண்டாக்கிவிட்டதே என்று நாணத்தால் தலை கவிழ்கிறாளாம், இரவு என்ற பெண் - கங்குலாகிய நங்கை. ஆடவர் முகத்தில் விழிக்க மனம் இல்லாமல், அவள் ஓடி ஒளிந்துகொள்கிறாள்.

வான் நிலா நகை மாதராள் செயல் கண்டு,
மைந்தர் முன் நிற்கவும்
நாணினாள் என ஏகினாள், நளிர்
கங்குலாகிய நங்கையே

இயற்கை தேவியே நாணத்தால் வெட்கித் தலை குனிவதுபோலப்படுகிறது கம்பருக்கு. கிழக்கு வெளுத்ததும், வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் - விண்மீன்கள் மங்க ஆரம்பிக்கின்றன. இரவெல்லாம் மிகுந்த ஒளியோடு கண்ணைச் சிமிட்டிக் குலாட்டடித்துக்கொண்டு இருந்த நட்சத்திரங்கள் ஏன் ஒளி இழந்து மறைந்துவிட்டன! அதற்கும் கைகேயியின் கொடுமைதான் காரணம். ராம பட்டாபிஷேகத்துக்காக பூமிக்கு மேலே வானம் ஓர் அலங்காரக் கொட்டகை போட்டது. முத்துச் சரங்களாக நட்சத்திரங்களையே தொங்கவிட்டது. பட்டாபிஷேகம் நடக்கப் போவதில்லை என்று தெரிந்தவுடன், பந்தல்காரன் பந்தலை அவசர அவசரமாகப் பிரிக்கிறான்.

விரித்த தண் கதிர் முத்ததாகி, இம்
மண் அனைத்தும் நிழற்ற, மேல்
விரித்த பந்தர் பிரித்ததாம் என
மின் ஒளித்தன வானமே

இப்படிப் பந்தல்காரன் பந்தலைப் பிரித்துக்கொண்டு போய்விட்டான். போன பிறகு, கிழக்கே மலை வாயிலில் சூரியன் உதயமாகிறான். அவனுடைய முகம் எல்லாம் ஜிவு ஜிவு என்று சிவந்து இருக்கிறது. கோபக் கனல் சிதறுகிறது. பேதை கைகேயியின் பாபச் செயலைக் கண்டுதான் அவனுக்கு இவ்வளவு கோபம்.

பாபம் முற்றிய பேதை செய்த
பகைத் திறத்தினில், வெய்யவன்
கோபம் முற்றி மிகச் சிவந்து உதித்
திட்டனன் குணக் குன்றிலே.

இப்பேர்ப்பட்ட பாடல்களைப் பார்க்கும்போது, கம்பர் தரும் இயற்கைக் காட்சிகளுக்கு எவ்வளவு மனிதப் பண்பாடு இருக்கிறது என்று தெரியவரும். மனுஷ பாவங்களை அப்படி ஏற்றிவிடுகிறார் கவிஞர்.

வேறு சில இடங்களில், இயற்கைக் காட்சிகள் நாடக பாத்திரங்களாகவே நடிக்க ஆரம்பித்துவிடுகின்றன. மனித பாஷைக்குச் சொல்லத் தெரியாத சில உணர்ச்சிகளையும், மன நிலைகளையும் இயற்கைக் காட்சிகளின் உதவியால் சொல்லித் தீர்த்துவிடுகிறார் கம்பர்.

உதாரணமாக, சாந்தம் அல்லது அமைதி என்ற நிலையை எடுத்துக்கொள்வோம். அபிநயத்துக்கோ, சொல்லுக்கோ அடங்காத நிலை அது - ரசாதீதமான நிலை. இதை எப்படி கம்பர் அடையாள பாஷை மூலமாக இயற்கைக் காட்சிகளின் துணை கொண்டு, வெற்றிகரமாகச் சித்தரிக்கிறார் என்று பார்ப்போம்.

மாலை நேரம். சித்திரகூட பர்வதத்தில், ராமன், சீதை, லட்சுமணன் ஆகிய மூவரும் போய்க்கொண்டு இருக்கிறார்கள். சாந்தம் என்றால் என்ன என்று விளக்கப்போகிறார் கம்பர். அதற்கு முன், ஒரு கோரமான காட்சியைக் காட்டி மனதில் அதிர்ச்சியை உண்டாக்கினால்தான், பின்னால் வரப்போகும் அமைதியை எடுத்துக்காட்ட முடியும். நன்றாக முறுக்கேறினால்தான் பின்னால் நன்றாகத் தளர்ச்சியை உண்டாக்கலாம். இந்த உத்தியை கம்பர் கையாள்கிறார்.

கிழக்கில் உதித்த சூரியன் வான வீதி வழியாகச் சென்று மேற்கே ராட்சதன் மாதிரி நின்றுகொண்டு இருக்கும் மலைச் சிகரத்தில் போய்ச் சாடுகிறான். மேல் வானம் எல்லாம் செக்கர் பரவி நிற்கிறது, ரத்தம் சிந்தியதுபோல. அதே சமயம் கீழ் வானத்தில் பிறைச் சந்திரன் மங்கலாகத் தெரிகிறது. இந்தக் காட்சி புராணக் கதை ஒன்றைக் கவிஞருக்கு ஞாபகப்படுத்துகிறது. காலநேமி என்ற அசுரனை, விஷ்ணு மூர்த்தி தன் சக்கரத்தை ஏவி, சம்ஹாரம் பண்ணினாரே, அதைப்போலவே இருக்கிறது இந்தக் காட்சி. கீழ் வானத்திலிருந்து மேல் வானத்துக்கு சுற்றிக்கொண்டே வந்த சூரியன், விஷ்ணு சக்கரத்தை நிகர்த்து இருக்கிறது. மேற்கே முண்டு முடிச்சுகளோடு இருண்டு, பருத்து நிற்கும் மலைச் சிகரம், தலையற்று விழுந்த அந்த அசுரனேதான். அவன் உடம்பிலிருந்து பீறிட்டுச் சிந்திய ரத்தம்தான் அந்தச் செக்கர் வானம். உடைந்து தெறித்த அந்தப் பல்தான் கிழக்கே தோன்றும் பிறைச் சந்திரன் என்று கவி கற்பனை செய்கிறார். அந்தி மயங்கிச் செக்கர் வானம் சாம்பல் நிறமாக மாறுகிறது. கோரம் தணிந்து, இயற்கை தேவி சாந்தம் அடையும் நேரம்.

பெண் குரங்கும், ஆண் குரங்கும் பகல் எல்லாம் ஓடியாடி விளையாடிய ஆயாசத்தைத் தீர்த்து அமைதி பெறுவதற்காக மரக் கிளைகளை நோக்கிச் செல்கின்றன. ஆண் யானையும், பெண் யானையும் குளுமையான தடாகங்களை நோக்கிப் போகின்றன. சகுந்தப் பட்சிகள் பாறைகளில் உள்ள கூடுகளை நோக்கிப் பறக்கின்றன. அந்தி வானத்தைப் பார்த்துக்கொண்டு இருந்த ராமன் சிந்தையைத் தன் மனதுக்குள்ளேயே செலுத்தி உள்ளிருக்கும் ஞானபானுவைக் கண்டு தியானிக்கிறான்.

மந்தியும் கடுவனும் மரங்கள் நோக்கின
தந்தியும், பிடிகளும் தடங்கள் நோக்கின
நிந்தையில் சகுந்தங்கள் நீளம் நோக்கின
அந்தியை நோக்கினான், அறிவை நோக்கினான்.

இவ்வளவு சொல்லியும் சாந்த ரசத்தை சரிவர எடுத்துக் காட்டவில்லையே என்ற அதிருப்தி கம்பருக்கு ஏற்படுகிறது. மனுஷ

பாஷை நொண்டி பாஷையாக இருக்கிறதே, இதை வைத்துக்கொண்டு அரிய உணர்ச்சிகளைச் சொல்லி சாதிக்க முடியவில்லையே என்று கருதுகிறார். பூக்கள் பேசும் பாஷையில்தான் சாந்த ரசத்தை எடுத்து விளம்ப வேண்டும் என்று தீர்மானிக்கிறார்.

அந்தி நேரத்தில் தாமரை போன்ற பகல் பூக்கள் கூம்புகின்றன. ஆம்பல் போன்ற இராப் பூக்கள் மலர்கின்றன. இந்த இரண்டு விதப் பூக்களைத் தவிர, வேறு விதமான பூக்களையும், சித்திரகூட பர்வதத்தில் பார்க்கிறோம். ராமன், லட்சுமணன், சீதை இவர்களுடைய கைகளும் கண்களும் தாமரைப் பூக்களேதான். இராப் பூக்களைப்போலவே, அந்த வண்ணத் தாமரைகளும் தியானத்தில் குவிந்தன.

மொய்யுறு நறு மலர் முகிழ்த்தவாம் சில,
மையறு நறு மலர் மலர்ந்தவாம் சில,
ஐயனோடு இளவற்கும் அமுதனாளுக்கும்
கைகளும் கண்களும் கமலம் போன்றவே.

தாமரைக் கைகளும், தாமரைக் கண்களும் குவிந்தன. தியான நிலையில், மோனமும் சாந்தமும் பிறக்கின்றன. சொல்லினால் சொல்ல முடியாத அமைதியை, மிருது பாஷிணிகளாகிய பூக்கள், பாவத்தோடும் அபிநயத்தோடும் சொல்லிவிடுகின்றன.

இப்படி எல்லாம் இயற்கைக் காட்சிகளை இதயம் ஒட்டி அனுபவித்தவர் கம்பர். ஆகவேதான் ஊமையாக இருந்த இயற்கை அன்னை, கம்பர் சந்நிதானத்தில், புதுக் குரலோடு பேசுகிறாள். நொண்டியாக இருந்த மனித பாஷை முடம் நீங்கி, நடை பழகி, நடனம் ஆடவே செய்கிறது.

13. தனிப் பாடல்கள்

தமிழில் உள்ள தனிப் பாடல்களைப் படித்து அனுபவிக்க ஓர் ஆயுள் நாள் காணாது நமக்கு. விதம் விதமான பாடல்கள். ஒன்றில் ஒரு விஸ்தாரமான நாடகம் நடப்பதைப் பார்க்கலாம். வேறொன்றில், மனித உள்ளத்தின் உயர்ந்த உணர்வு நிலைகளைப் பார்க்கலாம். சொல்லும், பொருளும் கைகோத்து, ஒரு தாளத்தில் நின்று நடனமாடுவதை வேறு சில பாடல்களில் காணலாம்.

ஔவைப் பிராட்டியார் சிறந்த புலவர். நம்முடைய புராணங்களில் மறைந்து கிடக்கும் உண்மைகளை அறிந்து ஹாஸ்ய உணர்ச்சியோடு

அனுபவித்தவர். நாம ரூபம் அற்ற சிவபெருமானுக்கு ஐந்து தலை இருப்பதாகக் கற்பனை செய்தார்கள் பௌராணிகர்கள். அதோடு நின்றுவிடவில்லை. மண்டை ஓட்டில் எழுத்தாணியைக் கொண்டு விதியை எழுதுகிறானே, அந்த பிரம்மனுக்கும் ஆதியில் ஐந்து தலைகள் இருந்தனவாம். பிரம்மாவைக் கண்ட பார்வதிதேவிக்கு 'இது நம்முடைய புருஷன்தானோ?' என்ற கலக்கம் ஒரு நாள் ஏற்பட்டுவிட்டது. பார்த்தார் சிவபெருமான். உடனே, பிரம்மாவின் தலை ஒன்றை அப்படியே கிள்ளி எறிந்துவிட்டார். அது முதல் பார்வதிதேவிக்கு இருந்த கலக்கம் தெளிந்துவிட்டது. இந்தக் கதையை நெடுங்காலமாக சுவைத்து அனுபவித்துக்கொண்டு இருந்தார் ஔவைப் பிராட்டியார்.

ஒரு நாள் ஒரு கட்டழகியைப் பார்த்தார். அவளை மான் என்று தான் சொல்ல வேண்டும். அவ்வளவு அழகாக இருந்தது அவள் மேனி. அவளுடைய அழகுக்கு ஈடாக அவளுடைய குணத்தையே சொல்ல வேண்டும். அவளுக்கு வாய்த்த கணவனோ, ஒரு காண்டா மிருகம். குணத்திலும், அழகிலும் ஏறுக்கு மாறானவன். உணர்ச்சியற்ற வற்றிப்போன மரம் என்றுதான் அவனைச் சொல்ல வேண்டும். பொருந்தாத இந்த இருவரையும் சேர்த்து முடிச்சுப் போட்டுவிட்டது பாழும் விதி. அந்த விதியையும், விதிக்குக் கடவுளான பிரம்மாவையும் கொஞ்சம் நினைத்துப் பார்த்தார் ஔவையார். ஆங்காரம் பிறந்துவிட்டது அவருக்கு. அந்த ஆங்காரம் பாட்டில் எப்படி உரு எடுக்கிறது என்று பார்ப்போம்.

அற்ற தலை போக அறாத தலை அத்தனையும்
பற்றித் திருகிப் பறியேனோ? – வற்ற
மரம் அனையானுக்கு இந்த மானை வகுத்த
பிரமனை யான் காணப் பெறின்.

இப்படி எல்லாம் கொடுமை செய்த பிரம்மனை நான்கு தலையோடு நடமாடவிடலாமா? அன்று சிவபெருமான் அரை குறையாகவிட்ட காரியத்தைப் பூர்த்திசெய்துவிட வேண்டியதுதான் என்று பாடலைப் படிப்பவர்க்கே படுகிறது. புராணக் கதை எப்படி எல்லாம் பாஷைக்கு வளத்தைக் கொடுக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். விதி என்ற அருவ தத்துவத்தைப் பழிக்குப் பழி வாங்க முடியாது. விதிக்குக் கடவுள், பிரம்மன் என்று கற்பனை செய்து, அவன் முன்னமே பறிகொடுத்த ஒரு தலை போக பாக்கி நான்கு தலைகளையும் 'பற்றித் திருகிப் பறியேனோ?' எனச் சொல்லி, ஔவையாரைப்போல பல்லை, நறநறவென்று கடிக்கிற போதுதான் நமக்கு ஏற்பட்ட ஆங்காரத்தைச் சொல்லித் தீர்த்து விட்ட திருப்தி ஏற்படுகிறது.

இனி, காதலைப்பற்றி ஒரு தனிப்பாடல். பட்டிக்காட்டான் ஒருவன் மதுரைக்குப் போனான். மேலக் கோபுர வாசல் வழியாக மீனாட்சியம்மன் கோயிலுக்குள் சென்றான். வெளிப் பிராகாரத்தில் ஒரே கூட்டம். கூட்டத்தினூடே ஒரு நடன மாது சென்றுகொண்டு இருக்கிறாள். கொலைமதற் கண்களில் மை எழுதி இருக்கிறது. அவளைப் பார்த்ததும் கிறுகிறுத்துப் போனான் பட்டிக்காட்டான். அவளைத் தொடர்ந்து சென்றுகொண்டே இருக்கிறான்.

அவளும் 'ஆசாமி வெறும் பட்டிக்காடு' என்று தெரிந்து கொண்டாள். அவனைவிட்டுத் தப்ப வேண்டுமே; ஆகவே, அவள், "நீ இந்தக் கிழக் கோபுர வாசலில் நில். நான் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு உன்னை அழைத்துச் செல்கிறேன்" என்று சொல்லி நிறுத்திவிட்டு, கூட்டத்தில் மறைந்துவிடுகிறாள். பட்டிக்காட்டானுக்கு ஒரே சந்தோஷம். மணிக்கணக்கில் காத்துக்கொண்டு நிற்கிறான். ஆனால், போனவள் வரவில்லை. "அவள் எங்கே... அவள் எங்கே" என்று போனவன் வந்தவனிடத்தில் எல்லாம் கேட்கிறான். பதில் சொல்வார் யாருமில்லை. அவள் பெயரோ தெரியாது. விலாசம் தெரியவே தெரியாது. பட்டிக்காட்டானுடைய ஏக்கத்திலிருந்து பிறக்கிறது ஒரு தனிப் பாடல்.

இல் என்பார் தாம் அவரை, யாம் அவர்தம் பேர் அறியோம்

ஆனாலும் அவளுடைய உருவம், அவனுடைய நெஞ்சத் திரையில் நின்றுகொண்டு அவனை ஆட்கொள்கிறது. அதிகாரமே செய்கிறது. அவளுடைய சிவந்த இதழ்களுக்கு இடையே தோன்றியது பல்லா? 'சுத்தப் பொய். வெறும் ஏமாற்று' என்று முடிவுகட்டுகிறான். செவ்வாம்பல் பூவை இரண்டு வரிசையாகக் கோத்து, இடையே முல்லை மொட்டுக்களைப் பார்த்த மாதிரிப் பட்டது அவன் கண்ணுக்கு.

பல் என்று செவ்வாம்பல் முல்லையையும் பாரித்து

அவளுடைய கண்கள். காதற் கடவுளாகிய காமனைப் பார்த்து, 'இவனைக் கொல்' என்று ஏவிவிட்டுப் போன மாதிரி இருந்தன.

கொல் என்று காமனையும் கண் காட்டி

இப்படி எல்லாம் துன்புறுத்திப்போன அந்த உருவம் பட்டிக் காட்டானுடைய இதயத்திலும் தமிழ்ச் சொல்லிலும் சாகாமல் எப்படி நிலைத்து நிற்கிறது என்பதைப் பாடலில் பார்ப்போம்.

இல் என்பார் தாம் அவரை, யாம் அவர்தம் பேர் அறியோம்
பல் என்று செவ்வாம்பல் முல்லையையும் பாரித்துக்
கொல் என்று காமனையும் கண் காட்டிக் கோபுரக் கீழ்
நில் என்று போனார், என் நெஞ்சைவிட்டுப் போகாரே!

காதலன் இப்படி நிற்கட்டும். பிரிவு ஆற்றாமையால் வருந்தும் ஒரு காதலியைப்பற்றிப் பேசுகிறது இன்னொரு தனிப் பாடல். காலம் என்ற தத்துவத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்த ஐன்ஸ்டீன் ஒரு ரசமான முடிவுக்கு வந்தார். எரிந்துகொண்டு இருக்கிற ஒரு ஸ்டவ் அடுப்பில் ஒருவனை வலுக்கட்டாயமாக உட்கார்த்தி வைத்துவிட வேண்டியது. ஒரு வினாடி அவனுக்கு ஒரு யுகமாகப் படும். ஆனால், அதே பேர்வழி காதலியோடு சொப்பன லோகத்தில் சஞ்சாரம் செய்யும்போது, அவனுக்கு ஒரு யுகம் ஒரு வினாடியாகத் தோன்றும். ஆகவே, காலம் என்பது மனித மனம் செய்கிற கற்பனை தான் என்ற முடிவுக்கு வந்தார் ஐன்ஸ்டீன்.

காதலனைவிட்டுப் பிரிந்து வாடும் காதலி ஒருத்தி எப்படி காலத்தை நிர்ணயம் செய்கிறாள் என்பதைக் காட்டுகிறது அடுத்து வரும் பாடல்.

காதலி பகற் பொழுதை எப்படியோ கழித்துவிட்டாள். இரவு வந்துவிட்டது. உறக்கம் வர மாட்டேன் என்கிறது. சூழ்ந்து நிற்கும் இருட்டு அவளுடைய தனிமைக்கு அழுத்தம் கொடுக்கிறது. பாழும் இரவு விடியாதா என்று கதறுகிறாள். இரவோ நீண்டுகொண்டே போகிறது - ஊழிக் காலத்து இருட்டைப்போல. 'சூரியனுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிட்டதா? அல்லது பாம்பு சூரியனை விழுங்கி இருக்குமா? ஒருக்கால், சூரியன் ஏறி வரும் தேரின் அச்சு முறிந்து, தேர்க்காலில் பூட்டி இருக்கும் புரவிகள் - குதிரைகள் - கயிற்றை உருவிக்கொண்டு போய்விட்டனவா? ஒருவேளை சூரியன் செத்துத்தான் போனானா? அல்லது வழி தப்பிச் சென்றுவிட்டானா?' என்று பக்கத்தில் கவலையின்றித் தூங்கிக்கொண்டு இருக்கும் தோழியை எழுப்பிக் கேட்கிறாள்:

அரவம் கரந்ததோ? அச்சு மரம் இற்றுப்
புரவி கயிறு உருவிப் போச்சோ? – இரவிதான்
செத்தானோ? வேறு வழிச் சென்றானோ? தோழி எனக்கு
எத்தால் விடியும் இரா?

'இரா' என்ற கடைசிச் சொல் அப்படி ஏங்கி ஏங்கி முடிவு இல்லாமல் ஒலித்துக்கொண்டு நிற்கிறது.

இனி, கம்பனைப்பற்றி யாரோ ஊர் பேர் தெரியாத கவிஞன் எழுதிய பாடல் ஒன்றைப் பார்ப்போம். சோழ அரசன், கம்பன் கவிகளை மிகப் பாராட்டி வந்தான். ராஜசபைக்கு மற்றக் கவிஞர்களும் வருவார்கள், பாடுவார்கள். ஆனால், கம்பன் பாடலைக் கேட்ட பிறகு, மற்றவர்கள் பாட்டெல்லாம் இளைத்த காரியமாகத்தானே படும்? ஆகவே, அரச சபையில் மற்றக் கவிஞர்களுக்குச் செல்வாக்கு குறைந்துகொண்டே வந்தது. அதன்

காரணமாக, கம்பனைக் கண்டு பொறாமைப்பட்டார்கள் அவர்கள். ஆனால், பொதுமக்கள் கம்பனை இனங் கண்டுகொண்டார்கள்.

தமிழ்நாட்டில் எங்கே போனாலும் சரி, கம்பனுக்குத்தான் முதல் தாம்பூலம். மக்கள் இதயத்தை ஒட்டி அவன் பாடினான். பூமியைப் பயிரிட்டு வாழும் உழவர்கள் கம்பனுக்கு முடி சாய்த்து நின்றார்கள். ஏன்? பூமாதேவியே கம்பனுக்குப் பணிவிடை செய்தாள் என்று சொல்லும்படியாக இருந்தது அந்தக் காட்சி. வணிகர்களும் பணக்காரர்களும் போட்டி போட்டுக்கொண்டு கம்பனுக்கு மரியாதை செய்தனர். அதைப் பார்க்கும்போது லட்சுமிதேவியே கம்பனுக்கு குற்றேவல் செய்த மாதிரி இருந்தது. கம்பனுக்கு ஏற்பட்ட அந்தஸ்து சரஸ்வதிதேவிக்கே ஏற்பட்ட அந்தஸ்து என்று எல்லோரும் சொல்லி மகிழ்ந்தார்கள்.

இந்த நிலைமையில் கம்பன் திடீரென்று இறந்துவிடுகிறான். அவனோடு புலமையும் கவிதையும் செத்துவிட்டதோ என்ற தயக்கம் ஏற்படுகிறது. உழவர்கள் கவிதையை மறந்து மறுபடியும் நன்செய் நிலங்களை உழப் போய்விடுகிறார்கள். பூமாதேவிக்குப் பழைய பதவி கிடைத்துவிடுகிறது. கம்பனை மறந்து வணிகர்கள் துலாக்கோலைப் பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். இதனால் லட்சுமிதேவிக்கும் பழைய பெருமை கிட்டிவிடுகிறது. கம்பன் இறந்த காரணத்தால், சரஸ்வதிதேவி மாத்திரம் அபாக்கியவதியாகி விடுகிறாள். இந்த அலங்கோலத்தை எல்லாம் பார்த்துக்கொண்டு இருந்தான் ஒரு கவிஞன். கம்பன் உயிரோடு இருந்தபோது அவனிடத்தில் பொறாமைப்பட்ட கவிஞன்தான் அவன். ஆனால், அவனுக்கு இப்போது தெரிகிறது கம்பனுடைய பெருமை. பாடுகிறான்:

இன்றல்லோ கம்பன் இறந்த நாள்? என் புன் கவிதை
இன்றல்லோ இராச சபைக்கு ஏற்கும் நாள்? இன்றல்லோ
பூ மடந்தை வாழப் புவி மடந்தை வீற்றிருக்க
நா மடந்தை நூல் வாங்கும் நாள்?

போன ஆண்டில் இதே நாளில் அல்லவா கம்பன் இறந்தான்? அவன் இருக்கும் வரை விலை போகாத என் கவிச் சரக்கு, இன்று தானே விலை போயிற்று? கம்பன் இருக்கும் வரையில், உழவர்களும், வணிகர்களும், பூமாதேவியும், லட்சுமிதேவியும் இருக்கும் இடம் தெரியாமல் இருந்தார்களே; இன்றல்லவா அவர்கள் மறுபடியும் தலை தூக்கினார்கள்? சுமங்கலியாக இருந்த சரஸ்வதிதேவி இன்றல்லவா கைம்பெண்ணாகிப் பரிதவித்தாள்?

'நா மடந்தை நூல் வாங்கும் நாள்' என்று லௌகீகமான துணிச்சலோடு பேசுகிறான் கவிஞன்.

கடைசியாக, பக்திப் பாடல் ஒன்றைப் பார்ப்போம். சைவத்திலும் வைணவத்திலும், குருவுக்கு உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். சைக்கிள் பழகுவதற்கே குரு இல்லாமல் முடியாது. சீட்டு விளையாடப் பழகுவதற்கு ஒரு குரு வேண்டித்தான் இருக்கிறது. காலத்துக்கும், இடத்துக்கும் கட்டுப்பட்ட சில்லரைக் காரியங்களுக்கே குரு வேண்டும் என்றால், காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்கும், பேருண்மையைக் காட்டிக் கொடுப்பதற்கு குரு வேண்டியதுதானே? அப்பேர்ப்பட்ட குருவை நம்மவர்கள் இறைவனாகவே பாவிக்கிறார்கள்.

இப்படி பாவித்தவர் ராமானுஜர். ஸ்ரீபெரும்புதூரில் வாழ்ந்த பரம பக்தர் அவர். ஆழ்வார் திருநகரியில் அவதரித்த நம்மாழ்வாருடைய பாசுரங்களைப் பாடிப் பாடி உருகியவர். நம்மாழ்வாரே தமக்கு குருவும் தெய்வமும் என்று நம்பியவர். ராமானுஜர், ஆழ்வார் திருநகரி என்ற குருகைக்கு வந்தார். நம்மாழ்வார் கோயிலுக்கு முன்னிருந்து பாடுகிறார். கோயிலுக்கு உள்ளிருக்கும் நம்மாழ்வார் விக்கிரகத்தைக் கண்டதும் குரு பக்தி மேலிடுகிறது. இது நம்மாழ்வார் இல்லை. சாட்சாத் விஷ்ணு மூர்த்தியேதான் என்ற உணர்ச்சி அவருக்கு ஏற்படுகிறது. 'நீர் குடி இருப்பது குருகை என்ற ஆழ்வார் திருநகரி அல்ல, திருப்பாற் கடலேதான்!' என்று நினைக்கிறார்.

சேமம் குருகையோ, செய்ய திருப்பாற்கடலோ?

நம்மாழ்வாருக்கு பராங்குசன் என்ற இன்னொரு பெயர் உண்டு. நாராயணன் என்றே அவரை அழைக்க வேண்டும் என்று கருதுகிறார்.

நாமம் பராங்குசனோ, நாரணனோ?

நம்மாழ்வார் சிலைக்குத் தாமமாக - அதாவது, மாலையாக மகிழம்பூவைச் சூட்டி இருக்கிறார்கள். வகுள மாலையின் மணம் மறைந்து, துளசி வாசனைதான் தென்படுகிறது ராமானுஜருக்கு. நம்மாழ்வார் சிலைக்கு சிற்பி வைத்த தோள்கள் இரண்டு. ஆனால், குருவே தெய்வமாகக் கருதும் ராமானுஜர் கண்களுக்கு, குருவின் இரண்டு தோள்கள் அல்ல, விஷ்ணு மூர்த்தியின் நான்கு தோள்களுமே காட்சியளிக்கின்றன.

ராமானுஜர் பாடுகிறார்:

சேமம் குருகையோ, செய்ய திருப்பாற்கடலோ?
நாமம் பராங்குசனோ, நாரணனோ? - தாமம்
துளவோ, வகுளமோ? தோள் இரண்டோ, நாலும்
உளவோ, பெருமான், உனக்கு?

இப்பேர்ப்பட்ட பாடல்கள் தமிழில் ஆயிரக்கணக்கானவை இருக்கின்றன. வா என்று அழைத்து நம்மை ஆனந்தத்தில் மூழ்கடிக்கும் பாடல்கள் அவை. இந்தத் தமிழ்கூறும் நல்லுலகத்தில் படிப்பதற்குத்தான் ஆள் கிடைக்கவில்லை.

14. உவமை வாகனம்

கவிஞனுடைய அம்பறாத் துணியில் மிகச் சிறந்த பாணம் எது என்று கேட்டால், 'உவமைதான்' என்று தயங்காமல் சொல்லிவிடலாம். இரண்டு பொருட்களுக்கு இடையே இருக்கிற ஒரே ஜாடையை எடுத்துக்காட்டுவதற்கு உவமை உதவியாக இருக்கிறது. ஆகையால் அது ஓர் உன்னதமான காவியக் கருவி என்று கிரேக்க ஞானியான அரிஸ்டாட்டில் வற்புறுத்தி இருக்கிறார்.

உவமையின் மந்திர சக்தியை ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிஞன், அரிஸ்டாட்டிலைப்போல் நுட்பமாக உணர்ந்தவன். ஆகவே, அவன் என்ன சொல்கிறான்? சிருஷ்டியில் உருவத்தாலும், பண்பாலும் வேற்றுமைப்பட்டதுபோலத் தோன்றும் பொருட்கள் பல. அவற்றுக்கு இடையே இருக்கும் பரஸ்பர ஒற்றுமை பாமர மக்களுடைய திருஷ்டிக்குப் படுவதில்லை. ஆனால், கவிஞனோ தன்னுடைய காவிய உள்ளத்தால் அந்த ஒற்றுமையைக் கண்டுபிடித்து உவமையின் மூலம் வெளிப்படுத்திவிடுகிறான். இந்தக் கருத்தின் மூலம் ஷெல்லி, உவமைக்கு தத்துவ அந்தஸ்தையே கொடுக்க முயற்சிக்கிறான்.

வாஸ்தவந்தானே! பிரபஞ்சத்தில் இருக்கிற பொருட்கள் எல்லாமே ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டவை. ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியாமல் இணைக்கப் பெற்றவை. ஒரு புல் நிலத்தைக் கீறிப் பிளந்துகொண்டு தன் மேனியின் பச்சைப் பகட்டைக் காட்டி மினுக்குவதற்கு முன்னால், பூமி முழுவதும் அல்லவா பிரசவ வேதனையில் ஈடுபட்டு அல்லல் உறுகிறது!

சூரியனுடைய ஒளிக் கரங்களின் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்திலேயே கூம்பி இருக்கும் தாமரை, மேனி சிலிர்த்து, இதழ்க் கட்டை அவிழ்க்கிறது. ஆனால், இப்படி எல்லாம் ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே இருக்கும் ரகசியத் தொந்தம் மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கு விளங்குவதில்லை. இறைவனைப்போல, சிருஷ்டி தத்துவத்தில்

பங்கெடுத்துக்கொள்ளும் கலைஞர்களுக்குத்தான் இவற்றை எல்லாம் லகுவில் அறிய முடியும், உணர முடியும்.

ஓர் ஆங்கிலக் கவிஞன் அருவியைப் பார்த்தான். "இது கீழ் நோக்கிச் செல்கிற புகையைப்போல் இருக்கிறது" என்று சொல்லித் தொலைத்தான். இதைப் புகழ்ந்து இங்கிலீஷ் இலக்கிய விமர்சகர்கள் பத்தி, பத்தியாக எழுதித் தள்ளிவிட்டார்கள். தமிழ் நாட்டில் அவர்கள் பிறந்திருந்தால், இப்பேர்ப்பட்ட சில்லரை வர்ணனையை எல்லாம் கண்டு மயங்கி இருக்க மாட்டார்கள். விதம் விதமான உவமைகள், தூக்கிவாரிப் போடுகிற உவமைகள், இயற்கையின் உண்மைகளை ஓர் உலுப்பு உலுப்புகிற உவமைகள் தமிழ்க் கவிதையில் மலிந்து கிடக்கின்றன.

கம்பன் உவமைகள் ஒவ்வொன்றிலுமே ஒரு தனி ரசம் இருக்கும். உவமை என்றால், மின்னல் வெட்டின மாதிரி வந்து விழும். மின்னல் வெளிச்சத்தில், பேசிக்கொண்டு இருக்கிற விஷயம் மாத்திரமல்ல, அந்த விஷயத்தோடு தொடர்புள்ள பலப் பல அரிய உண்மைகளும் தெளிவாகிவிடும்.

மண்ணையும், விண்ணையும் அளாவிச் சேர்த்துக் கட்டி ஒற்றுமைப்படுத்துகின்றன கம்பர் உவமைகள். வாசகர்களை ஏமாற்றி, அவர்கள் உள்ளத்தைப் பறித்து, எதிர்பாராத ஓர் அற்புத லோகத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவார் கம்பர். நம்மை எல்லாம் ஒரு நிலையில் வைத்து விஷயத்தைப்பற்றி நேருக்கு நேராகப் பேசிக்கொண்டு இருப்பார். திடீரென்று நம் காலடியில் இருக்கும் செங்கல்லை உருவிவிட்டுவிடுவார். அவ்வளவுதான். நிலை தெரியாமல் தடுமாறி, ஒரு புதிய உலகத்துக்கே சென்று விடுவோம் - அந்த உவமை வாகனத்தில் ஏறி!

மாரீச மான் போகிற போக்கை வர்ணிக்கிறார் கம்பர். துள்ளிக் குதித்து, மலையையும் வானத்தையும் அளந்துகொண்டே செல்கிறது மான். அதைப் பின்பற்றிச் சென்ற ராமனோ, உற்சாகம் இழந்தவனாகத் திரும்பிப் போகலாமா என்று எண்ணுகிறான். உடனே அது அவன் பக்கத்திலேயே வந்து ஆசை காட்டுகிறது. விரைந்து பிடிக்கப் போகிறான். மறுபடியும் அது அகன்றுவிடுகிறது. இப்படியாக மாரீச மான் ராமனோடு கிளியந்தட்டு விளையாடுகிறது.

குன்றிடை இவரும், மேகக்
குழுவிடைக் குதிக்கும், கூடச்
சென்றிடில் அகலும், தாழில்
தீண்டலாம் தகைமைத்தாகும்,
நின்றதே போல நீங்கும் -

இப்படிப் பாய்ச்சல் காட்டிக்கொண்டே போகிற மானின் திறமையையும், வஞ்சனையையும், தாள கதியையும் வியந்த வண்ணம் இருக்கிறோம்.

இந்தச் சமயத்தில், கம்பர் செங்கல்லை உருவிவிடுகிறார். மான் போன போக்கு எப்படி இருந்ததாம்?

நின்றதே போல நீங்கும்,
நீதி வழி நேயம் நீட்டும்
மன்றலம் கோதை மாதர்
மனம் எனப் போயிற்றம்மா.

பணம் எங்கே இருக்கிறதோ, அங்கே எல்லாம் நேசத்தை நீட்டும் பரத்தையரின் உள்ளத்தைப்போல இருந்ததாம் மான் போன போக்கு. ஸ்தூல உடம்பின் சலனத்தில் மனது ஊன்றிக் கிடந்த நம்மை, மானசீக உலகத்தின் மர்மங்களைக் காணும்படி செய்து விடுகிறது இந்த உவமை.

நாம் இதுவரை பார்த்தோமே, இதற்கு எதிர்மறையான மற்றொரு வேலையையும் செய்கிறது உவமை. ஒரே வார்ப்பில் வார்த்து எடுத்ததுபோலத் தென்படும் இரண்டு பொருட்களுக்கிடையே இருக்கும் அந்தரங்க வேற்றுமையையும் அது காட்டிக் கொடுத்து விடுகிறது. உலகத்தில், மனிதனுக்கு மாத்திரம்தான் வேஷம் போடத் தெரியும் என்பதில்லை. அவனைக் காட்டிலும் திறமையோடு வேஷம் போடத் தெரிந்த பல பிராணிகளை இயற்கையில் பார்க்கிறோம்.

உதாரணமாக, பச்சை விட்டிலை எடுத்துக்கொள்வோம். அதை வேட்டையாடித் தின்பதில் சிட்டுக் குருவிகளுக்குப் பரம சந்தோஷம். குருவிகளுடைய ஜன்மப் பகையிலிருந்து தப்புவதற்காக விட்டில் பூச்சி வேஷம் போடப் படித்துக்கொண்டது. தான் குடியிருக்கும் புல், பூண்டு, செடி, கொடி ஆகியவற்றின் நிறத்தைத் தானும் பூசிக் கொண்டு இலையோடு இலையாக, காயோடு காயாக நிற பேதம் தெரியாத வாழ்க்கை நடத்த ஆரம்பித்தது. இலை எது, விட்டில் எது என்று தெரியாமல் குருவிகள் ஏமாற்றம் அடைந்தன. இதைப்போலவே, வேஷம் போட்டு நடித்துத் தற்காத்துக்கொள்ளும் பல பிராணிகளை இயற்கையில் பார்க்கிறோம். இவற்றைத்தான் நம் முன்னோர்கள் 'ஒப்பாரி' (ஒப்பார்) என்று அழைத்தார்கள்.

மனுஷ வர்க்கத்திலேயும், இப்பேர்ப்பட்ட பிரகிருதிகள் உண்டு என்பதை வள்ளுவர் கண்டார். அயோக்கியர் என்ற ஜாதியார் இருக்கிறார்களே. அவர்களும் மனிதனைப்போலவேதான் இருப்பார்கள். அந்தக் கண்ணையும், அந்த மூக்கையும் பிட்டு வைத்த மாதிரிதான் இருக்கும். ஆனால், மனிதர்களா அவர்கள்?

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பார் யாம்கண்டது இல்.

எத்தனையோ ஒப்பாரிகளையுந்தான் நாம் பார்த்து இருக்கிறோம், நம்முடைய அனுபவத்தில். ஆனால், அப்பப்பா, குணத்தால் முற்றிலும் வேறுபட்டு, உருவத்தால் முற்றிலும் ஒன்றேபோல இருக்கும் கயவர்களைப்போல், 'பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை' என்கிறார் திருவள்ளுவர் பெருமான்.

இனி, உவமைக்கு அடித்தளமாக இருப்பது என்ன என்று பார்ப்போம். உவமையைத் திறமையோடு கையாள்கிறவனுக்கு வாழ்க்கையைப்பற்றி ஆழ்ந்த ஞானம் அவசியம். அதோடு, வாழ்க்கையை அவன் ஒரே மொத்தமாக, பூரணமாகப் பார்த்திருக்க வேண்டும்.

இதற்கும் மேலான இன்னொரு குணமும் அவனுக்கு இன்றியமையாதது; கலவைக் கற்பனை (சிந்தடிக் இமேஜினேஷன்) படைத்தவனாக இருக்க வேண்டும். கலவைச் சந்தனத்தைப்பற்றி உங்களுக்குத்தான் தெரியுமே. புனுகையும், ஜவ்வாதையும், சந்தனத்தையும் லாயக்காகக் கலக்காவிட்டால் சந்தனம் மணக்காது. அதுபோலத்தான், இரண்டு கருத்துக்களை இணைத்து உவமையின் மூலம் கலவை செய்வதற்கு அதிநுட்பமான கற்பனா சக்தி அவசியம்.

உதாரணமாக, மைக்கூடு இருக்கிறது. இதற்குள் பல நாட்களுக்கு வேண்டிய மையைச் சேகரித்து வைக்கலாம் என்று நமக்குத் தெரியும். இதோடு சதா உறைந்து கிடக்கிற பேனாவைப்பற்றியுந்தான் நமக்குத் தெரியும். ஆனால், இந்த இரண்டு தத்துவங்களையும் கற்பனையினால் இணைத்து, 'பௌன்டன் பேனா' உண்டாக்க எத்தனையோ நூற்றாண்டுகள் சென்றன.

1856-ம் வருடத்தில்தான் ஈ.டி.பிரீட்லி என்பவர் பௌன்டன் பேனாவைக் கண்டுபிடித்தார். அதற்கு முன் எத்தனையோ யுகங்களாக, அப்பாவி மனிதன் பேனாவை மைக்கூட்டில் தொட்டுத் தொட்டு எழுதிக்கொண்டு இருந்தான்; இரண்டு தத்துவங்களையும் ஒரே கருவியில் கலந்துவிடலாமே என்ற யோசனை அவனுடைய மூளைக்குத் தட்டுப்படவில்லை. பிரீட்லியின் கலவைக் கற்பனையைப் போன்றதுதான், அனேகமாகக் கவிஞனுடைய கற்பனையும்.

தூக்கணாங் குருவியின் கலை தோய்ந்த வாழ்க்கையைப் பார்த்துப் பார்த்து ரசித்துக்கொண்டு இருந்தான் ஒரு கவிஞன். அது என்ன செய்தது? இரவு வர வேண்டியதுதான். உடனே மின்மினிப் பூச்சி ஒன்றை அலகில் கவ்விக்கொண்டு வந்து தன்

கூட்டின் ஒரு மூலையில் செருகி வைத்துவிடும். இருளடைந்த குருவியின் கூட்டில் இரவு முழுவதும் மின்னிட்டாம் பூச்சி, நட்சத்திரத்தைப்போல மினுக்கிக்கொண்டு இருக்கும். இந்தக் காட்சி, கவிஞனுடைய மனதில் கிடந்து ஊறிக்கொண்டே இருக்கிறது.

ஒரு நாள் 'சோ'வென்று மழை பெய்கிறது. எங்கும் சலசலவென்று தண்ணீர் பாய்கிறது. 'கும்'மென்று இருட்டு சர்வ வியாபியாக விளங்குகிறது! அந்த இருட்டைப் பார்க்கும்போதே உள்ளத்தில் அச்சம் உண்டாகிறது. குளிரோ தாங்க முடியவில்லை. எங்கே பார்த்தாலும் தனிமை குடிகொண்டு இருக்கிறது.

கவிஞன் இந்தக் காட்சியைப் பார்க்கிறான். ஓர் உவமை அவன் மனத்தில் உருவெடுக்கிறது. கன்னங்கரேல் என்ற இருளைப் பார்க்கும்போது அதற்கு ஒரு ஸ்தூல சரீரமே ஏற்பட்டுவிட்டதோ என்று தோன்றுகிறது. கொஞ்ச நேரத்தில் அதைக் கருங் குருவியாகவே மதிக்க ஆரம்பித்துவிடுகிறான். மாரிக் காலத்து மழையினாலும், சர்வ வியாபியாக இருக்கிற தனிமையினாலும் நடுநடுங்கிக்கொண்டு இருக்கிற கருங்குருவிதான் அந்த இரவு என்று உருவகம் செய்கிறான்.

அந்தச் சமயத்தில் மின்னல் ஒரு வெட்டு வெட்டுகிறது. வானத்தில் கீழ்த் திசையிலிருந்து மேல் திசை வரைக்கும் மின்னல், இரண்டு நிமிடங்களுக்கு ஒரு தரம் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் நீண்டு வெட்டிப் பாய்கிறது. உடனே தூக்கணாங் குருவி செய்த வேலை ஞாபகத்துக்கு வருகிறது. மின்னல் என்ற புழுவை எடுத்து, கன்னல் (இரவு) என்ற பறவை விளக்கேற்றுகிறது என்று கற்பனை செய்கிறான்.

கன்னல் எனுங் கருங் குருவி ககன மழைக்கு ஆற்றாது
மின்னல் எனும் புழு எடுத்து விளக்கு ஏற்றும் கார் காலம்

-என்று வருகிறது அற்புதமான வர்ணனை.

கலவைக் கற்பனையின் கொதிப்பில், கருத்தோடு கருத்தை இணைத்துவிட்டது கவிஞனது உவமை உள்ளம். பிரீட்லியின் அற்புத சாகசத்துக்கு எல்லாம் மேம்பட்டதாக, வாழ்க்கையின் சம்பூரணத்தை நிலைநாட்டுவதாக, ஷெல்லியின் உயர்ந்த இலக்கணத்துக்கு இலக்கியமாக அமைகிறது அல்லவா இந்தக் கற்பனை?

15. சும்மா

கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் நடக்கிறது. கிரயப் பத்திரத்துக்குப் பிரதிப் பிரயோஜனம் உண்டா அல்லது பேரிரவலாக எழுதப்பட்ட மலரணைப் பத்திரமா என்பதுதான் பிரச்னை.

"சும்மாதான் எழுதிக் கொடுத்தது" என்று முக்கிய சாட்சி கூண்டில் ஏறி வாக்குமூலம் கொடுத்துவிடுகிறார். 'சும்மா' என்பதன் அர்த்தம் என்ன என்பதைப்பற்றி இரு தரப்பு வக்கீல்களும் நீண்ட வியாக்யானம் செய்து அமர்க்களப்படுத்துகிறார்கள். நீதிபதியின் தீர்ப்பு முழுவதுமே இந்த வார்த்தையின் அர்த்தத்தைப் பொறுத்து இருக்கிறது.

ஆனால், அந்த வார்த்தையோ அர்த்தக் கட்டுக்கு அடங்காத வார்த்தை. சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறு நிறம் மாறுகிற வார்த்தை.

ரயில் பிரயாணம் செய்யும்போது "ஐயா, ரொம்பத் தூரமா?" என்று கேட்கிறோம். "சும்மா போகிறேன்" என்று பக்கத்தில் இருப்பவர் பதில் சொல்லும்போது நமக்கு அர்த்தமானதுபோலத் திருப்தி அடைந்துவிடுகிறோம். "என்ன வேலை பார்க்கிறீர்கள்?" என்ற அடுத்த கேள்விக்கும் "சும்மாதான் இருக்கிறேன்" என்ற பதில் வருகிறது. இந்த பதிலுக்கு எல்லாம் மசிந்தவர்களா நாம்? "உங்களுக்குக் கலியாணமாகிவிட்டதா?" என்ற அடுத்த கேள்வியைப் போடுகிறோம். பக்கத்தில் இருப்பவர் ஆங்கில நாகரிகத்தில் வளர்ந்தவர். அறிமுகப்படுத்துவதற்கு முன் அவர் சம்பாஷணையில் ஈடுபடமாட்டார். நாம் வரம்பு மீறிவிட்டதாக எண்ணி "சும்மா இரு, ஐயா" என்று சற்று அதட்டுகிறார். இத்தனை 'சும்மா' தினுசுகளைக் கேட்ட நாமோ, சும்மா இருப்பதில்லை. அதோ, அந்த மூலையில் குறட்டைவிட்டுக்கொண்டு இருக்கிற ஆசாமியைத் தட்டி எழுப்பி க்ஷேம லாபங்களை விசாரிக்க ஆரம்பிக்கிறோம். சம்பாஷணையில் வார்த்தைக்குப் பஞ்சம் ஏற்படும்போதெல்லாம் 'சும்மா'வைத் தயங்காமல் பரிமாறுகிறோம் - ஓட்டைப் பலகைக்குச் சக்கை வைத்து அடித்துச் சரிப்படுத்துகிற மாதிரி. கருத்திலோ அல்லது பாஷையிலோ முடக்கம் ஏற்பட்டால், சும்மா என்கிற ஆப்பை அடித்துச் சமாளித்துக்கொள்கிறோம்.

பாஷையைத் துல்லியமாகவும், நுட்பமாகவும் கையாளத் தெரியாத சோம்பேறிகள் மாத்திரமல்ல. சொல்லிறந்து நிற்கும் எல்லை இல்லாத இன்பத்தைக் கண்ட ஞானிகள்கூட 'சும்மா'வில் இருக்கும் சுகத்தைப் பாராட்டுகிறார்கள். 'சும்மா' என்பது வெறும் சக்கை வார்த்தை என்றல்லவா நினைத்தோம்; அப்படி அல்லவாம்.

மனித பாஷையின் எல்லையைத் தாண்டி பரமார்த்தத்தின் இதயத்தில் நின்று விளையாடுகிற வார்த்தை ஒன்று உண்டு என்றால், அது 'சும்மா' என்ற தமிழ் வார்த்தைதான் என்று வார்த்தைக் கடலில் முங்கி, மூழ்கிக் கும்மாளம் போட்ட அருணகிரிநாதரே சொல்கிறார்.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான், முருகன், பிறவான் இறவான்,
'சும்மா இரு, சொல் அற' என்றலுமே
அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே!

'சும்மா' என்பது 'சுகமா' என்ற வார்த்தையிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று ஓர் ஆசிரியர் சொல்கிறார்.

இது அக்கிரமம் என்று நான் கருதுகிறேன். 'சும்மா'வின் அகண்ட, அர்த்த பரிபூரணத்தை இப்படி எல்லாம் விலங்கு போட்டு வில்லங்கப்படுத்திவிட முடியாது. ரிஷி மூலத்தையும் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துவிடலாம். ஆனால், 'சும்மா'வின் ஜன்யத்தை நினைக்க நினைக்க 'அம்மா!' என்று அருணகிரிநாதரைப்போல் கையை விரிக்க வேண்டியதுதான். அதாவது அவ்வளவு அர்த்தத்துக்கு அதீதமான பதம்.

ஹனுமான் இலங்கையில் சீதையைத் தேடிப்போகும்போது மாளிகைக்கு மாளிகை தாவிக்கொண்டே போகிறார். எங்கு பார்த்தாலும் மதியை முட்டிக்கொண்டு நிற்கும் மாடங்கள். ஒவ்வொன்றும் கோமேதகத்தாலும், வைரத்தாலும், வைடூரியத்தாலும் கட்டப்பட்டது. நீல மாளிகையின் மீது தாவியதும் ஹனுமானுடைய மேனி நீலமயமாகத் தோன்றுகிறது. பொன் மாளிகை மீது தாவியதும் பொன்மயமாக மாறிவிடுகிறது. இதைப் பார்த்து அதிசயித்துக்கொண்டு இருந்த கம்பர்,

கரியனாய் வெளியனாகிச் செய்யனாய்க்
காட்டும், காண்டற்கு
அரியனாய், எளியனாய்த் தன்
அகத்துறை அழகனேபோல்

-என்று சொல்கிறார்.

இவ்வாறு, தன்னைச் சுற்றி இருக்கும் சூழலையும், பற்றி இருக்கும் சமய சந்தர்ப்பங்களையும் பொறுத்து, அர்த்த பேதங்களைப் பெற்று டால் அடிக்கிறது 'சும்மா' என்ற மணி வார்த்தை. ஆகவேதான், தமிழ் என்றால் வேப்பங்காய் என்று வெறுக்கிற ஓர் ஆந்திர நண்பர்கூட, "தமிழில் இருக்கும் 'சும்மா'வைப்போல தொய்வும் விரிவும் வேகமும் ஆழமும் சந்தர்ப்பமும் உள்ள வார்த்தை வேறு எந்த மொழியிலும் இல்லை!" என்று ஒப்புக்கொண்டார்.

16. ஆன்ம வீரம்

போர்முனையில் நின்று எதிரிகளைச் சூறையாடி ரத்த வெறியில் சங்க நாதத்தை முழக்கும் வீரம் ஒரு ரகம். அது பெரும்பாலும் உடல் திமிரைச் சார்ந்தது. சற்று மட்டமானது.

'பகைவனுக்கருள்வாய் - மனமே - பகைவனுக்கருள்வாய்' என்ற மனோ பாவத்தில் இன்னொரு வீரம் இருக்கிறது - ஆன்ம வீரம்.

சிந்தனைச் சிகரங்களில் அனாயாசமாக சாகசங்கள் செய்து களிக்கும் கவிஞனது வீரம், சிறந்த வீரம்.

'உன் கண்ணில் நீர் வழிந்தால், கண்ணம்மா, என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி' என்று உருகும் தாயின் தியாகத்தில் தலைசிறந்த வீரம் இருக்கிறது.

ஆகவே, பல்வேறு துறைகளில் பலர் தங்களுடைய தனிப் பண்பினால் வெற்றிபெற்று வீரத்துவம் பெறுகிறார்கள்.

ஆனால், தாயின் வீரத்துக்கும், கவியின் வீரத்துக்கும் ஆத்ம வீரத்துக்கும், போர் வீரத்துக்கும் அடிப்படை ஒன்றுதான். ரூபத்தில் மாறுபாடு இருந்தாலும், தத்துவம் ஒரே தத்துவம்தான்.

நாம் சொன்ன வீரர்கள் பிறவியிலேயே வீரம் படைத்தவர்களா அல்லது முயற்சியினால் வீரத்தைப் பெறுகிறார்களா என்ற கேள்வி பிறக்கிறது.

ஆல்டஸ் ஹக்ஸ்லி, 'நவீன வீர உலகம்', 'Brave New World' என்று ஒரு கதை எழுதி இருக்கிறார். அந்த உலகில் பிரம்ம சிருஷ்டிக்கே இடம் கிடையாது. குழாய்களில் மருந்துகளைக் கலக்கி ஊற்ற வேண்டியதுதான். உடனே யந்திரசாலையிலிருந்து குழந்தைகள் பட்டாளம், பட்டாளமாக உற்பத்தியாக்கப்பட்டுக் குவிந்து விடுகின்றன. 'ஐயிரண்டு திங்களாய் அங்கம் எல்லாம் நோவப்' பெற வேண்டிய அவசியமே கிடையாது. பிரசவ வேதனை இல்லை. வைராக்கியம், கிடையவே கிடையாது.

அந்த உலகத்தில் சர்வாதிகாரி ஓர் இன்ஜினீயர். உணர்ச்சி பாவத்தை எல்லாம் அடக்கி ஆளும் திறமை படைத்தவர். பிரம்மாவுக்கு அடுத்தபடியாக இருப்பவர். ஆனால், மனிதர். அவர் யந்திரசாலையிலிருந்து தயாராகி வரும் குழந்தைகளைப் பாகுபாடு செய்து, தொழிலாளர்கள் வேறாகவும், மூளை வேலை செய்பவர்கள் வேறாகவும் பிரித்து, அவரவர்களுக்குத் தகுந்த மனோபாவத்தை ஏற்றுகிறார்.

ஒரு மேஜையில் கண்ணைக் கவர்கிற புஷ்பங்களும், வனப்பு வாய்ந்த சித்திரங்களும் வைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த மேஜையின் மேல் ஆலையில் செய்யப்பட்ட ஒரு டஜன் குழந்தைகளைக் கொண்டுவந்து வைக்கிறார்கள். குழந்தைகள் சித்திரங்களையும் புஷ்பங்களையும் கண்டவுடன் கைகொட்டிக் கொண்டு புன் சிரிப்போடு அவற்றை எட்டிப்பிடிக்கக் கும்மாளம் போட்டுக் கொண்டு செல்கின்றன. அப்போது இன்ஜினீயர் மின்சார பொத்தான் ஒன்றை அழுத்துகிறார். மின்சார சக்தி குழந்தைகளுடைய நரம்பைத் தாக்கி அதிர்ச்சி உண்டாக்குகிறது. குழந்தைகள் வேதனை தாங்க முடியாமல் கூக்குரலிட்டுக் குழைந்து விழுகிறார்கள். இன்ஜினீயர் மற்றொரு பொத்தானை அழுத்தி அதிர்ச்சியை நிறுத்துகிறார். குழந்தைகள் தன்னிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால், அந்தப் பாழும் புஷ்பங்களையும் சித்திரங்களையும் மறுபடியும் பார்த்தவுடன் கோரமான குரலில் ஓலமிட ஆரம்பித்துவிடுகிறார்கள். அவர்களுடைய மனதில் வெறுப்பு உண்டாகிவிடுகிறது. சித்திரத்தைக் கண்டவுடன் அதிர்ச்சி ஞாபகம் ஏற்பட்டுவிடுகிறது. புஷ்பத்தில் உள்ள மோகம், மின்சார அதிர்ச்சி வேதனையில் முழுகி விடுகிறது. மின்சார நாகரிகத்தில் சௌந்தர்யத்துக்கு இடம் ஏது?

இந்தக் கதை மனோதத்துவ சாஸ்திரத்தை நையாண்டி செய்யும் கதை. மனோதத்துவ இன்ஜினீயர் மனிதனுடைய மனதைத் தட்டிக் கொட்டி நீட்டி நிமிர்த்திவிடலாம் என்று நம்புகிறார். சில மானசீகத் தந்திரங்களைக் கையாண்டால் ஒரு வீரனைக் கோழையாக்கிவிடலாம், கோழையை வீரனாக்கிவிடலாம் என்று எண்ணுகிறார். ஆனால், மனிதனுடைய மனம், அதிலும் வீரனுடைய மனம், மின்சார சக்திக்குள் எல்லாம் அடங்காத வஸ்து. மனிதனுடைய உணர்ச்சிப் பிரவாகத்துக்கு அணை கட்ட இன்ஜினீயரின் விஞ்ஞான அறிவு எம்மாத்திரம்?

இந்த மனோதத்துவ இன்ஜினீயரையும் தோற்கடித்துவிட்டார்கள் சில பதார்த்த குண ஆராய்ச்சியாளர்கள். 'தேக தத்துவத்தைப் பொறுத்ததுதான் மனோதத்துவம். ஆந்திரர்களுடைய மனப்பான்மைக்கும் 'கொங்கு'ராவுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. வங்காளிகளுடைய தேசாபிமானத்தின் மர்மம் 'ரசகுல்லா' தத்துவத்தில் மறைந்து கிடக்கிறது. வட இந்தியர்களுடைய வீரம் 'கோதுமை' வீரம் என்பதுதான் அவர்களுடைய கட்சி.

நம்முடைய தேகம் கண்ணுக்குப் புலப்படாத பரம அணுக்களால் ஆக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வோர் அணுவும் பல பதார்த்தங்களால் உண்டாக்கப்பட்டு இருக்கிறது. பதார்த்தங்களுடைய விகிதாசாரத்தை மாற்றிவிட்டால் நமது தேகத்தை மாத்திரமல்ல. நம்முடைய

மனதின் அமைப்பையும் மாற்றிவிடலாம். உதாரணமாக, தேக அணுவில் 'ஜீன்' தத்துவ விகிதாசாரத்தை மாற்றிவிட்டால் மனதில் வீரதத்துவம் அதிகமாகிவிடும். அதேபோல், வெண்டைக்காய், விளக்கெண்ணெய் முதலிய பதார்த்தங்கள் மனுஷ சுபாவத்தை மாற்றுகிற முறையை நிதர்சனமாக ருசு செய்து காட்டுவதற்காகச் சிலர் விஞ்ஞானப் பரீட்சைகளில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் இன்னும் தீர்ந்த முடிவுக்கு வரவில்லை.

ஆனால், ஒன்று நிச்சயம். நாளது தேதி வரையில் இப்பேர்ப்பட்ட உபாயங்களால் நம்முடைய தேக அமைப்பைச் சீர்திருத்தச் சக்தி அற்றவர்களாகவே இருக்கிறோம். நாய் வாலுக்கு மட்டை கட்டி அதை நீட்டிவிட முடியவில்லை. மனதுக்கு மட்டை கட்ட ஆரம்பித்துவிட்டோம். இந்த உண்மையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே நமது மூதாதைகளுக்குள் திலகமாக விளங்கிய விகடவீரர் தெனாலிராமன், 'கரு நாயைச் செந் நாயாக்கிய காதையில்' தெளிவுபடுத்தி இருக்கிறார். சுப்பிரமணிய பாரதியார் சொல்கிறார்:

தோல் வெளுக்கச் சாம்பர் உண்டு
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி,
துணி வெளுக்க மண் உண்டு
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி,
மணி வெளுக்கச் சாணை உண்டு
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி,
மனம் வெளுக்க மருந்து இல்லை
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி.

மனம் வெளுக்க மாத்திரமல்ல. மனதைத் திருத்துவதற்கும் மருந்து இல்லை. ஒரு மனிதனைச் சாணையில் தீட்டி வீரனாக்கி விடுவது சாத்தியமல்ல.

இன்னும் சிலர் வீரத்துவம் பரம்பரையைப் பொறுத்தது என்று சொல்கிறார்கள். "வீரம் வாழையடி வாழையாக வளரக் கூடியது... புலிக்குப் பிறப்பது பூனையாகுமா..? அவன் தம்பி அங்கதனாகத் தான் இருக்க முடியும்... கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் போது, அம்பிகாபதியைப்பற்றிக் கேட்கவா வேண்டும்..?" என்று சொல்கிறார்கள். இந்த உண்மையை ஸ்தாபிக்க வேண்டும் என்று கங்கணங் கட்டிக்கொண்டு சில ஆசிரியர்கள் ஆராய்ச்சித் துறையிலேயே இறங்கிவிட்டார்கள்.

காலம் - பத்தொன்பதாம் நூற்றாண்டு; இடம் - இங்கிலாந்து தேசம். வைஸ்மேன் (Weisman) என்ற ஆசிரியர் இரண்டு டஜன் சுண்டெலிகளை ஒரு பெரிய கூண்டில் குடியேற்றுகிறார். அவற்றுக்கு

வாலை 'நருஸாக'க் கத்தரிக்கிறார். மிகுந்த பொறுமையோடு மாதக் கணக்காகக் கூண்டின் அடியிலேயே காத்துக்கொண்டு இருக்கிறார். எதற்காக? இந்தச் சுண்டெலிகளுடைய வாரிசுகள் வால் இல்லாமல் பிறக்குமா என்பதைக் கண்டறிவதற்காக! ஆனால், எலிக் குஞ்சுகளுடைய வால், பெற்றோர்களுடையதைக் காட்டிலும் அரை இஞ்சு அதிகமாகவே இருந்தது. வைஸ்மேன் தைரியத்தை இழக்கவில்லை. எலிக் குஞ்சுகளுடைய வாலையும் நறுக்கி பேரன் பேத்திகளுடைய வரவை எதிர்பார்த்திருந்தார். அவையும் வாலை இழக்கத் தயாராயில்லை. பூட்டன் பூட்டிகளும் அவ்வண்ணமே.

ஒரு வீரன், தான் பெற்ற கலைச் செல்வத்தையோ ஆன்ம ஞானத்தையோ தன் சந்ததிகளுக்குப் பிதுரார்ஜிதமாகக் கொடுத்துப் போகிறான் என்ற கொள்கையில் வைஸ்மனுக்குப் பரிபூரண நம்பிக்கைதான். ஆனால், அவருக்கு வால் மாத்திரம் புரிய வில்லை. இதுவரை நாம் வீரத்துவத்தைப்பற்றி மூன்று வகை ஆராய்ச்சிகளைக் கவனித்தோம். கடைசியாக வீரத்துவம் தெய்வீகம் பொருந்தியது என்ற கொள்கையைப்பற்றி இரண்டொரு வார்த்தை. வீரன் அவதார புருஷன். கடவுளுடைய அம்சம். கடவுள் தன்னுடைய தீராத விளையாட்டுக்கு வீரனைக் கருவியாகக் கையாள்கிறார். உலகத்தில் சௌந்தர்யம் மங்கி குரூரம் அதிகரிக்கும் காலத்தில் கடவுள், வீரனைத் தன் தூதனாக அனுப்புகிறார். அவன் கவிஞனாகப் பரிணமித்து உலகில் அழகு உணர்ச்சியைப் பரப்புகிறான். உலகில் மிருக புத்தி அதிகரிக்கும்போது ஒரு புத்தனை அனுப்புகிறார் - காருண்யத்தை நிலை நாட்டுவதற்காக.

ஆகவே, வீரனுடைய ஆவேசமும், சக்தியும் அவனுடைய சொந்த உழைப்பினால் ஏற்பட்டதல்ல. கடவுளுடைய அருளில் இருந்து பிறப்பது.

நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி

கடவுளே அந்தக் குயவன், தோண்டியின் அளவும் உருவமும் லாவண்யமும் குயவனுடைய கைவண்ணத்தைப் பொறுத்தது. தோண்டி, தன் முயற்சியினாலோ அல்லது சமய சந்தர்ப்ப சகாயத்தினாலோ தன்னுடைய பண்பை மாற்றிக்கொள்ள முடியாது.

வீரன் அந்தக் குயவன் தந்த வரப்பிரசாதம். இதுதான், 'கார்லைல்' என்பவருடைய கொள்கை.

17. மா மனம்

'பியர்சன்ஸ் மாகஸீன்' என்ற பத்திரிகையின் ஜனவரி இதழில் ஒரு ரசமான ஆராய்ச்சி வெளிவந்து இருக்கிறது. 'எழுபது வயதான ஒருவன் தன் வாழ்க்கையை எவ்வாறு செலவிட்டு இருக்கிறான்?' என்பதைப்பற்றிய ஆராய்ச்சி. அவனுடைய நீண்ட வாழ்க்கையில், 24 வருடம், 9½ மாதம் தூக்கத்தில் தொலைந்தது; 11 வருடம், 8 மாதம் உத்தியோக வேலை; விளையாட்டில் கழிந்தது சுமார் 11 வருடம்; உண்பதிலும், குடிப்பதிலும் 5 வருடம் 10 மாதம்; நடந்து கால் சலித்தது 5½ வருடம்; உடை அணிவதிலும், அலங்காரம் செய்வதிலும் 2 வருடம் 11 மாதம்; வீண் பேச்சில் விரையமானது சுமார் 3 வருடம்; சில்லரைக் காரியங்களில் செத்தது 1 வருடம் 5½ மாதம்; சிந்தனையில் செலவிட்டதோ 1 வருடம் 5½ மாதம்; எவ்வளவு அவமானமான ஆராய்ச்சி இது!

பேரண்டத்தில் இருக்கிற சகல ஜீவராசிகளுக்கு எல்லாம் சிரேஷ்டனாக, நாகரிகத்தின் கொடுமுடியைத் தொட்டு நின்று அற்புத சாகசங்கள் செய்துவரும் மனிதன், 70 ஆண்டுகளில் 1 வருடம் 5½ மாதம்தானா சிந்தனை செய்கிறான் என்று அதிசயிக்கிறோம்.

சிந்தனை இல்லாவிட்டால் செயல் என்பதே இல்லைதான். மூச்சு விடுவதற்குக்கூட சிந்தனை இல்லாமல் முடியாது. ஆனால், அப்போது நம்மை அறியாமலேயே சிந்தனை இயங்குகிறது. சுய உணர்வோடு மனிதன் சிந்தனை செய்வதெல்லாம் சொற்ப காலந்தான்.

மனித உள்ளத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று வெளி மனது. இதைப்பற்றித்தான் நமக்கு அரைகுறையாகத் தெரியும். அனேகமாக இது நாம் சொன்னபடி கேட்கிறது. அரிச்சுவடி படிக்கிறது. கணக்குப் போடுகிறது. பாடல்களை மனனம் செய்கிறது. ஆனால், இதற்கு அப்பால் உள் மனது என்று ஒன்று இருக்கிறது. அப்பப்பா, இது ஒரு மாபெரும் பூதம். நமக்குத் தெரியாத ஒரு மர்ம ஸ்தானத்தில் நின்றுகொண்டு, அது மனிதனுடைய குடுமியை உடும்புப் பிடியாகப் பிடித்து ஆட்டி வைக்கிறது. மனித சுயேச்சைக்கு உலை வைக்கிறது. காமக் குரோத லோபங்களைக் கிளறிவிட்டு நம்மைப் பேயாட்டம் ஆடச் செய்கிறது.

இதன் சொரூபம் என்ன என்றே நமக்குப் புரிவதில்லை. இது செய்கிற இடக்குக்கும், கொடுங்கோன்மைக்கும், திருகு

தாளங்களுக்கும் அடிமைப்பட்டு மனித வாழ்க்கை பாழ்படுகிறது. ஆனால், இந்த மாமனத்தின் உருவத்தை உணர்ந்து, தந்திரமாக அதை வசப்படுத்தி, மூக்கணாங் கயிறு போட்டு, அதன் முதுகு மேல் ஏறி உட்கார்ந்துவிட்டோமேயானால், அது செய்கிற குறளி எல்லாம் அடங்கிவிடுகிறது. நம்மை உய்விக்க வந்த மனோன்மணியாக அது காட்சியளிக்கிறது.

விரகக் குடத்திலே பாம்பு அடைப்போம்,
வேதாந்த வெளியிலே விட்டு ஆட்டுவோம்,
கரணங்களைப் பிடுங்கி இரை கொடுப்போம்
காலக் கடுவெளி நின்று ஆட்டுவிப்போம்

-என்று பாம்பாட்டிச் சித்தரைப்போல், நாமும் உன்மத்தத்தோடு பாடலாம் - மாமனத்தை உணர்ந்து அடக்கிவிட்டால். ஏன், மண்ணையும், விண்ணையும் கூட்டிப் பயிர் செய்யலாம். ஏழு கடலையும் குடித்து ஏப்பம்விடலாம். ஆனால், கைக்குள் அடங்காத இந்தக் கள்ளியை அடக்கி ஆள்வது எப்படி என்று தெரிய வில்லையே!

ஃப்ராய்ட், ஆட்லர், யுங் என்ற மூன்று பெரிய மனோதத்துவ நிபுணர்கள் உள் மனதைப்பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினார்கள். டார்வின் கண்டுபிடித்த பரிணாம நெறி எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானது மேற்சொன்ன மூவரும் செய்து இருக்கிற உள் மன ஆராய்ச்சி. மனிதனுடைய செயலில் முக்காலே அரைக்கால்வாசி உள் மனது போடுகிற உத்தரவுகளைப் பொறுத்து இருக்கிறது. உள் மனதில் கோயில்கொண்டு இருக்கும் தேவதைகளில் அதி முக்கியமானது காமம் என்று சொல்கிறார் ஃப்ராய்ட். சைக்கிள் விடுவதில்கூட, காமத்தின் சாயலையே காண்கிறார். இந்த சித்தாந்தத்தைப் பலமாகக் கண்டிக்கிறார்கள் மற்ற இருவரும்.

இந்த மூவருக்கும் இடையே இருக்கும் அபிப்பிராய பேதம் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆனால், ஒன்று நிச்சயமாகச் சொல்லலாம். இவர்கள் மூவருமே மாமனத்தின் அடிமுடியைக் காணாதவர்கள். ஏதோ அதன் அடிவாரத்தில் நின்றுகொண்டு கர்ணம் போட்டுக்கொண்டு இருக்கிறார்களே ஒழிய, அதன் உன்னதச் சிகரங்களையும், அற்புத வடிவையும் முடியக் கண்டவர்கள் அல்ல. இந்த மூவரில் நிதான புத்தியோடு ஆராய்ச்சி செய்தவர் டாக்டர் யுங்தான் என்று பலர் ஒப்புக்கொள்கிறார்கள். சென்ற வருடம் வெளிவந்த ஒரு நூலில் (Essays on Contemporary Events) டாக்டர் யுங் தன்னுடைய ஆராய்ச்சி எல்லாம் பலனற்றது என்றும், உலகத்தில் உள்ள முரண்பாடுகளையும், சண்டைகளையும் தீர்க்க வேண்டுமானால், மேல்நாட்டு சமயங்களால் முடியாது என்றும்,

இந்துக்களின் யோக மார்க்கத்தின் மூலம்தான் மனதைக் கட்டுப்படுத்தி, சாந்தியை நிலைநாட்ட முடியும் என்றும் ஒப்புக் கொண்டு இருக்கிறார். அவர் இன்னும் சில ரசமான உண்மைகளைப் பற்றிப் பின்வருமாறு விவரிக்கிறார்.

'வெளி மனதில் நடக்கிற ஒவ்வொரு சம்பவமும் உள் மனதைத் தாக்கி, அதில் ஓர் இயக்கத்தை விளைவிக்கிறது. நமது தற்கால நாகரிகமோ மிகவும் திருகல் விழுந்துபோய் இருக்கிறது. உதாரணமாக, தொழிற்சாலைகளில் வேலை செய்கிறவர்கள் யந்திரத்தோடு யந்திரமாகக் கலந்துவிட்டார்கள். தமக்கென்று சுயேச்சையோ, கௌரவமோ, தாங்களும் தனி உருப்படிகள்தான் என்ற உணர்ச்சியோ அவர்களுக்கு இல்லை. அவர்களுடைய வெளி மனதின் நிலை இது. இந்த விரக்திக்குப் போக்கு வேண்டுமே. அதற்காக அவர்களுடைய உள் மனது வேலை செய்ய ஆரம்பிக்கிறது. 'நாங்களும் முக்கியமானவர்கள்தான்' என்பதை நிலைநாட்டுவதற்காக, கலவரத்திலும் வேலை நிறுத்தத்திலும் அவர்களை ஈடுபடுத்துகிறது. இப்படியாக வெளி மனதில் உள்ள கீரைக் கடைக்கு எதிர்க் கடை போடுகிறது உள் மனது.'

ஐந்தாவது வகுப்பு வாத்தியார் நல்லவர்தான். அப்பாவி. ஆனால், அவருக்கு வாய்த்த சகதர்மிணியோ பொல்லாத ஒரு நீலி. அவரைப் படாதபாடெல்லாம் படுத்தி வைப்பாள். எதிர்த்துப் பேசுவதற்கு சமர்த்தில்லாதவர் வாத்தியார். வீட்டில் அவர் காட்டும் பொறுமை எல்லாம் வெளி வேஷம். அவருடைய உள் மனது தனக்கு நேரிட்ட மானபங்கத்தை நினைத்து, நினைத்து அசை போட்டுக்கொண்டு இருக்கிறது. பழிக்குப் பழி வாங்க வேண்டுமே என்று அது துடித்துக்கொண்டு இருக்கிறது.

கையில் பிரம்பும், அடிப்பதற்கு மாணவர்கள் முதுகும் இருக்கும் போது அதற்குக் கொண்டாட்டந்தானே? ஆகவே, பள்ளிக்கூடத்துக்கு வந்தவுடன் மாணவர்கள் மேலே அசாதாரணமாக அது சீறி விழுகிறது. ஆனால், வாத்தியார் நல்லவர்தான். அப்பாவி. உள் மனதல்லவா மாணவனுடைய முதுகுக்கு வினையாக இருப்பது!

இதைப்போலவே தனி மனிதன் மாத்திரமல்ல. மனித சமுதாயமே நடந்துகொள்கிறது. சுதந்திரம் அற்ற சர்வாதிகார நாடுகளில், உள் நாட்டில் சண்டை போடுவதற்கு வழியில்லை. ஆகையால், ஜனங்கள் வெளிநாடுகளோடு போரிட்டு இந்தக் குறையைத் தீர்த்துக்கொள்கிறார்கள். ஆனால், ஜனநாயக ஆட்சி முறையில், உள் நாட்டில் பல கட்சிகள் இருக்கின்றன. அவை ஒன்றுக்கொன்று மோதலாம். தாக்கலாம். மண்ணை வாரிப் போடலாம். இதற்கு எல்லாம் கட்சிகளுக்கும் சட்டபூர்வமான சுதந்திரம் உண்டு.

ஜனங்களும், ஏதாவதொரு கட்சியோடு சேர்ந்துகொண்டு, கூத்தாடிக் கொக்கரித்து ஓலமிடலாம். இப்பேர்ப்பட்ட பூசல்கள் மூலம் பொது ஜனங்களின் ஆத்திரம் தீர்ந்துவிடுகிறது.

ஆகவே, வெளி நாடுகளோடு போர்புரிய வேண்டும் என்ற நிர்ப்பந்தமோ, விருப்பமோ ஜனநாயக ஆட்சிமுறையில் இருப்ப தில்லை. ஆனாலும், உள் நாட்டில் குழப்பம் சதா இருந்து கொண்டுதான் இருக்கும்.

இந்தக் குழப்பத்தைத் தீர்ப்பதற்கு வழி என்ன? ஒவ்வொரு மனிதனும் தன்னோடு தானே மோதிக்கொண்டு போராட வேண்டும். இந்த நிலையில்தான் மற்றவர்களோடு போராடாமல் அவன் இருக்க முடியும். வெளி மனத்தோடு, உள் மனது மல்யுத்தம் செய்ய வேண்டும். இந்த யுத்தத்தின் இறுதியில்தான் மனிதன் பரிபூரண சாந்தியை அடையலாம்.

இந்த யுத்தத்தைத் தூண்டிவிடுவதற்குச் சமயங்கள் உதவியாக இருக்க வேண்டும். ஆனால், மேல் நாட்டிலுள்ள மதங்கள் இந்தச் சேவையைச் செய்யத் தகுதியற்றவை. இப்பேர்ப்பட்ட அந்தரங்கப் போராட்டத்தின் மூலம் நிரந்தரமான அமைதியை நாம் அடைய வேண்டுமானால், யோக அப்யாஸத்தை மேற்கொள்ள வேண்டியதுதான் என்று டாக்டர் யுங் வற்புறுத்துகிறார்.

இதே விஷயத்தை ஸ்வானுபவ அதிகாரத்தோடு திருமூலர் எப்படி எடுத்துச் சொல்கிறார் என்று பார்ப்போம். ''நான், நான்' என்று அடித்துக்கொள்கிறாயே இதெல்லாம் நம்முடைய மனதில் ஏற்பட்ட ஒரு கோணல்தானே ஒழிய, ஆணவம் என்பது, ஆன்மாவைப்போல ஓர் உண்மையான வஸ்துவல்ல. மனதைத் துடைத்து, அந்தக் கோணலை நிமிர்த்திவிட்டால், நம்முடைய ஆன்மாவின் உண்மையான ரூபம் தெரிந்து இன்பம் பிறக்கும். ஆனால், மனதை எப்படிப் புடம் போடுவது? 'நான் யார்? என் உள்ளம் யார்? எப்போது எனக்கு இந்த உடல் கிடைத்தது? உடல் இறந்த பிறகு என்ன மிஞ்சுகிறது?' என்று நம்மை நாமே குறுக்கு விசாரணை செய்துகொண்டே இருந்தால், உண்மையான சுய உணர்வு நமக்குக் கிட்டிவிடும்' என்று உறுதி கூறுகிறார் திருமூலர்.

என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்

-என்று சொல்லிவிட்டு, மேலும் 'யுங்' சொன்ன அதே தத்துவத்தை விளக்குகிறார்:

என்னை அறிந்திட்டு இருத்தலும், கைவிடாது,
என்னை இட்டு என்னை உசாவுகின்றானே

நான் யார் என்று உணர்ந்த பிறகு, மறுபடியும் மடமையில் ஆழ்ந்துவிடக் கூடாதல்லவா? ஆகையினால், எல்லையற்ற அருளாளனாகிய இறைவன், என்னிடத்தில் உள்ள கருணையின் காரணமாக ஒரு தந்திரம் செய்தான். என்னைக்கொண்டே, என்னைச் சதா ஆராய்ச்சி செய்யும்படி தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறான். இந்தப் போராட்டத்தின் பலனாக, சாஸ்வதமான சுய உணர்வு எனக்கு ஏற்பட்டுவிட்டது. மயக்கம் நீங்கித் தெளிவு புலர்ந்தது; மனம் மாண்டது; செயல் இறந்தது.

மயல் அற்று, இருளற்று, மாமனமற்று,
கயல் உற்ற கண்ணியர் கையிணக்கு அற்று,
செயல் அற்று இருந்தார் சிவவேடத்தாரே.

ஆகவே, ஆன்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே, மலை போலப் படுத்துக்கிடந்த மாடு மறைந்தது; கலப்பற்ற சாந்தியும், ஆனந்தமும் பிறந்தது. பனங் கள்ளைக் குடித்து அறிவு தடுமாறும் மக்களே, உள்ளத்தினுள் ஒரு பனை இருக்கிறது. அதில் உற்பத்தியாகும் ஆனந்தத் தேறலை இறக்கி, பட்டை பட்டையாகப் பருகிப் பாருங்கள். அது கொடுக்கிற லாகிரியைப் பனங் கள் கொடுக்குமா என்று கேட்கிறார் திருமூலர்.

பறவையைக் காட்டிலும் பன்மடங்கு வேகமாகப் பறக்கும் குதிரை ஒன்று நம்மிடத்தில் இருக்கிறது. அதுதான் மனக் குதிரை. லாயக்காகக் கடிவாளம் போட்டு, அதன் மேல் ஏறி சவாரி செய்யக் கற்றுக்கொண்டால், என்ன ஏற்படுமாம்?

புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டால்,
கள் உண்ண வேண்டாம், தானே களி தரும்,
துள்ளி நடப்பிக்கும், சோம்பு தவிர்ப்பிக்கும்,
உள்ளது சொன்னோம் உணர்வுடையோருக்கே

'கொஞ்சமாவது உணர்வு என்ற சரக்கு உங்களிடத்தில் இருந்தால், நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேளுங்கள். அதன்படி நடந்து பாருங்கள். அசட்டுத்தனமாகத் தீர்த்த யாத்திரை போகிறீர்களே! காடும் மேடும் கடந்து காலத்தை விரயம் செய்கிறீர்களே! நீங்கள் ஆட வேண்டிய தீர்த்தங்கள் எல்லாம் உங்கள் மனதுக்குள்ளேயே இருப்பதை உணரக் கூடாதா?'

உள்ளத்தினுள்ளே உள பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார், வினை கெட,

பள்ளமும் மேடும் பறந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வி இல்லோரே.

இதுவும் சொல்லலாம், இதற்கு மேலும் சொல்லலாம், திருமூலரைப் போன்ற யோகிகள். ஆனால், நம்மைப் போன்றவர்களுக்கு மனதைக் கட்டுப்படுத்துவது கஷ்ட சாத்தியமாக இருக்கிறதே! இந்த அடங்காப் பிடாரியை அடக்குவதா என்று முனங்குகிறோம் நாம்.

"பயப்படாதே. அதற்கெல்லாம் வழி இருக்கிறது" என்று சொல்லித் தட்டிக்கொடுக்கிறார் நம் ஆசிரியர்.

ஏதோ படிப்பு, படிப்பு என்று படித்துக்கொண்டே இருக்கிற ஏட்டுச் சுரக்காய்களே! புஸ்தகத்தை எல்லாம் கட்டிச் சுருட்டி வைத்துவிட்டு, மனதுக்குள் இறங்கிக் கொஞ்சம் முயற்சி செய்து பாருங்கள்.

சாத்திரம் ஓதும் சதிர்களை விட்டு நீர்
மாத்திரைப் போதும் மறிந்துள்ளே நோக்குமின்

மேல்நாட்டு விஞ்ஞானிகள் எல்லாரும் மனதை வெளியே பறக்கவிட்டு எத்தனையோ புதுமைகளைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் கண்ட உண்மை எல்லாம் மன சாந்தியை நமக்குக் கொடுக்கவில்லையே! ஆகையினால் மனதின் மேலேயே மனதைச் செல்லுமளவும் செலுத்துங்கள். இப்படிக் கிட்டுகிற அறிவுதான் அறிவு. மற்ற அறிவெல்லாம் பேயறிவுதான்.

தன்னை அறிவது அறிவாம் அஃதன்றிப்
பின்னை அறிவது பேயறிவாகுமே

-என்கிறார். பொதுப்படையாக மனதைப்பற்றிச் சொல்லி நிறுத்திவிடவில்லை திருமூலர். மனதை அடக்குவதற்கு உரிய பல பயிற்சிகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார். ஆனால், பாமர மக்கள் அறிய முடியாத பரிபாஷையில் சொல்லி இருக்கிறார். திருமந்திரப் பாடல்களைப் படிக்கும்போதெல்லாம், ஆசான் இல்லாமல் மெய் ஞானத்தை அடையவே முடியாது என்று தோன்றுகிறது.

உரிய மார்க்கத்தை உரிய முறையில் உணர்ந்து, மனதை அடக்கி, யோகத்தில் அமர்ந்து தன்னை அறியக் கற்றுக்கொண்டால், காலத்தை வெல்லலாம். யமனை உதைக்கலாம். இறப்பு, பிறப்பு என்ற ஓயாத காவடிக்கு ஓய்வு ஏற்படும் என்பதே திருமூலருடைய சித்தாந்தம்.

18. கலையும் இரவலும்

கலை சம்பந்தமாக நமக்குள் எத்தனையோ வேண்டாத கொள்கைகள். "ஒவ்வொருவரும் சொந்தமாகவே கலைகளைச் சிருஷ்டிக்க வேண்டும். அப்படி சொந்தமாக சிருஷ்டி செய்யாத காரியங்கள், உதவாத காரியங்கள்" என்று சொல்ல முற்படுவார்கள் சிலர்.

ஆனால், சிருஷ்டி தத்துவம் என்றால் என்ன?

தாமரை வித்து ஒன்றிலிருந்து கொடி, இலை, பூ எல்லாம் வருகிறது. இதில் சிருஷ்டி தத்துவம் இருக்கிறதென்று சொல்கிறோம். துணிச்சலாகவே சொல்லலாம். ஆனால், ஒரு கேள்வி. "எல்லாம் நாலு மிளகுப் பருமனுள்ள தாமரை மணியிலிருந்தே தான் வந்ததா?"

உண்மை என்ன? அந்தச் சிறு தாமரை மணிக்குள் ஒரு சக்தி இருக்கிறது. அது ஓர் உயிர்ச் சக்தி. உணர்வோடு கூடிய சக்தி என்றும் சொல்லலாம். அந்தச் சக்தியானது எத்தனையோ வஸ்துக்களை இரவல் வாங்கிக்கொள்கிறது.

தாமரை வித்து விழுந்த சேற்றில், எத்தனையோ உப்பு வகைகள், மண்ணில் எத்தனையோ வகைகள். மற்றும் மக்கிப்போன இலை, பூ, கொடி, பட்டை எல்லாம் எண்ணிறந்த வகை. இவை போக தண்ணீர் வேறு, காற்று வேறு. இவ்வளவையும் தாமரை வித்து இரவல் வாங்கிக் கொள்கிறது. உயிர்த் தத்துவத்தோடு விழிப்பாக இருக்கும்போதுதான் இரவல் வாங்கிக்கொள்கிறது. எப்போது இரவல் வாங்காது? உயிர்த் தத்துவம் அற்றுப்போன நிலையில்தான். ஆம். இத்தனை வஸ்துக்களை இரவல் வாங்கிக்கொண்டு கொடி வீசுகிறது. இலைகளை வட்ட வட்டமாகப் பரப்புகிறது. கடைசியாக அழகும் மணமும் குடிகொள்வதற்கான அற்புதமான பூவை மலரச் செய்கிறது. இந்த அரிய சிருஷ்டியைப் பார்த்துவிட்டு, "இவ்வளவு தானா தாமரைப் பூவின் காரியம்! எல்லாம் இரவல்; சொந்தம் என்பது ஒன்றுமே இல்லை!" என்று ஏளனம் செய்ய நா எழுமா?

தாமரை தாமரைதான். தாமரை தத்துவம் வேறொன்றாக மாறுவதற்கு முயலவில்லை. வேண்டுமானால் அதிகப் பிரசங்கித் தனமான காரியங்களை நாம் செய்யலாம். தாமரைக் கொடியில் மல்லிகைப் பூவை கட்டலாம்; சண்பகப் பூவைக் கட்டலாம்; ரோஜாப்பூவைக் கட்டலாம். சைனாக்காரியிடம் காலணாக் கொடுத்து வாங்கிய காகிதப் பூவையும் கட்டிவிடலாம். கட்டிவிட்டு,

"பார் என் அற்புத சிருஷ்டியை!" என்றும் சொல்லலாம். யாராவது நம்முடைய வேலையை விசித்திர வேலையை அனுபவிப்பார்களா? ரசிகர்கள் பார்த்து குளத்தையே அழித்துவிட வேண்டும் என்று சொன்னால் வியப்பல்ல.

மனிதனுடைய சிருஷ்டியும் தாமரையும் ஒத்தே நிற்கின்றன. எந்தக் கலைவல்லவர் ஆனாலும் சரி, எத்தனை எத்தனையோ கலை அம்சங்களை அனுபவித்து தங்களுக்கு உள்ளாக்கிக் கொள்கிறார். இதயம் அவற்றை வைத்துக்கொண்டு அற்புதமான கலைச் செல்வத்தை உண்டாக்குகிறது. எல்லாம் உண்மையான சிருஷ்டியே.

கம்பரை எடுத்துக்கொள்வோம். அவர் இயற்கையிலுள்ள பொருட்களையும், காட்சிகளையும் கண்டு அனுபவித்தார். இயற்கைப் பொருட்களிலுள்ள அரிய தத்துவங்களைக் கண்டு அனுபவித்தார். சொல்லிலும் சொல்லின் லாகவங்களைக் கண்டு அனுபவித்தார். தமிழ்நாடு ஒழிந்த இதர தேசங்களில் கிடைத்த விஷயங்களையும் அனுபவித்தார். அனுபவித்த விஷயங்களை எல்லாம் (தாமரை வித்தைப்போலத்தான்) ஆன்ம சக்திக்குள் இழுத்துக்கொண்டார். அவ்வளவும் உருமாறி, சிருஷ்டி தத்துவமாக விளக்கம் பெற்றுவிடுகின்றன. கவிகள் என்றும் காட்சிகள் என்றும், படலங்கள் என்றும் காண்டங்கள் என்றும் மலர்கின்றன. ஆம். கம்பர் இரவல் வாங்கினார். தாமரை வித்தைப்போலவே இரவல் வாங்கினார்.

ரவீந்திரநாத் தாகூர் பேசுவதை இனிக் கேட்கலாம்.

"மகா மேதாவிகளிடத்தில் ஓர் அறிகுறியைக் காண்கிறோம். யாருக்கும் இல்லாதபடி இரவல் வாங்கும் சக்தி அபாரமாக அவர்களிடத்தில் இருப்பதைக் காண்கிறோம். ஆனால், அப்படி ஒரு சக்தி இருப்பது அனேகமாக அவர்களுக்கே தெரியாது. கலை உலகம் அளவில்லாதபடி அவர்களுக்குக் கடன் கொடுக்கத் தயாராக இருக்கும். சாமான்ய மக்களே கடன் வாங்கப் பின் வாங்குவார்கள்! பயப்படுவார்கள். ஏன் என்றால், வாங்கிய கடனைத் தங்கள் சொந்த நாணயத்தில் திருப்பிக் கொடுக்க முடியாது அவர்களுக்கு.

ஷேக்ஸ்பியர் சம்பந்தமாக எத்தனையோ ஆராய்ச்சியாளர்கள். அவர்களில் ரொம்பவும் மோசமானவர்கள்கூட, 'ஷேக்ஸ்பியர் கடனாளிதான்!' என்று குறைகூற மாட்டார்கள். தமக்குச் சொந்தமான ஆங்கிலக் கலைச் செல்வத்துக்குப் புறம்பே போய் வெளிப்படையாக இரவல் வாங்கி இருக்கிறார் ஷேக்ஸ்பியர்.

பேரண்டத்திலுள்ள எல்லா விஷயங்களையும் அறிந்து அனுபவிக்கத்தக்கது மனிதப் பண்பு. உயிர்த் தத்துவத்தோடு விழிப்பாக இருக்கும்போது, எந்தத் துறையிலும் இறங்க தனக்குப் பாத்தியதை உண்டு என்று வாதாடுகிறது அந்தப் பண்பு."

ரவீந்திரநாத் தாகூர் சொல்வது உண்மையிலும் உண்மையே.

வட கோளத்திலிருந்து ஷாக்கில்டன் தென் கோடியைப் பார்க்கப் போகிறார். அப்படியே மாக்ஸ்முல்லர் நம்முடைய தேசத்திலுள்ள பண்பாடுகளைக் கண்டறிவதற்காக எவ்வளவோ முயல்கிறார். தமிழ்ப் பண்பாட்டுக்குள் இறங்கி முழுகிய ஜி.யு.போப், கால்டுவெல், வின்ஸ்லோ முதலிய ஆசிரியர்கள் என்ன! மேல்நாட்டுப் பண்பாடுகளை எல்லாம் அறிவதற்காகக் கச்சை கட்டிய ரவீந்திரர்தாம் என்ன! மனிதப் பண்பு எல்லாத் துறைகளிலும் இறங்கித் திளைக்க வாதாடுகிறது என்பதையே மேலே சொன்ன ஆசிரியர்களின் வாழ்க்கை நிரூபிக்கிறது அல்லவா?


II நீதிமன்ற நினைவுகள்



1965–ல்...



முதல் உலகத் தமிழ் மாநாடு, கோலாலம்பூர்,
பக்தவத்சலத்துடன்...



மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில்
இந்திரா காந்தியுடன்...

1. வினோத வழக்கு

எட்டு ஆண்டுகள் வழக்கறிஞனாகவும், 25 ஆண்டுகள் நீதிபதியாகவும் இருந்துவரும் எனக்கு 'நீதிமன்ற நினைவுகள்' என்றவுடன் எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருவது இயல்பு. ஆனால், அந்த நினைவுகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, சட்டத் துறையில் இல்லாதவர்களும் சுவைக்க கூடைய சில நிகழ்ச்சிகளை மாத்திரம் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

நீதிமன்றத்தில் சாட்சிக் கூண்டு என்று ஒன்று உண்டு. ஒய்யாரமான இடம் அது. சாட்சிகள் அதில் ஏறி நின்று கொண்டுதான் வாக்கு மூலம் கொடுக்க வேண்டும். அப்படி சாட்சியம் சொல்வதற்கு முன்னால், அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும். "நான் சொல்வது உண்மை. முழுக்க உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றும் சொல்ல மாட்டேன் இது சத்தியம்" என்பது பிரமாணம். இப்படிப் பிரமாணம் செய்த பிறகு, கலப்பற்ற உண்மையை எத்தனை பேர் சொல்கிறார்கள் என்பது ஆராய்ச்சி செய்ய வேண்டிய காரியம்.

கிராமங்களில் பஞ்சாயத்து விவகாரங்கள் நடக்கும். அங்கே யாராவது பொய் சொல்லிவிட்டால், தலைமைக்காரர், "அப்பா! பொய் சொல்வதற்கு இது நீதிமன்றமா? இல்லையே! ஆகையால் தயங்காமல் உண்மையைச் சொல்லிவிடு!" என்று கேட்பார்.

சிலருக்கு கோர்ட்டில் பிரமாணம் செய்வது ஒரு பொருளற்ற சடங்காகத் தோன்றுகிறது. பொய் சொல்லும் உரிமையைச் கொடுக்கிற சடங்காகக்கூட அதை அவர்கள் கருதிவிடுகிறார்கள். இந்தப் பொய்க் கடலை எல்லாம் நீத்தி உண்மையை நீதிபதி கண்டுபிடிப்பதற்குக் கடவுள்தான் துணை செய்ய முடியும்.

மனிதனுடைய இடது கைப் பெரு விரலுக்கு மதிப்பு ரூ. 5,000 என்பதை ஒரு வழக்கில் தெரிந்துகொள்ள முடிந்தது. கையொப்பம் போடத் தெரியாத தற்குறி ஒருவர், இடது கைப் பெரு விரல் ரேகையைப் புரட்டி ஒரு 'ப்ராமிசரி நோட்' எழுதிக் கொடுத்து ரூ. 5,000 கடன் வாங்கினார். கடன் வாங்கி 10 நாட்களுக்குப் பின் அந்த விரலில் ஒரு பிளவை வந்தது; அந்த வேதனையிலிருந்து ஆனந்தம் பிறந்தது அவருக்கு! அதை அறுத்து எறிந்துவிட்டால், கடன் கொடுத்தவரை 'மொங்கான்' வைக்கலாம் அல்லவா? உடனே, ஒரு டாக்டரிடம் சென்று, இடது கைப் பெரு விரலை அறுக்கும்படி செய்தார். டாக்டரை சரிக் கட்டி, பிராமிசரி நோட்டுக்கு முன் தேதியிலேயே அறுவை செய்ததாக ஆஸ்பத்திரியில் பதிவு செய்துகொண்டார்.

மூன்று ஆண்டுகள் கடன் கொடுத்தவருக்குப் பாய்ச்சல் காட்டிக் கொண்டே வந்தார். நோட்டு காலாவதியாகும் தருணம் கடன் கொடுத்தவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். பிரதிவாதியோ "நான் இந்த நோட்டை எழுதிக் கொடுக்கவும் இல்லை. வாதியிடம் கடன் வாங்கவும் இல்லை" என்று வாதாடினார். நோட்டைப் பார்த்தால் கட்டை விரல் ரேகை இருந்தது.

"இது என்னுடைய ரேகை அல்ல. நோட் எழுதுவதற்குப் பல நாள்களுக்கு முன், எனது இடது பெரு விரல் அறுக்கப்பட்டுவிட்டதே. நான் எப்படி ரேகையைப் புரட்டி இருக்க முடியும்?" என்று சத்தியம் செய்தார் பிரதிவாதி. அவருடைய கூற்றுக்குத் தாளம் போட்டார் அறுவை செய்த டாக்டர். இந்த அயோக்கியத் தனத்துக்கு முன்னால் நிற்க முடியாமல் ஓடிப் பதுங்கிக்கொண்டது சத்தியம்.

பணம் கொடுத்தவர் பணத்தை இழந்தார். பெரு விரலை முதலாகக் கொண்டு வாணிபம் செய்த புண்ணியவானுக்கு வழக்கில் வெற்றி கிடைத்தது. பொறுப்புள்ள ஒரு டாக்டரே

அக்கிரமத்தோடு குலாவத் தொடங்கிவிட்டால், மண்ணுலக நீதிபதிகள் உண்மையை எவ்வாறு கண்டுபிடிப்பது?

இரு தரப்பார்களின் கட்சிகளையும் மெய்ப்பிக்க வரும் சாட்சிகளின் எத்தனை எத்தனையோ தினுசுகள் உண்டு. அதை இனி பார்க்கலாம்.

உண்மை உள்ளவராக இருப்பார். இருந்தாலும் சொல் வன்மை இல்லாததால், பொய்யன்போலக் காட்சியளிப்பார்.

மெய்யுடை ஒருவன் சொல மாட்டாமையால்
பொய் போலும்மே பொய் போலும்மே

இதற்கு நேர்மாறாக, அண்டப் புளுகனாக இருப்பான். அவனுடைய வாய் வீச்சினால் சத்திய சீலன்போலக் காட்சி தருவான்.

பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால்
மெய் போலும்மே மெய் போலும்மே

வேறு சிலரிடத்தில் முக்கால்வாசி உண்மை இருக்கும். ஆனால், முக்கியமான அம்சத்தில் பொய் கலந்துவிடும். உண்மை எது, பொய் எது என்று இனம் கண்டுபிடிப்பதற்குள் நீதிபதிகள் படும் வேதனையை இப்படி அப்படி என்று சொல்லிவிட முடியாது. கேவலம் ஏட்டுப் படிப்பும், சட்ட ஞானமும் இருந்தால் மாத்திரம் உண்மை பிடிபட்டு விடாது. இறைவனுடைய அருட் துணையினால் மூன்றாவது கண்ணைத் திறந்து உண்மையைக் கண்டுபிடிக்கும் மாசறு காட்சி அவர்களுக்கு ஏற்பட வேண்டும். கூண்டில் சாட்சி ஏறியவுடனேயே அவருடைய நடை உடை பாவனைகள் மூலம் அவருடைய யோக்யதையையும், மனப் பாங்கையும், முழுத் தன்மையையுமே சரிவர மதிக்கத் தெரிய வேண்டும்.

கஞ்சி போட்ட வெள்ளைக் காலர்களும், இஸ்திரி போட்ட கறுப்புக் கோட்டுகளும் நிறைந்த நீதிமன்றத்தில் நுழைந்து, ஒய்யாரமாக நிற்கும் சாட்சிக் கூண்டில் ஏறி நின்றவுடனேயே எந்தத் துணிச்சலான சாட்சிக்கும் அச்சமும், கூச்சமும் ஏற்படுவது இயல்பு. இந்த அச்சத்தைப் பொய் சொல்வதால் ஏற்பட்ட அச்சம் என்று தீர்மானித்துவிடுவதும் தவறு.

போட்டி வழக்காடும் கட்சிக்காரர்கள் வெற்றியிலேயே கண்ணாக இருப்பார்கள். அறத்தைப்பற்றியும், நீதியைப்பற்றியும் நினைக்க அவர்களுக்கு நேரம் இருக்காது. ஆனால், அவர்களுக்காக வாதாடும் வழக்கறிஞர்கள் நீதியைத் துலக்குவதில் நீதிபதிகளுக்கு உதவியாக இருக்க வேண்டும். வழக்கு நடக்கும்போது முழு விழிப்போடு இருக்க வேண்டும். ஒரு சிலர் அஜாக்கிரதையாக உறங்கிவிடுவார்கள்.

உறக்கத்திலும் உணர்வோடு இருந்த ஒரு வழக்கறிஞரைப்பற்றி ஞாபகம் வருகிறது. வி.எம்.கலியாணசுந்தரம் பிள்ளை என்ற புகழ் பெற்ற வக்கீல் ஒருவர் இருந்தார். அவர் தன் வாக்குவாதத்தை முடித்துவிட்டு நாற்காலியில் அமர்ந்த உடனேயே தூங்கத் தொடங்கிவிடுவார். எதிர்க் கட்சி வக்கீல் அவருக்கு பதில் சொல்லிக் கொண்டு இருக்கும்போதுகூட அவர் அயர்ந்து தூங்குவார். ஆனால், காது மாத்திரம் எதிர் வாதம் செய்யும் வக்கீலைக் கேட்டுக்கொண்டு இருக்கும். எதிர்வாதம் முடிந்தவுடன் தூக்கத்தில் இருந்து விழித்து நின்று ஒவ்வோர் எதிர்வாதத்துக்கும் ஆணித்தரமாகப் பதில் சொல்வார்.

இந்த விந்தையைக் கண்ட நான், "தாங்கள் இதை எப்படிச் சாதிக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"தசாவதானம், சதாவதானம்போல இதுவும் ஒரு வகை அவதானம்" என்று சொன்னார்.

ஒரு சில நீதிபதிகள் வாக்குவாதத்தைத் தாங்க முடியாமல் ஒரு சில நிமிடங்கள் தூங்கிவிடுவார்கள்; பலத்த குறட்டைகூட விடுவார்கள். தூங்க வேண்டும் என்று நினைக்கும் வக்கீல்களையும், குறட்டை, விழிப்பு நிலையில் வைத்துவிடும். பல ஆண்டுகளுக்கு முன்னால் உயர்நீதிமன்ற வெள்ளைக்கார நீதிபதி ஒருவர், வழக்கறிஞர் நார்ட்டன் வாதாடிக்கொண்டு இருந்தபோது, குறட்டைவிட்டுக்கொண்டு இருந்தார். வழக்கறிஞரோ மிகவும் சாமர்த்தியசாலி; நீதிபதியை உறக்கத்தில் இருந்து எழுப்பவும் வேண்டும்; அதே சமயம் நீதிபதியை அவமதித்த குற்றத்துக்கு ஆளாகவும் கூடாது. இந்த இக்கட்டான நிலையில் நார்ட்டன் துரைக்கு ஒரு யுக்தி தோன்றியது.

நீதிமன்றத்தில் பங்கா இழுத்துக்கொண்டு இருந்த கிழவன், நீதிபதியைப்போலவே தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான். அவனைப் பார்த்து நார்ட்டன், "ஏன் அப்பா, இப்படிக் கோர்ட்டில் தூங்குவதற்கு ஹைகோர்ட் ஜட்ஜா நீ?" என்று ஒரு கூப்பாடு போட்டார்.

இந்தக் கூப்பாட்டால் பதறி எழுந்த நீதிபதி, நார்ட்டனைப் பார்த்து, "ஏன் இப்படிக் கூப்பாடு போடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"இல்லை பிரபு, இந்தப் பங்காக்காரன் அசந்து தூங்கிவிட்டான். 'கோர்ட்டில் தூங்குவதற்கு ஹைகோர்ட் ஜட்ஜா நீ?' என்று கேட்டேன். வேறொன்றுமில்லை."

இதைக் கேட்டுக்கொண்டு இருந்த எல்லாரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். அந்தச் சிரிப்பில் நீதிபதியும் மனதாரக்

கலந்துகொண்டார். சமயோசிதமாகப் பேசி நீதிபதிகளுடைய மனதைத் திசை திருப்பும் திறமை சில வழக்கறிஞர்களிடமே இருக்கிறது.

கண்டிப்பான ஒரு மாவட்டக் கலெக்டர் 40 ஆண்டுகளுக்கு முன் இருந்தார். அவரை நெருங்குவதற்கே எல்லாருக்கும் பயம். பெட்டி வண்டியில் ஒரு நாள் அவர் முகாம் போய்க்கொண்டு இருந்தார். அவரிடத்தில் மனு கொடுத்து உடனடியாக 144 தடை உத்தரவு வாங்க வேண்டி இருந்தது. சாம்பசிவ ஐயர் என்ற ஒரு வக்கீல் நண்பர், கலெக்டர் நடுக் காட்டில் போய்க்கொண்டு இருந்தபோது அவர் வண்டியை நிறுத்தி அவரிடம் மனுவை நீட்டினார். மகா கோபம் வந்துவிட்டது கலெக்டருக்கு.

"மனு கொடுப்பதற்குக் காலம், இடம் கிடையாதா? நீதிமன்றத்தில் வந்து கொடுக்க வேண்டிய மனுவை, நடுக் காட்டில் கொடுக்கிறீரே. இது மிகவும் தவறு. இதை வாங்க முடியாது" என்று சொல்லி கலெக்டர் சீறி விழுந்தார்.

வக்கீல் சாம்பசிவ ஐயரோ பழம் பெருச்சாளி. இந்தச் சலசலப்புக்கு அஞ்சியவர் அல்ல. துணிச்சலோடு , "கலெக்டர் துரை அவர்களே! நான் செய்த பெருங் குற்றத்தை மன்னிக்க வேண்டும். நீதிமன்றத்தில் இருக்கும்போது இந்த மனுவைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், தாங்கள் எந்த இடத்தில் இருந்தால் என்ன, அது நீதி மன்றம் ஆகிவிடுகிறது! எங்களுக்கு ராமன் இருக்கும் இடந்தானே அயோத்தி?" என்று ஒரு போடு போட்டார்.

கலெக்டர் துரைக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. கொடுத்த மனுவை மீண்டும் கையில் வாங்கி, கேட்ட உத்தரவை உடனே போட்டுக் கொடுத்துவிட்டார். இப்படியாக நீதிபதிகளுடைய உளப் பாங்கை அறிந்து அதற்குத் தக்கவாறு நெளிந்து கொடுக்கும் சில வக்கீல்களைப் பார்த்து அனுபவிக்கலாம்.

காலஞ் சென்ற நண்பர் பாஸ்கர தொண்டைமான் திருநெல்வேலியில் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தார். போட்ட வழக்கை போட்ட தேதியிலேயே எடுத்து விசாரணையை முடித்து விடுவார். அவரிடத்தில் வாய்தா வாங்குவது முடியாத காரியம். ஒரு கொலை வழக்கு அவர் நீதிமன்றத்தில் நடந்துகொண்டு இருந்தது. ராமானுஜம் என்ற காலஞ்சென்ற, பெயர் பெற்ற வழக்கறிஞர் அந்த வழக்கில் எதிரிகளுக்கு ஆஜரானார்.

"சாட்சியத்தை நன்றாகப் படிப்பதற்கு எனக்கு நேரம் இல்லாமல் போய்விட்டது. தயவுசெய்து வழக்கை ஒரு நாள் தள்ளிப்போட வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டார்.

நீதிபதியோ, "முடியவே முடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். நீதிபதி கம்ப ராமாயணத்தில் மிகவும் திளைத்தவர் என்று வக்கீலுக்குத் தெரியும். உடனே அவர், "முதல் நாள் போரில் தோற்று வெறுங் கையனாக நின்ற ராவணனை இரக்கத்தோடு பார்த்தான் ராமன், 'உனக்கு வாய்தா கிடையாது' என்று சொல்ல வில்லை,

...'இன்று போய்
நாளை வா'வென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்

என்று ஒரு கம்ப ராமாயண மேற்கோளை அவிழ்த்துவிட்டார் ராமானுஜம். உடனே, நீதிபதி பாஸ்கர தொண்டைமானின் மனம் இளகிவிட்டது. "கேட்ட வாய்தாவை கம்பனுக்காகக் கொடுக்கிறேன்" என்று சொல்லி வழக்கை ஒத்திப் போட்டுவிட்டார்.

நெடுங்காலத்துக்கு முன்னால் கடலூரில் ஒரு நீதிபதி இருந்தார். வழக்குகளைத் தள்ளுபடி செய்யும்போதெல்லாம் அவர் 'க்ஷவரம், க்ஷவரம்' என்று சொல்லிக்கொண்டே தள்ளுவார். இதைக் கேட்டுக் கொண்டு இருந்த வழக்காளர்களுக்கு வேதனை தாங்க முடிய வில்லை.

இந்த மனிதர் வழக்கைத்தான் தள்ளுகிறார், தொலைந்து போகட்டும். க்ஷவரம், க்ஷவரம் என்று வேறு சொல்லி நம்மை அவமானப்படுத்துகிறாரே என்று வருந்திக்கொண்டு இருந்தார்கள். க்ஷவரத்தைத் தொழிலாகக்கொண்டு இருந்த ஒரு நாவிதர், ஒரு நாள் அவர் கோர்ட்டில் வாதியாக வந்தார். அவருடைய வழக்கைத் தள்ளும்போது, "உம்முடைய கேஸ் க்ஷவரம்" என்று சொன்னார் நீதிபதி. நாவிதருக்கு வயிற்றெரிச்சல் தாங்க முடியவில்லை.

உடனே, "கோர்ட்டார் அவர்களே! தாங்கள் இப்படி க்ஷவரம் செய்யத் தொடங்கிய பிறகு எங்கள் தொழிலில் மண் விழுந்துவிட்டது" என்று சொன்னார். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் நீதிபதி க்ஷவரம் என்று சொல்வதை நிறுத்திவிட்டார்.

சில நீதிபதிகள் வழக்கறிஞர்களை வலியச் சண்டைக்கு இழுப்பார்கள். தான் சர்வஞன் என்று காட்டுவதில் அவர்களுக்கு ஆசை. அதோடு நிற்க மாட்டார்கள். தன் முன்னால் வந்து நிற்கும் ஆட்கள் எல்லாருமே அற்பர்கள் என்ற நினைப்பு. இந்த ரகத்தைச் சேர்ந்த ஒருவர் அயர்லாந்து நாட்டில் நீதிபதியாக இருந்தார். கர்ரன் (Curran) என்பது அவருடைய பெயர். ஈவு இரக்கம் இல்லாத சிடு மூஞ்சி. கட்சிக்காரர்களையும் வக்கீல்களையும் மட்டம் தட்டுவதே அவர் குறிக்கோள்.

அவருடைய கோர்ட்டுக்குப் பேர் பெற்ற வழக்கறிஞர் எர்ஸ்கின் வழக்காட வந்திருந்தார். விஷ நாக்கு படைத்தவர் எர்ஸ்கின். நாக்கினால் அவர் கொட்டினால், எதிரி பிழைப்பது மறு பிறவிதான். எர்ஸ்கின் தன் கட்சியை எடுத்துப் பேசத் தொடங்கியதும், நீதிபதி கர்ரன் அவரை எப்படி அவமானப்படுத்தலாம் என்று யோசனை பண்ணிக்கொண்டு இருந்தார். திடீரென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

தன் பக்கத்திலேயே ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போடச் சொல்லி, தன்னுடைய அருமை நாயை அதில் உட்கார வைத்து, அதோடு பேசுவதும் குலாவுவதுமாக இருந்தார். இந்த அலங் கோலத்தைப் பார்த்துக்கொண்டு இருந்த வக்கீல் எர்ஸ்கின் திடீரென்று தன்னுடைய பேச்சை நிறுத்தினார்.

இதைப் பார்த்த நீதிபதி, "ஏன் ஐயா, உங்கள் பேச்சை நிறுத்தினீர்கள்? நீங்கள் பாட்டுக்குத் தொடர்ந்து பேசுங்களேன்!" என்றார்.

"இல்லை, பிரபு! கோர்ட்டார்கள் கலந்து ஆலோசனை செய்யும் போது, நான் குறுக்கிடக் கூடாது அல்லவா?" என்றார் வழக்கறிஞர்! அவமானமடைந்த நீதிபதி பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தார். கர்ரனைப் போன்ற நீதிபதிகள், நல்லவேளையாக, நம் நாட்டில் மிக மிகக் குறைவு.

பல ஆண்டுகளுக்கு முன் வேம்பு ஐயர் என்று ஒரு நீதிபதி இருந்தார். அவர் மிக மிக நல்லவர். ஆனால், சில அசாதாரண குணங்கள் படைத்தவர். நம் நாட்டவர்களிடத்தில் அவருக்கு நம்பிக்கையே கிடையாது. எதற்கெடுத்தாலும், ஆங்கிலேயர்கள்தான் மக்கள் குலத்திலேயே சிறந்தவர்கள் என்று நம்பினார். நம்முடைய சங்கீதம் என்றால் அவருக்கு அறவே பிடிக்காது. எங்காவது நாகசுர இசை கேட்டால் காதைப் பொத்திக்கொள்வார். அந்த இசையைக் கேட்டால் அவருடைய நரம்புக்குள் ஓர் அதிர்ச்சி ஏற்படும்.

ஒரு நாள் அவர் கோர்ட்டில் ஒரு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. கோயில் தர்மகர்த்தா மேளக்காரரை வேலையை விட்டு விலக்கிவிட்டார். வேலையை விட்டு விலக்கியது தவறு என்று வழக்குப் போட்டார் மேளக்காரர். நாகஸ்வரம் வாசிக்கவே அவருக்குத் தெரியாது என்று வழக்காடினார் தர்மகர்த்தா.

நாகஸ்வரக்காரருக்கு வக்கீலாக இருந்தவர் கொஞ்சம் குறும்புக் காரர். நீதிபதிக்கு நாகஸ்வர இசை பிடிக்காது என்று தெரியும். தெரிந்திருந்தும் வேண்டுமென்றே தன் கட்சிக்காரரை நாயனம் வாசிக்கச் சொல்லிவிட்டார். நீதிபதியின் அனுமதி இல்லாமல்

மேளக் கச்சேரி தொடங்கிவிட்டது. வேம்பு ஐயருக்கு அன்று ஏற்பட்ட கோபத்துக்கும், எரிச்சலுக்கும் அளவேயில்லை. மேளக்காரருடைய வழக்கை உடனே தள்ளுபடி செய்தார். அதோடு நிற்காமல், மேளக்காரருடைய வக்கில் தன் கோர்ட் வாசலில் மறு முறையும் அடி வைக்காதபடி பார்த்துக் கொண்டார். இப்படி எல்லாம் கோணல்தனமாக நடந்துகொள்ளும் நீதிபதிகள் அபூர்வம்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் சர் விக்டர் காட்ஸ் என்று, ஒரு தலைமை நீதிபதி இருந்தார். இங்கிலீஷ்காரர். சிறந்த அறிஞர். அவருடைய நீதிமன்றத்தில் ஒரு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. அதை வெகு நேரம் கூர்ந்து கவனித்துவிட்டு அது தமிழில் எழுதப்பட்ட திர்ப்பு என்று முடிவுக்கு வந்தார். உடனே, தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவரை அழைத்து அதைப் படிக்கச் சொன்னார். மொழிபெயர்ப்பாளர் அதைப் பார்த்துவிட்டு "இது தமிழ் எழுத்தல்ல. தெலுங்கு எழுத்து" என்று தெரிவித்தார். உடனே தெலுங்கு மொழிபெயர்ப்பாளரை அழைத்து அதைப் படிக்கச் சொன்னார்கள். அவர் அதைப் படித்துவிட்டு "இது தெலுங்கு எழுத்து அல்ல. ஜஸ்டிஸ் 'ஒல்ட் ஃபீல்ட்'என்ற ஆங்கில நீதிபதியின் ஆங்கில எழுத்து" என்று சொன்னார். அது முதல் ஜஸ்டிஸ் ஒல்ட் ஃபீல்டின் லிபியைக் கண்டுபிடிப்பதற்கு என்று ஹைகோர்ட்டில் சிறப்புச் சம்பளம் கொடுத்து ஒரு தனி நிபுணரை நியமிக்க வேண்டி இருந்தது.

2. சத்திய சோதனை

சாட்சியின் வாக்குமூலத்தைக் கடைந்து உண்மையைத் திரட்டி எடுப்பதற்குக் குறுக்கு விசாரணை ஒரு சிறந்த கருவி. அந்தக் கருவியைத் திறமையோடு பயன்படுத்துவதற்கு கேவலம் ஏட்டு ஞானமும் சட்ட நுட்பமும் இருந்தால் மாத்திரம் போதாது. எந்தெந்தச் சந்தர்ப்பத்தில் மனித இதயம் என்னென்ன மாதிரி இயங்கும் என்பதை அறிந்திருக்க வேண்டும். முன்பின் தெரியாத சாட்சி, கூண்டில் ஏறியவுடனேயே அவருடைய நடை, உடை, முக பாவங்கள் மூலம் அவருடைய யோக்கியதையையும் மனப் பாங்கையும் முழுத் தன்மையையுமே கண மாத்திரத்தில் மதித்து, அவருடைய தனிப் பண்புக்கு ஏற்ற முறையில் அவரோடு ஊடாடும் வல்லமை வக்கீலுக்கு இருக்க வேண்டும்.

1. குறுக்கு விசாரணை செய்யும் வக்கீல் கூண்டில் இருக்கும் சாட்சியின் கண்களைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே இருக்க வேண்டும். வைத்த கண்கள் வைத்ததுபோல் இருக்க வேண்டும். விசாரணை முடியும் வரையில் எதிரியின் மனது நம் வசத்தில் இருக்க வேண்டும் என்றால், ஊடுருவிப் பாய்கிற கண்கள் மூலம் தான் அதைச் செய்ய முடியும். ஆகவேதான் பொய் சொல்கிற சாட்சிகள் வக்கீலை ஏறிட்டுப் பார்க்காமல் பராக்குப் பார்த்துக் கொண்டே பதில் சொல்வார்கள். அவர்களை மருட்டியும், வெருள வைத்தும், வக்கீல் முகத்தைப் பார்த்து பதில் சொல்லும்படி செய்ய வேண்டும். ஏனென்றால், அவர்களுடைய மனதில் இருப்பதை எல்லாம், கண்ணாடிபோல எடுத்துக்காட்டுவது அவர்களின் கண்கள்தான். உண்மை, பொய், கோபம், பொறாமை, வெறுப்பு முதலிய பாவங்களை காட்டிக் கொடுப்பதும் இவைதான். ரஸ்புடீன் முதலிய மந்திரவாதிகள் தங்களுடைய திருஷ்டி சக்தியினால் மன்னாதி மன்னர்களை எல்லாம் அடிமைப்படுத்தி இருக்கிறார்கள். ஆப்பிரிக்காவில் வாழும் ஒரு வகைப் பாம்பு தன்னுடைய கண்ணின் கவர்ச்சியால் வெகுதூரத்துக்கு அப்பால் உள்ள பறவைகளை மயக்கி இழுத்துப் புசித்துவிடுகிறது. பாஷையின் துணை இல்லாமல் மனதோடு மனது பேச வேண்டும் என்றால் விழியின் மூலம்தான் முடியும்.

2. சாட்சியின் மனதில் பதுங்கிக் கிடக்கும் ரகசியங்களை அவனுடைய குரலில் தவழும் ஸ்வர பேதங்களைக்கொண்டு அளவிடலாம். கண்ணுக்கு அடுத்தபடியாக, ஒருவனுடைய மனோ நிலையை வியாக்யானம் செய்வது அவனுடைய சாரீரமே. தன் குற்றத்தை மறைக்கும் படுதாவாக சாட்சி தன் குரலையே உபயோகிக்கிறான்.

3. காலஞ்சென்ற ராமானுஜம் போன்ற சிறந்த வழக்கறிஞர்கள் சாட்சியைப் பம்பரமாக ஆட்டி வைப்பார்கள். தங்களுக்குச் சாதகமாக என்ன பதில் வேண்டுமோ அதை எந்தச் சாட்சியையும் சொல்லும்படி வைத்துவிடுவார்கள். சாட்சியை வீணையாகவும் குறுக்கு விசாரணையை வீணையில் மேவும் விரலாகவும் வைத்து அவர்கள் வாசிக்கும்போது, அவர்கள் மனோ இஷ்டப்படி எல்லாம் இசைக் கருவி பேச ஆரம்பிக்கிறது. வீணையை மீட்டத் தெரியாதவர்கள் மீட்டினால் நரம்பு தெறித்து அவஸ்தைதான் மிஞ்சுகிறது.

அப்பாவியான சாட்சியைச் சாதுவாக விசாரணை செய்ய வேண்டும். தந்திரசாலியிடத்தில் ஜாக்கிரதையோடும், யோக்கியனிடத்தில் நம்பிக்கையோடும், பயங்கொள்ளியிடத்தில்

கருணையோடும், அயோக்கியனிடத்தில் கடுகடுப்போடும், பொய்யனிடத்தில் கோடையிடிபோலவும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். இப்படி விசாரணை நடத்தும்போது வக்கீல் தன்னுடைய கண்ணியத்தை மறந்துவிடாமல், தன்னுடைய திறமையை விளம்பரப்படுத்த வேண்டும் என்ற நினைப்பை அடக்கி, உண்மையைத் துலக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு நடந்துகொள்ள வேண்டும்.

சாட்சிகளில் பல ரகம் உண்டு. சாட்சிக்கு ஏற்றபடி விசாரணை முறையையும் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.

பொய் சாட்சி

ஒரு சாட்சியின் வாக்குமூலம் முதலில் இருந்து கடைசி வரையில் பொய்யாக இருப்பதில்லை. முக்கால்வாசி உண்மையாக இருக்கும். ஆனால், முக்கியமான அம்சத்தில் பொய் கலந்துவிடும். இப்பேர்ப் பட்ட சாட்சியை எப்படிக் குறுக்கு விசாரணை செய்வது? முதலில், சாட்சி பொய்யன்தானா என்பதை நிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டும். முழுங்கி, முழுங்கிப் பேசுகிற சாட்சியைப் பொய்யன் என்று யூகிக்கலாம். ஒருக்கால் இந்தத் தயக்கம் எல்லாம் பயத்தினால் உண்டானதாக இருக்கலாம். கஞ்சி போட்ட வெள்ளைக் காவலர்களும், இஸ்திரி போட்ட கறுப்புக் கோட்டுகளும் நிறைந்த நீதிமன்றத்தில் நுழைந்து, ஒய்யாரமான சாட்சிக் கூண்டில் ஏறி நின்று பலர் முன்னிலையில் பகிரங்கமாக வாக்குமூலம் கொடுப்பது என்றால், எவ்வளவு துணிச்சலான சாட்சிக்கும் அச்சமும் கூச்சமும் ஏற்படுவது இயல்பு. அவை நடுவே ஏற்படும் நடுக்கத்தைப் பொய் சொல்வதால் ஏற்பட்ட நடுக்கம் என்று தீர்மானித்துவிடக் கூடாது. தொடை நடுக்கம் அசட்டுத் தனத்தாலும் ஏற்படுவது உண்டு. ஒளியிழந்த கண்கள், குழறித் தடுமாறும் குரல், அந்தஸ்துக்கு ஏற்காத பாஷை - இவையே அசட்டுச் சாட்சியின் லட்சணங்களில் சில.

அனுபவசாலியான வக்கிலுக்குத்தான் சாட்சி அசடல்ல, பொய்யன் என்பது தெரியும். இந்த நிச்சயம் ஏற்பட்டவுடனே சாட்சியைப் பார்த்து, அவர் சொன்ன வாக்குமூலத்தைத் திருப்பிச் சொல்லும்படி கேட்க வேண்டும். அவர், கிளிப்பிள்ளையைப்போல, முன் சொன்ன கதையை முன் சொன்ன மாதிரியே வார்த்தை பிசகாமல் திரும்பவும் ஒப்பிப்பார். உடனே வாக்குமூலத்தில் இங்கொரு செங்கல்லும் அங்கொரு செங்கல்லுமாக உருவிவிட வேண்டும். கதையின் முடிவில் ஒரு கேள்வி கேட்டுப் பதம் பார்க்க வேண்டும். திடீரென்று தாவிக் குதித்துக் கதையின் முன் பாகத்தை மாறிப் பிடிக்க வேண்டும்.

இப்படி இரண்டொரு தடவை சாட்சியைப் புரட்டி எடுத்து விட்டால் பொய்யன் மனதே குழம்பிவிடும். கேள்வியைச் சரியாகப் பாராமல் உருப் போட்டவனுடைய குட்டு வெளியாகிவிடும். கேள்வி கேட்பவருடைய கற்பனையின் வேகத்துக்கு முன்னால், பதில் சொல்பவனுடைய கற்பனா வேகம் நிற்க முடியாமல் தத்தளித்துத் தடுமாறி, முரணுக்கு மேல் முரண் விளைந்துகொண்டே போகும். சாட்சியின் வேஷத்தைக் கலைத்துப் பொய்யன்தான் என்று நிலைநாட்டிவிடலாம்.

பொய் சாட்சி சொல்வதில் நீண்ட கால அனுபவம் உள்ளவர்களை மிகுந்த ஜாக்கிரதையோடு விழச் செய்ய வேண்டும். அவர்கள் சிந்தனை செய்து பதில் சொல்வதற்கு அவகாசமே கொடுக்காமல், கேள்விகளைச் சரமாரியாகப் பொழிய வேண்டும். மூச்சுவிட நேரங் கொடுத்துவிட்டாலோ பாய்ச்சல் காட்டி, உதறியோடிச் சமாளிக்கப் பார்ப்பார்கள்.

திமிர்பிடித்த சாட்சி

'நார்ட்டன் துரையைத் திணறச் செய்தவனல்லவா நான்!' என்று தோள் தட்டிக்கொண்டு வரும் சாட்சிகள் பலர் உண்டு. அவர்களுடைய பேச்சு முறை, தலையாட்டம் சர்வக்ஞன் என்ற நினைப்பு - எல்லாமே வக்கீலை ஒரு கை பார்த்துவிடுகிறேன் என்ற தோரணையில் இருக்கும். எந்தக் கேள்விகளுக்கும் அனாயாசமாக, தட்டுத் தடை இல்லாமல் பதில் சொல்வார்கள். குறுக்கு விசாரணை செய்யும்போது, வக்கீல் இவர்களிடம் விசேஷ மரியாதை காட்டி இவர்களைக் குளிப்பாட்ட வேண்டும். மண்டையில் அடித்து இருத்தி வைக்க முயற்சி செய்யாமல் அவர்களுடைய ஆர்வத்தைக் கிளப்பி உற்சாகமூட்டி அவர்கள் வாக்குமூலத்துக்கு உலை வைக்க வேண்டும்.

தொடை நடுங்கி சாட்சி

கோழைத்தனத்தினாலோ, பயத்தினாலோ நடுங்கிக்கொண்டே வாக்குமூலம் கொடுக்கும் சாட்சியை விசாரணை செய்வது மிகவும் கஷ்டம். அதற்கு எல்லையற்ற பொறுமை வேண்டும். எத்தனை தடவை திருப்பித் திருப்பிக் கேட்டாலும், பதில் லேசில் வராது. பதில் வர ஆரம்பித்தாலோ, இரண்டு மூன்றாக, அடுக்கடுக்காக வரும். பெரும்பாலும் முரண்பட்ட விடைகளாக வரும். ஒரே கேள்விக்கு, "ஆமாம்", "இல்லை" என்ற எதிர்மறையான பதில்களும், "எனக்குத் தெரியாது" அல்லது "எனக்கு ஞாபகமில்லை" என்ற உப்புப் பெறாத விடைகளுமே இந்த ரக சாட்சிகளிடம் எதிர் பார்க்கலாம்.

ஆகவே, இவர்களிடத்தில் வக்கீல் சுமுகமாகவும் பொறுமையோடும் நடந்துகொள்ள வேண்டும். பொய் சாட்சிகளைச் சுண்ணாம்புக் காளவாயில் வைத்து நீர்த்துப்போகச் செய்கிற மாதிரி, இந்தக் கோழைகளை முரட்டுத்தனமாக நடத்தக் கூடாது. இடக்குப் பண்ணுகிற குதிரையை எப்படித் தட்டிக்கொடுத்து 'அம்மா, அரசே' என்று சொல்லித் தன் வசப்படுத்துகிறோமோ, அப்படியே இந்தக் கோழைகளிடம் நடந்துகொள்ள வேண்டும். தொடை நடுங்கிகளிடத்தில் நீதிபதிகளுக்குத் தன்னை அறியாமலேயே அனுதாபம் ஏற்படுவது உண்டு. அவர்களைக் கொடூரமாக குறுக்கு விசாரணை செய்தால், நீதிபதியின் மனது வக்கீலுக்கு விரோதமாக வேலைசெய்ய ஆரம்பித்துவிடும்.

ஆஷாடபூதி சாட்சி

ஆஷாடபூதிகளைக் குறுக்கு விசாரணை செய்வது அவ்வளவு கஷ்டம் அல்ல. அவர்களுடைய நடிப்பே அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடும். அவர்கள் ஓரவஞ்சனை இல்லாமல், 'நீதியென்னும் நெடுங்குன்றேறி நின்று'தான் எப்போதுமே வாக்குமூலம் கொடுப்பார்கள். உண்மையைத் துலக்க வேண்டுமே என்ற ஏக்கத்தில்தான் அவர்கள் கோர்ட்டுக்கு வந்து இருக்கிறார்கள்; விருப்பு வெறுப்பில்லாதவர்கள்; வழக்கில் அவர்களுக்கு இம்மி அளவுகூட அக்கறை கிடையாது. பற்றற்ற நிலையில் சாஸ்வதமாக நிற்பவர்கள். அவர்களுடைய பஞ்சாயத்துத் தீர்ப்பை வாதி மாத்திரம் கேட்டிருந்தால் இந்த வழக்கு விசாரணைக்கு வந்திருக்குமா? இவ்வளவு கண்ணியமும் சத்தியமும் நிறைந்த ஆசாமிகளைக் குறுக்கு விசாரணை செய்வதே பாவம்தான்.

இருந்தாலும் இவர்கள் போடுகிறதெல்லாம் வேஷம்தான் என்று காட்ட வேண்டிய பொறுப்பு வக்கீலுக்கு இருக்கிறதல்லவா? ஆஷாடபூதியுடைய சாயம் வெகு சீக்கிரத்திலேயே வெளுத்து விடும். அவனுக்குத் தன்னுடைய யோக்கியதையில் அபார நம்பிக்கை. பொய்யைச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் எல்லாம் காலைத் தேய்க்க ஆரம்பிப்பான். சுவரோ நெடுஞ் சுவர். அதைத் தாண்டி மண்டையை உடைத்துக்கொள்வதைக் காட்டிலும், ஓடித் தப்பித்துக்கொள்ளப் பக்கத்தில் ஏதாவது வழி இருக்கிறதா என்று சுற்றும் முற்றும் பார்ப்பான். உண்மையை முழுக்க முழுக்க ஒப்புக்கொள்ளாவிட்டாலும், கொஞ்சம் கொஞ்சமாக ஒப்புக் கொண்டே வந்து, தான் சத்திய சீலன் என்பதைக் காட்ட முயற்சி செய்வான்.

போலீஸ் சாட்சி

கிரிமினல் வழக்குகளில் இவர்களுடைய சாட்சியத்துக்கு மதிப்பு அதிகம். இவர்களை மிதமிஞ்சி விசாரணை செய்வது அபாய கரமானது. சாட்சிக் கூண்டிலேயே பிறந்து, வளர்ந்தவர்கள் இவர்கள். பெரிய பெரிய வக்கீல்களால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, அடிபட்டுத் தேறியவர்கள். இன்ன கேள்விக்கு இன்ன பதில்தான் என்று திட்டம் வகுத்து வைத்திருப்பவர்கள். வக்கீல் எங்கே அழைத்துக்கொண்டு செல்கிறார் என்பதை வக்கீலுக்கு முன்னால் அவர்கள் தெரிந்துகொள்வார்கள். கேட்டுக் கேட்டுப் புளித்த கேள்விகளுக்கு அவர்கள் மசியப்போவதில்லை.

மாமூல் கேள்விகளை அவர்களிடம் கேட்காமல், புது முறையில் அவர்களை விசாரிக்க வேண்டும். அவர்களுக்குப் பயிற்சி எவ்வளவு இருந்தபோதிலும், மிகக் குறுகிய பாதையில் ஏற்பட்ட பயிற்சிதான். பாதையைவிட்டுக் கொஞ்சம் விலகிவிட்டாலோ அவர்கள் பாடு அதோ கதிதான். ஒரு கேள்விக்கும் அடுத்த கேள்விக்கும் உள்ள தொடர்பை அவர்கள் கண்டுபிடிக்காத முறையில் குறுக்கு விசாரணையை நடத்த வேண்டும். முக்கியமில்லாத கேள்வியை மிக முக்கியமானதுபோலக் கேட்க வேண்டும். உடனே, போலீஸ் சாட்சி சிந்தனையில் ஆழ்ந்துவிடுவார். ‘இந்தக் கேள்வியின் நோக்கம் என்ன? நாம் சொல்லப் போகும் பதில் வழக்கை எப்படி பாதிக்கும்?’ என்றெல்லாம் ஆராய்ச்சி செய்ய ஆரம்பிப்பார். இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது திடீரென்று குறுக்கிட்டு, ஒரு முக்கியமான கேள்வியைப் போட வேண்டும்; இந்த நிலையில் அனேகமாக நமக்குச் சாதகமான பதில் கிடைத்தும் விடும். இன்னொரு விஷயம், போலீஸ்காரர்களுடைய யோக்கியதையைப் பழிக்கும் கேள்விகளை யோசனை இல்லாமல் கேட்பது தவறு. கூண்டில் நிற்கும் எதிரி பரம யோக்கியனாக இருக்கலாம். ஆனால், போலீஸ்காரர்களுடைய யோக்கியதைக்கு முன்னால் அவன் ஒரு நாளும் நிற்க முடியாது.

நிபுணர்கள்

டாக்டர்கள், இன்ஜினீயர்கள் போன்ற நிபுணர்களைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு முன்னால் வக்கீல் அவர்களுடைய துறையில் நன்றாக ஆராய்ச்சி செய்திருக்க வேண்டும். அனுபவம் இல்லாத சில வக்கீல்கள் ஆழம் தெரியாமல் மருத்துவத் துறையில் இறங்கிக் குறுக்கு விசாரணை செய்து அவஸ்தைப்படுவது உண்டு. அனாவசியமான கேள்விகளைக் கேட்பதால், சாட்சிக்குத் தன்னுடைய அபிப்பிராயத்தைப் பலமாகவும், அழுத்தமாகவும் நிலைநாட்டுவதற்கு வாகான வாய்ப்பு கிடைத்துவிடுகிறது. ஆனால்,

வழக்கின் கதி முழுவதுமே, நிபுணரின் வாக்குமூலத்தைப் பொறுத்திருந்தால், அவருடைய அபிப்பிராயம் தவறு என்பதை அதிகாரபூர்வமாக ஸ்தாபிக்கத்தான் வேண்டும்.

நிபுணர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சாட்சிகள் அர்த்தமாகாத பரிபாஷையில் பேசி, அபரிமிதமான கைவரிசையைக் காட்டித் தங்கள் புலமையை நீதிபதி ஒப்புக்கொள்ள வேண்டுமே என்று பல உபாயங்களைக் கையாள்வார்கள். அவர்களுடைய வார்த்தைப் படாடோபத்தைத் துவம்சம் செய்து, விஷயத்தைத் தெளிவாக பாமர பாஷையில் சொல்லும்படி செய்து, வாக்குமூலத்தின் முக்கிய அம்சங்களை ஒரு கலக்குக் கலக்கி வெற்றிபெறுகிற சில வக்கீல்களும் உண்டு.

ஒரு ஜமீன்தாரைக் கொலை செய்வதற்காக எதிரிகள் வெடிகுண்டு தயார் செய்ததாகவும், செய்துகொண்டு இருக்கும்போதே குண்டு வெடித்து அவர்கள் உடம்பிலேயே காயம் ஏற்பட்டதாகவும் ஒரு வழக்கு நடந்தது. உடம்பைப் பரிசோதனை செய்த டாக்டர், காயங்கள் வெடிகுண்டால்தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று சாதித்தார். வழக்கின் முடிவு முழுவதுமே டாக்டரின் அபிப்பிராயத்தைப் பொறுத்து இருந்தது. குறுக்கு விசாரணை செய்த வக்கில் இதை நன்றாக உணர்ந்தவர்.

விசாரணை ஆரம்பிக்கும்போதே, தான் ரசாயன சாஸ்திரத்தில் பட்டம் பெற்றவர் என்று டாக்டரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். இதைக் கேட்டதுமே டாக்டருக்கு நாடி விழுந்து விட்டது. வெடிகுண்டு உற்பத்தி முறையைப்பற்றியும், ரசாயன நுட்பங்களைப்பற்றியும் வக்கில் கேள்விக்கு மேல் கேள்வி போட்டு, டாக்டருடைய பயத்தை அதிகரிக்கச் செய்தார். கீழ்க்காணும்படி குறுக்கு விசாரணை நடந்தது.

வக்கீல்: குண்டு வெடிப்பால் ஏற்பட்ட காயத்தை இதற்கு முன் எப்போதாவது உங்கள் அனுபவத்தில் கண்டதுண்டா?

டாக்டர்: இல்லை.

வக்கீல்: எதிரியின் காயங்கள் வெடிகுண்டால் ஏற்பட்டவை என்று எப்படிக் கண்டீர்கள்?

டாக்டர்: ஒவ்வொரு காயத்தின் விளிம்பும் தீய்ந்து கரிந்துபோய் இருந்தது. வெடித்த சில்லுகள்தான் உடம்பின் தோலைத் தாக்கி எரித்திருக்க வேண்டும்.

வக்கீல்: 'கார்பாலிக்' புளிநீரை (acid) உடம்பின் மேல் தேய்த்தால், தோலைப் புண்படுத்திக் கரித்துவிடும் அல்லவா?

டாக்டர்: ஆம்.

வக்கீல்: 'இருட்டறையில் தைல புட்டியை எடுக்கப்போன என் கட்சிக்காரர், கை தவறுதலாக கார்பாலிக் ஆசிட் புட்டியை எடுத்துக் கவிழ்த்து உடம்பில் தேய்த்துக்கொண்டார். அதனால்தான் இந்தக் காயங்கள் ஏற்பட்டன' என்று நான் சொல்கிறேன். அதை நீங்கள் மறுக்க முடியுமா?

டாக்டர்: முடியாது.

மேற்கண்ட குறுக்கு விசாரணையின் மூலம் நிபுணரின் அபிப்பிராயம் முழுவதுமே தீய்ந்து கரிந்துபோய்விட்டது. கூண்டில் நின்ற கைதிக்கு விடுதலை கிடைத்தது. ஆகவே, நிபுணர்களுடைய அபிப்பிராயங்களையும், பம்மாத்துகளையும் கண்டு பயந்துவிடாமல், வக்கீல்கள் நுட்பமான விஞ்ஞான ஆராய்ச்சியோடு விசாரணை நடத்தினால் பயன் இல்லாமல் போகாது.

பெண்கள்

பொதுப்படையாகப் பார்க்கும்போது, கள்ளங் கபடு இல்லாமலும், இயல்பாகவும் சாட்சியம் சொல்வதில் ஆண்களைப் பெண்கள் வென்றுவிடுவார்கள். உணர்ச்சி வெறி பிடிக்காமல் இருக்கும் வரை, அவர்களிடம் உண்மையை எதிர்பார்க்கலாம். ஆனால், புருஷனிடத்தில் அல்லது பெற்ற பிள்ளையிடத்தில் உள்ள வாஞ்சையாலோ அல்லது எதிரியிடத்தில் இருக்கும் வெறுப்பாலோ, சாட்சியம் சொல்ல வந்துவிட்டால், பெண்கள் வாக்குமூலத்தில் ஒரு வார்த்தையைக்கூட நம்ப முடியாது. வெறுப்பு காரணமாகத் தன் சொந்தத் தாயைக் கொன்று எதிரிதான் கொலை செய்தான் என்று பொய்க் குற்றம் சாட்டுகிற பெண்களும் உண்டு.

பெண் சாட்சிகளை விசாரிக்கும்போது அவர்களைப் புகழ்ந்து, உபசாரமாகவும், மரியாதையாகவும் பேசினால், கூடியவரையில் அனுகூலமான பதில்கள் கிடைக்கும். சிறப்பாக, லேடி டாக்டர்களைக் குறுக்கு விசாரணை செய்கிற வக்கீல்கள் மேற்கண்ட உண்மையை அறிந்து அனுபவித்திருப்பார்கள்.

ஆகவே, குறுக்கு விசாரணை என்பது மனோதத்துவ ஆராய்ச்சியை அடிப்படையாகக்கொண்டது என்றும், ஏட்டுப் படிப்பினால் பெறக்கூடியது அல்ல என்றும், மனித இதயத்தின் ஆழத்தையும், உயரத்தையும் எட்டிப் பிடிக்கும் கற்பனை வாய்ந்தவர்களுக்கே இது கைகூடும் என்றும் தெரிந்துகொண்டோம். சத்திய சோதனையில் ஈடுபடுகிற நீதிமன்றத்தில், குறுக்கு விசாரணையைப்போல இன்றியமையாத கருவி வேறொன்றுமே இல்லை.

3. எழுத்தும் தொழிலும்

மூலைக்கு மூலை சிதறிக் கிடக்கிறது வாழ்க்கை. பொருளற்றது போன்ற ஒரு நிகழ்ச்சி இன்று நடக்கிறது. அதன் முழுப் பொருளை உணர்வதற்கு நாற்பது ஆண்டுகள் காத்துக் கிடக்க வேண்டி இருக்கிறது. இங்கொன்றும், அங்கொன்றுமாகச் சிதறுண்டு கிடக்கும் வாழ்க்கைத் துண்டுகளைப் பொறுக்கி இணைத்துப் பார்க்கும்போதுதான் வாழ்க்கையின் உட்பொருள் என்ன, நோக்கம் என்ன என்று அறிய முடிகிறது.

இந்த நோக்கத்தைப் புலப்படுத்துவது எழுத்தாளர் பொறுப்பு. மறைந்து கிடைக்கும் காரண காரியத் தொடர்புகளை எடுத்துக் காட்டுவது அவர்களுடைய தொழில்; வாழ்க்கை என்ற அரிய பூம் பட்டாடையை விதி எவ்வாறு அதிசயமாக நெசவு செய்கிறது என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டியது எழுத்தாளர் கடமை.

ஒரு நாள் ரயில் பிரயாணம் போய்க்கொண்டு இருந்தபோது ஒரு கவிஞரின் கையில் அகப்பட்டு அல்லல்பட்டேன். கத்தை கத்தையாக அவர் எழுதி வைத்திருந்த கவிதைகளை எல்லாம் என் தலையில் கொட்டி, “உங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டும்” என்று கேட்டார். செய்யுட்கள் எல்லாமே காதலைப்பற்றியதாக இருந்தன. அவற்றில் உணர்ச்சியோ, சுவையோ ஒரு துளிகூட இல்லை.

“ஐயா எப்போதாவது நீங்கள் காதலுக்கு ஆட்பட்டது உண்டா?” என்று கேட்டேன்.

“இல்லை. ஆனால், நான் கல்யாணமானவன், மனைவியிடத்தில் அன்பு காட்டுகிறவன்” என்றார்.

இதைக் கேட்டுக்கொண்டு இருந்தார் பக்கத்தில் இருந்த ஓர் உண்மைக் கவிஞர்; காதல் துறையில் முங்கி, மூழ்கியவர். இதைக் கேட்டதும் அவருக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

“‘பாயசம் சாப்பிட்டிருக்கிறீரா?’ என்று கேட்டால், ‘பழஞ் சோறு சாப்பிட்டிருக்கிறேன்’ என்று பதில் சொல்கிறீரே ஐயா” என்று ஒரு போடு போட்டார். காதல் ‘கவிஞருக்கு’ விஷயம் ஒன்றுமே புரியவில்லை.

“உங்கள் அனுபவத்துக்கு எட்டிய பொருட்களைப்பற்றியே எழுதுங்கள். அப்படி எழுதினால்தான், உங்கள் எழுத்தில் தெளிவும், தெம்பும், உணர்ச்சியும் இருக்கும்!” என்றேன்.

எழுத்துக்கு ஊட்டம் கொடுப்பது அனுபவம்தான். ‘செம்மீன்’ என்ற உயர்ந்த மலையாள நாவலை எழுதி இருக்கிறார் தகழி

சிவசங்கர பிள்ளை. செம்படவர் வாழ்க்கையை மையமாகக் கொண்டு எழுதிய நாவல். பல ஆண்டுகளாகச் செம்படவர்களோடு பழகியவர் ஆசிரியர். சுறா மீன்களோடு புரண்டு, புயற் காற்றில் தோணிகளோடு அமிழ்ந்து, கடல் கன்னியோடு குலாவியவர். ஆகவேதான், அவருடைய நாவலில் சுவானுபவத்தின் அதிகார முத்திரையைக் காண்கிறோம். கருவாட்டுச் சிப்பமும், உப்பங் காற்றும் நாவல் முழுவதும் கலை மணத்தை வீசுகின்றன. எழுத்துக்கு ஊட்டம் கொடுக்க விரும்புகிறவர்கள், தகழியைப் போல், அனுபவத்தை நாட வேண்டும்; வெறுங் கையால் முழம் போடக் கூடாது.

மனிதப் போக்கின் விசித்திரத்தை அறிய விரும்பும் எழுத்தாளர்கள், ஊர் ஊராக அலைந்து திரிய வேண்டாம். கொஞ்ச காலம் ஒரு நீதிமன்றத்தில் நடக்கும் வழக்குகளை கவனித்தால் போதும்; மனித நாடகத்தின் பல மட்டங்களையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்து அனுபவித்துவிடலாம். குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் முண்டு முடிச்சுக்கள், மனிதனுடைய போலி டம்பம், வறுமைக் கொடுமைகள், செல்வந்தர்களின் வஞ்சகம், காதலர்களின் நிறைவேறா கனவுகள், பொருந்தா திருமணங்கள் பொல்லாத விளைவுகள், கயமை, சோகம், ஹாஸ்யம், கருணை - இவை எல்லாவற்றையும் பற்றற்ற நிலையிருந்து பார்த்து நிதானமும், பக்குவமும் அடைவதற்கு ஏற்ற இடம் நீதிமன்றம்.

இந்த மர்மத்தை நன்றாக உணர்ந்தவர் ஆசிரியர் 'கல்கி'. அவர் என்னைச் சந்திக்கும்போதெல்லாம், "ஏதாவது ஒன்றைப்பற்றி எனக்குச் சொல்ல வேண்டும்" என்று அடிக்கடி கேட்பார். ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைக் கேட்டவுடனேயே அவருடைய கற்பனை இயங்கத் தொடங்கிவிடும். அற்புதச் சிறு கதை ஒன்று அவர் உள்ளத்தில் கருத்தரித்து, உருவாகிவிடும். அடுத்த கல்கி இதழில், நீதிமன்ற நிகழ்ச்சி கலை உருவம் பெற்று வெளிவந்து விடும்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஜில்லா முன்சீப்பாக இருந்தபோது நடந்த ஒரு வழக்கு. இரண்டு கிராமங்களுக்கு இடையில் மாரியம்மன் கோயில் ஒன்று இருந்தது. எந்தக் கிராமத்தாருக்கு கோயில் பாத்தியப்பட்டது என்பதுதான் தாவா. சென்னையில் இருந்து பெரிய வழக்கறிஞர்கள் வந்து வழக்கை நடத்தினார்கள். கோர்ட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி விட்டார்கள். வாதி வக்கீலுக்குப் பின் ஒரு கிராமமே உட்கார்ந்து இருந்தது. பிரதிவாதி வக்கீலுக்குப் பின்னும் ஏராளமான மக்கள். சாட்சிகளை விசாரிக்க விசாரிக்க போட்டி முறுக்கேறிக் கொண்டே போனது.

வாதி தரப்பில் நாலாவது சாட்சி வாக்குமூலம் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். திடீரென்று பிரதிவாதி வக்கீலுக்குப் பின் உட்கார்ந்து கொண்டு இருந்த ஓர் ஆசாமி எழுந்து பரபரப்புடன் எதிர்க் கட்சி வக்கீலுக்குப் பின்னால் இருந்த ஓர் ஆளைச் செந்தூக்காகத் தூக்கிக் கொண்டு போய், தன் வக்கில் பக்கத்தில் உட்கார வைத்தார். கோர்ட்டில் ஒரே சலசலப்பு.

வாதி வக்கில் எழுந்து, "இவருடைய செயல் கண்டிக்கத்தக்கது. என் சாட்சிகளை பயமுறுத்துவதற்காகவே, பிரதிவாதி இப்படி பலவந்தம் செய்கிறார். கோர்ட்டைவிட்டே இந்த அக்கிரமக்காரரை, கோர்ட்டார் வெளியேற்ற வேண்டும்!" என்று வாதாடினார்.

இந்த வாதத்தை ஏற்றுக்கொண்டு ஒழுங்கீனமாக நடந்தவரை கோர்ட்டுக்கு ஒரு பர்லாங்க் தூரத்துக்கு அப்பால் கொண்டு போய் விட்டு வர வேண்டும் என்று கோர்ட் வில்லைச் சேவகருக்கு உத்தரவு போட்டேன்.

உத்தரவை நிறைவேற்றிவிட்டுச் சேவகர்கள் திரும்பி வந்தார்கள். கால் மணி நேரம் விசாரணை தொடர்ந்து நடந்தது. சாட்சி சொல்லும் வாக்குமூலத்தை நான் எழுதிக்கொண்டே இருந்தேன். அப்போது வெளியே அகற்றப்பட்ட ஆசாமி கையில் கத்தி ஏந்திக் கொண்டு கோர்ட்டுக்குள் ஓடி வந்தார். சுமார் 40 வக்கீல்களைத் தாண்டி, கோர்ட் குமாஸ்தாவையும் தாண்டி, நீதிபதியின் ஆசனத்தைச் சுற்றி இருக்கும் கூண்டில் ஏறிப் பாய்ந்தார். கோர்ட்டில் உள்ளவர்கள் எல்லாரும் வெலவெலத்துப் போனார்கள். சேவகர்கள் செயலற்று நின்றார்கள்.

ஆபத்து நெருங்கிவிட்டதை உணர்ந்த நான் எழுந்து நின்று வாக்குமூலம் எழுதுவதற்காக வைத்திருந்த அட்டையால் ஓங்கி அவர் மண்டையில் ஒரு போடு போட்டேன். வெறியோடு பாய்ந்தவர் திடீரென்று கீழே விழுந்தார். விழுந்ததும் கோர்ட் சேவகர்கள் அவரைப் பிடித்துக்கொண்டார்கள். போலீஸார் வந்து அவரைக் கைது செய்து கோர்ட் அறை ஒன்றில் உட்கார்த்தி வைத்திருந்தார்கள்.

என்றும் நடந்திராத இந்த பயங்கரக் காட்சியைக் கண்ட வழக்கறிஞர்கள் கோர்ட்டை உடனே கலைத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள் ஆனால், நான் அதற்கு இணங்காமல், விசாரணையைத் தொடர்ந்து நடத்தி முடித்துவிட்டு, கைதியின் உள் நோக்கம் என்ன என்பதை அறிவதற்காக அவர் இருக்கும் இடத்துக்குப் போனேன்.

"எதற்காக நீர் இப்படி என்னை நோக்கிப் பாய்ந்தீர்?" என்று கேட்டேன்.

"இல்லிங்க. அந்த சாட்சி சொன்னது எல்லாம் பொய். அவன் சொன்ன பொய்யை நீங்கள் அந்தத் தாளில் எழுதினீங்க. தாளைப் பிடுங்கிக் கிழித்து எறியணும்னுதான் வந்தேனுங்க" என்று அவர் பதில் சொன்னார்.

ஜில்லா வைத்திய அதிகாரியிடம் போலீஸார் கைதியை அனுப்பினார்கள். பத்து நாள் அவர் மன நிலையை ஆராய்ந்துவிட்டு "இவருக்கு வைத்தியம் பிடித்துவிட்டது. உணர்ச்சி வெறியில், மனம் தடம் புரண்டுவிட்டது" என்று முடிவு கட்டி அவரை கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார் டாக்டர்.

"பலே, பலே, ரொம்ப ரசமாக இருக்கிறதே. இதை வைத்துக் கொண்டு ஒரு சிறு கதை எழுதலாம் போலிருக்கிறதே. பாருங்கள் அந்த ஆசாமிக்கு நீதிபதி மேல் கோபமில்லை. எதிரி சொல்லும் புளுகை நீதிபதி எழுதுகிறாரே, இதை விடக் கூடாது, கிழித்து எறிந்துவிட வேண்டும் என்றல்லவா அப்படிப் பாய்ந்தான்? இந்த நிகழ்ச்சியை மையமாக வைத்துக்கொண்டு ஒரு சிறு கதை எழுதலாம் போலிருக்கிறதே" என்றார் கல்கி.

கல்கியின் உள்ளத்தில் அந்த நிகழ்ச்சி அப்படி அழுத்தமாகப் பதிந்துவிட்டது. சில ஆண்டுகளுக்குப் பின் அவர் எழுதிய தலையங்கத்தில் இந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு ஹாஸ்ய விளக்கம் கொடுத்தார்.

ஏக காலத்தில் நான்கு மனைவிகளோடு குடித்தனம் செய்து கொண்டு இருந்த குடியானவர் ஒரு வழக்கில் சாட்சிக் கூண்டு ஏறினார். குறுக்கு விசாரணை செய்த வக்கீல், "ஒரு மனைவியோடு காலம் தள்ளுவதே கஷ்டமாச்சே. உமக்கு எதற்கு ஐயா நாலு மனைவிகள்?" என்று கேட்டார்.

"எங்க ஊரில் பண்ணையாளுக்குக் கூலி ஜாஸ்திங்க. நாலு பெண்டாட்டி இருந்தா, பண்ணையைக் கவலை இல்லாமல் பார்க்கலாமுங்க" என்று பதில் சொன்னார். இல்லறத்துக்கும் பொருளாதாரத்துக்கும் எவ்வளவு நெருக்கம் என்பதை அவருடைய வாக்குமூலம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஒரு நாள் என்னுடைய கோர்ட்டில் கொலை வழக்கு விசாரணை நடந்துகொண்டு இருந்தது. பல வழக்கறிஞர்கள் வட்ட மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். நீதிபதி இருக்கும் மேடைக்கும் வட்ட மேஜைக்கும் இடையே திடீரென்று வந்து நின்றார் ஒரு கிழவி. நெற்றியில் வெண்ணீறும், குங்குமப் பொட்டும், கழுத்தில் தாலியும், உடலில் பட்டுப் புடவையும் அணிந்திருந்த அந்தப் பெண், நீதிபதியைப் பார்த்து நின்றுகொண்டு, கை கூப்பிக்கொண்டே கோயில் சன்னதியில் சுற்றுவதுபோல தன்னையே மூன்று தரம்

சுற்றிக்கொண்டார். கோர்ட்டில் உள்ள முஸ்லிம் சேவகர்கள் அந்தக் கிழவியை வெளியே போகும்படி அதட்டிக்கொண்டு இருந்தார்கள். கிழவியோ அவர்களை லட்சியம் பண்ணவில்லை. பக்திப் பரவசத்தில் நின்றுகொண்டு இருந்தார்.

இந்த விநோதமான காட்சியைப் பார்த்த நான், "எதற்காக அம்மா, இப்படிக் கும்பிட்டுக்கொண்டு நிற்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"நான் இந்த ஊருக்குப் புதுசு. இந்தக் கோர்ட்டைப் பார்க்க வந்தேன். இதை வாங்கிக்கொள்ளுங்க" என்ற சொல்லி, தன் கையில் இருந்த வெற்றிலைப் பாக்கு, எலுமிச்சம்பழம் எல்லாவற்றையும் மேடை மீது வைத்தார்.

"சரி ஏற்றுக்கொண்டேன்" என்று சொன்ன பிறகுதான் அந்த அம்மாள் நீதிமன்றத்தைவிட்டு வெளியேறினார். இந்தக் காட்சியை பார்த்த என் உள்ளம் சிலிர்த்தது. 'சாமானிய மக்கள் நீதிமன்றத்தை இறைவன் இருக்கும் ஆலயமாக அல்லவா கருதுகிறார்கள்? அப்படியானால் நீதிபதிகள் எவ்வளவு உள்ளத் தூய்மையோடும், ஒழுக்கத்தோடும் விவேகத்தோடும் நீதியால் வந்த நெடுந் தரும நெறியில் ஒழுக வேண்டும்!' என்பதை உணர்ந்து அஞ்சினேன்.

ஆங்கிலக் கவிஞன் மில்டனுக்குத் திடீரென்று கண் கெட்டு விட்டது. கண் இழந்த சோகத்தைச் சொல்லில் தேக்கி கவிதையாக வடித்தார். "இறைவனே! நீ கொடுத்த கண்ணை நீயே திருப்பி வாங்கிக்கொண்டாய். அதனால் என்ன? மிஞ்சி இருக்கும் புலன்களைக் கொண்டு நான் உன்னை வழிபடப்போகிறேன். குருடன் என்ற காரணத்தால் என் பக்தியின் மாற்று குறைந்துவிடவா போகிறது? அரசனுக்கு எத்தனையோ வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். காடும் கடலும் தாண்டி, தொலைவில் உள்ள நாட்டில் அரசு தூதனாகப் பணி செய்கிறான் ஒருவன். இன்னொருவன் இருந்த இடத்திலேயே இருந்து, அரண்மனை வாசலில் நின்று வாயில் காப்போனாக பணி செய்கிறான். இரண்டுவிதமான சேவையையும் உகந்து ஏற்றுக்கொள்கிறான் அரசன். அதைப்போலவே எனது குருட்டுப் பணியையும் ஏற்றுக் வேண்டும் நீ" என்று இறைவனை நோக்கிப் பாடுகிறார் மில்ட்டன். பாடலின் கடைசி வரியில் அவர், "வாசலில் நின்று காத்துக் கிடப்பவனும் பணி செய்யத்தான் செய்கிறான்" என்றார். ஆங்கில இலக்கிய நயத்தை உணர்ந்தவர்கள் இந்த வரியைச் சொல்லிச் சொல்லி உருகுவார்கள்.

இப்படி உருகியவர்களுள் ஒருவர் லார்ட் பர்க்கென் ஹெட் என்ற ஆங்கிலப் பிரபு. அவர் அரசியல், இலக்கியம், சட்டம் என்ற மூன்று துறைகளிலும் புகழ் பெற்றவர்; இங்கிலாந்து உயர்நீதி

மன்றங்களில் புகழ்பெற்ற நீதிபதியாக இருந்தவர். மில்ட்டனுடைய பாடலை தன் தீர்ப்பில் எப்படி இழைக்கிறார் என்று பார்ப்போம்.

பர்க்கென்ஹெட் தலைமை தாங்கிய நீதிமன்றத்தில் ஒரு கொலை வழக்கு விசாரணைக்கு வந்தது. வீட்டினுள் புகுந்து ஒருவனைக் கொலை செய்துவிட்டான் குற்றவாளி. கொலை செய்யும்போது அவனுக்கு உதவியாகச் சென்றவன் வீட்டு வாசலில் நின்று கொண்டு ஒருவரும் வந்து கொலையைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டான்.கொலை முடிந்ததும் ஒன்றாக ஓடி மறைந்து கொண்டார்கள். சில நாட்களுக்குப் பின் இருவர் பேரிலும் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு விசாரணை நடந்தது. கொலை செய்தவனுக்கு மரண தண்டனை விதிப்பதுதான் சட்டம். ஆனால், கொலைக்கு உடந்தையாக இருந்தவனுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்ற கேள்வி பிறந்தது. இந்தக் கேள்விக்கு முதன் முதலாகப் பதில் சொன்னவர் நீதிபதி பர்க்கென்ஹெட். கொலைகாரனுக்கும், அவனுக்கு உடந்தையாக இருந்தவனுக்கும் ஒரேவிதமான தண்டனையைக் கொடுப்பதுதான் நியாயம் என்ற முடிவுக்கு அவர் வந்தார். அவருடைய தீர்ப்பின் கடைசி வாக்கியம் இலக்கியச் சுவை ததும்புவதாக, மில்ட்டனுடைய மொழியில் அமைந்திருக்கிறது (He also serves who stands and waits), 'வாசலில் நின்று, காத்துக் கிடப்பவனும் பணி செய்யத்தான் செய்கிறான்' என்று முடிகிறது தீர்ப்பு.

ஆலிவர் வென்டல் ஹோமஸ், லேர்னட் ஹேண்ட் முதலிய தலைசிறந்த அமெரிக்க நீதிபதிகளும் இவ்வாறே இலக்கியப் புலமை படைத்தவர்களாக இருந்தார்கள். இலக்கிய இன்பத்தில் தோயும்போது, குறுகிய மனம் விரிகிறது; மனித வாழ்க்கையை பரிவோடு பார்க்கும் திறமை பெருகுகிறது; தன்னை மறந்து மற்றவர்களுடைய இதயத்தில் புகுந்தது, அவர்களுடைய துன்பங்களையும், கோப தாபங்களையும் மனிதச் செயலுக்கு அடிப்படையாக இருக்கும் மூல காரணங்களையும் உணர்ந்து ஆராயும் வல்லமை வளர்கிறது.

எனவே, பர்க்கென்ஹெட்டும், வென்ட்ல் ஹோம்ஸூம், லேர்னட் ஹேண்டும் நீதித் துறையில் மாத்திரமல்ல. இலக்கியத் துறையிலும் சிறந்த வெற்றி கண்டார்கள். இலக்கியப் பயிற்சியால் பெற்ற பரிவும் கற்பனையும் நீதித் துறையில் அவர்களுக்கு ஊட்டம் கொடுத்தது. நீதிமன்றத்தில் அவர்கள் பெற்ற அனுபவம், அவர்களுடைய இலக்கிய எழுத்துக்கு வன்மையை ஊட்டியது. நீதி விளக்கு இலக்கியத்துக்கு உள் ஒளி கொடுத்ததைப்போல இலக்கிய விளக்கு நீதிக்கு ஒளி கொடுத்தது.

நீதியை நிலைநாட்டுவதற்காக, சட்டம் என்ற கருவியை மனிதன் கண்டுபிடித்தான். ஆனால், அந்தக் கருவியைப் பயன் படுத்துகிறவர்களுடைய இதயத்தில் பொறுமையும், அன்பும், கருணையும், நேர்மையும் இல்லை என்றால் நீதிக்குப் பதில் அநீதிதான் வளரும். விவாகரத்து வழக்குகளில் இந்த உண்மையைக் கண்கூடாகக் காணலாம்.

இல்லறமே நல்லறம் என்று நம் நாட்டில் அதை நெடுகிலும் போற்றி வளர்த்து வந்திருக்கிறோம். ஆனால். அந்தக் கோட்பாட்டை அழிப்பதற்கு என்றே பல சக்திகள் கச்சை கட்டிக்கொண்டு நின்கின்றன. தகுந்த காரணமே இல்லாமல் 'இல்லறப் பூட்டை உடைத்து விடுதலை கொடுக்க வேண்டும்' என்று மனைவிமார் கணவர்கள் பேரிலும், கணவர்கள் மனைவியர் பேரிலும் நாள் தோறும் வழக்குத் தொடரத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்காக வழக்கு நடத்தும் வழக்கறிஞர்களும், இல்லறத்தின் தூய்மையை மறந்து வறட்டுச் சட்டம் பேசி சண்டப் பிரசண்டம் செய்கிறார்கள். இந்த நிலைமையில் பொறுமையோடும், கருணையோடும், மனிதப் பிரச்னைகளைத் தீர்த்துவிட வேண்டிய பொறுப்பு நீதிமன்றங்களைச் சார்ந்தது.

ஓர் அச்சகத்தில் வேலையில் இருந்தான் கணவன். இரவெல்லாம் விழித்திருந்து அச்சுக் கோக்க வேண்டும். காலை ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்து பகல் எல்லாம் தூக்கத்தில் கழிப்பான். வீட்டிலிருக்கும் குழந்தைகளோ இரவு முழுவதும் உறங்கிவிட்டு பகல் எல்லாம் கொக்கரித்துக் கூத்தடிப்பார்கள். இந்த இரைச்சலைத் தாங்க முடியாமல் கணவன் மனைவியைப் பார்த்து "நீயும், உன் குழந்தைகளும் எங்கேயாவது தொலைந்து போங்கள்" என்று சொல்லி சலித்துக்கொண்டான். இதைக் கேட்ட மனைவிக்கு மனம் கசந்துவிட்டது. "நாளெல்லாம் இந்தக் குடும்பத்துக்கு உழைத்தும் எனக்கு கிடைக்கிற பரிசு இதுதான்" என்று சொல்லிவிட்டு குழந்தைகளோடு தாய் வீட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டாள்.

பிரிந்தவர்களைச் சேர்த்து வைக்க முயற்சி செய்வார் ஒருவரும் இல்லை. அண்டை வீட்டுக்காரர்களோ, இருவரையும் கிள்ளிவிட்டு வேடிக்கை பார்த்தார்கள். வீம்பு வளர்ந்தது. சண்டை பெருகிக் கொண்டே போயிற்று. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் தம்பதி இருவரும் ஏழு ஆண்டுகள் பிரிந்து இருந்தார்கள். கடைசியாக விவாகரத்து செய்ய வேண்டும் என்று கணவன் மேல் மனைவி வழக்குத் தொடர்ந்தாள். வழக்கு விசாரணைக்கு வந்ததும், மும்முரமான வாதப் பிரதிவாதங்கள் தொடங்கின. இந்த வழக்கை ராஜி செய்வது நலம் என்று தம்பதியிடம் சொன்னேன்.

"ஐயோ! இந்தப் பாவியோடு வாழமாட்டேன். என்னைக் கொலை செய்துவிடுவான்" என்றாள் மனைவி.

"இது பொம்பள இல்லிங்க; பிலிங்க (புலி)" என்றான் புருஷன்.

"இந்தப் புலியோடு ஒரு வாரம் வாழ்ந்து பாரும் ஐயா" என்று சொல்லிக் கட்டாயப்படுத்தி, இருவரையும் ஒரே வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு, வழக்கை ஒரு வாரம் தள்ளிப் போட்டேன். அடுத்த வாரம் வாதி, பிரதிவாதிகளைக் கூப்பிட்டதும் இருவரும் மணக் கோலத்தில் உல்லாசமாக வந்தார்கள்!

"நாங்கள் இனி மேல் ஒண்ணா இருக்கப் போறோம். இந்த வியாஜ்யத்தை மேலே நடத்த வேண்டாம்" என்று இருவரும் சேர்ந்து சொன்னார்கள். எப்படியோ காரணமில்லாமல் மனக் கசப்பு ஏற்பட்டது. ஆகவே, ஏழு ஆண்டுகள் பிரிந்திருந்தார்கள். எப்படியோ பிரிந்தவர்கள் கூடினார்கள். வாழ்க்கையில் அவர்களுக்கு இனிப்பு கூடிவிட்டது. இவ்வளவுக்கும் காரணமாக இருந்தது நீதிபதியின் கருணை.

மனிதப் புதிரைஅறிந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்களுக்கு நீதிமன்றம் ஓர் அரிய பயிற்சி சாலை. நீதிமன்றத்துக்குள் இருந்து வாழ்கையைப் பார்க்கும்போது எழுத்தாளர்களுக்கு ஒரு பெரிய வசதி கிடைக்கிறது. நாற்பது ஆண்டுகளாக நடந்த வரலாற்றை வடிகட்டி நான்கு நாட்களில் வழக்கறிஞர்கள் காட்டிவிடுகிறார்கள். வேண்டாத நிகழ்ச்சிகளை ஒதுக்கிவிட்டு, சாராம்சத்தை மாத்திரம் பாத்திரங்கள் மூலமும், சாட்சிகள் மூலமும் எடுத்து விளக்குகிறார்கள். அதன் பயனாக காரிய காரணத் தொடர்புகள் எளிதில் நமக்கு விளங்கிவிடுகின்றன. நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து பெறக்கூடிய அனுபவத்தை நான்கே நாட்களில் பெற்றுவிடுகிறோம்.

எழுத்துக்கும் நீதிமன்றத் தொழிலுக்கும் இருக்கும் உறவு அவ்வளவு நெருக்கமானது.

4. சாட்சிக் கூண்டு

ஆங்கிலேயருடைய ஆதிக்கம் பரவுவதற்கு முன்னால் நம் நாட்டு வழக்கு மன்றங்களில் சாட்சியக் கட்டுப்பாடு அதிகமாக இருந்ததாகத் தெரியவில்லை. ஆலமரத்தடியில் அல்லது அம்மன் கோயிலில் பஞ்சாயத்து நடக்கும். வாதி பிரதிவாதிகள் வழக்கு, எதிர் வழக்கு சொல்லி முடிப்பதற்கு முன் தர்க்கத்துக்குப் புறம்பான

பல தர்க்கங்களைக் கிளப்புவார்கள். பஞ்சாயத்தார்களும் சாவதானமாக நாள் கணக்கில் ஆற அமர இருந்து கேட்டு முடிவுக்கு வருவார்கள். ஒரு மாதத்தில் இத்தனை தீர்ப்புகளாவது சொல்லித் தீர்க்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாததால், பிரச்னைக்குப் புறம்பான பலவித விவகாரங்களையும் இழுத்துப் போட்டுக்கொண்டு கஷ்டப்பட்டு உண்மையை அறிந்து நீதி செலுத்துவதற்கு வசதிகள் இருந்தன.

அதோடு சாட்சி சொல்கிறவர்களும், நீதிபதிகளைப்போலவே உள்ளூர்க்காரர்கள். ஆகவே, ஊர்க் கூட்டத்தில் பொய் சொல்வதற்கு அஞ்சுவார்கள். வாக்கு நாணயம் இல்லாத பொய்யனுக்கு கிராம வாழ்க்கையில் எத்தனையோ இடைஞ்சல் ஏற்படுவது சகஜம். அப்படி இல்லாமல் 30 மைலுக்கு அப்பால் உள்ள நீதிமன்றத்தில், முன்பின் தெரியாத நீதிபதியின் முன்னிலையில் சாட்சிப் பெட்டி ஏறி பொய் சொல்வதால் அவ்வளவு தோஷம் ஏற்படாது. அதோடு குறுக்கு விசாரணை செய்கிற வக்கீலைப் பார்த்தவுடனேயே சாட்சியின் மனதில் விரோத பாவம் ஏற்பட்டுவிடுகிறது. தன்னைப் பொய்யனாக்குவதற்காகவே இவர் கேள்வி கேட்கிறார் என்ற நினைப்பு வந்தவுடனேயே, உண்மையை மறைக்க வேண்டும் என்ற முனைப்பும், தன் திறமையினால் வக்கீலை மடக்க வேண்டும் என்ற ஆத்திரமும் பிறக்கிறது. இந்த ஆத்திரத்தில் இருந்து பிறக்கிற சாட்சியம் உண்மைக்கு வெகு தூரத்தில்தான் நிற்கும்.

ஊர்க் கூட்டத்திலோ இந்த மன நிலை ஏற்படுவதில்லை. ஆகவே, குடி வழக்கில் பொய்யைச் சாதிப்பது கஷ்ட சாத்தியமான காரியம். மிஞ்சிப் போனால், பிரமாணம் கோருவது என்ற ஓர் அருமையான வழக்கம் இருக்கிறது. சுடலை மாடசாமி பீடத்தின் முன்னிருந்தோ, அல்லது மாரியாத்தாள் கோயிலிலோ, மஞ்சள் உடை உடுத்தி நின்று, கழுத்தில் அரளி மாலை அணிந்து, தான் சொல்வது உண்மை என்று சொல்லி எரிகிற கற்பூரத்தை அணைத்து விட வேண்டும். இது ரொம்பக் கடுமையான சோதனை. பொய்ப் பிரமாணம் ஒருவன் செய்துவிட்டால், தெய்வம் அவனை நின்று கேட்கும், ஏழேழு ஜன்மத்துக்கும் அவனுக்கு உய்வில்லை என்ற நம்பிக்கை நம்மவர்களிடையே ஊன்றி வளர்ந்திருக்கிறது. இந்த நிலைமையில் பிரமாணம் கோரியவுடனேயே உண்மை துலங்கி விடும்.

மேற்சொன்ன வசதிகள் எல்லாம் கிராமப் பஞ்சாயத்து முறையில் இருந்தபோதிலும், சமுதாயக் கட்டுப்பாடு நெகிழ்ச்சி அடைந்து வருகிற தற்காலத்தில், அந்த வசதிகளும் குறைந்து வருகின்றன. ஊர்க் காட்சிகள் பலத்து வருவதால், கட்டுப்பாடும் நாணயமும் குறைந்துவிட்டன. போட்டி மனப்பான்மை பெருகப்

பெருக, நீதிக்கும் சத்தியத்துக்கும் நாம் வைத்திருக்கும் மதிப்பு குறைந்துகொண்டே வருகிறது.

ஆகவே, இந்த நிலைமையில் கிராமப் பஞ்சாயத்து முறையைக் கைக்கொள்ள வேண்டும் என்ற கூச்சல் அர்த்தமற்றது. அபாயகர மானது. பஞ்சாயத்துக் கோர்ட்டார்கள் விசாரணை இல்லாமல் தீர்ப்புச் சொல்வதும், எதிரிகளை அடக்கும் எந்திரமாக பஞ் சாயத்துக் கோர்ட்டுகளை பாவித்து வருவதும், நாம் அறிந்ததே. ஓரவஞ்சனை இல்லாமல் நீதி பரிபாலனம் நடக்க வேண்டுமானால், அரசியலாரால் நிறுவப்பட்ட நீதிமன்றங்கள் மூலம்தான் முடியும் என்று ஏற்பட்டுவிட்டது.

நீதிபதிக்கு நுட்பமான சட்ட ஞானம் இருந்தால் மாத்திரம் போதாது. மனிதப் பண்பு, மக்கள் செயலுக்கு அடிப்படையாகும் உணர்ச்சி, நோக்கம் ஆகியவற்றைப்பற்றியும் இவற்றுக்கு இடையே இருக்கும் முரண்பாடு, காரண காரியத் தொடர்பு, நாடோடிப் பழக்க வழக்கம் ஆகியவற்றைப்பற்றியும் ஆழ்ந்த அனுபவ ஞானம் அத்தியாவசியம். வெயிலும், நிழலும்போல, மெய்யும் பொய்யும் மாறி மாறிக் கலந்து வருகிற வாழ்க்கையிருந்து பொய்யை விலக்கி மெய்யைக் கிரகிக்கும் புத்தி நுட்பமும் நீதிபதிக்கு இன்றியமையாதது.

இத்தனை அபூர்வ குணங்களும் ஒரு மனிதனிடத்தில் குடி கொண்டு இருப்பது அருமை. ஆனால், சட்ட திட்டங்களின் உதவியால், ஒரு நீதிபதி உண்மையை ஓரளவு கண்டுபிடிக்க முடிகிறது. சட்ட திட்டங்கள் ஒரு மனிதனால் இயற்றப்பட்டவை அல்ல. பல நூற்றாண்டுகளாக, ஆயிரக்கணக்கான வழக்குகளில் ஆங்கில நீதிபதிகள் எத்தனையோ பிரச்னைகளை, சரியாகவோ தப்பாகவோ ஆராய்ச்சி செய்து, தீர்ப்புகளை ஆராய்ச்சி செய்து, தங்கள் அனுபவத்தில் இருந்து பெற்ற உண்மைகளை அஸ்திரமாகக் கொண்டு தொகுக்கப்பட்டதே சாட்சியத்தைப்பற்றிய நமது சட்டம்.

‘சாட்சியத்தில் எதைத் தள்ளுவது? எதை ஒப்புக்கொள்வது? எதற்கு மதிப்புக் கொடுப்பது? எதை அலட்சியம் செய்வது?’ என்ற கேள்விகளுக்கு ரசமான விடைகளை நமது சட்டத்திலும், நீதிமன்றத் தீர்ப்புகளிலும் காணலாம். சட்ட ஞானம் இல்லாத சாமானிய மக்களும் உணரும் முறையில் சட்டப் பிரச்னைகளை ஆராய்ச்சி செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

கொலை வழக்கு நடப்பதாக வைத்துக்கொள்வோம். கூண்டில் நிற்கிற எதிரிதான் கொலை செய்தவன் என்று எப்படி ருசுப் படுத்துவது? கொலைக் குற்றத்தை நிலைநாட்டக் கூடிய சான்று

எப்படி இருக்க வேண்டும்? பஞ்சேந்திரியங்களின் மூலம் நேர்முகமாக அறிகிற சாட்சியமே சிரேஷ்டமானது.

ஆனால், கொலை நடந்தபோது நீதிபதி நேர்முகமாகப் பார்க்க வில்லை. ஆகவே, நேரில் பார்த்தாகச் சொல்லும் மற்றவர்களுடைய வாக்கு மூலத்தையே ஆதாரமாகக்கொண்டு நீதிபதி ஒரு முடிவுக்கு வர வேண்டும். சாட்சிகளுடைய வாக்குமூலம் உண்மையா, பொய்யா என்பதைக் குறுக்கு விசாரணை மூலம் சோதிக்க வேண்டும். பிரமாணத்தின் பேரில் சாட்சி, வாக்குமூலம் கொடுப்பதால் அவர் சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கலாம் என்று எதிர்பார்க்க இடமிருக்கிறது.

ஆனால், சாட்சியை நம்புவதற்கு முன்னால் மூன்று அம்சங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 1. கொலை நடந்த இடத்தில் சாட்சி இருந்திருக்கலாம். ஆனால், கவனிக்காமல் இருந்திருக்கலாம். சம்பவம் நடக்கும்போது அவர் கவனித்தாரா என்பதுதான் முக்கியம். 2. கவனித்ததை மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருக்கிறாரா? 3. கவனித்ததை ஞாபகப்படுத்தி, நடந்ததை அப்படியே வார்த்தைகள் மூலம் விவரிக்கிறாரா?

இந்த மூன்று அம்சங்களும் இருந்தால்தான் அவர் வாக்கு மூலத்துக்கு சாட்சியம் என்ற அந்தஸ்தைக் கொடுக்கலாம். இப்படிக் கொடுக்கப்பட்ட சாட்சியத்திலும் பல குறைபாடுகள் உண்டு. ஒரு மனிதன் கொடுக்கிற சாட்சியத்தின் துல்லியமும், தரமும் 1. வர்க்கம், 2. வயது, 3. பால், 4. சித்தப்பிரமை, 5. ஒழுக்கம், 6. பண்பு, 7. உணர்ச்சி, 8. அனுபவம் ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது.

வர்க்கம்

ஊர் ஊராகத் திரிந்து, நிலை இல்லாத வாழ்க்கை நடத்துகிற படிப்பில்லாத வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், நிலைத்த நாகரிகமும், படிப்பும் உடைய வர்க்கத்தாரைக் காட்டிலும், கவனிப்பு அதிகம் உடையவர்களாகவும், பஞ்சேந்திரியங்கள் மூலம் பெறக்கூடிய உணர்ச்சிகள் அழுத்தமாக உடையவராகவும் இருக்கிறார்கள். உதாரணமாக, நரிக்குறவர்களுக்கு காட்சி, ஒலி, வாசனை, ருசி, உணர்வு நம்மைக் காட்டிலும் அதிகம். அதோடு ஞாபக சக்தியும் அதிகம்.

ஆனால், உணர்ந்ததை பாஷை மூலம் சொல்கிற சக்தி அவர்களுக்கு நம்மைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறதா என்று தெரியவில்லை. உண்மை பேசுவதில், வர்க்கத்துக்கு வர்க்கம் எவ்வளவோ பேதம் இருக்கிறது. 19-ம் நூற்றாண்டுத் தீர்ப்புகளைப் பார்வையிட்டால் ப்ரிவி கௌன்ஸில் அபிப்பிராயத்தில், இந்தியர்கள் எல்லாருமே அண்டப் புளுகர்கள் என்று தோன்றும்

(4M.1.A.106 ரங்கம்மா vs அச்சம்மா தீர்ப்பு). ஆனால், இந்த அபிப்பிராயங்கள் எல்லாமே இந்திய பண்பாட்டை அறியாத அந்நியர்கள், ஆராய்ச்சி செய்யாமல் வெறுப்போடு சொன்ன அபிப்பிராயங்கள்தாம்.

மேற்சொன்ன அபிப்பிராயத்தைப்பற்றி நீதிபதி ஃபீல்ட் கீழ்க்காணும்படி சொல்கிறார்:

'இந்தியர்கள் எல்லாரும் பொய்யர்கள் என்று சொல்வது அகௌரவமான அபத்தம். ஆனால், இந்திய சாட்சிகள் எல்லாரும் ஆங்கில சாட்சிகளைப்போல சத்தியவந்தர்கள் என்று சொல்வதும் அபத்தம்.'

எம்.டி.சாமர்ஸ் என்ற மற்றொரு நீதிபதி, "இங்கிலாந்தில் ஏழைகளிடத்தில் பொய் எவ்வளவு குடிகொண்டு இருக்கிறது என்று பலருக்குத் தெரிவதில்லை. நான் இங்கிலாந்து, ஜிப்ரால்டர், இந்தியா இந்த மூன்று நாடுகளிலும் நீதிபதியாக இருந்திருக்கிறேன். ஆகவே, ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு எனக்கு உரிமை உண்டு. வாஸ்தவந்தான்! இந்தியாவில் பொய் அதிகமாகி இருக்கிறது. ஆனால், அது நுட்பமான பொய்யல்ல. ஒரே விதமானது. இங்கிலாந்திலோ பொய்யை நுட்பமாகச் சொல்கிறார்கள். ஆகையால் அங்கே உண்மையைக் கண்டுபிடிப்பது எவ்வளவோ கஷ்டம். இந்தியாவில் லகுவாகக் கண்டுபிடித்து விடலாம்" என்கிறார்.

ஆகவே, ஒரு சாட்சியின் உண்மையை அவன் வர்க்கத்தை மாத்திரமே வைத்துத் தீர்மானித்து விடலாம் என்று சொல்வது விதண்டாவாதம் என்றும் ஆராய்ச்சி செய்து முடிவு கட்டிய உண்மை அல்ல என்றும் ஏற்படுகிறது.

வயது

வயோதிகத்தில் ஞாபக சக்தி குன்றிவிடுவதால், வயோதிகர்களுடைய சாட்சியத்தை ஜாக்கிரதையாக பரிசீலனை செய்ய வேண்டும். குழந்தைகளுக்கு சில விஷயங்களில் அபார கவனமுல், சில விஷயங்களில் கவனமின்மையும் இருக்கின்றன. அவர்களுடைய ஞாபக சக்தியும், பளிச்சென்றும் இருக்கிறது; குன்றியும் இருக்கிறது. கவனித்ததை ஞாபகப்படுத்திச் சொல்லும்போது கண், முக்கு வைத்து ஜிகினா வேலை செய்து நடவாததையும் கற்பனை செய்து சொல்கிற வழக்கம் குழந்தைகளிடம் உண்டு.

ஆனால், ஒரு வகையில், 7 வயதுக்கு மேல் 10 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளின் சாட்சியம் மதிப்பு உயர்ந்தது. விருப்பு, வெறுப்பு, சூது, வாது, டம்பம் இந்தக் கறைகளை எல்லாம் இன்னும்

அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, அவர்களுடைய சாட்சியம் புனிதமானது. இருந்தாலும் ஒன்றை மறந்துவிடக் கூடாது. வார்த்தையை நாம் உபயோகிப்பதுபோல் குழந்தைகள் உபயோகிப்பதில்லை. காலம், தூரம், ஆழகு, பெரிய, சிறிது என்ற வார்த்தைகளுக்கு குழந்தைகள் மனதில் இருக்கும் அர்த்தம் வேறு. நம் மனதில் இருப்பது வேறு.

இன்னொரு விபரீதம். மனதில் சித்திரத்தை எழுப்பும் சக்தி வார்த்தைகளுக்கு உண்டு. பாஷையோடு பழகப் பழக இந்த சக்தி குறைகிறது. நமக்கெல்லாம் வார்த்தை வெறும் வார்த்தையாகவே மனதில் பதிகிறது. ஆனால், கதையைக் குழந்தை கேட்கும்போது, கண் முன் சம்பவம் நடப்பதுபோல் அவர்களுக்குத் தோன்றும். கொலை நடக்கும்போது உடன் இல்லாவிட்டாலும், உடன் இருந்ததைப்போல அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டால் சம்பவத்தை மனதில் சித்திர ரூபமாகக் கண்டு, தான் கூட இருந்ததாக நம்பி அதற்கு உரிய பாவத்தோடும், வேகத்தோடும் குழந்தைகள் சாட்சி சொல்லிவிடுவார்கள். ஆகவே, அவர்களுடைய வாக்குமூலத்தை ஆராய்ச்சி இல்லாமல் ஒப்புக்கொள்வது அபாயம்.

பால்

ஆண்களுடைய சாட்சியத்தின் தனிப் பண்புகளைப்பற்றி பெண்கள் ஆராய்ச்சி செய்து அபிப்பிராயம் எழுதியதாகத் தெரியவில்லை. ஆனால், ஆண்களில் அனேகர் பெண்களுடைய சாட்சியத்தைப்பற்றி தங்கள் துணிபுகளை வெளியிட்டிருக்கிறார்கள். புரொஃபசர் விக்மோர் என்பவர் 'பிரின்சிபில்ஸ் ஆஃப் ஜுடிஷல் ப்ரூஃப்' என்ற நூலில் கிழ்க்காணுமாறு சொல்கிறார்:

"கவனம் செலுத்துவதில், ஆண்களும் பெண்களும் அனேகமாக சம யுக்தி உடையவர்கள்தான். ஆனால், ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்திப் பார்க்கும்போது, பெண்கள், தாங்கள் கற்பனை செய்ததையும், விரும்பியதையும், நேரில் கண்ட சம்பவத்தோடு கலந்துவிடுகிறார்கள். நடந்ததை எடுத்துச் சொல்வதில், பெண்கள் ஆண்களைக் காட்டிலும் வேகத்தோடும், திட்டமாகவும் சொல்வார்கள். ஆனால், ஒளிவு மறைவு இல்லாமல், கலப்பு இல்லாமல் சாட்சியம் சொல்வதில் பெண்களைக் காட்டிலும் ஆண்கள் மேல்."

சித்தப்பிரமை

சித்தப்பிரமையில் எத்தனையோ விதம் உண்டு. காணாத காட்சிகளையும், கேளாத ஒலிகளையும் கண்டு, கேட்டதாக மனது பாவனை செய்கிறது, சித்தப்பிரமை ஏற்பட்டதால். ஆனால்,

பைத்தியம் பிடித்தவர்களுக்கும் புத்தித் தெளிவு, விட்டுவிட்டு ஏற்படுவதும் சகஜம். தெளிவு ஏற்பட்ட காலத்தில், 'கவனத்தோடு சம்பவத்தைக் கண்டு, பின்னால் ஞாபகப்படுத்தி முறையாக சாட்சியம் சொல்லும் சக்தி அவர்களுக்கு இல்லை' என்று அவர்கள் வாக்குமூலத்தை நிராகரித்துவிடவும் முடியாது!

ஒழுக்கம்

ஒரு மனிதனுடைய ஒழுக்கத்தைக் கொண்டு அவனுடைய சாட்சியத்தை ஏற்கலாம் என்பது ஓரளவுதான் உண்மை. அயோக்கியன் என்று கருதப்படுகிறவன் எப்போதுமே பொய் சொல்வான் என்றும், யோக்கியன் எப் போதும் உண்மையே சொல்வான் என்றும் நிச்சயம் செய்துவிட முடியாது. சத்தியத்துக்கும், யோக்யதைக்கும் உள்ள சொந்தத்தைப்பற்றி மனோதத்துவ ஆசிரியர்கள் இன்னும் ஆராய்ச்சி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

பண்பு

கண்ணாடி வழியாகச் செல்லும் சூரிய ஒளி கண்ணாடியின் நிறத்தை ஏற்று வெளிவருவதுபோல, பார்த்த விஷயங்கள், கேட்ட விஷயங்கள் எல்லாம் மனதின் சாயத்தில் தோய்ந்து அதன் வண்ணத்தை ஏற்று வெளிவருவது இயற்கை. சாட்சியின் பண்பை அறியாமல், சாட்சியத்தை எழுத்து ரூபத்தில் மட்டும் பார்க்கும் அப்பீல் நீதிபதிக்கு சாட்சியின் முழுப் பண்பையும் அறிந்து நிதானிக்க முடியாது. ஆகையால்தான், விசாரணை செய்யும் நீதிபதியின் முடிவுகளை மாற்றுவதற்கு மேல் நீதிபதிகள் தயங்குவார்கள்!

உணர்ச்சி

உணர்ச்சி வசப்பட்டிருக்கும் மனிதனுடைய கவனம், ஞாபகம், எடுத்துச் சொல்லும் சக்தி எல்லாமே உணர்ச்சியினால் பாதிக்கப் படுகின்றன. விருப்பு, வெறுப்பு இல்லாமல் ஒரு காட்சியைப் பார்ப்பவனுக்கு உள்ளதை உள்ளபடி கவனிக்கவும், காட்சியை மனதில் வாங்கி ஞாபகத்தில் இருத்திக்கொள்ளவும், பின்னால் ஞாபகத்தில் இருந்து காட்சியை வர்ணிக்கவும் லகுவாக இருக்கும்.

ஆனால், கொலை செய்கிறவனிடத்திலோ அல்லது கொலை யுண்டவனிடத்திலோ வெறுப்புடையவன் கொலைக் காட்சியைப் பார்க்கும்போது, அவனுடைய வெறுப்பு ஊடே நின்று அவன் அறியாமலேயே அவன் கவனத்தை பாதித்து அவனுக்கு ஒரு கோணல் பார்வையைக் கொடுத்துவிடுகிறது! உணர்ச்சி எப்பேர்ப் பட்டதாக இருந்தாலும் அது மனதின் நிதானத்தைக் கெடுத்து

மயக்கத்தை உண்டாக்குகிறது. மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தோன்றும். பய பீதியோடு ஒரு சம்பவத்தைப் பார்க்கிறவனுக்கு அந்தப் பயத்தை ஒட்டிய அம்சங்கள் மாத்திரம்தான் புலனாகும். நடக்காத விஷயங்களும் நடந்ததாகத் தோற்றும் அளிக்கும்.

கயிறைக் கண்டு பாம்பாக மதித்து மயங்கிப் பதறுவது மாயையின் செயல். புலன் உணர்ச்சி அற்ற நிலையில்தான் இந்த மாயையில் இருந்து மனிதன் விடுதலை அடைகிறான். சம்பவத்தை சாட்சி கவனித்தபோது எந்த மனோ நிலையிக் இருந்தான் என்பதை எப்படி அறிவது? சம்பவம் நடந்த சமயத்தில் சூழல் எப்படி இருந்தது, அவனுடைய நடத்தை எவ்வாறு இருந்தது என்பதைக் துருவிப் பார்த்தால் அவனது மன நிலையை யூகித்து அறியலாம். வழக்கில் சாட்சிக்கு இருக்கும் அக்கறை, வாதி பிரதிவாதிகளிடத்தில் அவனுக்கு இருக்கும் தொடர்பு ஆகியவற்றின் மூலம் அவனுடைய உள்ளத்தின் பாங்கைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அனுபவம்

நீண்ட காலப் பயிற்சியின் மூலம் கிட்டுகிற திறமையைத்தான் அனுபவ ஞானம் என்று சொல்கிறோம். இந்தத் திறமையை இரண்டு விதமாகப் பெறலாம்.

முதலாவது, வாழ்க்கையில் அதுவே தானாக வந்து சேர்கிறது. உதாரணமாக 30 வருஷம் வழக்கிடுவதில் நல்ல அனுபவமுள்ள வக்கீலின் பிரசங்கத்தில், விஷயத்தைத் தொடர்போடும், நுட்பத்தோடும் சொல்லும் திறமையைக் காணலாம்.

இரண்டாவது, விஞ்ஞானிகளைப்போல, விரும்பிப் பழகிப் பெற்றுக்கொண்ட திறமையாகவும் இருக்கலாம். ஹிரோஷிமாவில் அணுகுண்டு வெடித்த காட்சியை வர்ணிக்கச் சொன்னால், அணுகுண்டுக்குத் தப்பிப் பிழைத்த ஒரு ஜப்பானியனுடைய வர்ணனைக்கும், ஆகாய விமானத்தில் இருந்து பல கருவிகளை வைத்துக்கொண்டு காட்சியைப் பரீட்சை செய்த அமெரிக்க விஞ்ஞானியின் வர்ணனைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும்.

என் தகப்பனார் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தார். சந்தேகப் பேர்வழி. எவனைக் கண்டாலும் அவன் உடம்பில் அணிந்திருக்கும் துண்டை மோந்து பார்த்து மோப்பத்தின் மூலம் இவன் இந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்று கண்டுபிடித்துவிடுவார். இவ்வாறு, அனுபவத்தாலும் பயிற்சியாலும் திறமை பெற்ற சாட்சிகளிடத்தில் ஒரு பெருங் குறை உண்டு. அவர்கள் திறந்த மனதை உடையவர்களாக இருக்க மாட்டார்கள். விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்து அசைக்க முடியாதபடி முடிவுகட்டி

விடுவார்கள். தாங்கள் சமைத்த சித்தாந்தத்தை உடுப்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு முரண்டு பிடிப்பார்கள். ஆனால், மொத்தத்தில் அவர்களுடைய சாட்சியம் மதிப்புக்கு உரியது.

சாட்சி சொல்கிறவன் அரிச்சந்திரனாகவே இருந்தாலும், மானிடனாகப் பிறந்த குற்றத்தால், அவனுடைய சாட்சியமும் மேற்சொன்ன எட்டு குறைகளால் பாதிக்கப்படுகிறது. அந்த மட்டும் அவனுடைய சாட்சியத்தின் உண்மை திரிந்துதான் நிற்கிறது. ஆகவேதான் மேற்படி குணங்களைப்பற்றி சவிஸ்தாரமாக ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மனித அறிவு முழுவதுமே, ஐம்புலன்களை அடிப்படையாகக்கொண்டு இருப்பதால், ஒவ்வொரு புலனும் உண்மையோடு உழைத்து, வெளியுலகத்தைப்பற்றிய தோற்றங்களை நமக்குச் சரிவர உணர்த்துகிறதா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். நீதி பரிபாலனம் முழுவதுமே, பஞ்சேந்திரியங்களை நம்பி நடக்கிற காரியந்தான். நமது புலன்கள் நம்பிக்கை மோசம் செய்யாமல் இயங்குகின்றனவா என்ற கேள்வியை அடிக்கடி கேட்டுக்கொள்ள வேண்டும்.

கண்

ஐம்புலன்களில், மிகவும் கண்ணியத்தோடு நடந்துகொள்வது கண்தான். ஆகவே, நீதி ஸ்தலங்களில் கண் கண்ட சாட்சியத்துக்கே கௌரவம் அதிகம். *கண்டனன் கற்பினுக்கனியைக் கண்களால்* என்று சொல்லி அனுமான் நம்பிக்கை இழந்த ராமனுக்கு நம்பிக்கை ஊட்டுகிறான்.

கண்ணோடு காதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, காதால் கேட்டதைக் காட்டிலும் கண்ணால் கண்டதே நம்பத்தக்கது என்று தெரியும். வார்த்தைகளாலும், வர்ணனையாலும் அறிய முடியாததை ஒரு கண் வெட்டின் மூலம் கண்டு அறிந்துவிடலாம். கண்ணுக்கு இவ்வளவு மகிமை இருந்தபோதிலும், அதைப்போல துரோகம் செய்கிற புலன் வேறு கிடையாது. இல்லாததை இருப்பதாகவும் (உருவெளித் தோற்றம்) ஒன்றை மற்றொன்றாகவும் (திரிபுக் காட்சி) அது காட்டிவிடும்.

சில காட்சிகளை நம் கண் பார்த்துக் கொண்டுதான் இருக்கும். ஆனால், நம் மனது வேறு வேலையில் ஈடுபட்டு இருந்தால் காட்சி மனதில் போய்த் தைப்பதே இல்லை. பார்த்து சில நிமிஷங்கள் கழித்துத்தான் பார்த்த காட்சி மூளையில் போய்ப் படும். அப்போது தான் ‘அதைப் பார்த்தோமே’ என்று தோன்றும். இதை, ‘ரெட்ராஸ்பெக்டிவ் இல்யூமினேஷன் ஆஃப் பர்செப்ஷன்’ என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இந்த மானசீக சேஷ்டையின் முக்கியத்தை வழக்கு விசாரணையில் அறியலாம்.

இங்கிலாந்தில் ஒரு வழக்கு நடந்தது. வண்டிக்காரன் ஒருவன் குழந்தை ஒன்றின் மேல் வண்டியை ஏற்றிக் கொன்றுவிட்டான். பட்டாளத்தில் வேலை பார்த்த ஒரு கிழவர் வீட்டு ஜன்னல் வழியாக இந்தச் சம்பவத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தார். கண் தெருவைப் பார்த்து விழித்துக்கொண்டு இருந்தாலும், பல வருடங்களுக்கு முன் நடந்த ஒரு யுத்தத்தைப்பற்றி மனது சிந்தித்துக் கொண்டு இருந்தது.

நசுங்கிய குழந்தையின் கோர ஒலி திடீரென்று கேட்டதும் திடுக்கிட்டு அவர் மனதும் விழித்துக்கொண்டது. உடனே, முன்னால் நடப்பதை அப்போதுதான் உண்மையிலேயே பார்க்க ஆரம்பித்தார். வண்டியை வண்டிக்காரன் திருப்பியதும், குதிரை இடக்குப் பண்ணி குழந்தை மேல் குதித்ததும். அதற்குப் பின்னால் குழந்தை நசுங்கியதும் - இவ்வளவும் அவர் மனதில் அந்த ஒலியைக் கேட்ட பிறகுதான் ஒன்றன்பின் ஒன்றாகக் காட்சி அளித்தன.

வாக்குமூலம் கொடுக்கும்போது அவர், "சம்பவத்தை முதலில் இருந்து கடைசி வரையில் பார்க்கத்தான் செய்தேன்; ஆனால், குழந்தையின் கூக்குரல் கேட்கும்வரை, பார்த்துக்கொண்டு இருக்கிறேன் என்ற விஷயத்தை நான் அறியவில்லை" என்றார்.

ஆகவே, கண் தனக்கு உரிய வேலையைச் செவ்வையாகச் செய்தாலும், மனது வேறு காரியங்களில் ஈடுபட்டு இருந்தால் 'கண் இருந்தாலும் பயனில்லை, முகத்திரண்டு புண்' இருப்பது போல்தான்.

செவி

ஓர் ஒலியையோ, வார்த்தையையோ இரண்டு பேர் ஒரே மாதிரி, சம நிட்சண்யத்தோடு கேட்பதில்லை. கேட்கும் சக்தியிலேயே மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் இருக்கிறது. இந்த உண்மையை மான நஷ்ட வழக்குகள் மூலம் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். பிரதிவாதி வாதியை மானபங்கமாகப் பேசினார் என்று பத்து சாட்சிகள் வாக்குமூலம் கொடுப்பார்கள்.

பிரதிவாதி பிரயோகம் செய்த வார்த்தையைச் சொல்லும்போது பத்து விதமாகத்தான் சொல்வார்கள். 'மட்டி, மடையன், முட்டாள்' என்ற வார்த்தைகளில் ஒன்றுக்கொன்றை மாற்றிச் சொல்வர்கள். 'அயோக்கியன், ராஸ்கல், படுபாவி' என்ற வார்த்தைகளில் மாற்றம் இருக்கும். ஆனால், 'அயோக்கியன்' என்ற வார்த்தைக்கு பதில் 'முட்டாள்' என்ற வார்த்தையைச் சொல்ல மாட்டார்கள். ஏன்? யோக்கியதையைப் பழித்தோ அல்லது அறிவைப் பழித்தோ பேசியது ஞாபகத்தில் இருக்கும். அர்த்தத்தை மாத்திரம் ஞாபகத்தில்

வைத்துக்கொண்டு, அந்த அர்த்தத்தைத் தெரிவிக்கிற வேறு ஏதாவது ஒரு வார்த்தையைக் கேட்டதாகச் சொல்வார்கள்.

இதற்குக் காரணம், நாம் சாதாரணமாகக் கேட்பது, வார்த்தையை அல்ல, அர்த்தத்தைத்தான். ஆகவே, அர்த்தத்தை மனதில் வைத்துக் கொண்டு வார்த்தையை நழுவ விட்டுவிடுகிறோம். சாட்சி சொல்லும்போது ஒவ்வொருவரும் அர்த்தத்தை மாத்திரம் மனதில் வைத்துக்கொண்டு, அர்த்தத்தைத் தெரிவிப்பதாகத் தான் கருதுகிற ஒரு வார்த்தையை மாத்திரம் சொல்வார். இதைக் கேட்ட பிறகு, நீதிபதிக்கு இத்தனை பேரும் உண்மையிலேயே நேரில் கேட்டவர்கள் தானா என்ற நியாயமான சந்தேகம் தோன்றிவிடும்.

ஸ்வர பேதங்களை அலகிட்டு இனம் கண்டுபிடிப்பது ஒவ்வொருவர் காதுக்கும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறது. சிலருக்கு மேல் ஸ்தாயி ஸ்வரங்களைக் கேட்கவே முடியாது. சிலர் கீழ் ஸ்தாயி ஸ்வரங்களைப்பற்றிய வரை செவிடர்களே. மனிதர்கள் எல்லாருமே ஓர் ஒலி எந்தத் திசையில் இருந்து வருகிறது என்பதை நிர்ணயம் செய்யத் திணறுவார்கள். உன்ட் (Wundt) என்ற ஒலி நூற் புலவர் ஆயிரக்கணக்கான காதுகளைச் சோதனை போட்டு சில முடிவுகளுக்கு வந்தார். 1. முன்னாலும் பின்னாலும் இருந்து வருகிற ஒலிகளை லகுவாக நம்மால் கேட்க முடியும். 2. முன்னால் இருந்து வரும் ஒலிகளைப் பின்னால் இருந்து வருவதாகவும், பின்னால் இருந்து வருவதை முன்னால் இருந்து வருவதாகவும், எண்ணும் மயக்கம் நம் செவிகளுக்கு உண்டு. 3. ஐம்பது வயதுக்கு மேல் செவியின் சக்தி குறைந்துகொண்டே வருகிறது. 4. கிழவர்களைக் காட்டிலும் கிழவிகளுக்கு காது நன்றாகக் கேட்கும்.

வாய்

வழக்கு விசாரணையில், ருசியை ஆதாரமாகக்கொண்ட சாட்சியம் அபூர்வம். இருந்தாலும், அதற்கு முக்கியத்துவம் அதிகம். பாஷாணம் போட்டுவிட்டதாகக் குற்றம் சாட்டுகிறபோது, நாக்கு சொல்கிற சாட்சியமே பிரதானம். ‘புளிப்பு, கசப்பு, கரிப்பு, இனிப்பு, துவர்ப்பு’ என்ற சுவைகள், நாக்குக்கு நாக்கு வித்தியாசப்படும் என்பதை மறந்துவிடக் கூடாது.

மூக்கு

மோப்பத்தின் மூலம் பொருட்களைப் பகுத்தறியும் திறமை மனிதனைக் காட்டிலும் நாய்க்கு ஆயிரம் மடங்கு அதிகம். மற்ற உணர்வுகளைக் காட்டிலும் மனதை வெறியேற்றுகிற சக்தி மோப்பத்துக்கே உண்டு. வழியில் நடந்துகொண்டு இருக்கும்போது ஒரு தனிப்பட்ட மணம் வீச ஆரம்பிக்கும். உடனே, நாய் தன்னை மறந்து, எஜமானனையும் மறந்து அந்த இடத்தை வளைய வளையச்

சுற்றி வருவதைப் பார்த்தால், நாம் அறிய முடியாத ஓர் உணர்ச்சிச் சூறாவளியில் அகப்பட்டு எவ்வாறு தத்தளிக்கிறது என்று யூகம் செய்ய முடியும். நல்லவேளையாகக் கடவுள் மனிதனுக்கு மோப்ப சக்தியைக் குறைத்தே வைத்தார். அந்த சக்தியும் தீட்சண்யமாக இருந்திருந்தால், மனிதன் நுகரும் உணர்ச்சிக்கும் வெறிக்கும் அடிமைப்பட்டு மன வளர்ச்சி இல்லாமல் மிருகமாகவே இருந்திருப்பான் என்று ஆல்டஸ் ஹக்ஸ்லி கூறுகிறார். இந்த நிலையில் மோப்பத்தை அஸ்திவாரமாகக்கொண்ட மனித அனுபவம் மிகக் குறைவு. சாட்சியமும் அப்படியே.

மெய்

சூடு, கனம், பரப்பு முதலிய குணங்கள் பொருட்களுக்கு உண்டு. இந்த குணங்களை நாம் தொட்டுப் பார்த்து அறிறோம். அமாவாசை நள்ளிரவில் ரஸ்தாவில் சென்றுகொண்டு இருக்கும் பெண்ணின் காதை அறுத்துப் பாம்படத்தைக் கொள்ளை அடிப்பது என்பது அடிக்கடி நடக்கிற சம்பவம். இதைப் போன்ற சம்பவங்கள் விசாரணைக்கு வரும் காலத்தில் சாட்சியின் 'உற்று அறியும்' புலமையை மதிப்பிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த ஆராய்ச்சி மிகவும் கஷ்டமானது.

தொடும்போது உடலில் ஏற்படும் உணர்ச்சியை மாத்திரம் வைத்துக்கொண்டு தீர்மானமான ஒரு முடிவுக்கு வர முடியாது. அதற்குத் தொடு உணர்வு சாட்சியின் பலம் மிகக் குறைவு. அது சொல்வதைக் காதும், கண்ணும் ஆமோதித்தால்தான் உண்மை என்று ஒப்புக்கொள்ளலாம். இந்த விஷயத்தை அறியாமல்தான், யானை குருடர் கதையில் பிரஸ்தாபிக்கிற குருடர்கள் யானையை முறமாகவும் உலக்கையாகவும் உரலாகவும் உருவகம் செய்தார்கள்.

ஆகவே, சாட்சியம் பெரும்பாலும் வாய்மொழிச் சாட்சியாகவே இருக்கிறது. நாணயமாக சாட்சிகள் சொல்லும் வாக்குமூலங்கூட உண்மைக்கு மாறுபட்டதாக இருக்கிறது. போதாக்குறைக்கு, பொய்யை மெய்போலக் காட்டும் திறமை படைத்த சாட்சிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் சாட்சியச் சேற்றைக் கலக்கிப் பாதாளத்தில் அமிழ்ந்து கிடக்கும் உண்மையைத் தூண்டில் போட்டுப் பிடிக்க வழி இருக்கிறதா? வாக்குமூலத்தின் துல்லியத்தை உறைத்துப் பார்ப்பதற்குத் தகுந்த ஓர் உறை கல் கிடைக்குமா?

5. குறுக்கு விசாரணை

பொய்யை மெய்போலப் பரிமாறுகிற சாட்சிகளின் வாக்கு மூலத்தில் இருந்து மெய்யை எப்படிப் பிரித்து இனம் கண்டு பிடிப்பது? பண்டைய மக்கள் இதற்கு ஒரு கரடுமுரடான வழி கண்டுபிடித்து வைத்திருந்தார்கள். பழுக்கக் காய்ச்சிய எண்ணெயில் கையை முக்க வேண்டியது. வாய்மையுடையவன் கை பொறியாமல், வெளியில் வரும். பொய் சொன்னவன் கையோ வெந்து புண்ணாகி அவன் குற்றத்தைக் காட்டிக் கொடுத்துவிடும் என்று நம்பினார்கள்.

இதை வெறும் அசட்டு நம்பிக்கை என்று தள்ளுவதற்கு முன்னால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சத்தியத்தில் எல்லையற்ற நம்பிக்கையுடைவனுடைய மனதும், உடலும் அசாதாரணமான சக்தி பெற்றவை; எந்தவிதமான கடுமையான சோதனைக்கும் ஈடுகொடுக்கக் கூடியவை. தீக் குழியும், தேர்க் காலும், அவனுடைய உள்ளத்தையோ, உடலையோ அவ்வளவாக பாதிப்பதில்லை. ஆனால், இப்பேர்ப்பட்ட சோதனைகள் எல்லாம் தற்காலத்துக்கு உரியவை அல்ல. எதிலும் நம்பிக்கை குறைந்து வரும் தற்காலத்தில் உண்மை சொல்கிற சாட்சிக்கே உண்மையில் நம்பிக்கை இருப்பதில்லை.

ஆகவே, தற்கால சாட்சிகளை மேற்கண்ட சோதனைகளுக்கு உட்படுத்தினால், சித்ரவதை செய்யும் குற்றத்துக்கு ஆளாவோம்.

சித்ரவதைக்கு கிட்டத்தட்ட சமமான கருவி ஒன்றை ஆங்கிலேயர் கண்டுபிடித்தார்கள். அதுதான் 'குறுக்கு விசராணை' என்பது. இது ஓர் அற்புதமான கருவி. உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு இதைப்போல பிரயோஜனமானது வேறு ஒன்றுமே இல்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

வாதி, பிரதிவாதிகளிடத்தில் சாட்சிக்கு இருக்கும் உறவு, வாஞ்சை, வியாஜ்யத்தை முடிப்பதில் அவருக்கு இருக்கும் அக்கறை, சாட்சியம் சொல்ல வந்த நோக்கம், அவருடைய விருப்பு, வெறுப்பு, விஷயத்தை அவர் அறிந்த முறை, அவருடைய கவனிப்பு, ஞாபக சக்தி, எடுத்துச் சொல்லும் திறமை - இவற்றை எல்லாம் குறுக்கு விசாரணையின் முலம் சாங்கோபாங்கமாக அலசி, ஆராய்ந்து, தெளிந்துவிடலாம். பொய்யை எவ்வளவு திறம்படச் சொல்கிறவனாக இருந்தாலும், குறுக்கு விசாரணை என்ற சோதனைக்கு உட்பட்ட மாத்திரத்தில், கதிகலங்கி, மனம் கலங்கி உண்மையைக் கக்கிவிடவே செய்வான்.

தந்திரமும், பொய்யும் நிரம்பிய ஒரு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யும்போது முள்ளும் புதரும் பாறையும் அடர்ந்த காட்டில் புலி வேட்டையாடுவதில் எவ்வளவு உற்சாகமும் பரபரப்பும் வேதனையும் மயக்கமும் சாகசமும் ஏற்படுமோ அவ்வளவும் ஏற்படுகிறது. உண்மையாக நடந்த சம்பவத்தை பூசி மெழுகி மறைப்பதில் சாட்சி முனைப்பாக இருப்பான். சம்பவத்துக்குப் புறம்பானதுபோலத் தோன்றும் பல விவரங்களைப் பற்றி அவனிடத்தில் விஸ்தாரமாகக் கேள்வி கேட்க வேண்டும். அவன் இந்தக் கேள்விகள் தன் கட்சியைப் பாதிக்காது என்று நினைத்துக்கொண்டு பல விடைகளை தாராளமாகச் சொல்வான். பல விஷயங்களை ஒப்புக்கொண்டுவிடுவான். பிறகு, தான் சொல்ல வேண்டாம் என்று மறைத்து வைத்திருந்த விஷயங்களைக்கூட மறுக்க முடியாமல் திணறுவான்.

இந்த மாதிரி விசாரணைக்கும் மசியாத பேர்வழியாக இருந்தால், மற்றொரு முறையைக் கையாளலாம். யாருக்கு அனுகூலமாக சாட்சி வந்திருக்கிறானோ அந்தக் காட்சிக்காரருக்காக வேண்டிய அளவுக்கு மேல், அபரிமிதமான அழுத்தத்தோடு சாட்சியம் சொல்லும்படி செய்து, 'இவன் ஒரவஞ்சனைக்காரன், பொய்யன்' என்று நீதிபதியின் மனதில் படும்படி செய்துவிடலாம். இப்பேர்ப் பட்ட காரியங்களை எல்லாம் சாதிப்பதற்கு நல்ல மதி நுட்பமும், மனித இதயத்தின் வளைவு, நெளிவை நன்றாக அறிந்து சமயோசிதமாக கேள்வி கேட்கும் சக்தியும் உடைய வக்கீல் அவசியம், கருவியைத் திறமையாகக் கையாளாவிட்டால், தன் மார்பிலேயே பாய்ந்து, தன் கட்சிக்கே ஆபத்துகள் விளைவித்துவிடும் அந்தக் கருவி.

காலத்தை பாழாக்குவதற்காகவே குறுக்கு விசராணை ஏற்பட்டிருப்பதாக சில வழக்கறிஞர்கள் நினைக்கிறார்கள். வியாஜ்யத்தில் முக்கிய பிரச்னை எங்கேயோ இருக்கும். அவர்கள் குறுக்கு விசரணையோ பிரச்னைக்கு வெகு தூரத்துக்கு அப்பால், மலை, வன வனாந்திரங்களில் சஞ்சாரம் செய்துகொண்டு இருக்கும். இப்படி விருதாவான குறுக்கு விசாரணையை அடக்கவும், தடுக்கவும் நீதிபதிக்கு உரிமை இருக்க வேண்டியது அவசியந்தான். ஒரு வக்கீல் ஒரு பெண்ணை ஒரு மாத காலமாகக் குறுக்கு விசாரணை செய்தார். கேள்விகளைத் திருப்பிக் கேட்டு நீதிபதியின் பொறுமையைக் குலைக்க ஆரம்பித்துவிட்டார்.

இந்த நிலையில் அவர், "அம்மா உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?" என்று கேட்டார்.

கோபத்தை அடக்க முடியாமல் திணறிக்கொண்டு இருந்த நீதிபதி, "நீங்கள் குறுக்கு விசாரணையை ஆரம்பித்தபோது சாட்சிக்கு முன்று குழந்தைகள் இருந்தன. இப்போது எத்தனை என்று கேட்க வேண்டியது அவசியந்தான்." என்றார்

சாட்சிக் கூண்டில் ஏறிவிட்டால் சாட்சி எவ்வளவு அந்தஸ்து உடையவராக இருந்தாலும், அவரை அலட்சியமாகவும், அகௌரவமாகவும் நடத்தலாம் என்று சில வக்கீல்கள் கருதுகிறார்கள். இந்த நிலைமை மிகவும் கண்டிக்கத்தக்கது. ஏளனமும், நையாண்டியும், மானபங்கமும்தான் சாட்சிக் கூண்டில் நமக்குக் கிடைப்பது என்று நினைத்தே கௌரவமான பலர் சாட்சியாக வருவதற்கே கூச்சப்பட்டு ஒதுங்கிவிடுகிறார்கள். இதன் விளைவாக உண்மை சொல்கிறவர் சாட்சியமே நமக்குக் கிடைக்காமல் போகிறது. நீதி பரிபாலனத்தின் முக்கியத்தை உத்தேசித்தாவது சாட்சிகளை உதாசீனமாக நடத்தும் மனப் பாங்கு ஒழிய வேண்டும்.

அப்படியானால் சாட்சிகளோடு கொஞ்ச வேண்டும் என்று அர்த்தமல்ல. கொட்டிக் கறக்கும் மாட்டைக் கொட்டியும், தட்டிக் கறக்கும் மாட்டைத் தட்டியுந்தான் கறக்க வேண்டும். முழுப் பொய்யை அயோக்கியத்தனமாகவும் துணிச்சலோடும் சொல்கிற சாட்சிகளை அதட்டியும், மிரட்டியும், கடுமையாகவுந்தான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். ஆனால், தரம் தெரியாமல் எல்லா சாட்சிகளையும் ஒரே முறையில் நடத்துவது உசிதமல்ல.

சில வக்கீல்கள், குறுக்கு விசரணையின் மூலம் உண்மை பேசுகிற சாட்சியைப் பொய்யன் போலவும், பொய்யனை சத்தியசீலனாகவும் காட்டிவிடுகிறார்கள். இதற்குத் காரணம் வக்கீலின் நேர்மை இன்மையும், சாட்சியின் முட்டாள்தனமும்தான். இப்படி எல்லாம் குறுக்கு விசாரணையை அக்கிரமமாக உபயோகிக்காமல் தடுப்பதற்கு நீதிபதிக்கு உரிமை உண்டு. இந்த உரிமையைத் திறமையோடும், நுட்பத்தோடும் நீதிபதிகள் கையாண்டால் மேற் சொன்ன விபத்துகளுக்குத் தப்பலாம்.

ஒரு வியாஜ்யத்தில் கீழ்க்காணும்படி குறுக்கு விசாரணை நடந்தது. சாட்சியின் பெயர் மிஸ்டர் ராலின்ஸன்.

வக்கீல்: உங்கள் வீட்டில் ஒரு பெண் இருக்கிறாளா?

சாட்சி: ஆம்.

வக்கீல்: அவளைப் பக்கத்திலுள்ளவர்கள் மிஸஸ் ராலின்ஸன் என்று அழைக்கிறார்களா?

சாட்சி: ஆம்.

வக்கில்: சென்ற 10 ஆண்டுகளாக அவள் உங்களுடைய பாதுகாப்பில் தானே இருக்கிறாள்?

சாட்சி: ஆம்.

வக்கில்: நீங்கள் சட்டப்படி மணந்த மனைவி இறந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டதல்லவா?

சாட்சி: ஆம்.

மேற்சொன்ன பதிலுக்குப் பின் வக்கில் உட்கார்ந்துவிட்டார். கோர்ட்டில் உட்கார்ந்திருந்த ஜூரிகள், சாட்சி அசல் அயோக்கியன் என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டார்கள். அந்தச் சமயம் அடுத்த தரப்பு வக்கில் எழுந்து மறு விசாரணை செய்ய ஆரம்பித்தார்.

வக்கில்: ஐயா, நீங்கள் சொன்ன பெண் உங்கள் தாயார்தானே?

சாட்சி: ஆம்.

உடனே எல்லாருக்கும் உண்மை தெரிந்துவிட்டது. குறுக்கு விசாரணை செய்த வக்கிலின் அக்கிரமத்தையும், உண்மையைத் திரிக்கும் திறமையையும் உணர்ந்து கண்டித்தார்கள். இப்பேர்ப்பட்ட திருகுதாளங்களுக்கு எல்லாம் குறுக்கு விசாரணையை உட்படுத்தாமல் உண்மையை விளக்கும் அருமைக் கருவியாக அதைக் காக்க வேண்டியது வக்கில்கள் கடமை.

6. திரும்பிப் பார்க்கிறேன்

'ஆனந்தவிகடன்' ஆசிரியர் கேட்டிருக்கும் கீழ்க்காணும் கேள்விகள் சுவையானவை. சிந்தனையைக் கிளறிவிடுபவை.

"தங்கள் வாழ்க்கையில் மனம் மாறித் திருந்திய நிகழ்ச்சிகள் எவை? தங்கள் புத்திமதிகளால் மற்றவர்களுடைய மனதைத் திருத்தியது உண்டா?"

என் 60 ஆண்டு வாழ்வைப் பன்னோக்காகக் பார்த்து, மனம் மாற்றிய நிகழ்ச்சிகளைப் பாதாளக் கரண்டி போட்டு துழாவி எடுத்து அவற்றை விளக்கப் புகுந்தால் நீண்ட சுய வரலாறாக முடியும். ஆகையால், சில முக்கிய நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பிடுகிறேன்.

என் குழந்தைப் பருவத்தில் வாரந்தோறும் பழனியிலிருந்தும், திருச்செந்தூரிலிருந்தும் விபூதிப் பிரசாதம் தபாலில் வரும். தபாலை உடைத்து என் தாயார் எனக்குத் திருநீற்றை அணிவிப்பது வழக்கம்.

அப்படிப் பூசும்போதெல்லாம், "நீ ஊருக்கு நல்ல பிள்ளையாக வாழ வேண்டும்" என்று சொல்லி வாழ்த்துவார்கள். இந்த வாழ்த்தை அடிக்கடி கேட்டு வந்த என் குழந்தை உள்ளத்தில், 'ஊருக்கு நல்ல பிள்ளையாக இருக்க வேண்டியது கடமை' என்ற உணர்ச்சி என்னை அறியாமலேயே வேரூன்றி வளரத் தொடங்கியது.

பிற்கால வாழ்க்கையில் நான் எந்தச் செயலைச் செய்தாலும் "என் செயலைப் பற்றி ஊர்க்காரர்கள் என்ன நினைப்பார்கள்? இதை அவர்கள் கண்டிப்பார்களா? அல்லது ஏற்றுக் கொள்வார்களா?" என்று என்னையே கேட்டுக் கொள்வது உண்டு. கண்டிப்பார்கள் என்று தோன்றினால், அந்தச் செயல் என் சுயநலத்துக்கு உகந்ததாக இருந்தாலும், அதைச் செய்யாமல் விட்டு விடுவேன். சில சமயங்களில் 'ஊராரையும்' மதிக்காமல் தவறுகளும் செய்திருக்கிறேன். ஆனால், பெரும்பாலும் என் தாயாரின் வாழ்த்து என் செயல்களை உறைத்துப் பார்க்கும் உறை கல்லாக அமைந்து, பெருந் தவறு செய்யாமல் என்னைப் பாதுகாத்து வந்திருக்கிறது. இளம் வயதில் உள்ளத்தில் ஒரு கருத்தை ஊன்றிவிட்டால், சரியோ, தப்போ, அது உள்ளத்தின் மீது செலுத்தும் ஆதிக்கம் பிற்காலத்தில் ஏற்படும் கருத்துக்களுக்கு இருப்பதில்லை.

நாத்திகன் ஆனேன்

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்னால் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் நடந்த சுயமரியாதை மகாநாட்டுக்குப் போயிருந்தேன். நமது சமயத்திலுள்ள மூடக் கருத்துக்களை நையாண்டி செய்து பல அறிஞர்கள் சுவையாகப் பேசினார்கள். அவர்களுடைய பேச்சுத் திறமையும், துணிச்சலும் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. அந்தக் காலத்தில் சமயத்தைப் பற்றிப் பேசுபவர்கள் வெறும் மடிசஞ்சிகளாக இருப்பார்கள்; அவர்களுடைய பேச்சு விளக்கெண்ணெயாக இருக்கும். உயர்நிலைப் பள்ளி மாணவனாக இருந்த எனக்கு சுயமரியாதைத் தலைவர்களுடைய பேச்சு இருளை விரட்ட வந்த ஒளியைப் போலிருந்தது.

பேச்சைக் கேட்பதற்கு முன்னால் தினந்தோறும் கோயிலுக்குப் போய் இறைவனை வணங்கி வந்தேன். பேச்சைக் கேட்ட பிறகு "சாமியாவது! சாத்தானாவது! மந்திரமாவது! மண்ணாங்கட்டியாவது!" என்று சொல்லி, கடவுள் நம்பிக்கை உள்ளவர்களைப் பார்த்துப் பழிக்கத் தொடங்கினேன். இப்படியாகப் பல ஆண்டுகள் திரிகரண சுத்தியாக 'கடவுள் இல்லை. இல்லவே இல்லை' என்ற உறுதியில் நின்றேன். இந்த உறுதிக்கு ஊட்டம் கொடுப்பதற்காக 'வால்டேர்', 'இங்கர்சால்', 'பெட்ரன்ட் ரஸ்ஸல்' போன்ற சிறந்த நாத்திகவாதிகளுடைய நூல்களை கவனத்தோடும் ஆர்வத்தோடும் படித்துவந்தேன்.

தேள் கொட்டியது

என்னுடைய உறுதிப்பாட்டுக்கு உலை வைக்கக்கூடிய நிகழ்ச்சிகள் பின்னால் நடக்கத் தொடங்கின. பாளையங்கோட்டையில் நான் வழக்குரைஞனாக இருந்தபோது நடந்தது முதல் நிகழ்ச்சி. மாவட்ட நீதிமன்றத்தில் கல்கத்தா தீர்ப்பு ஒன்றை மேற்கோளாகச் சொல்ல வேண்டி இருந்தது. வழக்குரைஞர் நூலகத்திலிருந்து '41 கல்கத்தா' என்ற தீர்ப்புத் தொகுதியை எடுக்கப் போனேன். புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தபோது, அதில் இருந்த ஒரு கருந்தேள் என் விரலைக் கொட்டிவிட்டது. தேள் கடி அனுபவம் எனக்கு அதற்கு முன்னும் இருந்ததில்லை; பின்னும் இருந்ததில்லை. கொஞ்ச நேரம் விரலில் கடுகடுப்பு இருந்தது. சிரித்துச் சமாளிக்கப் பார்த்தேன். ஆனால், நேரம் ஆக ஆக விஷம் ஏறிக்கொண்டே போயிற்று. வலி பொறுக்க மாட்டாமல் நீதிபதியிடம் 'வாய்தா' வாங்கிக்கொண்டு என் விடு போய்ச் சேர்ந்தேன்.

அதற்குள் கை முழுவதும் வலி பரவி நெறிகட்டிக் கொண்டது. என் துன்பத்தைச் சகிக்க முடியாத என் அத்தை பக்கத்து வீட்டுப் பையன் மணியை அவசரமாக அழைத்து வந்தார். அவனுக்கு வயது 10 இருக்கும். என்னைக் கண்டாலே அவன் அஞ்சுவான்; அவனைக் கண்டாலே எனக்கு ஏளனம். கையில் ஒரு வேப்பங்குலையை வைத்துக் கொண்டு வாயில் ஏதோ ஒரு மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டு பயமில்லாமல் அவன் என்னை அணுகி வேப்பங்குலையால் என் கையில் மூன்று முறை அடித்தான். உடனே எனக்கிருந்த வலியெல்லாம் என்ன மாயமாகவோ மறைந்துவிட்டது! நடந்த நிகழ்ச்சியை என்னால் நம்ப முடியவில்லை!

மணியை அரை மணி நேரம் குறுக்கு விசாரணை செய்தேன். சந்திர கிரகண காலத்தில் நட்டாற்றில் அரை இடுப்பு அளவு தண்ணீரில் நின்றுகொண்டு லட்சக்கணக்காக ஒரு மந்திரத்தை ஜபித்ததால் தனக்கு இந்த விஷம் இறக்கும் சக்தி கைவந்தது என்று அவன் சொன்னான். பகுத்தறிவுக்கு ஒவ்வாத மந்திரத்துக்கும் இவ்வளவு சக்தி இருக்குமா என்று திகைத்தேன். பெர்ட்ரன்ட் ரஸ்ஸலைப் படித்து உப்பிய என் பகுத்தறிவுக்கு இந்த நிகழ்ச்சி அவமானத்தையே தந்தது.

மாறினேன்

மேற்சொன்ன நிகழ்ச்சியைக் காட்டிலும் அதிர்ச்சி தரத்தக்க பல நிகழ்ச்சிகள் என் வாழ்க்கையில் ஒன்றன் பின் ஒன்றாக நிகழத் தொடங்கின. பகுத்தறிவே துணை என்றிருந்த எனக்கு, பகுத்தறிவைக்

காட்டிலும் உயர்ந்தது உணர்வு. பகுத்தறிவுக்கு எட்டாத பேருண்மைகளை எல்லாம் உணர்வினால் எட்டிப் படிக்க முடியும் என்ற உண்மை கொஞ்சம் கொஞ்சமாகத் தெரியத் தொடங்கியது. உணர்வைத் தீட்டித் தீட்டி உயர்ந்த ஆனந்த நிலைகளை அடையலாம்.

உணர்வுக்கும் பகுத்தறிவுக்கும் முரண்பாடு இல்லை என்பதை கொல்லங்கோட்டில் இருந்த கண்ணப்ப சுவாமிகள் என்ற சித்தர் பல தீட்சைகள் மூலம் எனக்கு உணர்த்தினார். அவர் சொல்லிக் கொடுத்த பயிற்சிகள் மூலம், என் மனம் மாறியது; வாழ்க்கையைப் பார்க்கும் பார்வை மாறியது; என் வாழ்வின் அடிப்படையே மாறிவிட்டது. ஆணவச் சிறையில் இருந்து நாம் செய்யும் செயல் எல்லாம் தன்னலத்தில் வேரூன்றி நிற்கிறது. அதனால் நம் செயல்கள் சமுதாயத்துக்கு கேடு விளைவிக்கின்றன.

ஆனால், ஆன்மப் பயிற்சிகள் மூலம் சில விநாடிகளாவது ஒவ்வொரு நாளும் ஆணவமற்ற நிலையில் நின்று பார்க்கும்போது, நம் சிந்தனையிலும், செயலிலும் பெரும் மாறுதல் ஏற்படுகிறது. இந்த மாறுதலால் நமக்கு மாத்திரமல்ல, சமுதாயத்துக்கும் பெரு நலம் ஏற்படுகிறது. யோகம் என்றால் 'ஒன்றுபட்டு நிற்பது' என்றுதானே பொருள்? மன ஒருமை இல்லாதவர்கள் செயலில் ஈடுபடாமலிருக்கும் வரையில் மற்றவர்களுக்கு நல்லது. ஆனால், அவர்கள் செயற்படத் தொடங்கிவிட்டாலோ, அதனால் விளைவது கலப்பற்ற தீமையே; கோணலான சிந்தையிலிருந்து கோணலான செயல்தானே பிறக்கும்? ஆகவே, செயலில் ஈடுபடுவதற்கு முன் நம் உள்ளத்தை நாம் நீட்டி, நிமிர்த்திப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். தியானத்திலிருந்து பழகினால், நம் உள் மனதுக்கும் வெளி மனதுக்கும் இடையே உள்ள பூசல் நீங்கி இசைவு பிறக்கிறது; ஆணவச் சிறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடலாம்.

நம்மை மறந்து நமக்கு அப்பாலிருக்கும் செம்பொருளை ஆசையோடு சிந்தித்து வணங்கினால், மன ஒருமை ஏற்படும். எல்லாரையும் எல்லாவற்றையும், ஒன்றாகக் காணும் காட்சி நமக்குக் கிட்டும். திருகலாகிய நம் சிந்தை திருந்தும். வாரி வாரி ஆனந்தத்தைப் பருகலாம் என்பதை ஒருவாறு அனுபவத்தில் உணர்கிறேன். ஆனால், அந்த அனுபவத்தின் முழு ஆழத்தையும் நான் இன்னும் கண்டுகொள்ளவில்லை. தியான நிலையிலிருந்து இறங்கியதும் பழைய குப்பைத் தொட்டிக்குள்தான் வரவேண்டி இருக்கிறது. இருந்தாலும் தொட்டியிலுள்ள குப்பை குறைந்து கொண்டேபோகிறது என்பது உறுதி.

ஒரு வழக்கு

"உங்கள் புத்திமதியால் மற்றவர்கள் வாழ்க்கை மாறி இருக்கிறதா?"

நான் மாவட்ட நீதிபதியாக இருந்தபோது, என் நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு ஒன்று நடந்தது. மனைவி தாய் வீட்டக்குப் போனவள் குறித்த நாளில் திரும்பவில்லை என்று கணவனுக்குக் கோபம். கோபத்தில் மனைவியின் கற்பை சந்தேகித்து கணவன் கடிதம் எழுதினார். ஆதாரமற்ற சந்தேகத்தைத் தாங்க முடியாமல் மனைவி கடுங் கோபம் அடைந்தாள். "இனி உங்கள் முகத்தில் விழிப்பதில்லை" என்று பதில் எழுதிவிட்டாள். இருவருக்கும் இடையே இருந்த உறவு முறிந்துவிட்டது. ஐந்தாண்டுகள் ஒருவரையொருவர் சந்திக்கவில்லை.

கணவன் மெத்தப் படித்தவர். பெரிய பதவியில் இருந்தார். பலர் அவருக்குப் பெண் கொடுப்பதற்குப் போட்டி போட்டுக்கொண்டு இருந்தார்கள். ஆனால், அவர் இரண்டாவது திருமணம் செய்வதைத் தடுத்துக் கொண்டு நின்றது சட்டம். ஆகவே, மணப் பூட்டை உடைக்க வேண்டும் என்று கணவன் வழக்குத் தொடர்ந்தார்.

இரு தரப்பாருடைய வழக்கறிஞர்களும், மனிதாபிமானத்தை மறந்துவிட்டு, சட்டபூர்வமான வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இதை கவனித்துக்கொண்டு இருந்த எனக்கு எல்லாம் கேலிக்கூத்தாகப் பட்டது. 'வழக்கை ராஜி செய்ய முயலுங்கள்' என்று வழக்கறிஞர்களிடம் சொல்லிப் பார்த்தேன். 'நிலைமை மிஞ்சிப் போய்விட்டது. ஒன்றும் செய்வதற்கில்லை' என்று சொல்லி இரண்டு வழக்கறிஞர்களும் கையை விரித்துவிட்டார்கள்.

கட்சிக்காரர்கள் இருவரையும் என் சேம்பருக்கு அழைத்து புத்திமதி கூறினேன். பயனில்லை. அவர்களுடைய மூன்று குழந்தைகளையும் அழைத்துவரச் சொன்னேன். தாய் அவர்களை அழைத்து வந்தாள். ஒவ்வொரு குழந்தையும் தங்க விக்கிரகமாக இருந்தது. ஒன்பது வயதுப் பெண்; அவளுக்கு ஒரு தங்கை. ஏழு வயதானவள். கடைக்குட்டிப் பையனுக்கு ஐந்து வயது. பால் மணம் மாறாத குழந்தை.

அவனைப் பார்த்து "உனக்கு அம்மா வேணுமா? அப்பா வேணுமா?" என்று கேட்டேன்.

"எனக்கு ரெண்டு பேரும் வேணும்" என்று, மழலை மொழியில் சொன்னான்.

அவனுடைய அன்பு நிறைந்த முகத்தையும், சூதுவாது இல்லாத பரிவையும் கவனித்துக்கொண்டு இருந்த பெற்றோர் திடீரென்று மனம் குழைந்தார்கள்.

“இந்தக் குழந்தைக்காகவாவது நீங்கள் ஒன்றாக வாழவேண்டும்” என்று அவர்களிடம் சொன்னேன். ‘சரி’ என்று இருவரும் ஆர்வத்தோடு ஒப்புக் கொண்டார்கள். இருவரையும் குழந்தைகளோடு ஒரே வண்டியில் அனுப்பி வைத்தேன்.

சில ஆண்டுகளுக்குப் பின்னால், நான்கு குழந்தைகளோடு அவர்கள் இருவரும் ஒரு திருமண வீட்டுக்கு வந்ததைப் பார்த்தேன். வெறிச்சோடிப் போயிருந்த அவர்களுடைய வாழ்க்கையில் அன்பும், இன்பமும் மறுபடியும் களி நடம் புரிவதைக் கண்டேன்.

அற்பமானது போல் முன்பு ஒரு நாள் நமக்குத் தோன்றும் நிகழ்ச்சி, காலச் சக்கர சுழற்சியில் வாழ்க்கையின் அடிப்படையையே மாற்றி வைத்த நிகழ்ச்சியாக இன்று காட்சிகொடுக்கிறது!



1959-ல்...



ஒரு மாநாட்டில்...



மகன், டாக்டர் சுப்பிரமணியனின்
திருமணத்தில் காமராஜாரை மகராஜனின் மனைவி வரவேற்கிறார்

III இலக்கியச் சுவை



ஒரு கூட்டத்தில் உரையாற்றுகிறார்



உலகத் தமிழ் மாநாடு, மதுரை...
தொழில்நுட்ப விவாத நேரத்தில்...



உலகத் தமிழ் மாநாடு, மதுரை... அறிக்கை ஒன்று அளிக்கிறார்

1. தமிழில் சொல் இன்பம்

பச்சை நிற பட்டு மெத்தையில் ஒன்பது மாதக் குழந்தை தவழ்ந்து, தவழ்ந்து வருகிறது. ஏதோ, தொத்தித் தொத்தி வருவது போல் இருக்கிறது. இந்தக் காட்சியைக் கண்ட யாருக்குமே மகிழ்ச்சி ஏற்படும்; பெற்ற தாய்க்குக் கழிபேருவகை உண்டாகிறது. கிளி தொத்தி வருவதுபோல அல்லவா இருக்கிறது என்று பூரிப்படைகிறாள். அந்த ஆனந்தப் பூரிப்பு சொல் வடிவம் பெறுகிறது.

வெட்டிப் போட்ட மருதங் கொப்பிலே
தொத்தி வந்த கிளியோ

· என்று சொல்லி, குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டு கொஞ்சுகிறாள். உணர்வு வடிவத்தில் இருந்த இன்பம் இப்போது சொல் வடிவம் பெற்றுவிட்டது.

உலக அனுபவங்களைத் தாயன்போடும், பரிவோடும் அனுபவித்து, அவற்றைத் தமதாக்கிக்கொண்டு, பின் தம் அபாரமான சொல் ஆற்றலால் கவிஞர்கள் நமக்கு எடுத்துச் சொல்லும்போது, சொல் இன்பம் நமக்குக் கிட்டுகிறது.

ஓர் உண்மைக் கவிஞனுடைய இதயத்தில் உணர்ச்சிமிக்க கருத்து கருத்தரிக்கிறது. சூல்கொண்ட நேரத்தில், அது அருவ நிலையில் இருக்கிறது. கவிஞன் அதை அடைகாத்துக் கொண்டே இருக்கிறான். சூடு ஏற ஏற, கவிக் கரு நுண்ணுருவம் பெறுகிறது. கவிஞனின் உள் மனதில் இருக்கும் மொழி ஞானத்தைப் புசித்துப் புசித்து அந்த நுண்ணுருவம் சொல்லுருவம் பெறுகிறது.

தமிழ் நாட்டிலுள்ள ஆறுகளின் பெயர்களை நாம் வரிசைப்படுத்தி எழுதினால், பலசரக்குக் கடைப் பட்டியலைப்போல் இருக்கும். அந்த வரிசை அழகு, பொருநை, வைகை, காவிரி, பாலாறு, தென்பெண்ணை என்று எழுதுவோம். இதில் சொல் இன்பம் இல்லை. பாரதியாரைப் போன்ற கவிஞர் இந்த ஆறுகளை வரிசைப்படுத்தும்போது நம்முடைய பட்டியலில் இல்லாத இன்பம் பிறந்துவிடுகிறது.

காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ் கண்டதோர்
வையை பொருநை நதி – என
மேவிய ஆறு பல ஓடித் திரு
மேனி செழித்த தமிழ்நாடு.

நாம் தமிழ் நாட்டை ஒரு நிலப் பரப்பாகவும், நம் ஆறுகளை நீர்ப் பரப்புகளாகவும் பார்க்கிறோம். பாரதியாருக்கு நம்மைக் காட்டிலும் மேலான பரிவும் பக்தியும் இருந்ததால், தமிழ் நாட்டின் திருமேனியைப் பார்த்து அனுபவித்துவிட்டார்; அந்த மேனி எப்படி ஆறுகளால் செழித்தது என்பதையும் பார்த்து மகிழ்ந்தார். உள்ளத்தில் இருந்த இன்பம் சொல்லில் பாய்ந்து தமிழ் நாட்டு ஆறுகளை அழகாக வரிசைப்படுத்தி நிறுத்துகிறது. ஒரு கவிஞர் சேர நாட்டுக்குச் சென்றார். பரராச சேகரன் மலைநாட்டுக்கு அரசனாக இருந்த காலம். தாராளமாக வாரி, வாரி வழங்கிக்கொண்டு இருந்த வள்ளல் அவன். மஞ்சுகள், அதாவது, மேகங்கள்கூட அவனுடைய வள்ளன்மையைக் கண்டு வெட்கிப் போகுமாம். 'மஞ்சும் அஞ்சுங்கைப் பரராச சேகர மன்னன்' என்று அவனை வர்ணிக்கிறார் கவிஞர். அவனுடைய வெற்பிலே, அதாவது, மலைநாட்டில் வாழ்ந்த பெண்கள் சிறந்த அழகிகள்; அவர்களுடைய பாதங்கள் பஞ்சுபோல மென்மையானவை. பஞ்சுமஞ்சும் பாதங்கள். அவர்களுடைய கண்களோ, மன்மத பாணங்களைப்போலக் கூர்மையானவை; கடலினும் பெரியவை, கயல்மீன் போன்ற வடிவமுடையவை, நஞ்சு தோய்ந்த வேல்களைப் போன்று உயிர்களையே பருகும் ஆற்றல் உடையவை. அந்தப் பெண்களைப் பார்த்துப் பாடுகிறார். அந்தப் பாட்டிலுள்ள சொல் இன்பம் போதை ஊட்டுகிறது.

மஞ்சுமஞ்சங்கைப் பரராசசேகர மன்னன் வெற்பில்
பஞ்சுமஞ்சும் பதப் பாவை நல்லீர். படைவேள் பகழி
அஞ்சுமஞ்சும், கடல் அஞ்சும், அஞ்சும், கயல் அஞ்சுமஞ்சும்
நஞ்சுமஞ்சும் கொலை வேலோ உமது நயனங்களே.

மஞ்சு, பஞ்சு, அஞ்சு, நஞ்சு முதலிய மென்மையான ஒலிகளைப் பாடலில் பல இடங்களில் தூவிவிட்டுச் சொல் இன்பத்தை உண்டாக்குகிறார் கவிஞர்.

ஔவையார் பாண்டியனுடைய திருமணத்துக்குச் சென்றிருந்தார். எங்கும் ஒரே கூட்டமாக இருந்தது. வந்தவர்களைச் சமாளிக்க முடியவில்லை. முண்டியடித்துக்கொண்டு சென்றவர்கள் சமையல் அறைக்குள்ளேயே நுழைந்து வயிறு புடைக்க விருந்து அருந்திவிட்டு வந்தார்கள். ஆனால், ஔவையாருக்கு அப்படிச் செய்ய முடியவில்லை. கூட்டத்தில் நெருக்குண்டும், தள்ளுண்டும், பசியினால் சுருக்குண்டும், ஆனால், விருந்து உண்ணாமலேயே வீடு வந்து சேர்ந்தார். வழுதி, அதாவது, பாண்டியன் கல்யாணத்தில்தான் பட்ட தொல்லையைச் சொல் இன்பத்தோடு நமக்குப் பரிமாறுகிறார். எப்படி?

வண்டமிழை ஆய்ந்த வழுதி கலியாணத்து
உண்ட பெருக்கம் உரைக்கக் கேள் - அண்டி
நெருக்குண்டேன், தள்ளுண்டேன், நீள் பசியினாலே
சுருக்குண்டேன், சோறு உண்டிலேன்.

'உண்டேன், உண்டேன்' என்று பலமுறை சொல்லி உண்ணாமையை வலியுறுத்துகின்றன இந்தச் சொற்கள். இவை ஔவையாரின் வேதனையைச் சொல் இன்பத்தில் பொதிந்து நமக்குக் காட்டுகின்றன.

அந்தப்புரத்தில் தசரதனோடு மல்லாடி, பொல்லாத அந்த இரு வரங்களையும் பெற்றுவிட்டாள் கைகேயி. சுமந்திரனை அனுப்பி ராமனை அழைத்துவரச் சொல்கிறாள். சுமந்திரனுக்கோ, ராமனுக்கோ அயோத்தி மக்களுக்கோ அந்தப்புரத்தில் நடந்த நாடகமும் அதன் முடிவும் தெரியாது. ராமனைத் தேரில் அழைத்து வருகிறான் சுமந்திரன். தெருவிலுள்ள மக்கள் ராமனிடத்தில் அன்பு நிறைந்தவர்கள். அவனுக்குப் பட்டாபிஷேகம் ஆகப்போகிறது என்ற ஆர்வத்தில் அவனைக் கண்ணாரக் கண்டு உருகி நிற்கிறார்கள். ராமனைக் காட்டுக்கு அனுப்பப்போகிறாள் கைகேயி என்று கம்பனைப் படிக்கிற நமக்குத் தெரியும். நம்மைப் பார்த்தல்லவா பாடுகிறார் கம்பர், அயோத்தி மக்களைப் பார்த்தல்ல.

'மின் பொருவு' அதாவது, மின்னலை நிகர்த்த பொன் வேலைப்பாடுகளோடு கூடிய, தேரில் வீரன் வரும்போது மக்கள்

அவனைக் கண்டு உருகினார்கள். எப்படி? தன்னுடைய ஒப்பற்ற கன்றானது தன்னை நோக்கித் தாவி வருவதைக் கண்ட பசு எப்படி உருகுமோ, அப்படி உருகினார்களாம் ராமனைக் கண்ட பொது மக்கள். இந்த விவரத்தை இளைச்சுப்போன உரைநடையில் சொல்லும்போது, உருக்கம் ஏற்படவில்லை. ஆனால், கம்பர் கவிச் சொல் எப்படி உருக்குகிறது!

மின் பொருவு தேரின் மிசை
வீரன் வரு போழ்தில்
தன் பொருவில் கன்று தனி
தாவி வரல் கண்டு, ஆங்கு
அன்புருகு சிந்தையொடும்
ஆவுருகுமா போல்
என்புருகி நெஞ்சுருகி
நஞ்சுருகி நிற்பார்.

பாட்டை மொத்தமாகப் படிக்கும்போது, உருகு என்ற சொல் மாத்திரமல்ல, பக்கத்தில் துணையாக நிற்கிற மின் பொருவு, தன் பொருவில் போன்ற சொற்கள்கூட தம்முடைய இயல்பான பொருளை இழந்துவிட்டு, உருகவும், நம்மை உருக்கவும் தொடங்கி விடுகின்றன.

அருணகிரிநாதர் படைத்ததில் இருந்து ஓர் எடுத்துக்காட்டு. அவர் சொல் இன்பத்தை உண்டாக்கும் விதமே அலாதி. ஓர் இன்ப இசை வெள்ளத்தை உண்டாக்கி சொற்களை அந்த இசை வெள்ளத்தில் அவர் மிதக்கவிடுவார்; அல்லது சொற்களை இசை அமுதத்தில் முக்கி, முக்கி, பிழியாமல் அவற்றைத் தன் பாடலில் பொதிந்து வைத்துவிடுவார். அந்தச் சொற்கள் இன்றும் இசையைச் சொட்டிக்கொண்டே நிற்கின்றன.

'டிண்டுமி' என்ற பழைமையான தாள வாத்தியத்தை வாசிக்கச் சொல்லி அவர் கேட்டுக்கொண்டு இருப்பாராம். டிண்டுமியின் தாளம் அவர் இதயத்தில் புகுந்து வேலை செய்யத் தொடங்கியதும், தாளத்துக்கு ஏற்ப திருப்புகழ்ப் பாடல்களை இயற்றி அவரே பாடுவார். கவிக்கலை முடிந்து இசைக்கலை தொடங்கும் எல்லையில் நின்றுகொண்டு அவர் பாடல்களை இயற்றினார். அப்படிப் பாடும்போது, சில சமயங்களில், சொற்கள் அவருடைய உணர்வுகளைச் சொல்ல முடியாமல் திக்குமுக்காடும். உடனே இசைக்கலை விரைந்து வந்து சொற்களுக்குக் கை கொடுக்கும். அறிவு, அறியாமை இந்த இரண்டையும் கடந்த அனுபவத்தை கந்தர் அனுபூதியிலுள்ள பாட்டு ஒன்று எடுத்துச் சொல்கிறது.

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற்றுலகோடு உரை சிந்தையும் மற்று
அறிவற்ற அறியாமையும் மற்றதுவே.

சாமானிய மக்கள் அனுபவித்திராத அனுபவத்தைச் சாமானிய மக்களும் ஒருவாறு உணரும்படிச் செய்கிறது ஸ்வானுபூதி. சொற்களாலான பாடல்தான் இது. சொற்களுக்கு உரிய பொருள் ஒருபுறம் இருக்க, ஒவ்வொரு சொல்லின் ஒலியும் ஒரு தனி உணர்வை உண்டாக்குகிறது. அந்த ஒலி புற ஆகாசத்தில் அலை வடிவாக மிதந்து வந்து, நம் செவிக்குள் புகுந்து, நம் அறிவுக்குள் நுழைந்து, நம் அறிவு ஆகாசத்துக்குள் இருக்கும் ஒளி அணுக்களை ஆட்டிவைத்து, அருணகிரியின் அனுபூதி நிலை நம் ஆன்மாவிலும் நிழலாடும்படி செய்கிறது. பாடலைத் திரும்பச் சொல்லிப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.

2. முத்தொள்ளாயிரம்

ஏறக்குறைய 2,000 ஆண்டுகளுக்கு முன்னால், ஊர் பேர் தெரியாத ஒரு தமிழர், முத்தொள்ளாயிரம் என்ற நூலை எழுதினார். சேர, சோழ, பாண்டியர்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் தொள்ளாயிரம், தொள்ளாயிரமாக மூன்று தொள்ளாயிரம், அதாவது 2,700 கவிகளையும் தொகுத்து முத்தொள்ளாயிரம் என்ற தலைப்பை நூலுக்குக் கொடுத்தார். ஒவ்வொரு கவியிலும் அபூர்வமான நாடகப் பண்பும், கவிப் பண்பும் இருப்பதை உணர்ந்து சுவைக்கலாம்.

அவர் எழுதிய 2,700 பாடல்களில் 2,592 பாடல்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டன. நமக்குக் கிடைத்திருப்பவை எல்லாம் 108 பாடல்களே. ஒவ்வொரு பாடலும் எதுகை மோனைகளின் உதவியால் ஓர் அபூர்வமான உணர்ச்சியை அபிநயம் பிடித்துக் காட்டிக்கொண்டு நிற்கிறது.

காதல் என்ற உணர்ச்சியை எடுத்துக்கொண்டால், அதன் நுணுக்கங்களை விளங்குவதற்கு எத்தனை, எத்தனையோ உத்திகளைக் கையாண்டு இருக்கிறார் முத்தொள்ளாயிர ஆசிரியர். சாதாரணமாக உணர்ச்சிகளை மனித இதயத்துக்கு ஏற்றிச்

சொல்வதுதான் வழக்கம். உயிரற்ற பொருட்களுக்கு மனித உணர்ச்சிகளை ஊட்டிவிடுவார் நமது கவிஞர்.

அந்தக் காலத்தில் வாசல் கதவு ஆடுவதற்காக அடியில் ஓர் இரும்புக் குமிழ் வைத்திருப்பார்கள். அந்தக் குமிழுக்குக் 'குடுமி' என்று பெயர். இந்தக் குடுமி தேய்ந்துகொண்டே இருக்கிறது. ஏன்? தாய்மாரெல்லாம் வீதிக் கதவை அடைக்கிறார்கள். பவனி வருகிற சேர மன்னனுடைய அழகில் சொக்கி தம் மகளிர் காதல் நோயால் வருந்துவார்களே என்ற ஆத்திரத்தில், தாய்மாரெல்லாம் கதவை அடைக்கிறார்கள். அடைத்ததுதான் தாமதம். மகளிரெல்லாம் ஓடிவந்து கதவைத் திறப்பார்கள். பவனி காண வேண்டுமே என்ற ஆசையோடு. சிறிது நேரம் கழித்து தாய் திரும்பிவந்து கதவை அடைக்கிறாள். இப்படியாகக் கதவு அடைக்கப்பட்டும் திறக்கப் பட்டும் ஆடிக்கொண்டே நிற்கிறது. கதவு ஆடுவதற்காக அடியில் வைத்து இருக்கிற குடுமி தேய்ந்துகொண்டே போகிறது.

தாயர் அடைப்ப மகளிர் திறந்திட
தேயத் திரிந்த குடுமியவே – ஆய் மலர்
வண்டுலாஅம் கண்ணி வயமான் தேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு

வண்டு உலாவுகிற தலை மாலையை அணிந்த கோதை, அதாவது, சேரன், குதிரை பூட்டிய தேரில் வருகிறான். அவனைக் கண்டு உலாவுகிறது வீதிக் கதவு. கதவுக்கும் காணக் கண் இருக்கிறது, உலாவக் கால் இருக்கிறது. தாயர் கையிலும், இள மகளிர் கையிலும் அகப்பட்டு கதவின் குடுமி ஏங்கி ஏங்கித் தேய்கிறது.

தாயின் ஆத்திரத்தை எதிர்த்து இயங்குகிறது மகளின் ஆத்திரம். இரண்டு மனித ஆத்திரங்களுக்கு இடையே கிடக்கும் முரண் பாட்டையும், அதனால் விளையும் ஏக்கத்தையும், துடிப்பையும் உயிரற்ற ஓர் இரும்புக் குடுமி நமக்கு எடுத்துச் சொல்கிறது இந்தப் பாட்டில். 2,000 ஆண்டுகளுக்கு முன் இவ்வளவு நாகரிகமான ஓர் உத்தியை ஓர் தமிழ்க் கவிஞன் கையாண்டு இருக்கிறான் என்பதைப் பார்க்கும்போது வியப்பு ஏற்படுகிறது.

இதே உத்தியை சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கலிங்கத்துப்பரணி ஆசிரியர் கையாண்டு இருக்கிறார். கணவன்மார் கலிங்கத்துப் போருக்குச் சென்று இருக்கிறார்கள். பிரிவாற்றாமையால் வருந்தும் மனைவியர் நிலையைச் சொல்கிறார் கவிஞர்:

வருவார் கொழுநர் எனத் திறந்தும்
வாரார் கொழுநர் என அடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ?

குடுமியின் தேய்மானத்தில் பெண்டிரின் ஏக்கத்தையும், மெலிவையும் நம் ஊனக் கண்களால் காண முடியாது. நெற்றிக் கண் படைத்த கவிஞர்களே அதைக் கண்டு நமக்கு உணர்த்த முடியும்.

வெளியே போகக் கூடாது, வீட்டுக்குள்ளேயே இரு என்று சொல்லிவிட்டு, ஒரு தாய் அவசர அவசரமாக ஓடிப்போய், தாள் இறுகும்படி கதவை அடைத்துவிடுகிறாள். தாளைத் திறந்து பார்க்கிறாள் மகள். திறக்க முடியவில்லை. நல்லவேளையாக, கதவில் துளை ஒன்று இருக்கிறது. அதன் வழியாக உற்றுப் பார்க்கிறாள். பாண்டியன் மாக்கடுங்கோனுடைய அழகை எல்லாம் கதவு துவாரத்தின் வழியாகப் பார்த்து அனுபவித்து விடுகிறாள் பெண். காதல் மயக்கத்தில் கதவில் துளைபோட்ட தச்சு ஆசாரியை நினைந்து வாழ்த்துகிறாள். திறவுகோலைப் பதிப்பதற்காகப் போட்ட துளை என்பதை மறந்து, அடாடா, நான் பார்க்க வேண்டுமே என்ற ஆத்திரத்தில் அல்லவா அந்தத் தச்சு ஆசாரி கதவில் துளை போட்டு இருக்கிறான். என்னால் அவனுக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும் என்று வியந்து வாழ்த்துகிறாள்.

காப்பு, அடங்கு என்று அன்னை கடி மனை இல் செறித்து
யாப்பு அடங்க ஓடி அடைத்த பின் – மாக்கடுங்கோன்
நன்னலம் காணக் கதவம் துளை தொட்டார்க்கு
என்னை கொல் கைம்மாறு இனி?

இந்தப் பெண்ணுக்குக் கிடைத்த மன நிறைவு அடுத்த வீட்டுப் பெண்ணுக்குக் கிடைக்கவில்லை. பாண்டியனைச் சுமந்து வந்த பெண் யானை அவள் வீட்டை வெகு வேகமாகத் தாண்டிச் சென்றுவிடுகிறது. பெண் யானையைப் பார்த்து அவளுக்குக் கோபம் வந்துவிடுகிறது. அதைப் பார்த்து, “ஏண்டி, மடப்பிடியே! நீயும் என்னைப் போன்ற பெண்தானே? பெண் மனம் தெரிய வேண்டாமா உனக்கு? பாண்டியனுடைய அழகை ஆர அமரப் பார்க்க வேண்டும் என்று நான் துடித்துக்கொண்டு இருக்கிறேன். இதைக் கவனித்து பைய நடக்க வேண்டாமா நீ? பட பட என்று நடக்கிறாயே! என் மன நிலையைத் தெரிந்துகொள்ளாத உன் பெண்மை ஐயப்பட வேண்டிய பெண்மையாக இருக்கிறதே” என்று சொல்கிறாள் அவள்.

எலாஅ மடப் பிடியே எங் கூடல் கோமான்
புலா அல் நெடுநல்வேல் மாறன் – உலா அங்கால்
பைய நடக்கவும் தேற்றாயால், நின் பெண்மை
ஐயப்படுவது உடைத்து.

இந்த வெண்பாவில் பல அளபெடைகள் வருவதைக் கவனிக்க வேண்டும்.

எலாஅ, புலா அல், உலா அங்கால் என்ற சொற்களில் உள்ள அளபெடைகள், பிடி சாவகாசமாகப் போக வேண்டும் என்று உள்ளத்தில் உள்ள விருப்பத்தைத் தொனிக்கச் செய்கின்றன என்று கவி மர்மத்தை உணர்ந்த ரசிகமணி டி.கே.சி. கூறுவார்கள்.

பாண்டியன் மீது காதல்கொண்ட பெண் நீலோற்பல மாலை அவனது மார்பைத் தழுவிக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறாள். நீலோற்பல மாலைக்குக் கிடைத்த அந்தப் பேறு நமக்குக் கிடைக்க வில்லையே என்று மருகுகிறாள்.

ஒரு நாள் வாசனை பொருந்திய தடாகத்துக்கு நீராடச் செல்கிறாள். தடாகத்தில் ஒரு நீலோற்பலப் பூ அசையாமல் ஒரு தண்டில் நீருக்குள் நின்று தவம் செய்கிறது. இந்தத் தவத்தைப் பார்த்ததும் அவளுக்கு இதுவரை புரியாமல் இருந்த புதிர் விளங்கிவிடுகிறது. இப்படித் தவம் செய்தல்லவா அந்த நீலோற்பல மாலை பாண்டியனுடைய மார்பைத் தழுவிக்கொண்டு நிற்கும் பேற்றைப் பெற்றுவிட்டது? தவம் செய்யாத எனக்கு எல்லாம் அந்த மார்பு கொடுத்துவைக்கவா போகிறது என்று பெருமூச்சு விடுகிறாள்.

கார் நறு நீலம் கடிக் கயத்து வைகலும்
நீர் நிலை நின்ற தவங் கொலோ – மார்பு அணைய,
வண்டு இருக்கும் நக்க தார் வாமான் வழுதியைக்
கொண்டு இருக்கப் பெற்ற குணம்?

இவ்வாறாகக் காதல் வெறியின் எண்ணற்ற வேறுபாடுகளை ஆய்ந்து உணர்ந்தவர் முத்தொள்ளாயிர ஆசிரியர்.

ஓர் ஆங்கில அறிஞர், “காதல் என்பது குறுக்கு எழுத்துப் போட்டியைப்போல. அதைப் பூர்த்தி பண்ணும் வரையில்தான் அது நம் கவனத்தை ஈர்க்கும்; காரியம் கைகூடிய பிறகு அது சுவையற்றதாகிவிடும் (Love is like a cross word puzzle. It interests you only till it is solved)” என்றார். ஆனால், கைகூடும்வரை ஒரே ஏக்கமும், பரபரப்புமாக இருக்கும். குறி கேட்பதும், ஆருடக்காரரைக் கேட்பதும் காதலர் இயல்பு. குறி கேட்பதற்கு ஆள் கிடைக்கா விட்டால், கூடல் இழைத்துப் பார்ப்பார்கள் பண்டைய தமிழ்ப் பெண்கள்.

மணலைப் பரப்பி முன்னால் வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு கண்ணை மூடிக்கொண்டு விரலால் மணலில் ஒரு வட்டம் போட வேண்டும். கோட்டின் துவக்கத்தோடு கோட்டின் முடிவு

பொருந்திவிட்டால் காதலில் வெற்றி கிடைக்கும் என்பது குறிப்பு. அப்படிப் பொருந்தாவிட்டால் காதலில் தோல்விதான் கிடைக்கும் என்பது ஐதீகம்.

பாண்டியனிடத்தில் தன் உள்ளத்தை இழந்த ஒரு பெண், பாண்டியன் தனக்குக் கிட்டுவானோ என்பதைக் கூடல் இழைத்துப் பார்ப்பதற்காக மண்ணைப் பரப்பிவிட்டாள். கண்ணை மூடிக் கொண்டாள். விரலை மணலில் அழுத்திக்கொண்டு, 'ஏ கோடே! நீ கட்டாயம் கூடிவிட வேண்டும்' என்று பிரார்த்தனை செய்கிறாள். அந்தச் சமயத்தில் அச்சம் வந்து அவளைப் பிடித்துக்கொள்கிறது. ஒருக்கால் இந்த வட்டம் கூடாமல் போய்விட்டால் என்ன ஆவது? படுமோசமாகப் போய்விடுமே, காதலனை இழந்துவிடுவோமே என்ற உணர்வு அவளுக்கு ஏற்படுகிறது. உடனே, கூடல் இழைக்கத் தொடங்கியவள் அதைத் தொடர்ந்து இழைக்காமல் திடீரென்று நிறுத்திவிடுகிறாள்.

கூடல் என்பது மதுரையின் மறுபெயர். கூடல் பெருமான் என்றால் மதுரைக்கு அரசன் என்று ஒரு பொருள். கூடல் என்ற சொல்லுக்கு சேர்தல் என்ற பொருளும் இருக்கிறது. ஆகையால், அந்தச் சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்வதில் அவளுக்குச் சுகம் ஏற்பட்டுவிடுகிறது.

கூடல் பெருமானைக் கூடலார் கோமானை
கூடப் பெறுவேனேல், கூடென்று – கூடல்
இழைப்பாள் போல் காட்டி, இழையாது இருக்கும்
பிழைப்பில் பிழைபாக்கு அறிந்து!

அணைதல் என்ற பொருளை உடைய சொல் கூடல். இந்தச் சொல் இந்தப் பாட்டில் மடங்கி, மடங்கி, மாறி மாறி வந்து காதலியின் மயக்கத்தை ஒலியின் மூலமாகவே காட்டிவிடுகிறது.

கூடாமல் போயிற்று என்றால் எவ்வளவு பெரிய ஆபத்து நேரிடும் என்பதை உணர்ந்து, கூடல் இழைக்காமல் 'சும்மா' இருந்து விடுகிறாள். கூடல் இழைப்பதன் நோக்கம் மன அமைதி பெறுதற்காக. ஆனால், அதில் பிழை ஏற்பட்டு அமைதியைக் கெடுப்பதாக இருந்தால் சும்மா இருப்பதே மேல். காதலில் இப்படியொரு கையறு நிலை.

காதலோடு சோகம் கலந்த சாயலை இன்னொரு பாட்டில் காணலாம். உறந்தை என்பது உறையூர். சோழ மன்னனுடைய தலை நகரம். அந்தச் சோழனிடத்தில் காதல்கொண்ட ஒரு பெண், உறையூருக்குப் பத்து மைலுக்கு அப்பால் ஒரு சிறு கிராமத்தில் வாழ்கிறாள். உறையூர் திசையை நோக்கி ஒரு நாரை பறந்து செல்கிறது. "உன் கால்மேல் என் கையிரண்டையும் வைத்து

வணங்குகிறேன். நீ உறையூருக்குச் சென்றால், என் காதல் நோயை அந்தச் சோழ மன்னனுக்கு எடுத்துரைக்க மாட்டாயா?” என்று கெஞ்சுகிற பாவம்!

செங்கால் மட நாராய்! தென் உறந்தை சேறியேல்,
நின் கால் மேல் வைப்பன் என் கை இரண்டும் - வன்பால்
கரை உரிஞ்சி மீன் பிறழும் காவிரி நீர் நாடற்கு
உரையாயோ யான் உற்ற நோய்?

‘காவிரி நீர் நாடன்’ நல்ல செழிப்பாக வாழ்கிறான். காவிரியில் நீந்துகிற மீன்கள் நன்றாகக் கொழுத்துப்போன மீன்கள். போகிற போக்கில் அந்த மீன்கள் கரையின்மேல் உராய்ந்து, அப்படியே துள்ளி நீரில் அந்தர் பல்டி அடித்து விழும். இப்படிக் கொழுத்துப் போய் உள்ள காவிரி நாட்டு மன்னனுக்கு என் எலும்பை எல்லாம் உருக்குகிற காதல் நோய் தெரியவா போகிறது? என்னைப்பற்றிக் கொஞ்சம் அவனிடம் சொல்லமாட்டாயா என்று கேட்க வைக்கிறது காதல் வெறி. இந்த வெறி, பாட்டுக்கு அபூர்வமான வேகத்தையும், வடிவத்தையும் கொடுத்துவிட்டது. மறுபடியும் பாட்டைச் சொல்லிப் பார்ப்போம்.

‘சைக்காலஜி ஆஃப் செக்ஸ்’ என்ற ஒரு பெரிய நூலை ‘ஹேவல்லாக் எல்லிஸ்’ என்பவர் எழுதி இருக்கிறார். காதலர்களின் உளப் பாங்கு எவ்வளவு விசித்திரமானது என்பதைப் பல உதாரணங்களோடு விளக்கி இருக்கிறார். காதலி காலில் போட்டு இருந்த செருப்பைக் கழற்றி வைத்துவிட்டுப் போய்விடுகிறாள். அந்தச் செருப்புக்கு அர்ச்சனை செய்கிறான் காதலன். இப்படி எல்லாம் பல உதாரணங்களைக் கொடுத்து இருக்கிறார் அவர். காதல் தத்துவத்தைப்பற்றி அதிகாரபூர்வமாக பேசியவர் அவர். ஆனால், முத்தொள்ளாயிர ஆசிரியர் ஹேவல்லாக்கையும் மிஞ்சி விடுகிறார் ஒரு பாட்டில்.

பாண்டியன் தன் செல்லக் குதிரை மேல் ஏறிப் பவனி போகிறான். அந்தக் குதிரையின் பெயர் ‘கனவட்டம்’. கனவட்டம் மீது உலா வரும் பாண்டியனைப் பார்த்த ஒரு பெண்ணுக்கு காதல் ஜுரம் ஏற்படுகிறது. அந்தக் குதிரையின் குளம்பு பட்ட தெருப் புழுதியை எடுத்துவந்து, தன் உடம்பெல்லாம் பூசிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாள். உடம்பில் அந்தப் புழுதியைப் பூசினால் உடம்போடு இரண்டறக் கலக்காது. ஆகையால் அந்தப் புழுதியைச் சந்தனம், பன்னீர், குங்குமத்தோடு கலந்து ஒரு குழம்பை உண்டாக்க வேண்டும். அந்தக் குழம்பால் தன் மார்பில் அழகிய சித்திரங்கள் வரைய வேண்டும். அப்படி வரைவதற்கு எழுதுகோல் வேண்டுமே! பூவிதழைச் சுருட்டி எழுதுகோலாக வைத்துக்கொண்டு, அந்தத்

தூசிக் குழம்பில் தொட்டுத் தொட்டுத் தன் மார்பில் எழுத வேண்டும் என்று விரும்புகிறாள்! இந்த அபூர்வமான உணர்ச்சியைக் கவிதைக் குழம்பில் கலந்து தருகிறார் முத்தொள்ளாயிர ஆசிரியர். ஹேவல்லாக் எல்லிஸ் இவரிடம் பாடம் கேட்கவேண்டிய பாடல் இது.

ஆடுகோ! சூடுகோ! ஐதாக் கலந்துகொண்டு
ஏடு கோடாக எழுதுகோ, நீடு
புனவட்டம் பூந்தெரியல் பொற் தேர் வழுதி
கனவட்டம் கால் குடைந்த நீறு!

காதலுக்கும் பக்திக்கும் அடிப்படையாக இருப்பது ஒன்றுதான்! காதல் இயங்கும் பாதையை மாற்றி அமைத்துவிட்டால், காதலுக்கு இலக்காக இறைவனையே கொண்டுவிட்டால், காதல் உயர்ந்த பக்தியாக மாறிவிடுகிறது.

பட்டினத்தார் சிறந்த ஞானி. திருவொற்றியூரில் நீண்ட காலம் வாழ்ந்தவர். சத்சங்கத்தின் பலனை நன்றாக அனுபவித்தவர். அடியார்களோடு குலாவி வாழ்ந்தால் இறைவனோடு குலாவும் பேறு கிடைக்கும் என்ற உண்மையை உணர்ந்தவர். மனித உடல் ஆறாத புண்ணாக இருக்கிறதாம். ஒன்பது வாய் புண்ணாம் அது. ஒவ்வொரு வாயிலும் இந்தப் புண்ணுக்குச் சீழ் வடிந்துகொண்டு இருக்கிறது. இந்தப் புண்ணால் நம்முடைய ஆணவம் தடிப்பு எய்துகிறது. கடவுளுடைய ஆனந்த தத்துவத்தோடு கலக்க ஒட்டாமல் இந்த உடல் தத்துவம் நம்மைத் தடுக்கிறது. ஒன்பது வாய்ப் புண்ணை ஆற்றும் மருந்து ஒன்றுதான்.

தேவாதி தேவனைத் தொழுது திருவொற்றியூர்த் தெருவில் நடக்கும் பக்தர்களுடைய காலடி மண் இந்த உடற் புண்ணை ஆற்றும் மருந்து என்று சொன்னார் பட்டினத்தார்.

ஓடு விழுந்து சீ பாயும் ஒன்பது வாய்ப் புண்ணுக்கு
இடு மருந்து யான் அறிந்துகொண்டேன்; கடு அருந்தும்
தேவாதி தேவன் திருவொற்றியூர்த் தெருவில்
போவார் அடியில் பொடி!

இப்படிச் சொல்வது எல்லாம் வெறும் படாடோபம் அல்ல. உண்மையும் உணர்ச்சியும் இருந்தால்தான், காதலனுடைய காலடி மண்ணும், அடியார்களுடைய அடிப் பொடியும் நமக்கு ஒரு வெறியையே ஊட்ட முடியும்.

பக்தர்களுக்கு இல்லாத கூச்சமும் நாணமும் காதலிகளுக்கு அமைந்துவிடும். நாணம் என்பது பெண்மைக்குக் கவர்ச்சி கொடுக்கிற ஒரு தத்துவம். அழகுள்ள பெண்ணுக்கு மேலும் அழகை

ஊட்டுகிறது நாணம். ஆகவே, காதற் போரில் நாணம் பெண்களுக்கு ஒரு சிறந்த படைக்கலமாக அமைகிறது. சில சமயங்களில் பெண்களுக்கு இடையூறாகவும் அமைகிறது நாணம்.

வள்ளுவர் கற்பனையில் எழுந்த காதலி தன் நெஞ்சைப் பார்த்துச் சொல்கிறாள், 'நெஞ்சே, நீ காமத்தை விடு அல்லது நாணத்தை விடு. இரண்டையும் சேர்த்து என்னால் தாங்க முடியாது'.

காமம் விடுஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு.

இந்த நிலையில் இருக்கிறாள் முத்தொள்ளாயிரப் பெண் ஒருத்தி. பாண்டியனோடு பழகிக்கொண்டு இருக்கிறவள் அவள். அவன் இல்லாத சமயத்திலே, என் காதலை அப்படிச் சொல்வேன், இப்படிச் சொல்வேன் என்றெல்லாம் அளந்துவிடுவாள் தோழிப் பெண்களிடத்தில். ஆனால், பாண்டியனை நேரில் கண்டுவிட்டால், தன் காதலை அவனிடத்தில் சொல்ல முடியாமல் நாணம் தடுத்து விடுகிறது.

மாணார்க் கடந்த மறவெம் போர் மாறனைக்
காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன் - கண்டக்கால்
பூணாகம் தா என்று புல்லப் பெறுவேனோ
நாணோடு உடன் பிறந்த நான்?

அந்த நாண் என்ற ஒன்று இருக்கிறதே அது என் உடன்பிறந்தே என் காதலைக் கொல்லும் நோய் என்று அவள் பல்லை நெரிப்பது, பாடலின் கடைசி வரியில் அற்புதமாக வெளிவருகிறது.

இந்தப் பாட்டில் முதல் மூன்று அடிகள் ஒவ்வொன்றும் நான்கு சீர்களால் ஆனவை. ஆனால், நான்காவது அடியில் மூன்றே சீர்கள். மூன்றாவது சீர் ஒரே எழுத்துத்தான். நான் என்ற சீரில் ஒற்றெழுத்தாகிய 'ன்'னைக் கணக்கில் சேர்க்க வேண்டியதில்லை. இந்த ஒரே எழுத்துத்தான் மூன்றாவது நான்காவது சீர்களிலுள்ள தாளங்களை இசையோடு நிரப்புகிறது. "கடைசிச் சீர் நீண்டு அப்படியே தாளத்தோடு இசை ஒலியாய்ப் போய்க்கொண்டே இருக்கிறது" என்று ரசிகமணி சொல்வார்கள். நான்காவது அடியில் ஒரு சீரைக் குறைத்திருப்பதால், அந்த ஒரு சீரை நிரவல் செய்வதற்காக மூன்றாவது சீரை நீட்டி ஒலிக்கிறோம். தாளத்துக்கும் இசைக்கும் கட்டுப்பட்ட அபூர்வமான பா இனம் வெண்பா. தமிழுக்கே உரிய பா இனம் அது. சொல்லினால் தவம் செய்கிறவர்களுக்குத்தான் வெண்பா கைவரும். முத்தொள்ளாயிர ஆசிரியருக்குக் கைவந்தவாறு தமிழ்க் கவிஞர்கள் பலருக்கு வெண்பா கைவந்ததாகத் தெரியவில்லை.

வெண்பாவில் புகழேந்தி என்று சொல்வதெல்லாம் உபசாரந்தான். கவி தேசிக விநாயகம் பிள்ளைக்கு வெண்பா ஓரளவு கைவந்து இருக்கிறது.

'கவிதையின் சுத்தமான முழுமை' என்று அரவிந்தர் சொல்வார். முத்தொள்ளாயிரப் பாடல்களில் கவிதையின் சுத்தமும், கவிதையின் முழுமையும் மாத்திரமல்ல, நாடகப் பாங்கையும், உணர்ச்சிப் பூரிப்பையும் பார்க்கலாம். கவிதையின் பூரணத்துவத்தைச் சொல்லினால் நிலைநாட்டிய ஒரு கவிஞன் 2000 ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்தான் என்று நினைக்கும்போது, நமக்கு விம்மிதமும், வியப்பும் ஏற்படுகின்றன.

இன்னொரு நாடகக் காட்சி. சேரனிடத்தில் காதல்கொண்ட பெண் ஒருத்தி, மூளையைக் கடன்கொடுத்தவள்போல நடந்து கொள்கிறாள். சாப்பாடு செல்லவில்லை. படுக்கை நொந்துவிட்டது. கண்ணில் இருந்த ஒளி மங்கிவிட்டது. மணிக்கணக்காகச் சுவரைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருப்பாள். யாரைப் பார்த்தாலும் ஒரு வெறித்த பார்வை. டாக்டர்களால் 'டயக்னஸ்' பண்ண முடிய வில்லை. மெலிந்துகொண்டே போகிறாள். எல்லாம் காதல் வெறி காரணமாகத்தான்.

அவளுடைய தாய் அடுத்த வீட்டுக் கிழவியைக் கூட்டிவந்து தன் பெண்ணைப் பார்க்கச் சொல்கிறாள். கிழவி நல்ல அனுபவசாலி. "பேய்க் கோளாறுதான் இது. அதை விரட்டுவதற்கு ஒரு தந்திரம் சொல்கிறேன். உன் வீட்டு முற்றத்தைப் பெருக்கி சுத்தம் பண்ணு. சதுரமாக நாலு கோடுகளை வரைந்து, அதில் வெள்ளாட்டின் ரத்தத்தைத் தெளி. அதன் மேல் ஒரு கும்பத்தை வைத்து, அதில் தண்ணீரை நிறைத்து, மாங்குழையை வைத்து ஜபம் செய். பிறகு உன் பெண்ணை அங்கே உட்கார்த்தி, கும்பத் தண்ணீரால் அவளை நீராட்டு. உடனே அவளுடைய நோய் நீங்கிவிடும்" என்று சொல்கிறாள். அவ்வளவையும் உள் கட்டில் இருந்து ஒட்டுக் கேட்டுக்கொண்டு இருக்கிறாள் பெண். 'அட! அசடுகளா' என்று தனக்குள்ளேயே பேசிக்கொள்கிறாள்.

அடுத்த நாள் காலையில், பெண்ணின் தாய் ஆசாரமாக ஈரச் சேலை உடுத்தி, முற்றத்தில் இடம் பண்ணி, வெள்ளாட்டு ரத்தத்தை அதில் தூவி, மாங்குழையோடு தண்ணீரையும் வைக்கிறாள் ஒரு குடத்தில். சுறுசுறுப்பாகத் தாய் செய்கிற வேலையை எல்லாம் ஏளனமாகப் பார்த்துக்கொண்டு இருக்கிறாள் மகள். அந்தச் சமயத்தில் அவளுடைய தோழி வருகிறாள். அவளிடத்தில் அன்னையின் அசட்டுத்தனத்தைப்பற்றி பேசுகிறாள் காதல் நோயுற்ற பெண். என்ன சொல்கிறாள்?

"போரில் சேர மன்னன் தன் எதிரிகளை முறியடிக்கிறான். தோற்ற வீரர்கள் தங்களுடைய வில், வேல், மகுடம் எல்லாவற்றையும் போர்க்களத்தில் போட்டுவிட்டு ஓடுகிறார்கள். அவற்றைச் சேரன் பெருமிதத்தோடு கைப்பற்றுகிறான். அந்தச் சேரனோடு ஏற்பட்ட என் காதற் போரிலே, அவன் என்னை வென்று என் நெஞ்சையே களங்கொண்டுவிட்டான், கைப்பற்றிவிட்டான். அதனால் எனக்கு உண்டான நோய் இது. சேரனுடைய அருள்தான் இந்த நோய்க்கு மருந்து. இது தெரியாமல் என் தாய் செய்கிற கூத்தைப் பார்த்தாயா? வெள்ளாட்டு ரத்தத்தைத் தூவி, ஏதோ மந்திரம் ஜபித்து, என்னை நீராட்டப் போகிறாளாம். இப்படி நீராட்டிவிட்டு, 'ஏ நோயே! நீ நீங்கு' என்று சொன்னால் என் நோய் நீங்கவா போகிறது? வெறும் அபத்தம்!" என்கிறாள்.

காராட்டு உதிரம் தூஉய் அன்னை களன் இழைத்து
நீராட்டி நீங்கு என்றால் நீங்குமோ - போராட்டு
வென்று களங்கொண்ட வெஞ்சின வேல் கோதைக்கு என்
நெஞ்சு களங்கொண்ட நோய்?

கசப்பும், விரக்தியும், ஏளனமும் ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டு, என்ன வரத்து வருகின்றன இந்தப் பாட்டில்!

நம் இதயத்தைப் பிடித்து ஆட்டுகிற உணர்ச்சியைப் புரிந்து கொள்ளாமல், நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நம்மிடம் பரிவு காட்டும்போது, எரிச்சல் ஏற்படுவது இயல்புதானே? கண்ணன் என்னும் கருந்தெய்வத்தையே நினைந்து நினைந்து உருகிக்கொண்டு இருக்கிறாள் ஆண்டாள். அவளுடைய தெய்வீகக் காதலைப் புரிந்துகொள்ளாத அவளுடைய சேடிகள், "உனக்கு உடம்புக்கென்ன? டாக்டரை அழைத்து வரட்டுமா?" என்று கேட்கிறார்கள்.

"எனக்குப் புறம்பாக நின்று அழகு பேசத் தெரியும் உங்களுக்கு. என் அகத்தில் நின்று என்னை வாட வைக்கிறானே, என் வருத்தம் தெரியாத அந்தப் பெருமான். அவன் அரையில் அணிந்து இருக்கிற பட்டுப் பீதாம்பரத்தைப் பறித்து வந்து, அதால் எனக்கு வீசிறினால், என் வாட்டம் எல்லாம் தெளிந்துவிடுமே. பெண்களே, என் மனக் குறிப்பு தெரியாமல் என்னென்னவோ சொல்கிறீர்களே? உங்கள் பேச்சு எனக்கு மேலும் வேதனை உண்டாக்குகிறதே. புண்ணுக்கு மருந்து போடுகிறோம் என்று சொல்லி, புண்ணுக்குள் புளியை ஊற்றுகிறீர்களே" என்று முறையிடுகிறாள் ஆண்டாள்.

முத்தொள்ளாயிரக் காதலியின் தாய் செய்கிற செயல், ஆண்டாளுடைய தோழிகளை நினைவுறுத்துகிறது. இருவருமே புண்ணில் புளிப்பெய்கிற ஆசாமிகள்.

முத்தொள்ளாயிர ஆசிரியர் காதலைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கும்போதே penology-யைப் பற்றியும் பேசுவார். Penology என்றால் தண்டனை இயல் என்று பொருள். குற்றம் செய்தவனையே தண்டிக்க வேண்டும். ஒருவன் செய்த குற்றத்துக்காக அவனோடு தொடர்புகொண்ட மற்றொருவனைத் தண்டிக்கக் கூடாது என்பது விதி. எஜமானுடைய காரை எஜமானுடைய காரியமாக வேலைக் காரன் ஓட்டிச் செல்கிறான். அப்போது கவனக் குறைவால் இன்னொரு வண்டி மீது மோதி அவன் நஷ்டத்தை உண்டாக்கினால், அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டிய பொறுப்பு வேலைக்காரனுக்கு மாத்திரமல்ல, எஜமானுக்கும் உண்டு. இந்தக் கொள்கை சட்டத்தில் விதிவிலக்காக அமைந்த கொள்கை. இந்தச் சட்டக் கருத்துக்களை எல்லாம் நினைவுறுத்துகிறது ஒரு முத்தொள்ளாயிரப் பாடல்.

பூங்காவனத்தில் சோழனைக் கண்டு காதலிக்கிறாள் ஒரு பெண். காதல் நிறைவேறாத காரணத்தால், பல தொல்லைகளுக்கு உள்ளாகிறாள். கொஞ்சம் கொஞ்சமாக அவளுடைய தோள்கள் மெலிகின்றன. குற்றம் செய்த அவளுடைய கண்கள் மெலியவில்லை. சோழனோடு குலாவிப் பிழைசெய்த அவள் நெஞ்சமும் மெலிய வில்லை. ஒரு குற்றமும் செய்யாத அவள் தோள்கள் மெலிகின்றன. என்ன நியாயம் இது? குற்றம் செய்யாத நிரபராதியைத் தண்டிப்பது இந்தச் சோழ நாட்டு நியாயம்போல் இருக்கிறதே. அழகு, அழகு, சோழ நீதி என்று சோழன் மேல் குற்றம் சாட்டுகிறாள்.

கண்டன உண் கண், கலந்தன நல் நெஞ்சம்
தண்டப்படுவது தடமென் தோள் கண்டாய்!
உலா அ மறுகின் உறையூர் வளவற்கு
எலாஅம் முறைகிடந்த ஆறு!

இப்படி முறை பிறழ்ந்த முறையை நீதி என்றா சொல்வது? உணவு ஏற்காததால் உடல் மெலிந்து போய்விட்டது. உணவு ஏற்காததற்குக் காரணம் சோழனைக் கண்டதால் ஏற்பட்ட காதல். கண்டது கண், குலாவுவது உள்ளம். ஆனால், ஒரு பாவமும் அறியாத தோள்கள் மெலிகின்றன. தோள்கள் மெலிந்ததற்குக் காரணம் சோழ அரசன். அவன் அவற்றைத் தண்டனைக்கு உள்ளாக்கிவிட்டான் என்று காதலி எண்ணும்போது, பாவனை உலகத்தில் எப்படி அவள் இறக்கை கட்டிப் பறக்கிறாள் என்பதை உணர்கிறோம். ஷேக்ஸ்பியர் சொல்வதுபோல, காதலர்களும், கவிஞர்களும், கிறுக்குப்பிடித்தவர்களும் கற்பனையால் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள். வெறும் காற்றுப் போலுள்ள சூனியத்துக்கு அவர்கள் ஒரு ரூபத்தையும், நாமத்தையும் கொடுத்து விடுவார்கள்.

காதலர்களை மாத்திரமல்ல, நாட்டு வளத்தையும் காதல் கண் கொண்டு பார்த்து ரசிக்கும் வல்லமை முத்தொள்ளாயிர ஆசிரியருக்கு இருக்கிறது. நச்சிலை வேலைக் கையில் தாங்கி இருக்கும் கோதை, அதாவது, சேர மன்னனுடைய நாடு வளம் நிறைந்த நாடு. அங்கே திருடர் பயமில்லை. கொலைகாரர்களுடைய பயம் இல்லை. குடிகளுக்கு ஒரு பயமும் இல்லாத நாடு அது.

ஒரே ஒரு பயம் அங்கு இருக்கிறதாம். தண்ணீர் நிறைந்த நஞ்சை வயல்களில் செவ்வாம்பல் மொட்டுகள் இருக்கின்றன. மொட்டுகள் திடீரென்று விரிந்து பூக்கின்றன. செக்கச் செவேல் என்று இருக்கிறது வயல் எல்லாம். தண்ணீரில் தீப்பிடித்துவிட்டதோ என்று அஞ்சி, பறவைகள் தம் குஞ்சுகளை கைச் சிறகால் ஒடுக்கிப் பாதுகாவல் செய்கின்றன. பறவைகளுக்கு அறியாமையால் ஏற்படுகிறது இந்த அச்சம். இந்த அச்சத்தைத் தவிர வேறுவிதமான கவலை அல்லது அச்சம் சேர நாட்டிலேயே இல்லையாம்.

அள்ளற் பழனத்து அரக்கு ஆம்பல் வாய் அவிழ
வெள்ளந் தீப்பட்டது என எரீ இப் புள்ளினம் தம்
கைச் சிறகால் பார்ப்பு ஒடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலை வேல் கைக் கோதை நாடு.

சட்டம், ஒழுங்கு, அமைதி எல்லாவற்றையும் அப்படி நிலைநாட்டி வந்தான் சேரன் என்ற உண்மையை எக்களிப்போடும், நகைச்சுவையோடும் பாராட்டுகிறார் கவிஞர்.

20-ம் நூற்றாண்டில் தமிழ் நன்றாக வளர்ந்து இருக்கிறது. சிறப்பாக கண்டனத் துறையிலும், பாராட்டுத் துறையிலும் தமிழ் வளர்ந்துகொண்டே இருக்கிறது. ஆனால், நம்முடைய பாராட்டுத் தமிழ், கண்டனத் தமிழைப்போலவே, பச்சை பச்சையாக இருக்கிறது. ஆற்றல் இருந்தாலும் வினயமோ நிதானமோ நம்முடைய தமிழில் அதிகமாக இல்லை.

2000 ஆண்டுகளுக்கு முன் நம்முடைய முன்னோர்கள் எவ்வளவு நாசூக்காக நகாஸ் தமிழில் ஒருவரை ஒருவர் பாராட்டி இருக்கிறார்கள் என்பதை, முத்தொள்ளாயிரம் நமக்குத் தெளிவு படுத்துகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கொற்கை என்ற துறைமுகம் அந்தக் காலத்தில் பாண்டியனுடைய தலைநகரமாக இருந்தது. பெட்ரோல் வளத்தால் அரேபியா முதலிய நாடுகளுக்கு தற்சமயம் செல்வாக்கு ஏற்பட்டிருப்பதுபோல், அந்தக் காலத்தில் முத்து வளத்தால் உலகம் முழுவதும் பாண்டியனுக்கு செல்வாக்கு இருந்தது. ரோமாபுரியில் இருந்து கப்பல்கள் கொற்கைக்கு இருந்தன. மது முதலிய பொருட்களை இறக்குமதி செய்துவிட்டு,

ஒளி வீசும் பாண்டி நாட்டு முத்துக்களை ஏற்றிக் கொண்டு ஐரோப்பாவுக்குச் சென்றன அந்தக் கப்பல்கள். முத்து வளத்தால் பாண்டியனுக்குச் செல்வ வளமும், உலகப் புகழும் கிட்டியது.

அப்பேர்ப்பட்ட பாண்டியனுடைய அரசவையில் முத் தொள்ளாயிர ஆசிரியர் பாண்டியனைப் பாராட்டத் தொடங்குகிறார். அமைச்சர்கள் புடை சூழ அரியாசனத்தில் பாண்டியன் வீற்றிருக்கிறான். கவிஞர் எழுந்து நின்று, பாண்டியனை நோக்கிப் பேசுகிறார்: "அரசே, ஒளி தரும் முத்துக்கள் உன்னுடைய கொற்கையில்தான் விளையும் என்றா நினைக்கிறாய்? இல்லை" என்று சொல்லி நிறுத்துகிறார். இதைக் கேட்டவுடன் அரசவையில் ஒரு சலசலப்பும், திகைப்பும், பாண்டியனுடைய கண்களில் கொஞ்சம் கசப்பு கலந்த வியப்பும் தோன்றுகின்றன.

இப்பி யீன்றிட்ட எரி கதிர் நித்திலம்
கொற்கையே யல்ல படுவது

'ட்ரமாடிக் சஸ்பென்ஸ்' என்று ஆங்கிலத்தில் இதைச் சொல்வோம். நாடக உத்தியைப் பயன்படுத்தி ஒரு திகைப்பை உண்டாக்குகிறார் கவிஞர். 'பாண்டியனுக்கே உரியது என்று உலகம் எல்லாம் ஒப்புக்கொள்ளும் சிறப்பை பாண்டியன் முன்னிலையில் மறுக்கிறாரே இந்தக் கவிஞர். என்ன துணிச்சல் அவருக்கு?' என்று நாம் வியக்கிறோம். கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு, அடுத்த இரண்டு வரிகளைப் பாடுகிறார்.

கவிஞருடைய பார்வை இப்போது பாண்டியன் கையில் பிடித்திருக்கும் வேல் மேல் விழுகிறது. அந்த வேல் எப்படி இருக்கிறது? துருப்பிடித்த வேல் அல்ல, ரத்தம் தோய்ந்த வேல். எதிரிகள் மீது பாய்ந்து அவர்களுடைய உயிரைக் குடித்துவிட்டு வந்த வீர வேல். பாண்டியனது வீரத்தை வியாக்யானம் செய்து கொண்டு இருக்கிறது அந்த வேல். வேலைப் பார்த்த பிறகு, கவிஞருடைய பார்வை மன்னன் மார்பில் விழுகிறது.

நெஞ்சுக்கூடு தெரிந்துவிடக் கூடாதே என்று நாம் சட்டைக்கு மேல் சட்டை போட்டு நம் மார்பை மறைத்துக்கொள்கிறோம். ஆனால், பழங்காலத் தமிழன் உடல் வளம் பொருந்தியவனாக இருந்தான். சட்டையைக்கொண்டு மார்பை மூட வேண்டிய அவசியம் அவனுக்கில்லை. 13-ம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டுக்கு வந்த 'மார்க்கோ போலோ' என்ற இத்தாலிய யாத்ரீகன், "இந்த நாட்டில் தையல்காரர்களுக்கே வேலையில்லை" என்று சொன்னான்.

சட்டை போட்டு மறைக்கவில்லை என்றாலும், பாண்டியன் மார்பில் சந்தனச் சாந்தைப் பூசி இருக்கிறான். பொதிகை மலைச்

சந்தனம். பரந்து விரிந்த அவன் மார்பிலிருந்து அழகு ஒழுகுகிறது. மார்பில் பூசி இருந்த சந்தனமோ அரசவை முழுவதும் இனிய மணத்தைப் பரப்பிக்கொண்டு இருக்கிறது. இந்தக் காட்சியைக் கன்னிப் பெண்ணாக இருந்து காதல் ஆர்வத்தோடு பார்க்கிறார் கவிஞர். 'வீரமும், அழகும் நிறைந்த இந்த மன்னனை மணவாளனாகப் பெறும் பேறு எனக்குக் கிடைக்குமா?' என்று நினைத்து ஏங்குகிறார்களாம் பல பெண்கள். அந்த ஏக்கத்தில், அவர்கள் கண்களில் நீர் ததும்பிக் கன்னத்தின் வழியாக வடிகிறது. முத்து முத்தாக வடிகிறது! சொல்கிறார் கவிஞர்: 'முத்து என்பது உனது கொற்கையில் மாத்திரம் விளையும் சரக்கு என்றா நினைக்கிறாய்? இல்லை மன்னனே! உனது அழகிய மார்பை நினைந்து உருகும் பெண்களின் கண்ணிலும் அது விளைகிறது.'

கொற்கைக் குருதி வேல் மாறன் குளிர் சாந்தகலம்
கருதியார் கண்ணும் படும்.

2000 ஆண்டுகளுக்கு முன் பாராட்டுத் தமிழ் எவ்வளவு நாகரிகத்தோடும், கலைப்பாங்கோடும், வினயமாகவும் பேசியது என்பதைப் பாட்டின் முழு உருவம் நமக்கு உணர்த்துகிறது.

இப்பி யீன்றிட்ட எரி கதிர் நித்திலம்
கொற்கையே யல்ல படுவது
கொற்கைக் குருதி வேல் மாறன் குளிர் சாந்தகலம்
கருதியார் கண்ணும் படும்.

அருமையான பாடல்! பாட்டைச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். மனதுக்குள் நுழைந்துவிட்டால் பாடல் அங்கே சுற்றிக்கொண்டே நிற்கும். அப்படி ஒரு, 'ஹான்டிங் ரிதம்' பாடலுக்கு இருக்கிறது.

முத்தொள்ளாயிரத்தில் நமக்குக் கிடைத்த பாடல்கள் பெரும்பாலும் காதலைப்பற்றியவை. வீரத்தைப்பற்றியுள்ள பாடல்கள் சில. அவற்றில் இரண்டொன்றைப் பதம் பார்க்கலாம்.

போர்த் தொழிலையே ஒழிக்கலாம் என்ற நம்பிக்கை தற்காலத்தில் தான் பிறந்து இருக்கிறது. அந்தக் காலத்தில் போர் என்பது தடுக்க முடியாத நிகழ்ச்சி என்று மக்கள் கருதினார்கள். தற்காப்புக்காகப் போரையும் போர் வீரத்தையும் புகழ்வதே மரபாக இருந்தது. சேர மன்னனுடைய வீரத்தை, பகைவர்களுடைய முன்னிலையில் புகழ்கிறான் ஒரு வீரன்:

"ஏ, மன்னர்களே! பல யானைப் படைகளை நீங்கள் வைத்து இருக்கிறீர்கள். ஆனால், சேரன் படைக்கு முன்னால் உங்களால் நிற்க முடியாது. அவன் விதித்த கப்பத்தை மரியாதையாகக்

கட்டிவிடுங்கள். நீங்கள் பிழைப்பதற்கு அதுதான் ஒரே வழி. சேரனுடைய வில் கொடிக்கு நீங்கள் உட்பட்டீர்கள் என்பதை, உங்கள் கோட்டைச் சுவர்களில் அவனுடைய வில்லைச் சித்திரமாக எழுதுங்கள். தேவர்கள் சேரனுக்கு அடங்கி வாழ்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? வானவில்லை அவர்கள் வானத்தில் போடுவதில் இருந்து அது உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று கேட்கிறான்.

பல் யானை மன்னீர், படு திறை தந்து உய்மின்,
மல்லல் நெடு மதில் வாங்கு வில் பூட்டுமின்,
வள் இதழ் வாடாத வானோரும் – வானவன்
வில் எழுதி வாழ்வார் விசும்பு.

சோழ மன்னனுடைய போர் யானையின் நடையைக் கம்பீரமாக வர்ணிக்கிறார் ஆசிரியர். ஒரு காலைக் காஞ்சிபுரத்தில் வைக்கிறது. அடுத்த கால் தஞ்சை நகரத்தில். தஞ்சையில் இருந்து அப்படியே ஈழ நாடு, அதாவது, இலங்கையில் வைக்கிறது பின் ஒரு காலை. யானையின் நடை வேகத்தில் எதிரிகள் கலங்குகிறார்கள்.

கச்சி ஒரு கால் மிதியா, ஒரு காலால்
தத்துநீர்த் தண் தஞ்சை தான் மிதியாப் பிற்றையும்
ஈழம் ஒரு கால் மிதியா வருமே, நம்
கோழியர் கோக் கிள்ளி களிறு.

அமைதியான காலத்தில் யானை நடக்கும் நடை இப்படி.

போர் நடக்கும்போது யானை செய்கிற அட்டகாசத்தை இன்னொரு பாடல் சொல்கிறது. சேரனது யானைக்குக் கள்ளை ஊட்டி போர்க்களத்தில் கொண்டுபோய் நிறுத்திவிடுவார்கள். அது எதிரிப் படையை மிதித்து நசுக்கிவிடும். பிறகு பகை அரசன் இருக்கும் இடத்தை நோக்கிப் போகும். வெண்கொற்றக் குடை பகை அரசன் இருக்கும் இடத்தைக் குறித்துக்கொண்டு நிற்கும். யானை அந்த வெள்ளைக் குடையைத் தும்பிக்கையால் பறித்து, தரையில் சாடி அடித்து குடையைத் தவிடு பொடியாக்கிவிடும். இப்படிச் செய்வது அதற்கு ஒரு பழக்கமாகவே ஆகிவிட்டது. இந்தப் பழக்கத்தால், குடிபோதையில் உள்ள யானை வானத்தில் உள்ள முழு நிலவை வெண்கொற்றக் குடை என்று தப்புக் கணக்குப் போட்டு அதைப் பறித்து நொறுக்கிவிடலாம் என்று தன் தும்பிக்கையை நீட்டுமாம்.

வீறு சால் மன்னர் விரி தாம வெண் குடையைப்
பாற எறிந்த பரிசயத்தால் – தேறாது,
செங் கண் மாக் கோதை சின வெங் களி யானை
திங்கள் மேல் நீட்டும் தன் கை.

எட்டாத திங்களையும் எட்டிப் பிடிக்கும் யானையின் கம்பீரமான துதிக்கை, செய்யுளின் கடைசி வரியில் உயர்ந்து வளைந்து காட்சி கொடுத்துக்கொண்டே நிற்கிறது.

கடைசியாக, ஒரு பக்திப் பாடல். பேரண்டத்தைப் பார்த்தார் ஆசிரியர். செவ்வாய், புதன் முதலிய கிரகங்கள் (நாட்கள்), எண்ணிறந்த நட்சத்திரங்கள், அதாவது, மீன்கள், சூரிய சந்திரர்கள் இவற்றை எல்லாம் படைத்தவன் கடவுள் என்பதை உணர்ந்தார். ‘அந்தக் கடவுளை சைவர்கள் திருவாதிரையான் என்று சொல்கிறார்களே இது என்ன விநோதம்? ஆதிரை என்பது எத்தனையோ நட்சத்திரங்களில் ஒன்றுதானே? அதை மாத்திரமா அந்தக் கடவுள் படைத்தான்? அப்படிப் பொருள்படும்படியாக அவனுக்கு ஒரு நாமத்தைச் சூட்டி இருக்கிறார்களே, இது என்ன மயக்கம்?’ என்று எண்ணுகிறார்.

மன்னிய நாள், மீன், மதி, கனலி என்று இவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப் பின்னர்தாம்
ஆதிரையான் ஆதிரையான் என்று என்று அயருமால்
ஊர் திரை நீர் வேலி உலகு.

இந்தப் பாட்டில் பக்தி, நகைச்சுவை, வியப்பு, போலி ஏளனம் எல்லாமும் அருமையான கவி வடிவம் பெறுகின்றன.

இப்படியாக, முத்தொள்ளாயிரப் பாடல் ஒவ்வொன்றும், பல வண்ண ரேகைகள் இழைத்த ஒளிப் பிழம்பாக அமைந்து இருக்கிறது. இந்தப் பாடல்களை அனுபவிப்பதற்கு ஆள் கிடைக்கவில்லை. அனுபவிக்கத் தொடங்கிவிட்டால், அனுபவித்து முடிப்பதற்கு ஓர் ஆயுட்காலம் காணாது.

3. அம்மையார் வாக்கு

சான்றோர்களுக்கு எல்லாம் சிறந்த சான்றோர் காரைக்கால் அம்மையார். அவருடைய வாக்கை உள்ளுணர்வோடு நாம் கேட்போமானால், நமக்குக்கூட ஞானம் பிறந்துவிடும்.

படித்தவர்கள் எத்தனையோ பேரைப் பார்க்கிறோம். நிமிடத்துக்கு நூறு மேற்கோள்களை ஒப்பிப்பார்கள். வேதம் என்ன, சாஸ்திரம் என்ன, உபநிடதம் என்ன, அவர்கள் படிக்காதது ஒன்றுமே இல்லையோ என்ற பயமே நமக்கு ஏற்படும். அவர்கள் பேசும்போது, ஷேக்ஸ்பியர், மில்டன், காளிதாஸன், கம்பன் என்று சொல்லி

மேற்கோள் அருவியை 'திம் திம்' என்று நம் தலை மீது விழச்செய்து நம்மைத் திணற அடிப்பார்கள்.

ஆனால், ஊன்றிப் பார்த்தால், மெய் உணர்வு துளிகூட இல்லாதவர்களாக இருப்பார்கள் அவர்கள். படிப்பு, அறியாமையை ஒழிக்க வேண்டும். ஆனால், அவர்களுடைய படிப்போ, அவர்களுடைய அறியாமையை மறைப்பதற்கு உதவுகிறது. அதோடு அந்த விருதாப் படிப்பு அவர்களுடைய ஆணவத்துக்குத் தடிப்பைக் கொடுக்கிறது; அவர்களுடைய வித்யா கர்வத்தை வளர்க்கிறது. காரைக்கால் அம்மையாருக்கு அவர்களிடத்தில் ஒரு பக்கம் இரக்கம் உண்டாகிறது, இன்னொரு பக்கம் சீற்றமே உண்டாகிறது. அவர்களைப் பார்த்துச் சொல்கிறார் அம்மையார்:

நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக.

அந்தப் புத்தகப் புழுக்கள் ஏடுகளையே உணவாகக்கொண்டு, டன் கணக்கான நூல் அறிவைச் சதா சுமந்துகொண்டு, ஆனால், கொஞ்சமும் உணர்வில்லாமல் திரிகின்றன. அப்படியே திரிந்து கொண்டு இருக்கட்டும். ஆனால், நான்,

ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றே என் உள்ளத்தின் உள் அடைத்தேன் - ஒன்றே காண்
கங்கையான் திங்கட் கதிர் முடியான் பொங்கு ஒளி சேர்
அங்கையாற்கு ஆளாம் அது.

பொங்குகிற தீயை, பொங்குகிற ஒளியை உள்ளங்கையில் வைத்து இருக்கிறானே, அந்தச் சிவபெருமான் கங்கையைத் தலையில் கொண்டவன், திங்களை (சந்திரனை) கதிர் முடியில் கொண்டவன் அவனுக்கு நான் ஆளாக வேண்டும். அவனுக்கு என் உடல், பொருள், ஆவியை எல்லாம் அர்ப்பணம் செய்துவிட்டேன். அவனுக்கு நான் அடிமை என்ற அந்த ஒரே நினைப்புத்தான் எனக்கு. ஒரே துணிபுதான் எனக்கு. அது ஒன்றையே என் உள்ளத்தின் உள் அடைத்துத் தாழ்ப்பாள் போட்டு இறுக்கி வைத்துக்கொண்டேன். அது ஒன்றையே நான் தியானம் செய்து வருகிறேன். எனக்கு அந்த நூல் அறிவு எல்லாம் வேண்டியதில்லை. இறைவன் என் உணர்வினுள் நுழைந்துவிட்டால் போதும்.

அற்புதமான பாட்டு இது. அற்புதத் திருவந்தாதி என்ற தலைப்பில் காரைக்கால் அம்மையார் பாடிய 101 பாடல்களில் இது ஒன்று. 30 ஆண்டுகளுக்கு முன், எனது ஆசான் ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் இந்தப் பாட்டைப் பாடி எனக்கு விளக்கினார்கள். பாட்டைக் கேட்டதும் புளகாங்கிதம் அடைந்தேன். சில நாட்களுக்குப் பின் அற்புதத் திருவந்தாதில் உள்ள மிச்சமிருக்கும் 100 பாடல்களையும் படித்துப் படித்து அனுபவித்தேன். என்

அனுபவத்தை ரசிகமணிக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தினேன். அவர்களுடைய பதில் வந்தது. அதில்,

'காரைக்கால் அம்மையாரின் தொனி தங்கள் காதுக்கு எட்டிவிட்டது. வெகுநாளாக எட்டாமல் இருந்தது தமிழருக்கு. வேண்டாத கதையை சைவ சபைகளில் அளந்துகொண்டே இருந்தார்கள். யாரும் அற்புதத் திருவந்தாதியைக் கவனிக்கவில்லை. அந்தாதிச் செய்யுட்களில் உள்ள சிருஷ்டி அற்புதம் விளங்கவில்லை. மாம்பழம் கைக்கு வந்த அற்புதந்தான் விளங்கிற்று. கறுப்புக்கட்டி வந்திருந்தாலும் போதும். அவர்களுக்குக் கடித்துத் தின்ன ஏதாவது வேண்டும். அவ்வளவுதான். தாங்கள் பாடல்களை நன்றாய் அனுபவித்துவிட்டீர்கள். காரைக்கால் அம்மையாருக்கு ஒரு 'பிரைஸ்' கிடைத்துவிட்டது. மிக்க சந்தோஷம்.'

-என்று எழுதி இருந்தார்கள். அந்தச் சந்தோஷத்துக்குள் ஓர் ஆற்றாமை; இப்பேர்ப்பட்ட அரிய அற்புதங்களை எல்லாம் தமிழன் அனுபவிக்காமல் இருக்கிறானே என்ற ஆற்றாமை.

இன்று *(5-9-1977)* டி.கே.சி-யின் *96*-வது பிறந்த நாள். இந்தப் பாடலை நாம் எல்லோரும் அனுபவித்து டி.கே.சி-யின் ஆன்மாவுக்குச் சாந்தி அளிப்போமாக.

பிறந்து, தமிழ் மொழியைப் பயின்ற பின்னெல்லாம், சிவபிரானுடைய திருவடிகளையே சிந்தித்துச் சிந்தித்து உருகி வந்தார் காரைக்கால் அம்மையார். நீல ஒளி திகழும் கண்டத்தை உடைய அந்தப் பெருமான், என்னுடைய வேதனையை எல்லாம் எப்போது தீர்க்கப் போகிறானோ, தெரியவில்லையே என்று மருகுகிறார் அம்மையார்.

பிறந்து, மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் – நிறந் திகழும்
மை ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே,
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்?

இப்படி எல்லாம் முறையிட்டும், அம்மையாருக்கு இரங்குவதாக இல்லை இறைவன். இவ்வாறு இரங்காமல் இருப்பதன் மூலமே அம்மையாருடைய காதலை வளர்க்கிறான் அவன்.

இடர் களையாரேனும் –என்னுடைய இடர்களைக் களைய மாட்டேன் என்று அவர் சொன்னாலும்,

எமக்கு இரங்காரேனும் –நம் மீது அவர் பரிவு காட்டாமல் இருந்தாலும்,

படரும் நெறி பணியாரேனும் –நான் மேற்கொள்ளவேண்டிய பாதை எது, எந்தப் பாதையில் நடந்தால் அவரை அடையலாம்

என்று அவர் என்னைப் பணிக்கலாம். அதையும் அவர் செய்ய மாட்டேன் என்கிறார். இப்படி எல்லாம் அவர் என் மீது அன்பற்றவராக இருந்தாலும், மண்டை ஓட்டை எப் போதும் கையில் வைத்துக்கொண்டு, தீயைக் கையிலே ஏந்திச் சுடர் உருவத்தில் ஆடிக்கொண்டு இருக்கிறாரே எம்பெருமான், அவரிடம் அன்பை அறாமல் பெய்துகொண்டே இருக்கிறதே என் நெஞ்சு.

இடர் களையாரேனும், எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியாரேனும் – சுடர் உருவில்
என்பு அறாக் கோலத்து எரி ஆடும் எம் மானார்க்கு
அன்பு அறாது என் நெஞ்சு அவர்க்கு.

இப்படியாக, ஆன்ம இருட்டில் Dark night of the soul என்று மேல்நாட்டு ஞானிகள் கூறுவார்களே அந்த ஆன்ம இருட்டில் புதைந்து வேதனைப்பட்டார் அம்மையார். என்றும் விடியாதோ இந்த ஆன்ம இருட்டு என்று தவித்துக்கொண்டு இருந்தபோது, திடீரென்று ஒரு நாள் இறைவனைக் காணும் அறிவு அம்மையாருக்கு ஏற்பட்டது. ஒரே ஆனந்தமும் நன்றியும் கலந்த பாட்டில் தம் அனுபவத்தைக் கொண்டாடுகிறார்.

இன்று நமக்கு எளிதே, மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை – என்று ஓர்
மூவா மதியானை மூவேழு உலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு.

நான்முகனும், திருமாலும் அன்று தேடியும் தேடொணாத, அளந்தும் அளக்கொணாத அந்த இறைவனை இன்று நான் காணும் அறிவு பெற்றுவிட்டேன். அவனைக் காண்பது எவ்வளவு எளிதாக இருக்கிறது எனக்கு.

பாட்டைப் படிக்கும்போது நமக்கு அவனைக் காணும் அறிவு எளிதாகக் கிட்டிவிட்டதுபோலத் தோன்றுகிறது.

காரைக்கால் அம்மையார் சிவபெருமானைத் தன் அருமைக் குழந்தையாகப் பாவித்து அவரோடு ஊடாடுகிறார். சிவ பெருமானுடைய உள்ளங்கை செக்கச் செவேல் என்று இருக்கிறது. அந்த உள்ளங்கையில் செந் தீ ஒன்று ஆடிக்கொண்டே இருக்கிறது. அம்மையார் உள்ளங்கையையும், செந் தீயையும் மாறி மாறிப் பார்த்து அனுபவிக்கிறார். ஓர் ஐயம் ஏற்படுகிறது அவருக்கு.

"தீயின் சிவந்த நிறம்தான் உள்ளங்கைக்குச் சிவப்பை ஏற்றியதா? அல்லது உன் உள்ளங்கையின் சிவப்புதான் அந்தத் தீக்குச் செந்நிறத்தை ஏற்றியதா?" என்று கேட்கிறார் சிவபெருமானை.

அழல் ஆட அங்கை சிவந்ததோ? அங்கை
அழகால் அழல் சிவந்தவாறோ? – கழல் ஆடப்

பேயோடு கானிற் பிறங்க அனல் ஏந்தித்
தீயாடு வாய் இதனைச் செப்பு.

ஏதோ, நேருக்கு நேர் நின்று இதனைச் சொல் என்று சொல்வது, கடவுள் தத்துவத்தில் அம்மையாருக்கு எவ்வளவு திளைப்பு இருக்கிறது என்பதை அல்லவா நமக்குக் காட்டுகிறது.

செந்நிறத்தைத் தீக்கு ஏற்றுவதில் ஒரு காதல் சுவையே கிடக்கிறது என்று ரசிகமணி சொல்வார்.

பார்வதி என்ற தெய்வ மகளைப் பெற்றவர் காரைக்கால் அம்மையார். மருமகளிடத்தில் மாமியாருக்கு அபாரமான அன்பு. "மாட்டுப் பெண் மிரண்ட சுபாவம் உடையவளாச்சே. நீயோ நடு நிசியில் பயங்கரமான மயானத்தில் பேயோடு கூத்தாடுகிறவன். அழகான அவளையும் உன் பக்கத்தில் தூக்கி வைத்துக்கொண்டு அந்த மயானத்துக்குச் செல்லாதே, அப்பா!" என்று எச்சரிக்கை செய்கிறார் -

குழல் ஆர் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்து
எழிலாக வைத்து ஏக வேண்டா - கழல் ஆர்ப்பப்
பேர் இரவில், ஈமப் பெருங் காட்டில், பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு.

மருமகளிடத்தில் காட்டிய கருணையைப் பேரண்டத்திலும் காட்டுகிறார் அம்மையார்.

சாதாரணமாக, ஒரு பெண் பரத நாட்டியம் ஆடும்போது, அவள் இட சாரி, வல சாரி போகிறாள்; முன்னே ஆடிக்கொண்டே வந்து ஆடிக் கொண்டே பின்வாங்குவாள். இப்படி எல்லாம் செய்வதற்கு இட வசதி அவசியம்.

ஆனால், தானும் ஆடிக்கொண்டு அண்டங்களை எல்லாம் ஆட்டியும் வைக்கும் இறைவனுக்கு, இந்த வசதி கிடையாது. அவன் வேறு, அவன் ஆடும் இடம் வேறு என்று சொல்ல முடியாது. எங்கும் நிரம்பித் ததும்பிக்கொண்டு இருக்கிறான் இறைவன். இந்த நெருக்கடியான நிலைமையில், நடராஜன் கொஞ்சம் அஜாக்கிரதையாக ஆடிவிட்டால், என்ன ஆபத்து எல்லாமோ ஏற்பட்டுவிடும். தன் அடியைக் கொஞ்சம் முரட்டுத்தனமாகப் பேர்த்து வைத்தானேயானால், பாதாள லோகம் முழுவதும் பேர்ந்து போகும்.

அடி பேரின் பாதாளம் பேரும்

அபிநயத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்காக, அவன் தன் முடியைக் கொஞ்சம் அலட்சியமாக ஆட்டிவிட்டால், பேரண்டத்தின் முகடே பேர்ந்து போகுமே. கடகங்கள் புனைந்த

அவனுடைய செல்லக் கைகள் கொஞ்சம் தாறுமாறாகச் சுழன்றாடிவிட்டால், கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்று பெயர் வைத்துக் கொண்டு இருக்கிற திசைகள் எல்லாம் சின்னாபின்னமாகிவிடுமே என்று அஞ்சுகிறார் அம்மையார். ஆகவே, மகனைப் பார்த்து, கொஞ்சம் நிதானமாக ஆடு என்று எச்சரிக்கை செய்கிறார்.

அடி பேரில் பாதாளம் பேரும், அடிகள்
முடி பேரில், வான் முகடு பேரும் - கடகம்
மறிந்தாடுகை பேரில், வான் திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றாது அரங்கு.

பேரண்டத்தை ஆளும் பொறுப்பை நிர்வகிக்கத் தெரிந்த பெரியவன்தான். ஆனாலும், தாய்க்குக் குழந்தைதானே!

4. குற்றாலக் குறவஞ்சி

தமிழருக்கு மங்களமான இந்தப் பொங்கல் நன்னாளில் குற்றாலத்துக் குறத்தி உங்களை வாழ்த்துகிறாள். உங்கள் சிங்க ரேகைக் கையைப் பார்த்து அவள் வாழ்த்துகிறாள்.

மாறாமல் இரு நிலத்தில் அறம் வளர்க்குங் கையே
மனை அறத்தால் அறம் பெருக்கித் திறம் வளர்க்குங் கையே.

இல்லறத்தை ஓம்பி அறம் வளர்க்கிறது உங்கள் கை. அதனாலேயே, உங்கள் கையின் திறம் வளர்கிறது. அது மாத்திரமா?

வீறாக நவ நிதியம் விளையும் இந்தக் கையே
மேன்மேலும் பால் அமுதம் அளையும் இந்தக் கையே.

இன்று காலை பொங்கல் பானையில் பால் அமுதம் அளைந்த கையல்லவா உங்கள் கை. நீங்காத பசியை எல்லாம் நீக்கப்போகிறது உங்கள் கை.

ஆறாத சனங்கள் பசி ஆற்றும் இந்தக் கையே
அணங்கனையார் வணங்கி நித்தம் போற்றும் இந்தக் கையே.

இவ்வாறு ஏழை மக்களுடைய ஆறாத பசியை எல்லாம் ஆற்றப்போகிற உங்கள் கையைத்தான் எங்கள் குற்றால நாதர் ஏற்றுக்கொள்வார் என்று வாழ்த்துகிறாள் குறவஞ்சி.

பேறாக நன் நகரம் காக்கும் இந்தக் கையே
பிறவாத நெறியார்க்கே ஏற்கும் இந்தக் கையே.

இப்படி எல்லாம் நம்மை வாழ்த்துகிறவள் குற்றாலக் குறவஞ்சி. குறவஞ்சி என்றால் குறப் பெண் என்று பொருள். பொதுவாக எல்லா இலக்கியங்களிலும் சமுதாயத்தில் உயர்மட்டத்திலுள்ள மக்களையே காவியத் தலைவர்களாகக்கொண்டு காவியத்தை அல்லது நாடகத்தை இயற்றுவார்கள். சக்கரவர்த்தித் திருமகன், ராமாயணத்தில் காவியத் தலைவன். மகாபாரதத்தை எடுத்துக் கொண்டால் காவியத் தலைவர்கள் அரசர்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி முதலிய பெருங்காப்பியங்களிலும் காவியத் தலைவர்கள் சாமானிய மாந்தரல்லர். ஆனால், குற்றாலக் குறவஞ்சி என்ற காவிய நாடகத்தில் மையமாக இருந்து கதையை நிகழ்த்துகிற தலைமையான பாத்திரம் ஒரு சாமானியக் குறத்தி. இவ்வாறு சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் இருக்கும் ஒரு குறத்தியைக் காவியத் தலைவி ஆக்கிய பெருமை குறவஞ்சி ஆசிரியருக்கே உரியது.

ஆசிரியரின் பெயர் திருகூட ராசப்பக் கவிராயர். அவர் 17-வது நூற்றாண்டின் இறுதியில் பிறந்தவர். அவர் வாழ்ந்த இடம் மேலகரம் என்ற சிறு கிராமம். சுமார் 50 கூரை வீடுகள் உள்ள குக்கிராமம். தென்காசிக்கும், திருக்குற்றாலத்துக்கும் இடையில் இருக்கிறது மேலகரம். இந்தப் பட்டிக்காட்டில் வாழ்ந்த ஆசிரியர் ஆங்கிலப் படிப்பே இல்லாதவர். தற்கால விஞ்ஞானியைப்போல தெளிந்த பார்வையோடு எதையும் பார்க்கும் வல்லமை பெற்றிருந்தார். அதோடு அவர் உணர்ந்த உண்மைகளைத் தேனாகத் தித்திக்கும் தமிழில் ஊறப்போட்டு அவற்றை நமக்கு உல்லாசமான கவிதை வடிவத்தில் அவர் பரிமாறும்போது நமக்கு மட்டற்ற இன்ப மயக்கமே ஏற்படுகிறது.

குறத்தியைப் பார்த்தாலும் சரி, அல்லது பேரண்டத்தைப் பார்த்தாலும் சரி, அவருடைய காட்சியே அலாதி. அதை எடுத்துச் சொல்வதற்கு தமிழ் காத்துக்கொண்டு இருக்கும். தமிழ் என்றால், இறந்த தமிழல்ல. உயிருள்ள தமிழ், பழகு தமிழ். நம்மோடு கொஞ்சிக் குலாவும் தமிழ். குற்றால மலையின் வளத்தைக் குறத்தியாக இருந்து பாடுகிறார் கவிஞர்.

வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்.

ஆண் குரங்கு, பெண் குரங்குக்குக் கனிகளைக் கொடுத்துக் கொஞ்சிக்கொண்டு இருக்கும். எப்பேர்ப்பட்ட கனிகள் அவை? நன்றாகக் கனிந்து தேன் பிலிற்றிக்கொண்டு இருக்கும் கனிகள். சிலவற்றைத் தின்றுவிட்டு சிலவற்றை அலட்சியமாகச் சிந்திவிடுமாம் உச்சாணிக் கொப்பில் இருக்கிற பெண் குரங்கு. இப்படிச் சிந்துகிற

கனிகளின் இன் சுவையை அறிந்தவர்கள் வான நாட்டில் இருக்கும் கவிஞர்கள். அப்படிச் சிந்தி விழுகிற கனிகளுக்குப் போட்டி போடுவார்களாம் அவர்கள்.

செண்பகாடவி - அதற்கு மேலே, தேனருவி - நீண்டுயர்ந்த மலை - அண்ணாந்து பார்த்தால் வானலோகத்தில் இருந்து பூலோகத்துக்கு வந்து விழுகிறதோ என்று தோன்றும் தேனருவி.

தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்

குற்றால அருவியில் குளித்துக் குளித்து அனுபவித்தவர் கவிஞர். அந்த அருவி பொங்குமாங் கடலில் குதிக்கும். பிறகு, அதில் இருந்து பொங்கித் ததும்பி மறுபடியும் கீழ்நோக்கிப் பாயும். ஆர்வத்தோடு விழும் அந்த அருவியில் நாம் தலையைக் காட்டினால் போதும். அப்படியே நம்மை அது குளிப்பாட்டிவிட்டுவிடும். அதன் பம்மல், பாய்ச்சல், துள்ளல்களை எல்லாம் கூர்ந்து கவனித்தால், அருவிக்கு நம்மைப்போல, உடம்பும், உள்ளமும், உயிரும் இருப்பதாகத் தோன்றும். குறவஞ்சி ஆசிரியருக்கு அப்படித் தோன்றி இருக்கிறது.

அருவிக்கரையிலிருந்து அரை மைல் தூரம் வரை அருவியின் முழக்கம் கேட்கும். பலமாக விழும் அருவிக்கு ஆண் அருவி என்று பெயர்; சொகுசாக விழும் அருவிக்குப் பெண் அருவி என்று பெயர். சில சமயங்களில் முத்துப் போன்ற சிறிய கூழாங்கற்கள் அருவித் தண்ணீரோடு வந்து விழுந்து சிதறும். இதைப் பார்க்கும்போது அருவிப் பெண் சுழற்சி விளையாடுவதுபோல் இருக்கிறது.

முழங்கு திரைப் புனல் அருவி கழங்கென முத்தாடும்

அருவி விழும் இடம் மணற் பாங்கான இடம். அங்கே சிறுவர்கள் சிறிய மணல் வீடுகள் கட்டி விளையாடுவார்கள். அவர்களைக் கண்டவுடன் அருவிக்கும் பிள்ளைகளுக்கே உரிய குறும்புத்தனம் ஏற்பட்டுவிடும். திம் திம் என்று பாய்ந்து அந்தச் சிற்றில்களை அழித்துவிட்டு ஓடியே போய்விடும்.

முற்றம் எங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்

இவ்வாறு மனிதப் பண்புகளை அருவிக்கு ஏற்றி அதை அனுபவிக்கிறாள் குறவஞ்சி.

மகாகவி ஷேக்ஸ்பியர், "The poet's eye, in a fine frenzy rolling, doth glance from heaven to earth and earth to heaven" என்றார். அழகைப் பருகிப் பருகி, அதனால் உண்டான போதையில் கவிஞன் அவன் கண்ணை உருட்டுகிறானாம். விண்ணில் இருந்து மண்ணுக்கும் மண்ணில்

இருந்து விண்ணுக்கும் அவனுடைய பார்வை பாய்கிறதாம். குற்றாலக் குறவஞ்சி ஆசிரியருடைய கண்ணும், மண்ணையும் விண்ணையும் சேர்த்து அளக்கிறது.

இரவு நேரத்திலே, நாகப் பாம்புகள் கக்கிய நாக ரத்தினங்கள் ஒளிவீசிக் கொண்டு இருக்குமாம்.

ஆடும் அரவு ஈனு மணி கோடி வெயில் எறிக்கும்

குற்றால மலையின் சிகரங்கள் வானத்தைத் தொட்டுக்கொண்டு இருக்கும். அடிவாரத்தில் இருந்து அல்லது மேலகரத்தில் இருந்து மலையைப் பௌர்ணமி இரவில் பார்த்தால், சந்திரன் மலையின் உச்சியில் தவழ்ந்து விளையாடுவதுபோல் இருக்கும். மலை உச்சியில் இருந்த யானை தன் தும்பிக்கையைத் தூக்கி அம்புலியைத் தொடப் பார்க்கிறது. இதைப் பார்த்த கவிஞர் இதயத்தில் ஓர் அபூர்வமான கற்பனை தோன்றுகிறது. அம்புலியைச் சோற்றுக் கவளம் என்று நினைத்துக்கொண்டு தும்பி, அதாவது யானை அதை வழிமறிக்கிறது.

அம்புலியைக் கவளம் என்று தும்பி வழி மறிக்கும்

குற்றால மலையைச் சந்திர மண்டலத்தில் இருந்து தொங்க விடுகிறார் கவிஞர். யானைத் துதிக்கை என்ற கொக்கியை மாட்டித் தொங்கவிடுகிறார்.

'அம்புலியைக் கவளம் என்று தும்பி வழி மறிக்கும்' இந்த வரிக்குள் இருக்கிற தாளத்தை அனுபவித்துவிட்டால் போதும். திரும்பத் திரும்ப அதைச் சொல்லிக்கொண்டே இருந்தால் நம்முடைய நாவில் ஓர் இனிப்புத் தட்டும். அந்த இனிப்பு நம் இதயத்தில் புகுந்து இன்பத்தை விளைவிக்கும். தமிழ் மொழியின் இன்ப நிலைகளை எல்லாம் கண்டு அனுபவித்தவர் திருகூட ராசப்பர்.

குற்றால மலையில் வாழும் கானவர்கள், அதாவது, வேடவர்கள் கண்ணை ஒரு சிமிட்டுச் சிமிட்டினால், அவர்கள் இருக்கும் இடத்துக்கு வானவர்கள் விருந்தாளிகளாக வருவார்களாம்; ஆகாய வழியாகச் செல்லும் சித்தர்கள் அவர்களுடைய கண் வீச்சுக்கு இரங்கி, காயகற்ப மருந்துகளை அவர்களுக்குக் கொண்டுவந்து கொடுப்பார்களாம்.

கானவர்கள் விழி எறிந்து வானவரை அழைப்பார்
கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்
செமுங் குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேன் அவர் சண்பக வாசம் வான் உலகில் வெடிக்கும்

சண்பகத்தின் மொட்டு திடீரென்று வெடித்துத் தன் இதழ்களை விரிக்கும். அந்தத் திடீர் வெடிப்பில் சண்பகப் பூவின் மணம்

'கம்'மென்று எங்கும் பரவும். மண்ணுலகத்தை நிரப்பி வான் உலகத்தையும் நிரப்பும்.

சண்பக வாசனை மாத்திரமா? வேடுவர்கள் தினை விதைப்பதற்காக மலைக்காட்டில் உள்ள வயல்களுக்குப் போவார்கள். போகிற வழி எல்லாம் விதம் விதமான மணங்கள் அவர்களுடைய மூச்சொடு கலந்து அவர்களுடைய இதயத்துக்கு ஆர்வத்தைக் கொடுக்கும்.

வேடுவர்கள் தினை விதைக்கச் சாடு புனந்தோறும்
விந்தை அகில் குங்குமமும் சந்தனமும் நாறும்

இந்த அழகிய சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தவள் குறத்தி சிங்கி. இயற்கை அன்னையின் மடி மீது தவழ்ந்து வளர்ந்த குழந்தை அவள். தன் வாழ்க்கை வளத்தைப்பற்றி அவள் பெருமிதத்தோடு பேசுகிறாள், பாடுகிறாள்.

கிழங்கு கிள்ளித் தேன் எடுத்து வளம் பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பு ஒடித்து வெம்பு தினை இடிப்போம்.

பட்டணத்தில் இருக்கும் நாம் செயற்கை வாழ்வுதான் வாழ்கிறோம். யந்திரத்தோடு யந்திரமாகிவிட்டோம். தினையை மாவாக்க வேண்டும் என்றால் மின்சார யந்திரத்தில் கொடுத்துத் திரித்துவிடுகிறோம். நாட்டுப்புறங்களில்தான் உரல், உலக்கை எல்லாம். உலக்கைகூட செயற்கைப் பொருள்தான். ஆனால், குற்றால மலையில் வாழும் குறத்தி தினையை இடிப்பதற்கு உலக்கையைத் தேடுவதில்லை. காட்டு யானைகள் - கிம்புரிகள் மலை மேல் அலைந்துகொண்டு இருக்கும். ஒரு யானையின் கொம்பை ஒடித்து, அதையே உலக்கையாகக்கொண்டு தினையை இடிப்பாளாம்.

யானைத் தந்தம் அவ்வளவு எளிதாகக் கிடைக்கிறது அவளுக்கு. திரிகூட மலை என்ற குற்றால மலைதான் சிங்கியின் அதிகார எல்லைக்கு உட்பட்டது. நம் நாட்டிலுள்ள மற்ற மலைகளும் அவளுடைய உறவினருடைய ஆதிக்கத்தில்தான் இருக்கின்றனவாம். மலைகளுடைய பெயர்ப் பட்டியல் ஒன்றை அவள் கொடுக்கிறாள்.

இமய மலை, காணி மலை, திரிகூட மலை, விந்திய மலை என்று பெயர்களை நாம் சொல்லும்போது கவி உண்டாகவில்லை. ஆனால், குறவஞ்சி ஆசிரியர் சொல்லை வைத்தே சித்து விளையாட்டு விளையாடுகிறார். மலையோடு மலையை உரசி, அவற்றை அவர் அடுக்கிவைக்கும் முறையிலேயே அற்புதமான கவி பிறந்துவிடுகிறது. ஆசிரியருடைய குறத்தி பாடுகிறாள்:

கொல்லி மலை எனக்கு இளைய செல்லி மலை அம்மே
கொழுநனுக்குக் காணி மலை பழநி மலை அம்மே
எல்லுலவும் விந்தை மலை எந்தை மலை அம்மே
இமய மலை என்னுடைய தமயன் மலை அம்மே
சொல்லரிய சாமி மலை மாமி மலை அம்மே
தோழி மலை நாஞ்சில் நாட்டு வேள்வி மலை அம்மே
சொல் இனங்கள் முழவு கொட்ட மயில் இனங்கள் ஆடும்
திரிகூட மலை எங்கள் செல்வ மலை அம்மே.

எளிமையான இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை குறவஞ்சியின் வாழ்க்கை. ஆனால், தன் குலப்பெருமையை அவள் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

ஒரு குலத்தில் பெண்கள் கொடோம்
ஒரு குலத்தில் கொள்ளோம்
உறவு பிடித்தாலும் விடோம்
குறவர் குலம் நாங்கள்

-என்று பெருமையடித்துக்கொள்கிறாள். மற்றக் குலங்களோடு கொள்வனை கொடுப்பனை வைத்துக்கொள்வதில்லை என்ற விதியை ஒரேயொரு சமயத்தில் மாத்திரம் தளர்த்தினார்களாம் அவளுடைய குலத்தார். வேலவனுக்கு வள்ளியைக் கொடுத்த ஒரு நிகழ்ச்சி இருக்கிறதே. அது ஒன்றுதான் விதிக்கு விலக்காக அமைந்த நிகழ்ச்சி. வேறொரு குலத்தைச் சேர்ந்தவன்தான் வடிவேலன். ஆனால், அவன் அருளாளனாகி இருந்த காரணத்தால் ஒரு 'எக்ஸம்ப்ஷன்' கொடுத்தோம் என்று சொல்கிறாள் சிங்கி.

வேலவன் வள்ளியோடு காதல் புரியும்போது, போலி நாணத்தால் அவனுக்கு இணங்க மறுக்கிறாள் அவள். யானையைக் கண்டு அஞ்சுகிறவள் அவள். அவளை மிரட்டுவதற்காக ஐந்து கரத்தானை அழைக்கிறான் வேலவன். யானை உடனே வருகிறது. அதைக் கண்டு வள்ளி மிரண்டுகொண்டு இருக்கும் சமயம் அவளுடைய உறவினர் அங்கு வந்துவிடுகிறார்கள். உடனே அவசர அவசரமாக யானையைப் போகச் சொல்லிவிட்டு வேங்கை மரமாக மாறி விடுகிறான் வடிவேலன். இந்தப் புராணக் கதையை மிக்க சுவையோடு பயன்படுத்துகிறார் குறவஞ்சி ஆசிரியர்.

குறத்தி வள்ளியின் அச்சத்தை ஒழிப்பதற்காக யானையை விரட்டினானாம். அதற்கு மேலே, வள்ளியின் மேனியில் வெயில் படாதவாறு வேங்கை மரமாக நின்று அவளுக்கு குளிர்ந்த நிழலைக் கொடுத்தானாம். இந்த அருளைக் கண்டு இரங்கி, வேலனுக்கு ஒரு பெண்ணைக் கொடுத்தோம் என்று சொல்கிறாள் சிங்கி.

வெருவி வரும் தினைப்புனத்திற் பெரு மிருகம் விலக்கி
வேங்கையாய் வெயில் மறைத்த பாங்குதனைக் குறித்தே
அருளில் அஞ்சி வேலர்தமக்கு ஒரு பெண்ணைக் கொடுத்தோம்
ஆதினத்து மலைகள் எல்லாம் சீதனமாய்க் கொடுத்தோம்.

தமிழ் நாட்டில் எங்கேயாவது ஒரு பொத்தை, ஒரு சிறு குன்று அல்லது மலை இருந்தாலும் சரி. அதன் உச்சியில் ஒரு சிங்காரக் கோயிலைக் கட்டிக் குறிஞ்சிக் கடவுளாகிய முருகனை அதில் நிறுத்திவிடுவார்கள். தமிழர்கள் இப்படி எல்லாம் இயற்கை அழகை ரசித்து வந்து இருக்கிறார்கள். வெளிநாட்டில் குடியேறிய தமிழர்கள் கூட இந்த மரபைக் கைவிடுவதில்லை. மலேயாவில் பத்துமலை என்று ஒரு மலை. அப்படி ஓர் அழகிய மலையை நான் வேறெங்கும் பார்த்ததில்லை. அந்த மலையின் உச்சியில் பத்துமலை முருகனுக்குக் கோயில் கட்டிவிட்டார்கள் நம்மவர்கள். இந்தச் சிறப்பியல்பை அனுபவித்தவர் ஆசிரியர். ஆகவேதான், எங்கள் ஆதினத்தில் இருக்கிற மலைகளை எல்லாம் வள்ளி திருமணத்தின்போது வள்ளி மணாளனுக்குச் சீதனமாகக் கொடுத்துவிட்டோம் என்று குறத்தியைச் சொல்ல வைக்கிறார்.

அருளில் அஞ்சி வேலர்தமக்கு ஒரு பெண்ணைக் கொடுத்தோம்
ஆதினத்து மலைகள் எல்லாம் சீதனமாய்க் கொடுத்தோம்.

'சிங்கிள் லைன் போயட்ரி' என்று ஆங்கிலேயர் சொல்வார்கள். இந்த ஒரு வரி போதும். இதை வைத்துக்கொண்டு உலகத்தையே விலைக்கு வாங்கிவிடலாம்.

ஆதினத்து மலைகள் எல்லாம் சீதனமாகக் கொடுப்பதற்கு எவ்வளவு தெம்பு வேண்டும், எவ்வளவு கொடை வளம் வேண்டும், எவ்வளவு அனாயாசமான கவி வளம் வேண்டும்.

சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்தவர்; குற்றாலக் குறவஞ்சியை நன்றாக அனுபவித்தவர்; பழகு தமிழில் ஆற்றல்மிக்க கவியை அவர் படைத்தாரென்றால், குறவஞ்சித் தமிழையும் அதற்குப்பின் இயற்றப்பட்ட முக்கூடற் பள்ளு, காவடிச் சிந்து முதலிய பச்சைத் தமிழ் நூல்களையும் அவர் ஆழ்ந்து அனுபவித்ததுதான் காரணம். வள்ளியை மணம்புரிய வந்தவன் வேங்கை மரமாக நின்ற செயலுக்குப் பாரதியார் கற்பிக்கும் காரணம், குறவஞ்சி சொல்லும் காரணத்தை நமக்கு நினைவுறுத்துகிறது.

சொல்லினைத் தேனிற் குழைத்து உரைப்பாள் சிறு
வள்ளியைக் – கண்டு
சொக்கி மரமென நின்றனை
தென்மலைக் காட்டிலே.

குறவஞ்சி சொல்வதுபோல வெயிலை மறைப்பதற்காக முருகன் வேங்கை மரமாகவில்லையாம். வள்ளியின் அழகில் சொக்கிய காரணத்தால்தான் மரமாக மரத்துப் போனானாம் அவன். காரணம் எதுவானாலும், வேலவன் வள்ளியின் கரம் தொட்ட காரணத்தால் குறவர் குலத்தின் சிறப்பு நிலைநிறுத்தப்பட்டுவிட்டது. ஆதினத்து மலைகளை எல்லாம் சீதனமாகக் கொடுக்கும் வாய்ப்பும் குற்றாலக் குறத்திக்குக் கிட்டிவிட்டது.

இந்தக் குறத்தியின் உடல் வனப்பு எப்படி இருக்கிறது? அருவியில் குளித்தும், சுனைகளில் நீராடியும், மலையிலேயே சஞ்சாரம் செய்யும் இந்தக் குறத்தியை, குற்றால மலை வளரும் தோகை என்று புகழ்கிறார் ஆசிரியர். பிரகிருதியின் சொந்தப் புதல்வியாக, மலை நாகரிகத்தின் சிகரமாக இருக்கிறாள் அவள். அவளுடைய மேனி, பேச்சு, உல்லாசம் எல்லாம் குற்றால மலையின் வளங்களைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன. 'ஷி இஸ் அன் எபிடோம் ஆஃப் நேச்சர்'. அவளைப் பார்த்தால் போதும், அவள் வாழும் மலையின் வளம் தெரிந்துவிடும். மலையில் உள்ள யானைக் கொம்புகளின் வளம், கொடிகளின் வளம், காட்டுப் பூக்களின் வளம் இவற்றின் சுருக்கம் என்று அவளைச் சொல்ல வேண்டும்.

கோட்டு வளம் முலை காட்டும், கொடியின் வளம்
இடை காட்டும், குறிஞ்சி பூத்த
காட்டு வளம் குழல் காட்டும், மலை வளந்தான்
நீ உரைத்துக் காட்டுவானேன்?

-என்று கேட்கிறார் கவி, சிங்கியைப் பார்த்து.

சிங்கியின் வருகையைத் தமிழ் மொழி கைகொட்டி வரவேற்கிறது. எப்படி வருகிறாள்?

சிலை நுதலிற் கஸ்தூரித் திலகமிட்டு,
நறுங் குழலில் செச்சை சூடிக்,
கொலை மதர்க் கண் மை எழுதி, மாத்திரைக்
கோல் வாங்கி, மணிக் கூடை தாங்கி,
முலை முகத்திற் குன்றிமணி வடம் பூண்டு,
திரிகூட முதல்வர் சாரல்
மலைதனிற், பொன் வஞ்சிக் குற
வஞ்சி அபரஞ்சி கொஞ்சி வருகிறாளே.

(அபரஞ்சி என்றால் உருக்கி ஓடவிட்ட பொன் போன்றவள் என்று பொருள்.)

சிங்கியின் உல்லாச வருகையை இந்தப் பாடல் மேளதாளத்தோடு எடுத்துச் சொல்கிறது; சொன்னாலும் ஆசிரியருக்குத் திருப்தி

ஏற்படவில்லை. இந்த அழகிய பாத்திரத்தை, தமிழ் மொழி நாட்டியமாடி அல்லவா வரவேற்க வேண்டும் என்று எண்ணி ஒரு கீர்த்தனமே பாடிவிட்டார். கீர்த்தனத்துக்கு ராகம் தோடி, தாளம் சாப்பு என்ற குறிப்பையும் ஆசிரியரே தந்து இருக்கிறார்.

பல்லவி

வஞ்சி வந்தனளே மலைக் குற
வஞ்சி வந்தனளே

அனுபல்லவி

வஞ்சி எழில் அபரஞ்சி வரி விழி
நஞ்சி முழுமற நெஞ்சி பலவினில்
அஞ்சு சடை முடி விஞ்சை
அமலனை நெஞ்சில் நினைவொடு
முஞ்சு குறி சொல - வஞ்சி வந்தனளே
மலைக் குற (வஞ்சி)

சரணம்

ஆடும் இரு குழைத் தோடும்
ஒரு குழற் காடும் இணை விழி சாடவே
கோடு பொரு முலை மூடு சலவையின்
ஊடு பிதுங்கி மல்லாடவே
தோடி முரளி வராளி பயிரவி
மோடி பெற விசை பாடியே
நீடு மலை மயிலாடு மலை மதி
சூடு மலை திரிகூட மலைக் குற (வஞ்சி)

மற்றக் குறிகாரிகளை எல்லாம் மிஞ்சும் குறி சொல்வதற்காக குறத்தி வந்து நிற்கிறாள். இன்று ஒரே திருவிழாக் கூட்டம். குற்றால நாதர் பல்லக்கில் ஏறிப் பவனி வந்துகொண்டு இருக்கிறார். அவருடைய மெய்யில் சிவப்பு அழகும் கையில் மழு அழகும் கண்டு ஆன்மாக்கள் எல்லாம் அவரிடத்தில் மையல்கொள்கின்றன. எண்ணற்ற பெண்கள் பவனி காண்பதற்காக நெருக்கியடித்துக்கொண்டு வருகிறார்கள்?

ஒரு மானைப் பிடித்துவந்த பெருமானைத் தொடர்ந்து வரும்,

ஒரு கோடி மான்கள்போல் வரு கோடி மடவார்

சிங்காரம் செய்துகொண்டு இருக்கிறார்கள் சில பெண்கள்; குற்றாலநாதர் பல்லக்குப் பக்கத்தில் வந்துவிட்டது என்று தெரிந்தவுடன், அவசரம் அவசரமாக வெளியே ஓடி வருகிறார்கள். அந்த அவசரத்தில் நேரும் குழப்பத்தை ரசமாக விஸ்தரிக்கிறார் ஆசிரியர்.

ஒரு கை வளை பூண்ட பெண்கள் ஒரு கை வளை பூண மறந்து ஓடுவார், நகைப்பவரை நாடுவார், தலை கவிழ்வார்.

ஊர்க்காரர்கள் அவர்களுடைய அலங்கோலத்தைக் கண்டு நகைக்கிறார்கள். உடனே நாணத்தால் தலை கவிழ்கிறார்கள் அந்தப் பெண்கள். இவர்கள் எல்லாம் ஒரு கைக்கு வளையல் பூண்டு மறு கைக்கு வளையல் பூண மறந்தவர்கள். குற்றால நாதரிடத்தில் இவர்களைக் காட்டிலும் அதிக மயக்கம்கொண்ட பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள்? ரவிக்கையை இடுப்பைச் சுற்றிக் கட்டுகிறார்கள். பாவாடையைக் கழுத்தைச் சுற்றிக் கட்டுகிறார்கள்.

இரு தனத்து ரவிக்கை தனை
அரையில் உடை தொடுவார் பின்
இந்த உடை ரவிக்கை எனச்
சந்த முலைக்கு இடுவார்.

வேறு சிலர் ஒரு கண்ணுக்கு மையிட்டுவிட்டார்கள். அடுத்த கண்ணுக்கு மை எடுத்த கையோடு தெரு வாசலுக்கு ஓடி வருகிறார்கள். இதற்கு எல்லாம் காரணம் அவர்களுடைய, 'ஆப்சன்ட் மைண்டட்னஸ்', புறம் போன மனம்.

கருது மனம் புறம் போக
ஒரு கண்ணுக்கு மை எடுத்த
கையுமாய், ஒரு கண்ணிட்ட
மையுமாய் வருவார்.

இந்தக் கூட்டத்துக்குள் வருகிறாள் வசந்தவல்லி என்ற ஓர் அழகி. கை நிறைய வளையலை அணிந்து இருக்கிறாள். அவளுடைய கண்ணுக்குள் ஒரு 'டிராமா' நடக்கிறது என்று நவநாகரிக பாஷையில் பேசுகிறார் கவிஞர்.

கையாரச் சூடகம் இட்டு மின்னாரை வெல்லக்
கண்ணில் ஒரு நாடகமிட்டு
ஒய்யாரமாக நடந்து – வசந்தவல்லி
ஓவியம் போலவே

சாதாரணமாக, நாம் பார்க்கும் நாடகம் மேடையில் நடைபெறும் அல்லது வெள்ளித் திரையில் நடைபெறும். குறவஞ்சியிலோ, கண்ணின் நாடகத்தையும் மதுரத் தமிழ்ச் சொல்லின் நாடகத்தையும் பார்த்துப் பார்த்து வியந்துகொண்டே இருக்கலாம். அவளுடைய கொண்டை எப்படி இருக்கிறது? புயல் அடிக்கும்போது இருண்ட மேகங்கள் சுழி எறிந்துகொண்டு விரைவாக ஓடிக்கொண்டு இருக்கும். அவற்றில் ஒன்றை அப்படியே அள்ளி எடுத்துச் சுருட்டி, செருகிக் கொண்டையாகப் போட்டு இருக்கிறாள் வசந்தவல்லி.

இருண்ட மேகஞ் சுற்றிச் சுருண்டு
சுழி எறியும் கொண்டையாள் குழை
யேறி, ஆடி நெஞ்சைச் சூறையாடும்
விழிக் கெண்டையாள்

அவள் பருவம் என்ன?

அறிவை மயக்கும் ஒரு கருவம் இருக்கும்
மங்கைப் பருவம்தான்
கரும்புபோல் இனித்து மருந்துபோல்
வடித்த சொல்லினாள் - கடல்
கத்தும் திரை கொழித்த முத்து நிரை
பதித்த பல்லினாள்.

அவளுடைய முத்துப்போன்ற பல்லை எட்டிப் பார்த்துக்கொண்டு இருக்கிறதாம் இன்னொரு முத்து.

பல்லின் அழகை ஒட்டிப் பார்க்கும்
மூக்கில் ஒரு முத்தினாள் - மதி
பழகும் வடிவு தங்கி அழகு
குடிகொளும் முகத்தினாள்

அவளுடைய இடை உடுக்குபோல், அதாவது, துடியைப்போல் இருக்கிறது. காமன் என்பவன் துஷ்டன், பொல்லாதவன் என்று நமக்குத் தெரியும். ஆனால், அவனுக்கு ஓர் அரண்மனையே இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. இந்தப் புதிய தகவலை நமக்குச் சொல்கிறார் கவிஞர். அந்த அரண்மனையில் கதலி வாழை மரங்களை நிறுத்தி வைத்திருப்பார்களாம் அழகுக்காக. இதைத் தெரிந்துகொண்டால்தான் வசந்தவல்லியின் இடை அழகும், தொடை அழகும் நமக்குப் புலப்படும்.

துடிக்குள் அடங்கி ஒரு பிடிக்குள் அடங்கும்
சின்ன இடையினாள் - காமத்
துட்டன் அரண்மனைக்குக் கட்டுங் கதலி
வாழைத் தொடையினாள்

கவிஞர் புதுப்புது உவமைகளை, நட்சத்திரங்களை உதிர்த்ததுபோல, உதிர்த்துக்கொண்டே போகிறார். சமையற் கலையில் சிறந்தவன் வீமன்; பக்குவமாகச் சமைக்கத் தெரிந்தவன்; அவன் தயார் செய்த காமப் பாலுக்கு இனிப்பூட்ட வேண்டும் என்றால் ரேஷன் கடைச் சீனியையா (சர்க்கரையையா) போடுவது? இல்லை, கேளுங்கள் திருகூட ராசப்பரை.

வெடித்த கடல் அமுதை எடுத்து
வடிவு செய்த மேனியாள் - ஒரு

வீமப் பாகம் பெற்ற காமப்
பாலுக்கு ஒத்த சீனியாள்

இத்தகைய வசந்தவல்லி பந்தடித்து விளையாடுகிறாள்.

நத்து அணி கரங்கள் சேப்ப
நாலடி முன்னே ஓங்கிப்
பத்தடி பின்னே வாங்கிப்
பந்தடி பயில்கின்றாளே

தமிழ்ச் சொல்லை ஏதோ ஒரு போதைப் பொருளோடு குழைத்துப் பயன்படுத்துகிறார் குறவஞ்சி ஆசிரியர். கிறக்கமோ மயக்கமோ வேண்டும் என்று நினைக்கிறவர் சாராயக் கடைக்கோ, கள்ளுக் கடைக்கோ போக வேண்டாம், குற்றாலக் குறவஞ்சியைப் படித்தால் போதும்.

பந்தாட்டத்தின் ஒலி இன்பத்தை இப்போது கேட்கப் போகிறோம்.

செங் கையில் வண்டு கலின்கலின் என்று
செயம் செயம் என்றாட - இடை
சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு
தண்டை கலந்தாட - இரு
கொங்கை கொடும் பகை வென்றனம்
என்று குழைந்து குழைந்தாட - மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே.

இப்படிப் பந்தாடிக் கொண்டு இருக்கும்போது திரிகூட நாதர் பவனி வருவதைப் பார்க்கிறாள் வசந்தவல்லி. இதுவரையிலும் காதல் என்ன என்பதை உணராமல் இருந்தவள், இப்போது திரிகூட நாதர் அவள் கருத்தை உருக்கிவிடுகிறார். அவள் உடம்பில் சோர்வு ஏற்படுகிறது. சோர்வினால் கை வளையல்கள் நெகிழ்ந்து கழன்று உருண்டோடிவிடுகின்றன. வளையல்களைத் தேடி அங்குமிங்குமாகத் திகைத்துப் பார்க்கிறாள்; புலம்புகிறாள்.

வாகனைக் கண்டு உருகுதையோ ஒரு
மயக்கமதாய் வருகுதையோ
மோகம் என்பது இதுதானோ? (இதை)
முன்னமே நான் அறிவேனோ!
ஆகம் எல்லாம் பசந்தேனே, பெற்ற
அன்னை சொல்லுங் கசந்தேனே
தாகம் இன்றிப் பூணேனே கையில்
சரி வளையும் காணேனே

தோழிமார் வசந்தவல்லியின் நிலையைக் கண்டு புலம்புகிறார்கள்.

ஐயோ என்ன செய்வம் என்பார்,
தெய்வமே என்பார், களைப்
பாச்சோ என்பார், மூச்சு ஏது என்பார்
பேச்சு ஏதோ என்பார்
கையில் திருநீறு எடுப்பார்
தையலார் எல்லாஞ் சூலக்
கையா! திரிகூட நாதா!
கண் பராய் என்பார்

மற்றவர்களுக்குக் குளிர்ந்து வீசுகிற வெண்ணிலவு வசந்தவல்லியின் உடம்பை நெருப்பாகச் சுடுகிறது. காதல் காய்ச்சலில், 'டெலிரியம் ஆஃப் லவ்'வில் அவளுடைய கற்பனை கொழுந்துவிட்டு எரிகிறது. தம்முடைய கருங் கூந்தலை தன்னைப் புசிக்க வந்த கருநாகம் என்று எண்ணி 'இந்த நிலா என்னைக் காய்கிறதா?' என்ற ஐயம் அவளுக்கு ஏற்படுகிறது.

நாகம் என்றே எண்ண வேண்டாம்
வெண்ணிலாவே – இது
வாரு குழற் பின்னல்
கண்டாய் வெண்ணிலாவே

தாமரை மலர் உன்னைக் கண்டதும் கூம்பிவிட்டது. சந்திரனே, அதன் பெருமையை எல்லாம் அழித்துவிட்டாயே நீ. அந்த ஆண்மையைத் திரிகூட லிங்கர் முன் போய்க் காட்டக் கூடாதா?

கோகனக வீறு அழித்தாய்
வெண்ணிலாவே – திரி
கூட லிங்கர் முன் போய்க்
காய்வாய் வெண்ணிலாவே

இந்தப் பாவி நிலாவும், செக்கரும் அதாவது, செவ்வானமும் இவளைப் படுத்துவது போதாதென்று, மன்மதன் வேறு இவளைப் படுத்தி வைக்கிறான்; கரும்பு வில்லும், மலர் அம்பும்கொண்டு அவளை வதைக்கிறான். 'தனியாளான என்னை வருத்துவதற்கு இத்தனை பேரா?' என்று நினைத்து மருகுகிறாள்.

கைக் கரும்பு என்ன! கணை என்ன!
நீ யென்ன! மன்மதா – இந்தச்
செக்கரும் பாவி நிலாவுமே
போதாதோ மன்மதா?

பாங்கிகள் வருகிறார்கள். அவர்களிடத்தில் தன் மன நிலை, உடல் நிலையைச் சொல்கிறாள் வசந்தவல்லி. சிவபெருமான் செம் மேனி உடையவர்தான். ஆனாலும் அவர் கழுத்தைச் சுற்றி சிறு கறுப்பு படர்ந்து இருக்கிறது. நஞ்சு இருக்கும் கழுத்து அது. அதை நினைந்து உருகும் என் உடம்பும் முழுவதும் கறுத்துவிட்டது.

செம் மேனி தன்னில் சிறு கறுப்பாரை
நான் கண்டு இப்போது
அம்மா என் மேனி
உடங்கலுமே கறுத்தேனே

சார்ந்த பொருளின் வண்ணமும், குணமும் சார்ந்தவளுக்கு ஏற்படுகிறது. அவருக்குத்தான் உணவு வேண்டியதில்லை, உறக்கம் வேண்டியதில்லை. அவரை நினைத்த எனக்குமா அந்த நிலை!

எள்ளளவு ஊணும் உறக்கமும்
இல்லாரைக் கண்டு நானும்
ஒள்ளிய ஊணும் உறக்கமும்
அற்று விட்டேனே

வசந்தவல்லி இந்த நிலையில் இருக்கும்போது குறத்தி சிங்கி அவள் முன் வருகிறாள். சிங்கியின் வாய் இலவுபோலச் சிவந்து இருக்கிறது. "அந்தச் சிவந்த வாயால் எனக்கொரு குறி சொல்ல மாட்டாயா?" என்று வசந்தவல்லி அவளைப் பார்த்துக் கேட்கிறாள். அப்படிக் கேட்கும்போதே, தன்னுடைய தெய்வக் காதலன் யார் என்பதைச் சொல்லாமல் சொல்கிறாள் வசந்தவல்லி. பலாவுக்குள் கனியாக இருப்பவள் அந்தக் குறும்பலா ஈசன்.

பலவுக்குட் கனியாய் நின்ற
பரமர் குற்றால நாட்டில்
இலவுக்குஞ் சிவந்த வாயால்
எனக்கொரு குறி சொல்வாயே

குறத்தி சொற்படி, வசந்தவல்லி தரை மெழுகிக் கோலமிட்டு, பிள்ளையாரைப் பிடித்துவைத்து, முப்பழம் படைத்து, தேங்காய் உடைத்து, நிறை நாழி அளந்துவைத்து, விளக்கிட்டு, அப்பம் அவல் வர்க்க வகை சர்க்கரையோடு எட் பொரி வைத்து, இறைவனை நினைந்து கரம் குவிக்கிறாள். பிறகு தன் முத்திரை மோதிரம் இட்ட கையைக் குறத்திக்குக் காட்டுகிறாள். குறத்திக்கு அருள் வருகிறது. குறளி வந்து வாயில் இருந்துகொண்டு அவளைப் பேச வைக்கிறதாம்.

துடிக்குது என் உதடும் நாவும்
சொல்லு சொல் எனவே வாயில்

இடிக்குது குறளி அம்மே
இனிக் குறி சொல்லக் கேளே

-என்கிறாள் குறத்தி. குறத்தி சுற்றி வளைத்துக் குறி சொல்கிறாள், சாட்டிச் சாட்டிச் சொல்கிறாள். பொறுமை இழந்த வசந்தவல்லி,

உளப்பிப் போட்டாய்,
குறியைக் குழப்பிப் போட்டாய்

என்று சடைத்துக்கொள்கிறாள். உடனே குறத்தி, "திரிகூட நாதரே உன் காதலர்" என்று பொட்டில் அடித்தாற்போல் பெயரையே சொல்கிறாள். இதைக் கேட்டவுடன் வசந்தவல்லி நாணத்தால் தலை கவிழ்ந்தாள்.

மன்னர் திரிகூட நாதர் என்னும் போதிலே முகம்
மாணிக்க வசந்தவல்லி நாணிக் கவிழ்ந்தாள்

இதைப் பார்த்த குறத்தி, "நாளையே உன் காதலர் உன்னை மேவ வரப்போகிறார்" என்று சொல்லி, நகைச்சுவை ததும்ப அவளைக் கேலி பண்ணுகிறாள்.

நன் நகரில் ஈசர் உன்னை மேவ வருவார் இந்த
நாணம் எல்லா நாளை நானுங் காணவே போறேன்
கைந் நொடியில் பொன்னிதழி மாலை வருங் காண் இனிக்
கக்கத்தில் இடுக்குவாயோ வெட்கத்தை அம்மே?

-என்று சொல்லிக் கிண்டல் செய்கிறாள்.

வசந்தவல்லிக்கும் குற்றால நாதருக்கும் உள்ள தெய்வக் காதலை ஊடாகவும், சிங்கனுக்கும் சிங்கிக்கும் உள்ள மனிதக் காதலைப் பாவாகவும் கொண்டு ஓர் அற்புதக் கவி நாடகத்தை நெசவு செய்து இருக்கிறார் கவிராஜர்.

சிங்கி இங்கே குறி சொல்லிக்கொண்டு இருக்கும்போது சிங்கன் அவள் பிரிவை ஆற்றாமல் வருந்துகிறான். சிங்கனுடைய முறுக்கான உடற்பொலிவை கவிஞர் வர்ணிக்கிறார்.

கொக்கு இறகு சூடிக்கொண்டு
குருவி வேட்டை ஆடிக்கொண்டு
வக்கா மணி பூட்டிக்கொண்டு
மடவார் கண்போல் ஈட்டி கொண்டு
தொக்காக் கச்சை இறுக்கிக்கொண்டு,
துள்ளு மீசை முறுக்கிக்கொண்டு
திக்கு அடங்காக் குளுவ சிங்கன்
திரிகூடச் சிங்கன் வந்தான்

வருகிற வழியில் பலவகைப் பறவைகளைக் கண்ணி போட்டுப் பிடிக்கிறான் சிங்கன். பறவை வகைகளைச் சொல்லும்போது ஆசிரியர் பெரிய 'ஆர்னிதாலஜிஸ்ட்' என்று தெரிகிறது.

காடை வருகுது கம்புள் வருகுது
காக்கை வருகுது கொண்டைக் குலாத்தியும்
மாடப் புறாவும் மயிலும் வருகுது.

வெள்ளைப் புறாவும் சகோரமும் ஆந்தையும்
மீன்கொத்திப் புள்ளும் மரங்கொத்திப் பட்சியும்
கிள்ளையும் பஞ்சவர்ணக்கிளிக் கூட்டமும்
கேகயப் பட்சியும் நாகணவாய்ச்சியும்
உள்ளானும் சிட்டும் வலியானும் அன்றிலும்.

இப்படியாக எத்தனையோ பறவைகளின் பெயர்களைச் சொல்கிறார். 'மீன் கொத்தியா? மீன் குத்தியா' என்று ஒரு சர்ச்சை தமிழ் நாட்டில் இப்போது நடந்து கொண்டு இருக்கிறது. 300 ஆண்டுகளுக்கு முன்பே அது 'மீன் கொத்தி'தான் என்று தீர்ப்பளித்து இருக்கிறார் கவிஞர்.

பறவைகளுக்குக் கண்ணி வைத்துக்கொண்டு இருக்கும்போதே, சிங்கனுக்கு சிங்கியின் நினைவு வந்துவிடுகிறது. நான் ஒரு கிளியாகப் பிறந்தேன் இல்லையே என்று ஏங்குகிறான். ஏன் என்று சொல்கிறான்:

துள்ளி மடி மேல் இருந்து தோளின் மேல் ஏறி, அவள்
கிள்ளை மொழி கேட்க ஒரு கிள்ளை ஆனேன் இலையே!

மேலும் புலம்புகிறான்

சிங்கியைக் காணேனே என்
வங்கணச் சிங்கியைக் காணேனே,
சிங்கியைக், காமப் பசுங் கிளிப் பேடையைச்,
சீர் வளர் குற்றாலர் பேர் வளம் பாடிய
சங்கீத வாரியை, இங்கித நாரியைச்,
சல்லாபக் காரியை உல்லாச மோகனச் *(சிங்கி)*

அவளுடைய அழகை நம் கண் முன் நிறுத்திக் காட்டுகிறான்:

கறுப்பில் அழகியடா, என் சிங்கி,
கறுப்பில் அழகியடா
நகையும் முகமும் அவள் நாண் நயக் கை வீச்சும்
பகைவரும் திரும்பிப் பார்ப்பாரடா
தொகையாய்ச் சொன்னேன், இனிச் சொல்லக் கூடாத ஒரு
வகையாய் வருகுது என்னை மயக்குதையே *(கறு)*

தேடித் தேடி அலைந்து கடைசியாகச் சிங்கி இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கிறான். அவளைக் கண்டதும் அவனுக்கு ஏற்பட்ட

மன நிலையை நாம் எப்படி வர்ணிக்க முடியும்? மட்டற்ற மகிழ்ச்சியுற்றனன் என்று வேண்டுமானால் நாம் சொல்வோம். கவிஞர் இப்படி இளைச்சுப் போன தமிழிலா பேசுவார்? வருகிறது அவருடைய கவி.

கண்டாடித் துள்ளாடிக் கள் ஆடுந் தும்பியைப்போல்
கொண்டாடிக் கொண்டாடிக் கூத்தாடிக்கொண்டானே

சிங்கி புத்தம்புது நகைகளை அணிந்து இருக்கிறாள். சிங்கன் தன் மலை நாட்டுத் தமிழில் ஒவ்வொரு நகையைப்பற்றியும் கேட்கிறான். உரையாடல் சுவைமிக்க உரையாடல்.

காலுக்கு மேல் பெரிய விரியன்
கடித்துக் கிடப்பானேன் சிங்கி?
சேலத்து நாட்டில் குறி சொல்லிப் பெற்ற
சிலம்பு கிடக்குதடா சிங்கா.

நீண்டு குறுகியு நாங்கூழுப் போல
நெளிந்த நெளிவு என்னடி சிங்கி?
பாண்டியனார் மகள் வேண்டுங் குறிக்காகப்
பாடகம் இட்டதடா சிங்கா.

சுண்டு விரலில் குண்டலப் பூச்சி
சுருண்டு கிடப்பானேன் சிங்கி?
கண்டிய தேசத்தில் பண்டு நான் பெற்ற
காலாழிப் பீலியடா சிங்கா.

மெல்லிய பூந் தொடை வாழைக் குருத்தை
விரித்து மடித்தது ஆர் சிங்கி?
நெல்வேலியார் தந்த சல்லாபச் சேலை
நெறி பிடித்து உடுத்தினேன் சிங்கா.

இப்படியாகத் தொட்ட இடம் எல்லாம் பத்தரை மாற்றுத் தங்கச் சுரங்கமாக இருக்கும் குற்றாலக் குறவஞ்சி. காதற் சுவை மாத்திரமல்ல, எல்லாவிதமான சுவைகளையும் இந்த நூலில் அனுபவிக்கலாம்.

ஓர் அழகிய, உணர்ச்சிமிக்க வாழ்த்தோடு குறவஞ்சி நாடகம் முடிகிறது.

வார் வாழும் தனத்தி குழல்வாய் மொழி
அம்பிகை வாழி வதுவை சூட்டும்
தார் வாழி திரிகூடத்தார் வாழி
குறு முனிவன் தலைநாட் சொன்ன
பேர் வாழி அரசர்கள் செங்கோல் வாழி
நன்னகரப் பேரால் ஓங்கும்
ஊர் வாழி குற்றாலத் தலத்து அடியார்
வாழி நீடூழி தானே!

5. பள்ளுப் பாட்டு

நீண்ட நாள் வறட்சிக்குப் பின் மழைத் தூறல் விழுந்தால், பூமாதேவிக்கே மேனி சிலிர்த்துவிடும். அந்தச் சிலிர்ப்பில் 'கம்'மென்று மண்ணின் மணம் எங்கும் வீசும். அந்த மணத்தை உட்கொள்ளும்போது உள்ள ஆனந்தத்தை வேறு எந்த மணமும் நமக்குக் கொடுப்பதில்லை. தமிழ் மண்ணின் இனிய மணத்தை வீசி வரும் பாடல்களையே பள்ளுப்பாட்டு என்று சொல்கிறோம்.

கற்றறிந்த புலவர்கள் சாமானிய மக்களும் அனுபவிப்பதற்காக எளிய பேச்சுத் தமிழில் பள்ளுப்பாட்டைப் பாடினார்கள் என்று நினைப்பது தவறு. பேச்சுத் தமிழில் இருக்கும் வேகத்தையும், அழகையும் அனுபவித்த காரணத்தால் அவர்கள் அவ்வாறு பழகு தமிழில் பாடினார்கள். 'ராபர்ட் பர்ன்ஸ்' என்ற ஆங்கிலக் கவிஞர் கேவலம் குடியானவர்களுடைய மொழியிலேயே அற்புதமான பல கவிகளை இயற்றி இருக்கிறார். 'மார்க் ட்வைன்' என்ற அமெரிக்க நாவலாசிரியர், 'ஹக்கிள்பெர்ரி ஃபின்' முதலிய சிறந்த நாவல்களை நீக்ரோக்களுடைய கொச்சை மொழியில் எழுதி இருக்கிறார். மேற்சொன்ன இருவரைப்போலவே பள்ளுப்பாட்டு எழுதிய கவிஞர்களும் சிறந்த புலவர்கள். மேலும், உழவர்களுடைய வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தவர்கள். அந்த உல்லாச வாழ்க்கையை உல்லாசமாகக் கொண்டாட வேண்டும் என்றால் உழவர் தமிழில்தான் முடியும் என்பதை உணர்ந்தவர்கள்.

அந்தத் தமிழுக்கு என்ன ஆற்றல், என்ன வேகம், என்ன சுகம்! மழை காலம் தொடங்கப்போகிறது. வறண்டுபோயிருக்கும் முக்கூடல் (இந்தக் காலத்தில் சீவலப்பேரி) ஆற்றில் வெள்ளம் வரப்போகிறது. முக்கூடலில் இருந்து சுற்றுமுற்றும் பார்க்கிறார் கவிஞர். மேற்கே மலையின் ஆழத்துக்குள் சேர நாட்டு மின்னல் தெரிகிறது. கிழக்கே ஈழத்து (இலங்கை) மின்னல் வெட்டுகிறது. வடக்கும் தெற்குமாகச் சூழ்ந்தடிக்கிறது மின்னல்.

ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்றுதே குறி – மலை
ஆழ மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே.

அந்தக் காலத்து மாணவர்கள் கோலாட்டம் ஆடிக்கொண்டே இந்தப் பாட்டைப் பாடுவார்கள்.

'சூழ மின்னுதே' என்ற வரியில் 'தே'க்கு அழுத்தம் கொடுப்பதற்காகக் காலால் தரையை ஓங்கி மிதித்துத் தாளம்

போடுவார்கள் அவ்வளவு களிப்பு அவர்களுக்கு. மின்னல் குறியைத் தவிர, வேறு சில குறிகளும் மழை காலத்துக்கு கட்டியம் கூறுகின்றன. காற்றில் மரக் கிளைகள் சுழற்றி அடிக்கின்றன. கிணற்றில் உள்ள சொறித் தவளைகள் கூப்பிடுகின்றன. சேற்றில் உள்ள நண்டு, மழை வரப்போவதை உணர்ந்து தன் வளையில் சேற்றைக் குழைத்து அடைக்கிறது! கோடிக் கணக்கான வானம் பாடிகள் மழையை எதிர்நோக்கிப் பாடி ஆடுகின்றன.

ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்றுதே குறி - மலை
ஆழ மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே.
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே - கேணி
நீர்ப் படு சொறித்தவளை கூப்பிடுகுதே.
சேற்று நண்டு சேற்றைக் குழைத்தேற்று அடைக்குதே - மழை
தேடி ஒரு கோடி வானம் பாடி ஆடுதே.

நாளை மழை வரப்போகிறது என்று தெரிந்த உழவர்கள் மழைத் தண்ணீரைப் பாதுகாப்பதற்காக மராமத்து வேலைகளைச் செய்கிறார்கள். அணைகளையும், ஏரிகளையும் 'பதன'ஞ் செய்ய வேண்டுமே. அதற்காக வட்டக் கூடை, வெட்டரிவாள், கொட்டு (சிறு மண்வெட்டி) முதலியவற்றை எடுத்துக்கொண்டு திரண்டு வருகிறார்கள்.

மாரிபெய்புல், கால், அணைகள் ஏரி பதனஞ் - செய்ய
வட்டக் கூடை வெட்டரிவாள் கொட்டும் கைக் கொண்டே

-திருமலை முருகன் பள்ளு

அவர்கள் குளம், மறுகால் முதலியவற்றைத் திருத்திக்கொண்டு இருக்கும்போது, மழை பெய்யத் தொடங்குகிறது. இடித்து முழக்கிக் கொண்டு பெய்கிறது. வெள்ளம் ஆற்றின் இரு கரைகளிலும் மருவி, இரைந்து, குமுறி விரைந்து, அதிர்ந்து பாய்கிறது. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் பாய்ந்து ஓடி வருகிறது. அதன் கைவண்ணத்தை வர்ணிக்கிறது திருமலை முருகன் பள்ளு.

வாழைக் குலையைத் தள்ளுமாம் - நெடுந்
தாழைக் குலையில் துள்ளுமாம்
கருது குளங்கள் நிரப்புமாம் - அவைக்கு
உரிய வளங்கள் பரப்புமாம்

ஆற்று வெள்ளத்தின் வரத்து மிக்க துடுக்குத்தனமாக இருக்கிறதாம். எதை எல்லாம் அது சுருக்கிக்கொண்டு செல்கிறது? சங்கரன் செட்டி பருத்தியையும், கட்டை ரெங்கயன் பட்ட விருத்தியையும்,

சிங்கக்கோன் பட்டி ஆடையையும், வெள்ளை அங்கக்கோன் குட்டிக் கூட்டையும், கங்கன் கட்டிய நெல்லையும், வலைப்புங்கன் வெட்டிய வல்லையையும் (மேடும்), அல்லிபீற்றல் வீட்டையும், தெற்றுப்பல்லி நூற்ற ராட்டையையும், தேவி வடிச்ச பானையையும், மூளி ஆவி பிடிச்ச மீனையும், வெண்டி மச்சினி பொட்டியையும், அவள் நண்டு அவிச்சிடும் சட்டியையும் - இவற்றை எல்லாம் அடித்துக்கொண்டு வேகமாகச் சுருட்டியும், வாரியும், மறித்தும் செல்கிறதாம் அனும நன்னதி - பகீரதப் பிரயத்தனத்தில் வந்த கங்கை ஆற்றைப்போல.

வல்லை சுருட்டி வாரிமறித்தல்
வெல்லை பரந்து பகிரதன்
வரநதியெனும் அனும நன்னதி
வருதல் பாரும் பள்ளீரே

-திருமலை முருகன் பள்ளு

கமலை ஞானப் பிரகாசர் என்ற சிறந்த ஞானி 16-ம் நூற்றாண்டில் திருவாரூரில் வாழ்ந்தவர். அவர் பாடிய திருவாரூர்ப் பள்ளு என்ற நூலில் ஆற்று வெள்ளத்தில் மிடையும் மீன் வகைகளை ஆர்வத்தோடு அடுக்கிக்கொண்டே போகிறார்.

வாளை திருக்கை கறவு தொழுத்தை
வஞ்சிரம் சிறு பஞ்சிரம்
மடவையுல்ல மயிரை கெளிறு
மகரங் குரவை மலங்கு மீன்
தேளீ உளுவை சன்ன மயறு
திமி திமிங்கலம் புரவி மீன்
சீனீ கைத்தலை யானை மீனொடு
தெள்ளீ இறாவொடு வெள்ளீ இறால்

நாம் மீன்களின் பெயர்களை அடுக்கினால், அது வெறும் சுவை அற்ற அட்டவணையாக முடியும்; ஆனால், கமலை ஞானப் பிரகாசருடைய அட்டவணையில் மீன்கள் மாத்திரமல்ல, கவிதை மின்னலும் சேர்ந்து மின்னுவதைப் பார்க்கிறோம்.

உழவர்கள் ஏர் கட்டுகிறார்கள். மாடுகளிடத்தில் நெருங்கிப் பழகுபவர்கள் அவர்கள். ஒவ்வொரு மாட்டையும் ஒரு செல்லப் பெயரிட்டு அழைத்து ஏரில் பூட்டுகிறார்கள். திருமலை முருகன் பள்ளுப் பாடிய பெரியவன் கவிராயர் மாடுகளின் பெயர்களை வைத்துக்கொண்டு ஒரு ஜால வித்தையே செய்கிறார்:

கூழைவாலன் கூடுகொம்பன் குத்துக்குளம்பன்
மயிலை கரும்போரான் கட்டிவெள்ளை

கொட்டைப்பாக்கன் செம்மறையன் வெண்தலையன்
குற்றாலன் வெளிக்கண்ணன் மாலான்
மோழைக்காளை கருமறையன் சூடுதின்னி
வெள்ளைக்காலன் மட்டைக்கொம்பன் திருகுகொம்பன்
வெடிவாலன் வெறியன் ஆனைச்சொறியன் இவை
விரும்பி ஏர்கட்டினேன் ஆண்டே.

(சூடு அடிக்கும்போது ஒரு மாடு கதிரைத் தின்றுவிடுமாம். அதற்கு சூடு தின்னி என்ற பட்டப்பெயர் கொடுத்தது எவ்வளவு பொருத்தம்!)

தரிசாகக் கிடந்த நிலத்தில் ஆட்டுக் கிடையும், மாட்டுக் கிடையும் போட்டு, போதிய அளவுக்கு எருவிட்ட பிறகு, மூன்று சால் அடித்து, நீரைத் தேக்கிக் குழப்பி அதில் பசுங் குழைகளைப் பதித்து, நல்ல நாளும் சகுனமும் பார்த்து, முதன்முதல் ஏர் பூட்டி உழும் சடங்குக்கு நாளேரிடுதல் என்று பெயர். நாளேரிட்டு வித்தைத் தொளியில் (சேற்றில்) விதைக்கிறான் உழவன்.

நெல் வித்தில்தான் எத்தனை வகை?

சித்திரக் காலி வாலான் சிறை மீட்டான் மணல் வாரி
நெஞ்சம்பா கருஞ் சூரை சீரகச் சம்பா
முத்து விளங்கி மலை முண்டன் பொற்பாளை நெடு
மூக்கன் அரிக்கிராவி மூங்கிற் சம்பா

கத்தூரி வாணன் காடைக் கழுத்தன் இரங்கல் மீட்டான்
கல்லுண்டை பூம்பாளைபாற் கடுக்கன் வெள்ளை
புத்தன் கருங் குறுவை புனுகுச்சம் பாவும் இரு
பூவுக்கும் விதை சேரிற் போட்டேன் ஆண்டே.

-முக்கூடற் பள்ளு

கவிஞருக்கு எதுகையும் மோனையும் கொடுத்து உதவுவதற்காகவே நம் முன்னோர்கள் நெல் வகைகளுக்கும் இவ்வளவு இனிய பெயர்களைக் கொடுத்தார்களோ என்று எண்ணவேண்டி இருக்கிறது. ஒரு வகை நெல் மணி வளைந்திருக்கும்; நெடு மூக்கன் என்று அதற்குப் பெயரிட்டார்கள். இன்னொரு வகை நெல் கறுத்து, பளபளவென்று இருக்கும் - காடை என்ற பறவையின் கழுத்தைப்போல; அதற்குக் காடைக் கழுத்தன் என்று நாமம் சூட்டினார்கள்.

நல்ல மணமுள்ள நெல்லுக்கு புனுகுச் சம்பா என்றும், கடினமான நெல்லை கல்லுண்டை என்றும், அளவில் சிறிய நெல்லை சீரகச் சம்பா என்றும் நம்மவர்கள் அழைத்தார்கள் என்றால், நெல்லோடு எப்படி நெருங்கி உறவாடி இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

சுவையிலும், மணத்திலும் மிகச் சிறந்த ஒரு வகை நெல்லை அதற்கென்று ஒரு தனிக் கதை கட்டியே பாராட்டி இருக்கிறார்கள். பகைவர்கள் நம்மைச் சிறையில் அடைத்துவிட்டால், அந்த நெல்லில் ஒரு கோட்டை நெல்லை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது. உடனே அவர்கள் நம்மைச் சிறையில் இருந்து விடுவித்துவிடுவார்கள். அந்த நயமான நெல்லை சிறை மீட்டான் என்று சொல்லி உபசரித்தார்கள். இப்படி எல்லாம் நெல்லுக்குள்ளும் சொல்லுக்குள்ளும் புகுந்து பார்த்தால்தான் தமிழர் பண்பாட்டின் சொரூபம் தெரியும்.

வேல் வாழ்க! என்று சொல்லித் திருமலை முருகனை வாழ்த்தி, நெல்லை விதைக்கிறான் குடும்பன். மெல்ல மெல்ல, விதையில் இருந்து முளை முளைத்து வருகிறது. முளை முகம் கண்டவுடன் அவனுக்கு ஒரே ஆனந்தம்.

வளர்ந்த நாற்றை முகங் கண்டான் – சேரி
மன்னர்கூட மது உண்டான்
அளந்திடா மகிழ்ச்சி கொண்டான் – பண்ணை
ஆண்டவர்க்கு அந்தச் செய்தி விண்டான்

-முக்கூடற் பள்ளு

நாற்றங்காலில் நாற்று வளர்ந்து முற்று முன், தரிசாகக் கிடந்த நிலங்களைப் பக்குவப்படுத்துகிறார்கள். ஆட்டுக் கிடையும் மாட்டுக் கிடையும் போட்டு, போதிய அளவுக்கு எருவிட்ட பிறகு, நிலத்தில் மூன்று சால் அடித்து, நான்கு தரம் உழவு செய்து, நீரைத் தேக்கிக் குழப்பி, ஏருக்கு எட்டாமல் தப்பிய வலவனடி நிலத்தையும் திருத்தி, வயலில் பசுங் குழைகளைப் பதித்து, பதித்த சேற்றில் (தொளியிலே) பறித்த நாற்றை நாலு திசையும் நோக்கிக் கும்பிட்டு குரவை முழக்கம் முழங்கி நடுகை செய்யும்படி பள்ளியரை அழைக்கிறான் குடும்பன்.

கைவிரசலாய் நடுகைச் சமர்த்தைக் காட்டும் பள்ளீரே

-முக்கூடல்

-என்று குடும்பன் பள்ளியரை உற்சாகப்படுத்துகிறான்.

உழத்தியர் பாடிக்கொண்டே நாற்றைப் பிடுங்கி நடுகிறார்கள். நாற்றைப் பிடுங்கும்போது நண்டையும் சேர்த்துப் பிடிக்கிறார்கள்.

நாற்றெல்லாம் பிடுங்கையிலே – லேலங்கடி லேலோ
நண்டுஞ் சேர்த்துப் பிடிக்கறாங்க – லேலங்கடி லேலோ

-ராமநாதபுரம் நாடோடிப் பாடல்

பிடுங்கிய நாற்றைப் பிரியில் பெரிசாகக் கட்டி, தலையில் வைத்துக்கொண்டு பெண்கள் பெருமையோடு நடக்கும் அழகை அனுபவிக்கிறார் கவிஞர்.

பெரிய கட்டைச் சரியா வைத்து - வேலங்கடி வேலோ
பெருமையாய்த்தான் தலையில் வைத்து - வேலங்கடி வேலோ
இடுப்பில் ஒரு கையும் வைத்து - வேலங்கடி வேலோ
அடுத்த வயல் போறாங்கடி - வேலங்கடி வேலோ

ஜப்பானுக்குப் போய் புதிய விவசாய முறையை ஆராய்ந்து வந்த நண்பர், "நூறு நாற்று நடுவதற்குள் அங்குள்ளவர்கள் திணறிப் போகிறார்கள். அப்படி நட்ட பிறகு ஜப்பானிய உழவர்கள் களைப்பாறுவதற்காக வயலைவிட்டு வெளியே வந்துவிடுகிறார்கள்" என்று சொல்கிறார். ஆனால், ராமநாதபுரம் பள்ளி தன்னுடைய 'நடுகைச் சமர்த்தை'ப்பற்றிப் பாடுகிறாள்:

ஆறு ஒண்ணுக்கு ஆயிரம் நாற்று - வேலங்கடி வேலோ
அழகாய்த்தானும் நடுவோமையா - வேலங்கடி வேலோ
வேலங்கடிப் பாட்டுப்பாடி - வேலங்கடி வேலோ
வேசா நாற்றை எடுப்போமையா - வேலங்கடி வேலோ
தில்லாலங்கடிப் பாட்டுப்பாடி - வேலங்கடி வேலோ
திருப்பித் திருப்பி நடுவோமையா - வேலங்கடி வேலோ

நடவும் முடிந்தது. பயிர் விளைகிறது; அதற்குப் பசப்பு நிறம் ஏறுகிறது; அதன் குருத்து பரந்து தழைக்கிறது, எப்படி? தமிழிசைக்கு முடியசைக்கும் முதல்வர் எனத் தழைக்கிறதாம். கதிரின் முடியில் நெல்லுக்கு உரிய பால் (பொதி) பிடிக்கிறது. கதிர் முதிர்ந்து, இடை பருத்து, நெல் விளைந்துவிட்டது.

பதிந்த நடவு தேறிப் பசப்பும் ஏறிப்
பசந்து குருத்து மேன்மேற் பரந்து செறிந்து
முதிர்ந்த தமிழிசைக்கு முடி அசைக்கும்
முதல்வரெனத் தழைத்து முதல் குழைந்தே
பொதிந்த பொதியை நீட்டிப் புட்டில் காட்டிப்
புரப்போர் பொன்னிணங் குகைபோல் வணங்கி
எதிர்ந்த கதிர் முதிர்ந்தே இடை பழுத்து
ஏற்ற விளைவு தோற்றந் தேற்றியதே.

-முக்கூடற் பள்ளு

நல்ல நாள் பார்த்து முதன்முதல் அறுக்கும் கதிருக்கு நாட் கதிர் என்று பெயர். பயிரின் செழிப்பைப் பார்த்தால் நல்ல மேனி காணும் என்று தெரிகிறது. ஒரு கதிரில் உழக்கு நெல் இருக்கிறது. ஒரு கட்டுக் கதிரில் ஒரு கலம் நெல் கிடைக்கும்.

கட்டுக் கலங் காணும் கதிர் உழக்கு நெற் காணும்

-அல்லி அரசாணிமாலை

முறுக விளைந்த நெற் கதிர்களை நெருங்கி அரிகிறார்கள். அரிந்த கதிர்களைக் கட்டி, வைக்கோல் புரியால் முறுக்கி, இறுக்குகிறார்கள். கட்டுகளைக் களத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து, கதிர்களை அடுக்கி வைக்கிறார்கள். இந்த அடுக்கை நிலைப் போர் என்று சொல்வது வழக்கம். நின்ற போரைச் சரித்து நிலத்தில் விரித்துப் பிறகு பிணையல் அடிக்கிறார்கள். சாதாரணமாக எருதுகளை ஒன்றோடொன்று பிணைத்துப் போரடிப்பார்கள். ஆனால், மதுரையில் ஓர் அதிசயம் நடக்கிறதாம்.

மாடு கட்டிப் போர் அடித்தால் மாளாது செந் நெல் என்று
ஆனை கட்டிப் போர் அடிக்கும் அழகான தென் மதுரை

-அல்லி அரசாணிமாலை

போர் அடிப்பில் கிடைத்த நெல்லைக் குவித்து வைப்பார்கள். இந்தக் குவியலுக்குப் பொலி என்று பெயர். பொலியைக் கூட்டி முறத்தினால் பதர் போக வீசி, பிள்ளையாரைப் பிடித்துவைத்து, அவரை வணங்கிவிட்டு, மரக்காலால் குடும்பன் நெல்லை அளக்கிறான். மரக்காலுக்கு மேல் கை இரண்டையும் குடம்போலச் சேர்த்து வைத்து அதிக நெல் மரக்காலில் பிடிக்கும்படியாக அளப்பது மரபு. இதைக் 'குடங்கை கட்டி அளத்தல்' என்று சொல்வார்கள். அளந்து போட்ட குவியலுக்கு அம்பாரம் என்று பெயர். முத்திரை இடுவதுபோல, அந்த அம்பாரத்தில் ஒரு குறி போடுவார்கள். இந்த அம்பாரத்தில் இருந்து முதலில் எடுக்கும் நெல்லை பிள்ளையார் கோயில் பூசைக்காக ஒதுக்கிவைப்பது வழக்கம். இந்த நெல்லுக்கு பிள்ளையாரடி என்று பெயர்.

பண்ணையார் உழவர்களிடத்தில் பரிவு நிறைந்தவர். பிள்ளையாரடி நெல்லை ஒதுக்கியவுடன், உழவர்களுக்குப் படியளப்பார். காசாகவோ, நெல்லாகவோ, அரிசியாகவோ கூலி கொடுக்கலாம். ஆனால், சோறாகக் கூலி கொடுத்தால் பண்ணையாட்களுக்கு மிக்க திருப்தியுண்டாகும்.

காசாப் படி அளந்தால்
கனத்த நேரஞ் செல்லும் என்று,
நெல்லாப் படி அளந்தால்
நீண்ட நேரஞ் செல்லும் என்று
அரிசியாப் படி அளந்தால்
ஆக்க நேரஞ் செல்லும் என்று
சோறாப் படி அளக்கும் – எங்கள் ஐயா
சுவாமியார் பண்ணை இது

-என்று மதுரை உழத்தி, பண்ணையாரை மெச்சிப் பாடுகிறாள்.

பள்ளுப் பாட்டுகளில் இப்படியாகத் தமிழ் மண்ணின் சுகந்த மணம் வீசிக்கொண்டே இருக்கும். நடுகைக் காலத்தில் நடக்கும் காதற் காட்சிகளும், குடும்பனுடைய இரு மனைவியருக்குள் நடக்கும் ஏசல் காட்சிகளும் பள்ளுப் பிரபந்தங்களில் பொதுவாகக் காணக்கூடிய காட்சிகள். ஏசலுக்குப் பின் இரு மனைவிகளும் ஒருவரையொருவர் சமாதானம் செய்துகொள்வார்கள்.

சொன்னால் என்ன நீயும் பொறு நானும் பொறுத்தேன் –
கிளை
சூழ்ந்திருக்க நாமே கூடி வாழ்ந்திருக்கலாம்
பன்னகத்தில் ஆடிய முக்கூடல் அழகர் – திருப்
பாத மலர் வாழ்த்தி ஆடிப் பாடுவோமே.

(பன்னகம் - காளிங்கன் என்ற பாம்பு.)

ஒவ்வொரு பள்ளும் இனிய வாழ்த்தோடு முடியும்.

வாழி திருக் குற்றாலர் வாழி திருமலையான்
வாழி அடியார் உலகம் வாழியவே – வாழி இந்தச்
செந்தமிழைக் கற்றோர் செவியாரக் கேட்கின்றோர்
சந்ததமும் வாழி தழைத்து.

-திருமலை முருகன் பள்ளு

6. தேசிய கவி பாரதி

முத்தொள்ளாயிரம் போன்ற பழைய நூல்களில் சேர, சோழ, பாண்டிய மண்டலங்களில் தமிழ்க் கவிஞர்களுக்கு இருந்த நாட்டுப் பற்றைக் காணமுடிகிறது. தமிழ் நாட்டைப்பற்றிப் பொதுவாகப் பாடியவர்கள் மிகச் சிலரே. பாரதியாருக்கு முன் பாரத நாட்டின் முழு உருவத்தையும் கண்டு அதன் மீது தமக்குள்ள பற்றை எடுத்துப் பாடிய தமிழ்க் கவி இல்லவே இல்லை என்று சொல்லி விடலாம்.

1882-ல் பிறந்த பாரதியார் தன் 24-வது வயது வரை, அதாவது 1906-ம் வருடம் வரை நாட்டுப் பாடல் ஒன்றும் பாடவில்லை. இந்தியாவை ஆண்டு வந்த ஆங்கிலப் பேரரசரிடத்தில் மக்கள்

மிக்க விசுவாசம்கொண்டு இருந்த காலம் அது. 1906-ம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தபோது, 'வருக செல்வ, வாழ்க மன் நீயே' என்று தொடங்கும் வாழ்த்துப் பாட்டை பாரதியாரே பாடினார்.

1906-ம் ஆண்டில் நடந்த சூரத் காங்கிரஸில் நடந்த நிகழ்ச்சிகள்தான் பாரதியாரின் நாட்டுப் பற்றைத் தூண்டி பல தேசிய கீதங்களை அவர் பாடும்படி செய்தன. 1908-ல் அவர் வெளியிட்ட 'சுதேச கீதங்கள்' என்னும் நூலில் அவர் கூறும் சமர்ப்பணம் கீழ்க்காணுமாறு:

'ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்ம நிலை விளக்கியதற்கு ஒப்ப, எனக்கு பாரததேவியின் சம்பூர்ண ரூபத்தைக் காட்டி, சுதேச பக்தியும் உபதேசமும் புரிந்தருளிய குருவின் சரண மலர்களுக்கு இந்தச் சிறு நூலைச் சமர்ப்பிக்கிறேன்.'

1909-ல் வெளிவந்த பாரதியாரின் ஜன்ம பூமி என்ற நூலின் முகவுரையில், தனக்கு எந்த ஆண்டில் பாரததேவியின் தரிசனம் கிடைத்தது என்பதை ஆர்வத்தோடு விளக்குகிறார்:

'நாட்டில் ஒரு புதிய ஆதர்சம், ஒரு கிளர்ச்சி ஒரு மார்க்கம் தோன்றுமேயானால், மேன்மக்களின் நெஞ்சம் அனைத்தும், ரவியை நோக்கித் திரும்பும் சூரியகாந்த மலர்போல, அந்த ஆதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபக்கிருது வருஷத்தில் பாரத நாட்டில், சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய 'தேச பக்தி' என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தை எல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களில் குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அந்தப் புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அந்த அன்பு காரணமாக சென்ற வருடம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்.'

ஆகவே, பாரதியாருடைய வாக்குமூலத்தை வைத்துக்கொண்டு பார்ப்போமானால், தமிழ்க் கவிதை உலகத்தில் இந்திய தேச பக்தி என்பது ஒரு நவீன மார்க்கமாகக் கருதப்பட்டது என்றும், அந்தப் புதிய மார்க்கத்தில் முதன்முதலாக அன்புகொண்ட தமிழ்க் கவிஞர் பாரதியே என்றும், அவ்வாறு அவர் அன்புகொண்ட வருடம் சுபக்கிருது வருடம் என்றும் தெரிகிறது.

நாட்டுப் பற்றைத் தமிழகத்தில் பரப்புவதற்காக பாரதியார் கைக் கொண்ட முறைகள் பல. முதலாவதாக நாட்டுப்பற்றுக்கு சமயத்துக்கு உண்டான அந்தஸ்தை அவர் கொடுத்து, பாரதத் தாய் காளியின் அம்சம் என்று பாடினார்.

பேயவள் காண் எங்கள் அன்னை – பெரும்
பித்துடையாள் எங்கள் அன்னை

காயழல் ஏந்திய பித்தன் – தனைக்
காதலிப்பாள் எங்கள் அன்னை.

ஆகவே, அவள் பெயரைச் சொன்னால் ஒரு சக்தி பிறக்கும் என்று ஆணையிடுகிறார்.

தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

அவளுடைய உருவம் எப்படி இருக்குமாம்?

முப்பது கோடி முகம் உடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்று உடையாள் – இவள்
செப்பு மொழி பதினெட்டு உடையாள், எனில்
சிந்தனை ஒன்று உடையாள்.

அறுபது கோடி தடக் கைகள் உடையவள் அவள். நம்மை அடிமையாக்கியவர்களை அவள் என்ன செய்வாள்?

நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரிவாள் எங்கள் தாய் – அவர்
அல்லவர் ஆயின் அவரை விழுங்கிப் பின்
ஆனந்தக் கூத்திடுவாள்.

அப்பேர்ப்பட்டவளுடைய பெயரை உச்சாடனம் செய்தால் நம் அடிமை நிலை நீங்கிவிடும்.

ஒன்றாய் நின்று இனி வென்றாயினும் உயிர்
சென்றாயினும் வலி குன்றாது ஓதுவம்
வந்தே மாதரம் – ஜய வந்தே மாதரம்

இவ்வாறாக இந்திய நாட்டின் பூமிப் பரப்பை பாரததேவி என்று போற்றியும், துர்க்கையின் அம்சம் என்று பாடியும், நாட்டு பக்தியை வளர்த்தவர் பாரதியார்.

அவர் கையாண்ட இன்னோர் உத்தியின் மூலம், மொழியாலும் இனத்தாலும் வேறுபட்டிருந்த இந்திய மக்களுக்கு உணர்ச்சியினால் ஒருமைப்பாட்டினை உண்டாக்கினார். தாயின் மணிக்கொடி என்ற அடையாளத்தை மையமாகக்கொண்டு இந்த ஒருமைப்பாட்டு உணர்ச்சியை அற்புதமாக நெசவு செய்தார்.

செந்தமிழ் நாட்டுப் பொருநர் – கொடுந்
தீக் கண் மறவர்கள், சேரன்தன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர் – தாயின்
சேவடிக்கே பணி செய்திடு துளுவர் –

தாயின் மணிக்கொடி பாரீர்! அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

கன்னடர் ரெட்டியரோடு – போரில்

காலனும் அஞ்சக் கலக்கு மராட்டர்
பொன்னகர் தேவர்கள் ஒப்ப நிற்கும்
பொற்புடையார் இந்துஸ்தானத்து மல்லர் (தாயின்)
மாதர்கள் கற்புள்ள வரையும் - பாரில்
மறைவருங் கீர்த்திகொள் ரஜபுத்ரவீரர் - (தாயின்)
பஞ்சநதத்துப் பிறந்தோர் - முன்னைப்
பார்த்தன் முதற் பலர் வாழ்ந்த - நன்னாட்டார்
துஞ்சும் பொழுதினும் தாயின் - பதந்
தொண்டு நினைந்திடும் வங்கத்தினோரும் (தாயின்)

இந்திய வரலாற்றில் வீரச் செயல்களைப் புரிந்த வீரர்கள் பலரை நாம் சந்திக்கிறோம். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தனி வீரத்தை நாட்ட வந்தவர்கள் அல்லர். பாரததேவியின் அருளால் பாரததேவியின் கருவிகளாக இருந்து அவர்கள் அந்தச் சாகசங்களைச் செய்தார்களாம்.

முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்த வில் யாருடை வில்? - எங்கள்
அன்னை பயங்கரி பாரததேவி நல்
ஆரிய ராணியின் வில்

கர்ணனுடைய கொடைக் கை யாருடைய கை?

சாகும் பொழுதில் இரு செவிக் குண்டலம்
தந்தது எவர் கொடைக் கை? - சுவைப்
பாகு மொழியில் புலவர்கள் போற்றிடும்
பாரத ராணியின் கை.

இதைப்போலவே, காண்டிபம் ஏந்தி உலகினை வென்றது ஆரியதேவியின் தோள்; கீதை புகன்றது பாரததேவியின் திருவாய்; புத்தன் மொழி எங்கள் அன்னையின் மொழி என்றெல்லாம் சொல்லி உணர்ச்சி ஒருமைப்பாட்டை வளர்த்தார் பாரதி.

மொழியின் பெயராலும், குறுகிய மாநிலப் பற்றின் பெயராலும் பூசலிட்டுக்கொண்டு இருந்த இந்திய மக்களைப் பார்த்து, பாரத நாட்டின் பல பாகங்களும் ஒன்றை ஒன்று ஆதாரமாகக் கொண்டவை என்ற உண்மையை உணர்ச்சியில் பதியும்படியாக விளக்குகிறார் பாரதியார்.

கங்கை நதிப்புறத்து கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்
சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டே
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்
காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

ராசபுத்தானத்து வீரர் தமக்கு
நல்லியல் கன்னடத்துத் தங்கம் அளிப்போம்.

இவ்வாறு பல மாநிலங்களில் உள்ளவர்களும் பேத உணர்வு இல்லாமல் கூடி உறவாடுவதால் பாரத நாடு செழிக்கும், பாரத நாட்டின் ஒவ்வோர் அங்கமும் செழிக்கும் என்பதைப் பாரதி வற்புறுத்தினார்.

சிந்து நதிக் கரையின் நிலவினிலே
சேர நன் நாட்டு இளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டு இசைத்துத்
தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்

-என்று ஒருங்கிணைந்த இந்தியாவின் நலத்தையும் நிறைவையும் பற்றிப் பாடுகிறார் பாரதி.

ரஷ்ய ஜார் சக்கரவர்த்தியின் வீழ்ச்சியைக் கூறி, அவ்வாறு கூறும்போதே இந்தியர்களுடைய நிலையையும் சாடிப் பேசுவார் கவிஞர்.

இம் என்றால் சிறை வாசம்; ஏன் என்றால்
வன வாசம்; இவ்வாறு அங்கே
செம்மை எல்லாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மை மனங் கனிந்திட்டாள்; அடி பரவி
உண்மை சொல்லும் அடியார் தம்மை
மும்மையினும் காத்திட நல் விழியாலே
நோக்கினாள்; முடிந்தான் காலன்.

-என்று பாடி, இந்தியச் சுதந்திரத்தின் உதயத்தை மனக் கண்ணால் கண்டார்.

இடி பட்ட சுவர்போல் கலி விழுந்தான்
கிருத யுகம் எழுகமாதோ

-என்று எதிர்கால இந்தியாவை வாழ்த்தினார் தேசியக் கவிஞர்.

7. கம்பன்

இருபதாவது நூற்றாண்டில் தமிழ்நாட்டில் கம்பனுக்கு இருக்கிற எல்லை இல்லாத புகழைப்பற்றி உணரும்போது அயல் நாட்டார் எவரும் இன்றைய சூடான பிரச்னைகளைப்பற்றிப் பாடிய

தற்காலக் கவிஞன் கம்பன் என்று நினைக்கக் கூடும். இத்தகைய யூகமானது நூற்றாண்டுகள் குறி தப்பிச் செய்த யூகமாகும். ஏனென்றால் கம்பன் கி.பி. 9-வது நூற்றாண்டில் வாழ்ந்தவன். அவனுடைய சிறந்தோங்கிய கவிதையானது பல நூற்றாண்டுகள் ஆகியும் தலைதூக்கி நிற்கிறது. ஏனெனில் காலம் கடந்த பிரச்னைகளுக்கு அவன் உருவம் கொடுக்கிறான். அப்பேர்ப்பட்ட பிரச்னைகள் எல்லாக் காலங்களிலும் எழுபவை. காலத்தின் கடைசி எல்லை வரை அந்தப் பிரச்னைகளுக்கு மனித ஆன்மா ஆர்வத்தோடு விடை தேடிக்கொண்டே நிற்கும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்பு அது. ஒரு கவிதை மரபு கம்பனுக்கு இருந்தது. தமிழ் இலக்கியத்தில் இளவேனிற் கால கவிஞர்களுக்கு இருந்த வசதி கம்பனுக்கு இல்லை. கம்பன் வருவதற்கு முன்னால் வல்லவர்கள் பலர் தமிழ் மொழியைக் கையாண்டுவிட்டனர். அது குழைவாகவும், வேண்டியவாறு வளைந்து கொடுக்கும் நிலைமையிலும் இருந்த காலத்தில், கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே இருந்த சங்கக் கவிஞர்கள் தமிழ்மொழிக்கு ஒரு சொகுசான அடக்கத்தையும் எளிமையையும் நல்கிவிட்டார்கள்.

கி.பி. 2-ஆவது நூற்றாண்டில் இருந்த திருவள்ளுவர் தமிழுக்கு ஒரு வளத்தையும் துல்லியத்தையும் செறிவையும் கொடுத்துவிட்டார். இதைக் கண்ட க்ரால் (Graul) வள்ளுவருடைய குறட்பாக்கள் ஒவ்வொன்றும் வெள்ளிப் பூக்குடலையில் இட்ட தங்க மாம்பழம் போன்றது என்று வர்ணித்தார். வைணவ ஞானிகளாகிய ஆழ்வார்களும், சைவ ஞானிகளாகிய நாயன்மார்களும் 6-ஆவது நூற்றாண்டிலிருந்து 9-ஆவது நூற்றாண்டு வரையில் அந்த மொழிக்கு அசாதாரணமான ஒரு நெகிழ்வையும், இதயத்துக்கு கதகதப்பைக் கொடுக்கும் இசைப் பண்பையும் தமிழுக்குக் கொடுத்தார்கள்.

கம்பன் தமிழகத்துக்கு வருவதற்கு முன்னரேயே தமிழ் மொழிக்குள் மறைந்து நின்ற ஆற்றல்கள் எல்லாமே முற்றிலும் முன் வந்த கவிஞர்கள் பயன்படுத்திவிட்டார்களோ என்று தோன்றியது. ஆனால் கம்பனுடைய மேதமை இந்த இடையூறுகளால் பங்கப்படாமல் தமிழ் மொழிக்கு ஒரு புதுக் குரலையும் பேச்சுத் திறனையும் கொடுத்ததோடு கவிதையின் பரிபூரண சுகத்தை எடுத்துக் காட்டிய கருவியாகவும் தமிழை ஆட்டிப் படைத்தது.

அவன் ராம காதையை எடுத்துக்கொண்டான். அது ஓர் எளிய கதை. மகாபாரதத்தைப்போல் சிக்கல்கொண்ட கதையாக அது இருந்திருந்தால் வாசகர்களுடைய கவனத்தைக் கதை கவர்ந்து

இருக்கும். பல நூற்றாண்டுகளாக தமிழ் மக்கள் ராம கதையின் பொதுப் போக்கை அறிந்து இருந்தார்கள். அதோடு ஆழ்வார்களுடைய பக்திப் பாடல்களில் ராம கதையில் உள்ள நிகழ்ச்சிகள் பலவற்றைப் படித்து அனுபவித்து இருந்தார்கள்.

இவ்வாறு மக்களுக்குத் தெரிந்த கதையைத் தனது கவிதைக்குப் பொருளாக எடுத்துக்கொள்வதில் உள்ள வசதி என்ன என்பதை நன்றாக அறிந்து இருந்தான். வாசகர்களுக்குக் கதை தெரியும் ஆகையால் தன்னுடைய கவிதையில் துய்த்து அந்தக் கதையைச் சொல்லும்போது கதையில் இருந்து வாசகர்களுடைய கவனத்தை ஈர்த்து தன்னுடைய படைப்பாற்றலிலும் கதைக்கூறுத் திறனிலும், நாடகப் பாங்கிலும், உணர்ச்சிப் பாடல்களிலும், கவனத்தை முழுக்க முழுக்க வைத்துவிடலாம் என்று கம்பன் அறிந்து இருந்தான்.

தன்னுடைய ராமாயண, 'அவை அடக்கத்தில்' உண்மையில் தெய்வ மாக்கவியின் மாட்சியைத் தெரிவிப்பதற்காகவே ராமாயண காதையை இயம்புவதாகப் பெருமையோடு சொல்கிறான். இந்த முயற்சியில் கம்பன் அதிசயக்கத்தக்க வெற்றியைப் பெற்றிருக்கிறான்.

கம்ப ராமாயணம் பிறந்த காரணத்தால் உண்மையில் தமிழ்க் கவிதையின் எதிர்கால ஆக்கமே மாறிவிட்டது. அவனுடைய அபாரமான நூல் சென்ற 11 நூற்றாண்டுகளாகத் நல்ல முறையில் போதித்து தமிழர்களுடைய கவி உணர்வை ஆழ்ந்து உருவாக்கி இருக்கிறது. கம்பன் காலத்திலிருந்து தற்காலம் வரையில் எண்ணறிய கற்றோர்கள் கம்ப ராமாயணப் பாடல்களைப் பாடியும் அவற்றை வைத்துக்கொண்டு கதாகாலட்சேபங்கள் செய்தும் கோடிக் கணக்கான மக்களை மயிர்க்கூச்செறியச் செய்திருக்கிறார்கள். இவ்வாறு காலட்சேபம் செய்கிறவர்களைப் பேணுவதற்காகத் தமிழ் மன்னர்கள் நில மானியங்கள் பல வழங்கி இருக்கிறார்கள்.

கேரளத்திலும் கர்நாடகத்திலும் ஆந்திரத்திலும் உள்ள கல் வெட்டுகளைப் பார்க்கும்போது, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத மக்களும் கம்ப ராமாயண கதா காலட்சேபங்களைக் கேட்டு அனுபவித்து இருக்கிறார்கள் என்று தெரிகிறது. இப்படியாக சாமானிய மக்களுக்குக் கல்வியையும் பண்பாடுகளையும் ஊட்டும் சக்தி வாய்ந்த ஒரு கருவியாக ஆகிவிட்டான் கம்பன். தென்னாட்டில் உள்ள மக்களுடைய பார்வை, ஒழுக்கம், அழகு உணர்ச்சி, பக்திச் சுவை ஆகியவற்றை கம்பன் உருவாக்கி இருக்கிறான். நாட்டு மக்களுடைய நினைவில் ஒரு பகுதியாகிவிட்டது கம்பனுடைய ராமாயணம். எல்லாக் கவிஞர்களும், புலவர்களும், அவனைக்

கவிச் சக்கரவர்த்தி என்று போற்றினார்கள். கவிஞர்களில் மிகச் சிறந்த கல்வி படைத்தவன் கம்பன் என்பது இலக்கிய வரலாற்று உண்மை.

தொடர்ச்சியாகவும் மாதக் கணக்காகவும் கம்ப ராமாயணத்தைக் கதா காலட்சேபம் செய்பவர்கள் ஆடியும், பாடியும் விளக்கி வருகிறார்கள். இன்றும் 20,000 முதல் 40,000 ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் இந்தக் காலட்சேபங்களை மிகக் கவனத்துடன் கேட்டு கம்பனுடைய பாடல்களை இன்பத்தோடு துய்க்கிறார்கள் என்றால் இது அற்புதமானது. ஒரு நாட்டு மக்களுடைய கவனத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஈர்த்து வைத்திருக்கிற ஒரு கவிஞனைக் காலம் கடந்த கவிஞன் என்றுதான் சொல்ல வேண்டும். கம்பன் ஒருநாளும் காலாவதியான கவிஞன் ஆக மாட்டான். ஏனென்றால் அவன் நம்மிடமும் உலகத்தில் எல்லோரிடமும் பேசுவது நாளையக் குரலில்.

கம்பனுடைய காலம்

கம்பனுடைய காலத்தைப்பற்றிப் புலவர்களிடையே எவ்வளவோ கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஒரு சாரார் கம்பன் கி.பி. 9-ஆவது நூற்றாண்டில் இருந்ததாகவும், இன்னொரு சாரார், கி.பி. 2-ஆவது நூற்றாண்டில் வாழ்ந்ததாகவும் கூறுகிறார்கள். 9-ஆவது நூற்றாண்டில் கம்பன் வாழ்ந்தான் என்று சொல்வதே உசிதம் எனப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவழுந்தூரில் கம்பன் பிறந்தான், என்பதில் புலவர்களிடையே யாதொரு கருத்து வேறுபாடும் இல்லை. சடையப்ப வள்ளல் என்ற நிலக்கிழார் கம்பனிடத்தில் மிகுந்த மதிப்பு உடையவராக இருந்தார் என்றும், அவரைப் பாதுகாத்து வந்தார் என்றும் அவருடைய அரவணைப்பில் கம்பனுடைய கவிதை நன்றாக வெளிவந்தது என்றும் எல்லாப் புலவர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.

கம்பனைப்பற்றிச் சாமானிய மக்கள் பல கற்பனைக் கதைகளைப் நெசவு செய்திருக்கிறார்கள். அந்தக் கதைகளை வரலாறுகளாக எடுத்துக்கொண்டு யூகம் செய்வது தவறு. அவனுடைய மிகச் சிறந்த கவிதையினை அவர்கள் எவ்வாறு மதிப்பிட்டார்கள் என்பதற்கு மாத்திரம் அந்தக் கதைகளைப் பயன்படுத்தலாம்.

சோழ மன்னனுடைய அரசவைக் கவிஞனாக ஒட்டக்கூத்தர் என்பவர் இருந்தார் என்றும் அவர் காலத்தவரே கம்பன் என்றும் ஒரு கதை சொல்கிறது. ஒட்டக்கூத்தருக்கு இருந்த இலக்கணப் புலமையாலும் செய்யுள் இயற்றும் திறமையாலும் ஒட்டக்கூத்தர் தம் காலத்துக் கவிஞர்கள் மீது கொடுங்கோன்மை செலுத்திவந்தார்.

ஒரு சிறு இலக்கணப் பிழையோ, யாப்பு வழுவோ அறியாமையினால் செய்த அவர் காலத்துக் கவிஞர்களை அவர் சிரச் சேதமே செய்துவந்தார் என்றும் சோழ மன்னன் அவர் செய்வதை எல்லாம் பொறுத்துக்கொண்டு இருந்தான் என்றும் கதைகளின் மூலம் நாம் அறிகிறோம். ஆனால், சோழ மன்னன் அவைக்கு கம்பன் வந்த பிறகு அரசனிடத்தில் ஒட்டக்கூத்தருக்கு இருந்த செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாகத் தாழ்ந்துகொண்டே போய்க் கடைசியில் கம்பனே அரசவைக் கவிஞனாக ஆகிவிட்டான். கம்பன் இந்த நிலைக்கு வந்ததற்குக் காரணம் அவனுடைய சொல் இன்பம், ஒட்டக்கூத்தரின் செய்யுள்களைக் காட்டிலும் மேலோங்கி நின்றது.

ஒரு நாள் அரசன் இரு கவிஞர்களையும் அழைத்து ராமகாதையை கவிதையாக எழுதிக்கொண்டு வரும்படி பணித்தார். கொஞ்ச காலத்துக்குப் பின் இருவரையும் அழைத்து எதுவரையிலும் எழுதி இருக்கிறீர்கள் என்று சோழ மன்னன் கேட்டான். தான் 6-வது காண்டம் வரையிலும் வந்துவிட்டதாகவும், போர் தொடங்குவதற்கு முன்னால் ராமனுடைய வானர சைனியம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு பாலம் அமைத்துக்கொண்டு இருக்கும் கட்டத்துக்கு வந்துவிட்டதாகவும் கம்பன் சொன்னான். கம்பன் முதல் காண்டத்தையே முடிக்கவில்லை என்று தெரிந்திருந்த ஒட்டக்கூத்தர் சேதுபந்தனத்திலிருந்து ஒரு பாட்டை கம்பன் பாடட்டும் என்று கேட்டார். உடனேயே கம்பன் அனாயாசமாகக் கீழ்க்காணும் பாட்டைப் பாடினான்:

குமிதனிட்ட கூத்தரில் குலவரைத்
திமிதமிட்டு...

இந்த அழகிய பாட்டைக் கேட்ட ஒட்டக்கூத்தருக்கு எரிச்சல் உண்டாகிவிட்டது. பாட்டில் வரும் துமி என்ற சொல் புழக்கத்தில் இல்லாத ஒரு சொல் என்று கம்பன் மீது குற்றம் சாட்டினார் ஒட்டக்கூத்தர். 'துமி' என்ற சொல் 'துளி' என்று பொருள்படும் என்று சொன்னான் கம்பன். துளி என்ற சொல், துமி என்று நாப்பழக்கத்திலும் திரியவில்லை என்று வாதாடினார் ஒட்டக்கூத்தர். 'துமி' என்ற சொல் மக்கள் நாவில் நடனம் ஆடும் சொல் என்று கம்பன் எதிர்வாதம் செய்தான். கம்பனுடைய வாதத்தை மெய்ப்பிக்கும்படி சவால் விடுத்தார் ஒட்டக்கூத்தர்.

உடனே கம்பன் தனக்குப் போட்டியாக இருந்த கவிஞரையும், அரசனையும் நரகத்துக்குள் அழைத்துச் சென்றான். ஓர் இடைச்சி தன் வீட்டின் முற்றத்தில் தயிர் கடைந்துகொண்டு இருந்ததையும் அவளைச் சுற்றி இருந்த குழந்தைகளைப் பார்த்து அவள்

"குழந்தைகளே! தள்ளிப் போங்கள். இல்லை என்றால் உங்கள் மீது தூமி விழுந்துவிடும்" என்று சொன்னதைக் கேட்டார்கள். இவ்வாறு அவள் சொல்லிவிட்டு திடீரென்று மறைந்துவிட்டாள். கலைகளுக்கு எல்லாம் தெய்வமாக இருக்கும் சரஸ்வதிதேவியே ஆய்ச்சிப் பெண்ணாக வந்து கம்பன் சார்பாகப் பேசிவிட்டு மறைந்துவிட்டாள் என்பதை அறிந்தார் ஒட்டக்கூத்தர்.

ஒட்டக்கூத்தரின் இதயம் உடைந்தது. அவர் வீட்டுக்குச் சென்று தான் அகராதியைக் கலந்து மிகத் தொல்லைப்பட்டு எழுதிய பாடல்களை எல்லாம் கிழித்தெறிய ஆரம்பித்தார். அச்சமயம் கம்பன் ஒட்டக்கூத்தர் வீட்டு வழியாகச் செல்ல நேர்ந்தது. உத்தர காண்டத்தைத் தவிர முந்திய காண்டங்கள் எல்லாவற்றையும் ஒட்டக்கூத்தர் கிழித்து எறிந்துவிட்டார் என்று கம்பனுக்கு தெரிந்தது. உடனே மிகுந்த பெருந்தன்மையோடு ஒட்டக்கூத்தரை இடைமறித்து உத்தர காண்டத்தையாவது கிழிக்காமல் கொடுக்க வேண்டுமெ என்று கேட்டு அவருடைய அனுமதியின் பேரில் அவர் எழுதிய உத்தரகாண்டத்தைத் தாம் இன்னும் எழுதாத ராமாயணக் கதையோடு சேர்த்துக்கொள்வதாகச் சொன்னார்.

ஆழ்ந்து யோசிக்கும் தன்மையை இழக்கத் துணிந்துவிட்ட ஒரு சமுதாயம் கம்பனுடைய காவியத்தை அறிந்துகொள்வது நலம். கம்பனுக்கு மனித வாழ்க்கையின் பொருள் என்ன என்று கண்டு பிடிப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அவனுடைய இதிகாசத்தில் வாழ்க்கையின் சில்லரைப் பிரச்னைகளை அடக்கி வைத்துவிட்டு வாழ்க்கையின் முக்கியப் பிரச்னைகளை நாம் முழு கவனத்துடன் கவனிக்கும்படி அவன் செய்கிறான். உண்மை, அழகு, உத்தமம், ஆகிய குணங்களை உள் உணர்வோடும், ஆற்றலோடும் கம்பன் எடுத்துச் சொல்லும்போது அது நம்முடைய ஆன்மாவுக்கே அரிய உணவாகிவிடுகிறது. நமது ஆணவம் அதன் மூலம் கலைந்து போகிறது. ஒரு புது ஆனந்தப் பிறவியே உண்டாகிவிடுகிறது. கம்பனுடைய ஆங்கில மொழிபெயர்ப்பின் மூலமாக இந்த ஆனந்தத்தில் ஒரு சிறிதேனும் வெளிப்படும் என்று நம்புகிறேன்.

8. தெய்வ மாக்கவி

தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் கம்பனைக் கேட்டு அனுபவிப்பதற்காகக் கூடுகிறார்கள். ஆண்டுதோறும் கூடுகிறார்கள், மணிக்கணக்காக இருந்து கேட்கிறார்கள். தமிழே தெரியாத ஓர்

அந்நியன் இந்தக் காட்சியைப் பார்த்தால் என்ன நினைப்பான்? 'கம்பன் இருபதாவது நூற்றாண்டுக் கவிஞனாகத்தான் இருக்க வேண்டும், இருபதாவது நூற்றாண்டுப் பிரச்னைகளைப்பற்றி - அணுகுண்டையும் வானவெளிக் கப்பலையும்பற்றி - பாடித் தமிழ் மக்கள் இதயத்தைக் கவர்ந்திருக்க வேண்டும்' என்றுதானே எண்ணுவான்? இல்லை என்றால் இப்படிக் கூட்டம் கூடுமா?

"பதினோரு நூற்றாண்டுகளுக்கு முன் மறைந்தவன் ஐயா, அவன்" என்று அந்த அயல் நாட்டானிடம் நாம் சொன்னால் அவன் நம்மை நம்பவே மாட்டான். ஏன்? உலகத்திலேயே வேறொரு நாட்டிலும் இவ்வளவு பழமையான கவிஞன் இருபதாவது நூற்றாண்டு மக்களுடைய இதயத்தை இப்படி ஆட்கொண்டதில்லை. ஆயிரத்திநூறு ஆண்டுகளாக நம் உள்ளத்தையும் உணர்வையும் ஆண்டு வருகிறான் கம்பன். இதற்கு என்ன காரணம்? காலம் கடந்து நிற்கும் நிரந்தரத் தத்துவங்களுக்கு நிரந்தர வடிவைக் கொடுத்துவிட்டவன் கம்பன். அழகு, சத்தியம், அறம், கருணை, அன்பு, தியாகம் முதலிய தத்துவங்களை ஆனந்தத் தேனில் ஊறப் போட்டு, பக்திச் சுவையில் தோய்த்து, மாயத் தமிழில் ஊட்டி வருகிறான். மனித ஜாதி உள்ளளவும் இந்த அடிப்படைப் பிரச்னைகள் மனித கவனத்தை ஈர்த்துக்கொண்டே நிற்கும். காலக் கணக்கின் கடைசி மூச்சு வரையில், கம்பன் கவிதை உயிர்த்து நிற்கும், நிலைத்து நிற்கும்.

கம்பன் தரும் செய்தி தமிழ்நாட்டுக்கும் தமிழனுக்கும் மாத்திரமல்ல, உலகனைத்தும் கேட்டுப் பயனுற வேண்டிய செய்தி; என்றென்றும் நாட்படாத செய்தி; மனித குலத்தை உய்விக்க வந்த செய்தி.

அப்படி இருந்தும், உலக இலக்கிய அரங்கில் கம்பனுக்குரிய ஸ்தானம் இன்னும் கம்பனுக்குக் கிடைக்கவில்லை. உலக இலக்கிய மேதைகளை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்யும் புலவர்கள் காதில் இன்னும் கம்பனுடைய குரல் விழவில்லை. அவர்கள் ஹோமரைப் பற்றிப் பேசுவார்கள். வர்ஜில் (Virgil), டான்டே (Dante), மில்டன், ஷேக்ஸ்பியர் முதலியோரைப்பற்றிப் பேசுவார்கள். ஏன்? வால்மீகி, வியாசர், காளிதாசனைப்பற்றிக்கூட வேளாவேளைகளில் பேசுவார்கள். ஆனால், கம்பனைப்பற்றி அவர்கள் கேட்டதுமில்லை; பேசுவதுமில்லை.

காரணம் என்னவென்று ஜான் ஸ்பியெர்ஸ் என்ற ஆங்கிலேயர் எனக்கு விளக்கினார். 'வேல்யூஸ்' என்ற பத்திரிகையின் ஆசிரியர். தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ்க் கவிதையின் மேன்மையையும், சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்களுடைய உன்னத ஞான

அனுபவத்தைப்பற்றியும் கசடறக் கற்றவர். புதுவையில் அவர் என்னைச் சந்தித்துப் பேசிக்கொண்டு இருந்தபோது, அவர், "தமிழர்கள் முழுச் சோம்பேறிகள். சென்ற 150 ஆண்டுகளாக ஆங்கிலத்தைக் கற்று வந்திருக்கிறீர்களே! யாராவது உங்கள் இலக்கியத்தை எல்லாம் ஆங்கிலம் அல்லது ஃபிரெஞ்சு போன்ற உலகப் பொது மொழியில் மொழிபெயர்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"குற்றம் எங்களுடையதுதான்" என்று ஒப்புக்கொண்டேன். இன்னும் சில ஆண்டுகளில் ஆங்கிலம் தெரிந்த தமிழர்கள், ஆங்கிலம் தெரிந்த தமிழ்ப் பரம்பரை, அழிந்து ஒழிந்து போகும். அதற்குள் கம்ப ராமாயணத்தைத் தற்கால ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து முடிக்க வேண்டும். பேராசிரியர் அ.ஸ்ரீனிவாச ராகவன், பேராசிரியர் தெ.பொ.மீ., ஏ.கே.ராமானுஜம் போன்றவர்களைக் காரைக்குடி கம்பன் கழகம் ஊக்குவித்து இந்த முக்கிய வேலையில் ஈடுபடுத்த வேண்டும். இல்லையேல், கம்பனுக்காக 1100 ஆண்டுகளாகக் காத்துக்கொண்டு இருக்கும் அனைத்துலக இலக்கிய அரியாசனம் இன்னும் பல நூற்றாண்டுகள் காலியாகவே இருந்துவிடும்.

தமிழன் சோம்பேறி இல்லை என்று காட்டுவதற்காக, உரிய கவித் திறன் இல்லை என்றாலும், கம்ப ராமாயணத்தை, ரசிகமணி தந்த கம்பனை, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வருகிறேன். மொழிபெயர்ப்பவன் தமிழ் மொழி மரபையும், ஆங்கில மொழி மரபையும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அதோடு, கம்பனுடைய கவியில் தன்னைக் கரைத்துத் தன்னையறவே அழித்துக்கொள்ளப் பழகி இருக்க வேண்டும். இதோடு ஷேக்ஸ்பியரைப் போன்ற கவி இயற்றும் ஆற்றல் இருந்தால்தான் கம்பனை வெற்றிகரமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கலாம்.

இந்தக் குணங்கள் எல்லாம் எனக்கில்லை என்றாலும், ஆசை பற்றி மொழிபெயர்த்து வருகிறேன். புதுவை அரவிந்தர் ஆஸ்ரம பத்திரிகை 'மதர் இந்தியா'வில் மொழிபெயர்ப்பு சென்ற இரண்டு ஆண்டுகளாக வெளிவந்துகொண்டு இருக்கிறது. மூலத்தோடு அதை ஒப்பு நோக்கும்போது, கம்பனுடைய நிழலின் நிழல் என்றுகூட அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஆனால், மேல் நாட்டு இலக்கிய அறிஞர்கள் சிலர் இந்த மொழிபெயர்ப்பையும் ஒரு சாளரமாகக் கொண்டு அதன் வழியாக எட்டிப் பார்த்து மூலத்தின் எல்லையற்ற பெருமையை யூகித்து அறிந்துகொள்கிறார்கள்.

அலெக்ஸ் என்ற கனடா நாட்டு, ஆங்கிலப் பேராசிரியர், "அலை மேல் அலையாக அல்லவா அழகு புறப்பட்டு வருகிறது

கம்பனிடமிருந்து. அவனுக்கு இணையான ஆங்கிலக் கவிஞன் ஒருவனையும் நான் கண்டதில்லை" என்றார்.

க்ரிஷிட் ஜோஷி என்ற ஒரு குஜராத்காரர் ஐ.ஏ.எஸ். வேலையை ராஜினாமா செய்துவிட்டு, அரவிந்தர் கல்லூரியில் முதல்வராக இருக்கிறார்.

அவர், "நான் வால்மீகியை அட்சரம் எண்ணிப் படித்தவன். அவரிடத்தில் பக்தி நிறைந்தவன். அவருடைய பெருமை அளவிட முடியாது. ஆனால் அவரிடம் இல்லாத பெருமை கம்பனிடம் இருக்கிறது. ராமாயண நிகழ்ச்சிகளை கம்பன் எடுத்துச் சொல்லும்போது நம் கட்புலனுக்கு முன் அவை நிகழ்வன போல் எனக்குத் தோன்றுகின்றன. அதோடு, கம்பன் என் இதயத்தோடு இதயம் வைத்து நெருங்கிப் பேசுகிறான்" என்றார்.

இதைக் கேட்டுக்கொண்டு இருந்தார் கே.டி.சேத்னா என்ற பார்சிக்காரர். அவருக்குத் தமிழே தெரியாது. ஆங்கிலமே அவர் தாய் மொழி. ஆங்கிலத்தில் நல்ல கவி என்று அரவிந்தரால் பாராட்டப் பெற்றவர். அவர், "ராமாயணத்தைக் காட்சி வடிவத்தில் கம்பன் காட்ட முடிகிறதென்றால் அவனுடைய நாடகப் பங்குதான் அதற்குக் காரணம். அவன் நம் இதயத்தோடு நெருங்கிய கவிஞனாக்க இருப்பதற்குக் காரணம், உணர்ச்சிப் பூரிப்பில் வருகின்றன அவன் பாடல்கள்."

இப்படியாக, வேற்று மொழிக்காரர்களுடைய கண்கொண்டு கம்பனைப் பார்க்கும் போது உலக மகாகவிதான் கம்பன், கவிச் சக்கரவர்த்தியேதான் கம்பன் என்ற நம்பிக்கை வலுவுறுகிறது.

நாடக உத்தி என்று எடுத்துக்கொண்டால் ஹாலிவுட் டைரக்டர்கள் கம்பனிடம் பிச்சை வாங்க வேண்டும். கதையை நடத்தும் தோரணையில் மாத்திரமல்ல, வெறும் மெய்ப்பாடுகளுக்கே நாடகப் பாங்கை நல்கிவிடுவான் கம்பன்.

கேகய நாட்டிலிருந்து அவசரம் அவசரமாக வருகிறான் பரதன். கோசல நாடு இடுகாடு போல் இருக்கிறது. அரண்மனைக்குள் சென்று கைகேயியைக் கேட்கிறான், "எங்கே என் தந்தை" என்று.

"வானகம் எய்தினான் வருந்தாதே" என்று நீலித்தனமாகப் பதில் சொல்லுகிறாள் அவள்.

விழுந்து புரண்டு அரற்றுகிறான். பிறகு, "எனக்கு அப்பனும், ஆயும், பிரானும், ராமனே, அவன் காலில் விழுந்தால்தான் என் துயர் தீரும். எங்கே ராமன்?" என்று தலை மேல் கரம் குவித்துக் கேட்கிறான்.

"கானகத்தான்" என்றாள்.

இன்னும் கேட்டுத் துன்புற வேண்டிய செய்தி எத்தனையோ என்று நினைத்துக் கலங்குகிறான். ஏன் போனான்?

"இரண்டு வரம் கொண்டு, ஒன்றால் ராமனை வனத்துக்கு அனுப்பினேன்; மற்றொன்றால் ராஜ்யத்தை உனக்கு ஆக்கினேன். இதனைப் பொறுக்க மாட்டாமல் தசரதன் உயிர் துறந்தான்" என்றாள் தாய்.

இந்தச் சொல்லைக் கேட்டதும் என்ன நடந்தது? ராமனை தியானம் செய்துகொண்டு தலை மேல் குவிந்திருந்த பரதனுடைய கரங்கள் தலையிலிருந்து இறங்கிக் காதைப் பொத்திக் கொண்டன.

சூடின மலர்க் கரம் சொல்லின் முன், செவி
கூடின, புருவங்கள் குதித்துக் கூத்து நின்று
ஆடின, உயிர்ப்பினோடு அழற் கொழுந்துகள்
ஓடின, உமிழ்ந்தன உதிரம் கண்களே.

உள்ளத்தில் ஏற்பட்ட ஆங்காரத்தை நாடகம் போட்டுக் காட்டுகின்றன பரதனுடைய கரமும், புருவங்களும், உயிர்ப்பும், உதிரம் சிந்தும் கண்களும்.

மனித சோகமும் மனித அச்சமும் மிக ஆழமானவை. அகண்டமானவை. அடி மனதைப் பிடித்து ஒரு குலுக்கு குலுக்கி விடுகின்றன. சோகமும் அச்சமும், இவற்றை மெய்ப்படும்படி செய்ய வேண்டும். கை இரண்டையும் தூக்கி இந்த மெய்ப்பாட்டைக் காட்டலாம். ஆனால், மனித சோகத்தின் முழுமையையும் மனித அங்கங்கள் மூலம் காட்ட முடியாது. மனித உறுப்புகள் சோகத்தை அபிநயித்துக் காட்டுவதற்கு லாயக்கில்லை என்பதனை கம்பன் உணர்கிறான். ஆகவே, யானையின் தும்பிக்கையை அபிநயக் கருவியாகக்கொண்டு மனித சோகத்தை வெளியிட முற்படுகிறான்.

கரன் அனுப்பிய 14 அரக்கர்களையும் அழைத்துக்கொண்டு ராமனிடம் செல்கிறாள் சூர்ப்பணகை. ராமனுடைய சரங்கள் தைக்க அவர்களுடைய சிரங்கள் ஓடின. தீயவள் ஓடினாள், 'ஓ' என்று அலறிக்கொண்டு, சூர்ப்பணகை கரனிடம் ஓடிப்போய் முறையிடுகிறாள். எப்படி? கர்ஜனை செய்துகொண்டு ஒரு சிங்கம் யானைக் கூட்டத்தைத் தாக்கி ஆண் யானைகளை எல்லாம் கொன்றுவிடுகிறது. இதைக் கண்ணுற்ற பெண் யானை துதிக்கையைத் தலை மேல் தூக்கிக்கொண்டு அலறி ஓடுவதுபோல் இருந்ததாம் சூர்ப்பணகை ஓடிய காட்சி.

ஒளிறு வேற்கரற்கு உற்றது உணர்த்தினாள்;
குளிறு கோப வெங் கோளரி மாஅடக்

களிறு எலாம் படக் கை தலை மேலுறப்
பிளிறி ஓடும் பிடி என்ன பெற்றியாள்.

இப்படியாகச் சோகத்தையும், அச்சத்தையும் அபிநயம் பிடித்துக் காட்டுவதற்காக யானை துதிக்கையைப் பயன்படுத்துகிறான் கம்பன்.

மனித உறுப்புகளால் நாடக வடிவத்தில் காட்ட முடியாத மனித உணர்ச்சிகளை மிருக உறுப்புகள், பறவைகளின் சிறகுகள், அலகுகள், செடி கொடிகளின் ஒசிவுகளின் மூலமாக நடித்தே காட்டி விடுகிறான். அதனால்தான் கம்ப ராமாயண நிகழ்ச்சிகள் தத்ரூபமாக நம் கண் முன் நடப்பனபோலக் காட்சி கொடுக்கின்றன. நம் உள்ளத்தில் பதைபதைப்பு ஏற்படுகிறது. ஆனால், எலும்புக் கோவையால் உண்டான நம் மனித உடலைக்கொண்டு பதை பதைப்பைத் திருப்திகரமாகக் காட்ட முடியாது. நாகப் பாம்பின் வளைவு நெளிவுகள் நிறைந்த உடம்பைக்கொண்டு மனிதப் பதை பதைப்பைக் காட்டலாம். இடி விழுந்த நாகம் இப்படியும் அப்படியுமாகத் துடித்துப் புரள்வது போல் புரண்டு ஏங்கினாள் சீதை என்று சொல்லும்போது பதைபதைப்பின் முழு உருவம் நம் கண்முன் வந்து நிற்கிறது.

வால்மீகி ராமாயணத்தைக் கற்றால்தான் கம்பனுடைய தனிப் பண்பு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். முதன் முதலாக ராம லட்சுமணர்கள் ஜடாயுவைப் பார்க்கும்போது ஜடாயு - வால்மீகியின் ஜடாயு - ஓர் ஆல மரக் கிளையில் உட்கார்ந்திருக்கிறான். பருமனான, வலிமை மிக்க கழுகு அது என்று சொல்லி வர்ணனையை முடித்து விடுகிறார் வால்மீகி.

கம்பனுக்கு அந்த ஆல மர 'செட்டிங்' பிடிக்கவில்லை. ஜடாயுவின் கழுத்துக்குக் கீழுள்ள மேனி பொன் நிறமாக இருந்தது. கழுத்தும் தலையும் ஒரே வெண்ணிறம். மந்திர கிரி மேல் சந்திர ஒளி படர்ந்த சிகரம் போலிருந்ததாம். இவ்வளவு கம்பீரமான பறவையை, சீதைக்காக உயிரையே தியாகம் செய்யப் போகும் ஜடாயுவை ஆல மரத்திலும் புளிய மரத்திலுமா உட்கார்த்தி வைப்பது? செட்டிங்கை மாற்றுகிறான் கம்பன். கரு மலையின் சிகரம் ஒன்று துருத்திக் கொண்டு நிற்கிறது. அதை ஒட்டிய முற்றத்தில் ஜடாயுவை அமர்த்துகிறான் கம்பன்.

முந்தொரு கருமலை முகட்டு முன்றிலில்
சந்திரனோடு ஒளி தழுவச் சாத்திய
அந்தமில் கனை கடல் அமரர் நாட்டிய
மந்தர கிரியென வயங்கு வான்தனை.

சொற் பங்கம் உற நிமிர் இசையின் சுமையை
அற்பங்கம் உற வரும் அருணன் செம்மலைச்
சிற்பங் கொள் பகல் எனக் கடிது சென்று தீர்
கற்பங்கள் பலப்பல கண்டுளான்தனை.

இப்படி வர்ணனை எல்லாம் வால்மீகியின் ஜடாயுவுக்கு கிடைக்கவில்லை. லட்சுமணர்கள் அவனை அரக்கனோ என்று சந்தேகப்பட்டு பாணத்தைத் தொடுக்க முற்படுகிறார்கள். உடனே வால்மீகியின் ஜடாயு ஓடி வந்து, "உங்கள் தந்தையின் நண்பன் நான்" என்று சொல்கிறான். ஆனால் "தசரதன் சௌக்கியமா?" என்றுகூடக் கேட்கவில்லை வால்மீகியின் ஜடாயு. கம்பன் இந்தக் கட்டத்தை எப்படி பயன்படுத்துகிறான்! கண்ணீர் சுனை ஒன்றை அல்லவா தோண்டி எடுத்துவிடுகிறான்.

விரைத்தடந்தாரினிர்! வேந்தர் வேந்தர்தன்
வரைத் தடந் தோள் இணை வலியவோ?

-என்றான்.

'துறக்கம் உற்றான்' என்று சொல்லவும்.
இறக்கமுற்றான் என ஏக்கம் எய்தினான்.

அன்பைக் காட்டுவதற்குச் சடாயுவின் சிறகு கிடைத்துவிட்டது கம்பனுக்கு. என்ன பாடுபடுத்துகிறான், பாருங்கள்!

மருவினிய குணத்தவரை இரு சிறகால் உறத் தழுவி,
'மக்காள், நீரே
உரிய கடன் வினை ஏற்கும் உதவுவீர்; உடல் இரண்டுக்கு
உயிர் ஒன்றானான்
பிரியவுந்தான் பிரியாதே இனிதிருக்கும் உடல் பொறையாம்
பீழை பாரா
எரியதனில் இன்றேபுக்கு இறவேனேல், இத்துயரம் மறவேன்'
- என்றான்.

இப்படியாக 'லிரிகல் குவாலிடி, டிரமேடிக் குவாலிடி' இரண்டும் மாறி மாறி வந்துகொண்டே இருக்கிறது, கம்ப ராமாயணத்தில். வால்மீகிக்கும் கம்பனுக்கும் சம்பந்தமே இல்லை. புத்தம் புதிய படைப்பு. ஷேக்ஸ்பியரைப்போல கதையை எடுத்துக்கொண்டான். புதுக் கதை எழுதத் தெரியாதா கம்பனுக்கு? டன் கணக்காக நாமே கதையும் நாவலும் எழுதித் தள்ளிக்கொண்டு இருக்கிறோமே, கம்பனுக்கா முடியாது? காரணம், கதை எதிர்பார்ப்பதில் கவனம் வீண் போகக் கூடாது. அவனுடைய தெய்வ மாக்கவியின் மாட்சியை நாம் கவனிக்க வேண்டும். பாரதக் கதையை எடுத்திருந்தால், ஏராளமான நிகழ்ச்சிகளைச் சமாளிக்க வேண்டும்.

ராமாயணம் எளிய கதை. அதைச் சாக்காக வைத்துக்கொண்டு பக்தியை ஊட்டலாம். தன் மேதா விலாசத்தைக் காட்டித் தமிழ்க் கவிதையின் பெருமையை நிலை நாட்டலாம் என்று நினைத்தான் கம்பன்.

வையம் என்னை இகழவும் மாசு எனக்கு
எய்தவும் இது இயம்புவது யாதெனின்
பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே.

ராமனிடத்தில் கைகேயி "காட்டுக்குப் போ" என்று சொன்ன பிறகு, வால்மீகியின் ராமன் தசரதனிடத்தில் 'இன்டர்வ்யூ' கேட்கிறான். தசரதன் "உடனே வா" என்று சொல்லவில்லை. தன்னுடைய தேவிமாரை எல்லாம் தன் முன் வந்து நிற்கச் சொல்லுகிறான். அவர்கள் வந்த பிறகு, சுமந்திரன் மூலமாக ராமனை வரச் சொல்லி அனுப்புகிறான். ராமன் வந்ததும் தசரதனுக்கு ஒரு தர்மசங்கடமான நிலை ஏற்படுகிறது. சத்தியம் தவறுவதா அல்லது ராமனைப் பிரிந்து இருப்பதா என்ற வேதனை. ராமனைப் பார்த்ததும் சத்தியத்தில் இருக்கும் வேட்கையைக் காட்டிலும் புத்திர வாஞ்சை மேலிடுகிறது. வான்மீக தசரதன், "ராமா, உன் சிற்றன்னை என்னை மோசடி செய்து இரு வரங்களை வாங்கிவிட்டாள். ஆனால், 'காட்டுக்குப் போ' என்ற கட்டளைக்கு நீ கீழ்ப்படியாதே. நீயே அயோத்தி மன்னனாக முடிசூட்டி இங்கேயே இருக்க வேண்டும்." என்று சொல்கிறான். இதைக் கேட்ட வான்மீக ராமன், "நீ சத்தியந் தவறலாமா? நீ சொல்வது தவறு" என்று தர்மோபதேசம் செய்கிறான். கம்பன் இப்படி விரசமான நிலை வராமல் சமாளிக்கிறான். கம்ப ராமன் கைகேயியின் பணியைத் தலைமேற்கொண்டு விடையும் கொள்கிறான். எப்படி? தசரதன் இருக்கும் திசை நோக்கி ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கானகம் புறப்படுகிறான்.

தன்துணைத் தாதை பாதத்து அத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன் திணி போதினாளும் பூமியும் புலம்பி நையக்
குன்றினும் உயர்ந்த தோளான் கோசலை கோயில் புக்கான்

-என்று சொல்லி, சதுரப்பாட்டோடும், நாடகப் பாங்கோடும் கதையை நடத்திச் செல்கிறான். 'நீ என்சொற்படி கானகம் போகாதே' என்று தசரதன் சொல்லி இருந்தால், தசரதனுடைய அறவுணர்வும் புகழும் என்னாகும்?

தந்தாய், தனி அறத்தின் தாயே, தயா நிலையே
அந்தோ! இனி வாய்மைக்கு ஆருளரே மற்று? என்றான்.

-என்றெல்லாம் தசரதனைப்பற்றி ராமன் சொல்ல முடியுமா?

தசரதன் முன்பு நிற்கும்போது கைகேயி ராமனுக்கும் இலக்குவனுக்கும் மரவுரியை வழங்குகிறாள். சீதை மேலும் மரவுரியைக் கொண்டு வந்து போடுகிறாள்; அதைக் கண்டவுடனேயே சீதை பதைபதைக்கிறாள்; அழுது ஓலமிடுகிறாள். “ஐயோ, நான் பீதாம்பரத்தையே அணிந்து வந்தவளாச்சே. மரவுரி இவ்வளவு முரடாக இருக்கிறதே. இதை எப்படி உடுத்துவேன்?” என்று பிரலாபிக்கிறாள். இந்தச் சந்தர்ப்பத்தில் வால்மீகி அழகான ஓர் உவமையைப் பயன்படுத்துகிறார். மரவுரியைப் போட்டதும் எப்படி சீதை மிரண்டாள் என்றால், காட்டில் உள்ள வேடன் பெண் மானைப் பிடிப்பதற்காக வலையை வீசும்போது எப்படி அந்த மான் அஞ்சி மிரளுமோ, அப்படி மிரண்டாள் சீதை.

இந்தக் கண்றாவிக் காட்சியைக் கண்ட வசிஷ்டர், சட்டபூர்வமாக வாதங்களைக் கிளப்புகிறார். தசரதனும் இருபது முப்பது ஸ்லோகங்களில் கைகேயியின் குரூரச் செய்கையைக் கண்டிக்கிறான். ஆனால், கைகேயி அசைந்து கொடுப்பதாக இல்லை. கடைசியில், ராமன் சீதை மேல் கிடந்த மரவுரியைத் தன் கையாலேயே எடுத்துவிடுகிறான்.

கம்பன் மரவுரியை எப்படிப் பயன்படுத்துகிறான் என்று பாருங்கள். “நானும் கானகம் வருகிறேன்” என்றாள் சீதை. வேண்டாம் என்று பல காரணங்கள் சொல்கிறான் ராமன். “நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு?” என்று கேட்கிறாள். ‘என்னடா செய்கிறது?’ என்று ராமன் திகைத்து நிற்கிறான்.

இந்தச் சமயத்தில் சீதை அரண்மனையின் உள் கட்டுக்குள்ளே போனாள்.

அனையவேலை அக மனை எய்தினாள்
புனையும் சீரம் துணிந்து புனைந்தனள்
நினைவில் வள்ளல் பின் வந்து அயல் நின்றனள்
பனையின் நீள் கரம் பற்றிய கையினாள்.

தானே மரவுரியை உடுத்துக்கொண்டாள்; துணிந்து உடுத்தினாள்; கைகேயி போடவில்லை. அவளுடைய தீர்மானமான கருத்தை உணர்ந்த ராமன் மறு பேச்சுப் பேசாமல் சீதையை அழைத்துச் செல்கிறான். வாதங்களுக்கு எல்லாம் இரங்காத ராமன் இதயம் மரவுரி ரசவாதத்தைக் கண்டவுடன் வாயடைத்துப் போகிறது. இந்த ஆர்க்யூமென்டுக்கு அப்பீல் இல்லை.

இன்னொரு கட்டம். வால்மீகி ராமாயணத்தில் லட்சுமணன் தன்னையும் காட்டுக்கு அழைத்துப் போகும்படி ராமனைக் கேட்டுக்கொள்கிறான். ராமன், “நீ இங்கேயே இருந்து என் அம்மாவைக் கவனித்துக்கொள்ள வேண்டும். இல்லை என்றால்

கைகேயி அவளைப் படாதபாடு படுத்திவிடுவாள். தசரதன் கைகேயியிடம் மயங்கிக் கிடக்கிறான். ஆகையால், அவனும் கோசலையைக் கவனிக்க மாட்டான். பரதனும் அப்படித்தான். கைகேயியின் பேச்சைக் கேட்டு என் தாயை அலட்சியம் செய்வான். ஆகையால், நீ இங்கிருந்து கோசலையை ஆதரிக்க வேண்டும். அப்படிச் செய்தால் உனக்குக் கோடி புண்ணியம்" என்று சொல்கிறான்.

இதைக் கேட்ட இலக்குவன், "நீ கோசலையைப்பற்றிக் கவலைப்படக் காரணமில்லை. பரதன் நல்லவன். அவளைப் பார்த்துக்கொள்வான். அவன் ஏதாவது அக்கிரமம் செய்தால் அவனையும் அவனோடு சேர்ந்தவர்களையும் நான் துவம்சம் செய்துவிடுவேன். அதோடு கோசலை சாமர்த்தியம் நிறைந்தவள். ஆயிரம் பேருக்குச் சமானம் அவள்; தன்னைக் காப்பாற்றிக் கொள்வாள்; நான் உன்னோடு வனத்துக்கு வருகிறேன். கூடை, மண்வெட்டி, வில் சகிதம் வருகிறேன். உனக்கு வேண்டிய உணவு தேடிக்கொண்டு வந்து கொடுப்பேன். நீ சீதையோடு மலை அடிவாரத்தில் ஆனந்தமாக வாழலாம்" என்றான்.

உடனே ராமன், "அப்படியானால், உன் நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு என்னோடு வா" என்று சொல்கிறான். கம்ப ராமன் சுயநலத்துக்காக இலக்குவனை அழைத்துக்கொண்டு போக வில்லை. அவன் வந்தால் உணவு தேடும் பொறுப்பு தனக்கு இல்லாமல் இருக்கும். சீதையோடு உல்லாசப் பொழுது போக்கலாம் என்று அவனுக்கு அனுமதி தரவில்லை. இலக்குவனுக்குத் தன்னிடத்தில் இருக்கும் எல்லையற்ற அன்பைக் கண்டு உருகி அதை மறுதளிக்க முடியாமல் அவன் விருப்பத்துக்கு இணங்குகிறான். கையேயின் கொடுமையினின்றும் கோசலையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இலக்குவனை இருக்கச் சொல்லவில்லை. "அன்னையர் அனைவரும் ஆழி வேந்தனும் என்னைப் பிரிந்த காரணத்தால் துயரப்படுவார்கள்; அவர்கள் துயரப்படாமல் இருக்க என் பொருட்டு நீ உதவ வேண்டும்" என்றான் ராமன். உடனே விம்மினான் இலக்குவன்.

ஈண்டு உனக்கு அடியனேன் பிழைத்தது யாது? என்றான்

"உன்னைக் 'காட்டுக்குப் போ' என்று சொன்னவர்களிடத்தில் எனக்குக் கோபம் ஏற்பட்டது. 'கோபம் தணிவாய்' என்று சொன்னாய். அந்த வாசகமே கொடியது. இப்போது 'இங்கேயே இரு' என்று சொன்னாய் பார், இது அந்த வாசகத்தைக் காட்டிலும் கொடியது."

"ராஜ்யத்தைத்தான் கை கழுவிவிட்டாய். அதோடு என்னையும் சேர்த்தா கை கழுவ வேண்டும். இந்த இரட்டைக் கொடுமையைச்

செய்ய உன் கை தயங்கவில்லையே. உன்னுடைய வேல் இரட்டை சாகசத்தைச் செய்யும்; பகைவர்களுடைய உயிர் துடைத்து, அவர்கள் மனைவியர் கண்ணில் உள்ள மங்கள மையையும் துடைக்கும் உன் வேல். இந்த இரட்டை விளையாட்டு விளையாடும் வேலைப் பிடித்துப் பிடித்து, உன் கையும் இரட்டைக் கொடுமையைச் செய்ய முனைகிறதா?"

செய்துடைச் செல்வமோ யாதும் தீர்ந்து, எமைக்
கை துடைத்து, ஏகவும் கடவையோ, ஐயா?
நெய்துடைத்து அடையலர் நேய மாதர் கண்
மை துடைத்து உறை புகும் வயங் கொள் வேலினாய்!

இந்த உரையைக் கேட்ட ராமனுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

உரைத்த பின் இராமன் ஒன்று உரைக்க நேர்ந்திலன்,
வரைத் தடம் தோளினான் வதனம் நோக்கினான்;
விரைத் தடம் தாமரைக் கண்ணின் மிக்க நீர்
நிரைத்து இடை இடைவிழ நெடிது நிற்கின்றான்.

இந்த அன்பைக் கண்டு உருகி இலக்குவனுக்கு இசைவு தருகிறான். ஏதோ, 'புழுக்கை வேலை செய்ய லட்சுமணன் வந்தால், தான் சீதையோடு குஷியாக இருக்கலாமே' என்பதற்காகச் சம்மதிக்க வில்லை. 'அன்பெனும் வலையில் அகப்படுகிறவன்' ராமன். அதனால் சம்மதித்தான். வால்மீகிக்கும் கம்பனுக்குந்தான் எவ்வளவு வேற்றுமை! வான்மீகத்தை கம்பன் மொழிபெயர்த்தான் என்று சொல்லலாமா? தழுவி எழுதினான் என்றுதான் சொல்லலாமா? பாத்திரங்கள் அவன் வார்த்த வார்ப்பே வேறு. விரசம் இல்லாமல் அப்பழுக்கற்ற கலைப் பாங்கோடும் அமானுஷ்யமான சத்திய வேட்கையோடும் சௌந்தர்ய உணர்வோடும் ஒரு மாபெரும் காவியத்தை கம்பன் படைத்திருக்கிறான்.

9. மானுடத்தின் வெற்றி

கம்ப ராமாயணத்தில் முங்கி முழுகிவிட்டு வெளியே வரும்போது நம் உள்ளத்தில் மிஞ்சி இருப்பதென்ன? மனிதனுடைய சிறுமையைப் பற்றிய உணர்ச்சியல்ல, மனிதனுடைய புன்மையைப்பற்றிய உணர்ச்சியுமல்ல, மனிதனுடைய நிலையாமையைப்பற்றிய உணர்ச்சிகூட அல்ல. 'மனித ஆன்மா எவ்வளவு மாண்புடையதாக இருக்கிறது! மனிதனுடைய ஆற்றல் எப்படிக் கங்கு கரையற்று

இயங்குகிறது!' என்ற வியப்பும் தன்னம்பிக்கையும் மேலோங்கி நிற்கின்றன.

ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் படித்த பிறகும் நமக்கு இந்த உணர்ச்சி ஏற்படுகிறது. ஹாம்லெட்டோடு சேர்ந்து நாமும் மானுடத்தின் பண்பைப் பாராட்டி வியக்கிறோம். எப்படி?

ஷேக்ஸ்பியர் கண்களால் உலகத்தைப் பார்க்கும்போது, "மனிதன் என்ற பொருள் என்ன வேலைப்பாடு நிறைந்தது! அவனுடைய பகுத்தறிவின் மாட்சிதான் என்ன! அவனுடைய அறிவுத் திறன் எவ்வாறு எல்லையற்று இயங்குகிறது! உருவத்திலும் இயக்கத்திலும் என்ன சிறப்பு! செயலில் கந்தர்வனைப் போல் இருக்கிறானே! உணர்வில் தெய்வத்தை ஒத்திருக்கிறானே! உலகத்துக்கோர் அழகு! விலங்கினத்தின் வெற்றி!" என்று மனிதனைப் பார்த்துப் போற்றுகிறோம்.

கம்பர் கண்களைக்கொண்டு நாம் மனிதனைப் பார்க்கும்போது, மனித இனம் இன்னும் ஒரு படி உயர்ந்துவிடுகிறது. ஷேக்ஸ்பியருடைய சிறந்த பாத்திரங்கள்கூட குற்றங்குறையுள்ள பாத்திரங்களாக இருப்பார்கள். ஆனால், கம்பன் படைத்த சிறந்த பாத்திரங்கள் லட்சிய பாத்திரங்களாக, பூரண நிறைவு பெற்ற பாத்திரங்களாக, மானுட ஜாதிக்கே பெருமை தேடிக் கொடுக்கும் பாத்திரங்களாக அமைந்திருக்கின்றன.

ராம லட்சுமணர்கள் ஒரு மலையின் உச்சியில் நின்றுகொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய குண அழகுகளை எல்லாம் அனுமான் வாயிலாகக் கேட்ட சுக்ரீவன் அவர்களை ஆர்வத்தோடு சந்திக்க வருகிறான். ஒரு முக்குத் திரும்பியவுடன் அவர்களுடைய உருவம் திடீரென்று அவன் கண்ணுக்குப் படுகிறது. உடனே அவர்களுடைய உருவ அழகில் சொக்கி அப்படியே நின்றுவிடுகிறான் சுக்ரீவன்.

இறைவன் படைப்பில் இப்படியும் உண்டா என்று வியப்படைகிறான். ஏதோ, விஷ்ணு என்றும், சிவன் என்றும், பிரம்மா என்றும் நாமம் சூட்டித் தெய்வங்களை வணங்குகிறோமே, அந்தத் தெய்வக் கூட்டத்தை எல்லாம் மானிட ஜாதி வென்றுவிட்டது என்று தோன்றுகிறது சுக்ரீவனுக்கு.

ஆறு கொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம் மானிடம் வென்றதம்மா!

-என்று போற்றுகிறான் சுக்ரீவன்.

உணர்வில் தெய்வத்தை ஒத்திருக்கிறான் மனிதன் என்றுதான் சொன்னார் ஷேக்ஸ்பியர். ஆனால், தெய்வக் குழுவை எல்லாம்

மானிடம் வென்றுவிட்டது என்றே சொல்லுகிறார் கம்பர். சொல்லோடு நிறுத்தவில்லை. அந்த உணர்வையே நம் உள்ளத்தில் பதிய வைத்துவிடுகிறார் கவிச் சக்கரவர்த்தி.

அப்படியானால், மானிடப் பிறவி கிடைத்ததனாலேயே நமக்கு வெற்றி கிடைத்துவிட்டதா? இல்லை. கம்பர் அப்படிச் சொல்லவு மில்லை. அப்படிச் சொல்லி இருந்தால், அது வெற்றுரையாக முடிந்திருக்கும். மானிடப் பிறவி நமக்கு அரிய வாய்ப்புகளைக் கொடுக்கிறது; அந்த வாய்ப்புகளை உரிய முறையில் நாம் பயன்படுத்தினால் பரிபூரணத்தையே தொட்டுவிடலாம். தேவர்களையும் வென்றுவிடலாம் என்பதையே பல கோணங்களிலிருந்து கம்பர் வலியுறுத்திக் காட்டுகிறார்.

உதாரணமாக, அற உணர்ச்சி என்பதை எடுத்துக்கொள்வோம். அறநெறியில் நிற்க வேண்டும் என்று மேடைப் பிரசங்கம் செய்வது எவ்வளவு எளிது! ஆனால் அற நெறியில் நடந்து பார்க்கும்போது அப்பப்பா! எத்தனை இடையூறுகள், எத்தனை இன்னல்கள்! 'இந்தத் தொல்லை எல்லாம் நமக்கு எதற்கு? அறத்தையே கைவிட்டு விடுவோம்' என்று தோன்றும் பலருக்கு. இறந்தாலும் சரி, அறத்தைக் கைவிடலாமா என்று உறுதிப்பாட்டோடு வாழ்க்கை நடத்துகிறவர்கள் வெகு சிலர்.

தளராத ஊக்கத்தோடும், அசையாத வீரத்தோடும் தன்னந் தனியாளர்களா இருந்து அறத்துக்காகப் போராடுவார்கள் அவர்கள். அறம் என்ற பலி பீடத்தில் உயிரையே பலி கொடுக்கும் வீரர்கள் அவர்கள். அத்தகைய தியாகத்தின் மூலம் என்றும் சாகாத புகழை அடைகிறார்கள். இவ்வாறு புகழ் பெற்ற பாத்திரம் தசரதன்.

ராமனைப் பிரிந்து உயிர் வாழ முடியாது அவனுக்கு. ஆனாலும், சொன்ன சொல்லைக் காப்பாற்றியும் தீர வேண்டும். "ராமனைக் காட்டுக்கு அனுப்பித்தான் ஆக வேண்டும். இல்லையேல் நீ வாய்மை தவறியவன் ஆவாய்" என்று சொல்லி முரண்டு பிடிக்கிறாள் கைகேயி. அவளுடைய கசந்த சொல்லைக் கேட்ட தசரதன் எப்படித் துடிதுடிக்கிறான்.

'ஆ கொடியாய்!" எனும், ஆவி காலும் அந்தோ,
ஓ கொடிதே அறம்!' என்னும்

உயிரைக் கொடுத்து அல்லவா அறத்தைக் காப்பாற்ற வேண்டி இருக்கிறது! ஆகவே, அது கொடியதுதான். கொடியதுபோலத் தோன்றினாலும், அதுவே இறுதியில் பேரின்பத்தைக் கொடுக்கக் கூடியது. மறத்தைச் செய்யும்போது இப்படி எல்லாம் அல்லற்பட வேண்டாம். அக்கிரமத்தால் லாபங்கூடக் கிடைக்கும். ஆனால்,

அதனால் கிடைப்பது எல்லையற்ற துன்பம். இதையே கைகேயியிடம் சொல்கிறான் தசரதன்.

ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்,
என் சேய் வனம் ஆள
மாய்ந்தேன் நான் போய் வானுலகு
ஆள்வென், வசை வெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின் மகனோடும்
நெடிது என்றான்

கைகேயி கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டு மூர்ச்சையாகி விழுந்துவிடுகிறான் தசரதன்.

அவன் உயிர் நீத்த பிறகு, அவனுடைய புனிதமான திருமேனியை விடாப்பிடியாக பிடித்துக்கொண்டு அலறுகிறார்கள் அவனுடைய தேவிமார்கள். அறத்தை வலியுறுத்துவதற்காக இந்தக் காட்சியை எப்படி கம்பர் பயன்படுத்துகிறார் என்று பார்ப்போம்.

பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்காக ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு படகு கொடுக்கப்பட்டிருக்கிறது. மனித உடம்பு என்ற படகு அது. பெரும்பாலும் இந்தப் படகு ஓட்டை விழுந்த படகு, நடுக் கடலில் நம்மைத் தாழ்த்திவிடும் படகு. படகோட்டி கெட்டிக்காரனாக இருந்து ஓட்டைகளை அடைத்து பயணத்தைச் சமாளித்துப் பார்க்கலாம்.

ஆனால், காமம், கோபம், மயக்கம் என்ற சுறாமீன்களும் திமிங்கிலங்களும் கடலின் ஆழத்திலிருந்து வந்து படகைத் தாக்கினால் எப்படிச் சமாளிப்பது? சுறாமீன் தன் வாலால் ஓர் அடி அடித்தால் போதுமே, படகு சுக்கு நூறாகிப் போகும். ஆகையால் நம் ஓட்டைப் படகை நம்பிப் பயனில்லை. தசரதன் ஏறிச் சென்ற படகோ இந்த ஆபத்தை எல்லாம் தப்பி அவனை அக்கரை சேர்த்துவிட்டது. கடற் பயணத்துக்கு லாயக்கான நாவாய் அது. அதை நம்பி ஏறலாம்; பேரின்பம் என்ற அக்கரை கொண்டு போய் நம்மைச் சேர்த்துவிடும்; இதை விட மாட்டோம். விடவே மாட்டோம் என்று சொல்வதுபோல இருக்கிறதாம், தசரதனுடைய உடலைப் பிடித்துக்கொண்டு அரற்றுகிற அவனுடைய மனைவிமாரைப் பார்க்கும்போது.

கைத்த சொல்லால் உயிர் இழந்தும்
புதல்வற் பிரிந்தும் கடை போக
மெய்த்த வேந்தன் திருவுடம்பைப்
பிரியா அரற்றி விட்டிலரால்,
பித்த மயக்காம் சுறவு எறியும்
பிறவிப் பெரிய கடல் கடக்க

உய்த்து மீண்ட நாவாயில்
தாமும் போவார் ஒக்கின்றார்.

அற வாழ்க்கையால் விளையும் அமைதியையும் ஆனந்தத்தையும் இவ்வாறு வற்புறுத்துகிறார் கம்பர். ராமன் அவதாரம் எடுத்ததே அறத்தைக் காப்பாற்றுவதற்காகத்தான் என்று சொல்கிறார் கம்பர்.

அறஞ்செய் காவற்கு அயோத்தியுள் தோன்றினான்

-என்றார்.

இந்த அறம் வெறிச்சோடிப்போன, பகையற்ற அறம் அல்ல; ஈவு இரக்கமற்ற அறம் அல்ல; வீரத்தினால் உறுதி பெற்ற அறந்தான். ஆனால், அன்பு கனிந்து, பக்தி கசியும் அறம், கருணை ததும்பும் அறம், ஜாதி மத பேதங்களைக் கடந்து நிற்கும் அறம், நீதியில் வேரூன்றித் தழைக்கும் அறம்.

வீடணனைப் (விபீஷணன்) போற்றும்போது இதையே கும்பகர்ணன் குறிப்பிடுகிறான்.

நீதியால் வந்த நெடுந் தரும நெறி அல்லால்
சாதியால் வந்த சிறு நெறி அறியான் என் தம்பி

இப்படிப் பக்குவப்பட்ட அறத்தை மனிதன் மேற்கொண்டால், "மானிடம் வென்றதம்மா" என்று தேவர்களே நம்மை மெச்சுவார்கள். இதுவே அணுகுண்டு சகாப்தத்தில் இருக்கும் மனிதனுக்கு கம்பர் தரும் செய்தி.

10. கவிச் சக்கரவர்த்தி கம்பன்

மனித வாழ்க்கையை நடத்திவரும் மர்ம சக்திகள் எவை என்பதைக் கண்டுபிடித்த ஞானிக்கு எவ்வளவு தெளிவும் உறுதியும் கடவுள் பக்தியும் இருக்குமோ, அவ்வளவும் கம்பனிடத்தில் இருப்பதை அவனுடைய ராமாயணத்தின் மூலம் நாம் உணர்கிறோம். உதாரணமாக, இரண்ய வதைப்படலத்தை எடுத்துக்கொள்வோம். அதில் நாடகச் சுவைமிக்க காட்சியை கம்பன் தனக்கே உரிய தோரணையில் படைத்துக் காட்டுகிறான்.

படைத்தல் தொழிலைச் செய்கிற பிரம்மா இந்தக் காட்சியில் பரம்பொருளான விஷ்ணு மூர்த்தியைச் சந்தித்து அவரோடு ஒரு தத்துவப் பேருரையாடலை நடத்துகிறான். இரண்யனுடைய மகன்

பிரகலாதனுடைய வேண்டுகோளுக்கு இரங்கி, பரம்பொருள், பேரண்டத்தின் முகட்டைக் கிறிக்கொண்டு, சிம்மத் தலைகொண்ட மனித உருவத்தில் மண்ணுலகத்துக்கு இறங்கி வந்து, நாத்திகனான இரண்யனை உகிரால் வயிற்றைக் கிறி அழிக்கிறது.

சம்ஹாரம் செய்த பிறகு, நரசிம்ம மூர்த்தி எல்லையற்ற சீற்றத்தோடு கர்ஜனை செய்துகொண்டு நிற்கிறார். வான நாட்டின் கோளரியை (கோளரி=சிம்மம்) சமாதானப்படுத்த வேண்டுமே, அதற்காக இந்தக் காட்சியில் பிரம்மாவைக் கொண்டுவந்து நிறுத்துகிறான் கம்பன். அவ்வாறு பிரம்மாவை ஒரு நாடகப் பாத்திரமாகக்கொண்டுவந்து பரப்பிரம்மத்தின் முன்னால் நிறுத்துவதில் ஒரு தனிக் கலைப் பாங்கும், துணிச்சலான கற்பனையும் இருப்பதை நாம் கவனிக்கிறோம். மிக்க பக்தியோடு, ஆனால், கொஞ்சம் கிண்டலாக பிரம்மா பேசுகிறான்:

"நரசிம்மம் என்ற உருவம் ஒன்றைப் படைத்துக்கொண்டு அல்லவா நீ இங்கு வந்து இருக்கிறாய்? ஆகவே, ஆதியில் நீதான் உன்னைப் படைத்திருக்க வேண்டும் என்பதற்கு இதுவே சான்றாக இருக்கிறது. ஆனால், எம்பெருமானே! நீயே உன்னை ஓர் உயிருள்ள பொருளாகப் படைத்துக்கொண்டாயானால், உயிர் வர்க்கங்களை எல்லாம் படைப்பதற்கென்று என்னை எதற்காக நீ படைத்தாய்? உயிரைப் படைக்கும் வேலையை எனக்கு நீ கொடுத்துவிட்டு, நீயே உனக்கு உருவத்தைப் படைத்துக்கொள்வது என்றால், என்னுடைய அதிகார எல்லையில் நீ குறுக்கிடுகிறாய் என்றுதானே பொருள்!"

தன்னைப் படைத்ததுவும் தானே எனும் தன்மை
பின்னைப் படைத்ததுவே காட்டும்: பெரும் பெரும!
உன்னைப் படைத்தாய் நீ என்றால் - உயிர் படைப்பான்
என்னைப் படைத்தாய் நீ என்னும் அது எற்றாமோ?

பிரம்மாவுக்குப் படைக்கும் அதிகாரம் கொடுத்த இறைவனுக்கு அந்த அதிகாரத்தை ரத்து பண்ணவும், வாபஸ் பெற்றுக்கொள்ளவும் உரிமை உண்டு. ஆகவே, பிரம்மா செய்கிற வாதத்தில், கிண்டலும் பக்தியும் இருந்தாலும் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், பிரம்மா சாட்டுகிற கீழ்க்காணும் குற்றச்சாட்டில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. சொல்கிறான் பிரம்மா:

"உன்னுடைய எல்லையற்ற மேனியில், பனிக் கடலுள் தோன்றி மறைகிற நீர்க் குமிழிகளைப்போல, பல்லாயிரம் கோடி அண்டங்கள், தோன்றியும் மறைந்துகொண்டும் இருக்கின்றன. எல்லா உருவமும் உன் உருவமாக இருக்கிறது. நீ இல்லாத உருவமே இல்லை. அப்படி இருக்கும்போது உனக்கு இழுக்கு வரும்படியான அசட்டுக் காரியத்தை இந்தச் சிறு பையன் பிரகலாதனுக்காகச் செய்து

விட்டாயே! நரசிம்மம் என்ற ஓர் உருவத்தை யோசனை இல்லாமல், நீ படைத்துக்கொண்டு வந்துவிட்டபடியால், வரம்பற்ற உனக்கு வரம்பு என்று ஒன்று உண்டாகிவிட்டதே! உனது எல்லையற்ற பெருமைக்கு ஓர் இழுக்கல்லவா இது?" என்று பக்தி கலந்த ஏளனத்தோடு கேட்கிறான் பிரம்மா.

பல் ஆயிரங் கோடி அண்டம் - பனிக் கடலுள்
நில்லாத மொக்குள் எனத் தோன்று மால் நின் உழையே;
எல்லா உருவமுமாய் நின்றாய்க்கு, இவ் உருவம்
வல்லே படைத்தால் வரம்பு உண்மை ஆகாதோ?

இந்தப் பாடலில் ஏளன வேஷம் பூண்டு வெளிவருவது கம்பனுடைய பக்தியல்லவா! கடவுளின் எல்லையற்ற தன்மையில் உள்ள பெருமைக்கும், நரசிம்மம் என்ற உருவ எல்லைக்கு உட்பட்டுப்போன சிறுமைக்கும் இடையில் இருக்கும் முரண்பாட்டைக் காட்டிவிட்டு, இன்னொரு முரண்பாட்டையும் சுட்டிக்காட்டுகிறான் பிரம்மா. அதாவது, ஒவ்வொரு பொருளுக்கு உள்ளும், அந்தப் பொருளின் புறத்தும் இறைவன் ஒருங்கே இருக்கும் அதிசய முரண்பாட்டை பிரம்மா பேசுகிறான்:

"உன்னுடைய பூரண தத்துவத்துக்குள் சிருஷ்டி தத்துவமாகிய என்னை நிருமித்தாய். எனக்கென்று ஒரு தனி ஆற்றலும் இல்லை. நீ கொடுத்த அதிகாரத்தாலும், சக்தியாலும் உன்னுடைய பொருளுக்கு உள்ளேயே இருந்துகொண்டு, உயிர்களை உண்டாக்கிக் கொண்டு இருக்கிறேன். அப்படி உண்டாக்கப்பட்ட உயிர்களும் உனக்குள்ளேயே இயங்குகின்றன. நீ இல்லை என்றால், நான் இல்லை. நீ பொன்மயமாக இருக்கிறாய். நானோ அந்தப் பொன்னால் செய்யப்பட்டு அந்தப் பொன்னுக்குள்ளேயே இயங்குகிற ஒரு பொற்கொல்லன் போன்றவன்தானே."

நின் உள்ளே என்னை நிருமித்தாய், நீ அல்லாது
என் உள்ளே எப்பொருளை யாவரையே யான் ஈன்றேன்;
பின் இலேன் முன் இலேன் எந்தை பெருமானே -
பொன் உளே தோன்றியதோர் பொற்கொல்லன்
போல்கின்றேன்

இவ்வாறாக, கவிச் சக்கரவர்த்தி கம்பன் தன்னைப் படைத்த கடவுளோடு தத்துவ வாதப் பிரதிவாதம் நடத்துகிறான். இந்த உரையாடலில் நாம் காணும் வீச்சும் துணிச்சலும், பக்தி கலந்த ஹாஸ்யமும் உருக்கமும், கவித்துவ கம்பீரமும், நாடக ஆற்றலும் உலக இலக்கியத்தில் உன்னதமாக இருக்கும் எந்தப் பகுதியோடும் போட்டிபோடும் தகுதி உடையவை. அத்வைதக் கொள்கையின் விளைவுகள் துவைத உலகத்தில் வாழும் மக்களுடைய அறிவை

கதிகலங்க வைக்கின்றன. ஆனால், கம்பன் தன்னுடைய மேதமையால் இந்தக் கலக்கத்துக்கே ஒரு நாடக உருவத்தைக் கொடுத்து, அத்வைதத்தை நிலைநாட்டும் சான்றாக, இந்தக் கலக்கத்தையே பயன்படுத்துகிறான்.

கம்பனுடைய காவிய வெற்றிக்குக் காரணமாக இருப்பது அவன் என்ன சொல்கிறான் என்பதுகூட அல்ல, அவன் அதை எப்படிச் சொல்கிறான் என்பதே. அவன் பயன்படுத்தும் சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு சிந்தனைக் குவியலின் முனையாக உருவெடுத்து, நம் உள்ளத்தில் பாய்ந்து, உணர்ச்சியைப் பக்குவப்படுத்துகிறது. சுடர்விட்டு எரியும் அவனுடைய ஒளி பொருந்திய காட்சிகளை அவனுடைய சொற்கள் பதிவு செய்கின்றன. பின்னர் பதிவு செய்ததை மனிதக் குரலின் ஒலி அலைகளாக மாற்றி நம் இதயத்துக்கு உகந்தவாறு ஒலிபரப்புகின்றன.

வாழ்க்கை என்பது பொருளற்ற, ஆனால், கோப தாபங்கள் நிறைந்த ஒரு கதையாக ஓர் அடி முட்டாள் சொல்லும் கதையாக கம்பனுக்குத் தோன்றவில்லை. ஷேக்ஸ்பியருடைய ஹேம்லெட்டுக்குத் தோன்றியதுபோல, வாழ்க்கை என்பது பொருள் பொதிந்ததாக, ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டதாக, நியதிக்குக் கட்டுப்பட்டதாக உள்ள ஓர் உயர்ந்த தத்துவம் என்றே கம்பன் கருதுகிறான். கம்பனுடைய கலை வெற்றிக்கு மூல ஊற்றாக இருப்பது அவனுடைய எல்லையற்ற பரிவுதான். பேரண்டத்தில் இருக்கும் பொருட்கள், உயிருள்ளவையானாலும் சரி, உயிரற்றனவானாலும் சரி, எல்லாவற்றிலும் அவனுக்கு இருக்கும் அந்தரங்கப் பரிவும் ஈடுபாடும்.

மண்ணுலக வாழ்க்கை என்பது எல்லையற்ற ஓர் இதிகாசத்தில் இடைச் செருகலாக வந்த ஒரு துக்கடாப் படலம் என்று கம்பன் உணருகிறான். மண்ணுலக வாழ்வில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு மூல காரணத்தை நம் பிறவிக்கு முன்னுள்ள வாழ்வில் போய்த் தேட வேண்டும்; நாம் மண்ணுலக வாழ்வில் செய்யும் செயல்களின் விளைவுகள் நம்முடைய மரணத்துக்குப் பின்னுள்ள மறுமை வாழ்வில் தெரியக்கூடியவை என்பதை உணர்ந்தவன் கம்பன். ஆகவேதான் வாழ்க்கையை மேன்மேலும் ஆழமாகத் தோண்டிக் கொண்டே செல்கிறான் கம்பன். இறந்த காலம், எதிர்காலத்தைப்போலவே எல்லையற்று நிற்பது.

மனித ஆன்மா, காலத்தை எதிர்த்தும் கடந்தும் நிற்கும் நிரந்தரத் தத்துவம் என்பதை உணர்ந்தே கம்பன் வாழ்க்கையை ஆழ்ந்து அகழ்கிறான். இப்படிச் செய்வதன் மூலம் குழப்பம் நிறைந்தது போன்ற வாழ்க்கையில் உள்ள பலதிறப்பட்ட காட்சிகளைக் கண்

கொட்டாமல் கூர்ந்து கவனித்து, இசையாமல் நிற்பது போன்ற வாழ்க்கையின் பல பாகங்களை இசைத்து, எல்லாவற்றையும் ஒன்றாகக் காணும் காட்சி கம்பனுக்குக் கிட்டி இருக்கிறது. இந்த ஞானக் காட்சியினால் கம்பனுக்கு எல்லையற்ற நம்பிக்கையும், ஆர்வமும் பிறக்கின்றன. இதன் விளைவாக கம்பனுக்கு ஏற்படும் உறுதிப்பாடு அசைக்க முடியாதது. எமெர்ஸன், ப்ளேட்டோவைப் பற்றிச் சொன்னதுபோல, சூரிய மண்டலத்தில் இருந்துகொண்டு கம்பன் சத்தியத்தைப் பார்ப்பதால், ஐயப்பாடு என்ற மேகத்தால் சற்றும் களங்கப்படாத காட்சியாக இருக்கிறது அவனுடைய காட்சி.

இப்படி எல்லாம் சொல்வதால் கம்பன் ஏதோ தத்துவக் குப்பையைக் கிளறிக்கொண்டு இருக்கும் அறிவியல் கவிஞன் என்றோ, அல்லது சமயச் சரக்கை சில்லறைக்கு விற்பனை செய்யும் தெரு வணிகன் என்றோ கருதிவிடக் கூடாது. மனித வாழ்வில் ஊன்றி நிற்கிறது கம்பனுடைய உணர்வின் ஆணிவேர். மனிதப் பாத்திரங்களும் அவற்றின் சூழ்நிலையுமே அவனுடைய காவியத்தின் தலையாய பொருள். வாழ்க்கையும் இயற்கையுமே அவனுடைய காவியத்துக்கு ஊடும் பாவுமாக அமைந்தவை. ஈரமற்ற பாலைவனத்தை வர்ணிக்கிறான் கம்பன். அப்படி வர்ணிக்கும்போது, அப்பாவி, யோகிகளைப் பார்த்து அவன் கண்ணடிப்பது நமக்குத் தெரிகிறது.

பாலைவனத்தில் ஈரப் பசையே இல்லையாம். அது எப்படி இருக்கிறது? இரண்டுவித ஆசாமிகளை ஒத்து இருக்கிறதாம் அது. காமம், வெகுளி, மயக்கம் முதலியவற்றைத் தாண்டி முத்திக்கு வேகமாகப் போகிற யோகியர்கள் மனது எப்படிப் பசையற்று இருக்குமோ, அப்படி இருந்ததாம் பாலைவனம். இதோடு விட்டுவிட்டுப் போயிருக்கலாம் யோகிகளை. ஆனால், விடவில்லை. பொன் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் தம் நேசத்தை நீட்டும் விலைமாதரின் மனதைப் போலும் பசையற்று இருந்ததாம் பாலைவனம்.

இந்த இரட்டை உவமை கம்பனுக்கு யோகியர்பால் இருந்த நகைச்சுவை கலந்த எரிச்சலைக் காட்டுவதோடு, வேறொரு கவிஞனுடைய கற்பனைக்கும் எட்டாத, முற்றும் வேறுபட்டதுபோல் தோன்றும் யோகியர், வேசியர் உள்ளங்களுக்கு இடையே இருக்கும் அந்தரங்க ஒற்றுமையை நாம் திடுக்கிடும்படியாக நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

கடலில் அணை போடுவதை வர்ணிக்கும்போது, ஒரு குரங்கு மூன்று மலைகளை ஒரே காலத்தில் இட்டுவரும் அழகை மிக்க

ஆர்வத்தோடும், வெள்ளித் திரையில் பார்க்கும்போது நாம் காணும் முழு விவரங்களோடும் கம்பன் வர்ணிப்பான்; காலிடை ஒரு மலையை உருட்டிக்கொண்டும், கைகளின்மேல் ஒரு மலையைத் தாங்கிக்கொண்டும், மழை முகில் சூழ்ந்து சுற்றிய வாலிடை ஒரு மலையை ஈர்த்துக்கொண்டும் வருகிறதாம் ஒரு குரங்கு.

நூறு போர்களை வர்ணிப்பான் கம்பன்; ஒவ்வொன்றை வர்ணிக்கும் போதும், யுத்த காலத்தில் அம்புகள் அங்குமிங்கும் பாயும் ஓர் இடத்தில் நின்றுகொண்டு, இப்போது நடந்துகொண்டு இருக்கும் போரை வர்ணிப்பதுபோல் இருக்கும். நூறு போரையும் நூறு தனி முறைகளில் நடத்திக்காட்டுவான். ஒவ்வொன்றும் மயிர்க்கூச்செறியும் பாணியில், நம் கவனத்தை முதலில் இருந்து கடைசி வரையில் ஈர்த்துக்கொண்டு செல்லும் முறையில் இருக்கும். போரின் முடிவு எப்படியாகுமோ என்ற பயம் ஏற்பட்டு, நம்முடைய மூச்சு ஓட்டமே சில சமயங்களில் நின்றுவிடும். மனித இதயத்தின் மூலை முடுக்குகளை நெருங்கி உணர்ந்தவன் ஆகையால், மனிதச் செயல்கள் எந்த இதய ஊற்றில் இருந்து வெளிப்பட்டு வருகின்றன என்ற ரகசியத்தை, மத்தாப்பூப் போட்டுக் காட்டுவான் கவிச் சக்கரவர்த்தி.

இதிகாசம் பரு நடை போட்டு நெடு வழி போக வேண்டி இருப்பதால், அதற்கு இடையிடையே நடைத் தளர்ச்சி ஏற்படுவது இயல்பு. ஆனால், கம்பன் இதிகாசத்துக்கு நாடகப் பாங்கை ஏற்றி, நடைத் தளர்ச்சியை மாற்றுவான்; கவிதையின் உணர்ச்சி வேகத்தால் இதிகாசத்துக்கும், நாடகத்துக்கும் உள் ஒளி ஊட்டுவான்.

கம்பன் எதைச் சொன்னாலும் சரி, அதை வாசகர்கள் பக்தியோடும், மதிப்போடும், மிக முக்கியமான செய்தியைக் கேட்கிறோம் என்ற உணர்வோடும் கேட்கும்படி செய்துவிடுவான். வாசகர்களை கம்ப ராமாயணம் என்ற புனிதச் சுனையில் மீண்டும் மீண்டும் நீராடச் செய்கிறான். அவ்வாறு நீராடிவிட்டு அவர்கள் வெளிவரும் ஒவ்வொரு தடவையும், முன்னிருந்த லட்சிய ஆர்வத்தைக் காட்டிலும் அதிக ஆர்வத்தோடும், அறத்தைப் பாதுகாப்பதில் முன்னிருந்த ஆத்திரத்தைக் காட்டிலும் அதிக ஆத்திரத்தோடும், சத்தியம், சௌந்தர்யம், உத்தமம் ஆகிய மூன்றிலும் முன்னிருந்த பக்தியைக் காட்டிலும் அதிக பக்தியோடும், அடிப்படைக் கேள்விகளைக் கேட்பதில் முன்னிருந்த துணிச்சலைக் காட்டிலும் அதிகத் துணிச்சலோடும், அடிப்படைக் கேள்விகளுக்கு பதில் சொல்வதில் முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகத் தன்னம்பிக்கையோடும் வாசகர்கள் வெளிவருகிறார்கள்.

இவ்வளவையும் அவன் செய்து முடிப்பது கவிதை என்ற வரப் பிரசாதத்தால். அவனுடைய தாளம் விதம் விதமானது, உணர்ச்சிக்கு

உரியது, நிறைவை நல்கவல்லது. உயிரெழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் அவன் சதுரப்பாட்டோடும் மந்திரக்கோல் கொண்டும் தொட்ட மாத்திரத்திலேயே, அவற்றின் ஒலிகள் மனித உணர்ச்சிகளின் நுண் உருவத்தையே எடுத்துக் காட்டிவிடுகின்றன. சொல் ஒலிகளைத் தெளித்தும், தூவியும், பொழிந்தும் வாசகர்களுடைய அமைதியற்ற மனதை அமைதியுறச் செய்து, தியான நிலையில் நிறுத்தி, கவிஞன் சொல்லும் செய்தியை அப்படி அப்படியே ஏற்றுக்கொள்ளச் செய்கிறான் கம்பன்.

இவ்வாறு, கம்பன் விளையாடுகிற விளையாட்டு, சொல்லைப் பிரசவம் செய்வதற்கு முன்னால் கவிஞன் பட்ட வேதனையைக் கொஞ்சமும் காட்டாமல், அனாயாசமாகவும், இயல்பாகவும் அமைந்து இருக்கிறது. பிரபஞ்சப் படைப்பின் ரகசியங்களைப்பற்றிப் பேசும் போதும் சரி, வாழ்வின் அந்தரங்கக் காட்சிகளை ஒரு மின்னல் வெட்டின் ஒளியில் காட்டும் போதும் சரி, கம்பனுடைய கவி நாதம் தியான நிலையில் நம்மை நீடித்து நிறுத்திவிடுகிறது. கம்பன் கவிதை என்ற அத்தர் நம் இதயத்துக்குள் புகுந்து மணம் வீசி, நம் அந்தராத்மாவுக்குக் களிப்பூட்டுகிறது. இவற்றை எல்லாம் கவனிக்கும்போது, கவிதா மண்டலச் சக்கரவர்த்தி என்று கம்பனுக்கு முடி சூட்டுவது முற்றிலும் பொருந்தும்.

11. கம்ப ராமாயணத்தில் ஒருமைப்பாடு

ராமாயணம் ஓர் எளிய, இனிய கதை. இந்திய வீட்டில் பிறந்த இதிகாசமாக இருந்தாலும், அது பிற நாட்டவரையும் பெரிதும் கவர்ந்து இருக்கிறது. மலேஷியாவிலும் தாய்லாந்திலும், தேசிய இதிகாசமாக அதைக் கருதுகிறார்கள். ஆண்டுதோறும் ராம நாடகத்தைப் பெரிய விழாவாக அவர்கள் நடத்துகிறார்கள். சோவியத் ரஷ்யாவிலும் ராமாயணத்துக்குப் பெரிய வரவேற்பு கிடைத்து இருக்கிறது. ரஷியாவில் ராமாயண நாடகத்தைப் பார்த்த ரஷ்யப் பெண் ஒருத்தி, கற்பில் சீதையைப்போல் நான் இருக்க விரும்புகிறேன் என்று சமீபத்தில் மிகுந்த பெருமையோடு சொல்லிக் கொண்டாள் - கற்பின் அந்தஸ்து குறைந்துகொண்டு இருக்கிற இந்தக் காலத்திலே.

அந்நிய நாடுகளைக் கவர்ந்ததுபோலவே, தன் ஜன்ம பூமியாகிய இந்தியாவின் பல பாகங்களிலுள்ள மக்களையும் ராமாயணம் கவர்ந்து இருக்கிறது. இலக்கியத் தகுதி வாய்ந்த இந்திய மொழி

ஒவ்வொன்றிலும் அந்தந்த மொழியின் மரபுக்குத்தக்க மாறுபாடுகளோடும், அந்தந்த மொழிக் கவிஞனின் கற்பனை வளத்துக்கு ஏற்ற திருத்தங்களோடும் ராமாயணம் கவிதையாக உருவெடுத்து இருக்கிறது. கவிதைப் பெருமிதத்தாலும், நாடகப் பாங்காலும், பாத்திரப் படைப்பின் திறத்தாலும் கம்ப ராமாயணம் சிறந்தோங்கி நிற்கிறது என்று பன்மொழிப் புலவர்கள் பலர் கருதுகிறார்கள்.

கம்ப ராமாயணத்தைப் படித்தால் அது தேசிய ஒருமைப்பாட்டை மாத்திரமல்ல, மனித குலத்தின் ஒருமைப்பாட்டை, உயிரினங்களின் ஒருமைப்பாட்டை, இல்லை, பேரண்டத்தின் ஒருமைப்பாட்டையே வளர்க்கும் ஆற்றல் உடையது என்று தெரியும்.

ராமன் காட்டுக்கு அனுப்பப்பட்டுவிட்டான் என்று கேட்ட பரதன் ஆறாத் துயரம் அடைகிறான். அவனை அழைத்து வருவதற்காகத் தன் படையோடு காலால் நடந்து செல்கிறான். கங்கைப் பிரதேசத்துக்கு வந்ததும் எங்கும் ஒரே பசுமையாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேல் என்று இருக்கும் நன்செய் வயல்கள் கண்ணுக்கு எட்டும் தூரம் வரை தெரிகின்றன. இதை எல்லாம் பார்த்து மகிழ்ந்துகொண்டே பரதனோடு கம்பரும் கங்கைக் கரைக்கு வந்து சேர்கிறார். கங்கையைக் கண்டவுடன் அவருக்குக் காவிரியின் நினைவு வருகிறது. இரண்டு ஆறுகளுக்கும் இடையே ஒரு கவிதைப் பாலம் போடுகிறார்:

பூவிரி பொலன் கழல் பொருவில் தானையான்
காவிரி நா(டு) அன கழனி நா(டு) ஒரீஇத்
தாவர சங்கமம் என்னுந் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான்.

கங்கை நாட்டின் நீர் வளமும், நில வளமும் காவிரி நாட்டின் நீர் வளத்தையும் நில வளத்தையும் நினைவுறுத்துகின்றன என்று சொல்லி, ஒருமைப்பாட்டுக்கு வேண்டிய ஒரு நெருக்கத்தை நம் உள்ளத்தில் உண்டாக்குகிறார் கம்பர்.

பொன் மால்வரையாகிய இமயமலையில் தவம் செய்துகொண்டு இருந்த விஸ்வாமித்திரர், மலையைவிட்டு இறங்கி வருகிறார். எதற்காக? அயோத்திக்கும் மிதிலைக்கும் இடையே ஓர் உறவை உண்டாக்குவதற்காக. அயோத்தி வீரர்களான ராம லட்சுமணர்களை அழைத்துக்கொண்டு தாடகை வதையை முடித்த பின்னர் அவர்கள் இருவரையும் மிதிலைக்கு அழைத்துச் செல்கிறார் முனிவர். அங்கே ஜனக மகாராஜன், "இந்த இளைஞர்கள் யார்?" என்று விஸ்வாமித்திரரைக் கேட்கிறார். விஸ்வாமித்திரர் ராம லட்சுமணர்களுடைய பரம்பரையைப்பற்றி விவரிக்கிறார்.

குல முறை கிளத்துப் படலத்தில், "இவர்கள் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய முன்னோர்களில் ஒருவனே இஷ்வாகு மன்னன். அவன் என்ன செய்தான், தெரியுமா? படைப்புக் கடவுளாகிய பிரம்மா, தான் இறைவனுடைய கருவி என்பதை மறந்து, தன்னுடைய கெட்டிக்காரத்தனத்தால்தான் படைப்பு நடக்கிறது என்று நினைக்கத் தொடங்கினான். ஆணவம் வந்து பிரம்மாவுடைய கண்ணைக்கூட மூடிக்கொண்டது. படைப்புத் தொழிலாகிய கர்மத்தால் வந்த பலன் இது. இந்த கர்மத்தினின்றும் விடுபடுவதற்காக, பிணி அரங்கவினை நீங்குவதற்காக, பிரம்மதேவன் பாம்புப் படுக்கையில் உள்ள விஷ்ணு மூர்த்தியை, பணி அரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடரை, பல யுகங்களாக வழிபட்டு வந்தான். அப்பேர்ப்பட்ட பரஞ்சுடரைப் பிரம்மாவால் படைக்கப்பட்ட மக்களாகிய நாமும் கண்டு, அகந்தையை இழக்க வேண்டும் அல்லவா? அதற்காக இஷ்வாகு மன்னன் விஷ்ணு மூர்த்தியை ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளச் செய்தான்" என்று விஸ்வாமித்திரரைச் சொல்லவைத்து, அயோத்தியை மிதிலையோடும், மிதிலையைத் திருவரங்கத்தோடும் நெருக்கிச் சேர்த்து ஒரு கற்பனை நெசவு செய்கிறார் கம்பர்.

பிணி அரங்க வினை அகலப் பெருங்காலம் தவம் பேணி
மணி அரங்கு நெடுமுடியோய், மலர் அயனே வழிபட்ட
பணி அரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடரை - யாம் காண
அணி அரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்.

கதை சொல்லிக்கொண்டு இருக்கும்போதே கம்பர் ஓர் அரிய ஒருமைப்பாட்டை நம்மை அறியாமலேயே நம் உள் மனதில் உண்டாக்கிக்கொண்டே இருப்பார்.

உயிர்களின் ஒருமைப்பாட்டை எப்படி கம்பர் உணர்த்துகிறார் என்பதற்கு ஓர் உதாரணம்: கைகேயி ராமனை அழைத்து வரும்படி சுமந்திரனிடம் சொல்கிறாள். சுமந்திரன் போய்ச் சொன்னதும், ராமன் ஒரு தேரில் கைகேயியின் அரண்மனைக்குச் செல்கிறான். ராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற வரத்தைக் கைகேயி வாங்கிவிட்டாள் என்று சுமந்திரனுக்குத் தெரியாது, ராமனுக்கும் தெரியாது, அயோத்தி மக்களுக்கும் தெரியாது. முடிசூடத்தான் தேரில் போகிறான் என்று நினைக்கிறார்கள் பெண்கள். தெரு வீதியில் முண்டியடித்துக்கொண்டு தேரைச் சுற்றி மொய்க்கிறார்கள் அவர்கள். தேரில் ராமனைப் பார்த்ததும் அவர்களுக்கு ஒரு புதிய ஆன்மானுபவம் ஏற்பட்டது. இதுவரை அவர்களுடைய உயிர்த் தத்துவமானது கண்ணுக்குப் புலப்படாமல் உடலுக்குள் ஒளிந்து கொண்டு இருந்தது. தேரில் ராமனைப் பார்த்த பின்போ அவர்களுடைய உயிர் எல்லாம் உடல்களைவிட்டு

வெளியே வந்து, எல்லோருக்கும் ஒன்றுதான் என்று சொல்லும்படி உருண்டு திரண்டு, ராமன் என்ற அழகிய ஸ்தூல வடிவம் பெற்று, கட் புலனுக்குக் காட்சி கொடுத்தது. ரத வீதிகளின் இரண்டு பக்கமும் (இரு கையும்) ஆரவாரம் செய்துகொண்டு, இரைத்துக்கொண்டு பெண்கள் ராமன் இருக்கும் தேரை மொய்த்தார்கள். எப்படி?

இரு கையும் இரைத்து மொய்த்தார்,
இன்னுயிர் யார்க்கும் ஒன்றாய்ப்
பொருவரும் தேரில் செல்லப்
புறத்திடை கண்டார் போல்வார்.

எல்லோருடைய உள்ளங்களும் ஆர்வத்தோடும், பக்தியோடும் ராமனுடைய அழகிய வடிவத்தில் ஏககாலத்தில் ஒருசேரப் படிந்த போது, மின்னல் வெட்டும் ஒரு கணத்தில், எல்லா உயிர்களையும் ஒன்றாகக் காணும் காட்சி அவர்களுக்குக் கிட்டிவிட்டது. இதுதான் உண்மையான ஒருமைப்பாடு. இந்த ஒருமைப்பாட்டை நாம் காண ஒட்டாமல் தடுப்பது நமது ஆணவம். அது எப்போது கரைகிறதோ, அப்போதே ஆன்மிக ஒருமைப்பாட்டால் ஏற்படும் ஆனந்தம் நமக்குக் கிடைத்துவிடுகிறது.

கல்லுக்கும், காற்றுக்கும் எத்தனை எத்தனையோ வேறுபாடுகள்! ஆனால், கல்லின் பரமாணுவையும், காற்றின் பரமாணுவையும் விஞ்ஞான முறையில் பிரித்துப் பிரித்துப் பார்த்தால், கடைசியில் ஒரே தன்மைத்தான பேதமற்ற சக்திதான் மிஞ்சுகிறது. அந்த சக்தி தான் கல்லாக வேஷம் போடுகிறது. காற்றாக வேஷம் போடுகிறது. தீயாகவும், நீராகவும், ஆகாசமாகவும் வேஷம் போடுகிறது; வெளி வேஷந்தான். இப்படி உள்ளுக்குள் பார்த்தால், பார்ப்பவர்கள் விஞ்ஞானிகளாக இருந்தால், வேஷம் கலைந்து ஒரே படித்தான சக்தியாகத் தோன்றுகிறது இந்தப் பேரண்டம்! உள்ளுக்குள் பார்ப்பவர்கள் ஞானிகளாக இருந்தால், இந்தப் பேரண்டம் ஒரே படித்தான அறிவாகத் தெரிகிறது.

அஞ்ஞானிகளுக்குத்தான் கல் கல்லாகவும், மண் மண்ணாகவும் அவை ஒன்றுக்கொன்று எவ்வளவோ எட்டி விலகி இருக்கிற பொருட்கள் போலும் தோன்றும். ஒவ்வொரு பூதத்திலும் எத்தனையோ விதமான வேறுபாடுகள் இருப்பது போலும், அந்த வேறுபாடுற்ற மிகுதி ஒருக்காலும் மறையாது போலும் தெரிகிறது நமக்கு. ஒன்றை மற்றொன்றாகவும், ஒன்றைப் பலவாகவும் காணும் காட்சி நம்முடைய அறிவு மயக்கத்தால்தான். இந்த மயக்கம் எப்போது தீரப்போகிறது? எப்போது கலங்கப் போகிறது? இறைத் தத்துவத்தைக் கண்டுவிட்டால் இந்தக் கோணல் பார்வை எல்லாம்

நிமிர்ந்துவிடும். இறையொளி வீசிவிட்டால், இந்த இருண்ட மருட்சி எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

இரவு 7 மணிக்கு ஒளி இல்லாத இருண்ட பாதையில் அஞ்சி அஞ்சி நடந்து செல்கிறோம். நடுப்பாதையில் நீண்டுவளைந்த ஒரு பாம்பு கிடப்பதைப் பார்த்து மருள்கிறோம், அதிர்ச்சியினால் நிற்கிறோம். உடம்பெல்லாம் வியர்க்கிறது. அந்தப் பாம்பு படத்தைத் தூக்குகிறது. பிறகு வாலை ஆட்டுகிறது. திகில் அதிகமாகிறது. அந்தச் சமயத்தில் நமக்குப் பின்னால் இருந்து ஒரு சின்னப்பையன் மின்சார விளக்கைக் கையில் வைத்துக்கொண்டு வருகிறான். அவன் பாம்பின் மேல் டார்ச் லைட்டை அடிக்கிறான். அந்த வெளிச்சத்தில் உண்மை நமக்குத் தெரிகிறது. அது பாம்பல்ல, சருகாக வாடிப்போன பூமாலைதான் என்று. காற்றடிக்கும்போது அது இப்படியும், அப்படியும் அசைகிறது. அதையே படம் எடுத்தாடுகிற பாம்பென்றும், வாலையாட்டுகிற பாம்பென்றும் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நினைத்தோம். அந்தப் பையன் போட்ட டார்ச் ஒளியிலே, பாம்பென்று நாம் அஞ்சியது அஞ்ச வேண்டாத பூமாலை என்று உணர்கிறோம். இதைப்போலவே, ஆயிரங் கோடிப் பொருட்கள்போலக் காட்டிக்கொண்டு இருக்கும் இந்தப் பிரபஞ்சம், ஒரே பொருள்தான் என்று நம் உணர்வுக்குத் தெரிகிறது - இறைவன் நமக்கு ஞான ஒளியை வீசிக் காட்டும்போது. இதைச் சொன்னார் கம்பர்:

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவு எனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கம்
கலங்குவது எவரைக் கண்டால், அவரன்றே கை வில் ஏந்தி
இலங்கையில் பொருதார் என்பர் மறைகளுக்கு இறுதியாவார்.

வேதங்களின் இறுதி என்ன? ஞானம். வேதங்களுக்கு இறுதியாவார் ஞானிகள். அவர்கள் அப்படிச் சொல்வார்களாம். எந்தப் பரம்பொருளைக் கண்டால், பேத அறிவினால் நமக்குண்டான கலக்கமும், குழப்பமும் தீருமோ அந்தப் பரம்பொருள், கண்ணுக்குத் தெரியாத அந்தப் பரம்பொருள், மானிட உருவம் தாங்கிக் கையில் வில் ஒன்றை ஏந்தி, கால் தரை தோய நின்று இலங்கையில் தீய சக்திகளைப் போரிட்டு வென்றது என்று ஞானிகள் சொல்வார்களாம். ஒருமைப்பாட்டுக்கு எல்லாம் மேலான ஒருமைப்பாடு எப்போது ஏற்படும் என்றால், பேரண்டத்தையே ஒன்றாகக் காணும் காட்சி நமக்குக் கிட்டும்போதுதான். அந்த அரிய காட்சியைக் காணவும், அந்த ஒருமைப்பாட்டை அடையவும் நம்மைப் பக்குவப்படுத்துகிறது கம்ப ராமாயணம். இப்போது சொன்ன பாட்டை உணர்வோடு மறுபடியும் சொல்லிப் பார்த்தால் இந்த உண்மை புரியும்.

12. கவிதையில் விடுமுறை

பருவக் காலங்களில் எல்லாம் உள்ளத்துக்கு உகந்தது கோடை காலமே என்று சொல்கிறார் காளிதாசர். கர்ப்பூரமும் புனுகும் கலந்த கலவைச் சந்தனத்தை மார்பில் பூசிக்கொண்டு மாலையில் வீசுகிற மெல்லிய பூங்காற்றை நுகர்ந்து மகிழ்வதற்கு உரிய காலம் கோடை காலம்.

சிறுவர்களும் சிறுமியரும் பரீட்சைகள் முடிந்துவிட்டன என்ற ஆனந்தத்தில் மைக் கூடுகளைச் சூறையாடிக் கோடை விடுமுறையை வரவேற்கிறார்கள். காட்டுப் பாங்கான ஊர்களில் வாழ்கிற எளிய மக்கள் சித்ரா பௌர்ணமி இரவில் வன போஜனம் செய்வதற்காகப் புறப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆண்டு முழுவதும் உழைத்துக் களைத்த அலுவலர்கள் கொடைக்கானல், உதகமண்டலம், சிம்லா முதலிய குளுமை நிறைந்த ஊர்களுக்குச் சென்று விடாயாற்றிக்கொள்கிறார்கள். நாளெல்லாம் உழைத்து அலுத்துப் போன உழவு மாடுகள் நுகத் தடியில் இருந்து விடுதலை பெற்று வீடு நோக்கிக் கும்மாளம் போட்டுக்கொண்டு ஓடுகின்றன.

அரச பாரத்திலிருந்து விடுதலை பெற்று ராமன், சீதை லட்சுமணர்களோடு உல்லாசமாகக் காடு செல்கிறான். படாடோபம் நிறைந்த அரண்மனையை விட்டுவிட்டு, வளம் கொழிக்கும் நாட்டுப்புறங்கள் வழியாக இயற்கைக் காட்சிகளைக் கண்டு அனுபவித்துக்கொண்டே செல்கிறார்கள் மூவரும். அங்குள்ள பூஞ்செடிகளிலும் கொடிகளிலும் உள்ள மலர்களைக் கொய்து தன் கூந்தலில் சூடிக்கொள்கிறாள் சீதை. வனத்துக்குள் வந்ததும் அவளுடைய கூந்தலில் உள்ள (அளகத்தில் உள்ள) பூக்கள் மகரந்தப் பொடியையும் இனிய மணத்தையும் (மாகந்தத்தையும்) காடு முழுவதும் பரப்புகின்றன. துணைக்கோ பக்கத்தில் ராமன் இருக்கிறான். ஆகவே, அவளுடைய இன்பத்துக்கு எல்லை இல்லை என்றே சொல்ல வேண்டும். கம்பர்,

மாகந்தமும் மகரந்தமும் அளகம் தர

-என்கிறார். பாட்டின் தாளம் எப்படி உல்லாச பாவத்தை உண்டாக்குகிறது என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

சீதையின் அரைவட்ட வடிவில் உள்ள நெற்றி (நுதல்) அவளுக்கு எங்கே இருந்து கிடைத்தது? பிறைச் சந்திரன் (மதியின் பாகம்) கொடுத்த நெற்றியாம் அது. ராமனுடைய உதடு (இதழ்)

செக்கச்செவேல் என்று சிவந்து இருக்கிறது. அந்தச் சிவப்பு அவனுக்கு எங்கிருந்து கிடைத்தது? பவளம் தன் சிவப்பு நிறத்தை நன்கொடையாக அவனுக்குக் கொடுத்து இருக்கிறதாம்.

மாகந்தமும் மகரந்தமும் அளகம் தர, மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந் தரும் இதழான்.

பாரிஸ் நகரத்தில் ஷான் ஸெசிஸே (சொர்க்க வயல்) என்று ஒரு சாலை இருக்கிறது. கண்ணையும் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் அழகு நிறைந்த சாலை. அங்கே காதலர்கள் கைகோத்து விளையாடிக்கொண்டே செல்வார்கள். தங்க விக்ரகம் போன்ற ஃபிரெஞ்சுப் பெண்கள் கன்னங்கரேல் என்ற நிறம் உள்ள நீக்ரோக் காதலர்களோடு கைகோத்துச் செல்லும் காட்சி விநோதத்தைச் 'சொர்க்க வயலில்' அடிக்கடி பார்க்கலாம். நீல மேக வண்ணனாகிய ராமன் பொன்னொளி வீசுகிற சீதையோடு செல்லும்போது, அவர்களுடைய நிறபேதத்தை, 'கலர் கான்ட்ராஸ்டை'க் கண்டு அனுபவிக்கிறார் கம்பர்.

கறுத்த மழை மேகம் ஒன்று மின்னல் ஒன்றின் கையைப் பிடித்துக்கொண்டு உலாவுவதுபோலத் தோன்றுகிறது கவிச் சக்கரவரத்திக்கு.

மேகந் தனி வருகின்றது மின்னோடு என...

இப்படிச் சொல்லிப் பார்த்தும் மன நிறைவு ஏற்படவில்லை கவிஞருக்கு. கம்பீரமான (குகைசால்) ஆண் யானை (நாகம்) ஒன்று பெண் யானை (பிடி) ஒன்றுடன் துதிக்கையோடு துதிக்கையைப் பிணைத்துக்கொண்டு, ஜோடியாக நடந்து வருவதுபோல், அவர் காட்சிக்குத் தோன்றுகிறது.

தகைசால் நாகந் தனி வருகின்றது பிடியோடு என நட வா...

இந்த அரிய பாடலை ஒட்டுமொத்தமாகப் பார்த்தால்தான், பாடலில் இருக்கும் தாளம் எப்படி உல்லாசத்தை நம் உள்ளத்தில் தட்டி எழுப்புகிறது என்று தெரியவரும்.

மாகந்தமும் மகரந்தமும் அளகம் தர, மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந் தரும் இதழான்
மேகந் தனி வருகின்றது மின்னோடு எனத் தகைசால்
நாகந் தனி வருகின்றது பிடியோடு என, நட வா.

ரசிகமணி டி.கே.சி., "தமிழ்க் கவிகளைப் பாடுவது லகுவான காரியமே. அதற்காக யாப்பியலோ காரிகையோ ஒன்றையும் கற்க வேண்டியது இல்லை. தமிழ்ப் பாடல்கள் எல்லாம் நடனத்துக்கும் தாளத்துக்கும் இசைக்குமாக ஆதியில் ஆக்கப்பட்டன. அடி என்கிற வார்த்தை, நடனத்திலிருந்தே செய்யுள் பிறந்தது என்பதைக்

காட்டும். சிர் என்பது தாளத்தைக் காட்டும். ஆகவே, நடனமும் தாளமும் எந்தத் தமிழ்ச் செய்யுளுக்குப் பின்னும் இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்" என்று சொல்வார்கள்.

நாம் பார்த்த பாடலில் தாளக்கட்டு எப்படி அமைந்து கிடக்கிறது என்பதைக் கிழ்க்காணும் சந்தத்தின் வாயிலாகச் சுட்டிக் காட்டுகிறார்கள் டி.கே.சி.-

தான னன தான னன தான னன தானா

இந்தக் கைகாட்டியைத் துணையாகக்கொண்டு, 'மாகந்தமும் மகரந்தமும்' என்று தொடங்கும் பாடலைப் பாடிப் பார்த்தால் 'விடுமுறை பாவம்' நம் உள்ளத்தை நிறைத்துவிடும்.

பாடலைப் படிப்பதற்குப் பதிலாக நமக்குத் தெரிந்த ராகத்தில் இப்போது பாடலைப் பாடிப் பார்ப்போம்.

13. குறள் அமுதம்

நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில் வரும் குறள் இது.

சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

நீத்தார் என்றால் துறவிகள் என்று பொருள். துறவிகளுக்கும் நமக்கும் என்ன வேறுபாடு? ஐம்புலன்களைத் துறவிகள் ஒரு வகையாகப் பயன்படுத்துகிறார்கள். நாம் வேறொரு வகையில் அவற்றைப் பயன்படுத்துகிறோம்.

நம் உடம்பில் ஐந்து மடைகள் இருக்கின்றன. ஐம்புல மடைகள். புற உலகச் செய்திகள் இந்த மடைகளின் வழியாக நம் உள்ளத்தில் வந்து பாய்கின்றன. நம் மனமோ, இந்த மடைகள் வழியாக, ஆசை வலையை வீசி, உலகத்திலுள்ள பொருட்களோடு தொடர்பு கொள்கிறது; எட்டாப் பழத்தை எண்ணி, எண்ணி, எட்டவில்லையே என்று ஏங்கிக் கொட்டாவிவிடுகிறது; பழம் எட்டினாலும் அதைத் தின்று பார்த்துவிட்டு, 'இது நிரந்தரமான இன்பத்தைக் கொடுக்கவில்லையே' என்று துன்புறுகிறது. ஐம்புல மடைகள் மேன்மேலும் உலகச் செய்திகளைக் கொண்டுவந்து உள்ளத்தில் பாய்ச்சுகின்றன. மேலும் இச்சையை வளர்த்து, மனதுக்கு தூபம் போட்டுப் பேயாட்டம் ஆடச் செய்கின்றன.

இவ்வாறு வெளிக் காட்சிகள் உள்ளே வந்து பாய்வதும், உள்ளேயிருக்கும் மனம் ஆசை வலை வீசிப் புறப் பொருட்களைப்

பிடிக்க முயல்வதுமாக ஒரு வியாபாரம் நடந்துகொண்டே இருக்கிறது. தொட்டிலில் இருந்து சுடுகாடு வரை நடக்கிறது இந்த வியாபாரம். இந்த வரவு, செலவால் நேரிடுவது என்ன? சுயநலம் வீங்கி விஸ்வரூபம் எடுக்கிறது; நிறைவேறாத ஆசைகளால் ஏமாற்றமும், நிறைவேறிய ஆசைகளால் தொல்லையும் ஏற்படுகின்றன.

துறவிகளோ ஆசையை வேரோடு களைந்த ஞானிகள். அந்த நிலையில், ஒரு ஞானி தனக்குள்ளே உலகம் முழுவதும் இருப்பதைப் பார்க்கிறான். உலகம் முழுவதிலும் தானே பரவி நிற்பதை உணர்கிறான். அவனுடைய 'அயல் மாண்ட' நிலையில், வேற்றுமை அற்ற நிலையில் துன்பம் அற்றுப்போகிறது, அமைதி அவன் உள்ளத்தில் நிலவுகிறது.

இந்த நிலையில், ஐம்புலன்கள் தரும் செய்திகளைத் தன் உணர்வோடு பரிசிலனை செய்யும் ஆற்றல் அவனுக்குக் கிட்டுகிறது. இப்படிப் பரிசிலனை செய்யும்போது ஐம்புலன்களுக்கு அடிமையாக இருந்தவன், ஐம்புலன்களைத் தனக்கு அடிமையாக்கிக்கொள்கிறான். முன்னால் துன்பத்தைத் தந்துகொண்டு இருந்த சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும் இப்போது இன்பத்தைத் தருகின்றன. ஏன்? ஆசை என்ற மாசை மனதைவிட்டு அகற்றிவிட்டு, புலன்கள் தரும் செய்தியை வகை தெரிந்து பயன்படுத்துகிறான் அவன். தன்னலத்துக்காகப் பயன்பட்டு வந்த புலனறிவு இப்போது பிறர் நலத்துக்காகப் பயன்படுகிறது.

மகாத்மா காந்தி ஒரு காலத்தில் புலனுக்கு அடிமைப்பட்டு, தன்னலத்தில் ஆழமாகப் புதைந்து கிடந்தார். அந்த நிலை அவருக்குத் துன்பத்தையே கொடுத்தது. ஆசையை அறுத்துவிட்டு, புலன்களைப் புனிதமாக்கி, பிறர் நலத்துக்காக அவர் புலனறிவைப் பயன்படுத்தியபோது, அவருக்கு ஆனந்தம் பிறந்தது. அது மாத்திரம் அல்ல. மெய், வாய், கண், மூக்கு, செவியின் வகை தெரியாமல் அவர் வாழ்ந்த காலத்தில், அவரை ஒருவரும் மதிக்கவில்லை. ஆசையைத் துறந்து, அன்பைப் பெருக்கி, ஐம்புலன்களின் வகை தெரிந்து வாழக் கற்றவுடனேயே, உலகம் எல்லாம் அவர் கால் மாட்டில் விழுந்து வணங்கியது.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

நிறை மொழி என்றால் பொருளாலும் ஆற்றலாலும் நிறைந்து ததும்பிக்கொண்டு இருக்கிற மொழி.

சாமானிய மக்கள் பேசும் மொழியில் சாரம் இருக்காது. வெற்றுப் பேச்சாக இருக்கும் அது. குறை மொழி என்று அதைச் சொல்லலாம்.

காற்றோடு காற்றாகக் கரைந்துவிடுகிறது. மக்கள் உள்ளத்தில் நிலைத்து நின்று அவர்களுடைய உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் உருவாக்கும் சக்தி அதற்கில்லை. ஞானிகளுடைய நிறை மொழி என்றும் நாட்படாது சிரஞ்சீவியாக இருக்கும்.

மின்சாரக் கம்பி இவ்வளவு பாரம்தான் தாங்கும் என்று ஒரு கணக்கு உண்டு. சொல்லுக்கும் இவ்வளவு அர்த்த பாரந்தான் தாங்கலாம், இவ்வளவு வேகந்தான் ஏற்றுக்கொள்ளலாம் என்று ஒரு வரம்பு உண்டு.

சாதாரணமாக, நாம் சொல்லைப் பயன்படுத்தும்போது, அதற்குக் கால் வேகம், அரைக்கால் வேகந்தான் கொடுக்க முடியும். ஏனென்றால், உண்மையின் முழு உருவத்தையும் நாம் கண்டதில்லை; அரைக்கால்வாசி அல்லது கால்வாசிதான் நாம் கண்டு இருக்கிறோம். அப்படிக் கண்டதையும் உணர்ச்சியோடு நாம் அனுபவித்ததில்லை. ஆகவேதான், நம் சொற்கள் நொண்டிகளாக, ஊமைகளாக, பிறந்தவுடன் செத்துவிடுகின்றன.

ஆனால், ஷேக்ஸ்பியர், கம்பன் போன்ற மகா கவிகள் சொல்லை முழு வேகத்தோடு பயன்படுத்துவார்கள். உண்மையை முழுமையாகக் கண்டு, முழு உணர்ச்சியோடு அனுபவித்து, அந்த அனுபவத்தைச் சொல்லில் தேக்கிவிடுகிறார்கள். ஆகவே, என்றும் இல்லாத வீறு அவர்களுடைய சொல்லுக்கு அமைந்துவிடுகிறது. காலனைக் காலால் மிதித்துத் தள்ளும் ஆற்றல் மகா கவிகளுடைய சொல்லுக்கு உண்டு. கேட்டவர்களுடைய உள்ளத்தை அவர்களுடைய சொல் பற்றிக்கொள்கிறது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் அவர்களுடைய சொல்லைக் கையாள்கிறார்கள். அதன் காரணமாக மகா கவிகளுடைய தாய்மொழிக்கே புது ஆற்றலும் தெளிவும் வனப்பும் ஏற்படுகின்றன. ஷேக்ஸ்பியருடைய வாக்கு ஆங்கில மொழிக்கு இன்றும் கைகொடுத்து உதவிக்கொண்டு இருக்கிறது, கம்பர் வாக்கும் திருவள்ளுவர் வாக்கும் தமிழுக்குக் கதியாக நிற்பதுபோல.

ஞானிகளுடைய சொல்லுக்கு ஒரு மந்திர சக்தியே இருக்கிறது. பொருள் தெரியாமல் நாம் அதைச் சொன்னாலும், அதைச் சொல்லும் மூச்சிலேயே நமக்கு ஒரு சக்தி பிறக்கிறது.

ஏனென்றால், ஞானிகளுடைய சொல் வெறும் அறிவிலிருந்து பிறப்பதல்ல, ஆன்ம அனுபவத்திலிருந்து பிறப்பது. அவர்களுடைய அனுபவமும் சொல்லும் இரண்டற விரவிக் கலந்து நிற்பதால், அவர்களுடைய சொல்லை உச்சரிக்கும்போது, நம்மை அறியாமலேயே, ஞான அனுபவம் நம் உள்ளத்தில் இறங்கிவிடுகிறது.

'அன்பே சிவம்', 'அகம் பிரம்மாஸ்மி', 'என் கடன் பணிசெய்து கிடப்பதே', இவை போன்ற மகா வாக்கியங்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் உச்சரித்துக்கொண்டே இருக்கிறோம். இந்த வாக்கியங்களை இயற்றிய நிறைமொழி மாந்தர் மறைந்துபோய் நீண்ட நெடுங்காலம் ஆகிவிட்டது. ஆனால், அவர்களுடைய வாக்கு மறையாமல் நிலைத்து நிற்கிறது. நம் வாழ்க்கைக்கு ஜீவாதாரமாக நிற்கிறது. சொல் அக விளக்கு அது. இருளையும் மருளையும் போக்கவல்லது.

2000 ஆண்டுகளுக்கு முன் இந்த உண்மையைக் கண்டு எப்படி அனுபவித்திருக்கிறார் வள்ளுவர்!

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

உயர்ந்த குணங்களைப் பலசரக்குக் கடையில் வாங்க முடியாது. பெருமுயற்சியால்தான் பெற முடியும். செங்குத்தான குன்றில் ஏறும்போது, பல இடங்களில் மூச்சுத் திணறுகிறது. வேறு சில இடங்களில் வழுக்கி விழுகிறோம். இந்தப் பாடெல்லாம் நமக்கு எதற்கு? கீழே இறங்கிவிடுவோம் என்று நமக்குத் தோன்றுகிறது. கீழே இறங்குவது எளிதாக இருப்பதோடு, சுகமாகவும் இருக்கிறது.

ஆனால், ஞானிகள் ஆன்ம வீரம் படைத்தவர்கள்; விடா முயற்சியோடும் பொறுமையோடும் லட்சிய உறுதிப்பாட்டோடும், முன்வைத்த காலைப் பின் வைக்காமல், குன்றின் உச்சியை அடையும்வரை, சலிக்காமல் உழைப்பார்கள். இப்பேர்ப்பட்ட சாதனை வெகு சிலருக்கே கைவரும். அவர்களுடைய சாதனையின் பெருமையையும் அருமைப்பாட்டையும் வியந்து உலகம் எல்லாம் பாராட்டும். 'குணம் என்னும் குன்றேறி நின்றார்' என்று சொல்லி அவர்களை ஒரு தூக்குத் தூக்கி ஒய்யாரத்தில் நிறுத்தி அண்ணாந்து பார்த்து அவர்களைப் பாராட்டுகிறார் வள்ளுவர்.

பல நற்குணங்களை எல்லாம் ஒருங்கே அமைந்த பெரியார்கள், கொடுமையையும், அநீதியையும், தீமையையும் கண்டால், எரிமலை போல் சீறி விழுவார்களாம். ஒரு கணப்பொழுதுகூட அநீதியைத் தாங்க முடியாது அவர்களால்.

கயவர்களுடைய நடத்தை அதற்கு நேர்மாறாக இருக்கும்; நன்மையைக் கண்டால், நீதியைக் கண்டால், கருணையைக் கண்டால் அவர்களுக்குச் சினம் ஏற்படும். ஆனால், அந்தச் சினத்தை முகத்தில் காட்ட மாட்டார்கள், செயலில் காட்டுவார்கள்; அடிமனதின் ஆழத்தில் சீற்றத்தைப் பொதிந்து வைத்து, பழியை வளர்த்துக்கொண்டு இருப்பார்கள், செவிலியரைப்போல உரிய சமயம் வந்ததும் சிரித்துக்கொண்டே கழுத்தை அறுப்பார்கள்.

குணத்தால் உயர்ந்தவர்கள் தங்களுடைய சீற்றத்தை ஒதுக்கியோ, மறைத்தோ வைக்கமாட்டார்கள், வைக்கத் தேவையும் இல்லை. தன்னலத்திலிருந்து உதிப்பதல்ல அவர்களுடைய கோபம். அறமும் அன்பும் கலந்த, ஆனால், வஞ்சகமற்ற கோபம் அது. அதைப் பொத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை. அக்கிரமத்தைக் கண்ட மாத்திரத்திலேயே அது பீறிட்டுக்கொண்டு வரும்.

பண்டித ஜவஹர்லால் நேரு உயர்ந்த, தங்கமான மனிதர். ஆனால், அடிக்கடி அவருக்கு திடீர் கோபம் வரும். அந்தக் கோபமோ, நீர்க் குமிழியைப்போல ஒரு கணம்கூட நிலைத்து நிற்காமல் மறைந்துவிடும். அஞ்சா நெஞ்சோடும் வெஞ்சினத்தோடும் பிரிட்டிஷ் வல்லரசோடு அவர் போராடினார். ஆனால், விடுதலை கிடைத்த பிறகு கோபத்தை எல்லாம் மறந்துவிட்டு, வெள்ளைக்காரர்களோடு தோழமை பூண்டார். இந்தியாவுக்கு பிரிட்டிஷ் இணைப்பு இருக்க வேண்டும் என்று வாதாடினார். கொள்கை மேலுள்ள சீற்றத்தை கொள்கைக்குக் கருவியாக இருக்கும் மக்களிடத்தில் காட்டுவதில்லை பெரியோர்கள்.

கோபம் உள்ள இடத்தில் குணம் இருக்கும் என்பது பழமொழி. கள்ளங்கபடற்ற உள்ளத்தில் சீற்றம் வந்தாலும் வேரூன்றி நிற்காது மறுகணத்தில் மறைந்துவிடும்.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

அந்தணர் என்றால் அழகிய தண்ணளி உடையவர்கள், அருளாளர் என்று பொருள். ஒரு ஜாதியிலோ சமயத்திலோ பிறந்துவிட்ட காரணத்தினாலேயே ஒருவன் அந்தணன் ஆகிவிட மாட்டான். அறம், அன்பு என்ற இரண்டு அரிய குணங்கள் நிறைந்த பாத்திரத்தையே அந்தணர் என்று சொல்லலாம்.

சிலருக்கு அற உணர்ச்சி இருக்கும், ஆனால், இதயத்தில் ஈரம் இருக்காது; தண்ணளி இருக்காது. வளம் இல்லாத வெறிச்சோடிப் போன அற உணர்ச்சி அது.

வேறு சிலர் அன்பு கசிந்துகொண்டே இருப்பார்கள். ஆனால், அற உணர்ச்சி அற்றவர்களாக இருப்பார்கள். மறச் செயல்களுக்கு அவர்களுடைய அன்பு துணையாக நிற்கும். அன்பு பெட்ரோலைப் போன்றது. பெட்ரோல் இல்லை என்றால் கார் ஓடாது. அறம் காருக்கு ஸ்டீரிங் வீலைப் போன்றது. பெட்ரோலை நிறைய போட்டுவிட்டு, ஸ்டீரிங் வீல் இல்லாமல் காரை ஓட்டினால், திசை தடுமாறி அது ஓடும். காரின் வேகத்துக்குப் பொருளையும் நோக்கத்தையும் கொடுப்பது ஸ்டீரிங் வீல். அன்பில்லாமல் அறத்தை வளர்ப்பவன் பெட்ரோல் இல்லாமல் கார் ஓட்டுகிறவனைப்போல இருக்கிறான். அவனால் ஓர் அங்குலம்

நகர முடியாது. அறம் இல்லாமல் அன்பை வளர்ப்பவன் ஸ்டீரிங் வீல் இல்லாமல் கார் ஓட்டுகிறவன். அவனால் ஏற்படும் விபத்து கொஞ்ச நஞ்சம் அல்ல. இருவராலும் சமுதாயத்துக்குக் கேடு விளைகிறது. அன்பின் இயக்கத்தை நெறிப்படுத்த அறம் அவசியம். அறத்தின் கடுமையை மாற்றி அதை வளப்படுத்தி இயங்கச் செய்வது அன்பு.

இந்த இரண்டு பெருங் குணங்களையும் ஒருங்கே உடையவர்களே அந்தணர் என்ற அறவோர். பகைவர், நண்பர் என்ற ஓரவஞ்சகம் இல்லாமல், எல்லோருக்கும் தம் அருளைப் பொழிவார்கள் அந்தணர். மனித உயிர் பிற உயிர் என்று வேற்றுமை பாராட்டாமல் எல்லா உயிர்க்கும் அன்பு செலுத்துவார்கள் அவர்கள்.

காணுறு பசுக்கள் கன்றுகளாதி
கதறியபோதெலாம் பயந்தேன்
வாடிய பயிரைக் கண்டபோது எல்லாம்
வாடினேன்...
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்
நேருறக் கண்டு உளந் துடித்தேன்

-என்றார் ராமலிங்க அடிகள். அவரல்லவா உண்மையான அந்தணர் என்று வியக்கிறார் வள்ளுவர்.

வாழ்க்கை, பண்பு நிறைந்ததாக, பயன் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டுமா? அப்படியானால் உங்களுக்கு அன்பும் அறனும் இருக்க வேண்டும் என்று இல்லறத்தாரைப் பார்த்துச் சொன்னார் குறளாசிரியர். துறவிகளுக்கும் இந்த இரு குணங்களும் தேவை என்பதை நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில் வேறொரு கோணத்திலிருந்து வற்புறுத்துகிறார்.

இரண்டும் இல்லாத துறவியை அந்தணன் என்று எப்படிக் கூறுவது?

14. சொல் வழிபாடு

தமிழுக்கு வள்ளுவர் செய்த சேவைக்கு ஆதாரமாக திருக்குறள் முழுவதும் சாட்சி சொல்லிக்கொண்டு நிற்கிறது. கவிஞனுடைய உள்ளத்தில் நிகழும் மகத்தான அனுபவங்களை நேரடியாகக் கண்டு ஆனந்தித்த வார்த்தைகள் இன்றும் உயிரோடு இருக்கின்றன. இருப்பது மாத்திரமல்ல, வள்ளுவருக்கு இன்னின்ன அனுபவங்கள்

ஏற்படும்போது நான் அவர் உள்ளத்தில் இருந்தேன், நேரடியாக எனக்குத் தெரியும் என்று சாட்சி சொல்கின்றன.

அவை சொல்லும் வாக்குமூலத்தை வைத்து வள்ளுவர் தமிழுக்குச் செய்த சேவை என்ன என்று 2000 வருஷங்களுக்குப் பின்னால் நாம் கணிக்க முடிகிறது.

வள்ளுவர் என்ன செய்தார்? தமிழுக்கு அற்புதமான குறளைக் கொடுத்தார். தமிழுக்கு நடை பழகினார். தமிழ்ச் சொல்லுக்கு தெளிவும், ஒளியும் கொடுத்தார். வேகமும் அர்த்தபுஷ்டியும் கொடுத்தார்.

வைர வியாபாரி வைரத்தை நவம் நவமான கோணங்களிலிருந்து பார்ப்பார். பூதக் கண்ணாடியை வைத்துப் பார்ப்பார். எந்தக் கோணத்திலிருந்து பார்த்தால் டால் அதிகமாக அடிக்கிறது? எந்தக் கட்டுமானம் கொடுத்தால் அதன் முழு ஒளியையும் வெளிப்படுத்த முடியும் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வார். அதே மாதிரி தமிழ்ச் சொல்லை நுணுக்கத்தோடு ஆராய்ச்சி செய்தார் வள்ளுவர்.

அவருடைய சாந்நித்தியத்தில் கட்டுக்கடங்காமல், திமிறி அலைந்த வார்த்தைகள் எல்லாம் பயபக்தியோடு கைகட்டி, வாய் புதைத்து, தலை குனிந்து, அவருடைய ஏவலாட்களாக நின்றன. இந்தச் சாதனையை அவர் எப்படிக் கற்றுக்கொண்டார்?

ஒவ்வொரு வார்த்தைக்கும் நாலு அத்தையும் கட்டி இதனுடைய அதிகாரம் இவ்வளவுதான் என்று முடிவு கட்டினார்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மையறிந்து.

கருத்தைச் சொல் மூலமாக வெளிப்படுத்துவதற்கு முன்னால், என்ன செய்ய வேண்டுமாம்? அந்தக் கருத்தை வெளிப்படுத்துவதற்கு உள்ள சம அர்த்தமுள்ள எல்லா வார்த்தைகளும் நம் முன்னால் வந்து அணிவகுத்து நிற்க வேண்டும். கருத்து முழுவதையும் நினைத்ததை நினைத்தபடி சொல்ல ஏலாத வார்த்தைகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். மிஞ்சுகிற வார்த்தைகளில் ஒன்றை ஒன்று போரிடச் செய்து, எது எல்லா வார்த்தைகளையும் வென்று ஜெயம் பெறுகிறதோ, அந்த வார்த்தையைத்தான் சொல்ல வேண்டும்.

இந்த முறை யோக அப்யாசத்தோடு சேர்ந்தது. கோபம் வருகிறது. வெறி ஏறிக்கொண்டே போகிறது. அந்தச் சமயத்தில் நிதானம் இல்லாமல் வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பிக்கிறோம். ஆனால், குறளாசிரியர் என்ன செய்யச் சொல்கிறார். நிதானத்தோடு தராசை எடுத்து, வார்த்தையை எடைபோட்டு, சமயத்துக்கு ஏற்ற

பதம் என்ன என்று நிர்ணயம் செய்து அதன் பின்தான் வார்த்தையைச் செலவழிக்க வேண்டும் என்று சொன்னார். இப்படி நிதானிக்க ஆரம்பித்த மாத்திரத்தில் கோபம் பறந்துபோகும். சிந்தனை நமது சொல்லைப் பாதிக்கிறது. அதேபோல நாம் உபயோகிக்கும் சொல் சிந்தனையைப் பாதிக்கிறது.

ஆகவே, இந்த ரகசியத்தை உணர்ந்த வள்ளுவர் கல்லை வணங்குவதற்கு பதில் சொல்லையே வணங்கலாம் என்று ஒரு புது சமயத்தையே நிலை நாட்டுகிறார்.

புருஷ தர்மம் என்றால் ஒன்றுதான் இருக்கிறது. புருஷ லட்சியமும் ஒன்றே ஒன்றுதான். சொல்லைத் திறன் அறிந்து சொல்ல வேண்டும். இதை மாத்திரம் கற்றுக்கொண்டால் வேறு லட்சியம் மனிதனுக்கு வேண்டியதில்லை. வேறு தர்மத்தை அவன் நினைக்க வேண்டுவதே இல்லை.

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்.

சொல்லில் தெளிவு ஏற்பட்டால், மனதில் தெளிவு ஏற்படும். மனதில் தெளிவு இருந்தால் நடத்தையில் அது வெளியாகும். ஆகவே, திறன் அறிந்து சொல்லுக சொல்லை.

இந்த சித்தாந்தத்தை நினைக்கும்போது எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. ஏதோ, மார்க்கஸ் ஆரிலியம் என்ற ரோமன் தத்துவ ஞானி ஒருவர்தான் பேச்சில் நிதானம் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்லி இருக்கிறார்.

ஆனால், அவர்கூட அதுதான் மகோன்னதமான அறம், அது தான் பொருள், அதுவே மனித லட்சியம் என்று சொல்லவில்லை. உலக இலக்கியத்திலேயே இந்தப் பேருண்மையைக் கண்டவர் வள்ளுவர் ஒருவர்தான் என்று சொல்ல வேண்டும்.

ஜான் ட்ரிங்க்வாட்டர் என்ற ஆங்கிலக் கவிஞர், 'It is the custom of poets to lead us to the brink of silence and to do so by means of intelligible speech' என்றார்.

கவிஞர்கள் என்ன செய்கிறார்கள்? நாதக் குதிரை மேலே நம்மை ஏற்றி ஒருதட்டுத் தட்டுகிறார்கள். அது நம்மை மோன வரம்புக்கே இழுத்துச் சென்றுவிடுகிறது. இதைத்தான் தாயுமானவர் 'நாதாந்த மோனமே' என்று சொன்னார். நாதத்தின் அந்தத்தில் இருக்கிறது மோன நிலை. அந்த மோனநிலையே கடவுள் நிலை.

'In the beginning was the word and the word was with God, and the word was God' என்று கிறிஸ்துவ சமயத்திலும் இந்த உண்மை கூறப்பட்டு இருக்கிறது. எங்கும் வியாபித்திருக்கிறது பர தத்துவம். அதில் ஓர்

அசைவு ஏற்பட்டது. நாத அசைவு. அதிலிருந்து தோன்றியதுதான் உலகம் எல்லாம்.

ஆகவே, அந்த பர தத்துவத்தின் மோன நிலைக்குச் செல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள், நாதத்தின் துணையினால் அபேத நிலையை அடையலாம்.

நாதாந்த மோன நிலை எப்படியோ போகட்டும். லௌகீகத்திலும் சொல் திறனுக்கு எவ்வளவு அவசியம் இருக்கிறது என்பதை உணர வேண்டும். சொல்லுக்கு எவ்வளவு விலை உண்டு என்பது பண்டிதர்களுக்குக்கூடத் தெரியாது. கோர்ட்டில் வாழ் நாளை எல்லாம் வீணாக்குகிற எங்களுக்குத்தான் தெரியும்!

சுமார் 75 வருடங்களுக்கு முன் ஆங்கிலேயரால் தீர்மானிக்கப்பட்ட சட்டம் 'எவிடன்ஸ் ஆக்ட்'. வாழ்க்கையில் ஏற்படுகிற எந்தவிதமான சிக்கல்களையும், சந்தர்ப்பங்களையும் நுணுக்கத்தோடு ஜவாப் கொடுக்கக்கூடிய சட்டம் அது. இத்தனை வருடங்களாகியும், அதில் ஒரு வார்த்தையைக்கூட, ஒரு கமாவைக்கூட சீர்திருத்த வேண்டிய அவசியமே இதுவரை ஏற்படவில்லை. திருக்குறளைப்போல துல்லியமும் தொய்வும், சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கும் தன்மையும் அந்த நூலுக்கு இருக்கிறது.

ஆனால், நம்மவர்கள் நேற்று போட்ட சட்டத்தில் ஆயிரம் சீர் திருத்தம் தினம் தினம் செய்ய வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு பிரிவிலும் நூறு பீத்தல் இருக்கிறது. எவ்வளவு அக்கிரமம் செய்கிறவனும் அந்தப் பீத்தல்கள் வழியாக சட்டத்துக்குள் தப்பி ஓடி மறைந்துகொள்ளலாம். சென்னை விவசாயக் கடன் நிவாரணச் சட்டம் என்று ஒன்றைப் போட்டார்கள். அது வக்கீல்கள் கையிலும், நீதிபதிகள் கையிலும் அகப்பட்டுப் படுகிற மரண அவஸ்தையைச் சொல்லி முடியாது. ஏன்?

சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மையறிந்து.

-என்ற அப்யாசத்தில் கொஞ்சமும் பழகாதவர்கள் சட்டம் போட ஆரம்பிக்கும்போது, இத்தனை அலங்கோலமும் ஏற்படுகிறது. சொல்லைத்தான் ஆளத் தெரியவில்லை, தொலைந்து போகட்டும். சொல்லாமல் இருக்கவாவது கற்றுக்கொள் என்று எச்சரிக்கிறார் வள்ளுவர்.

கல்லாதவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லாது இருக்கப் பெறின்.

'அறிஞர்கள் நிறைந்த ஒரு சபையில் 3 மணி நேரம் உன் வாயைத் திறக்காமல் இருந்தாயே, பலே!' என்று தட்டிக் கொடுக்கிறார் ஒரு

கல்லாதவனைப் பார்த்து. அவனுக்குச் சும்மா இருக்க முடியாது. ஏதாவது,'ராபணா' எனறாவது சொல்லி ரசாபாசப்படுத்தினால்தான் அவனுடைய அந்தராத்மாவுக்கு சாந்தி ஏற்படும். நாக்குத் துடித்துக் கொண்டே இருக்குமாம். அதை அவன் அடக்கிவிட்டால், அதே ஒரு பெரும் பேறு. ரொம்ப புத்திசாலியாகிவிட்டான் என்பதற்கு ஒரு சுப சகுனம்.

ஒரு வார்த்தை கூடக் குற்றம் இல்லாமல் பேசத் தெரியாதவன், அப்படிப் போய்க்கொண்டு இருப்பான். தெருவில் எங்கேயாவது ஒரு பிரசங்க மேடை கண்ணில் பட்டுவிட்டால் ஆபத்துதான். அதைக் கண்டவுடனேயே அவனுக்குக் காமம் மேலிட்டுவிடும். கத்தினால்தான் அந்தக் காமம் தீரும். இந்தக் காலத்தில்தான் இப்படி ஆட்கள் இருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம். வள்ளுவர் காலத்திலேயே இப்படி இருந்திருக்கிறார்கள்.

பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சில சொல்லல் தேற்றாதவர்

மன்ற என்றால் ரொம்ப, ரொம்ப என்று அர்த்தம். ரொம்ப, ரொம்பக் காமம் தலைக்கேறிவிடும். யாருக்கும் சில சொல்லால் தேற்றாதவர்.

இந்த ஜந்துக்களைக்கூட மன்னித்துவிடலாம். விருதாப் பேச்சுப் பேசுகிறவனைக் கண்டால்தான் குறளாசிரியர் சீறி விழவே ஆரம்பித்துவிடுகிறார். வெற்று வார்த்தை, பயனில்லாத வார்த்தையைச் சொல்லாதே; கெடுதியுள்ள வார்த்தையையாவது சொல்லு, பயனில்லாத வார்த்தையைச் சொல்லவே சொல்லாதே என்றார். 'பெருங்காயத்துக்கு ஜே!' என்று ஒருவன் தொண்டை கிழியச் சத்தம் போடுவான். உடனே, அவனைச் சுற்றி ஆயிரம் பேர் 'பெருங்காயத்துக்கு ஜே!' என்று ஊளையிடுவார்கள். உடனே அவன் தலைவராகிவிடுவான்.

பெருங்காயத்துக்கு ஜே போடுவதால் என்ன பலன்? அதுக்கும் நாட்டுக்கும் என்ன சம்பந்தம் என்பதை எல்லாம்பற்றி தலைவரும் யோசிப்பதில்லை, தோழர்களும் யோசிப்பதில்லை.

தமிழ் நாட்டில் ஒரு பெரிய தலைவர் என்று பேர் பெற்றவர், என்னுடைய நண்பர் வீட்டுக்கு வந்திருந்தார். என்னுடைய நண்பர், "என்னய்யா இது! இந்த அபத்தத்தைச் சொல்லிக்கொண்டு அலையலாமா? சுத்த அபத்தமாச்சே!' என்றதற்கு, "ஆமாங்க. அது அபத்தம்தான். ஆனால், ஒருத்தன் கிழக்கே போ என்று சொன்னால், எல்லோரும் கிழக்கே போக ஆரம்பித்தால், கட்சி எப்படி உண்டாகும்? மேற்கே போ என்று சொன்னால்தானே கட்சிங்க" என்று பதில் சொன்னார்.

இது மாதிரி வள்ளுவர் காலத்திலும், பொது வாழ்க்கையில் அபத்தம் ஏறிப்போய் நின்றது. அதனால் ஜனங்களுடைய மனதில் குழப்பம், தெளிவே இல்லை. இதை எல்லாம் பார்த்தார் வள்ளுவர். "ஏது, ரொம்ப மீறியல்லவா போய்விட்டது? தமிழ்ப் பண்பாட்டுக்கே பங்கம் வந்துவிடுமே!" என்று பயந்து, ஓர் அதிகாரமே வகுத்துவிட்டார். எதற்கு? 'பயனில சொல்லாமை' என்று ஓர் அதிகாரம், அதில் பத்துக் குறள்.

பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

பெருங்காயத்துக்கு ஜே போடுகிறானே, அவனைப் பாராட்டுகிறவனை மனிதன் என்று சொல்வது எல்லாம் உபசார வழக்குதான். மனித சமுதாயத்தின் பதர் என்று சொல்வதற்குப் பதில், மரியாதைக்காக, அவனையும் மனிதன் என்று சொல்ல வேண்டி இருக்கிறது. எவ்வளவு காரத்தோடு வருகிறது குறள்.

இந்தக் குறளைப் படிக்கும் போதெல்லாம் எனக்கு அதிசயமாக இருக்கிறது. இந்தக் குறளைச் சொல்லும்படி தூண்டிய நாகரிகம் எவ்வளவு சிக்கல் உள்ளதாகவும் முறுக்கேறியதாகவும் இருந்திருக்க வேண்டும். 2000 வருஷங்களுக்கு முன்பே, தமிழ்நாடு சிக்கல் விழுந்த நாகரிகத்தை அடைந்திருந்தது. சூதும், வாதும், பொய்யும், அதோடு உயர்ந்த பண்பாடும், கருணையும், ஒளியும், நிழலும்போலப் பின்னிக் கிடந்தது. தற்கால ஃபிரான்ஸ் எவ்வளவு பண்பாட்டோடு திருகுமுறுகலாகவும் விளங்குகிறதோ அவ்வளவு பண்பாடும், அவ்வளவு திருகுமுறுகலும், தமிழ் நாட்டில் இருந்தது 2000 ஆண்டுகளுக்கு முன்னாலேயே.

15. தவம்

மனித மனம் அலட்டிக்கொண்டே இருக்கிறது, ஒரு நிலையில் நிற்பதில்லை. போதாக்குறைக்கு, மனித உடலிலே ஐந்து மடைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன, ஐம்புலன்களாகிய மடைகள். இந்த மடைகள் வழியாக உலகச் செய்திகள், மனதுக்குள் பாய்ந்த வண்ணம் இருக்கின்றன. புறச்செய்திகள் வந்து பாயாமல் இருக்கும் போதே, இந்த மனம் மறுகுவதும், மயங்குவதுமாக இருக்கும். வெளிச் செய்திகள் வேறு மனதைத் தாக்கியவுடன், சொல்லவே வேண்டியதில்லை. ஒரே குரங்கு ஆட்டந்தான்!

இந்தக் குரங்கு ஆட்டத்தை மட்டுப்படுத்தி மனதை ஒரு நிலையில் நிறுத்துவதுதான் தவம். தவத்தின் மூலம் சிதறுண்டு கிடக்கும் சக்திகள் ஒருமுனைப்படுகின்றன; என்றும் இல்லாத ஆற்றல் தவத்தால் நமக்குக் கிட்டுகிறது.

நில் என்று சொல்லி மனம் நிலைநிறுத்த வல்லார்க்குக்
'கொல்' என்று வந்த யமன் குடியோடிப் போனானே

-என்று சொன்னார் ஒரு சித்தர். நோற்றலால், அதாவது, தவத்தால் ஏற்படும் ஆற்றல் எப்படிப்பட்டது என்றால், கூற்றத்தையே அது உதைத்துத் தள்ளிவிடுமாம்.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

-என்று சொன்னார் வள்ளுவர்.

நம் உள்ளத்தில் தூய்மையும், கட்டுப்பாடும் வளர வளர, நம் எண்ணத்துக்கே வலுவேறுகிறது. உலக நிகழ்ச்சிகளையே பாதிக்கும் சக்தி நம் கருத்துக்களுக்கு ஏற்படுகிறது. ஜட உலகத்தில் அணு குண்டுக்கு இருக்கும் ஆற்றலைக் காட்டிலும் வன்மையுடையது நோன்பிருந்து, மனதைக் கட்டுப்படுத்தியவனுடைய எண்ணம். பகைவர்களை அழிக்கும் சக்தி அதற்கு இருக்கிறது. நண்பர்களுக்கு ஆக்கம் கொடுக்கும் சக்தியும் அதற்கு இருக்கிறது.

இந்த உண்மையை ஒரு குறள் கூறுகிறது:

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தால் வரும்.

'வேண்டியதை வேண்டியபடி எல்லாம் அடையும் சக்தியைத் தவம் நமக்குக் கொடுக்கிறது. ஆகையால், இப்போதே, இங்கேயே தொடங்குங்கள் உங்கள் தவத்தை' என்று கட்டளை போடுகிறார் வள்ளுவர்.

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

தவத்தின் சக்தி இவ்வளவு சிறப்பானது என்று தெரிந்தும், அதை மேற்கொள்ளாமல் இருக்கிறார்களே மக்கள்! இதன் காரணம் என்ன என்று வள்ளுவர் அதிசயிக்கிறார். அவருக்குச் சிரிப்பு வருகிறது. நகைச்சுவையோடு ஒரு காரணத்தைக் கற்பிக்கிறார். தவம் செய்யும் துறவிகளுக்கு. உணவு முதலிய வசதிகள் செய்ய வேண்டும். அவர்களைப் போற்ற வேண்டும். நாமும் தவம் செய்யத் தொடங்கிவிட்டால் துறவிகளைப் பேணுவதற்கு ஆள் இல்லாமல் போகுமே என்று நினைத்து, அவர்கள் தவத்தைக் கைவிட்டுவிட்டார்களோ? தவசிகளை மதிப்பது அவர்களுடைய

தவத்துக்காக. அப்படியானால் தவசிகளை மதிப்பதிலேயே பொழுதைப் போக்கிவிட்டு, தவச்செயல் செய்வதை அவமதிக்கலாமா என்று கேட்கிறார்.

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்?

சுவையான கேள்வி இது!

16. புலால் மறுத்தல்

தன்னலக் கலப்பு இல்லாத அன்பை அருள் என்று சொன்னார் வள்ளுவர். அருளால் நிறைந்து ததும்புகிறவர்கள் எப்படி இப்பார்கள், அவர்களுடைய வாழ்க்கை முறை எவ்வாறு இருக்கும் என்பதை இந்த அதிகாரத்தில் விளக்குகிறார். இன்னொரு உயிருக்குத் துன்பம் வந்தால் அருளாளர்கள் அதைச் சகிக்க மாட்டார்கள். நாம் எல்லாம் நமக்கு அல்லது நம் குடும்பத்துக்குத் துன்பம் வந்தால் பதைபதைப்போம்; அயலானுக்கு வந்த துன்பம் நம்மைப் பாதிப்பதில்லை. அருளாளர்கள் அப்படியிருக்க மாட்டார்கள்.

He is the truly cultured man who has a sense of contemporary tragedy என்று சொன்னார் ஆங்கில அறிஞர் ஒருவர். நாம் வாழும் இந்த உலகத்தில் தொலை தூரத்துக்கு அப்பால் உள்ள ஒரு நாட்டில் ஓர் உயிர் அல்லல் உறுகிறது என்று தெரிந்தால், அவர்களுக்கு உறக்கம் வராது. பங்களாதேஷில் லட்சக்கணக்கான மக்கள் அல்லல் படுகிறார்களே, வியட்நாமில் குருதி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறதே என்று நாள்தோறும் கேட்டுக்கொண்டு இருக்கும் நாம் குத்துக்கல்லாக அல்லவா இருக்கிறோம்? கொஞ்சங்கூட நமக்கு மன வேதனை ஏற்படுவதில்லை. எல்லாம் கருணை இல்லாத காரணந்தான்.

"உன் உடம்பைக் கொழுக்க வைப்பதற்காக இன்னொரு உடம்பைக் கொன்று, நெய்யும், கடுகும் போட்டுத் தாளித்து உண்கிறாயே நீ. உனக்கெப்படி அருள் உண்டாகும்?" என்று கேட்கிறார் குறளாசிரியர்.

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?

-என்றார்.

உலக மக்கள் அமைதியாக, இன்பமாக வாழ வேண்டும் என்றால், ஒவ்வொருவரும் பிற உயிர்களை மதிக்க வேண்டும், போற்ற வேண்டும். அதுவே அறங்களில் எல்லாம் தலையாய அறம். பிற உயிர்களை மதிக்காவிட்டாலும் துன்புறுத்தாமலாவது இருக்கலாம். துன்புறுத்தாமல் இருந்தாலே அதை அறவினை என்று சொல்லலாம். அப்படிச் செய்யாமல், பிற உயிர்களைக் கொன்றால், தின்பதற்காகவே கொன்றால், பிற உயிர்களை அவமதிக்கும் குணமே நம்மிடம் வளர்ந்து பெருகும். பிறரை அவமதிப்பதில் இருந்து முளைப்பவைதான் மற்ற கெட்ட குணங்கள் எல்லாம்.

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

கொலைகாரன் வாழ்க்கைப் பிரச்னைகளை அணுகும் முறையே அலாதியாக இருக்கும்; ஈவு, இரக்கம் இல்லாமல் அணுகுவான். ஆனால், கொல்லாமையை விரதமாக மேற்கொண்டவன் வாழ்க்கைப் பிரச்னைகளைக் கருணையோடு, பரிவோடு, தியாக புத்தியோடு அணுகுவான். மனித வாழ்க்கை பக்திக்கும், வணக்கத்துக்கும் உரியது என்று அவன் எண்ணுவான். இப்பேர்ப் பட்ட பக்தனை, தியாகியை உலகங்கள் எல்லாம் கைகூப்பித் தொழும் என்று உறுதி கூறுகிறார் வள்ளுவர்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

'நான் கொல்லவில்லையே. மற்றவன் கொன்ற பிராணியின் புலாலைத்தானே விலைகொடுத்து வாங்கி உண்கிறேன்' என்று வாதம் செய்கிறோம் நாம். வள்ளுவருடைய எதிர்வாதம் இது: ஊன் தின்பதற்கு ஆள் இல்லை என்றால், அதை விற்றுப் பிழைப்பவர்களும் இல்லாமல் போவார்கள்.

தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

பொல்லாத ஆசாமி இந்த வள்ளுவர்! வாதத்தாலும் அவரை வெல்ல முடியாது!

17. அருளுடைமை

'இந்த எலும்புக்கூட்டுக்குள்ளே எப்படி உயிர் வந்து குந்திக் கொண்டது? இதன் மர்மம் என்ன?' என்பதை ஆராயப் புகுந்தார்

வள்ளுவர். பொருந்தாத இந்த இரண்டு சரக்குகளையும் பொருத்தி வைத்தது 'அன்பு' என்ற சக்திதான் என்று முடிவு கட்டினார்.

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு

-என்பது வள்ளுவர் தீர்ப்பு.

ஆனால், உடம்புக்குள் அடைபட்ட உயிர் ஊனுடம்புக்குக் குற்றேவல் செய்யத் தொடங்குகிறது. உடம்பேதான் உயிர் என்று கூட நாம் மயங்குகிறோம்.

இப்படி மயங்கும் நமக்கு வாழ்க்கையில் பல திறம்பட்ட உறவுகள் ஏற்படுகின்றன. தாய், தகப்பன், உடன்பிறந்தோர், மனைவி, மக்கள், சுற்றத்தார், சமுதாயம், நாடு, உலகம் இப்படியாக நம் உறவுகள் விரிந்துகொண்டே போகின்றன. நம் உறவு விரிய விரிய, நமக்காகவே நாம் வாழ்கிறோம் என்ற உணர்வு தேய்ந்து கொண்டே போகிறது.

தொடக்கத்தில், ஆணவத்தை, அதாவது நம்மையே அடிப்படையாகக்கொண்டு இருந்த அன்பு, நாளாவட்டத்தில் பிறர் நலத்தையே அடிப்படையாகக்கொண்ட அன்பாக மலர்கிறது, மலர வேண்டும். தன்னலமற்ற இந்த அன்பையே அருள் என்று அழைக்கிறார் வள்ளுவர்.

அன்புக்கும், அருளுக்கும் உள்ள வேற்றுமையை ஓர் உதாரணத்தின் மூலம் விளக்கிக்கொள்ளலாம். ஆதியில் மகாத்மா காந்திக்கு உறுதுணையாக இருந்தவர்கள் இருவர். முகமத் அலி, ஷௌகத் அலி என்ற சகோதரர்கள். பிற்காலத்தில் அவர்கள் மகாத்மாவைப் பிரிந்து அவருக்கு நேர் விரோதிகள் ஆனார்கள். பிரிவுக்கு என்ன காரணம்? அலி சகோதரர்கள் காந்திஜியிடம் அளவு கடந்த பற்று வைத்திருந்தார்கள். ஏகபோக உரிமையோடு அவரது நட்பை அனுபவிக்க வேண்டும் என்று துடித்தார்கள். காதலனுக்குக் காதலியிடம் இருக்கும் அன்பைப் போன்றது அவர்களுடைய அன்பு. ஆணவத்தை அடிப்படையாகக்கொண்ட அன்பு அது. கற்கண்டைக் கண்டதும் சப்புக் கொட்டுகிற குழந்தையின் அன்பைப் போன்றது அது.

'கற்கண்டு எனக்கு ருசியைக் கொடுக்கிறது. அதனால் அது எனக்கு வேண்டும். கற்கண்டு என்னைப்பற்றி என்ன நினைக்கிறது என்பதைப்பற்றி நான் சிந்திப்பது இல்லை.' அலி சகோதரர்களுடைய அன்பின் நிலை இப்பேர்ப்பட்டது.

இதேவிதமான அன்பை காந்திஜியும் தம்மிடம் செலுத்துவார் என்று எதிர்பார்த்து அவர்கள் ஏமாந்தார்கள். ஆனால்,

மகாத்மாவோ ஆணவச் சிறையினின்றும் விடுதலை அடைந்தவர். ஆணவமற்ற அன்பு, அவருடைய அன்புதான். தன் குடும்பம், தன் சமுதாயம், தன் நாடு, எல்லாவற்றையும் கடந்து நின்றது அவருடைய அன்பு. 'எல்லோரிடத்திலும் செலுத்துகிற அன்பைத்தானே இவர் நம்மிடம் செலுத்துகிறார். நமக்கென்று தனி அன்பைக் காட்டவில்லையே' என்று மனம் நொந்துகொண்டார்கள் அலி சகோதரர்கள்.

தன்னலமற்ற காந்திஜியின் அன்பைத்தான் அருளுக்கு உதாரணமாகச் சொல்லலாம். நவகாளியில் இந்து - முஸ்லிம் கலகம் நடந்தது. அந்தக் கலகத்தில் தலையிட்டால் தம் உயிருக்கு அபாயம் ஏற்படுமே என்று அவர் தயங்கவில்லை. அருள் வெள்ளத்தில் குதிப்பதுபோல் குருதி வெள்ளத்தில் குதித்தார்! மற்ற உயிர்களைப் போற்றி வாழும் அருளாளர்களுக்கு, தம் உயிரைப்பற்றிக் கவலை இல்லை; அச்சம் இல்லை. இந்த உண்மையை எவ்வளவு உணர்ச்சியோடு எடுத்துச் சொல்கிறார் குறளாசிரியர்!

மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

18. சொல் வன்மை

நா*நலம் என்னும் நலனுடைமை அந்நலம்*
யாநலத்து உள்ளதூஉம் அன்று.

- என்பது குறள்.

ஒரு மனிதனுக்குப் பலவித செல்வங்கள் இருக்கலாம். பொருட் செல்வம், அறிவுச் செல்வம், மக்கட் செல்வம், பதவிச் செல்வம் என்று விதவிதமான செல்வங்கள். அந்தச் செல்வங்களை எல்லாம் ஒரு தலைப்பின் கீழ் பட்டியல் போட்டு எழுதலாம். ஆனால், சொல் வன்மை என்ற செல்வம் மேற்சொன்ன செல்வங்களோடு சேரக்கூடியதல்ல. மேற்படி செல்வப் பட்டியலுக்கு எல்லாம் அடங்காத ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அதற்கு ஈடு அதுவேதான் என்று 2000 ஆண்டுகளுக்கு முன்னரேயே கண்டு கொண்டார் வள்ளுவர். பேச்சுத் திறனால், நாவினால் ஏற்படுகிற அந்தச் செல்வத்துக்கு நாநலம் என்ற பெயரைச் சூட்டி அதைப் பாராட்டும் வள்ளுவருடைய அருமைப்பாடு வியக்கத்தக்கது. வள்ளுவருக்குப் பின் வந்த கம்பரும் நாநலத்தால் விளையும் இன்பத்தைச் சொல்லின் செல்வம் என்று சிறப்பித்து இருக்கிறார்.

சொல் வன்மை உடையவர்களை இந்தக் காலத்து உலகமும் மதிக்கிறது. மகாகனம் வி.எஸ்.சீனிவாச சாஸ்திரியார், சர் ஏ.ராமசாமி முதலியார், சத்தியமூர்த்தி, கட்டமஞ்சி ராமலிங்க ரெட்டி, சர் சி.பி.ராமசாமி ஐயர் முதலியோருடைய பேச்சுக்களைக் கேட்டவர்களுக்குத் தெரியும், நாநலத்தின் பெருமை. குயவன் களி மண்ணைக்கொண்டு பானை வனைவதைப்போல ஆயிரக் கணக்கான மக்களுடைய எண்ணங்களைத் தங்கள் இச்சைக்கு ஏற்ப வனைந்துவிடுவார்கள் அந்தப் பெரும் பேச்சாளர்கள்.

வெற்றிகரமான பேச்சாளர்களுடைய தந்திரங்களை எல்லாம் ஒருமிக்க ஓரிடத்தில் காண விரும்பினால், சிசெரோ (Cicero) பேசிய 57 பேச்சுக்களைப் (Orations) படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

பல பட்டங்கள்கொண்ட ஒரு பிரச்னையின் ஒரு பட்டத்தை மாத்திரம் எடுப்பாகச் சொல்லி, உணர்ச்சியோடு பேசி மற்றப் பட்டங்களை நாம் மறக்கும்படி செய்தல். நகைச்சுவையோடு பேசியும், சுவையான கதைகளைச் சொல்லியும் கேட்போருடைய இதயத்துக்குக் களிப்பூட்டுதல், மக்களுடைய உணர்ச்சிகளை, நாட்டுப் பற்றை, மொழிப் பற்றை, பக்தியை, ஆணவத்தைக் கிளறிவிட்டு அவர்களைத் தன் வசப்படுத்துதல். அரசியலில் அல்லது நீதிமன்ற வழக்குகளில் தன்னை எதிர்த்து நிற்பவர்களுடைய ஒழுங்கீனத்தை அல்லது ரகசியக் குற்றங்களை தாட்சண்யம் இல்லாது வன்கண்மையோடு வெளிப்படுத்துதல். தனக்குப் பிரதிகூலமாக இருக்கும் அம்சங்களைக் கவனிக்காமல் பொது மக்களுடைய கவனத்தைத் திறமையாகத் திசை திருப்பிவிடுதல். படாடோபமான கேள்விகளைச் சரமாரியாகப் பொழிந்து பதில் சொல்ல முடியாமல் எதிரியைத் தத்தளிக்க வைத்தல். எதிரியின் மீதுள்ள குற்றச்சாட்டுகளை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கிக்கொண்டே போய் எதிரியைத் திணற வைத்தல். குற்றச்சாட்டின் கம்பீர வாக்கியங்களை அடை மழைபோல எதிரி மேல் பொழிந்து எதிரியைத் திக்குமுக்காட வைத்தல். ஒவ்வொரு வாக்கியத்தின் ஒவ்வொரு சொற்றொடரும் சவுக்கடிபோலச் சுளீர் என்று பகைவனின் முதுகில் விழச்செய்தல். ஒரு சொல்லைச் சொல்லி ஒருவனைப் பாதாளம் வரை தாழ்த்தி விடுதல்.

இத்தகைய பேச்சுத் தந்திரங்களை எல்லாம் சிசெரோவின் பேச்சுகளில் மாத்திரமல்ல, தற்கால அரசியல் பேச்சாளர்கள், சிறந்த வழக்கறிஞர்கள் முதலியோருடைய பேச்சுக்களிலும் கையாளப்படுவதைப் பார்க்கலாம்.

காலஞ்சென்ற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரும் ப.ஜீவானந்தமும் பேசும்போது நீண்டு உயர்ந்த ஓர் எரிமலை

வானளாவ எரியைக் கக்கிகொண்டும், புகையை ஏப்பம் விட்டுக் கொண்டும், புகையினூடே மின்னல்களை மிளிரச் செய்துகொண்டும் இருப்பதுபோலத் தோன்றும். அவர்கள் இருவருமே அவரவர்களுடைய கொள்கையில் வேரூன்றி நின்றவர்கள். அவர்களுடைய பேச்சில் உண்மை ஆவேசத்தையும், உணர்ச்சியின் சூறாவளியையும் காணலாம். தர்க்கம், நாடகம், கற்பனை, ஆர்வம், கவிதை, ஆரவாரம், வசவு, மறைமுக நிந்தனை ஆகிய பல கருவிகளை அவர்கள் பேச்சில் பயன்படுத்தி, கேட்போருடைய உள்ளத்தைப் பறித்துகொண்டு போய்விடுவார்கள்.

மகாகனம் சாஸ்திரியார் பேசும்போது, குரலை நிலவரத்துக்கு ஏற்ப, ஏற்றியும் தாழ்த்தியும், ரகசியம் பேசும்போதுள்ள ஈன ஸ்வரத்துக்குக் கிழே குரலைக்கொண்டுவந்தும், சீற்றமுள்ள சிங்கம் கர்ஜனை செய்யும்போதுள்ள மேல் ஸ்தாயி வரைக்கும் குரலை ஏற்றியும் ஒரு குறளி வேலையே செய்வார். 1934-ல் சென்னை சட்டக் கல்லூரியில் அவர் பேசிக்கொண்டு இருந்தார். இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறதோ என்ற பயத்தை, கேட்பவர்களுக்கு எல்லாம் உண்டாக்கினார். பேசிக்கொண்டு இருக்கும்போதே திடீரென்று பேச்சை நிறுத்திவிட்டு, தான் கொண்டுவந்திருந்த ஊன்றுகோலை மேஜையில் ஓர் உருட்டு உருட்டினார். அது அங்குமிங்கும் உருண்டு துடிக்கும்போது கேட்போருடைய இதயங்களும் சேர்ந்து துடித்தன. இப்படி எல்லாம், கேட்போர் உள்ளங்களை ஒரு வீணையாகவும், தம்மை வீணையில் மேவும் விரலாகவும் வைத்து கச்சேரி செய்யத் தெரிந்தவர் சினிவாச சாஸ்திரியார். அதனால்தான், இங்கிலாந்தின் பெரிய மேதாவிகளில் ஒருவரான பர்க்கென்ஹெட் பிரபு (Lord Birkenhead), "சாஸ்திரியின் பேச்சைக் கேட்பதற்கு ஏழு மைல்கூட நான் நடந்துசெல்வேன்" என்று சொன்னார்.

பேச்சுத் திறத்தால் கிடைக்கும் புகழ் அலாதியானது, மதிக்க முடியாதது. ஆகவேதான் வள்ளுவர் அந்தக் குறளைச் சொன்னார்.

நல்ல பேச்சாளன் யார் என்று வள்ளுவரிடம் கேட்கிறோம். பேச வேண்டாத நேரத்திலே, பேச வேண்டாத இடத்தில் வாயைப் பொத்திக்கொண்டு இருக்கத் தெரிந்தவன்தான் நல்ல பேச்சாளன் என்று சொல்கிறார் வள்ளுவர்.

சிலருக்குப் பொதுமேடையைக் கண்டுவிட்டால் போதும், மேடைக் காமம் அவர்களைப் பற்றிக்கொண்டு பாடாகப் படுத்தி விடுமாம். மேடையில் ஏறி மணிக்கணக்காக ஓயாமல் கத்தினால் ஒழியத் தீராது அந்த வெறி. நாநலம் படைத்தவர்கள் அப்படிச்

செய்வதில்லை. ஆனால், ஒரு சபை முன்னால் நின்று பிழை இல்லாமல் இரண்டு சொல்கூடப் பேசத் தெரியாதவர்கள்தாம் இப்படி நடப்பார்கள்.

பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

தொண தொண என்று சதா பேசிக்கொண்டு இருந்த ஓர் இளைஞனைப் பார்த்து, ஜீனோ என்ற தத்துவ ஞானி, "நமக்கு இரண்டு காதுகளைக் கொடுத்த கடவுள் ஒரு வாய் மாத்திரம் கொடுத்து இருப்பதற்குக் காரணம் தெரியுமா? கேள்வி ஞானத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்காக இரு காதுகளையும், பேச்சைக் குறைக்க வேண்டும் என்பதற்காக ஒரே வாயையும் நமக்குக் கடவுள் கொடுத்து இருக்கிறார்" என்றார்.

ஜீனோ என்ன உபதேசம் செய்தாலும் குறை குடங்கள் கூத்தாடிக் கொண்டேதான் இருக்குமாம். கற்றவர் நிறைந்த சபையாயிற்றே இது, இங்கே நம்முடைய ஊத்தை வாயைக் காட்டக் கூடாதே என்று நினைக்க மாட்டார்கள். ஏதோ உயர்ந்த தத்துவங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு இருப்பார்கள் அறிஞர்கள். அவர்களை இடைமறித்து, தன் மண்டைக்குள் இருக்கும் குப்பையை தன் வாய் வழியாகக் கொட்டுவானாம் அந்த அசடு. தன் அசட்டுத்தனத்தை வெளிக்காட்டாமல் தன் மனதையும், வாயையும் பொத்திக்கொள்ளத் தெரிந்தவனை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம் என்கிறார் வள்ளுவர். வள்ளுவர் பார்வையில், உண்மையான கல்வியைக் கற்காதவர் எல்லோரும் கெட்டவர்கள். அந்தக் கெட்டவர்களையும் மிக்க நல்லவர்கள் என்று மெச்சிப் புகழலாம். எப்போது? கற்றவர்கள் முன்னால் மௌனமாக இருக்க அவர்கள் கற்றிருந்தால்! கல்லாதவர் முன்னால் எப்படி வேண்டுமானாலும் ஜிஞ்சாமிர்தம் பண்ணிக்கொள்ளட்டும்.

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லாது இருக்கப் பெறின்.

அந்த அசட்டுத்தனம் அந்தக் கல்லாதவரையும் சொல்லாமல் இருக்கும்படி அனுமதித்துவிட்டது என்றால், "மிக்க நல்லவர்கள் நீங்கள். பலே, பேஷ்" என்று சொல்லி, அவர்கள் முதுகைத் தட்டிக் கொடுக்கலாம்.

பாவம்! 2,000 ஆண்டுகளுக்கு முன்னால் வள்ளுவர் அசடுகளால் இப்படிக் கஷ்டப்பட்டு இருக்கிறார்.

ரசூல் கம்சதோவ் (Razul Gamzatov) என்ற ரஷ்ய அறிஞர், "நாவினால் பேசப் பழகுவதற்கு ஒரு குழந்தைக்கு இரண்டு

ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், நாவை அடக்கிப் பழகுவதற்கோ ஒரு மனிதனுக்கு 60 ஆண்டுகள் ஆகின்றன" என்றார்.

இந்த நாவடக்கத்தை எளிதில் பெற்றுவிட முடியாது. ஒரு கட்டுப்பாட்டில் இருந்துதான் இந்த அடக்கத்தைப் பெறலாம். மனதைக் கட்டுப்படுத்தி ஒரு தவம் செய்ய வேண்டும்; அந்தத் தவத்தின் பலனாகக் கிடைக்குமாம் ஒரு செறிவு. 'முந்து கிளவாச் செறிவு' என்று ஓர் அழகிய சொற்றொடரைப் பயன்படுத்துகிறார் வள்ளுவர். அனுபவத்தால், அறிவால் முதிர்ந்தவர்கள், முதுவர் முன், முந்திரிக்கொட்டை மாதிரி வாய்க்கு வந்ததைப் பேசாமல் தன்னை அடக்கிக்கொள்ளும் செறிவை, ஆண்மையை, முதுவர் முன் முந்து கிளவாச் செறிவு என்று போற்றுகிறார் வள்ளுவர். பல பழக்கங்களை நன்றென்று போற்றுகிறோம். அப்படிப் போற்றப் படுகிற நன்றுள் எல்லாம், நல்லதாம் இந்த முந்து கிளவாச் செறிவு.

நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

இந்தக் குறளுக்குள் இருக்கும் கிண்டல், எரிச்சல், நகைச்சுவை, நாகரிகம் எல்லாவற்றையும் பார்த்துச் சுவைத்துக்கொண்டே இருக்கலாம்.

ஒவ்வொரு குறளுக்குப் பின்னாலும் ஓர் ஆயுட் கால அனுபவம் கிடக்கிறது. ஒவ்வொரு குறளையும் தோண்டித் தோண்டிப் பார்த்தால்தான் அதற்குள் இருக்கும் புதையல் நமக்குக் கிடைக்கும். வள்ளுவர் மாசற்ற காட்சியுடையவர். மாசற்ற காட்சி உடையவர்கள் தாம் அவருடைய குறளுக்குப் பொருள் சொல்லத் தகுதி உடையவர்கள்.

சொல் வன்மை என்ற அதிகாரத்தில் ஓர் அதிசயமான குறள் வருகிறது. அதற்குப் பல புலவர்கள் பலவிதமாக உரை கண்டு இருக்கிறார்கள். ஆனால், எனது அரிய ஆசானும் நண்பருமான ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் கண்ட உரைதான் உண்மையோடு ஒட்டிய உரை; உண்மை உணர்வுடையவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உரை.

கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

- என்பது குறள். நாநலம் எப்படி இருக்கும் என்ற கேள்விக்கு இந்தக் குறளில் விடை கூறுகிறார் குறளாசிரியர்.

ஓர் உரையாசிரியர் இந்தக் குறளுக்குக் கூறிய உரை இது:

கேட்டார்ப் பிணிக்குத் தகையவாய் இருக்க வேண்டும் சொல். அதாவது பேச்சாளனுடைய பேச்சானது அதைக் கேட்டவர்களுடைய உள்ளத்தை எல்லாம் பிடித்து ஈர்க்க வேண்டும். சரி, அடுத்தபடியாக.

'கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்' என்று சொல்லித் தொலைத்து இருக்கிறாரே வள்ளுவர். அதற்கென்ன பொருள் என்று கேட்டால், அந்த உரை ஆசிரியர் சொல்கிறார்: பேச்சைக் கேட்காதவர்கள், பேச்சைக் கேட்டவர்களிடத்தில் அதைப்பற்றிக் கேட்டறிந்து, அடடா! நாம் அந்தப் பேச்சைக் கேட்காமல் போனோமே என்று அங்கலாய்ப்பார்களாம். பேச்சுக்கு இலக்கணம் கூறும்போது, பேச்சைக் கேளாதவனும் விரும்பும்படியாகப் பேச வேண்டும் என்று சொல்வதில் பொருத்தமில்லை.

இந்த இக்கட்டான நிலைமையில் இன்னோர் உரையாசிரியர் வேறோர் உரையைச் சொன்னார். என்ன சொன்னார்?

கேட்டார் என்றால், நண்பர்கள் என்று பொருள். கேளார் என்றால் பகைவர்கள் என்று பொருள். பேச்சு நண்பர்களை எல்லாம் பிணிக்கும் தகையதாகவும், பகைவர்களும் அதை விரும்பிக் கேட்கும் தன்மையதாகவும் இருக்க வேண்டும் என்றார் இரண்டாவது உரையாசிரியர். முதல் உரையைக் காட்டிலும் இரண்டாவது உரை, கொஞ்சம் கெட்டிக்காரத்தனமாகத்தான் இருக்கிறது. ஆனால், இயல்பாக இல்லை.

இனி, ரசிகமணி டி.கே.சி-யின் உரையைக் கேட்போம். வாழ்க்கையோடு அவர்கள் குறளைப் பொருத்திக் காட்டும்போதுதான் நமக்கு அது விளங்குகிறது.

தற்காலத்தில் நன்றாகக் கற்றவர்களைப் படித்தவர்கள் என்று சொல்கிறோம். அச்சடித்த நூல்கள் ஆயிரக்கணக்கானவை நமக்குக் கிடைத்து இருக்கின்றன. ஆகவே, அவற்றைப் படித்து நம் கல்வியைப் பெருக்குகிறோம். 2,000 ஆண்டுகளுக்கு முன், அதாவது வள்ளுவர் காலத்தில் அச்சுப் புத்தகங்கள் கிடையாது. எழுத்தாணியினால் பனை ஓலைகளில் எழுதிய சுவடிகள் இருந்த காலம். அபூர்வமாக ஊருக்கு ஒரு சுவடி இருக்கும். ஆகவே, செவி வழியாகக் கேட்டுக் கேட்டு கல்வியைப் பெருக்கிக்கொண்ட காலம் அது. கல்வி எல்லாம் கேள்வியை அடிப்படையாகக்கொண்டு இருந்தது. புத்தகப் படிப்பு குறைவுதான். ஆகவே, அந்தக் காலத்தில் கற்றவர்களைக் கேட்டார் என்றும், கல்லாதவர்களை கேளார் என்றும் அழைத்தார்கள்.

2,000 ஆண்டுகளுக்கு முன் தமிழ்ச் சொல்லுக்கு இருந்த பொருளை உணர்ந்தால்தான் இந்தக் குறளுக்குப் பொருள் தெரியும்.

அதோடு 19-வது நூற்றாண்டில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். டிண்டால் (Tyndal) என்ற ஒரு பெரிய ஆங்கில விஞ்ஞானியை நியூயார்க்குக்கு அழைத்து, விஞ்ஞானத்தைப் பற்றிப் பேசச் சொன்னார்கள். 5 பேச்சுக்களைப் பேசினார் டிண்டால். நியூயார்க் சுற்று வட்டாரத்தில் இருந்த ஆடவர், பெண்டிர், குழந்தைகள் எல்லோரும் இந்தப் பேச்சுக்களைக் கேட்டார்கள். விஞ்ஞானத் துறையில் சிறந்த ஆராய்ச்சி செய்து கொண்டு இருந்த விற்பன்னர்கள் பலரும் அந்தப் பேச்சுக்களைக் கேட்டார்கள். விஞ்ஞான நிபுணர்களுக்குக் கண்ணைத் திறந்துவிட்ட மாதிரி இருந்தன டிண்டாலுடைய பேச்சுக்கள். அப்படியே பரவசமாகிவிட்டார்கள். கற்றவர்களல்லவா அவர்கள்? அதாவது, கேட்டார் என்று அவர்களைச் சொல்ல வேண்டும்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் இருந்தது டிண்டாலுடைய சொல். விஞ்ஞானத் துறையில் பழக்கமே இல்லாத பாமர மக்களும், அதாவது, கேளாரும் அவருடைய பேச்சுக்களைக் கேட்டு, இன்னும் 'பேச மாட்டாரா!' என்று மூக்கில் விரலை வைத்துக்கொண்டு நின்றார்களாம்.

முதல் இரண்டு உரைகளோடு டி.கே.சி. உரையை ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும், டி.கே.சி. மாசற்ற காட்சி உடையவர்கள் என்று.

19. காதற் கவிஞன் பாரதி

மனிதனுடைய குடுமியைப் பிடித்து ஆட்டுவிக்கும் மாபெரும் சக்திகள் இரண்டு - பசியும் காமமும். சூரிய அஸ்தமனத்தை அந்த சாம்ராஜ்யத்தில் பார்க்க முடியாது என்ற அளவுக்குப் பரந்து விரிந்து கிடந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். அந்த சாம்ராஜ்யம் உண்டாவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது பிரிட்டிஷ் மக்களுடைய பசி. உணவுப் பொருள்கள் கிடைக்காத சின்னஞ்சிறு தீவில் அவர்கள் வாழ்ந்தார்கள். உணவு தேடும் வேட்டையில் கிடைத்ததுதான் அந்த சாம்ராஜ்யம்; பசியிலிருந்து பிறந்தது அது.

இவ்வாறு பல நூற்றாண்டுகளாக அல்லற்பட்டுத் தேடிய சாம்ராஜ்யத்தை 'தூ'வென்று உதைத்துத் தள்ளிவிட்டார் எட்டாவது எட்வர்ட் மன்னர். அவருடைய தியாகத்துக்குக் காரணமாக இருந்தது அவர் கொண்ட காதல். இப்படியாக, பசியும் காமமும்

மனித வரலாற்றை உருவாக்கும் சக்திகளாக அமைந்து இருக்கின்றன.

இந்த இரண்டு சக்திகளும் முற்றிலும் வேறுபட்ட பண்புடையவை. பசி என்ற சக்தியைத் தீவனம் போட்டுத்தான் அடக்க முடியும். அதை மற்றொன்றாக மாற்ற முடியாது. ஆனால், காமம் என்ற சக்தியின் இயல்பை மாற்றலாம். பனிக்கட்டியை நீராக்கி, நீரை நீராவியாக மாற்றுவதுபோல, காமத்தைத் தியாகமாகவும், வீரமாகவும் பக்தியாகவும் ஞானமாகவும் மாற்றலாம். இந்த ரசவாதத்தை 'சப்ளிமேஷன்' என்று ஆங்கிலேயர் சொல்வார்கள். காமம் இயங்கும் திசையையும் காமுகன் கொண்ட குறிக்கோளையும் மாற்றி அமைத்துவிட்டால், காமம் கவிதையாகவும் கலையாகவும் பக்தியாகவும் ஞானமாகவும் உருமாறிவிடுகிறது.

இதை உணர்ந்த பாரதியார் தம் சுய சரிதையில்,

காதலினால் மானுடர்க்குக் கலவி உண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்,
காதலினால் மானுடர்க்குக் கவிதை உண்டாம்,
கானம் உண்டாம், சிற்ப முதற் கலைகள் உண்டாம்,
ஆதலினால் காதல் செய்வீர், உலகத்தீரே,
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்!
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்,
கவலைபோம், அதனாலே மரணம் பொய்யாம்

-என்றார். காலத்தை வென்று மரணத்தையே பொய்யாக்கும் வல்லமை காதலுக்கு இருக்கிறது என்று துணிந்து கூறுகிறார் பாரதியார்.

இந்தக் கொள்கையைச் செயல் முறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் ஃபிரான்ஸ் நாட்டு மக்கள். பாரீஸ் நகரத்தில், போகும் இடங்களில் எல்லாம் ஒரு விநோத விளம்பரத்தைப் பார்க்கலாம். 'ஃபிரான்ஸ் நாடு காதலர்களை வரவேற்கிறது' என்ற விளம்பரந்தான் அது. இவ்வாறு கலையையும் சமயத்தையும் வளர்ப்பதைப்போலவே, ஃபிரான்ஸ் மக்கள் காதலையும் போற்றி வளர்க்கிறார்கள். இதன் விளைவென்ன? மனித சக்தி, கள்ளங் கபடுகளில் வீண் போகாமல், கவிதைக்கும் கலைக்கும் சமயத்துக்கும் பயன்படுகிறது. பேரண்டத்தின் மையம் என்று தன்னை நினைத்துக் கொண்டு சுயநலத்தில் அழுந்திக் கிடக்கும் மனிதன் காதலின் ஆற்றலால், தன்னை மறந்து, ஆணவப் பிடிப்பிலிருந்து மீறி, சுயநலத் தடிப்புக் குறைந்து, தனக்கு அப்பாற்பட்ட பொருளுக்குப் பக்தி செலுத்தத் தலைப்படுகிறான்; அதற்காகத் தன்னையே தியாகம் செய்கிறான்; வீரம், இரக்கம் போன்ற நல்லுணர்வுகள் அவன்

உள்ளத்தில் பாய்ந்து அவனைப் புனிதப்படுத்துகின்றன; திருகலாகிய சிந்தை திருந்தி நிமிர்கிறது; மனக் கல்லைப் பிசைந்து கனியாக்கி விடுகிறது காதல்.

புதுவையைச் சாளரமாகக்கொண்டு ஃபிரெஞ்சு பண்பாட்டை எட்டிப் பார்த்தவர் பாரதியார். ஆகவே, பாடுகிறார்:

கண்ணைக் காக்கும் இரண்டு இமை போலவே
காதல் இன்பத்தைக் காத்திடுவோமே

'பெண்கள் வாழ்க' என்ற பாடலில் காதல் வீரத்தைப்பற்றி அவர் சொல்கிறார்:

'போற்றி தாய்' என்று தோள் கொட்டி ஆடுவீர்,
புகழ்ச்சி கூறுவீர் காதற் கிளிகட்கே;
நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்,
நுண் இடைப் பெண் ஒருத்தி பணியிலே

'போற்றி தாய்' என்று தாளங்கள் கொட்டடா!
'போற்றி தாய்' என்று பொற் குழல் ஊதடா!
காற்றில் ஏறி அவ் விண்ணையுஞ் சாடுவோம்,
காதற் பெண்கள் கடைக் கண் பணியிலே.

பாரதியார் எழுதிய வசன கவிதையில் எருமை மாடும் நாகண வாய்ப் புள்ளும் ஒரு சுவையான தத்துவ ஆராய்ச்சி நடத்துகின்றன.

"பட்சி ஜாதிகளுக்கு உள்ள சந்தோஷமும், ஜீவ ஆரவாரமும், ஆட்ட ஓட்டமும், இனிய குரலும் மிருக ஜாதிக்கும் மனுஷ ஜாதிக்கும் இல்லையே! இதன் காரணம் யாது?" என்று கேட்கிறது எருமை மாடு.

பதில் சொல்கிறது நாகணவாய்ப் பறவை: "மிருக, மனித ஜாதிகளுக்குள் இருப்பதைக் காட்டிலும் எங்களுக்குள் காதல் இன்பம் அதிகம். ஆதலால், நாங்கள் அதிக சந்தோஷமும், பாட்டும், நகைப்பும், கொஞ்சு மொழிகளுமாகக் காலங் கழிக்கிறோம்."

காதல் இல்லை என்றால் இன்பம் இல்லை, இன்பம் இல்லை என்றால் வாழ்வு இல்லை என்ற கொள்கையை பாரதியார் 'குயில் பாட்டிலும்' அடிக்கடி வற்புறுத்துகிறார்.

காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்

-என்ற பாடல் 'குயில் பாட்டின்' ஆதார சுருதியாக அமைந்த பாடல்.

ஆனால், பாரதியார் புகழும் காதல், கட்டுப்பாடு இல்லாத மிருகக் காதல் அல்ல. 'ஃபிரீ லவ்' என்று ஐரோப்பாவில் வளரும் விடுதலைக் காதலை அவர் வன்மையாகக் கண்டிக்கிறார்.

காதலிலே விடுதலை என்று ஆங்கோர் கொள்கை
கடுகி வளர்ந்திடும் என்பார் யூரோப்பாவில்;
மாதர் எலாம் தம்முடைய விருப்பின் வண்ணம்
மனிதருடன் வாழ்ந்திடலாம் என்பார் அன்னோர்;
வீரம் இலா மனிதர் சொலும் வார்த்தை கண்டீர்!
விடுதலையாங் காதல் எனிற் பொய்ம்மைக் காதல்!

-என்றார்.

பூசல் போராட்டங்களுக்கு எல்லாம் இனிய மாற்றாக அமைவது புனிதக் காதல்தான், பொய்மைக் காதல் அல்ல என்பதைக் கவி மொழியில் கூறுகிறார் பாரதி.

காதலிலே இன்பம் எய்திக் களித்து நின்றால்
கனமான மன்னவர் போரை எண்ணுவாரோ?
மாதருடன் மனம் ஒன்றி மயங்கி விட்டால்
மந்திரிமார் போர்த் தொழிலை மனங் கொள்வாரோ?

இப்பேர்பட்ட காதலைப் பேணி வளர்ப்பதற்குப் பதிலாக, அதை ஒழிக்க முயன்றார்கள் பாரதி காலத்துத் தமிழ் மக்கள். காதலிடத்தில் அவர்கள் காட்டிய போலி வெறுப்புக்குக் காரணம் பொறாமைதான் என்று முடிவு கட்டுகிறார் பாரதி:

பாரினிலே காதல் என்னும் பயிரை மாய்க்க
மூடர் எல்லாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறை தவறி இடர் எய்திக் கெடுகின்றாரே

-என்றார்.

நாடகக் காதலையும் சினிமாக் காதலையும் 'பேஷ், பேஷ்' என்று சொல்லி அனுபவிப்பார்களாம். ஆனால்..?

நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால்
நாட்டினர்தாம் வியப்பு எய்தி நன்றாம் என்பர்,
ஊடகத்தே வீட்டின் உள்ளே, கிணற்று ஓரத்தே
ஊரினிலே காதல் என்றால் உறுமுகின்றார்,
பாடை கட்டி அதைக் கொல்ல வழி செய்கின்றார்

பாரதியாருடைய சித்தாந்தத்தில் கடவுள் நிலை அடைவதற்கே காதல் அவசியமாகிறது.

காதல் செயும் மனைவியே சக்தி கண்டீர்
கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்

-என்று சொல்லி, இந்த உண்மையை வற்புறுத்துகிறார். திருமூலர் கூடச் சிற்றின்ப ஏணியின் துணைகொண்டு பேரின்பத்தை எட்டிப் பிடிக்கலாம் என்ற கருத்துடையவர்.

புணர்ச்சியுள் ஆயிழைபோல் நட்புப்போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்

-என்று ஞானிகளுக்கு இலக்கணம் கூறுகிறது திருமந்திரம்.

ஆணவத்தைக் கரைப்பதற்குக் காதலை ஒரு கருவியாகக்கொண்டு இருக்கிறார்கள் கவிஞர்களும், கலைஞர்களும், பக்தர்களும், ஞானிகளும். கம்பர், காளிதாசன், ஷேக்ஸ்பியர், 'கோதே' முதலிய கவிஞர்கள் காதலுக்கு அடிமையானவர்கள். காதலின் புறச் சின்னங்களையே சிவலிங்கமாகக் கருதி காளிதாசன் பூஜித்தான் என்று பாரதியாரே சொல்லுகிறார்.

மாணிக்கவாசகர் போன்ற ஞானிகளும், காதல் சக்தியை மடை மாறிப் பாயச் செய்து ஞான சக்தியாக மாற்றிக்கொண்டார்கள்.

முழுதயில் வேற் கண்ணியர் என்னும் மூரித் தழல் மூழ்கும்
விழுதனையேனை விடுதி கண்டாய்

-என்று நீத்தல் விண்ணப்பத்தில் இறைவனை வேண்டிக் கொள்கிறார் மாணிக்கவாசகர்.

பார்க்கப்போனால், அலிகளுக்கு ஜீவன் முக்தி கிடையாதுதான். காமம் என்ற மாபெரும் ஆற்றல் இல்லாதவர்கள் அலிகள். அந்த ஆற்றல் இல்லை என்றால், காதலும் இல்லை, வீரமும் இல்லை, ஞானமும் இல்லை. அதி தீவிர ஞானிகள் எல்லோருமே அதி தீவிரக் காமுகர்களாகவே வாழ்க்கையைத் தொடங்கி இருப்பார்கள். கொஞ்சங் கொஞ்சமாகப் புடம் போட்டு, உடலைப் பாதிக்கும் காமத்தை உள்ளத்தில் மாத்திரமே பாதிக்கும் காதலாக மாற்றி, அந்தக் காதலை உணர்வை வளப்படுத்தும் பொருளாக மாற்றி, கவியாகக் கலையாக வடித்து உயிருக்கு இதம் செய்யும் பக்தியாகவும் ஞானமாகவும் ஏவல்கொண்டு இருக்கிறார்கள்.

பாரதியாரும் மேற்சொன்ன பாதையைக் கடைப்பிடித்தவர். 'ஆண்டோர் பத்தினில்' ஏற்பட்ட தன் பிள்ளைக் காதலைப்பற்றித் தன் சுயசரிதையில் பாடி இருக்கிறார். ஒன்பது வயதுப் பெண் ஒருத்தி அவரை என்ன பாடு படுத்தி இருக்கிறாள்!

கயல் விழிச் சிறு மானினைக் காண நான்
காமன் அம்புகள் என்னுயிர் கண்டவே

-என்று ஓலமிடுகிறார். பாட்டனார் பூசை செய்து போட்டுவிட்டுப் போன மலர்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு மிக்க பக்தியோடு தன் காதலியை அணுகினார். இதைக் கண்ட காதலி என்ன செய்தாள்?

பூவை புன்னகை நன் மலர் பூப்பள் காண்

-இவ்வாறு காதல் அர்ச்சனை செய்துகொண்டு இருந்த கவிஞருக்கு இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து வைத்துவிட்டார் அவர் தந்தை. அதை நினைந்து நினைந்து நொந்து கொள்கிறார் கவிஞர்.

ஆங்கோர் கன்னியைப் பத்துப் பிராயத்தில்
ஆழ நெஞ்சிடை ஊன்றி வணங்கினன்
ஈங்கோர் கன்னியைப் பன்னிரண்டு ஆண்டினுள்
எந்தை வந்து மணம் புரிவித்தனன்
தீங்கு மற்று இதில் உண்டு என்று அறிந்தவன்
செயல் எதிர்க்கும் திறன் இலன் ஆயினேன்
ஓங்கு காதல் தழல் எவ்வளவு என்றன்
உளம் எரித்து உளது என்பதுங் கண்டிலேன்

-என்று சொல்லி துன்புறுகிறார்.

கற்றும் கேட்டும் அறிவும் திருமுன்
காதல் ஒன்றும் கடமை ஒன்றாயின!

-என்று சொல்லி ஏங்குகிறார்.

இந்த ஏக்கம் எல்லாம் எவ்வாறு இலக்கியப் பொருளாகிறது என்று பார்ப்போம். ‘சந்திரிகையின் கதை’யில் டிப்டி கலெக்டர் கோபால ஐயங்கார் என்ற பாத்திரத்தைப் படைக்கிறார் பாரதி; கோபால ஐயங்காரை ஒரு பணிப்பெண் (இடையர் குலத்துப் பெண்) மீது காதல் கொள்ளும்படியும் செய்கிறார். கோபால ஐயங்கார் பேசுகிறார்:

“இப்போது மன்மதன் என் நெஞ்சில் சிங்காதனம் இட்டு வீற்றிருந்து வேறொரு பாடம் சொல்லுகிறான். படிப்புப் பெரிதில்லை. பயிற்சி பெரிதில்லை. ஒழுக்கம் பெரிதில்லை. காதல் தன்னிலேயே தான் இனிது. மற்றது எல்லாம் பதர். காதல் ஒன்றே பொருள்.”

இதைக் கேட்டுக்கொண்டு இருந்த வீரேசலிங்கம் பந்தலு, “காதலாவது, உருளைக்கிழங்காவது?” என்று சொல்லி நையாண்டி செய்கிறார்.

அவருக்கு, காதலர் கோபால ஐயங்கார், “காதல் என்பது தேவ லோக வஸ்து. இந்த உலகத்து வாழ்க்கை மாறியபோதிலும், அது

மாறாது. சாவித்ரியும் - சத்யவானும், லைலாவும் - மஜ்னுவும், ரோமியோவும் - ஜூலியட்டும் கொண்டு இருந்தார்களே, அந்த வஸ்துக்குக் காதல் என்று பெயர். அது அழியாத நித்ய வஸ்து. இமயமலை கடலில் மிதந்தபோதிலும் காதல் பொய்த்துப் போகாது. அத்தகைய காதலை நான் அந்தப் பணிப் பெண் மீது கொண்டு இருக்கிறேன்" என்று பதில் சொல்கிறார். இந்தச் சமயத்தில் ஆசிரியர் கூற்றாக வருகிறது பாரதியாரின் வாக்கு:

"காதலை எதிர்த்து யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. அதன் போக்கு காட்டுத் தீயின் போக்குக்கு இணையானது. அது தானாகவே எரிந்து தணிய வேண்டும் அல்லது தெய்வீகச் செயலாகப் பெரு மழை பெய்து அதைத் தணிக்க வேண்டும். மற்றபடி, மனிதர் கண்ணீர்விட்டு அணைப்பது என்பது சாத்தியமில்லை"

தன்னுடைய காதல் ஏக்கத்தை ஞான ஏக்கமாகவும் மாற்றுகிறார் பாரதியார்.

அவர் காதலியாக மாறிக் காதலன் கண்ணனுக்குப் பாங்கியைத் தூது விடுகிறார். பாங்கியின் பெயர் தங்கம். தங்கத்திடம் செய்தி சொல்லி அனுப்புகிறாள் காதலி. வீராப்பும் அவநம்பிக்கையால் வரும் சோகமும் மாறி மாறி வரும் அற்புதத்தைக் கவிதையில் காணலாம்.

ஆற்றங்கரை அதனில் முன்னம் ஒரு நாள் – எனை
அழைத்துத் தனி இடத்தில் பேசியது எல்லாம்
தூற்றி நகர் முரசு சாற்றுவன் என்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்.

சோரம் இழைத்து இடையர் பெண்களுடனே – அவன்
சூழ்ச்சித் திறமை பல காட்டுவது எல்லாம்
வீர மறக் குலத்து மாதரிடத்தே
வேண்டியதில்லை என்று சொல்லிவிடடீ!

இவ்வளவு வீரமாகப் பேசிக்கொண்டு இருக்கும்போதே, சோகம் திடீரென்று காதலியின் உள்ளத்தைப் பொத்துக்கொண்டு வருகிறது.

பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் – மிகப்
பீழை இருக்குதடி, தங்கமே தங்கம்,
பண் ஒன்று வேய்ங் குழலில் ஊதி வந்திட்டான் – அதைப்
பற்றி மறக்குதில்லை பஞ்சை உள்ளமே.
நேரம் முழுதிலும் அப்பாவி தன்னையே – உள்ளம்
நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம்

தீர ஒரு சொல் இன்று கேட்டு வந்திட்டால் - பின்பு
தெய்வம் இருக்குதடி தங்கமே தங்கம்.

தமிழ் மொழி உள்ளளவும் இந்தப் பாடல் உயிரோடு இருக்கும். காதற் கவி பாரதியும் உயிரோடு இருப்பார்.

20. ராஜயோகி திருமூலர்

தமிழ்நாட்டில் இருந்த ஞானிகளில் எல்லாம் சிறந்தவர் திருமூலர். பதினெண் சித்தர்களும் அவரையே தலைவராகவும் சித்தர் பள்ளிக்கூடத்தின் முதல்வராகவும்கொண்டாடுகிறார்கள்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் அவர் வாழ்ந்தார் என்று புராணங்கள் கூறும். ஆனால், தற்கால ஆராய்ச்சியாளர்கள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் திருமூலர் வாழ்ந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் சைவக் குரவர்களில் ஒருவருமான சுந்தர மூர்த்திநாயனார் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில், திருமூலரைக் குறிப்பிட்டுக் கீழ்காணும்படி பாடுகிறார்.

எம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்.

ஆகவே, சுந்தரமூர்த்தி நாயனார், 'எம்பிரான்' என்று கூறும் அளவுக்குப் பல ஆண்டுகள் முத்தியவராக திருமூலர் இருந்திருக்க வேண்டும்.

'அன்பே சிவம்' என்ற செய்தியே திருமூலருடைய சித்தாந்தத்தில் முக்கிய இடம் பெற்றிருக்கிறது.

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

-என்று மிகுந்த தெளிவோடும் உறுதியோடும். திருமூலர் பாடுகிறார்.

அன்பே சிவம் என்ற உண்மைக்கு ஓர் உருக்கமான எடுத்துக் காட்டாக அமைந்து இருந்தது திருமூலரின் வாழ்க்கை. இமயத்தில் திருக்கயிலாய மலையில் வாழ்ந்து வந்த முனிவர் அவர். ஒரு நாள் பொதிகை மலையிலிருந்த அகத்தியரைச் சந்திப்பதற்காக வான மார்க்கமாகப் பறந்து வந்தார். வரும் வழியில் திருவாவடுதுறையில்

இறங்கி அங்குள்ள கோயிலில் சிவனை வழிபட்டுப் பின் காவிரி ஆற்றுக்குச் சென்றார்.

ஆற்றங் கரையில் பசுக் கூட்டம் ஒன்று கண்ணீர்விட்டுக் கதறிக் கொண்டு இருந்ததைப் பார்த்தார். அன்பே சிவமாக வந்த முனிவர் பசுக்களின் துன்பத்தைப் போக்க முனைந்தார். சாத்தனூர் என்ற ஊரிலிருந்து இந்தப் பசுக்களை காவிரிக் கரைக்கு மேய்த்து வந்த மூலன் என்ற இடையனுடைய பிணம் கரையில் கிடப்பதையும், பிணத்தைச் சுற்றி நின்று பசுக்கள் சில கண்ணீர்விடுவதையும், சில பசுக்கள் இறந்துபோன மூலனுடைய உடம்பை மோந்து, மோந்து குழைவதையும் கண்ட முனிவர், தம்முடைய ஸ்தூல உடம்பைக் கீழே போட்டுவிட்டு தம் உயிரை மூலனுடைய உடலில் பாய்ச்சினார்.

மூலன் உயிர் பெற்று எழுந்தவுடன் பசுக்கள் மகிழ்ச்சியினால் மூலனுடைய உடம்பை நாவார நக்கி மோந்து துள்ளிக் கனைத்து விளையாடின. பின்னர் பசுக்கள் தம் கன்றுகளை நினைத்து சாத்தனூரை நோக்கிச் செல்ல மூலரும் அவற்றின் பின் சென்று சாத்தனூரை அடைந்தார். இடையன் மூலனுடைய மனைவி முனிவர் மூலரைத் தன் நாயகன் என நினைத்துத் தீண்டவும், மூலர் அவளை தடுத்துப் பக்கத்தில் உள்ள ஒரு மடத்துக்குள் சென்று சமாதியில் ஆழ்ந்துவிட்டார்.

மூலனுடைய மனைவி ஊராரிடத்தில் முறையிட்டு தன் கணவனைத் திரும்பப் பெற முயன்றாள். ஆனால் அந்த முயற்சி பலனற்றதாகப் போய்விட்டது. முனிவரும் சமாதியிலிருந்து எழுந்து, தாம் ஸ்தூல உடம்பை கீழே போட்டுவிட்டு வந்த இடத்துக்குச் சென்று அதைத் தேடினார்; காணவில்லை. அங்குள்ள மக்கள் அதைப் பிரேதம் என்று எண்ணி தகனம் செய்துவிட்டார்கள் என்று தெரிந்துகொண்டார்.

தம் சொந்த உடம்பை இழந்தது இறைவனுடைய திருவருளால் என்பதை உணர்ந்த முனிவர் தமக்குக் கிடைத்த மூலனுடைய உடம்போடு மறுபடியும் திருவாவடுதுறை கோயிலுக்குச் சென்று கோயிலுக்கு மேற்கேயுள்ள ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து திரும்பவும் சிவயோகத்தில் ஆழ்ந்துவிட்டார். ஓர் ஆண்டுக்குப் பின் அறிதுயிலிருந்து விழித்து ஒரு திருமந்திரப் பாடலைப் பாடுவார் என்றும், பாடிய பின் மறுபடியும் தியானத்தில் அமிழ்ந்துவிடுவார் என்றும், இவ்வாறாக ஆண்டுக்கு ஒரு திருமந்திரமாக 3,000 திருமந்திரப் பாடல்களையும் 3,000 ஆண்டுகளில் பாடி முடித்தார் என்றும் சொல்லப்படுகிறது.

திருமந்திரப் பாடல்களைப் பாடி முடித்தபின்பு, ஒரு நாள் ஐப்பசி அஸ்வினியில் இரவலாகக் கிடைத்த ஸ்தூல தேகத்தை

கழற்றி வைத்துவிட்டு திருமூலர் திருக்கயிலையை அடைந்தார். மானச உலகத்தில் இருந்துகொண்டு இன்றும் மண்ணுலக மக்கள் வளர்ச்சிக்காக அவர் பாடுபட்டு வருகிறார் என்று ஞானிகள் கருதுகிறார்கள். பாடல்களை மூலனுடைய உடம்பில் இருக்கும்போதுஅவர் பாடிய காரணத்தால் அவரை திருமூலர் என்று நம் முன்னோர் அழைத்தார்கள்.

விக்கிரக ஆராதனையில் இருந்து அருவத் தியானத்தில் தன்னைக் கரைக்கும் நிலை வரை பல மட்டங்களில் உள்ள விதம்விதமான ஆன்ம அனுபவங்களை அதிகார தோரணையோடு எடுத்து விளக்கும் அரிய களஞ்சியமாக விளங்குகிறது திருமந்திரம். தம்முடைய ஆன்ம அனுபவங்களை எல்லாம் ஆற்றலும் எளிமையும் மிக்க கவிதையில் பதிவு செய்ததோடு இல்லாமல் தாம் பெற்ற ஆன்ம அனுபவங்களை மற்றவர்களும் பெறட்டுமே என்ற கருணையினால், விரிவான வழி வகைகளையும் தந்திரங்களையும் தம் நூலில் எடுத்து விளக்கிய ஞானி திருமூலரைத் தவிர இந்திய வரலாற்றிலேயே வேறொருவரும் இல்லை என்று சொல்லலாம்.

உண்மைதான், திருமூலர் கண்ட உண்மைகளை முண்டு முடிச்சுகள் நிரம்பிய சங்கேத மொழியிலேயே அவர் சொல்லி இருக்கிறார். திருமூலருடைய சங்கேதப் பூட்டைத் திறக்கும் திறவுகோலை நாம் இழந்துவிட்டோம், அதை இனி நாம் திரும்பப் பெற முடியாது என்றுகூட ஒரு காலத்தில் நான் நினைத்ததுண்டு. ஆனால், தமிழ்நாட்டில் இன்றும் நடமாடி வரும் சில ஞானிகளோடு தொடர்புகொண்ட பிறகு, திறவுகோல் நல்ல பாதுகாப்பான இடத்தில் இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். கேவலம் ஜட தத்துவ உண்மை பொதிந்து கிடக்கும் அணுகுண்டின் உற்பத்தி ரகசியத்தையே சாமான்ய மக்களுக்குச் சொல்வது அபாயம் என்று நினைக்கும் இந்தக் காலத்தில், சூட்சுமமான ஆன்ம ரகசியங்களை அவர்களுடைய அறிவுக்கு எட்டாத இடத்தில் வைத்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியம்!

மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட பல கருவிகளில் அறிவு என்பது சாமானியமான ஒரு கருவிதான் என்பதை உணரும் அறிவாளிகளே ஆன்ம உண்மைகளை உணர்வதற்குத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். மனிதன் தன் அறியாமையை எப்போது உணர்கிறானோ, அப்போதுதான் அவனுக்கும ஞானம் உதயமாகிறது என்று திரு மூலர் கருதுறார். கீழ்க்காணும் திருமந்திரம் இந்தக் கருத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை?
ஆர் அறிவார் இந்த அகலமும் நிகளமும்?
பேர் அறியாத பெருஞ் சுடர் ஒன்று அதன்
வேர் அறியாமை விளம்புகின்றேனே.

பேர் அறியாத பெருஞ் சுடரைப்பற்றி 3,000 பாடல்கள் பாடப் போகிறார். அந்தப் பாடல்களுக்கு முன்னுரையாக உள்ள பாட்டில் தமது அறியாமையின் நீள அகலத்தைப்பற்றி வியக்கிறார் திருமூலர்.

ஐன்ஸ்டீன், "தெரிந்த உலகத்தின் விளிம்பில் நின்றுகொண்டு தெரியாத உலகத்தை எட்டிப் பார்க்கும்போது , என் அறியாமை எவ்வளவு அகண்டமாக இருக்கிறது என்பதை உணர்ந்து நான் பதறுகிறேன்" என்றார். ஆனால், தம் அறியாமையை உணர்ந்த திருமூலருக்கு அச்சம் ஏற்படவில்லை, ஆனந்தமே ஏற்படுகிறது. இல்லை என்றால்.

ஆனால், அறியாமையை உணர்ந்த பின்னருங்கூட ஆணவ வில்லங்கம் தொடர்ந்து நிற்கிறது. 'என்னுடைய அறியாமை' என்ற உணர்வு தொத்திக்கொண்டு இருக்கிறது. ஆகவேதான், அறிவு, அறியாமை என்ற இரு நிலைகளையும் தாண்டி உணர்வு நிலையில் ஊன்றி நிற்க வேண்டும் என்று கூறுகிறார் திருமூலர். வில்லங்கம் அற்ற, வரம்பு இல்லாத அறிவு வெளியில் நின்று பெறும் 'அறிவு'தான் ஞானம் என்பதைக் கீழ்க்காணும் திருமந்திரம் தெளிவு படுத்துகிறது.

'அறிவு', 'அறியாமை' கடந்து அறிவானால்
'அறிவு', 'அறியாமை' அழகியவாறே.

ஞானமாகிய சுத்த அறிவைப் பெற்ற பிறகு சாதாரணமான உலகியல் அறிவை அறியாமல் இருத்தல் மிக்க நல்லது என்று நகைச்சுவை ததும்பப் பேசுகிறார் திருமூலர்.

சித்தாகாசத்தில் தாம் நின்றபோது, தம்முடைய அக வெளி புற வெளியில் போய் விரவி, தமக்குள்ளே இருந்த ஒளி வெளியே இருக்கும் ஒளியோடு கலந்து யாவற்றையும் ஒடுக்கியதை திருமூலர் விவரிக்கிறார். இந்த நிலையில் காலம், இடம் என்ற சட்டத்துக்குள் சிறைப்பட்டு நின்ற திருமூலர் சிறையைத் தகர்த்து எறிந்துவிட்டு வரைவு இல்லாத வெட்ட வெளியோடு கலந்துவிடுகிறார்.

"நான் வரைவற்றுப் போன பிறகு, வரையறைக்குள் இருக்கும் ஒன்றையும் என்னால் சிந்தனை செய்ய முடியவில்லை. நான் அவனான பின், எனக்கு அப்பால் ஒரு பொருளும் இல்லை. ஆகவே, அயல் மாண்டுவிட்டது. அயல் பொருள் என்று ஒன்றும் இல்லை ஆகையால் அதைப்பற்றி நினைக்கவும் முடியவில்லை" என்பதை ஒரு திருமந்திரம் ஆனந்தக் களிப்போடு சொல்கிறது:

நான் வரைவற்ற பின் யாரை வரைவது?
நான் அவன் ஆன பின் யாரை நினைவது?

இந்த நிலையில்,

தன்னை அர்ச்சிக்கத் தான் இருந்தேனே

-என்ற பக்குவம் திருமூலருக்கு ஏற்படுகிறது.

திருமந்திரம் என்ற நூல் 3,000 பாடல்கள்கொண்டது. ஒன்பது தந்திரங்களாகப் பாகுபடுத்தப்பட்டது. மனிதனுடைய மண்ணுலக வாழ்வின் நிலையாமை, இளமையின் நிலையாமை, உலகியல் செல்வங்களின் நிலையாமை ஆகியவற்றைப்பற்றிக் கூறி நம் குடல் எல்லாம் பதறும்படி செய்துவிட்டு, என்றென்றும் நிலைத்து நிற்கும் பேருண்மைகளை, நாம் விரும்பும்படி செய்கிறார் திருமூலர். திருமந்திரத்தில் உள்ள நிலையாமையைப்பற்றிய பாடல்களின் நாடகப் பாங்குக்கும் அச்சுறுத்தும் சக்திக்கும் ஈடான பாடல்கள் தமிழ் இலக்கியத்திலோ, வேறு எந்த இலக்கியத்திலுமோ இருப்பதாகத் தெரியவில்லை.

அடப் பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாரொடு மந்தணம்கொண்டார்
இடப் பக்கமே இறை நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந்தாரே

-என்ற திருமந்திரப் பாட்டின் இறுதியில் உள்ள ஏகாரம் கடைச் சங்கு ஒலித்துக்கொண்டு இருக்கும் நினைவை உண்டாக்குகிறது அல்லவா?

இவ்வாறு எல்லாம் நிலையாமையைப்பற்றி நம்மை நினைக்க வைத்துவிட்டு, நிலைபேறான உண்மைகளைப்பற்றிய செய்திகளை நமக்கு ஊட்டுகிறார் திருமுலர்.

தன்னை அறிவதே அறிவாம் அஃதன்றிப்
பின்னை அறிவது பேய் அறிவாகுமே

-என்று அறைந்து, அறிவுக்கும் பேய் அறிவுக்கும் உள்ள வேறு பாட்டைத் துணிச்சல் கலந்த உறுதியோடு தெளிவுபடுத்துகிறார். நம்மையே பூதக்கண்ணாடியின் அடியில் வைத்து உணர்வோடு நாம் சோதனை செய்துகொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ஆணவம் கரைந்து வெட்ட வெளியோடு விரவிவிடும் என்று வற்புறுத்துகிறார்.

செல்லும் அளவு செலுத்துமின் சிந்தையை
வெல்லும் அளவு விடுமின் வெகுளியை
அல்லும் பகலும் அருளோடு தூங்கினால்
கல்லும் பிளந்து கடு வெளியாமே

-என்பது திருமந்திரம்.

21. திருமூலர் அருளியது

பல நிலைகளிலிருந்து பரம்பொருளை அனுபவித்தவர் திருமூலர். ஆகவே, நாம் எந்த நிலையில் இருந்தாலும் அந்த நிலைக்குத் தக்கபடி உபதேசம் செய்து நம்மை ஈடேறச் செய்யும் வல்லமை அவரிடம் உண்டு.

பக்தி நிலையை எடுத்துக்கொள்வோம், இறைவனிடத்தில்தான் அவருக்கு எப்பேர்ப்பட்ட பிரேமை!

சிவபெருமான் புலித்தோலை ஜார்ஜெட் புடவைபோல அரையில் அணிந்து இருக்கிறான். அது அடிக்கிற 'டால்' பொன்னின் ஒளியையும் மிஞ்சிவிடுகிறதாம்.

'பொன்னைக் கடந்திலங்கும் புலித்தோலினன்'. அவனுடைய தலையில் நிலாக் கீற்று ஒன்று கிடந்து மினுக்மினுக்கென்று மின்னிக் கொண்டு இருக்கிறது. 'மின்னிக்கிடந்து மிளிரும் இளம்பிறை'. புலித் தோலை அணிந்துகொண்டு இருப்பதில் இருந்தே பித்தன் இவன் என்று தெரிகிறது. போதாக்குறைக்கு, இளம் பிறையை வேறு தலையில் அணிந்து இருக்கிறான். இதுவும் காணாதென்று, சுடு காட்டுச் சாம்பலை தன் மேனி எல்லாம் பூசிக்கொண்டு உன்மத்தத்தோடு ஆடிக்கொண்டு இருக்கிறான் சிவபெருமான். இந்தப் பித்தனிடத்தில் அல்லவா என் பேரன்பு பின்னிக் கிடக்கிறது என்ற வியப்பில் ஆழ்கிறார் திருமூலர்.

பொன்னைக் கடந்து இலங்கும் புலித்தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம் பிறை
துன்னிக் கிடந்த சுடு பொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்தது என் பேரன்புதானே?

பிரிக்க முடியாமல் பின்னிக் கிடந்த பக்தி நிலை இது.

இந்த நிலையில், பிரிந்து போன துண்டு முழுமையை அண்டி, ஆலிங்கனம் செய்து ஒருமைப் பேற்றைப் பெறுகிறது. பிரிந்து இருந்த காலத்தில் உள்ள அச்சம் முதலிய புன்மைக் குணங்கள் எல்லாம் பறந்துபோய்விடுகின்றன.

வானம் இன்று இடிந்து விழட்டுமே, பெருங்கடல் பொங்கி பூமியையே விழுங்கட்டுமே. சிவந்த காட்டுத் தீயில் அகப்பட்டு என்னுடைய உடல் வெந்து போனால்தான் என்ன? சண்டமாருதமே ஒன்று அடித்தால்தான் என்ன? நான் அஞ்சப் போவதில்லை. என் நாதனை நாடும் லட்சியத்தை மறந்து நான் பராக்குப் பார்க்கப் போவதில்லை.

வான் இன்று இடிக்கில் என்? மா கடற் பொங்கில் என்?
கான் நின்ற செந் தீ கலந்து உடல் வேகில் என்?
தான் ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில் என்?
நான் ஒன்றி நாதனை நாடுவன் நானே!

சொற் குன்றாதபடி தொழ வேண்டுமாம். 'சொற் குன்றல் இன்றித் தொழுமின்' என்கிறார் திருமூலர். சக்திதேவியைப்பற்றி அவர் பாடிய பாடல்கள் எல்லாமே சொற் குன்றல் இல்லாத பாடல்கள்.

முத்து வதனத்தி, முகந்தொறும் முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி (தேவி)
பத்துக் கரத்தி, பராபரன் பைந் தொடி
வித்தகி என் உள்ளம் மேவி நின்றாளே

சொற்குன்றல் இன்றி வந்த பாட்டு இது.

இப்போது யோக நிலையை எடுத்துக்கொள்வோம்.

பறவையைக் காட்டிலும் வேகமாகப் பறக்கும் ஒரு குதிரை நம்மிடத்தில் இருக்கிறது. மூச்சு என்ற குதிரை அது. இடக்குப் பண்ணுகிற குதிரை. லாயக்காக அதற்கு மூக்கணாங் கயிறு போட்டு அதன் மேல் ஏறி உட்கார்ந்து லகானைப் பிடித்து சவாரி செய்யக் கற்றுக்கொண்டால் நம் உடம்பிலும் உள்ளத்திலும் என்றும் இல்லாத ஆற்றல் ஏற்படும் என்று உறுதி கூறுகிறார் திருமூலர்.

புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டால்
கள் உண்ண வேண்டாம் தானே களி தரும்
துள்ளி நடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வு உடையோருக்கே

மூச்சுப் பயிற்சியால் கள் உண்ணாமலேயே ஒரு போதை உண்டாகுமாம். ஆனந்தக் களிப்பு அவர்களுக்கு ஏற்படுமாம். கள்ளுக் கடைகளையும் சாராயக் கடைகளையும் அடைத்துவிட்டோம். அந்தக் கடைகளில் மூச்சுப் பயிற்சியைப் பாடமாக மக்களுக்குக் கற்பித்தால், அவர்களுடைய ஏக்கம் மாறி விடும், சோம்பேறித்தனம் போய்விடும்.

"இவ்வாறு காற்றைப் பிடிக்கும் கணக்கை அறிந்தவர்கள் வெகு காலம் இந்த உடலில் இருந்து வாழலாம். யமன் அவர்களைக் கண்டு அஞ்சுவான்" என்று சொல்கிறார் திருமூலர். இதை மிடுக்குடன் எடுத்துச் சொல்கிறது ஒரு திருமந்திரம்.

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவார் இல்லை

காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறி அதுவாமே.

உடலுக்குள் சென்று திரியும் வாயுவை யோக நெறிப்படி சுத்தி செய்தால், நரை, திரை மறைந்துவிடும் என்று திருமூலர் கூறுகிறார்.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நிர்மலமாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையோனே.

மனித உடலில் உள்ள மூலாதாரத்தை மேல் நோக்கி இழுத்து, தலை உச்சி மேல் இருக்கும் மேலைத் துவாரத்தின் மேல் மனம் வைத்து கண்கள் இரண்டின் வெளி நாட்டத்தையும் மீட்டு அக வெளியை நோக்கி விழித்து இருந்தால், காலத்தை வென்று விடலாம் என்று அறைகிறது இன்னொரு திருமந்திரம்.

மூலத் துவாரத்தை முக்காரம் இட்டு இரு
மேலைத் துவாரத்தின் மேல் மனம் வைத்து இரு
வேல் ஒத்த கண்ணை வெளியில் விழித்து இரு
காலத்தை வெல்லும் கருத்து அதுதானே.

இப்படி எல்லாம் பலபட யோக மார்க்கத்தைப் புகழ்ந்துவிட்டு, அந்தப் பாதை வழியாக எவ்வளவு தூரம் நடந்தாலும் இறைவனைக் கண்டுவிட முடியாது என்றும் சொல்கிறார் திருமூலர்.

எண்ணாயிரத்து ஆண்டு யோகம் இருக்கினும்
கண் ஆர அமுதனைக் கண்டு அறிவார் இல்லை.

அப்படியானால், என்னதான் செய்வது? ஞான மார்க்கமாகிய ஒளி நெறியைப் பற்றினால் பரம்பொருளைக் காணலாம் என்று சொல்கிறார் திருமூலர்.

ஞான மார்க்கத்தில் பல நெறிகள் உண்டு. அதில் முக்கியமானது ஒளி நெறி. ஒளி நெறியைப்பற்றி திருமூலர் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

இறைவனுடைய சந்நிதானத்தை மாடுபோல மறைத்துக்கொண்டு இருப்பது நம்முடைய உள்ளந்தான். ஆனால் உள்ளத்தின் ஆற்றல் அளவிட முடியாதது.

விரித்த பொருட்கு எல்லாம் வித்தாவது உள்ளம்
பெருக்கில் பெருகும், சுருக்கில் சுருங்கும்
அருத்தமும் அத்தனை ஆய்ந்துகொள்வார்க்கே

இந்த உள்ளம் இருக்கிறதே, ஓர் உருவத்தை அதற்கு இரையாகக் கொடுத்தால் அது அசை போட்டு அசை போட்டுக் கோடி

உருவங்களை உண்டாக்கிவிடும். உருவங்கள் உண்டானவுடன் அவற்றுக்கு நாமங்கள் சூட்டுகிறோம். இப்படியாகக் கோடானுகோடி நாமங்களும் உருவங்களும் நம் குடுமியைப் பிடித்து ஆட்டுகின்றன. நாம ரூபப் பேய்கள் என்று அவற்றை சித்தர்கள் அழைப்பார்கள். அவற்றால் நமக்கும் மயக்கம் உண்டாகிறது; ஒன்றை மற்றொன்றாகக் காண்கிறோம். இந்த மயக்கத்திலிருந்து விடுபட வேண்டுமானால், மனம் செய்கிற வம்புகளிலிருந்தும் குறும்புகளிலிருந்தும் நாம் விடுபட வேண்டும். அப்படி விடுபடுவதற்கு வழி இருக்கிறதா? இருக்கிறது.

உள்ளம் செயல் அற்று இருந்தால் பேருண்மை நமக்குக் காட்சி கொடுக்கும். உருவங்களை இரையாகக் கொடுத்தால்தானே இந்த உள்ளத்துக்குக் கொண்டாட்டம்? உருவங்களை ஒதுக்கிவிட்டு உருவம் அற்ற வெட்ட வெளியை, அறிவாகாசத்தை நாம் நினைத்தால், நம் உள்ளத்துக்கு வேலை இல்லாத திண்டாட்டம் ஏற்பட்டுவிடுகிறது. இந்த உண்மையை உணர்ந்துவிட்டாலே ஞான நிலை ஏற்பட்டுவிட்டது என்று அர்த்தம். உருவத்துக்கு எல்லாம் காரணமாக இருப்பது உள்ளம். உள்ளத்தை இயக்குவது உருவம்.

உள்ளம், உரு என்றும், உருவம், உளம் என்றும்,
உள்ள பரிசு அறிந்து ஒரும் அவர்கட்குப்
பள்ளமும் இல்லை திடர் இல்லை பாழ் இல்லை
உள்ளமும் இல்லை உரு இல்லைதானே.

ஆனால் அருவ நிலையில் நிற்பது மிகவும் கடினமான காரியம். குருவின் துணையால் ஓங்கார உள் ஒளி உள்ளே உதயமுற்றுவிட்டால், அந்த ஒளியில் உள்ளத்தை எளிதில் நிறுத்தலாம். அந்த ஒளிக்கு உருவம் இல்லை, ஆனால் அகக் கண்ணும் அதைப் பார்க்கப் பார்க்க உள்ளம் உருகி உருகி ஒழிந்துபோகும். நமது உள்ளத்தில் ஞான விளக்கை ஏற்றி வைக்கும் தகுதி ஞான ஆசிரியர்களுக்கே உண்டு. அப்படி விளக்கை ஏற்றி அதை நோக்கினால், வெட்ட வெளியை உணரலாம். அந்த ஒளியின் முன்னே மனித வேதனை எல்லாம் மறைந்துபோகும். விளக்கை விளக்கக்கூடிய கை விளக்கு ஞானிகளிடத்தில் இருக்கிறது. அவர்கள் ‘டார்ச் லைட்’ அடித்துக் காட்டினால்தான் ஞான சூரியன் நம் காட்சிக்குப் புலப்படுவான். அப்படி அவர்கள் விளக்கினானால், விளக்குக்குள் இருக்கும் பரம்பொருள், அதாவது, ‘விளக்கு அவர்’ நமக்கு நன்றாகப் புலப்படுவார்.

விளக்கினை ஏற்றி வெளியை அறியின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்கு உடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கு அவர்தாமே.

இவ்வாறு இறை விளக்கம் பெற்றவர் திருமூலர். மனதை உள் முகமாகச் செலுத்தாமல் வெளி முகமாகத் திரியவைத்துக்கொண்டு இருந்த தம் உடம்புக்குள் புகுந்து அருளைச் சொரிந்து அமுதத்தை ஈந்த இறைவனுடைய கருணையை எண்ணி எண்ணி உள்ளம் நெகிழ்கிறார் திருமூலர்:

புறமே திரிந்தேனைப் பொற் கழல் சூட்டி
நிறமே புகுந்து என்னை நின்மலனாக்கி
அறமே புகுந்து எனக்கு ஆரமுது ஈந்த
திறம் ஏது என்று எண்ணித் திகைத்து இருந்தேனே.

22. சிந்தைக் கலசம்

வானவெளிக் கப்பலில் முதன்முதலாகப் பயணம் செய்துவிட்டுப் பூமிக்குத் திரும்பி வந்தார் ஒரு ரஷ்ய விஞ்ஞானி. பேட்டி காணச் சென்ற பத்திரிகை நிருபர்களிடம் அவர் எக்காளமாக, "வானத்திலே எங்கெல்லாமோ சுற்றிப் பார்த்துவிட்டேன். ஆனால், கடவுள் என்ற ஆசாமி எங்கும் என் கண்ணுக்குத் தென்படவில்லை" என்றார்.

உள்ளத்துக்குள்ளேயே இறைவனை வைத்துக்கொண்டு, அக வெளியை மறந்து புறவெளியிலே இறைவனைத் தேடுகிறார்களே, அவர்களைப் பார்த்து திருமூலர் சொல்கிறார்:

உள்ளத்தின் உள்ளே உள பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார், வினை கெட,
பள்ளமும் மேடும் பறந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வி இல்லோரே.

ஒரு விஞ்ஞான மேதையைப் பார்த்து, அதுவும் வானவெளியைச் சுற்றி வந்த விஞ்ஞான மேதையைப் பார்த்து, 'கள்ள மனமுடைய கல்வி இல்லாதவன்' என்று தயவு தாட்சண்யம் பாராமல் பேசுகிறார் திருமூலர்.

திருமூலரைக் காட்டிலும் கடுமையானவர் சிவவாக்கியர். அசட்டுப் பேச்சைக் காதால் கேட்கவே முடியாது அவராலே. அந்த விஞ்ஞானியைப் பார்த்து சிவவாக்கியர் சொல்வதைப் பார்ப்போம்.

உறியிலே தயிர் இருக்க ஊர் புகுந்து வெண்ணெய் தேடும்
அறிவிலாத மாந்தரோடு அணுகுமாற தெங்ஙனே!

'வீட்டுக்குள்ளே இருக்கிறது உறி. உறிக்குள்ளே இருக்கிறது தயிர். அந்தத் தயிரை எடுத்துக் கடைய வேண்டியதுதான் பாக்கி; உடனே வெண்ணெய் கிடைத்துவிடும். இதைச் செய்யாமல், வெண்ணெயைத் தேடி ஊர் ஊராக அலைகிறாயே, வானவெளியை வேறு சுற்றுகிறாயே, உன்னுடைய சமர்த்தை என்னவென்று சொல்வது! உன்னோடு பேச்சு வைத்துக்கொள்வதே தப்பு' என்று கடிந்து கொள்கிறார் சிவவாக்கியர்.

அப்படியானால், இறைவன் உள்ளத்துக்குள்ளேயே இருக்கிறானா? போயும் போயும் இருப்பதற்கு மனித உள்ளந்தானா கிடைத்தது இறைவனுக்கு? அங்கே போய் அமர்வதற்கு என்ன காரணம்? என்றெல்லாம் கேட்கிறோம். பதில் சொல்கிறார் திருமூலர்:

கள்ளப் பெரு மக்கள் காண்பர் கொலோ என்று
உள்ளத்தின் உள்ளே ஒளித்திருந்து ஆளுமே

வேடிக்கைப் பிரியனாகிய இறைவன், மனிதனோடு கண்ணாம் பொத்தி விளையாடுகிறான். கண்ணாம் பொத்தி விளையாடும்போது எல்லோரும் எதிர்பார்க்கும் இடத்தில் ஒளிந்தால், விளையாட்டில் ரசம் இல்லாது போய்விடுமே! ஆகையால், மனிதன் எளிதில் கண்டுபிடிக்க முடியாத இடம் அவன் மனம்தான். அங்கே போய் ஒளிந்துகொள்வோம் என்று தெளிந்து, அவன் உள்ளத்துக்குள்ளே போய்ப் பதுங்கிக்கொண்டானாம்.

'சிந்தைக் கலசத்து எழுகிற மாசக்தி' என்று இறைவனைப் போற்றுகிறார் திருமூலர். ஒளிந்திருக்கும் இடம் நம்முடைய சிந்தை தான், வானவெளி அல்ல என்று தெரிவதற்கே யுகக்கணக்காகி விடுகிறது. ஆனால், இருக்கும் இடம் தெரிந்த பிறகு இறைவனோடு உறவாடுவது எளிதாகிறது.

தன் மனதைத் தன் மனதுக்குள்ளேயே செலுத்தித் தேடத் தொடங்குகிறார் திருமூலர். கலங்கிப்போயிருந்த சிந்தை, கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவடைகிறது. சிந்தைக் கலசத்தின் உள்ளிருந்து சிவம் மெல்ல மெல்ல வெளிப்படுவதைக் காண்கிறார்.

சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்குச்
சிந்தையின் உள்ளே சிவன் இருந்தானே

-என்று ஓலமிடுகிறார் திருமூலர்.

இப்படியாக, இறைத் தத்துவத்தைக் கண்டுபிடித்தவுடன் அவருக்கு என்றும் இல்லாத துணிச்சல் ஏற்பட்டுவிடுகிறது.

ஆராலும் என்னை அமட்ட ஒண்ணாது இனி

-என்றார். ஒரு பயலுக்கும் அஞ்ச வேண்டியது இல்லையாம். ஏன்?

சீரார் பிரான் வந்து என் சிந்தை புகுந்தனன்

முன்னமேயே சிந்தையில் இருந்தவன்தான். ஆனால், 'என் சிந்தையில் இருக்கிறான்' என்று இப்போதுதானே உணர்ந்தேன். ஆகையால், அவன் என் சிந்தையில் புகுந்துவிட்டான் என்றே சொல்ல வேண்டும். இதன் விளைவு என்ன?

சீராடி அங்கே திரிவது அல்லால், இனி
ஆர்பாடும் சாரா அறிவறிந்தேனே

தன் நிறைவு வந்துவிட்டது. இன்னொருவனைச் சார்ந்து நிற்க வேண்டிய அவசியம் இல்லை. சார்பு கெட்டுவிட்டது. ஆகவே, ஒழிந்தது அச்சம். ஏன் பாடமாட்டார்?

ஆராலும் என்னை அமட்ட ஒண்ணாது இனிச்
சீரார் பிரான் வந்து என் சிந்தை புகுந்தனன்
சீராடி அங்கே திரிவது அல்லால், இனி
ஆர்பாடும் சாரா அறிவறிந்தேனே.

23. தமிழ் செய்த திருமூலர்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் திருமூலர் என்று சொல்கிறார்கள். குறைந்தபட்சம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாவது அவர் இருந்திருக்க வேண்டும். ஆனால், அவர் சிருஷ்டி உற்சாகத்தோடும், கவிதா கம்பீரத்தோடும் பாடியிருக்கும் உண்மைகள் ஆறாத புதுமையோடு, இன்றும் நமது இதயத்தைத் தொட்டுப் பேசுகின்றன; இதயக் கல்லைப் பிசைந்து கனியாக்கும் அமர கீதங்களே அவரது பாட்டுகள்.

மனித வாழ்க்கையின் மர்மங்களையும், சிருஷ்டியின் ரகசியங்களையும் அறியாத நமக்கு, ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டில்விட்ட மாதிரியல்லவா இருக்கிறது? எங்கிருந்து வந்தோம், எதற்காக வந்தோம், எங்கே போகிறோம் என்றே புரியவில்லை. மலை மலையாக வருகிறது துன்பமும், கஷ்டமும். அதை எல்லாம் சமாளிக்க முடியாமல் அலமந்து அலறுகிறோம். பாழும் வாழ்க்கையில் புளிப்பும், கசப்பும், வெறுப்பும் தட்டிவிடுகிறது. மனித சரித்திரம் அர்த்தமற்ற ஒரு பொம்மலாட்டம்போல, காரண காரியத் தொடர்பு அற்ற பைத்தியக்காரக் கனவைப்போல, தாளம் இல்லாத கூத்தைப்போலக் காட்சியளிக்கிறது.

ஆனால், திருமூலருக்கோ நம்மை ஆட்கொண்ட மருட்சியும், மயக்கமும் லவலேசமும் கிடையாது. நம்மைத் திணறடிக்கிற திரை இருக்கிறதே, அதை எப்படியோ கிழித்தெறிந்துவிட்டு, அதற்கு அப்பாலுக்கு அப்பாலாக இருக்கும் மூடு மர்மத்தை அவர் எட்டிப் பார்த்துவிட்டார். காரண காரியத் தொடர்பு பளிச்சென்று தெளிவாகிவிட்டது. வாழ்க்கையை விளைவித்த வித்து எது என்பதை அறிந்தார். இன்ப துன்ப வளையத்தை நொறுக்கித் தகர்த்து, காலச் சக்கரத்தின் சுழற்சியை மீறி, விடுதலை பெற்று விச்வ வெளியை அடையும் மார்க்கத்தைக் கண்டார். பெரு மறைகள் கூச்சத்தால் பேசாது மறைத்த உண்மைகளை விளம்பரப் படுத்தினார். இசை வடிவாக இருக்கும் ஆனந்தக் கூத்தனது பண்புகளை தெய்வீகக் கவிதையிலே வடித்து உருவாக்கினார். பாட வல்லார் நெறியைப் பாடியும், ஆட வல்லார் நெறியை ஆடியுந்தானே காட்ட முடியும்? இந்த ஆடல் பாடலில் உதயமானதுதான் திருமந்திரம் என்ற நூல்.

சாதாரணமாக, உலகத்தில் சௌந்தர்ய உணர்ச்சி மங்கி குரூரமும், அலங்கோலமும் அதிகரிக்கும்போது, கடவுள் ஒரு கவிஞனைத் தன் தூதனாக அனுப்புகிறார், அழகின் தத்துவத்தை நிலைநாட்டுவதற்காக. அன்பு நெறி மறைந்து மனித சமுதாயத்தில் மிருக புத்தி தாண்டவமாடும்போது, ஒரு புத்தனைத் தன் தூதனாக அனுப்புகிறார், காருண்யத்தை நிலைநாட்டுவதற்காக. சமய உணர்ச்சி வறண்டு, கடவுள் ஞானமற்று, உலகம் அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடந்தபோது, இறைவன் திருமூலரைத் தன் தூதனாக அனுப்பிச் செம்மை நெறியைப் பரப்பினார் என்றுதான் சொல்ல வேண்டும். தான் செய்யவந்த பணி இன்னது என்பதைத் திருமூலரே மிகுந்த நிச்சயத்தோடும், துணிச்சலோடும் சொல்கிறார்:

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

'இவ்வளவு ஞானமும், தெளிவும், நுட்பமும் எனக்குக் கொடுத்து இருக்கிறானே இறைவன், அதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? எல்லையற்ற டம்பப் பிரியனாகிய அவன், தனது கல்யாண குணங்களை எல்லாம் நல்ல, இனிய தமிழிலே இவன் பாட வேண்டும் என்ற நோக்கத்தோடுதானே என்னைத் தேர்ந்துவிட்டு இருக்கிறான்? ஆகையால் பாடுகிறேன்' என்று கச்சை கட்டிக்கொண்டு பாட ஆரம்பிக்கிறார்.

பாடின பாட்டு ஒன்று இரண்டல்ல, மூவாயிரம் பாடல்கள்! ஆண்டுக்கு ஒரு பாடலாக, மூவாயிரம் ஆண்டுகள் இருந்து, மூவாயிரம் பாடல்கள் பாடினார் என்பது வரலாறு. ஒவ்வொரு

பாட்டும் அவ்வளவு அருமையாக இருந்தபடியால் ஒரு பாட்டு உருவாகி வெளிவருவதற்கு ஒரு வருடமாவது பிடித்திருக்கும் என்று எண்ணி நமது முன்னோர்கள் இப்படி எல்லாம் கதை கட்டி அவரது நூலை ரசித்து உபசரித்தார்கள்.

கொஞ்ச காலமாகத்தான் தமிழ் நாட்டார் திருமூலரை அடியோடு மறக்க ஆரம்பித்தார்கள். அவர் பாடல்களில் உள்ள முடிச்சுக்களை அவிழ்ப்பது கஷ்ட சாத்தியமாகிவிட்டது. அவர் அடைத்து வைத்த பொக்கிஷத்தைத் திறப்பதற்கு திறவுகோலைத் தேடவேண்டி இருக்கிறது. அவரது பரிபாஷையில் பழக்கமுள்ள தமிழனே இல்லையோ என்ற ஐயம் ஏற்பட்டுவிட்டது. இருட்டு அறைக்குள்ளே இருக்கும் குருட்டுக் கிழவனைப்போல இழந்த சாவியைத் தேட முயற்சி செய்கிறது இந்தக் கட்டுரை.

மனிதன் தோன்றிய காலம் முதற்கொண்டு இன்று வரை எத்தனை எத்தனையோ தத்துவ சாஸ்திரிகள் இறைவனது தன்மையையும், சிருஷ்டி தத்துவத்தின் பண்புகளையும் கெஜக்கோல் கொண்டு அளந்துவிடலாம் என்று நம்பி அறிவு ஆராய்ச்சித் துறையில் இறங்கினார்கள். ஐரோப்பாவில் நியூட்டன், டார்வின் ஆகியோருடைய பூத, பௌதிக ஆராய்ச்சியின் விளைவாக பிரபஞ்சத்தின் சூட்சுமத்தைக் கண்டுவிட்டதாக மக்கள் கருதினார்கள். பிரபஞ்சம் தானே இயங்கக்கூடிய ஒரு யந்திரம், அதற்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் துணை இல்லாமலேயே அந்த யந்திரம் தான்தோன்றியாக அமைந்துகொண்டது. க்ரூட் ஆயிலும், பெட்ரோலும் இருந்தால் மனிதன் தன்னுடைய சக்தியால் தன் இஷ்டப்படி அந்த யந்திரத்தைத் தன்வசப்படுத்தி விடலாம் என்றெல்லாம் பகற் கனவு காண ஆரம்பித்தார்கள்.

ஆனால், ஐன்ஸ்டீன், ப்ளாங்க் (Planck) ஆகியோருடைய விஞ்ஞான ஆராய்ச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டுத் திமிரை எல்லாம் வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டது. நாம் பார்க்கிற பொருட்கள் அணுக்களாலும், பரம அணுக்களாலும் ஆனவை என்ற நம்பிக்கை போய், அவை எல்லாம் ஐம்புலன்களுக்குப் புறம்பான சக்தி அலைகள் என்ற சித்தாந்தம் பிறந்தது. உலகம் எல்லாம் ஒரு யந்திரம் என்ற முடிபு முறியடிக்கப்பட்டது. விஞ் ஞானிகளிடத்தில் இதற்கு முன் இல்லாத பணிவு பிறந்தது. விஞ் ஞானத்தின் சிறுமையைச் சிந்தனை செய்து பார்த்தார் ஐன்ஸ்டீன்.

"நாம் அறிந்த உலகத்தின் எல்லையில் நின்றுகொண்டு, அறியாத உலகத்தை எட்டிப் பார்க்கும்போது, அதன் பிரமாண்டமும்,

அகண்டமும் நம்மைத் திணறடிக்கிறது. நமது அறியாமையை நினைக்கும்போதே உடல் பதறுகிறது" என்று சொன்னார் அவர்.

இந்தப் பதற்றம் எல்லாம் திருமூலருக்கு ஏற்படவே இல்லை. இறைவனுடைய பரிபூரண அறிவோடு மனிதனுடைய சிற்றறிவை ஒப்பிட்டுப் பார்த்தவுடனேயே அவருக்கு உண்மை துலங்கிவிட்டது. தன்னுடைய அறியாமையின் ஆழத்தையும், அகலத்தையும் உணர்ந்த மாத்திரத்திலேயே, அவருக்கு உண்மையான ஞானம் பிறந்துவிட்டது. உடனே கும்மாளம் போட ஆரம்பிக்கிறார்.

"நான் மூவாயிரம் பாடல்கள் பாடப்போகிறேன். எதற்காக? என்னுடைய அறிவை உங்களுக்குச் செப்பிவிடலாம் என்ற நோக்கத்தோடா? இல்லை, என்னுடைய அறியாமையை சவிஸ்தாரமாக விளம்புவதற்காக" என்று ஆரம்பிக்கிறார் திருமந்திரத்தை.

ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை?
ஆர் அறிவார் இந்த அகலமும் நிகளமும்?
பேர் அறியாத பெருஞ் சுடர் ஒன்று அதன்
வேர் அறியாமை விளம்புகின்றேனே!

என்ன துணிச்சல்! அந்த ஏகாரத்திலே இருக்கும் தெம்பு எவ்வளவு! அறியாமையை உணர்ந்துவிட்டோம் என்ற தெம்புதான். ஆனால், அந்த உணர்ச்சியில் பரிபூரண ஞானத்தின் முத்திரையை அல்லவா காண்கிறோம்!

வேர் அறியாமை விளம்புகின்றேனே

-என்று நாக்கைச் சுழற்றி விழுகிறது முத்திரை.

சாக்ரடீஸ் என்ற கிரேக்க தத்துவ சாஸ்திரி, தன் தேசத்திலுள்ள பெரியோர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று, ஜவாப் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டு, அவர்களுடைய அறியாமையை விளக்கி வந்தார். எல்லோரும் அவருடைய விரோதிகள் ஆனார்கள், நமது அறியாமையைக் காட்டிக் கொடுக்கிறானே இவன் என்று. கடைசியாகப் பொய்க் குற்றம் சாட்டப்பட்டு நீதிபதிகள் முன் நிற்கிறார் சாக்ரடீஸ். மதத்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார் என்பது குற்றச்சாட்டு. நீதிபதிகளும் இவரிடத்தில் அகப்பட்டுக் கஷ்டப்பட்டவர்கள். சிரச்சேத தண்டனை கொடுக்க வேண்டும் என்றே கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். மேதாவி சாக்ரடீஸுக்கு விஷயம் தெளிவாகத் தெரிந்துவிட்டது.

தனது கடைசிப் பிரசங்கத்தில் அவர், "கிரேக்க தேசத்திலேயே பெரிய அறிவாளி நான் என்று டெல்பியில் இருக்கும் அசரீரி

சொன்னது. ஆனால், அப்படி ஒன்றும் அறிந்தவன் என்று என்னைச் சொல்லிக் கொள்ள முடியாது. நமது நாட்டில் இருக்கும் பல உத்தியோகஸ்தர்களும், அரசியல்வாதிகளும் தங்களைப் பெரிய அறிவாளிகளாக மதித்து வந்தார்கள். நான் அவர்களை அணுகி வாதித்துப் பார்த்ததில் அவர்களுடைய அறியாமை ஸ்தாபிக்கப் பட்டது. இந்த நாட்டில் நான் ஒருவன்தான் எனது அறியாமையை உணர்ந்தவன் என்று தெரிந்துகொண்டேன். ஆகவே, டெல்பி அசரீரி வாக்கு உண்மை என்றே இப்போது தோன்றுகிறது" என்றார்.

ஆகவே, தன்னுடைய அறியாமையை எப்போது மனிதன் உணர ஆரம்பிக்கிறானோ, அப்போதே அவனுக்கு நிலையான அறிவு பிறக்கிறது. இதைத்தான் வள்ளுவர்,

அறிதோறு அறியாமை கண்டற்றால்...

-என்றார். நேற்று வரைக்கும் பூமி தட்டையாக இருப்பதாக மனிதன் நினைத்து வந்தான். இன்று பூமி உருண்டையாக இருக்கிறது என்று அறிகிறான். நேற்றைய அறிவை இன்றைய அறிவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நேற்று இருந்தது அறியாமை என்று தெரிகிறது. இன்றைய அறிவை நாளைக்குக் கிட்டப்போகும் அறிவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இன்றைய அறிவும் அறியாமைதான் என்று விளங்கும். இவ்வாறு படிப்படியாக ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டே போகிறான். கடைசியாக,

சாட்டி நிற்கும் அண்டம் எலாம்
சாட்டை இலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் அண்ணலது

-அறிவோடு தனது அறிவை ஒப்பிட்டுப் பார்க்கிறான். பிறக்கிறது ஞானம்.

ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை

-என்று கூத்தாடுகிறான், திருமூலரைப்போல.

24. உடலும் உயிரும்

மனித வாழ்க்கையில் உயிருக்கும், உடம்புக்கும் உள்ள உறவு இருக்கிறதே, அது மிகமிக விசித்திரமானது. இந்த உறவைப் பொய் உறவு என்று சிலர் வெறுத்துத் தள்ளி இருக்கிறார்கள்; மெய் உறவு என்று கண்டு வாழ்த்தி இருக்கிறார் திருமூலர்.

திருமூலருடைய கொள்கையைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால், ஃப்ராய்ட் (Freud) முதலிய மேல் நாட்டு மனோ தத்துவ ஆசிரியர்கள், ஆல்டஸ் ஹக்ஸ்லி முதலிய பிரபல இலக்கியகர்த்தர்கள் இந்த உறவைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று சற்று பரிசீலனை செய்வோம். மனிதனுடைய ஆன்மாவுக்கு தனியான சுதந்திரம் என்று ஒன்றுமில்லை; அது முற்றிலும் உடலுக்கு அடிமைப் பட்டு இருக்கிறது. உடம்போ, தன்னைச் சுற்றி இருக்கும் சூழலுக்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. ஆகவே, ஆன்மாவானது அடிமைக்கு அடிமையாக இருந்து குற்றேவல் செய்கிற வஸ்துதான் என்று மேற் சொன்ன இருவரும் வற்புறுத்துகிறார்கள்.

ஏதோ, உடலைப் பாதிப்பது ஓரளவு மனதையும், உயிரையும் பாதிக்கும் என்பது உண்மைதான். அஜீரணத்தினால் நமக்குக் கோபம் வருவது சகஜம். வெள்ளைக்கார கவர்னர்களிடம் தயவு எதிர்பார்த்துச் செல்கிறவர்கள், உடலை வாட்டுகிற சென்னை நகரத்துக்குப்போய் அவர்களைப் பார்ப்பதில்லை. உடல் குளிர, உள்ளங் குளிர உதகமண்டலத்தில் இருக்கும்போது அவர்களைப் பேட்டி கண்டு வெற்றிகரமாக திவான் பகதூர் பட்டம் எல்லாம் பெற்று வந்திருக்கிறார்கள் நம் நாட்டு உள நூற்புலவர்கள்.

ஆனால், ஆன்மாவுக்குத் தன்னிச்சை என்பதே கிடையாது. உடம்பு சொன்னபடி எல்லாம் ஆடுகிறது என்ற கொள்கையைத்தான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. வாஸ்தவந்தான், இந்த இரண்டு தத்துவங்களுக்கும் இடையே நடக்கிற போராட்டத்தைப் பார்க்கும் போது நமக்கு ஓரளவு சோர்வு ஏற்படுகிறது; ஆன்மாவிடத்தில் நமக்கு அனுதாபங்கூட ஏற்படுகிறது. உயிரை அவமானப்படுத்தி, அதன் கொட்டத்தை அடக்க வேண்டும் என்றே இந்த உடம்பு நமக்கு ஏற்பட்டதோ என்றுகூடச் சந்தேகிக்கிறோம்.

தொண்டை கரகரப்பு, ஜலதோஷம், காசம், பக்கவாதம் இப்பேர்ப்பட்ட நோய்களை ஆயுதமாகக்கொண்டு, உடம்பு உயிர் மீது படை எடுக்கிறது. இந்த யுத்தம், உலகம் தோன்றிய நாள் முதல், ஒருதலைப் பட்சமாகவே முடிகிறது. இன்று, இல்லையேல் நாளை, உயிர் உடம்புக்கு இரையாகிறது; உணர்வு என்பது நீங்கி, மயக்கமும், அவஸ்தையும், வாயாலெடுப்புந்தான் மிஞ்சுகிறது. வாழ்க்கையில் ஆன்மாவுக்கு ஸ்தானம் இல்லை. எல்லாம், உடம்பும் அது செய்கிற அட்டூழியமுந்தான். இளமையில் மிகுந்த அழகோடு பொலிகிறது உடம்பு. முதுமையிலோ மசகு போடாத வண்டியைப்போல, மொழிக்கு மொழி திணறிக்கொண்டு நீச்சல் போடுகிறது. ஆகாயத்தில் கண்ணுக்குத் தெரியாமல் சஞ்சரித்துக்கொண்டு இருக்கிற கிருமிகள், கொக்கரித்துக்கொண்டு உடம்பில் புகுந்து,

விரைந்து பெருகி, அற்புதமான உடற் கருவிகளைப் புசித்து, உயிர்ச்சத்தைக் குடித்து, உடம்பை துவம்சம் செய்கின்றன.

மிஞ்சுவது என்ன? ஒரு பிடி சாம்பல், அரைப் பிடி கந்தகம், கொஞ்சம் சுண்ணாம்பு, ஒரு ராத்தல் கரி. அரசியலைப்பற்றி அவன் பேசிய வீரப் பேச்சுக்கள், தேனில் குழைத்தது போன்ற அவன் குரல் இனிமை, சுத்தப் பிரம்மத்தைப்பற்றிய அவனது சித்தாந்த நுட்பங்கள், திடீரென்று கொப்புளித்து மறையும் அவன் புன்முறுவல், கடவுளிடத்தில் அவன் வைத்திருந்த அபார பக்தி, இவ்வளவும் மறைந்து, மிஞ்சுவது என்ன? ஒரு பிடி சாம்பல், அரைப் பிடி கந்தகம், ஒரு ராத்தல் கரி. . . ஆன்மாவாவது! மண்ணாங் கட்டியாவது!

ஆனால், இந்த மண்ணாங்கட்டிக்குள் உயிர் எப்படி வந்து தொத்திக்கொண்டது? "அப்பத்தை எப்படிச் சுட்டாளோ? அதில் தித்திப்பை எப்படி வச்சாளோ?" என்றாளே, அந்தக் குழந்தையைப்போல, கேள்விக்குப் பதில் தெரியாமல், அதிசயத்தில் கேள்வியையும் மறந்துவிடுகிறோம்.

சலனமற்ற, அறிவற்ற, உயிரற்ற, அறுகு நுனி பனி அனைய சிறிய துளி ஒன்று கர்ப்ப வாழ்க்கையை ஆரம்பிக்கிறது. சிறிது காலத்தில் பனித் துளி ஜவ்வு மாதிரி உருவெடுக்கிறது. பின்னால், புழுவைப்போல் நெளிய ஆரம்பிக்கிறது. சில நாட்கள் கழிகின்றன; இறக்கை முளைத்த மீன்போலக் காட்சியளிக்கிறது. இந்த விசித்திர வஸ்துக்குள் ஓர் இதயம், அதற்குள் ஒரு துடிதுடிப்பு, உணர்வு - ஒரு நாள் இது பிறந்து, மீசை முளைத்த ஆண் மகனாக வளர்ந்து, இன்ப துன்பத்தை நுகர்வதும், காதலிப்பதும், வெறுப்பதும், நினைப்பதும், சிந்திப்பதும், கற்பனைக் கோட்டைகள் கட்டுவதும் - என்ன விசித்திரம்! அன்று உணர்வு இல்லாத ஜவ்வாக இருந்த ஒரு பொருள், இன்று 'இறைவன்' என்ற ஒரு பொருளைக் கற்பனை செய்து வணங்குகிறது.

இறக்கை முளைத்த மீனாக இருந்த ஒரு பொருள், நன்மை, தீமை என்ற இரு வினைகளைச் சீர் தூக்கி எடை போடுகிறது. புழுவைப்போல நெளிந்துகொண்டு இருந்த அது, இன்று சீதக் கதிர் மதி மேல் சென்று தேன் உண்ணுகிறது; இசை அலை மேல் மிதந்து நாதப் பிரம்மத்தை நாடுகிறது; கவிதையை ரசித்துக் கட்டுக்கு அடங்காத களிப்பு எய்துகிறது. இப்படி எல்லாம் செய்கிற ஆன்மா, புழு அடையும் பாண்டத்தோடு, ஒரு பிடி சாம்பலாகக் காத்திருக்கும் உடம்போடு ஏன் உறவுகொண்டது?

இந்தக் கேள்விக்கு அற்புதமான ஒரு விடை அளிக்கிறார் வள்ளுவர்:

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

அன்பே சொரூபமாக உள்ள ஒரு சக்தி, உலகங்களை எல்லாம் இயக்கி வருகிறது. அந்தச் சக்திதான் இந்த எலும்புக்கூட்டோடு ஆன்மாவைக்கொண்டுவந்து இணைத்திருக்கிறது. ஆகவே, அன்பை அடித்தளமாகக்கொண்ட இந்த உறவு வெறுக்கத்தக்கது அல்ல, பெரிதும் விரும்பத்தக்கது என்றார் குறளாசிரியர். வள்ளுவரின் வழித்தோன்றலாகிய திருமூலரும் இந்த மர்மத்தை உணர்ந்தவர். ஆல்டஸ் ஹக்ஸ்லிக்கு ஏற்பட்ட சந்தேகம் அவருக்கும் ஏற்படாமல் இல்லை.

உடம்பினை முன்னம் இழுக்கு என்றிருந்தேன்

-என்று சொன்னவர், அன்பின் திறத்தை உணர்ந்தவர் ஆகையால், உடலுக்குள் ஒரு புதுமையைக் கண்டார்.

உடம்பினுக்கு உள்ளே உறு பொருள் கண்டேன்

-என்று ஓலமிடுகிறார். கிறிஸ்துவ சமயத்திலும், 'தி இன்ட்வெல்லிங் காட்' (உடலுக்குள் உறையும் இறைவன்) என்ற சித்தாந்தத்தை ஒப்புக்கொள்கிறார்கள்.

உடலினுள் உத்தமன் கோயில்கொண்டு இருக்கிறான் என்ற உண்மையைக் கண்ட மாத்திரத்திலேயே திருமூலர், உடம்பு உயிரைக் காட்டிலும் மேம்பட்டது. அதை உரிய முறையில் ஓம்ப வேண்டும் என்று பறை சாற்றுகிறார்.

இந்த உடல் மூலம் பெறுகிற அனுபவங்களால் உயிர் உயர்ந்த நிலையை அடைகிறது. உயிரை உய்விக்கும் கருவியாக உடலைக் கருத வேண்டும். உடம்பார் அழிந்துவிட்டால், உயிரார் அழிவார், அனுபவமும் அழிந்துவிடும். ஆகவே, உடம்பை வளர்க்க வேண்டும். மிருகத் திமிரை வளர்க்கும் முறையில் உடம்பை வளர்த்தால், உயிருக்குப் பயனில்லை. ஆகையால், வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பை வளர்க்க வேண்டும்.

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே

-என்பது திருமந்திரம்.

உயிருக்கு இதமான முறையில் உடம்பை வளர்ப்பது எப்படி என்பதைப்பற்றிப் பல பாடல்கள் பாடி இருக்கிறார். இங்கேதான், 'சாவியை இழந்துவிட்டோமே, அர்த்தம் புரியவில்லையே' என்று கையை விரிக்கவேண்டி இருக்கிறது.

ஆல்பெர்ட் ஷ்வைட்ஸர் என்ற ஜெர்மன் தத்துவ ஞானி உலக சமயங்களை எல்லாம் இரண்டு வகையாகப் பிரிக்கிறார். ஒன்று, கடவுள் மாத்திரமே உண்மை; வாழ்க்கை, உடம்பு எல்லாம் பொய் என்று கருதுவது. மற்றொன்று, கடவுள் உண்மை; அவர் அமைத்த வாழ்க்கையும் உண்மை என்று கருதுவது. எது சரி, எது தப்பு என்று சொல்வது கஷ்டமான காரியம்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். வாழ்க்கை பொய் என்று கருதுகிறவர்கள் இமயமலைச் சாரலில் உள்ள பனிக் குகைகளை நாடிச் செல்வார்களே ஒழிய, வாழ்க்கையைத் திருத்தி அமைப்பதிலோ, மக்களுக்குச் சேவை செய்வதிலோ, நோயோடும், வறுமையோடும் போராடுவதிலோ மனதை ஈடுபடுத்த மாட்டார்கள். வாழ்க்கை உண்மையானது, தன்னலமற்ற பரிபூரணமான வாழ்க்கையின் மூலம்தான் ஆன்மாவுக்கு விமோசனம் உண்டு என்று நினைக்கிறவர்கள் சமூக சேவையில் உற்சாகத்தோடு ஈடுபடுகிறார்கள்.

ஷ்வைட்ஸர், 'மேல் நாடுகள் வறுமையையும், பிணியையும் வென்று உன்னதமான வாழ்க்கை நடத்தி வர, கீழ்நாடுகளில் உயர்ந்த வாழ்க்கைத் தரம் இல்லாமல் இருப்பதற்குக் காரணம், சமயக் கோட்பாட்டின் வேற்றுமைதான்... ஆனால், தமிழ் நாட்டில் மாத்திரம் வாழ்க்கையின் உண்மையை அறிந்த பல ஞானிகள் இருந்திருக்கிறார்கள்' என்று 'இன்டியன் தாட்' என்ற நூலில் ஒப்புக்கொள்கிறார். அவர் ஒப்புக்கொள்வதற்கு இணங்க திருமூலரும் மனிதனை நடமாடும் கோயில் என்றே கூறி இருக்கிறார். 'படங்களும், சிலைகளும் உள்ள கோயிலில் இறைவனைச் சேவிப்பதைக் காட்டிலும், நடமாடும் தெய்வமாக இருக்கும் மக்களுக்குச் சேவை புரிவதே மேல். மனித சமுதாயமே நான் வணங்கும் ஈச்வர சந்நிதானம்' என்று மிகுந்த துணிச்சலோடு பாடுகிறார்:

படமாடற் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்,
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா;
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்,
படமாடற் கோயில் பகவற்கு அது ஆமே.

அதி தீவிர நாஸ்திகப் புரட்சிவாதிகள்கூட சமூக சேவைக்கு இவ்வளவு அழுத்தம் கொடுத்ததில்லை. பெர்ட்ரன்ட் ரஸ்ஸல் போன்ற நாஸ்திகர் சொல்வது எல்லாம், "ஆன்மா, கடவுள் என்பதைப்பற்றிக் கவலையில்லை. தன்னலமற்ற சேவையில் தனியான இன்பம் இருக்கிறது. ஆகையினால், அதைச் செய்ய வேண்டும்" என்பதே. இந்தக் கொள்கையில் ஒரு வறட்சி இருக்கிறது. சமூக சேவையினால், மனதிலே ஓர் இன்பம் மாத்திரமல்ல,

ஆன்மாவுக்கு வளர்ச்சியும் ஏற்படுகிறது என்று திருமூலரோடு நாம் நம்பினால், தொண்டு செய்வதில் நாஸ்திகர்களைக் காட்டிலும் பன்மடங்கு உற்சாகமும், சோபையும் நமக்கு ஏற்படும் அல்லவா?

25. நானும் தானும்

தக்காளி விதை துக்கிணிபோல் இருக்கும்; மிக மிகச் சிறியது. ஆனால், அதை மண்ணில் விதைத்து நீர் பாய்ச்சிக்கொண்டே இருந்தோமானால், அது செடியாக வளர்ந்து, பூத்துக் குலை குலையாகக் காய்க்கத் தொடங்கிவிடுகிறது. காயும், பூவும், செடியும் அந்தச் சின்னஞ்சிறிய வித்துக்குள்ளிருந்தா வந்தன?

மண்ணுக்குள் இருக்கும் உப்பையும், நீரையும் தக்காளிச் செடியின் வேர் இழுத்துக்கொள்கிறது. ஆகாயத்திலிருந்து சில வாயுக்களைச் செடியின் இலைகள் வாங்கி உட்கொள்கின்றன. இந்தப் பரிவர்த்தனையால், தக்காளிக்கு லாபம்; அது பருத்துப் பெருகுகிறது. ஜடப் பொருட்களுக்கும் லாபம்; அவை உயிர்பெற்று மேல் நிலையை அடைகின்றன. முன்னம் உயிர் அற்றிருந்த கல்லும், மண்ணும், காற்றும், நீரும் இப்போது தக்காளியோடு இரண்டறக் கலந்து, தக்காளியாகவே மாறிவிட்டன. இப்படியாக, ஜடப் பொருட்களுக்குத் தீட்சை கொடுத்துக் கைதூக்கிவிடுகிறது தக்காளி.

இந்த விந்தையைப் பார்த்தார் ஒரு ஞானி. உயிரற்ற தண்ணீரும், காற்றும் உயிருள்ள தக்காளி விதையைப் பார்த்து, "எங்களையும் உன்னோடு சேர்த்துக்கொள்; எங்களுக்கும் உயிர்ப் பிச்சை கொடு" என்று கேட்பதுபோல் தோன்றின. ஊனுக்குள் (அதாவது ஜடப் பொருட்களுக்குள்) உயிரை நாடும் ஆசையையும் முனைப்பையும் வைத்தவன் யார்? இறைவனேதான். அந்த ஆசைக்குள் இறைவனல்லவா இருந்து இயங்குகிறான் என்று கண்டார் ஞானி. இந்த முடிவுக்கு வந்த ஞானி இறைவனைப் பார்த்துப் பாடுகிறார்–

ஊன் தேடும் உயிரேயோ!

மற்றொரு காட்சி ஞானியின் இதயத்தில் உருவாகிறது. டைபாய்ட் காய்ச்சலிலே 21 நாள் கஷ்டப்பட்ட நோயாளி ஒருவன்; செத்துப் பிழைத்தவன். அவனுக்கு மறுபடியும் மூன்று வாரம் காய்ச்சல் அடிக்கிறது. உருக்குலைந்து, பாயோடு பாயாக, வாலுந்தோலுமாகக் கிடக்கிறான். கண் பஞ்சடைந்துவிட்டது; உற்றார் உறவினரைக்கூட

இனங்கண்டுகொள்ள முடியவில்லை. இசை நுணுக்கங்களை ஆய்ந்து அனுபவித்த அவனுடைய காது அடைத்துச் செவிடாகிவிட்டது. மற்ற இந்திரியங்களும் மேற்படி, மேற்படிதான்.

இந்த நிலையில் இருக்கும் நோயாளிக்குத் தக்காளி சூப்பை மருத்துவர்கள் கொடுக்கிறார்கள், கால் கரண்டி, அரைக் கரண்டியாக. கொஞ்சங் கொஞ்சமாக அவனுடைய உடல் தேறி வருகிறது. பத்து நாட்களில், நண்பர்களை இனங்கண்டுகொள்ளத் தொடங்குகிறான்; 'வாருங்கள்' என்று உணர்வோடு வரவேற்கிறான்; சங்கராபரண ராகத்தைக் கேட்டு, சபாஷ் போட ஆரம்பிக்கிறான். என்ன விந்தை இது! அன்று உயிர் மாத்திரம் ஓடிக்கொண்டு இருந்த அவனுடைய உடம்புக்குள், இன்று உணர்வு எப்படி வந்து தொத்திக்கொண்டது?

யோசனை செய்து பார்க்கிறார் ஞானி. தக்காளி சூப் அந்த மனித தத்துவத்தோடு கலந்து, கண்ணுக்கு ஒளியும், காதுக்கு ஒலியும், மனதுக்கு உணர்வையும் கொடுத்துவிட்டது. அப்படியானால், உணர்வற்ற தக்காளி, உணர்வு பெற்றுவிட்டது என்றுதானே சொல்ல வேண்டும்? எப்படிக் கல்லும், மண்ணும், நீரும், காற்றும் தக்காளியை அண்டி உயிர்ப் பிச்சை பெற்றனவோ, அப்படியே தக்காளியும், மனிதனை நோக்கித் தவமிருந்து, உணர்வுப் பிச்சையைப் பெற்றுவிட்டது. உயிர் மாத்திரமுள்ள தக்காளி, இப்போது உணர்வுபெற்றுச் சங்கராபரணத்தை அனுபவிக்கக் கற்றுக் கொண்டது. அதற்கு உணர்வுத் தேட்டத்தைக் கொடுத்தவன் யார்? இறைவனேதான்.

இப்போது தெளிந்துவிட்டது ஞானிக்கு, அந்தத் தேட்டத்துக்குள் இறைவன் இருக்கிறான் என்று.

ஆகவே, பாடுகிறார்:

ஊன் தேடும் உயிரேயோ,
உயிர் தேடும் உணர்வேயோ!

ஊன் உயிரைத் தேடிப் பெற்ற பிறகும், உயிர் உணர்வைத் தேடிப் பெற்றபிறகும், தேட்டம் விட்டபாடாக இல்லை; மண் தக்காளியாகி, தக்காளி மனிதனான பிறகும், மனிதன் அதி மனிதனாக விரும்புகிறான். உணர்வைத் தீட்டித் தீட்டி, அண்டத்தையும், பிண்டத்தையும் ஆராய்ச்சி செய்கிறான்; கலைகளை ஆய்கிறான்; ஞான நூல்களைத் (மறைகளை) தேடி அலைகிறான்.

உணர்வில் தெளிவுபெற்ற மக்களை வானவர்கள் என்று அழைத்தார்கள் நம் முன்னோர்கள். மறைந்துகிடக்கும் உண்மைகளை, உணர்வு என்ற பாதாளக் கரண்டி போட்டுத்

துழாவுகிறார்களே, அவர்களுடைய தேட்டத்தில்தான் இறைவன் குடி இருக்கிறான்:

வான் தேடும் மறையேயோ!

ஆனால், அந்த மறைகளோ செம்பொருளாகிய இறைவனைத் தேடித் தேடி அலைகின்றன. அவ்வாறு தேடச் செய்தவனும் இறைவனே.

மறை தேடும் பொருளேயோ!

இப்படியாக, ஞானியின் காட்சியிலே, ஒரு முடிவற்ற ஓட்டப் பந்தயம், தேட்டப்பந்தயம் நடந்துகொண்டு இருக்கிறது. இந்தப் பந்தயத்தில் பேரண்டமே கலந்துகொள்கிறது. இறைவனும் கலந்துகொள்கிறான்.

“கள்ளனைப் பிடி, பிடி” என்று கத்திக்கொண்டு ஓடுகிறது மக்கள் கூட்டம். அந்தக் கூட்டத்தின் நடு மத்தியில் இருந்துகொண்டு, “விடாதே, பிடி” என்று கள்ளனும் கத்திக்கொண்டு ஓடுகிறான். இதையும் பார்த்து அனுபவிக்கிறார் ஞானி:

தான் தேட, ஜகம் எலாம் உடன் தேட

-என்று பாடுகிறார்.

இந்தக் காட்சியிலே உள்ளத்தைப் பதித்து வைத்துக்கொண்ட ஞானிக்கு ஒரு பேருண்மை பளிச்சென்று புலப்படுகிறது.

இந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடி ஓடி இளைத்தேனே. ‘நான்’ (ஆணவம்) என்றும், தான் (இறைவன்) என்றும் நினைத்துக் கொண்டல்லவா நான் ஓடுகிறேன்? என்ன மடமை இது! எனக்குள் இருந்துகொண்டு தேடவைப்பவன் அவன் அல்லவா? நான், ‘தானை’த் தேடுவதா? நான் வேறு, தான் வேறா?

. . . தன்னைத்தான் நான் தேடி நான் காண,
நான் ஆரோ, தான் ஆரோ!

-என்று முடிவு கட்டுகிறார்.

டார்வினுடைய பரிணாம நெறி, வாழ்க்கையின் குறுகிய அம்சம் ஒன்றைத்தான் விளக்குகிறது. ஆனால், ஞானியின் பரிணாம நெறியோ, மண்ணையும், விண்ணையும் ஆரத் தழுவி பரிபூரணத்தையே விளக்கிவிடுகிறது. பாடல் முழுவதையும் பார்த்தால் இந்த உண்மை தெளிவாகும்.

ஊன் தேடும் உயிரேயோ, உயிர் தேடும் உணர்வேயோ,
வான் தேடும் மறையேயோ, மறை தேடும் பொருளேயோ,
தான் தேட, ஜகம் எலாம் உடன் தேட, தன்னைத்தான்
நான் தேடி, நான் காண நான் ஆரோ, தான் ஆரோ!

இதே உண்மையை எக்ஹார்ட் (Eckhart) என்ற ஜெர்மன் ஞானியும் சொல்கிறார். இறைவனை வணங்கிக்கொண்டு இருந்த போது, இந்தத் தெளிவு அவருக்கு ஏற்பட்டது. "இறைவா, நானா உன்னை வணங்குகிறேன்? இல்லை. நீயே உன்னை வணங்கிக் கொள்கிறாய் (Am I worshipping Thee, my Lord? No, Thou art worshipping Thyself)" என்று சொன்னார். இளைத்துப்போன உரைநடையிலே சொன்னார்.

உள்ளுணர்வோடு உண்மையைக் காணும்போது எல்லாம், அதைப் பாட்டிலே பாடித் தெள்ளேணம் கொட்டுவதே நம் முன்னோர்கள் மரபு. இதே விஷயத்தைத் திருமூலர் எப்படி அனுபவிக்கிறார் என்று பார்ப்போம்...

'நான்' வேறு, 'தான்' வேறு என்று தவறாக நினைத்துக்கொண்டு இறைவனைத் தேட ஆரம்பித்தார் திருமூலர். தேடிக்கொண்டு இருக்கும்போது, உள்ளிருக்கும் இறைவன், 'நான் என்றும், தான் என்றும் இரண்டு இல்லை' என்பதை அவருக்கு உணர்த்திவிட்டான். அந்தக் கணத்திலேயே, 'நான்' என்ற நினைப்பு அவரைவிட்டு ஒழிந்தது.

நான் என்றும் தான் என்றும் நாடினேன், நாடலும்
நான் என்று தான் என்று இரண்டில்லை என்பதை
'நான்' என்ற ஞான முதல்வனே நல்கினான்;
நான் என்று நானும் நினைப்பு ஒழிந்தேனே

-என்று வியந்து பாடுகிறார்.

'நான்' என்ற வில்லங்கம் அற்ற பிறகு, வணங்குவதற்கு ஆள் கிடைக்கவில்லை திருமூலருக்கு.

நான் வரைவற்றபின் யாரை வரைவது?
'நான்', 'அவன்' ஆனபின் யாரை நினைவது?

-என்று சொல்லிக் கொட்டம் அடிக்கிறார்.

பார்ப்பவன் வேறு, பார்க்கப்படும் பொருள் வேறு என்ற துவைத நிலையில், கடவுள் வழிபாட்டுக்கு இடம் இருக்கிறது; இந்த நிலையில் தவமும் தியானமும் அர்ச்சனையும் செய்துகொண்டே இருக்கலாம். இரண்டு தத்துவமும் ஒன்றாகிவிட்டால் தவம் ஏது? தியானம் ஏது? அர்ச்சனை ஏது?

ஆணவ மயக்கத்தை இழந்து, பரம்பொருளோடு இரண்டும் ஒன்றறக் கலந்த பிறகு, திருமூலருக்கு இந்த நிலை ஏற்படுகிறது.

தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தேனே

-என்று கூத்தாடுகிறார். இதுவே பேரின்ப நிலை; 'நான்' அற்றுத் 'தான்' ஆகும் நிலை.

26. ஓயாத காவடி

கை நிறைய உப்பை அள்ளிக் கடலில் வீசுகிறோம். அது கரைந்து மறைந்துவிடுகிறது. அதைக் கண்டு அனுதாபப்படுவானேன்? உப்பு தன்னையா இழந்தது? இல்லை. தன் சிறுமையை இழந்து பரிபூரணத்தை அடைந்துவிட்டது.

கை நிறைய வாழ்க்கையை அள்ளி, மரணக் கடலில் வீசுகிறான் காலதேவன். வாழ்க்கை கரைந்து, விரிந்து பரிபூரணத்தை அடைகிறது. இதைக் கண்டு கண்ணீர் வடிப்பானேன்?

மரணம் மனிதனுடைய பிறப்புரிமை. மயானமே அவனுடைய ஜன்ம பூமி. மனித சரித்திரத்தை எழுதுகிறவர்கள் பிறப்பிலிருந்து தொடங்கி இறப்பில் முடிக்கிறார்கள். என்ன கோமாளித்தனம் இது? இறப்பிலிருந்து தொடங்கிப் பிறப்போடு அல்லவா அவனுடைய உண்மையான வாழ்க்கை முடிவடைகிறது என்று கேட்கிறார் மாரிஸ் மெய்டர்லிங்க் (Maurice Maeterlinck) என்ற பெல்ஜிய தத்துவஞானி.

காச நோயினால் நரக அவஸ்தையில் இருக்கிறான் ஒரு கிழவன். அவஸ்தையைப்பற்றிக்கூட அவனுக்குக் கவலையில்லை. கஷ்டப் பட்டுக்கொண்டாவது உயிரோடு இருந்தால் போதும். உயிரைப் பிடித்து உடம்பில் எப்படியாவது நிறுத்திவிட வேண்டும் என்று மல்லாடுகிறான். சாவின் நிழல் அவன்முன் தோன்றித் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்கிறது.

அதைக் கண்டவுடன், “ஐயையோ” என்று ஓலமிடுகிறான் கிழவன்.

“பயப்படாதே. நான் உன் நண்பனாச்சே. உன்னை உய்விக்க அல்லவா வந்து இருக்கிறேன்!”

“நீ சுடுகாட்டிலிருந்து எப்போது வந்தாய்?”

“சுடுகாடா? சே, சே. பிண நாற்றம் என்றாலே எனக்குப் பிடிக்காதே. சுடுகாட்டைக் கண்டாலே எனக்குப் பயம். செத்தவர்களிடத்தில் எனக்கென்ன வேலை? வாழ்கிறவர்களிடத்தில் அல்லவா நான் சல்லாபம் செய்கிறவன்?” என்று பதிலளிக்கிறது நிழல்.

மரணம் என்பது நம்மோடு உடன்பிறந்தது; நம்மிடமிருந்து இணை பிரியாமல் இருப்பது; ‘பால் நினைந்தூட்டும் தாயை’ப்போல, பரிவுடன் மார்போடு அணைத்து நம்மைக் கண்காணிப்பது. உயிர்த்

தத்துவமும், மரண தத்துவமும், ஊடும் பாவுமாகப் பின்னிக் கிடப்பதே மனித வாழ்க்கை என்பதை மெய்டர்லிங்க் தம்முடைய நாடகங்களில் அடிக்கடி வற்புறுத்துகிறார்.

அவருடைய சித்தாந்தத்தைப் படிக்கும்போது மரண பயம் குறைய ஆரம்பிக்கிறது. சாவு என்பது கொடுக்கு இழந்த தேள்போலக் காட்சியளிக்கிறது. சுடுகாட்டின் சலசலப்புக்கு அஞ்சி இருந்த நமக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்துவிடுகிறது. ஆகவே, நமக்கே உரிய மடத்தனத்தில் மறுபடியும் நாம் ஆழ்ந்துவிடுகிறோம். ஞானத்தைப் புகட்ட வந்த பெல்ஜிய தத்துவ ஞானி உண்மையில் தோல்வியடைந்துவிடுகிறார்.

ஆனால், திருமூலரோ மரண பயத்தை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு, மனிதனைக் குடல் பதறும்படி செய்து, அவனுடைய மடமையைச் சிதறடித்து, வாழ்க்கையின் அடிப்படையைப்பற்றிய சிந்தனையில் அவனை ஆழ்த்திவிடுகிறார்.

ஆயிரம் சொன்னாலும் மனிதனுக்கு சுய உணர்வு ஏற்படுவது இல்லை. ஏற்பட்டாலும், நிலைத்து நிற்பதில்லை என்பதைத் திருமூலர் உணர்ந்தவர். இறப்பு - பிறப்பு என்ற காவடியைத் தூக்கிக் கொண்டு, அலுப்புத் தட்டினாலும், அதை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு, கால வட்டத்தில் வளைய வளையச் சுற்றி வருகிறான் மனிதன். இந்த அசட்டுக் குடைராட்டினத்துக்கு ஓய்வு என்பதே இல்லையா? ஓய்வைப்பற்றிய சிந்தனையுமா அஸ்தமித்துப் போக வேண்டும்?

சாவைப்பற்றிச் சொன்னால் மாத்திரம் கொஞ்சம் நிமிர்ந்து உட்காருகிறான் மனிதன். ஆகவே, மரண பயத்தைக்கொண்டுதான் அவனைத் திடுக்கிடச் செய்து, வழிக்குக் கொண்டுவர வேண்டும். ஆட்டைக் காட்டிப் புலியைப் பிடிப்பதுபோல், மரணத்தைக் காட்டி ஞானத்தைக் கிளறிவிட வேண்டும் என்று உணர்ந்து திட்டம் வகுக்கிறார் திருமூலர்.

உயிரைப்பற்றியும், இறைவனைப்பற்றியும் ஆராய்ச்சி செய்வது எல்லாம் பென்ஷன் வாங்கின பிறகு பார்த்துக்கொள்ளலாமே என்று நினைக்கிறோம். ஆனால், சாவுக்கு நம்முடைய நல்ல எண்ணம் தெரியவா போகிறது? முன்னெச்சரிக்கை இல்லாமல், உத்தியோகம், ஓய்வு என்று பாராமல், வயோதிகன், இளைஞன் என்று கருதாமல் மரணம் திடும் பிரவேசம் செய்கிறதே!

மனைவி விருந்து சமைத்து வைத்திருந்தாள். சுவையோடு உணவருந்தினான். சுகித்திருந்தான் கொஞ்சநேரம். இடது மார்பில் கொஞ்சம் வலி எடுத்தது. 'அப்பாடா' என்று படுத்தான். ஒரே போக்காகப் போய்விட்டான்.

அடப் பண்ணி வைத்தார், அடிசிலை உண்டார்,
மடக் கொடியாரொடு மந்தணம் கொண்டார்,
இடப் பக்கமே இறை நொந்ததே என்றார்,
கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந்தாரே!

விருந்துண்டவன் கழுகுக்கும் ஓநாய்க்கும் விருந்தானான்.

சுக போகங்களில் தோய்ந்து புளிச்ச ஏப்பம் விட்டுக்கொண்டு இருக்கும் திண்ணைத் தூங்கிகள் கதியே இதுதான். 'மரணம் இப்படியா திடீரென்று வந்துவிடும்?' என்று நாம் நினைக்கிறோம். திருமூலருக்கு நம்முடைய கள்ளத்தனம் தெரிந்துவிடுகிறது. இன்னொரு நாடகத்தைச் சித்தரிக்கிறார்.

விறகு வெட்டி ஒருவன் - ஏழைப் பாட்டாளி மகன்தான். கத்தியை எடுத்துக்கொண்டு கீரைப் பாத்திக்குப்போய் அரைக் கீரை விதை கொய்து வருகிறான். மரத்தில் ஏறி ஒரு கொத்து அத்திப்பழம் கொண்டு வருகிறான். அவனுடைய மனைவி அத்திப் பழத்தையும், அரைக்கீரை நல் வித்தையும் பக்குவமாகக் கொத்தி, கம்பங் கூழோடு சேர்த்துக் காய்ச்சி உலையிலிருந்து இறக்கி வைக்கிறாள். கஞ்சி ஆறிக்கொண்டே இருக்கிறது. உண்ணுவார் அற்று ஆடை படர்கிறது. ஏன்?

விறகு வெட்டியின் கட்டை சுடுகாட்டில் ஊடுருவ வெந்து கொண்டு இருக்கிறது. அவன் செத்தது பெரிய காரியமில்லை. இந்தக் கலயத்துக்குள்ளே நடக்கிற ரசமான விந்தையைப் பாருங்கள்; சாவைக் காட்டிலும் எவ்வளவு அற்புதமானது! கூழை உண்ணுவதற்கு விறகு வெட்டி இல்லாவிட்டால் என்ன? அரைக்கீரை வித்து ஊடுருவ வெந்த அத்திப்பழத்தை உண்டு களிக்கிறது.

அத்திப்பழமும் அரைக்கீரை நல் வித்தும்
கொத்தி உலைப் பெய்து கூழிட்டு வைத்தனர்;
அத்திப்பழத்தை அரைக்கீரை வித்து உண்ணக்
கத்தி எடுத்தவர் காடு புக்காரே

பொல்லாதவர் இந்தத் திருமூலர். இம்மி இடங் கொடுக்காமல் பேசுகிறாரே! சாவினின்று ஒரு மனிதனுக்கும் விடுதலை என்பது கிடையாதா? விதி என்று ஒன்று இருந்தால், அதற்கு விலக்கு என்பது இல்லையா? தயை தாட்சண்யம் இல்லாமல், 'இல்லை' என்ற பதிலை அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் அவர்.

நாட்டுக்கு எல்லாம் அரசனாக இருந்தான்; ராஜ வைத்தியம் நடந்தது. ஆனால், அவன் உயிரைப் பிடித்து நிறுத்தவா முடிந்தது? இல்லை. அவன் ஊரைச் சுற்றி பவனி வரும்போது, மேனகையும் ஊர்வசியும் நடனமாட நாட்டில் உள்ள சிற்றரசர்கள் திரள்

திரளாகக் கூடி முன்னே செல்ல, வாத்தியங்கள் இன்னிசை முழங்க, முத்துப் பல்லக்கில் சொகுசாக வருவான். ஆனால், இன்று அவன் போகிற கோலத்தைப் பார்த்தீர்களா? பவனிக்கு முன்னே செல்ல வேண்டியவர்கள், முக்காடிட்டுச் சிவிகைக்குப் பின்னே செல்கிறார்கள். முன்னே, பரதநாட்டியத்துக்குப் பதில் பறைக் கொட்டு ஓலமிடுகிறது. முத்துப் பல்லக்குக்குப் பதில் காட்டுச் சிவிகை. அதிலே சுயேச்சையோடு ஏறிக்கொண்டு செல்கிறானாம். யார்? நாடெல்லாம் 'நாயகன்', 'நம்பி' என்று போற்றிவந்த மன்னாதி மன்னன்.

நாட்டுக்கு நாயகன், நம்மூர்த் தலைமகன்,
காட்டுச் சிவிகை ஒன்று ஏறி – கடைமுறை
நாட்டார்கள் பின் செல, முன்னே பறை கொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்றவாறே.

"பேஷ் பேஷ். நம்பி நடக்கும் நடையைப் பாருங்கள்" என்று நம் முதுகைத் தட்டி கவனிக்கச் சொல்கிறார் நம்மாசிரியர். நம்முடைய ஈரற் குலை எல்லாம் 'பகிர்' என்கிறது. இந்த அதிர்ச்சி குறைவதற்கு முன்னால், ஆத்திரத்தோடு வருகிறது அடுத்த பாட்டு.

நாம் இறந்துவிட்டால் உலகமே முழுகிப் போகும் என்று நாம் நினைக்கிறோம். உலகம் இருக்கட்டும்; நம் பெண்டு பிள்ளைகளாவது நமக்காக உயிரைத் துறப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். "அப்படி எல்லாம் எதிர்பார்க்காதே" என்று ஜாக்கிரதை செய்கிறார் திருமூலர்.

மிஞ்சிப்போனால் அவர்கள் என்ன செய்வார்கள்? ஊரை எல்லாம் திரட்டி ராகம், தாளம் தட்டாமல் ஒப்பாரி வைப்பார்கள். அதில் எதுகை, மோனைகளை விரவித் தங்கள் திறமையைக் காட்டுவார்கள். அதற்கு மேலே, அந்தப் பாதகர்கள் நம்முடைய பெயரைக்கூடப் பிடுங்கி, நமக்குப் 'பிணம்' என்று நாமகரணம் சூட்டுவார்கள். இந்த அக்கிரமத்தைத் தடுப்பதற்குக்கூட நம் கட்டைக்கு ஸ்மரணை கிடையாது. எத்தனை கெஜட்டில் விளம்பரம் செய்தால் என்ன? பிணம் என்ற பெயரை மாற்றவா முடியும்! அந்தப் பிணத்தைத் தைலமாட்டி, ஞாபகார்த்தத்துக்காவது, வீட்டில் ஒரு மூலையில் வைத்துக்கொள்ளக் கூடாதா? வைக்க மாட்டார்கள் அந்தக் கிராதகர்கள். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த உடம்பைத் தீக்கு இரையாக்குவார்கள்; தொலையட்டும். வெந்து நீரான பிறகாவது, நம்மை நினைக்கப் போகிறார்களா? அம்மி மிதித்து அருந்ததி காட்டி, அக்னி சாட்சியாக நாம் மாலையிட்ட மனைவி என்ன செய்வாள்? நீரில் ஒரு 'முங்காச்சி' போட்டு, நம்மையும் நம்மைப்

பற்றிய ஞாபகத்தையும் அதிலேயே கரைத்துவிட்டு, 'இறந்தான், ஒழிந்தான், அவன்' என்று நினைத்துக்கொண்டு போய்விடுவாள். இந்த நீதி இல்லாருடைய நீலித்தனத்தைப் பார்த்தீர்களா?

ஊரெல்லாங் கூட்டி, ஒலிக்க அழுதிட்டு,
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு,
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே.

மயானத்துக்கு அப்பால் எட்டி அடி வைக்க மாட்டார்கள் நம் சுற்றத்தார். துணை அற்றவர்களாக, தன்னந்தனியராகத்தான் மயானத்துக்கு அப்பால் இருக்கும் உலகத்துக்குச் செல்ல வேண்டும். அது எப்பேர்ப்பட்ட உலகம்? சாகாமல் இருக்க முடியாதா? செத்தாலும் பிறவாமல் இருக்க முடியாதா? அல்லது, 'சாவதும் பிறப்பதும் காவடிபோல் ஆச்சு' என்று சிந்து பாடிக்கொண்டு ஓயாமல் காவடி தூக்குவதுதான் நம் தலைவிதியா? இதற்கு எல்லாம் திருமூலர் தகுந்த விடை அளிக்கிறார்.

27. கள்ள வாசல்

நாம் எல்லாம் உலகத்தோடு ஊடாடுவதற்காக, உடலில் ஐந்து வாசல் வைத்து இருக்கிறது. ஆனால், இந்த வாசல்கள் வழியாக உலகத்தை எட்டிப் பார்ப்பவர்களுக்கு, உள்ளதை உள்ளபடி உணர முடியாது என்று சிவவாக்கியர் கருதுகிறார். இந்த உடலிலேயே ஒரு கள்ள வாசல் இருக்கிறது. சாமானிய மக்களால் அதைக் காண முடியாது. அந்த வாசலைத் திறந்து பார்த்தால்தான் பேருண்மையை நேரடியாகத் தரிசனம் செய்யலாம் என்ற கருத்தை,

கள்ள வாசலைத் திறந்து காண வேணும் மாந்தரே

-என்று சிவவாக்கியர் பாடுகிறார்.

அந்தக் கள்ள வாசல்தான் எது? பஞ்சேந்திரிய வாசல்களை நன்றாகத் திறந்து பார்த்தால், உண்மையைக் கண்டுவிட முடியாதா? விஞ்ஞானக் குன்று ஏறி, அதன் கொடுமுடியில் நின்று, அணுகுண்டை வைத்து அம்மானை ஆடும் இருபதாம் நூற்றாண்டு மனிதனுக்கா முடியாது! வெறும் பத்தாம் பசலிப் பேர்வழியாக இருக்கிறாரே, இந்த சிவவாக்கியர்!

மீன் தட்டையாக இருக்கிறது; அதற்கு அகலம் உண்டு. நீளம் உண்டு. ஆனால், உயரம் அனேகமாக இல்லை என்றே

சொல்லிவிடலாம். ஆகவே, தட்டையாக இருக்கும் காரணத்தால், மீனுக்கு அகலமும் நீளமும்தான் புலப்படுமே ஒழிய, உயரம் புலப்படாது. மீனாட்சி அம்மன் கோபுரத்தையே முன்னால் நிறுத்தி வைத்தாலும், அது தட்டையாகத்தான் தெரியும் அந்த மீனுக்கு. ஆகவே, உள்ளதை உள்ளபடி அதற்குப் பார்க்கத் தெரியவில்லை. அதற்குக் கொடுத்து வைத்ததெல்லாம் அரைகுறைப் பார்வைதான்.

ஆனால், மனிதன் மிக்க திறமைசாலி. அவனுடைய பார்வைக்கு உயரம் என்ற அளவையும் தெரிகிறது. ஆனால், காலம் என்ற அளவையோ அவனுக்குப் பிடிபடுவதில்லை. ஆகாய விமானம் போன்ற ஒரு வாகனத்தில் ஏறிச் சென்று நாளை நடக்கப் போவதை அவனால் எட்டிப் பார்க்க முடியவில்லை. அப்படியானால், அவனுடைய பார்வையும் ஒன்றரைக் கண் பார்வைதானா?

மனிதன் சமர்த்தானவன். ஆனால், உலகத்தை அளப்பதற்காக அவன் வைத்துக்கொண்டு இருக்கிற அளவுகோல்தான் குறைபாடு உள்ளதாக இருக்கிறது.

யானையின் தோலில் எத்தனையோ வெடிப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு வெடிப்பும் பேன்களுக்கு வாசஸ்தலமாக அமைந்து இருக்கிறது. பேனுடைய மனதின் உள்ளிருந்து நாம் பார்க்கும்போது, ஒவ்வொரு வெடிப்பும் ஒரு பெரிய பள்ளத்தாக்கு மாதிரியல்லவா காட்சியளிக்கிறது. அந்தப் பள்ளத்தாக்குக்குள்ளேயே, பேன் பிறக்கிறது, வளர்கிறது, காதலிக்கிறது. போராடுகிறது. சாகிறது. பக்கத்து வெடிப்புகளைப்பற்றி அறிவதற்கோ சிந்தனை செய்வதற்கோ அதற்கு நேரமில்லை.

யானை மாவுத்தன் யானையை ஆற்றுக்கு அழைத்துச் செல்கிறான். வாளி, வாளியாகத் தண்ணீரைவிட்டு யானையைக் குளிப்பாட்டுகிறான். தோல் வெடிப்புகளுக்கும் யானைக்கும் அப்பாலிருந்து பார்க்கும் நமக்கு யானை குளிக்கத்தான் செய்கிறது என்று தெரியும். ஆனால், அந்தத் தோல் வெடிப்புகளுக்குள் வாழ்க்கை நடத்துகிற பேனுக்கோ, ஏதோ ஒரு ஜலப் பிரளயம் எங்கிருந்தோ வந்துவிட்டது என்றுதானே தோன்றும். ஏனென்றால், அந்த அப்பாவிப் பேனுக்கு யானைக்குப் புறம்பாக நின்று அதை மொத்தமாகப் பார்க்கத் தெரியவில்லை. பேனைக் காட்டிலும் புத்திசாலி மனிதன், அவன் யானை குளிக்கிறது என்பதை அல்லவா உணர்ந்துவிடுகிறான்!

ஆனால், பூமிக்கு அப்பால் நின்றுகொண்டு, பூமியில் நடக்கிற காரியங்களை மொத்தமாகப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை மனிதனுக்கு. பூகம்பம் ஏற்படுகிறது என்றால், மனிதனுடைய குடல்

எல்லாம் பதறுகிறது. ஏதோ ஜலப் பிரளயம் ஆரம்பித்துவிட்டதோ என்று நடுங்குகிறது. சூரியனில் இருந்துகொண்டு பூமியில் நடக்கும் பூகம்பத்தைப் பார்த்தால், உண்மை தெளிவாகத் தெரியும். பூமி என்ற பந்து அந்தரத்தில் சுற்றி வருவதும், சுற்றுகிற வேகத்தில் பந்து ஒரு பக்கம் அழுந்துவதும், ஒரு பக்கம் வீங்குவதும் நடக்கிறது. இதை எல்லாம் அறியாத மனிதப் பேன்கள் பூகம்பம் வந்துவிட்டது என்று அலறுவது சூரியனிலிருந்து பார்ப்பவனுக்கு ரசமாக இருக்கும். ஆனால், அவனுடைய பார்வையும் மேற்படி மேற்படிதான். பேரண்ட யானையின் முதுகில் ஏற்பட்ட எண்ணிறந்த வெடிப்புகளில் ஒன்று சூரிய மண்டலம். பேரண்டம் முழுவதையும் மொத்தமாகப் பார்த்தால் ஒழிய பூரணமான பார்வை நமக்குக் கிட்டப்போவதில்லை.

ஆனால், ஒன்று நன்றாக விளங்குகிறது. இடம் மாற மாற, நம்முடைய பார்வை மாறிக்கொண்டே போகிறது. உண்மையான காட்சி எது என்று தெரிய முடியவில்லை. விஷயங்களை அளப்பதற்கு, பேன் வைத்துக்கொண்டு இருக்கும் அளவுகோலுக்கும், மனிதன் வைத்திருக்கும் அளவுகோலுக்கும், சூரிய மண்டல மாமனிதன் வைத்திருக்கும் அளவுகோலுக்கும் எத்தனை வேறுபாடு இருக்கிறது! அளவுகோல் மாற மாற, உலகத் தோற்றமும் மாறிக் கொண்டே வருகிறது. காலத்தாலும் இடத்தாலும் இவ்வாறு மாறுபடுகிற அளவுகோலை நம்பி, உள்ளதை உள்ளபடி அளந்துவிட முடியுமா?

அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி நிற்கும் வஸ்துவை அளப்பதற்கு கம்பர் ஒரு கற்பனைக் கருவியைக் கையாண்டு பார்க்கிறார். பேரண்டத்தில் உள்ள உலகங்களை எல்லாம் ஒன்று கூட்டிப் பிசைந்து, ஒரு பிரமாண்டமான நாழியை உண்டாக்குகிறார். இதைக் கையால் தூக்கி அளப்பதற்கு ஆள் வேண்டுமே! உலகங்களை எல்லாம் படைத்த பிரம்மாவுக்கே இந்த வேலையைக் கொடுத்து இருக்கிறார் கம்பர். கூலி வேலை செய்யும்போது, கவிச் சக்கரவர்த்திக்கு ஏமாற்ற மனம் வராது. சிருஷ்டிகர்த்தாவுக்கு? ஆகவே, நன்றாக வேட்டியைத் தார்ப் பாய்ச்சிக் கட்டிக்கொண்டு, உட்கார்ந்துகொண்டல்ல. நின்றுகொண்டே பிரமன் பேரண்ட நாழியைக்கொண்டு அளக்கிறான். ஊழூழிக் காலம் அளக்கிறான். அப்படி அளந்தும் கொஞ்சமும் குறைவுபடாத வஸ்துவாக இருக்கிறது கடவுள் தத்துவம். இந்த விஷயத்தை கம்பர் சொல்கிறார்.

நாழி நவைதீர் உலகெலாமாக
நளினத்து நீ தந்த நான்முகனார்தாமே

ஊழி பலப் பலவும், நின்று அளந்தால், ஒன்றும்
உலவாப் பெருங் குணத்து உத்தமனே

இப்பேர்ப்பட்ட கற்பனை அளவுகோலைக்கொண்டு அளந்து பார்த்தாலும், 'முடியாத காரியம்' என்று கையை விரிக்கத்தான் வேண்டி இருக்கிறது. சிவவாக்கியர் பத்தாம்பசலிப் பேர்வழிதான்; இருந்தாலும் அவர் சொல்லில் கொஞ்சம் உண்மை இருப்பதுபோலத் தெரிகிறதே. காலம், இடம் கடந்த மெய்ப்பொருளை நம்மால் அளக்க முடியாது. ஆனால், உலகத்திலுள்ள சாமானியப் பொருட்களைக் கூடவா நம்மால் உணர முடியாமல் போய் விடுகிறது?

வெளியுலகக் காரியங்களைக் கவனிப்பதற்காக நம்மிடம் ஐந்து அற்புதமான கருவிகள் இருக்கின்றன. வானொலி நிலையத்திலிருந்து வரும் மின்சார அலைகளைப் பிடித்து இழுக்கிற ரேடியோப் பெட்டி மாதிரி, வண்ண பேதங்களோடு வரும் ஒளி அலைகளைப் பிடித்து இழுப்பதற்காகக் கண் என்ற கருவியை வைத்து இருக்கிறோம். ஆனால், கண்ணுக்கு வானவில்லின் ஏழு வண்ணங்களைத்தான் பார்க்கத் தெரியும். அந்த ஏழு வண்ணங்களைத் தவிர, கோடானுகோடி வண்ணங்கள் உலகத்தில் இருக்கின்றன. எக்ஸ்ரே போன்ற வண்ணங்கள், ஊதாவுக்கு நுட்பமான ஒளி அலைகள் எத்தனையோ இருந்தும், அவற்றைக் காணக் கொடுத்து வைக்கவில்லை மனிதக் கண்ணுக்கு. ஆகவே, அந்த நிறங்கள் சம்பந்தமாக, மனிதன் குருடன்தான்; உள்ளதை உள்ளபடி அவனால் பார்க்க முடியவில்லை.

ஒலியைக் கேட்பதற்காக, நமக்கு இருக்கும் கருவியும் இந்த அழகில்தான் அமைந்து இருக்கிறது. மனிதக் காதுக்குக் கேட்கக் கூடியது எல்லாம் ஏழு ஸ்வரங்கள்தான். ஏழு ஸ்வரங்களுக்கு அப்பாற்பட்ட ஒலிகள் அனந்தம்; அவை சம்பந்தமாக, மனிதன் செவிடனாகவே இருக்கிறான்.

இதைப்போலவே, மோப்பத்துக்காக ஏற்பட்ட மூக்கு, ருசியை அறிய வைத்திருக்கும் நாக்கு, உற்று அறிவதற்காக உள்ள உடல், எல்லாம் குறைபாடு நிறைந்த கருவிகளாகவே இருக்கின்றன.

உணர்வது குறைவாக இருந்தாலும், உணர்ந்ததையாவது உள்ளபடி சொல்லத் தெரியுமா அவற்றுக்கு? அதுவுங்கூடத் தெரியவில்லை.

நீதி மன்றத்தில் வழக்கு விசாரணை நடக்கிறது. கொலைக் குற்றம் சாட்டப்பட்ட எதிரி கூண்டில் நிற்கிறான். முதலாவது சாட்சி கொலை நடந்தது தனக்குத் தெரியும் என்று சொல்கிறான்.

"நீ உன் கண்ணால் பார்த்தாயா?" என்ற கேள்விக்கு, "நான் பார்க்கவில்லை. என் மனையாள் கிணற்றடிக்குப் போயிருந்தாள். கொலை நடந்ததை நேரில் பார்த்த சுப்பனுடைய மனைவி சுப்பியை அவள் கண்டாள். சுப்பி சொன்னதை, என் மனைவி என்னிடம் சொன்னாள். அவள் சொன்னதை நான் இங்கே சொல்கிறேன். எதிரிதான் கொலை செய்தான். அதை ஊர் முழுதும் சொல்லும்" என்று சாட்சி பதில் சொல்கிறான்.

அவனுடைய வாக்குமூலம் கண் கண்ட சாட்சியின் வாக்குமூலம் அல்ல. நாலு கை கடந்த சாட்சியம் என்று சட்டம் அதை நிராகரித்துவிடுகிறது. "நேரில், என் கண்ணால் கொலை நடந்ததைப் பார்த்தேன்" என்று சாட்சி சொல்லி இருந்தால், சட்டம் அதை உயர்ந்த நேரடியான சாட்சியம் என்று ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

ஆனால், 'என் கண்களால் கண்டேன்' என்று சொல்லும் சாட்சியின் அனுபவத்தை அலசிப் பார்த்தால், அதுவும் நேரடியான அனுபவம் அல்ல என்று துலங்கும்.

பள்ளிக்கூடத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன் நம்மோடு படித்தானே. அந்த ராமசாமியை, திடீரென்று ரயில் வண்டியில் சந்திக்கிறோம். அவனைக் கண்டவுடன் இனம் கண்டுகொள்கிறோம். ஆனால், நம்முடைய மனது நம்மைவிட்டுப் போய், அவனை நேரடியாகத் துழாவிப் பார்த்து ராமசாமிதான் என்று கண்டுபிடித்துவிடவில்லை. உண்மையில் நடப்பது என்ன? அவன் உடலின் மேல் தோல் பாகத்தில் ஒளிக் கதிர்கள் விழுந்து சிதறுகின்றன. சிதறிய கதிர்கள், அவன் உருவத்தைப்பற்றிய மேலெழுந்தவாரியான ஒரு செய்தியைச் சுமந்துகொண்டு, நம் கண்களில் இருக்கும் ஊசித் துவாரம் வழியாகச் சென்று கண்ணுக்குள் இருக்கும் ஒரு சினிமாத் திரையில் (ரெட்டினா) விழுகின்றன.

திரையில் ராமசாமியின் உருவ நிழல் (ஐயோ, பாவம்!) தலைகீழாக விழுகிறது. இந்தத் திரைக்கும் மூளைக்கும் இடையில் ஆயிரக் கணக்கான நரம்புகள்; திரையில் விழுந்திருக்கும் நிழலைப்பற்றி, நரம்புகள் நமக்குப் புரியாத பரிபாஷையில், மூளைக்குத் தந்தி அடிக்கின்றன. தந்தியை, மூளை நம்முடைய உதவி இல்லாமலேயே, மொழிபெயர்த்து, உருவத்தைத் தலைமேலாக மாற்றி, மனதுக்குச் சமர்ப்பணம் செய்கிறது. இப்படியாக நாலு கை கடந்து வந்த நிழல் உருவத்தை மனது உடனே இனம் கண்டுபிடிப்பதில்லை.

மனதுக்குள் ஓர் 'ஆல்பம்' இருக்கிறது. பிறந்தது முதல் இந்த நிமிடம் வரை நாம் கண்ட காட்சிகள், கேட்ட ஒலிகள் முதலியவற்றை

எல்லாம் அந்த ஆல்பத்தில் பதிவு செய்து வைத்து இருக்கிறது மனது. ராமசாமியின் உருவ நிழலைப் பார்த்ததும் மனது தன்னுடைய ஆல்பத்தைப் புரட்டிப் பார்க்கிறது. அதில் முப்பது வருடங்களுக்கு முன் பதிவு செய்யப்பட்டிருக்கும், ராமசாமியின் உருவத்தோடு இப்போது வந்திருக்கும் செய்தியை ஒப்பிட்டுப் பார்க்கிறது மனது. அடாடா, இது நமது நண்பன் ராமசாமிதான் என்று முடிவு கட்டுகிறது. ஆகவே, வந்த செய்தியோ நாலு கை கடந்த செய்தி.

அதை நேரடியாக உணராமல், ஞாபகசக்தியின் உதவியைக் கொண்டும், கற்பனை செய்தும், யூகம் பண்ணியும் மனம் ஒரு தீர்மானத்துக்கு வருகிறது. அந்தத் தீர்மானத்தை நேரடியான அனுபவம் என்று சொல்வது பொய். 'என் கண்ணால் கண்டேன்' என்று சொல்கிற சாட்சி அனுபவமும் நேரடியானதல்ல என்று தள்ள வேண்டியதுதானே.

ஒரு தினசரிப் பத்திரிகையின் ஆசிரியர் டெல்லியில் இருக்கிறார். உள் நாட்டில் பல ஊர்களில் அந்தப் பத்திரிகையின் நிருபர்கள் இருக்கிறார்கள். நாட்டில் நடந்த செய்திகளைப்பற்றி தினந்தோறும் டெல்லி ஆசிரியருக்குத் தபால் அனுப்புகிறார்கள். நிருபர்களுக்கோ உண்மையை அறியும் சாதனம் எப் போதும் கிடைப்பதில்லை; தப்பித் தவறி அறிந்தாலும், சூட்டோடு சூடாக ரசம் தரும் நோக்கத்தோடு சொல்லும் இயல்புடையவர்கள். அவர்கள் அனுப்புகிற செய்தி உண்மையா என்று நேரடியாக ஆராய்ச்சி செய்யாமல், அவர்கள் சொல்வதை நம்பி, பல முடிவுகளுக்கு வருகிறார் பத்திரிகை ஆசிரியர்; தினந்தோறும் தலையங்கமே எழுதித் தீர்க்கிறார்.

இதே நிலையில்தான் இருக்கிறான் ஒவ்வொரு மனிதனும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஐந்து நிருபர்கள் இருக்கிறார்கள்; கண் என்றும், காது என்றும், நாக்கு என்றும், மூக்கு என்றும், உடல் என்றும் பெயர் வைத்துக்கொண்டு இருக்கிற நிருபர்கள். அபத்தச் செய்திகளைச் சதா அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள் இந்தப் பொல்லாத நிருபர்கள். இவர்களை நம்பி இந்த மனது, பத்திரிகை ஆசிரியர் தொழிலை நடத்துகிறது. நிமிடத்துக்கு நிமிடம் ஒரு தீர்மானத்துக்கு வருகிறது. தலையங்கமே எழுதுகிறது.

இந்தத் தீர்மானங்களுக்கு நிலையான மதிப்பைக் கொடுக்க முடியுமா? 'முடியாது' என்று கண்டார்கள் நம்முடைய ஞானிகள். 'அப்படியானால், மனிதனுடைய அனுபவம் எல்லாமே போலி அனுபவமா? நேரடியான அனுபவம் என்பதே அவனுக்கு எட்டாப் பழமா?' என்ற ஆராய்ச்சியில் அவர்கள் இறங்கினார்கள். நேரடியாக

உணரக்கூடிய சரக்கு ஒன்றே ஒன்றுதான் நமக்குக் கிடைத்து இருக்கிறது. அதுதான் மனது என்றும் கண்டார்கள்.

மனது தன்னைத்தானே ஆராயும்போது, நிருபர்கள் தயவு அதற்கு வேண்டியதில்லை. நாலு கை கடந்த செய்தியை நம்பி அது இயங்க வேண்டியதில்லை. அறியும் கருவியும் அறியப்படும் பொருளும் ஒன்றாக இருக்கும்போது, இடை - ஊறு ஒன்றுமே இல்லை. இப்படி ஆராய்ச்சி செய்யும்போதுதான் நேரடியான உணர்வு - அதாவது, மெய்யுணர்வு நமக்குக் கிட்டுகிறது.

இதைத்தான் திருமூலர், "மனதை மனத்துக்குள்ளேயே செலுத்திப் பார். எவ்வளவு தூரம் செலுத்த முடியுமோ அவ்வளவு தூரம் செலுத்து; அப்படிச் செய்தால், வெட்ட வெளி என்றும், கடவுள் என்றும் பேரிட்டு அழைக்கிறார்களே. அந்தப் பேருண்மையை நேரடியாக உணரலாம்" என்றார்.

செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளொடு தூங்கினால்,
கல்லும் பிளந்து கடு வெளி ஆமே.

மனது, மனதையே துருவித் துருவி ஆராய்ந்தால், உள்ளதை உள்ளபடி உணர்ந்துவிடலாம் என்ற பேருண்மையை, ஞானிகள் பலவிதமாகச் சொல்லிச் சொல்லி அனுபவிக்கிறார்கள். "இறைவன் எங்கே இருக்கிறான்?" என்ற கேள்விக்கு, 'மனத்தகத்தான்' என்று பதில் சொல்கிறார் அப்பர் சுவாமிகள்.

இப்படி மொட்டையாகச் சொல்லிவிட்டால், விளங்காதோ என்று பயந்து, திருமூலர் பாவ விளக்கம் கொடுக்கிறார். மனிதனைப் படைக்கும்போதே கடவுளுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டதாம். மனிதனுக்குத் தெரியாத, அப்பாலுக்கு அப்பாலாக நாம் இருந்துவிட்டால், அந்த அசடுக்குத் தெளிவு ஏற்படாமல் போய்விடுமே என்று நினைத்து எல்லையற்ற அருளாளனான இறைவன், மனிதனுடைய மனத்தினுள்ளேயே ஒளிந்திருந்து, அவனை ஆட்கொள்கிறான் என்று சொல்கிறார்.

கள்ளப் பெருமக்கள் காண்பர் கொலோ என்று
உள்ளத்தின் உள்ளே ஒளிந்திருந்து ஆளுமே!

இதே உண்மையை சிவவாக்கியர் அவருக்கே உரிய கம்பீர பாஷையில் பேசுகிறார்.

"எல்லாம் இறைவன்மயமாக இருக்கிறது. ஆகையினால் தெளிந்த அறிவாளி ஒருவன் ஒரு புல்லை எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்தாலும், இறைத் தத்துவத்தைக் கண்டுகொள்வான். ஏனென்றால், அந்தப் புல்லுக்குள் ஒரு வாசல் வைத்து இருக்கிறது. அந்த வாசல்

வழியாக எட்டிப் பார்த்தால், பேருண்மையைக் கண்டுகொள்ளலாம். இப்படியாக, உலகத்தில் ஆயிரக்கணக்கான பொருட்களும், ஆயிரக்கணக்கான வாசல்களும், திரையை நீக்கி இறைவனைக் காட்டுவதற்காகக் காத்துக்கொண்டு இருக்கின்றன.

ஆனால், அவற்றின் மூலமாக எட்டிப் பார்த்து உண்மையை அறிவது என்பது எல்லோராலும் முடியாது. ஆனால், ஒவ்வொரு மனிதனும் எளிதில் எட்டிப் பார்த்து உணரக்கூடிய கள்ள வாசல் ஒன்று இருக்கிறது. அதுதான் மனமாகிய வாசல். ஏகபோகமாக நாம் அனுபவிக்கக்கூடிய வாசல். 'என் மனதுக்குள் வந்து இன்னொருவன் எட்டிப் பார்க்க முடியாது. டிக்கட் வாங்காமல் செலவில்லாமல் பார்க்கக்கூடிய வாசல்' என்று பொருள்படும்படியாக சிவவாக்கியர் பாடுகிறார்.

அண்ட வாசல் ஆயிரம், அகண்ட வாசல் ஆயிரம்,
ஆறு இரண்டு நூறு கோடி ஆன வாசல் ஆயிரம்,
இந்த வாசல் ஏழை வாசல் ஏகபோகமான வாசல்
எம்பிரான் இருந்த வாசல், யாவர் காணவல்லீரே?

இந்தக் கள்ள வாசல் வழியாக, உள்ளே மறித்துப் பார்க்கும்போது, ஆனந்தமயமான வெட்டவெளியைக் கண்டார் ராமலிங்க அடிகள். இந்த அனுபவத்தை மனிதனுடைய பாஷையில் அல்லவா சொல்லித் தொலைக்க வேண்டி இருக்கிறது. சொல்லவும் செய்கிறார்!

ஆனந்தம் ஏற்படும்போதெல்லாம், இயல்பான வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு, நடனமாடத் தோன்றும். குழந்தைகள் ஆனந்தத்தை நடனமாடியே காட்டுவார்கள். பறவைகளில் மயிலும் அப்படியே காட்டுகிறது. ஆகவே, (மன) வானத்தின் மீது மயிலாடக் கண்டேன் என்று சொல்கிறார். ஆனந்தம் மேலிடும்போது, பாடலாகத்தான் பொங்கி வடியும். ஸ்வானுபவம் உள்ள நம் நாட்டு ஞானிகள் எல்லோருமே, தாம் கண்ட ஆனந்தத்தைப் பாடல்களில் தேக்கி வைத்துவிட்டு போயிருக்கிறார்கள். பறவைகளில் ஆனந்தத்தை எப்படி மயில் ஆடிக் காட்டுகிறதோ, அப்படியே குயில் பாடிக் காட்டிவிடுகிறது. தனக்கு ஏற்பட்ட ஆனந்தத்தையும், ஆனந்தத்திலிருந்து உருவான கவிதா உற்சாகத்தையும் எப்படியோ ராமலிங்க சுவாமிகள் வெற்றிகரமாகச் சொல்லிவிடுகிறார்.

வானத்தின்மீது மயிலாடக் கண்டேன்
மயில் குயில் ஆச்சுதடி – அக்கச்சி
மயில் குயில் ஆச்சுதடி.

IV நட்பின் வலிமை



உலகத் தமிழ் மாநாடு, மதுரை... தொழில்நுட்ப விவாத நேரத்தில்...



மனைவி செல்லம்மாள், குழந்தைகள், உறவினருடன்...



இரண்டாவது மனைவி செல்லம்மாளுடன்...

1. தீரன் கணேசன்

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன், திருநெல்வேலி கம்பன் விழாவில் முதன்முதலாக நண்பர் கணேசனைச் சந்தித்தேன். தொட்டுப் பொட்டுப் போடலாம் போலிருந்தது, அவருடைய சியாமள வண்ணம்; தும்பைப்பூ போன்ற வெண்ணிறக் கதர் வேட்டி; மடிப்பு கலையாமல் தோள்பட்டையிலிருந்து தொங்கிக் கொண்டு இருந்த பழுப்பு வண்ண மேல் வேட்டி; தங்கச் சட்டம் போட்ட மூக்குக் கண்ணாடி; முகில் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டுவந்து நிற்கும் முழு நிலவையொத்த சந்தனப் பொட்டு; சட்டை போட்டு மறைக்க முடியாத ஓர் எளிமை; எளிமைக்கு உள்ளிருந்து எட்டிப் பார்க்கும் அசைக்க முடியாத உறுதி; முகத்திலிருந்து வீசும் களங்கமற்ற, ஆனால், கவர்ச்சி நிறைந்த ஓர் ஒளி; கிட்ட நெருங்கிப் பழக அழைக்கும் ஒரு தோழமை; ஆனாலும் அந்தத் தோழமைக்கு உள்ளிருந்து திடீர் திடீரென்று கொப்புளிக்கும் ஒரு பயங்கரக் கண்டிப்பு.

“இவன் என் நண்பன், இளம் வழக்கறிஞன்” என்று சொல்லி என்னை கணேசனுக்கு அறிமுகப்படுத்தினார் ஆ.முத்துசிவம். சில விநாடிகளில் மனம் ஒன்றி உறவாடத் தொடங்கிவிட்டோம்.

கொஞ்ச நேரம் கழிந்தது. 82-வது வயதில் வெள்ளகால் தமிழ்த் தாத்தா சுப்பிரமணிய முதலியார் அன்று காலமாகிவிட்டதாகச் செய்தி வந்தது. கம்பன் விழாக் கொண்டாடிக்கொண்டு இருந்த எங்களுக்கு இந்தச் செய்தி வருத்தத்தைக் கொடுத்தது. செய்தியைக் கேட்ட கணேசன், "இன்று நாம் எல்லோரும் உண்ணாவிரதம் இருக்க வேண்டும். தமிழ்ப் பெரியாருக்கு நாம் செலுத்த வேண்டிய நன்றிக்கடன் இது" என்று ஓர் உத்தரவு போட்டார்.

நாங்கள் எல்லோரும் இள வட்டங்கள்; சிறைச்சாலை போய் அறியாதவர்கள்; உண்ணாவிரதம் என்றால் ஓட்டம் எடுப்பவர்கள்; தியாகத்துக்கும் எங்களுக்கும் வெகு தூரம்.

'முதலியார் இறந்துபோனதற்காக, அதுவும் 82-வது வயதில் இறந்து போனதற்காக உண்ணாவிரதம் இருக்கச் சொல்கிறாரே கணேசன். தான் வேண்டுமானால் இருந்துவிட்டுப் போகட்டும். நம்மையும் சேர்த்து இழுப்பானேன்? பொல்லாத பேர்வழிபோல் இருக்கிறதே!' என்று நினைத்துக்கொண்டு, பசி தாங்க முடியாத நிலையில் நானும் முத்துசிவனும் கம்பியை நீட்டிவிட்டோம். பக்கத்திலிருந்த சாப்பாட்டு விடுதிக்குப் போய் விலாப் புடைக்கத் தின்றுவிட்டு, ஒரு மணி நேரம் கழித்து, கணேசன் உண்ணாவிரதம் இருந்த இடத்துக்கு, பயந்து பயந்து வந்தோம். எங்கள் முகத்தைப் பார்த்ததுமே, எங்கள் கள்ளத்தனம் தெரிந்துவிட்டது கணேசனுக்கு. எங்களைப் பார்த்து, "தின்றுவிட்டு வந்தாச்சா?" என்று கர்ஜித்தார். "ஆமாம், ஆமாம், அவ்வளவுதான் ஐயா, உங்கள் தமிழ்ப் பற்று. ஒரு தமிழ் மகனுக்காக ஒரு நாள் பட்டினி கிடக்க முடியவில்லையே உங்களால்" என்று சொல்லிச் சலித்துக்கொண்டார்.

இதைக் கேட்ட எனக்கு அவமானம் தாங்க முடியவில்லை. "அரசியல் உலகத்தில் உண்ணாவிரதம் ஒரு சிறந்த கருவியாக இருக்கலாம். ஆனந்தத்துக்காகவே அமைந்த இலக்கிய உலகத்தில் உண்ணாவிரதக் கரடியை அவிழ்த்துவிடுவது முறையல்ல" என்று சொல்லி என் மனதை நானே தேற்றிக்கொண்டேன்.

திடீரென்று கப்பல் உடைந்து மூழ்கி மனித சஞ்சாரம் இல்லாத ஒரு தீவில் அலை என்னை அடித்துக்கொண்டு போய்விட்டதென்றால், தீரர் கணேசன் பக்கத்தில் இருந்தால் போதும். எந்த நெருக்கடியையும் சமாளித்து மனத் தளர்ச்சியைப் போக்கி, ராபின்சன் க்ரூஸோவைப் போல, அந்தப் பாழும் தீவை ஓர் உல்லாச சொர்க்கம் ஆக்கிவிடுவார் அவர்.

நெருக்கடி என்றால், சப்த நாடியும் நமக்கு அடங்கிவிடும். மூலையில் இருந்துகொண்டு மண்ணாந்தையைப்போல முனகிக்

கொண்டு இருப்போம் நாம். ஆனால், நெருக்கடியில்தான் நண்பர் கணேசனுடைய முழு ஆற்றலும் தொழிற்படத் தொடங்கிவிடும். அப்படி ஓர் அபூர்வமான, பரபரப்பற்ற துணிச்சல் படைத்தவர் அவர்.

12 ஆண்டுகளுக்கு முன் நண்பர் கணேசனோடு ராமநாதபுரம் கம்பர் விழாவுக்குப் போயிருந்தேன். அடுத்த நாள் ஒரு ஜீப் காரில் திருப்புல்லாணியை நோக்கிப் புறப்பட்டோம். சித்திரை மாதத்து அருங்கோடை. மதியம் ஒரு மணியிருக்கும். கடும் பசி நேரம். ஒரே பாலைவனம். பாலைவனத்தின் மத்தியில் போய்க்கொண்டு இருந்தபோது ஜீப் காரின் அச்சு முறிந்துவிட்டது. இந்த நிர்க்கதியான நிலையில், மாற்றுக் காருக்குச் சொல்லியனுப்பினோம். அது வந்து சேர்வதற்குக் குறைந்தது மூன்று மணி நேரம் ஆகும்.

கோபமும், வெயிலும், பசியும் என்னை வதக்கி எடுத்துவிட்டன. ஏதோ குடி முழுகிப் போய்விட்டது போன்ற உணர்ச்சியோடு ஜீப் காரைத் திட்டிக்கொண்டே நின்றேன். நண்பர் கணேசனோ உற்சாகமயமாகிவிட்டார். ஒரு ஜமுக்காளத்தை எடுத்துவந்து ஒரு கருவேல மரத்தடியில் விரித்தார். அவருடைய தோல் பையிலிருந்து, (தோல் பையா அது? அட்சய பாத்திரம் அல்லது சமய சஞ்சீவி என்றே அதை அழைக்க வேண்டும்) நன்றாகச் சாணை பிடித்த ஒரு கத்தியை எடுத்து வந்தார். அந்தக் கத்தியின் தந்தப் பிடிக்குள்தான் எத்தனை எத்தனை மாயக் கருவிகள்! கத்தியால் அரசங்குலையை அறுத்து வந்தார்.

குலையிலுள்ள பூக்களைக் கொய்து, அவற்றின் விசித்திர அமைப்பைப்பற்றிப் பேசத் தொடங்கினார். நான் தாவர இயல் படித்தவன்தான்; ஆனால், பூவைப் பார்த்து ரசிப்பதற்கு இதுவா நேரம்? என்னுடைய சிடுமூஞ்சித்தனத்தை லட்சியம் பண்ணாமல், நண்பர் ஓர் அரச இலையைச் சுருட்டி, அதில் ஓர் ஈர்க் குச்சியைச் செருகி, வாயில் வைத்துப் பீப்பீ ஊதத் தொடங்கினார். அதில் ஆரோகண அவரோகணக் கிரமங்களைக் காட்டினார். கருவேல மரத்திலிருந்து காய்களைப் பிடுங்கி, புல்லாக்கு செய்து மூக்கில் போட்டுக்கொண்டார். ஒரு ஜோடி பச்சைத் தோடுகள் செய்து காதுகளில் மாட்டிக்கொண்டார்.

பிறகு, கம்பன் பாலைவனத்தை வர்ணித்திருக்கும் பாடல்களை அவருக்கே உரிய ராகத்தோடு பாடினார். உடனே என் பசியும் கோபமும் ஏமாற்றமும் எப்படியோ பறந்தோடிவிட்டன. சோர்வு நீங்கி நிமிர்ந்து உட்கார்ந்தேன். வெயிலையும் பாலைவனத்தையும் மறந்து ஸஹிருதய நிலையில் அவருடைய ஆனந்தத்தில் நானும் கரைந்துவிட்டேன்.

மாப்பிள்ளை வி.கே.சி.நடராஜன் மாலை 4 மணிக்கு ஒரு தனிக் காரில் எங்களை அழைக்க வந்தபோதுதான் எனக்கு மண்ணுலக நினைவு வந்தது. வாழ்க்கையிலேயே மறக்க முடியாத இந்த நிகழ்ச்சியை நினைக்கும்போதெல்லாம் கணேசனுடைய தீரமும், உறுதியும், சூழ்நிலையோடு போராடி வெற்றி பெறலாம் என்ற தன்னம்பிக்கையும் என் கண் முன் வந்து நின்று ஆர்வமூட்டும்.

நம் வாழ்க்கையின் சூழ்நிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும், மனித முயற்சியால் அதை மாற்ற முடியாது என்றாலும், அந்தச் சூழ்நிலையைப் பார்க்கும் பார்வையை நாம் மாற்றிக்கொள்ளலாம் அல்லவா? பார்வை மாறிவிட்டால், துன்பமும் இன்பமாக மாறிவிடுகிறது என்ற பாடத்தை தீரர் கணேசனுடைய வாழ்க்கையிலிருந்து நாம் உணர்ந்து பயன் பெறலாம்.

பாலைவனத்தைக் காட்டிலும் கொடியது சிறைவாசம். பூர்த்தி செய்ய முடியாத தேவைகளை உள்ளத்தில் மீண்டும் மீண்டும் கொண்டுவந்து நிறுத்தி மனிதனுடைய பேராண்மையைப் பரீட்சித்து, ஆன்ம வீரத்துக்கு உலை வைப்பது சிறை வாசம். அனிச்ச மலரினும் மென்மையான பல உள்ளங்களில் நிரந்தரமான கசப்பையும் புளிப்பையும் ஏற்றிச் சீர் குலைத்திருக்கிறது அது. ஆனால், தீரன் கணேசனுடைய உள்ளத்தை அது குலைக்க முடியவில்லை. காரணம், அவருடைய இலக்கிய அறிவும், எதிர் நீச்சல் போடும் திறமையுமே.

சிறை வாழ்க்கையில் அவர் சோம்பியிருந்த நேரமே கிடையாது. திறமையோடு காய்கறி திருத்தியும், பக்குவமாகச் சமையல் செய்தும், மற்றவர்களுக்குச் சுவையோடு உணவு பரிமாறியும், மற்ற நேரங்களில் சிறைச்சாலைவாசிகளுக்கு கம்ப ராமாயணம், திருக்குறள் முதலிய அரிய நூல்களைப் பாடம் சொல்லிக்கொடுத்தும், ராஜாஜி போன்றவர்களிடம் அரசியல் பாடம் கற்றும், சிறை வாழ்வின் கொடுமைகளை வென்று உள்ளத்தை உழைப்பால் தூய்மைப்படுத்திக் கரையேறியவர் கணேசன். ஆகவேதான், சிறைச்சாலை சென்று திரும்பிய சில சுதந்திர வீரர்களிடம் காணும் உள்ளக் கசப்பும் புளிப்பும் அவரிடம் காண முடிவதில்லை.

ஃபிட்ஜெரால்ட் மொழிபெயர்த்த ஓமர் கையாம் என்ற நூலை 35 ஆண்டுகளுக்கு முன் எனக்குப் பல்கலைக் கழகத்தில் பரிசாகக் கொடுத்தார்கள். அந்தக் காலத்தில் அவ்வளவு அழகாக அச்சிட்ட புத்தகத்தைப் பார்ப்பது அரிது. வெல்வெட் அட்டையில் தங்கப் பூவேலைப்பாடுகள்; உள்ளே ஒவ்வொரு பக்கத்திலும் அலங்கார எழுத்துக்களில் ஒரு பாடல்; பாடலுக்கு ஏற்ற அழகிய ஒரு வண்ணப்படம். இந்தப் புத்தகத்தை அருமையாகப் பாதுகாத்து வைத்திருந்தேன்.

சா.கணேசன் கையில் அந்தப் புத்தகம் 1940-ம் ஆண்டு போய்ச் சேர்ந்தது. அதைப்பார்த்ததும் அவருடைய உள்ளம் ஆங்கிலேயருடைய இலக்கிய பக்தியை நினைத்து உருக ஆரம்பித்தது. "மகா கவி கம்பனுக்கும் இந்த உபசாரம் நாம் செய்ய வேண்டும். அவனுடைய பாடல்களை இந்தத் தோரணையில் அச்சிட்டு அவனை உரிய முறையில் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொல்லி புத்தகத்தை மாதிரிக்காக வாங்கி வைத்துக் கொண்டார். 1942 ஆகஸ்ட் மாதத்தில், பிரிட்டிஷ் போலீசார் கணேசனுடைய காரைக்குடி வீட்டைக் கொள்ளை இட்டு, அங்கு இருந்த பல லட்ச ரூபாய் பெறுமான நகைகளையும் பொருட்களையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். கொள்ளைபோன சில நாட்களில் நண்பர் கணேசனைக் கண்டு பேசிக்கொண்டு இருந்தேன். அவருடைய முகத்தில் கொஞ்சமும் வாட்டமில்லை. விடுதலைப் போராட்டத்தில் இந்திய தாய்க்குத் தான் கொடுத்த காணிக்கை என்று அந்தக் கொள்ளையைப் பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

கொள்ளைபோன பொருட்களோடு என்னுடைய ஓமர் கையாமும் போய்விட்டது என்று தெரிந்த எனக்கோ ஒரே கவலை. லட்சம் லட்சமாக இழந்துவிட்டு வெறுங் கையோடு இருந்தவருடைய முகத்தில் தீரங் கலந்த அமைதி. அதைப் பார்த்ததும் என்னுடைய கவலை என் வெட்கத்தில் மூழ்கிற்று. தீரம் என்ற சொல்லுக்கு அகராதியைப் புரட்டிப்பார்த்தால் பொருள் தெரியாது. கணேசனுடைய வாழ்க்கையில் விளக்கம் பெறுவது அது என்று உணர்ந்து என் மனம் பூரித்தது.

கார்காத்தார் என்ற வேளாள மரபைச் சேர்ந்த என் குடும்பத்தில் புரோகிதராக இருந்து மூன்று திருமணங்களை நடத்தி வைத்தவர் நண்பர் கணேசன். ஆக்குப்பிறையிலிருந்து மணவறை வரைக்கும் அவருடைய கண்காணிப்பில் எல்லாம் மிகத் திருத்தமாக நடக்கும். திருமணத்தன்று காலை உணவுக்காக முன்னேற்பாடுகள் செய்திருந்தேன்.

முந்தின நாள் மதுரையில் இட்லி மாவை அரைத்து இரவு 10 மணிக்குள் திருநகர் திருமண வீட்டுக்கு மாவு வந்துசேர வேண்டியது; ஆனால், வர வேண்டிய மாவு இரவு 12 மணி வரையில் வந்து சேரவில்லை. மாவைக்கொண்டுவருவதற்காக ஒரு காரை அனுப்பினோம். காலை 2 மணி வரை காரும் வந்து சேரவில்லை. அந்தக் காரைத் தேடி 2, 3 கார்கள் அனுப்பினோம். 4 மணி வரை சென்ற கார்களும் திரும்பி வரவில்லை.

"4 மணிக்கே இட்லி சுடத் தொடங்கினால்தான் வந்த விருந்தாளிகளுக்கு 6 மணிக்குள் இட்லி சுட்டு முடியும்" என்று

சொல்லி சமையல்காரகள் அவசரப்படுத்தினார்கள். எனக்கோ ஒன்றும் ஓடவில்லை. எப்படிச் சமாளிக்கப்போகிறோமோ என்ற கவலையில் இரவு முழுவதும் உறங்கவில்லை. வெளியில் போய் பார்ப்பதும் வீட்டுக்குள் ஏமாந்து வருவதுமாக இருந்த என்னை கவனித்துக்கொண்டே இருந்தார் நண்பர் கணேசன். இப்படி நெருக்கடியான நேரத்தில்தான் அவருக்கு ஹாஸ்யம் பொத்துக் கொண்டு வரும்; சொல் ஆராய்ச்சியிலும் இறங்கிவிடுவார்.

"ஐயா! கார்காத்தார் என்ற சொல்லுக்கு இன்றுதான் பொருள் புரிந்தது. காருக்காகக் காத்துக்கொண்டு இருப்பவர்தானே!" என்று ஒரு ஹாஸ்ய வெடியை எறிந்தார் நண்பர். அப்போது எனக்கு ஏற்பட்ட குமுறலை, அந்தக் கணமே காரில் வந்த இட்லி மாவு கரைத்துவிட்டது.

"திறமை என்றால், அது கணேசனிடத்தில்தான் இருக்கிறது" என்று அடிக்கடி ரசிகமணி டி.கே.சி. சொல்வார்கள். அது முற்றிலும் உண்மை. இலை நறுக்க வேண்டுமா? ஊறுகாய் போட வேண்டுமா? கோயில் கட்ட வேண்டுமா? சிற்ப சாஸ்திரத்தின் நுணுக்கங்கள் தெரிய வேண்டுமா? ஆகம விதிகளை அறிய வேண்டுமா? தமிழ் இலக்கணத்தின் சிறப்பியல்புகள் தெரிய வேண்டுமா? சங்க இலக்கியத்தின் நீள, அகலங்களை அளக்க வேண்டுமா? கம்ப ராமாயணத்தில் எத்தனை உரிச்சொல் பிரயோகமாகி இருக்கிறது? எழுத்தியல், சொல்லியல், மொழியியல், அரசியல், பொருளாதாரம், தேர்தல் சட்டம், வட்டெழுத்து ஆராய்ச்சி, தேச வளமை எதைப் பற்றிக் கேட்டாலும், ஆர்வத்தோடும் தெளிவோடும் அந்தந்தத் துறையிலுள்ள வல்லுநர்களும் வியக்கும் வண்ணம் விவரங்களை எடுத்துச் சொல்லும் அபாரமான கல்வியும் அறிவும் படைத்தவர் தமிழ் நாட்டில் கணேசன் ஒருவர்தான்.

சமீபத்தில் மலேயாவில் ஒரு சிக்கலான வழக்கு ஏற்பட்டது. ஒரு கோயிலில் உள்ள சிலை மாரியம்மன் சிலையா அல்லது திரௌபதியம்மன் சிலையா என்பதைப்பற்றிய வழக்கு. வழக்கைத் தீர்த்துவைக்க முடியாமல் அங்குள்ள நீதிபதிகள் திணறினார்கள். சிறந்த இலக்கிய அறிவும், சிற்ப நூலறிவும், வரலாற்று அறிவும் படைத்த ஒருவர்தான் இந்தச் சிக்கலைத் தீர்த்துவைக்க முடியும் என்று உணர்ந்து இரு சாராரும் நண்பர் கணேசனைப் பஞ்சாயத்தாராக நியமித்தார்கள். நடுவர் இதற்காக தமிழ் நாட்டிலிருந்து மலேயாவுக்குப் பறந்து சென்றார்.

சாட்சிகளை விசாரித்துவிட்டு, சிலையின் அம்சங்களை நேரில் கண்டு அலசி ஆராய்ந்துவிட்டு நண்பர் கணேசன் தமிழில் ஒரு தீர்ப்பு எழுதி இருக்கிறார். 30 ஆண்டுகள் நீதிபதியாக இருந்தவருக்கு

உரிய தெளிவோடும் அமைதியோடும் சட்ட நுணுக்கத்தோடும் காரண காரியத் தொடர்போடும் எல்லாவற்றுக்கும் மேலாக இலக்கியப் பயிற்சியால் மட்டுமே பெறக்கூடிய பரிவோடும் எழுதப் பட்டு இருக்கிறது அந்தத் தீர்ப்பு. அதோடு மட்டுமல்லாமல் தமிழில் இப்படி அரிய ஒரு காரியத்தைச் சாதிக்க முடியும் என்பதை அந்தத் தீர்ப்பு நிலைநாட்டுகிறது. அதைப் படித்த இரு சாராரும் மனமுவந்து தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

இப்படியாகத் தொட்டதை எல்லாம் திருத்தமாகச் செய்து முடிக்கும் திறம் வேறொருவரிடமும் நான் கண்டதில்லை.

கோடி கொடுத்தாலும் கணேசன் தன் கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டார். தேர்தலில் அவரோடு போட்டி போட்டவர்களுக்கு இந்த அரிய உண்மை தெரிந்திருக்கும்.

'நில்லாதனவற்றை நிலையின' என்று நினைத்து மயங்கும் இந்த உலகில் நண்பர் கணேசனைப் போன்றவர்கள் நீடூழி வாழ வேண்டும். பிள்ளையார்ப்பட்டி கணேசப் பெருமான் இந்த வேண்டுகோளை நிறைவேற்றுவாராக.

2. விநாயகர் அகவல்

விநாயகர் அகவலை ஆர்வத்தோடு பாராயணம் செய்கிறவர்கள் பலர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அந்த அகவலில் உள்ள சொற்களும் சொற் கோவைகளும் சொல்லச் சொல்ல நம் இதயத்துக்கும் நாவுக்குமே இனிப்பை ஊட்டுகின்றன.

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன் அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்

என்று நாம் தொடங்கி,

கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள்தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்

தத்துவ நிலையைத் தந்து எனை ஆண்ட
வித்தக விநாயக விரை கழல் சரணே

-என்று அகவலை முடிக்கும் வரை நம் உள்ளத்திலேயே ஒரு மந்திர சக்தி பொங்கிப் பெருகுவதை நாம் நேரில் உணர்ந்து அனுபவிக்க முடிகிறது. ஆனால், இந்த விநாயகர் அகவல், அரிய ஒரு யோக நூல் என்பதைப் பலர் அறிந்துகொள்ளவில்லை; யோக நூல் என்று அதைத் தெரிந்துகொண்டவர்களும், அதன் உள்ளுறை பொருளை உணர்ந்துகொள்ளவில்லை.

தமிழ் நாட்டில், பல சித்தர்களும் யோகிகளும் விநாயகர் அகவலைப் போற்றி வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஒருவராவது அதற்கு விளக்கவுரை வழங்க இதுவரை முன்வரவில்லை. இந்தக் குறையைப் போக்குவதற்காகவே, மிக்க பரிவோடும் கருணையோடும் எழுதப்பட்டு இருக்கிறது இந்த நூல்.

சென்ற 50 ஆண்டுகளாக ஆன்ம ஆராய்ச்சிக் கூடத்தில் விஞ்ஞான முறையில் பல துணிச்சலான ஆராய்ச்சிகளைச் செய்து அரிய உண்மைகளைக் கண்டெடுத்த இந்த நூலாசிரியர், சங்கேதக் குறிகள் நிறைந்த இந்த நூலுக்கு வரி வரியாக அற்புத விளக்கம் கூறி இருக்கிறார்கள். பரம ரகசியம் என்று நம் முன்னோர்களால் மூடாக்குப் போட்டு மறைக்கப்பட்டிருந்த உண்மைகளை, சிவயோகி அவர்கள் தமக்கே உரிய அதிகாரத் தோரணையோடு, உணர்வு உடையவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் இந்த நூலில் அம்பலப்படுத்தி இருக்கிறார்கள்.

தற்காலத்தில் நாம் பெற்று இருக்கும் விஞ்ஞான அறிவும் தெளிவும் படிப்பும் முற்காலத்தில் இல்லை. ஆகவே, விஞ்ஞான அறிவும் தெளிவும் படிப்பும் இல்லாத சாமானிய மக்களுக்கு நுட்பமான உண்மைகளை விளக்கிக் காட்டுவது எளிதல்ல. ஆகவே, தான், முற்காலத்து ஞானிகள் உண்மைகளைப் பாகுபாடு செய்து, அவற்றின் இயக்க நிலைகளை உணர்ந்து, அவற்றை ஸ்தூல வடிவங்களில் அமைத்தும், புராணக் கதைகளில் புதைத்தும் வைத்தார்கள். அவ்வாறாக ஸ்தூல வடிவில் உண்மைகளைச் சொல்லும்போதே, அவற்றோடு குறியீடு, சங்கேதம், அடையாளம், பரிபாஷை ஆகியவற்றைச் சாதுரியமாக விரவியும் வைத்து விட்டார்கள். இவ்வாறு செய்த காரணத்தால் விளைந்த நன்மைகள் சில, தீமைகள் பல. சத்திய வேட்கையோடும் பகுத்தறிவோடும் புராணக் குப்பைகளைக் கிளறி ஆராய்ந்த சிலர், குப்பையைத் தள்ளிவிட்டு, ஆழத்தில் புதைந்து கிடந்த மாணிக்க மாலையைத் தோண்டி எடுத்துப் பயனடைந்தார்கள்.

ஆனால், பகுத்தறிவற்றவர்களும் மூடநம்பிக்கையில் அழுந்திக் கிடந்தவர்களும் வேண்டிய மட்டும் குப்பையைத் தலையில் வாரிப் போட்டுக்கொண்டார்கள். மற்றவர்கள் தலையில் அதைக் கொட்டினார்கள்! மாணிக்க மாலை அவர்களுடைய கண்களுக்குத் தென்படவும் இல்லை; அவர்களின் உள்ளத்தில் புகவும் இல்லை.

போதாக்குறைக்கு, ஆன்ம உண்மைகளை மறைத்தும் திரித்தும் சீடர்களுக்குக் கூற வேண்டும் என்று குருமார்களுக்கு உபதேசம் செய்தன சில நூல்கள். உதாரணமாக, 'குல சூடாமணி நிகமம்' என்ற சாக்த நூலில், சாதாரண மாணவர்களுக்கும் ஓம் என்ற அட்சரத்தைக் கூறாமல் மந்திரத்தை மாத்திரம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று குருமார்களுக்கு அறிவுரை சொல்லியிருப்பதாக ஆசிரியர் இந்த நூலில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இவ்வாறாக உலகத்தில் உண்மை தெரிந்தவர்கள், தெரியாதவர்கள்போல் பாவனை செய்தும், அல்லது உண்மையைப் பிறருக்கு உரைக்கும்போது அதன் முக்கிய அம்சங்களை சூதாக மறைத்தும் அல்லது ஒன்றை மற்றொன்றாகச் சொல்லி மயக்கியும், திசை திருப்பிவிட்டும் வந்த காரணத்தால், அறிஞர்களுக்கு ஞான ஆசிரியர்கள் மீது நியாயமான சந்தேகம் ஏற்பட்டு இருக்கிறது. அதோடு போலி ஞானிகள், தெரியாததைத் தெரிந்ததுபோல் பாவனை செய்தும் கண்கட்டு வித்தைகள் காட்டியும் படாடோபமான வேஷங்கள் போட்டும் யோகத்தையும் ஞானத்தையும் வியாபாரப் பொருளாகக் கையாண்டு வருகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில், வஞ்சகமோ சூதோ இல்லாமல், உணர்ந்ததை உணர்ந்தபடி உலகத்துக்கு உணர்த்த வேண்டும் என்ற பேராசையோடும் ஆர்வத்தோடும் இந்த நூலாசிரியர் பல நூல்கள் எழுதியும், பல சீடர்களுக்கு ஆன்ம ரகசியங்களை பக்குவத்துக்கு ஏற்றபடி போதித்தும் வருவது, அவர்களுடைய பெருங் கருணையையும் சீலத்தையும் காட்டுகிறது.

எனது இலக்கிய குருவான ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் லண்டன் வட்டமேஜை மாநாட்டில் 45 ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு கூத்தை அடிக்கடி சொல்லிக் காட்டுவார்கள். ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்திய பிரதிநிதிகளுக்கு என்று பக்கிங்ஹாம் அரண்மனையில் ஒரு விருந்து நடத்தினார். இந்திய நாட்டு உணவையே இந்திய பிரதிநிதிகளுக்குப் பரிமாற வேண்டும் என்பது அவருடைய ஆசை.

ஆகவே, இந்தியாவிலிருந்து தலை வாழை இலைகளும் அப்பளம் உட்பட எல்லாப் பண்டங்களும் விமானத்தில் லண்டனுக்குப் பறந்து சென்றன. விருந்து தொடங்கிற்று. ஆங்கில பட்லர்கள்

வெள்ளை வெளேர் என்ற தட்டுகளில், கன்னங்கரேல் என்ற வட்ட வடிவ பொருட்களைக் கொண்டுவந்து இலைகளில் பரிமாறினார்கள். கரி கரியாக இருந்த இந்தப் பண்டங்கள் என்னவென்று இந்தியப் பிரதிநிதிகளுக்கு இனம் கண்டுபிடிக்க முடியவில்லை. நீண்ட ஆராய்ச்சிக்குப் பின்னால் புதிர் என்னவென்று அவர்களுக்குப் புரிந்தது.

கராச்சியில் அப்பளத்தை 'பேக்கிங்' செய்தவர்கள், ஓர் அப்பளம் அதற்கு மேல் வட்ட வடிவ ஆயில் பேப்பர் ஒன்று, அதற்கு மேலே மீண்டும் ஓர் அப்பளம் என்று அடுக்கிப் பார்சல் செய்து அனுப்பி இருந்தார்கள். வெள்ளைக்காரப் பட்லர்கள் அப்பளங்களைத் தூர எறிந்துவிட்டு, ஆயில் பேப்பர்களை வறுத்துக்கொண்டுவந்து வைத்துவிட்டார்கள்.

இந்தக் கைங்கரியந்தான் இலக்கியத்திலும் சமயத்திலும் நெடுகிலும் நடந்துகொண்டு வந்திருக்கிறது என்று ரசிகமணி அடிக்கடி சொல்வார்கள். அப்பளத்துக்கும் ஆயில் பேப்பருக்கும் வேற்றுமை தெரியாத ஒரு சௌகர்யமான நிலையில் பலர் இருக்கிறார்கள் என்று டி.கே.சி. சொல்வார்கள். ஒதுக்க வேண்டியதை ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஏற்க வேண்டியதை ஏற்றுக்கொள்ளும் விவேகம் ஒரு சிலருக்குத்தான் இருக்கிறது. இலக்கியம், கலை சம்பந்தமாக அந்த விவேகம் டி.கே.சி. ஒருவரிடம் இருப்பதை நான் கண்டு அனுபவித்தேன். சமயம், ஆன்ம ஞானம் சம்பந்தமாக அந்த விவேகத்தை இந்த நூலாசிரியராகிய சிவயோகியிடம் மாத்திரமே நான் நாள்தோறும் கண்டு அனுபவித்து வருகிறேன்.

சென்ற மூன்றாண்டுகளுக்கு மேலாக சிவயோகி அவர்களை வாரந்தோறும் சந்தித்தும் மணிக்கணக்காக அவர்களுடைய உரைகளைக் கேட்டும் வரும் எனக்கு, அவர்களுடைய தெவிட்டாத ஞானத் தெளிவு எவ்வளவு அபூர்வமானது என்று தெரிகிறது. திருமந்திரம், வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், திருவாசகம், ஜென், பௌத்தம், திபெத் யோக முறைகள், எகிப்து பாபிலோனியா முதலிய நாடுகளிலுள்ள ஞான நூல்கள், சுவிசேஷம், குர்ரான், சாக்தம், சைவம், வைணவம், தற்கால விஞ்ஞானம் ஆகியவைபற்றிய நூல்களைக் கசடறக் கற்று, ஒவ்வொன்றிலும் உள்ள குணத்தை நாடி ஏற்றுக் குறையைத் தெரிந்து தள்ளி சமயங் கடந்த சமரச நிலையில் இருப்பவர்கள் இந்த நூலாசிரியர்.

"இறைவனைப்பற்றி எழுதுவதும், படிப்பதும், பேசுவதுமே எனக்குத் தியானம்" என்று அடிக்கடி அவர்கள் சொல்வார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் செய்துவந்த தவத்தின் காரணமாக அவர்களுடைய உடம்பிலுள்ள மின்காந்த சக்தி

ஆற்றல் மிகுந்ததாகவும், அவர்களுடைய முகத்திலிருந்து ஒளிக் கதிர்கள் வீசுவதாகவும் அமைந்துள்ளன.

ஆகவேதான் அவர்களுடைய பேச்சிலும் எழுத்திலும் ஒரு தனிச் சக்தி இருக்கிறது. அவர்களுடைய நூலை வாசிப்பவர்களுக்கும் அவர்களுடைய பேச்சைக் கேட்பவர்களுக்கும், தியான நிலை எளிதில் கைகூடுகிறது. அவர்களிடம் தீட்சை பெற்றுக்கொண்ட என் போன்ற சீடர்களுக்கு உள்ளொளி பெருகி, தேகங் கடந்த அந்த அறிவு ஒளியில் கரைந்து நிற்க முடிகிறது. நண்பர் மீ.ப.சோமுவைப் போன்ற சீடர்களுக்கு அரிய ஆன்ம அனுபவங்கள் கிட்டுகின்றன.

இத்தகைய ஆற்றலை இந்த நூலாசிரியர் பெற்றிருப்பதற்குக் காரணம், அவர்களை வித்தக விநாயகர், *கூடு மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி*, அருள் புரிந்திருக்கிறார். இந்தியாவிலுள்ள 'மெய்த் தொண்டர் குழாம்' என்ற சொற்றொடருக்கு விளக்கம் கூறும்போது, மண்ணுலகத்தில் தேகத்தோடு கூடி வாழும் மெய் அடியார்களுடைய குழாம் அது அல்ல என்றும், நமது கட்புலனுக்குத் தோன்றாத, அக உலகத்தை ஆட்சிசெய்து வருகிற 'இன்விஸிபில் மாஸ்டர்'களின் குழாமே அது என்றும், உடலைவிட்டோ உடலுடனோ சாதகனது அறிவாக நின்று உணர்த்த வல்லவர்களே மெய் குருவாக ஆவார்கள் என்றும் அத்தகையோரின் திருக்கூட்டமே சம்பிரதாய முறைப்படி ஆதி மகா புருஷன் முதலாகத் தொடர்புள்ள ஒரு கூட்டமே வாழையடி வாழையாக வளர்ந்து பெருகியுள்ள மெய் அடியார் கூட்டம் என்றும் சிவயோகி சொல்வார். அத்தகைய மெய்த் தொண்டர் குழாத்தின் தொடர்புடைய சிவயோகியுடைய மன மண்டலத்தில், மெய்த் தொண்டர் இருந்து உணர்த்திய மர்மங்களையும் உண்மைகளையுமே இந்த நூலில் அவர்கள் எடுத்து விளக்கி இருக்கிறார்கள்.

உதாரணமாக, விநாயகரின் 'பெரும் பாரக்கோடு' என்ன என்பதை விளக்கும்போது, 'கடைவாய்ப் பற்களில் செய்யப்படும் ஒரு கிரியையினால், கீழுள்ள ஆசைகளைப் பெயர்த்து எறிந்து ஒளி மண்டலத்தில் உள்ள ஜீவ தரிசனத்துக்கு வழி செய்யும் ஆற்றல் உள்ளது என்பதை 'பெரும் பாரக்கோடு' என்ற கருத்து விளக்குகிறது' என்று சிவயோகி குறிக்கும்போது, அரிய ஒரு செய்தியைச் சாதகர்கள் உணர்ந்துகொள்ள முடிகிறது.

விநாயகரின், 'வேழ முகம்' என்ன என்று விவரிக்கும்போது, "குருவின் சகாயத்தால் தேகம் கடந்த தேகி உணர்த்தப்பட்டபோது, இருட்டைக் கிழிக்கும் தும்பிக்கை போன்ற உருவம், சில நிமிடங்கள் விளங்கிப் பின்னர் ஒளி மண்டலம் அமையும். அந்த ஒளி ஓர் அடி

வரையில் விளங்குவதால் யானையின் துதிக்கை நீட்டியதுபோல் உள்ளதை உருவகப்படுத்தி விளக்கப்பட்டுள்ளது" என்று நூலாசிரியர் கூறும்போது 'ஈதரிக் டியூப்' என்று மேல்நாட்டு ஞானிகள் சொல்வது நினைவுக்கு வருகிறது.

மேலும்,

நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

-என்ற வரிக்குப் பொருள் கூறும்போது, பின் மூளையிலுள்ள 'பினியல் கிளான்டின்' ஆற்றலும், முன் மூளையிலுள்ள 'பிட்யூட்டரி கிளாண்டின்' ஆற்றலும் பொருந்திய நீல ஒளி உண்டாகிறது என்றும், இந்த வித்தையைத் தென்னாட்டுக்கு அளிக்கவே திருமூலர் தென்னாட்டுக்கு வந்ததாகச் சொல்கிறார் என்றும் திருமந்திரத்தில் இருந்து ஆசிரியர் ஆதாரம் காட்டும்போது, நமக்கு ஒரு புதிய உலகத்தை அவர்கள் திறந்து காட்டுவது போல் இருக்கிறது.

பல்லின் சூட்சுமம் விநாயகர் வழிபாட்டில் உணர்த்தப்பட்டுள்ளது போல், கண்ணின் சூட்சுமம் நடராஜ வித்தையாலும், பெண்ணுடன் பொருந்தி மாற்றம் பெறும் வித்தை சோமாஸ்கந்த மூர்த்தத்தாலும் உணர்த்தப்பட்டு இருக்கிறது என்று ஆசிரியர் ஜாடையாகச் சொல்வதை வாசகர்கள் ஆழ்ந்து சிந்தித்து, ஆசிரியரை அணுகி மேல் விளக்கம் பெற்றுப் பயனடைவார்களாக.

கட்டும் தன்மையால், நரகமும் சொர்க்கமும் ஒரே ரகத்தைச் சேர்ந்தவைதான் என்றும், நரகத்தை இரும்பு விலங்காகக் கருதினால் சொர்க்கத்தைப் பொன் விலங்காகக் கொள்ளுதல் வேண்டும் என்றும், காரண சரீரத்தின் ஆற்றலைக் கெடுத்து அகண்ட அறிவாக நாம் மாறும்போதுதான் வினை பந்தத்தில் இருந்தும் நாம் விடுபடுகிறோம் என்றும் ஆசிரியர் விளக்கும்போது, *காரணத்தைக் கண்டு விளையாடுவாயே* என்ற சித்தர் வாக்கு நினைவுக்கு வருகிறது.

கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி

என்ற வரிக்கு ஆசிரியர் கூறும் விளக்கம் இந்த நூலுக்கும் பொருந்தும்.

"கரும்பின் சாறு வெளியாகாதிருக்க இயற்கையிலேயே கணுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கரும்பு முதிரும் வரையில் கணுக்களின் பாதுகாப்புடன் சாறு வெளிப்படாமல் உள்ளது. கரும்பு முதிர்ந்த பிறகு, கணுக்கள் இடையே வெடித்து, சாற்றைப் பிலிற்றுகின்றன."

இவ்வாறு ஞானச் சாற்றைப் பிலிற்றும் இந்த நூலை ஞான வேட்கை உடையவர் பயின்று பலனடைவார்களாக.

சிந்தனை போய் நான் எனல் போய் தேக்க இன்ப மாமழையை
வந்து பொழிந்தனை நீ வாழி பராபரமே

-தாயுமானவர்

-சிவயோகி மா.ரத்தினசபாபதி பிள்ளை எழுதிய, 'காரிய சித்தி' என்ற நூலுக்கு அணிந்துரை.

3. பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ்க் கவிஞர் பாரதிதாசனுக்கு என்று தமிழக அரசு அதிகார பூர்வமாக இந்த விழாவைக் கொண்டாடுகிறது. இவ்வாறு கொண்டாடுவதன் மூலம் தமிழக அரசு, ஒரு தமிழரசு-தமிழர் அரசு-என்பதை நிலைநாட்டிவிட்டது.

மேலும் ஒரு சிறப்பு, பாரதிதாசன் மறைந்து பதினைந்து ஆண்டின் பின் அவரின் வெளி வராத பாடல்களை எல்லாம் திரட்டிப் பத்துத் தொகுதிகளை ஏற்று அதனை வெளியிட்டுச் சிறப்பிக்கும் தமிழக அரசுக்குத் தமிழர் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். எனக்கு இதில் மற்றொரு மகிழ்ச்சியும் உண்டு; இந்தப் பத்துப் புத்தகங்களையும் தொகுத்தவர் என் அருமை நண்பர் கோவேந்தன் என்பது. அவர் பாரதிதாசனுக்கு வாய்த்த அருமையான சீடர்; சிறந்த கவிஞர்; சோவியத் நாட்டுப் பரிசு பெற்றவர்.

அவர்தான் எனக்கு பாரதிதாசனை அறிமுகம் செய்துவைத்தார். எங்கள் முதல் சந்திப்பு 1960 என்று நினைக்கிறேன். அவர் வாழ் நாள் முழுவதும் அந்தத் தொடர்பு நீடித்தது.

அவரை முதன்முதலில் காண வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியதே ஒரு தொகுப்பு. அதில் அவரின் சிறந்த பாடல்களைச் சேர்க்க வேண்டிய பணி என்னிடம் தரப்பட்டது. அப்போது உதவியதும் கவிஞர் கோவேந்தன்தான். நிரீஸ்வரவாதி (நாத்திகவாதி) என்றும், முரடர் என்றும் ஏடாகூடமான ஆசாமி என்றுமே அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த எனக்கு அவர் பாடல்களைப் படித்ததும், எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன.

சென்னையில்தான் சந்தித்தேன்; அடேயப்பா, உண்மையான கவிஞன் எப்படி இருப்பான் என்பதற்கு அவரைவிட்டால் வேறு யாரையும் எடுத்துக்காட்ட முடியாது. நான் எத்தனையோ கவிஞர்களைக் கண்டு இருக்கிறேன் புலவர்களைச் சந்தித்திருக்கிறேன்

பண்டிதர்களையும் பார்த்திருக்கிறேன். அவர்களிடத்தில் ஒவ்வொரு திறமை இருக்கும்.

ஆனால், அந்தத் திறமை, அறிவு, புலமை அத்தனையும் வறட்டுத்தனமானவை; வாழ்க்கைக்கு உதவாதவை. ஆகையால் அவர்களிடத்தே தெளிவில்லை, ஒளியில்லை.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இசையை அடிப்படையாகக் கொண்டு கவிதை பாடியவர்கள் மூன்று பேர். 1. அருணகிரிநாதர், 2. காவடிச்சிந்து அண்ணாமலை ரெட்டியார், 3. பாரதிதாசன்.

பாரதிதாசன் நல்ல ராக ஞானம் உடையவர். அதோடு நல்ல தாள ஞானமும் உடையவர். சிக்கலான தாளங்களைக்கூட எளிதாகக் கையாளும் வல்லமை அவரிடத்தில் இருந்தது. அதற்கு மேல், கம்பீரமான குரலில் பாடும் ஆற்றல் பெற்றவர் அவர். ஒருமுறை என்னைச் சந்தித்தபோது, பாரதியார் பாடல்கள், தம்முடைய சீன எதிர்ப்புப் பாடல்கள், இரண்டு மூன்று காதல் பாடல்கள் ஆகியவற்றைப் பாடிக் காட்டினார். அவற்றின் சந்த லயமும் பண்ணின் திறனும் இன்றும் என் மனச் செவியில் ரீங்காரமிடுகின்றன.

சென்ற வாரம் பாரதிதாசனோடு நெருங்கிப் பழகிய நண்பர் எஸ்.ஆர்.சுப்பிரமணியம் என்னைச் சந்தித்தார். 1935-ல் 'பாரதி கவிதா மண்டலம்' என்ற பத்திரிகையைப் பாரதிதாசன் ஆசிரியராக இருந்து தொடங்கியதைக் குறிப்பிட்டார். அந்தப் பத்திரிகையின் பப்ளிஷராக இருந்தவர் சுப்பிரமணியம்.

1925-ல் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை அவர் என்னிடம் சொன்னார். புதுவை துய்ப்ளே தெருவில் இருவரும் ஒரு கடையில் அமர்ந்து இருந்தார்கள். எதிர் கடை ஒரு கிராமபோன் கடை. அந்தக் கடைக்காரர் இந்தி ப்ளேட் ஒன்றைப் போட்டிருந்தார். பாட்டு புத்தம் புதிய மெட்டில் இருந்தது. உடனே சுப்பிரமணியத்தைப் பார்த்து பாரதிதாசன், "நீ போய் அந்தப் பிளேட்டை இன்னொரு தரம் போடச்சொல்லு" என்று சொல்லி அந்த மெட்டை ஆழ்ந்து கேட்டாராம். இரண்டு முறை திரும்பப் போடச் சொல்லிக் கேட்டார். இசையும் தாளமும் அவர் உள்ளத்தில் பாய்ந்தன. ஓர் ஆழ்ந்த உணர்வு நிலையை அடைந்தார். அவருடைய உள் மனம் அந்த ராகத்துக்கும் தாளத்துக்கும் ஏற்றவாறு தமிழ்ச் சொற்களை அணி வகுத்து நிறுத்தியது. உடனே பாடத்தொடங்கினார் கவிஞர்.

நானிலத்தின் மேநிலைக்குச் சேனை கூட்டினோம்
பொதுச் சேனை கூட்டினோம்
நாய்கள் ஒக்கப் போர் தொடுக்கும்
ஈனம் ஓட்டினோம் கெட்ட ஈனம் ஓட்டினோம்.

தேனடைக்குள் ஈக்கள் ஒப்பர் பூதலத்தினோர்-இப்
பூதலத்தினோர்-அவர்
சீவனத்தில் பேதம்வைத்துப் பாழ்படுத்தினார்-துஷ்டர்
பாழ்படுத்தினார்.

இந்த உலகம் ஆனந்தமயமானது. எங்கு பார்த்தாலும் இன்பம். எங்கு பார்த்தாலும் செழிப்பும் வளமும் தேனடைபோல தேன் கசிந்து பீறிட்டுக்கொண்டு இருக்கிறது. தேனில் விழுந்த வண்டு அதை உண்டு மயங்கிக் கிடப்பதுபோல, மக்கள் எல்லோரும் பூவுலகில் உள்ள உணவை உண்டு இன்பத்தை மாந்திக் களித்து இருக்கலாம். உள்ளார், இல்லார் என்ற பேதம் மனிதனால் உருவானது. உணவு இன்றி ஒருவன் பட்டினியால் வாடுகிறான்; மிதமிஞ்சிய உணவை உண்டு இன்னொருவன் புளித்த ஏப்பம் விட்டுக்கொண்டு இருக்கிறான். இதற்கு எல்லாம் காரணம் என்ன? ஜாதியின் பெயராலும், சமயத்தின் பெயராலும் சில துஷ்டர்கள் கோடானுகோடி பேதங்களை உண்டாக்கி இருக்கிறார்கள். அதனால்தான், 'இரந்தும் உயிர் வாழும்' கொடுமை உலகத்தில் இருக்கிறது.

இந்துஸ்தானிப் பாட்டையும் மெட்டையும் கேட்டுத் தன்னை மறந்த லயந்தன்னில் இருந்தபோது அவர் படைத்த பாடல் இது.

உள்ளத்தை இசையில் ஊறப் போட்டு இசை மயக்கத்தில் இருக்கும்போது, ஒரு போதை நிலை ஏற்படுகிறது. கவிதையின் அதிகார எல்லையைத் தாண்டி, இசையின் அதிகார எல்லைக்குள் புகும்போது, ஒரு திணை மயக்கம் ஏற்படுகிறது; இது கவிதையா, இசையா என்ற மயக்கம். அந்த நிலையிலிருந்து பாடியவர்கள் அருணகிரிநாதரும், அண்ணாமலை ரெட்டியாரும், புரட்சிக் கவிஞர் கனக சுப்புரத்தினமும்.

'சோலை ஆடலரங்கு' என்ற ஒரு பாடலில் கருத்துக்கு ஏற்ற சந்தம், ஒரு லயம், இசை ஒழுங்கு, பதம் பிடித்து ஆடுகிற தாள கதி எல்லாம் இன்ப உணர்ச்சியின் எல்லைக்கு நம்மை இட்டுச் செல்கின்றன.

விட்டுவிட்டுக் குழல் ஊதும்
மெட்டுவைத்துக் குயில் பாடும்
வட்டாரச் சோலையிலே
மாமயில் ஆடும்-நல்ல
மரங்கொத்தி அரங்கத்தில்
தாளங்கள் போடும்.

பாட்டு அடுத்து அடுத்து கூத்தாடி இறுதியில்,

கொள்ளை கொள்ளை கொடி முல்லை
கோத்த முத்தும் இணையில்லை
கள் ஒழுகும் உதடு காட்டிச்
சிரித்தாள் ஒருத்தி-அவள்
காட்சி எல்லாம் கண்டிருந்தது
ஓர் செம்பருத்தி.

-என்று முடிகிறது.

சொல்லைத் துளைத்து அதற்குள் இசைத் தேனைப் புகுத்தி ஒரு போதையை உண்டாக்கி இருக்கிறார் இன்னொரு பாடலிலே. இந்தப் பாடலில் சொற்கள் அபிநயம் பிடிப்பதைக் கவனிக்க வேண்டும். கோபம் வரும்போது சொல்லுக்கு முகம் சிவக்கும்: காதல் வரும்போது சொல் கண்ணடிக்கும். பொறாமை வரும்போது சொல் தன் உதட்டைப் பிதுக்கும். இந்த பாவங்கள் முழுதுமாக வரும் பாட்டு இது.

மாஜி காதலன் தெருவழியே போகிறான்; காதலி அவன் பாராமுகமாகப் போவதைப்பற்றி முறையிடுகிறாள்; ஒருதலைக் காமம் இது.

திரும்பிப் பார்த்தால் என்ன?
விரும்பிப் பார்க்கும் என்னை அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

பல்லவியிலேயே காதலியின் இதயக் குமுறல் பேரார்வத்தோடு பேசுகிறது. பேசுகிறதா? பாடுகிறது. உணர்ச்சி பிறந்த மெருகோடு கூச்சமின்றி அடுத்து ஜதிஸ்வரம் கொட்டுகிறது.

பெரிய வேலை உள்ளவன் போலே
பெண்களை வெறுத்தவன் போலே
அரும்புச் சிரிப்பை அடக்கிச் சென்றான்
அசையும் தேரைப் போலே - அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

குன்று சார்ந்த நாடும் வீடும்
கொடு என்று கேட்டேனா? - நான்
சென்று வழியை மறித்துச் சிரித்து
மடியில் கை போட்டேனா? - அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

கோபம் வரும்போது சொல்லுக்கு முகம் சிவப்பதை இங்கே பார்க்கலாம்.

சதையில் மெருகும் முகத்தில் அழகும்
தாங்கிச் சென்றான் கொடியன் - நான்

அதிலே கொஞ்சம், இதிலே கொஞ்சம்
அள்ளிக் கொள்ளவா முடியும்? - அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

விரும்பிப் பார்க்கும் என்னை - அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

பாதி மறைத்துப் பாதி விலக்கும்
படத்து நடிகையா நான்?
காதல் கொண்ட என் முகத்தைப் பார்க்கக்
கண்ணும் கூசுவதேனோ? - அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

இந்த அருமையான கவியில் சொற்கள் நடனமாடுகின்றன; அபிநயம் பிடிக்கின்றன; ஜதிஸ்வரம், அலாரிப்பு, பதம் முதலிய பரதநாட்டிய உத்திகளைக் கையாள்கின்றன.

உரைநடைக்கும் கவிநடைக்கும் இதுதான் வேற்றுமை. நான் நடந்தே சென்று அந்தச் சுவரைத் தொட்டுவிட்டு வருகிறேன். பால சரஸ்வதி நாட்டியமாடிக்கொண்டே சென்று அந்தச் சுவரைத் தொட்டுவிட்டு நாட்டியமாடிக்கொண்டே வந்து சேர்கிறார். சுவரைத் தொடுவது பெரிய காரியமில்லை; எப்படித் தொட்டுவிட்டு வருகிறோம்? அதில் அழகு இருக்கிறதா என்பதே கேள்வி. கருத்தைத் தெரிவிப்பதற்காக வசனம்; அழகை வெளிப்படுத்துவதற்காக உள்ளதே கவிதை.

கொய்தே (Goethe), "கவிதை, கருத்துகளைக்கொண்டு எழுதப் படுவது அன்று, சொற்களால் வரைவது" என்கிறான்

மேலே காட்டிய பாட்டை *1960*-ல் சாகித்திய அகாடமி தமிழ்க் கவிதைத் தொகுதியில் *(5* ஆண்டுக்கு முன் வந்த கவிதைகளில் சிறந்த பாடலாகத் தேர்வு செய்தது) சேர்ந்தேன். ஓரிரு ஆண்டுக்குப் பிறகு கவிஞர் கோவேந்தனோடு என்னைச் சந்தித்தார் பாரதிதாசன். "நீங்கள் என் பாடலைச் சேர்த்திருக்கிறீர்கள். ஏதோ 12 ரூபாய் ராயல்டி கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள் சாகித்திய அகாடமிக்காரர்கள்" என்று கூறிவிட்டு, "இந்த 5 ஆண்டுகளில் நான் எவ்வளவோ நல்ல நல்ல கவி எல்லாம் எழுதி இருக்கிறேன்; என்னங்க நீங்க போயும் போயும் இந்தப் பாட்டைப் போட்டீங்களே" என்று கேட்டார்.

வயதானவர் காதல் பாட்டு பாடக்கூடாது என்ற வெட்கம் போலும். "உண்மையில் நீங்கள் 5 ஆண்டில் எழுதிய பாட்டுகளில் இதுவே சிறந்தது. அப்படி அபூர்வமாக வந்திருக்கிறது" என்று சொன்னேன்.

கவிஞர்களுக்குத் தங்கள் கவிதையில் எது மேல், எது தாழ்ந்தது என்று பிரிக்க முடியாது. எல்லாம் தாம் பெற்றெடுத்த குழந்தைகள். ஆகையால் அவற்றின் மீது ஒரேவிதமான அன்பைச் செலுத்துகிறார்கள் அவர்கள்.

மொழி, சமூகத்தின் படைப்பு. மொழி அழியுமானால் சமூகம் அழியும். மொழியின் படைப்பாளிகளே கவிஞர்கள் என்று கூறிவிடலாம். மொழி, உணர்வின் மூச்சாகவும் உணர்ச்சியின் பேச்சாகவும் இருப்பது. உலகத்தின் மூத்த குடி தமிழினம்தான். அதனால் மூத்த மொழியும் தமிழ் என்பதில் கருத்து வேறுபாடே இல்லை.

தமிழைக் கையாளத் தெரிந்த கவிஞர்கள் ஒரு சிலர்தான். அதில் பாரதியாரின் கையைப் பிடித்துக்கொண்டே தோள் மீது ஏறியவர் பாரதிதாசன். உண்ணும் உணவும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் பாரதிதாசனுக்குத் தமிழ்தான். தமிழையும் பாரதிதாசனையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது; நெருப்பையும் சூட்டையும் பிரிக்க முடியுமா?

4. குடிலுக்குப் பல்லாண்டு

தெய்வத்தையே துணை எனக்கொண்ட, தன்னலமற்ற பேரன்புக்கு எவ்வளவு பேராற்றல் இருக்கிறது என்பதை ஸ்ரீராமகிருஷ்ண குடிலின் 25 ஆண்டு வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

25 ஆண்டுகளுக்கு முன்பு மதிப்பாரற்று முடங்கிக் கிடந்த ஓர் ஓட்டைக் குடிசை, விரிந்து பெருகி நாடெங்கும் ஒளி வீசிக்கொண்டு இருக்கும் பல்கலைக் கோயிலாக இன்று நிமிர்ந்து நிற்கிறது. அன்று, ஐந்து அநாதைக் குழந்தைகளுக்குத் தாயாக இருந்த விடுதி, இன்று 300-க்கு மேற்பட்ட குழந்தைகளுக்குத் தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும், கண்கண்ட தெய்வமாகவும் இயங்குகிறது.

கால் நூற்றாண்டில் இந்த அற்புதத்தை நிகழ்த்திக் காட்டிய பிரம்மச்சாரி ராமசாமி ஒரு மாபெரும் துறவி; அஞ்சா நெஞ்சு படைத்த ஆன்ம வீரர்; விளைவைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல், முழு ஆர்வத்துடன் பணி செய்து கிடப்பதே தமது கடமை என்பதை உணர்ந்த கர்மயோகி; மலை கலங்கினும் தான் கொண்ட கொள்கையில் நிலை கலங்காது உறுதியோடு நிற்கும் உத்தம சீலர்; தன் உடலையும் உள்ளத்தையும் உயிரையுமே மிச்சம்

கிச்சம் வைக்காமல் திக்கற்றவர்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்ட ஏழை பங்காளர்; ராமகிருஷ்ண பரமஹம்ஸரையே தன்னை ஆளும் தெய்வமாகக்கொண்ட அடியவர்.

இந்தக் குடிலை நடத்துவதில்தான் எத்தனை இன்னல்கள்! எத்தனை எத்தனை இடையூறுகள்! நெருக்கடிகள்! அத்தனை இடுக்கண்களையும் பிரம்மச்சாரி சமாளித்த முறையே அலாதி. "பாரத்தை ராமகிருஷ்ணர் தலை மேல் சுமத்திவிட்டு, அவருடைய அருள் வழி நிற்போம். எல்லா இன்னல்களும் விலகிவிடும்" என்று சொல்வார்கள் அடிகள்; சொன்னபடியே எல்லா இடையூறுகளும் நீங்கி, குடிலின் குறிக்கோள் வெற்றிக்கு மேல் வெற்றிபெற்று வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது.

குடிலின் தொடக்க காலத்தில் நடந்த ஒரு காட்சி நினைவுக்கு வருகிறது. அன்றாடம் அன்பர்கள் பரிவோடு அளிக்கும் நன்கொடையில் வாங்கும் நெல்லைக் குத்தி அரிசியாக்கி உலை வைத்து குடில் குழந்தைகளுக்கு உணவளித்துக்கொண்டு இருந்த காலம் அது. ஒரு நாள் குடில் களஞ்சியத்தில் ஒரு மணி நெல்கூட இல்லை.

மாலையில் நாள்தோறும் 4 மணிக்கு வாடிக்கையாக நெல் குத்த வரும் ஒரு கிழவியம்மாள் அன்றும் வந்தார். "இன்று குத்துவதற்கு நெல் இல்லை. நீங்கள் நாளை வாருங்கள்" என்று சொல்லி அந்த அம்மாளை அனுப்பிவிட்டார்கள் பிரம்மச்சாரி. சமைக்கும் உணவை பரமஹம்ஸருக்கு நைவேத்தியம் செய்தபிறகுதான் மாணவர்களுக்குப் பரிமாறுவது குடில் மரபு. குத்துவதற்கு நெல் இல்லை. சமைப்பதற்கு அரிசி இல்லை. இன்று என்ன செய்வது என்று சிந்தித்தார்கள் பிரம்மச்சாரி.

'சென்னையில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தை ஏற்படுத்திய ஸ்ரீராமகிருஷ்ணானந்த சுவாமிகள் செய்ய நினைத்த நிகழ்ச்சியைப் போல் இன்று நாமும் செய்ய வேண்டியதுதான்.'

அதாவது குருமஹராஜின் (பரமஹம்ஸருக்கு அடியார்கள் கூறும் திருப்பெயர்) சீடர்களில் ஸ்ரீராமகிருஷ்ணானந்த சுவாமிகளும் ஒருவர். அவர் ஆரம்பத்தில் சென்னையில் ஒரு சாதாரண வீட்டில் குருமஹராஜ் படத்தை வைத்து பூஜை செய்து வந்தார். வேளாவேளை பகவான் படத்துக்குப் பூஜை செய்து நைவேத்யம் படைத்தே பின் உணவு உட்கொள்வார்.

ஒரு நாள் மதியம் வெகு நேரமாகியும் யாரும் உணவுப் பொருள் கொண்டுவந்து கொடுக்கவில்லை. இப்படி தினமும் யாராவது ஒருவர் கொண்டுவந்து கொடுத்தால்தான் பூஜை, நைவேத்யம் நடக்கும். இதுதான் சென்னை மயிலாப்பூர் மடத்தின் ஆரம்ப

நிலை! அன்று உச்சி வேளை தாண்டியும் ஒருவரும் உணவுப்பொருள் கொண்டுவராததால் சுவாமிகள் நினைக்கிறார். 'குருதேவா! இதுவரைக்கும் உணவுப்பொருள் வந்து சேரவில்லை. இதோ கடற்கரைக்குச் சென்று மணலை துணியில் மூட்டை கட்டிவந்து உமக்குப் படைக்கப் போகிறேன்' என்று வேகமாக எழுந்து துண்டை தோளில் போட்டு, புறப்பட ஆயத்தமாகவும், மூடியிருந்த கதவை யாரோ தடதடவென்று தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறந்து பார்த்தால், ஒருவர் ஒரு பெரிய தாம்பாளத்தில் சப்பாத்திக்கு வேண்டிய சகல பொருட்களுடனும் நின்றுகொண்டு இருப்பதைக் கண்டார். சுவாமிகள் புன்முறுவலுடன் அதைப் பெற்று உணவுப் பொருள் தயார் செய்து பகவானுக்குப் படைத்து அவருடைய அருளை நினைத்து நினைத்து உருகினார்.

மேற்படி சம்பவத்தை நினைவுக்குக் கொண்டுவந்து தாமும் அதைப்போல் இன்று செய்ய வேண்டியதுதான்!

'பக்கத்தில் காவிரி ஆறு கரை புரண்டு ஓடுகிறது. இங்கு இருப்பவர்கள் எல்லாம் குழந்தைகளானதால் மணலுக்குப் பதில் அதிலிருந்து குடம் குடமாகத் தண்ணீரை எடுத்து வந்து, அதையே பரமஹம்ஸருக்கு நைவேத்யமாகச் சமர்ப்பித்து, அந்தப் புனித தீர்த்தத்தையே குழந்தைகளுக்கு உணவாகக் கொடுத்துவிட்டு உறங்க வேண்டியதுதான். இது பகவான் ராமகிருஷ்ணருடைய திருவிளையாடல். இதை நாம் எல்லோரும் ஆனந்தத்தோடு ஏற்றுக்கொள்வோம்' என்று தீர்மானித்தார்கள் பிரம்மச்சாரி ராமசாமி.

இந்த முடிவுக்கு வந்தபோது மாலை 6.30 மணி ஆகிவிட்டது. கருக்கல் நேரம்; இருள் கவிந்துகொண்டு இருக்கிறது. இந்த நேரத்தில் தூரத்தில் ஓர் உருவம் மங்கலாகத் தெரிகிறது. குடிலுக்கு 200 அடிக்கு அப்பால் இருக்கும் நெடுஞ்சாலையிலிருந்து படிக்கட்டு ஏறி ஓர் ஆள் தள்ளாடித் தள்ளாடி குடிலை நோக்கி வருகிறார்.

இரவு நேரங்களில் சில வழிப்போக்கர்கள் பசி தாங்க மாட்டாமல் குடிலுக்குள் வந்து உணவருந்திப் போவதுண்டு. குழந்தைகள் பட்டினி கிடக்கப்போகும் இன்று, இவரும் குடிலுக்கு வந்து பட்டினியில் பங்குகொள்ளப் போகிறாரா என்று ஐயம் ஏற்படுகிறது. எல்லாம் சோதனைதான். ஆனால், தலை மேல் ஏதோ வைத்திருக்கிறாரே இவர்! குடிலை நெருங்க நெருங்க, இவர் தலை மேல் ஒரு மூட்டை இருப்பது தெரிகிறது. மூட்டையை பிரம்மச்சாரியின் கால்மாட்டில் இறக்கி வைக்கிறார், வந்தவர்.

"இது என்ன, ஐயா?" என்று கேட்கிறார் பிரம்மச்சாரி.

"இரண்டு வருஷங்களுக்கு முன் ரங்கநாதபுரம் பிச்சு ஐயரிடம் குடிலைப்பற்றிப் பேசினீர்களாம். அவரும் நெடுநாளாக குடிலுக்கு

உதவ வேண்டும் என்று நினைத்துக்கொண்டு இருந்தாராம். இன்று மாலை அனலை வந்த ஐயருக்கு திடீரென்று குடில் நினைவு வந்ததாம். ஒரு மூட்டை நெல்லை என்னிடம் கொடுத்து, 'இதை உடனே குடில் சுவாமியிடம் சேர்த்துவிட்டு வா' என்றார். அதை தங்களிடம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறேன்."

இந்த வாசகத்தைக் கேட்ட ராமகிருஷ்ண பக்தர்கள் எல்லோரும் வியப்பில் மூழ்கிவிட்டார்கள். குடில் மாணவன் ஒருவன் போன பெரியம்மாளை திரும்பவும் அழைத்து வந்தான். அந்த அம்மாள் வந்து, நெல்லைக் குத்தி, அரிசியை உலையில் பெய்து, சோறாக்கி, பரமஹம்ஸருக்கு அதை நிவேதனம் செய்தபின், குடில் குழந்தைகள் அன்று வயிறார உண்டார்கள்.

இன்றும் வருவது கொல்லோ நெருனலும்
கொன்றது போலும் நிரப்பு?

-என்ற வறிய நிலை மாறி, தன் தேவையை மற்றவர்களை எதிர்பாராமல் பூர்த்தி செய்யக்கூடிய பொருளாதார வளம் இப்போது குடிலுக்கு ஏற்பட்டுவிட்டது. இந்த வளத்துக்கு அடிகோலியது பிரம்மச்சாரி ராமசாமியின் ஆன்ம வளம். அந்த ஆன்ம வளத்துக்குப் பக்கபலமாக நின்றது ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் கொடை வளம்.

தமிழகத்தில் நல்லுணர்வு வற்றிப் போய்விட்டன என்று பலர் குறை கூறுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது. ஆடம்பரமான சேவையை ஆதரிப்பதில்லை தமிழர்கள். ஆனால், சேவையைச் செய்பவர் ஒழுக்க சீலர், ஆரவாரமற்றவர் என்று தெரிந்துவிட்டால், "நான் முந்தி, நீ முந்தி" என்று போட்டி போட்டுக்கொண்டு தாராளமாக பொருளுதவி செய்வார்கள் தமிழர்கள். சென்ற 25 ஆண்டுகளில் சாமானிய மக்கள் பலரும் பணக்காரர்கள் சிலருமாகச் சேர்ந்து குடிலுக்குக் கொடுத்த நன்கொடை ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும். வெள்ளி விழாவில் அவர்களுக்கு முதல் அஞ்சலி செலுத்த வேண்டும்.

குடிலின் இதயப் பலகையில் சாகா எழுத்துக்களில் எழுத வேண்டிய ஓர் ஒப்பற்ற நாமத்தைப்பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். இரக்கம் என்ற அருவ தத்துவம் மனித உருவம் எடுத்து மலையப்பன் என்ற நாமம் பூண்டு குடிலுக்குச் செய்த பேருதவியை ஆண்டுதோறும் விழாக் கொண்டாடி போற்ற வேண்டும்.

காலஞ்சென்ற வி.கே.சி.நடராசன், ஐ.ஏ.எஸ், ஓய்வுபெற்ற சித்திரைபுத்திரன் போன்ற உத்தம அதிகாரிகளும் காலத்தாற் செய்த நன்றி ஞாலத்தின் மாணப் பெரிது. அதேபோன்று அதிகாரிகள் பலர் அரசுப் பணியில் இருந்து வருவதால் பெயர் குறிப்பிடாது விடப்படுகிறது.

தாப்பாய் ரெட்டியார் போன்ற கருணை வள்ளல்கள் குடிலுக்கு ஈந்து, ஈந்து அவர்களுடைய கரங்கள் சிவந்துவிட்டன. அத்தகைய கரங்களுக்கு சான்றோர்கள் கரங்கூப்பி நன்றி செலுத்துவார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கல்விக்கும் கலைகளுக்கும் கருணைக்கும் நிலைக்களனாக இருக்கும் திருமுருக கிருபானந்த வாரியார் குடில் குழந்தைகளைத் தம் சொந்தக் குழந்தைகளாக சுவீகாரம் செய்துகொண்டு, கல் மனங்களை எல்லாம் தன் சொல் வன்மையால் இளக்கி, குடிலுக்கு லட்சக்கணக்கான ரூபாய்களை வசூல் செய்துகொடுத்தும், தாமே அருளையும் பொருளையும் தானம் செய்தும் பிரம்மச்சாரி ராமசாமிக்குத் தோழனாகவும் ஆலோசகராகவும் இருந்து தமயனாகவும் செய்திருக்கும் பவித்திரமான பணியைப்பற்றி ஓர் இதிகாசம் எழுதினால்தான் உள்ளத்துக்கு நிறைவு உண்டாகும்.

முரசைக் கொட்டினால் அதன் ஒலி ஒரு காத தூரம் கேட்கும். இடி இடித்தால் அதன் முழக்கம் ஒரு யோசனை தூரம் கேட்கும். ஆனால், ஒருவர் கொடை கொடுத்தார் என்ற சொற்களை தாழ்ந்த குரலில் ரகசியமாகச் சொன்னாலும், அந்தச் சொற்கள் வான மண்டலத்தையும் கடந்து மூவுலகத்தில் உள்ளோருக்கும் கேட்குமாம். இவ்வாறு முழங்குகிறது நாலடியார்:

கடிப்படுகண் முரசம் காதத்து ஓர் கேட்பர்,
இடித்து முழங்கியது யோசனை ஓர் கேட்பர்,
அடுக்கிய மூவுலகும் கேட்குமே, ஈண்டு
கொடுத்தார் எனப்படும் சொல்.

வாரியார் அவர்கள் ‘குடிலுக்குக் கொடுத்தார்’ என்னும் சொல், மூவுலகங்களில் மாத்திரமா, இல்லை, ஈரேழு புவனங்களிலும் கேட்கும்.

இனி, பிரம்மச்சாரி ராமசாமி, தன்னுடைய மதிப்பரிய நேரத்தையும் கவனத்தையும் உழைப்பையும் பண வசூல் செய்வதில் வீணாக்க வேண்டியதில்லை. தன்மானத்தோடும் பிறர்க்கு உரியராகவும் வாழும் நெறியையும், பொருள் பொதிந்த கல்வியையும் குடில் குழந்தைகளுக்குப் புகட்டுவதில் அவர்களுடைய நேரம் செலவாக வேண்டும். பிரம்மச்சாரிக்குப் பின் அவர்களுடைய நெறியைப் பின்பற்றி குடிலை நடத்தக்கூடிய சீலர்களை உண்டாக்குவதற்கு வேண்டிய வழிகளையும் பிரம்மச்சாரி அவர்களே வகுத்துக் கொடுக்க வேண்டும். இவற்றை எல்லாம் சாதித்து முடிப்பதற்காக இறைவன் பிரம்மச்சாரி அவர்களைப் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்வித்து, வாழவைப்பானாக.

5. நாடு போற்றும் நாவலர்

'நாடு போற்றும் நாவலர்' என்ற தலைப்பில் தாங்கள் ஒரு நூலை வெளியிடப் போகிறீர்கள் என்று கேட்டு மிக்க மகிழ்ச்சி. என்னிடமிருந்து கட்டுரை வராத காரணத்தால் மலர் வேலையை முடிக்காமல் வைத்திருக்கிறீர்கள் என்று நீங்கள் உங்கள் கடிதத்தில் சொல்லி இருக்கிறீர்கள். இந்தக் குற்றச்சாட்டைப் படித்ததும் என்னுடைய மற்ற வேலைகளை எல்லாம் சுருட்டி வைத்துவிட்டு இதை எழுதி முடித்தேன்.

32 ஆண்டுகளாக அரசியல் சார்பற்ற நீதிபதியாக இருந்தவன் நான். ஆகவே, நாவலர் அவர்களுடைய அரசியல் கொள்கைகளைப் பற்றியும் அரசியல் சாதனைகளைப்பற்றியும் நான் எழுத முனைய வில்லை.

வாழ்க்கை என்ற நறுமலருக்கு அடுக்கடுக்காக எத்தனை எத்தனையோ இதழ்கள் இருக்கின்றன. அவற்றில் ஓர் இதழ்தானே அரசியல்! பண்பாடு, இலக்கிய உணர்வு, நா நலம், சத்திய வேட்கை முதலிய வேறு பல இதழ்களும் நாவலர் வாழ்க்கை மலரில் இருக்கத்தானே செய்கின்றன? அவற்றை உணர்ந்து பாராட்டி வருகிறவன் நான்.

நாவலரை நான் முதன்முதலாக சந்தித்தது 1943-ம் வருடத்தில். விருத்தாசலத்தில் பழமலைநாதர் கோயில் முன்றிலில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடந்தது. அண்ணாமலை நகரில் மாணவனாக இருந்த நாவலர் பெங்களூரில் நடந்த பேச்சுப் போட்டியில் வெற்றிக் கேடயம் பெற்று அண்ணாமலை நகருக்குத் திரும்பிவரும் வழியில் விருத்தாசல மக்கள் இந்த வரவேற்பை ஏற்பாடு செய்திருந்தார்கள். 1931 முதல் 1933 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாகவும், பேரவைத் தலைவனாகவும் நான் இருந்த காரணத்தாலும், விருத்தாசலத்தில் நீதிபதியாக இருந்த காரணத்தாலும் வரவேற்புக் கூட்டத்துக்கு தலைமை தாங்கும் பொறுப்பை எனக்குக் கொடுத்தார்கள். கூட்டத்துக்கு நூற்றுக் கணக்கான மக்கள் வந்திருந்தார்கள். கூட்டத்துக்கு நாவலர் வந்ததும் ஒரே கைதட்டலும் ஆரவாரமுமாக இருந்தது.

ரசிகமணி டி.கே.சி-யின் சீடனாகிய நான் கம்ப ராமாயணப் பாடல்களை மேற்கோள் காட்டி நாவலரின் வெற்றியைப் பாராட்டி முன்னுரை நிகழ்த்தினேன். முன்னுரைக்குப் பின் நாவலர் பேசிய அரிய பேச்சு இன்னும் என் மனச் செவிகளில் ஒலித்துக்கொண்டு இருக்கிறது. நெடிய, கம்பீரமான உருவம்; இளமையின் எழில்

தவழும் முகம்; கனற் பொறி பறக்கும் சொற்கள்; சாதியால் வந்த சிறு நெறியைத் தகர்த்து எறிந்துவிட்டு, நீதியால் வந்த நெடுந் தரும நெறியை இந்த நாட்டில் நிலைநாட்ட வேண்டும் என்ற பேரார்வம். 32 ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்தப் பேச்சை நான் நினைத்துப் பார்க்கும்போது இவ்வளவும் என் நினைவுக் கண் முன் வந்து நிற்கின்றன.

1943-க்குப் பின் நாவலர் அவர்களோடு பழகும் வாய்ப்பு எனக்கு 1966-ல்தான் கிடைத்தது. கோலாலம்பூரில் நடந்த முதலாவது உலகத் தமிழ் மகாநாட்டுக்கு நாங்கள் இருவரும் வேறு பல தமிழ் அறிஞர்களோடு ஒன்றாகவே சென்றோம். விமானத்தில் போகும் போதும், மாநாட்டு நடவடிக்கைகள் நடக்கும் போதும், நாவலர் மற்றவர்களோடு பழகிவந்த விதத்தைக் கூர்ந்து கவனித்தேன். ஆடம்பரத்தின் நிழலே படாத நாவலரின் எளிமையும், சூதுவாது இல்லாத உள்ளமும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அப்போது நாவலர் அமைச்சர் பதவியை ஏற்கவில்லை; சட்டசபையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த காலம். அமைச்சர் பதவி ஏற்ற பின்னும் நாவலருடைய எளிமை கிஞ்சித்தும் பாதிக்கப்படவில்லை.

உயர்ந்த பண்பாட்டுக்கு உரைகல்லாக இருப்பது எளிமை என்பதை நாவலர் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது. ரசிகமணி டி.கே.சி-யோடு நெடுங்காலம் பழகிய காரணத்தால் கவிதையைப் பற்றியும் கல்வியைப்பற்றியும் அசைக்க முடியாத சில கொள்கைகள் என் மனதில் உருவாகியுள்ளன. அந்தக் கொள்கைகளை மனமார ஆமோதிப்பவர்கள் வெகு சிலரே. அவ்வாறு ஆமோதிக்கும் வெகு சிலரில் நாவலரும் ஒருவர் என்பதை கொஞ்ச காலமாகத்தான் நான் தெரிந்து வருகிறேன்.

டி.கே.சி. அடிக்கடி "கம்பனைப் போன்ற ஒரு கவிஞர் உலகத்திலேயே இல்லை. தமிழைப் போன்ற உயர்ந்த மொழி வேறெந்த நாட்டிலும் காண முடியாது. இந்த உண்மைகளை 500 ஆண்டுகள் அல்லது 1000 ஆண்டுகள் கழித்தாவது உலகம் எல்லாம் ஒப்புக்கொள்ளும்." என்பார்.

கம்பனைப்பற்றிய டி.கே.சி-யின் கூற்றை உறுதிப்படுத்தியது நாவலர் 1972-ல் பேசிய ஓர் அரிய பேச்சு. காரைக்குடியில் கம்பன் மணிமண்டபத்துக்கு அடிக்கல் நாட்டும்போது பேசிய பேச்சு அது. பேச்சின் சாரம் கீழ்க்காணுமாறு: "ஏதோ, சில அரசியல் காரணங்களால் நாங்கள் கம்ப ராமாயணத்தை ஒதுக்கி வந்தோம். ஆனால், கம்பன் ஓர் ஒப்பற்ற மகாகவி என்பதை யாராலும் மறுக்க முடியாது. அவனுடைய கவிதையின் மூலம் தமிழ் இலக்கியம் எல்லையற்ற வளத்தைப் பெற்றுவிட்டது."

இப்படிச் சொன்னதோடு நில்லாமல், இந்த முடிவுக்குச் சான்றாக உள்ள பல கம்பன் பாடல்களை எடுத்துச்சொல்லி, இந்த முடிவை ஐயந்திரிபு அற விளக்கி நிலைநாட்டினார்கள் நாவலர். இந்தப் பேச்சைப் பேசிய நாவலரின் சத்திய வேட்கை எவ்வளவு தீரமும் புனிதமும் வாய்ந்தது என்று எண்ணி நான் புளகாங்கிதம் அடைந்தேன்.

இதைப்போலவே, கல்வியைப்பற்றிய கொள்கைகளிலும், ரசிகமணி டி.கே.சி-க்கும், பேராசிரியர் நெடுஞ்செழியனுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதை சமீபத்தில்தான் நான் கண்டு மகிழ்ந்தேன். சென்ற மாதம் நடந்த 'சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை செந்தமிழ்ச் சங்கத்தின்' மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவில் அமைச்சர் நாவலர் தமிழாக்கம் செய்ய வேண்டிய முறையைப்பற்றிப் பேசிய பேச்சு எங்களை எல்லாம் தூக்கிவாரியடித்துவிட்டது.

பிறமொழிகளிலுள்ள விஞ்ஞான நூல்களைத் தமிழாக்கும்போது, பல சிக்கலான பிரச்னைகள் ஏற்படுகின்றன. விஞ்ஞான பரிபாஷை அறியாத பல தூய தமிழ்வாதிகளும், 'தமிழ் வால்க' என்று கூப்பாடு போடும் தமிழ் அறியாத தமிழ் வெறியர்களும், அனைத்துலகக் குறியீடுகளையும் (இன்டர்நேஷனல் சிம்பல்ஸ்) தமிழ்ப்படுத்த வேண்டும் என்று சென்ற 30 ஆண்டுகளாக முரட்டு வாதம் செய்து வருகிறார்கள். இந்த முரட்டு வாதத்தை ஒரு காலத்தில் ராஜாஜிகூட சில காரணங்களால் ஏற்கவேண்டி வந்தது. விஞ்ஞானமும் தமிழும் நன்றாகத் தெரிந்த ரசிகமணி டி.கே.சி. ஒருவர்தான் இந்த வாதத்தை அந்தக் காலத்திலேயே எதிர்த்துப் போர் தொடுத்தார்கள்.

டி.கே.சி. கடிதம் பேசுகிறது: "கலைச் சொற் கழகத்தில் சயின்ஸ் சம்பந்தம் இல்லாதவர்களே இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஒரே நோக்கம், வடமொழியை விருத்தி பண்ணிவிட வேண்டும் அல்லது தமிழை விருத்தி பண்ணிவிட வேண்டும். சயின்ஸ் எப்படியேனும் போகட்டும் என்றுதான் எண்ணுகிறார்கள். விஷயம்தான் முக்கியம் என்று எண்ணிவிட்டால் வார்த்தைகளின் ஆதிக்கம் முன்னணிக்கு வராது. மேல் நாட்டான் ஒரு பிள்ளையைப் பெற்றான். அதற்கு ஏதோ 'விக்டர்' என்றும் பெயரிட்டான். நாமும் அவனை 'விக்டர்' என்று சொல்லிவிட்டால், தமிழ் கெட்டா போகும்? போகாது.

அதுபோல் உடம்பைப் பிரித்துப் பார்த்தான். ஓர் உறுப்புக்கு 'மால்பிஜியன் காப்ஸ்யூல்' என்று ஏதோ பெயரிட்டான். நாமும் அந்தப் பெயரையே இட்டு அழைத்தால் கேடு ஒன்றும் விளைந்துவிடாது. நாளடைவில் வேறு பெயரிட்டு நம்மவர்கள் அழைத்தால் அதைச் சேர்த்துக்கொள்கிறது.

ஆனாலும் மேல் நாட்டு சயின்ஸோடு கலந்துகொள்வதற்கு மேல்நாட்டார் நாமகரணம் செய்தபடியே பெயர் வைத்துக் கொண்டால் பிரயோஜனமாக இருக்கும். மோட்டார் டிரைவர்களும், கிளீனர்களும் கலைச் சொற் கழகத்தின் உதவி இல்லாமலேயே மோட்டாரை ஒக்கிட்டுவிடுகிறார்கள்; ஓட்டிவிடுகிறார்கள். நம்மைவிட்ட வார்த்தை மோகம் என்று ஒழியுமோ, தெரியவில்லை? அது ஒழிந்தால்தான் சயின்ஸ் கைக்கு வரும். முன்னேறிய நாடெல்லாம் சயின்ஸை வாழ்க்கைக்கும் பொருள் விருத்திக்கும் சாலைத் தொழில்களுக்கும் உபயோகப்படுத்திக் கொண்டு இருக்கும்போது, நாம் சௌகரியமாக, சாவகாசமாகப் பிரதி பதங்களைத் தேடிக் கொண்டு இருக்கிறோம். பெயர் வைக்க மறந்ததால் பதினெட்டு வயதுப் பையனைத் தொட்டிலிலேயே கிடத்திவைத்த கணக்குத்தான். பிரதி பதங்களைச் சரிவரக் கண்டுபிடிக்க நூறு வருஷம் ஆகும். அதுவரை கைத்தொழில்களையும், சாலைகளையும், ரசாயன ஆராய்ச்சிகளையும் நிறுத்தி வைத்துவிட வேண்டும்!"

மேற்சொன்ன வாசகத்திலுள்ள காரமும் கசப்பும் உண்மையில் இருந்து தோன்றியவை. பதவிப் பொறுப்பில்லாத ஒரு சிந்தனையாளரிடமிருந்து தோன்றியவை. இதே காரத்தோடும் கசப்போடும் கல்வி அமைச்சர் பதவியிலுள்ள நாவலர் 'சொல்லின் செல்வர்' சங்கத்தில் பேசினார்.

என்ன சொன்னார்? "தமிழ் மாணவர்களுக்கு விஞ்ஞானத்தை எளிதில் போதிக்க வேண்டும் என்றால், தமிழில் போதிக்க வேண்டும். பிற மொழிகளில் போதித்தால் அவர்கள் கஷ்டப்பட்டுப் போவார்கள்; விஷயத்தைப் புரிந்துகொள்வதில் செலவழிக்க வேண்டிய சக்தியை, பிற மொழியைப் புரிந்துகொள்வதில் அவர்கள் வீணாக்க வேண்டி இருக்கிறது. ஆகையால், போதனா மொழி தமிழாகவே இருக்க வேண்டும்.

ஆனால், அனைத்துலக விஞ்ஞானக் குறியீடுகளை தமிழ்ப் படுத்தாமல் நாம் அப்படி, அப்படியே வைத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, ரசாயன சாஸ்திரத்தில் தண்ணீருக்கு H_2O என்ற குறியீடு வைத்திருக்கிறார்கள். அதை ஆ,இ என்று மொழிபெயர்க்க வேண்டியதில்லை. விஞ்ஞானத்தைத் தமிழில் படித்துவிட்ட, மேற்படிப்புக்கு போகும் மாணவர்கள் ஆங்கிலம் அல்லது ஜெர்மன் மொழியைப் படிக்க வேண்டியிருக்கும். அப்படிப் படிக்கும்போது, H_2O போன்ற அனைத்துலக குறியீடுகளோடு அவர்கள் பழகியிருந்தால், அவர்களுக்கு அந்நிய மொழியில் ஏற்படும் மேற்படிப்பு எளிதாக இருக்கும்" என்று நாவலர் விளக்கம் கொடுத்தார்.

கவிதையில், இலக்கியத்தில், பேச்சு மேடையில், பொது வாழ்வில், தமிழர்களுக்குத் தமிழே துணை என்ற உண்மையை உணர்ந்த அதே நாவலர், விஞ்ஞான மொழிபெயர்ப்புப் பிரச்னையை வார்த்தை மோகம் இல்லாமல் அணுகும்போது, நாவலருடைய விவேகத்தையும் நிதானத்தையும் வியந்து அறிஞர் உலகம் பாராட்டுகிறது.

நாவலருடைய நாநலத்தைப்பற்றித் தமிழுலகம் நன்கு அறியும். அவர்களுடைய உவமைத் திறனுக்கு ஓர் உதாரணத்தைக் காட்டி, இதை முடித்துவிடுகிறேன். தமிழர் வாழ்க்கையில் தமிழுக்கு உண்டான நிலை என்ன; பிற மொழிகளுக்கு உண்டான நிலை என்ன என்பதை ஒரு பேச்சில் சுவையான, உள்ளத்தைத் தொடக் கூடிய ஓர் உவமையின் உதவியால் நாவலர் விளக்கினார்கள்:

"வேலைக்காரி நம் வீட்டுக்கு வருகிறாள்; வேலையைச் செய்துவிட்டுத் தன் வீட்டுக்குப் போய்விடுகிறாள். பிற மொழிகளை வேலைக்காரியை நடத்துவதுபோல், நாம் நடத்த வேண்டும். வேலையை வாங்கிவிட்டு வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும். தமிழ் மொழி நம் மனைவியைப்போல இருக்கிறது. நம்மோடு எப் போதும் கூடவே இருக்க வேண்டும் அது. நம் மடி மீதுகூட நம் மனைவி உட்காரலாம். ஆனால், வேலைக்காரியை அப்படி உட்கார விடுவோமா?" என்று ஒரு போடு போட்டார்கள்.

இப்பேர்ப்பட்ட புரட்சிகரமான ஆனால், உண்மை நிறைந்த கருத்துக்களை நாவலர் எடுத்துரைக்கும்போது, ஆசிரியர் உலகம் அதிர்ச்சியடையலாம். ஆனால், டி.கே.சி. பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த என் போன்றவர்களுக்கு அதிசயமும், ஆனந்தமுமே ஏற்படுகின்றன. மேற்சொன்ன பேச்சைக் கேட்டவுடன், நாவலர் அவர்களிடம், கல்வித் துறையில் நீங்கள் ஓர் ஒப்பற்ற புரட்சி வீரர் என்று சொல்லிப் பாராட்டினேன்.

தமிழ் இலக்கிய அனுபவத்தோடு, உலகம் சுற்றிவந்த அனுபவமும், சிந்தனை செய்யும் ஆற்றலும் கலையுணர்வும் இருந்தால்தான் இத்தகைய உண்மைகளை அஞ்சா நெஞ்சத்தோடும் தெளிவோடும் மற்றவர்களுக்கு ஊட்ட முடியும்.

எளிமையும் சுமுகமும், பண்பாடும், புலமையும், ஆர்வமும் நிதானமும், நாநலமும், சத்திய வேட்கையும் நாவலரிடம் ஒருங்கே காண்கிறோம். இந்த அரிய மனிதர் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க!

6. தமிழ் இசை

மாண்புமிகு ம.பொ.சி. அவர்களே! டாக்டர் எம்.எல்.வசந்தகுமாரி அவர்களே! ராஜா சர் அவர்களே! திரு எம்.ஏ. சிதம்பரம் செட்டியார் அவர்களே! தமிழ் இசைச் சங்க அறங்காவலர்களே! பெரியோர்களே! உங்கள் எல்லோருக்கும் நல்வரவு கூறுகிறேன். இந்தத் தமிழ் இசைச் சங்கத்தின் தலைவனாக என்னை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்த அறங்காவலர்களுக்கு நன்றி கூறுகிறேன். அவர்கள் நல்வரவு கூறும் வாய்ப்பினை எனக்கு அளித்திருக்கிறார்கள். ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார், திவான் பகதூர் ரத்தின சபாபதி முதலியார், திவான் பகதூர் டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை முதலிய சான்றோர்கள் வகித்துவந்த தமிழ் இசைச் சங்கத்தின் தலைமைப் பதவியை எனக்கு நல்கி, ஒரு கௌரவமான பெரும் பொறுப்பை எனக்குத் தந்திருக்கிறார்கள். பண்டித நேரு, "நாம் எல்லாம் அற்ப மனிதர்கள். ஆனால், சாலப் பெரிய லட்சியங்களின் பிரதிநிதிகளாக இருக்கிறோம். அதன் காரணத்தாலேயே பெருமையின் நிழல் நம் மீதும் படுகிறது" என்பார்கள்.

தமிழ் இசை இயக்கம் ஒரு தலைசிறந்த குறிக்கோளோடு தொடங்கப்பெற்றது. அந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒவ்வொருவர் மீதும் குறிக்கோள் பெருமையின் நிழல் வீசுகிறது. அந்தக் குறிக்கோளை நிறைவேற்ற முயன்ற பல பெரியார்களில் சுப்பிரமணிய பாரதியாரும் ஒருவர். அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார் பாரதியார். அவர் மகா கவி சுப்பிரமணிய பாரதியார். தமிழ் இசைக்கு ஓர் ஆபத்து ஏற்படப் போகிறது என்பதனை அப்போதே சொன்னார். என்ன சொன்னார்?

"தமிழ்ச் சபைகளில் எப் போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுக்களை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயம் இல்லை. (பாரதியார் வார்த்தை வேதவாக்கு. அயல் மொழிப் பாடல்களை தமிழ்ச் சபைகளில் மீட்டும் மீட்டும் பாடுதல் நியாயம் இல்லை என்பது அவர் கருத்து.) அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும் (நம் தமிழ்ச் சாதி இழந்து போகும்படி நேரிடும்)" என்று சொன்னார்.

நம் கண் முன்னால், நமது ஜாதி, சங்கீத ஞானத்தை இப்போது இழந்துகொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். தமிழ் நாட்டிலுள்ள இளம் தலைமுறையினர் மெல்லிசை என்ற வல்லிசை வெள்ளத்தின்

பயங்கரச் சுழிகளில் அகப்பட்டு, அமைதியைக் குலைக்கும் உணர்ச்சிச் சூறாவளியில் சுழன்று, கர்நாடக சங்கீதம் என்ற தமிழிசையின் ஞானத்தையும் அதனால் ஏற்படும் ஆன்ம அமைதியையும் இழந்து வருகிறார்கள். நமது இசைவாணர்கள், தமிழர்களுக்குப் புரியாத மொழிகளில் பாடிப் பாடி, மரபு வழி வந்த நமது இசையின் மீதே தமிழர் சமுதாயத்துக்கு தமிழ் ஜாதிக்கு வெறுப்பு ஊட்டிவிட்டார்கள். இன்று நடந்துகொண்டு இருப்பதை ஞான திருஷ்டியால் அன்றே கண்டுவிட்டார் பாரதியார். தாம் கண்டதைப் பொட்டில் அடித்த மாதிரி அல்லவா அவர் சொல்லி விட்டார்?

ஒவ்வொரு தமிழனும் அவர் கூறியதை மனதில் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். 'தமிழ்ச் சபைகளில் எப் போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுக்களை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயம் இல்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்' என்று 60, 70 ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னார். நேரிடும் என்று சொன்னது, இப்போது நேரிட்டுக்கொண்டு இருக்கிறது. இசைக் கச்சேரிகளுக்குக் கூட்டம் வருவது இல்லை.

ஆனால், மெல்லிசைக் கச்சேரிகளுக்கும் நாட்டியக் கச்சேரிகளுக்கும் நாடகங்களுக்குமே பெரும் கூட்டம் வருகிறது என்று சென்னையிலுள்ள சங்கீத சபா நிர்வாகிகள் பலரும் ஒரு மனதாகச் சொல்கிறார்கள். அப்படியானால், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வழிவழியாகத் தமிழர்கள் அனுபவித்து வந்த இசையை, தமிழர்களே இப்போது புறக்கணிக்கிறார்கள் என்றுதானே பொருள்? புறக்கணிப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றில் எல்லாம் முக்கியமான காரணம், தமிழர்களுக்குப் புரியாத மொழியில் உள்ள இசைப் பாடல்களை பாகவதர்கள் (எம்.எல்.வசந்தகுமாரி, எம்.எஸ்.சுப்புலட்சுமி முதலியோர்களை நோக்கி, "நீங்கள் இல்லை; மற்ற பாகவதர்கள்") மாறி மாறிப் பாடி அவர்களுக்கு கசப்பை ஊட்டிவிட்டார்கள்.

இசை ஞானத்தை மாத்திரம் நாம் இழந்துகொண்டு இருக்கவில்லை. இதயக் கல்லைப் பிசைந்து கனியாக்கி அருள் வெள்ளத்தில் அமிழ்த்தும் இசையின் பயனாகிய பக்தியையும் நாம் இழந்து வருகிறோம். இதை உணர்ந்த சில இசை மேதைகள், "சங்கீதத்துக்குப் பாஷை அவசியமில்லையே. தனித்து இயங்கும் ஆற்றல் அதற்குத் இருக்கிறதே" என்று சொல்லி, தந்திரமாக நம்மைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள்.

தந்திரிகளுக்கு எல்லாம் மேலான தந்திரி ராஜாஜி; திசை திருப்பிகளுடைய வாதத்துக்கு ராஜாஜி அருமையாகப் பதில்

சொன்னார். ராஜா சர் அண்ணாமலை செட்டியார், இந்த இயக்கத்தைத் தொடங்கியபோது டி.கே.சி. ராஜா சர்ரிடம், "நீங்கள் ராஜாஜியிடம் போக வேண்டும். அவர் பலம் கொடுப்பார்" என்று சொன்னார்கள். நம் ராஜா சர், அவ்வாறே சென்று வந்தார்கள். அதற்கு ஒரு மணி நேரம் கழித்து நம் திரு மீ.ப.சோமசுந்தரம், ராஜாஜியிடம் சென்றார்கள். "அடடா! ஒரு மணி நேரத்துக்கு முன் நீ வரவில்லையே! நான் தமிழ் இசையைப்பற்றி என்ன சொன்னேன் தெரியுமா? அதை இப்போது சொல்கிறேன்; எழுதிக்கொள்" என்று சொன்னார். இது நடந்தது 24-5-1943. என் நண்பர் திரு. மீ.ப.சோமசுந்தரம், ராஜாஜி கூறிய வாசகங்களை அப்படியே எழுதி வைத்திருக்கிறார்கள். அதைக் கூறுகிறேன்.

"தமிழ் இசை சம்பந்தமாக, சங்கீதத்துக்கு மொழி வேண்டுமா, வேண்டாமா என்கிற வாதம் பிரமாதமாக இந்த இசை இயக்கத்தில் அடிபடுகிறது. மொழிபற்றி வித்தியாசம் ஏற்பட்டபடியால், மொழியே வேண்டாம் என்ற வாதம் போட்டால், நம் கட்சி பலமாகப் போய்விடுகிறது என்ற உத்தேசத்தின் மேல் சங்கீதத்துக்கு மொழியே வேண்டாம் என்று சிலர் சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் தென்கலை வேண்டுமா, வடகலை வேண்டுமா என்று கேட்டால், இந்து மதமே வேண்டாம் என்பதுபோலவும், சிவன் கோயில் வேண்டுமா, விஷ்ணு கோயில் வேண்டுமா என்று கேட்டால், கோயிலே வேண்டாம் என்பதுபோலவும் இருக்கிறது. தியாகையர் தமிழில் பாடுவதற்குப் பதில் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு தெலுங்கில் பாடினார். அது ஒன்றே போதும், தமிழிசை இயக்கத்துக்கு ஆதரவு.

அவர் (தியாகையர்) தமிழ்நாட்டில் வளர்ந்து தமிழ் தேசத்தில் புகழ் பெற்றவர். ஆயினும் அவர் ஏன் தெலுங்கில் பாடினார்? தெலுங்குக்கு நல்லது என்று அதில் அவர் பாடவில்லை. தெலுங்கு அவருக்குத் தாய் பாஷை ஆகியதால், அவர் அதில் பாடினார். நாமும் நம் தாய் பாஷையில் பாடினால்தான் நம் ஆத்மாவுக்குத் திருப்தி கிடைக்கும். கடவுளுக்கும் காது கேட்கும்."

ராஜாஜியின் இந்த வாசகத்தைப் படித்த சிலர், "இது என்ன, ராஜாஜி ஒரு கட்சிக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவதுபோல் இருக்கிறதே? தெலுங்கில் பாடினால் கடவுளுக்குக் காது கேட்காதா, தமிழில் பாடினால்தான் காது கேட்குமா?" என்று கேட்கலாம். இப்படிக் கேட்பவர்கள், ராஜாஜியை சரியாகப் புரிந்து கொள்ள வில்லை. எஸ்கிமோ மொழியில் பேசினாலும், சர்வஞ்ஞனான இறைவனுக்குக் காது கேட்கும். மொழிகளை எல்லாம் படைத்த முழு முதல் அல்லவா அந்த இறைவன்! அவனுக்கா காது கேட்காது!

ஆனால், ஒன்றை மறந்துவிடக் கூடாது. எஸ்கிமோ பாஷை தெரியாத நாம், எஸ்கிமோ பாஷையில் எழுதிய சாகித்யத்தை எப்படி அழகாகப் பாடினாலும், நமக்கு உருக்கம் ஏற்படாது; எஸ்கிமோ தெரியாத தமிழ் மக்களும் உருக மாட்டார்கள். உருகினால் அல்லவா இறைவனோடு ஒட்டலாம்! இரண்டும் ஒன்றுமாகக் கலக்கலாம்! அப்படி ஒன்றி உறவாட நம்மால் முடிய வில்லை என்றால், நாம் பாடிய எஸ்கிமோ பாட்டு, விருதாப் பாட்டு தானே. நம் விண்ணப்பத்தை இறைவன் ஏற்றுக்கொள்ளும்படியாக நாம் சொல்லவில்லை என்றுதானே பொருள்! அப்படியானால் இறைவனுக்குக் காது கேட்கும்படியாக நாம் பாடவில்லை. இதைத் தான் ராஜாஜி சொன்னார்கள்.

ஆகவே, பிற மொழிகளில் பாடுவதால், பாரதியார் சொல்வது போல், நம்முடைய இசை ஞானம் மறைந்துபோகும்; அதன் விளைவாக, ராஜாஜி சொல்வதுபோல, நமக்கே உரிய பக்தியும் மறைந்துபோகும்; இதற்கு எல்லாம் மேலாக, பாகவதர்களுடைய பிழைப்பும் கெட்டுப்போகும். மெல்லிசையை வல்லிசை கபளீகரம் பண்ணிவிடும் என்பதை பாகவதர்கள் இப்போதாவது உணர்ந்தால், அவர்களுக்கும் நல்லது; நம்முடைய இசை ஞானத்துக்கும் நல்லது; நமது பக்திக்கும் நல்லது.

அதோடு, சொற்களே இல்லாத சங்கீதத்தை மணிக்கணக்காகப் பாடுவது என்பதோ அனுபவிப்பது என்பதோ வெகு சிலருக்கே முடியும். ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள் சொன்னதுபோல, கடலை மாவுக்கும் சர்க்கரைக்கும் நமக்கு வேற்றுமை தெரியத்தான் செய்யும். கடலை மாவையே தின்று கொண்டு இருக்கவும் முடியாது, சர்க்கரையையே தின்றுகொண்டு இருக்கவும் முடியாது; இரண்டையும் சேர்த்து லட்டு செய்து கொடுத்தால், நன்றாகவே சாப்பிடலாம். அதுபோலத்தான் இசையும் மொழியும் சேர்ந்தால் நன்றாக அனுபவிக்கலாம்.

ஆகவே, தமிழிலுள்ள ஏராளமான, ஆனால், துருப்பிடித்துப் போன சாகித்தியங்களை இசைவாணர்கள் துலக்கி, கச்சேரிகளில் பாடி, தமிழ் மக்களை மகிழ்விக்க வேண்டும். தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், ராம நாடகம், மாரிமுத்தாப் பிள்ளை, முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதி, திரிகூட ராசப்பக் கவிராயர் எழுதிய அற்புதமான இசைப் பாடல்கள் வேண்டும் மட்டும் தமிழில் இருக்கின்றன. பல சாகித்தியங்கள், பாடுவோர் அற்று மறைந்துபோய்விட்டன. டாக்டர் சுவாமிநாத ஐயர், தம்முடைய வாழ்விலேயே இளமைப் பருவத்தில் கேட்ட அற்புதமான தமிழ் சாகித்தியங்களை எல்லாம் முதுமைப் பருவத்தில் கேட்க முடியாமற் போய்விட்டது என்றும், அதற்குக் காரணம்

தமிழ்நாட்டுப் பாகவதர்கள் தமிழிசைப் பாடல்களைப் புறக்கணித்துவிட்ட, வேற்று மொழிப் பாடல்களைப் பாடியதுதான் என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இப்போதுள்ள நிலை, இங்கிலாந்தில் 19-ம் நூற்றாண்டில் ஏற்பட்டது. ஐரோப்பிய சாகித்தியத்தில் மகா மேதைகளான பீத்தோவன், வாக்னர் முதலியோர் உயர்ந்த சாகித்தியங்களை ஜெர்மன் மொழியிலேயே இயற்றிவிட்டார்கள். இந்த ஜெர்மன் சாகித்தியங்களை இங்கிலீஷ்காரர்கள் இங்கிலாந்தில் இறக்குமதி செய்து கச்சேரிகளில் பாடத் தொடங்கினார்கள். ஜெர்மன் தெரியாத இங்கிலீஷ் பாகவதர்கள், இந்த ஜெர்மன் சாகித்தியங்களைப் பாடினார்கள். கேட்க வந்த இங்கிலீஷ் அசடுகள் ஜெர்மன் மொழி தெரியாவிட்டாலும், நமக்குச் சங்கீதம் தெரியாது என்று யாரேனும் சொல்லிவிடுவார்களோ என்று பயந்து, ஜெர்மன் சாகித்தியங்களுக்குப் பொருள் தெரிந்ததுபோல தலையாட்டினார்கள். 'பலே, பேஷ்' என்று பாராட்டினார்கள். கார்லைல் என்ற ஆங்கிலப் பேரறிஞர், இந்தக் கண்றாவியை எல்லாம் தாங்க முடியாமல், சீற்றம்கொண்டு ஜெர்மன் சாகித்தியத்தை எதிர்த்தார். சங்கீதத்துக்கும் உணர்ச்சிக்கும் இடையில் இருக்கும் உறவு, மனைவிக்கும் கணவனுக்கும் இருக்கும் உறவைப் போன்றது என்றும், ஜெர்மன் சாகித்தியங்களை அர்த்தம் தெரியாமல் பாடுவதாலும் கேட்பதாலும் சங்கீதத்துக்கும் உணர்ச்சிக்கும் இடையே இருந்த விவாக உறவு ரத்தாகிவிடும் என்றும் அவர் சொன்னார்.

அதோடு, 'சங்கீதத் தேவதைக்குப் பித்துப் பிடித்துவிட்டது. பொருள், உண்மை ஆகியவற்றுக்கும் சங்கீதத்துக்கும் இருந்த உறவு அறுந்து போய்விட்டது' என்று கதறினார். மேலும், "சங்கீதத் தேவதை அங்குமிங்கும் காட்டுத்தனமாக வெறிபிடித்து ஓடிக் கொண்டு இருக்கிறாள். 'எனக்கும் அறிவுக்கும் சம்பந்தம் இல்லை; எனக்கும் உண்மைக்கும் சம்பந்தம் இல்லை' என்று பீத்திக்கொண்டு ஓடுகிறாள்; 'கற்பனையும் ஜன்னிக் கோளாறுமே எனக்கு உரியவை' என்று புலம்பிக்கொண்டு இருக்கிறாள். நான் இது தவறு என்று சொன்னால், அவள் என்னை நோக்கிப் பைத்தியச் சிரிப்பு சிரிக்கிறாள்" என்று சொன்னார். அதே நிலைமையைத்தான் தமிழ் நாட்டிலும் நாம் கண்டுகொண்டு இருக்கிறோம்.

ராஜா சர் அண்ணாமலை செட்டியார், ரசிகமணி டி.கே.சி., ராஜாஜி, கல்கி, நண்பர் சதாசிவம் ஆகியோர் தொடங்கிவைத்த தமிழிசை இயக்கம் பைத்தியத்திலிருந்து நம்மை ஓரளவு தெளிய வைத்திருக்கிறது.

இந்த இயக்கத்தின் தந்தையாகிய ராஜா சர் அண்ணாமலை செட்டியாரைப்பற்றிக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மனம் உருகப் பாடினார்:

தத்தளித்து நின்ற தமிழிசைச் செல்விக்குப்
புத்துயிரை ஊட்டிய நற் புண்ணியவான்-பக்தியுடன்
எண்ணான் கறமும் இனிதா வளர்த்து மகிழ்
அண்ணாமலை மன்னனாம்.

அண்ணாமலை அரசரால் தொடங்கப்பெற்ற தமிழ் இசை இயக்கத்தை பக்தியோடும் ஆர்வத்தோடும் அண்ணாமலை மன்னருடைய மக்கள் இருவரும் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். ராஜா சர் முத்தையா செட்டியார் தமிழுக்குச் செய்துவரும் பணி, என்றென்றும் நிலைத்திருக்கக்கூடியது. சிறந்த கொடை வள்ளல் அவர்கள். அவர்களுடைய வள்ளன்மையோடு வெற்றிகரமாகப் போட்டி போடக்கூடியது அவர்களுடைய அடக்கம் ஒன்றுதான். அடக்கம் என்ற குணம் எல்லோருக்கும் நல்லது. ராஜா சர் அவர்களைப் போன்ற பெரிய மனிதர்களிடத்தில் அது இருக்கும் போது அதற்குத் தனிப்பட்ட ஒளி ஏற்படுகிறது. ராஜா சர் முத்தையா செட்டியாருடைய தமிழ் இசைச் சேவை எவ்வளவு பலன் கொடுத்திருக்கிறது என்பதற்குப் புதிய சான்று நமக்குக் கிடைத்திருக்கிறது.

இந்த ஆண்டு நடக்கவிருக்கும் மியூசிக் அகாடமி விழாவின் சதஸ்ஸில், தலைமை தாங்க வேண்டும் என்று ராஜா சர் அவர்களையே அகாடமியார் அழைத்திருக்கிறார்கள் (கைதட்டல்). அதன் அர்த்தம் புரிந்துகொண்டு நீங்கள் கைதட்டி இருக்கிறீர்கள். என்ன அர்த்தம் தெரியுமா? அப்படியானால், தமிழ் இசைச் சங்கத்தின் லட்சியங்களை மியூசிக் அகாடமியே ஏற்றுக் கொண்டுவிட்டது அல்லது பாராட்டுகிறது என்றுதானே சொல்ல வேண்டும்?

திரு. எம்.ஏ.சிதம்பரம், ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு இளையவராக இருந்தபோதிலும், தமிழ்ப் பணியில் எந்த வகையிலும் இளைத்தவர் அல்ல. மிக அடக்கமும் வாய்ந்தவர். ஒவ்வோர் ஆண்டிலும் படைக்கப்படும் சிறந்த தமிழ் இலக்கிய நூலுக்கு ரூபாய் 10 ஆயிரம் பரிசாக ஆண்டுதோறும் அவர்கள் கொடுத்து வருகிறார்கள். அதற்காக ஓர் அறக்கட்டளையை, வரலாற்றுப் பெருமை வாய்ந்த அறக்கட்டளையை நிறுவி இருக்கிறார்கள். திரு. எம்.ஏ.சிதம்பரம், வள்ளல் மாத்திரமல்ல; நல்ல ரசிகர். ஐரோப்பாவிலுள்ள சிறந்த ஓவியர்களுடைய அழகுமிக்க ஓவியங்கள் பல, அவர்களுடைய மாளிகையை அலங்கரிக்கின்றன. ஆகவே, இருவருமே எல்லா வகையிலும் அண்ணாமலை மன்னருக்கு உகந்த


வாரிசுகளாக அமைந்திருக்கிறார்கள். இரு பெரு மக்களையும் நான் பாராட்டுகிறேன்.

இந்த ஆண்டில் நமது தமிழ் இசைச் சங்கத்தின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க வந்திருப்பவர்கள் டாக்டர் எம்.எல்.வசந்தகுமாரி. இரண்டு மாதங்களுக்கு முன்னால் அவர்களுடைய இசைக் கச்சேரியைக் கேட்டேன். ஒரே தமிழிசைமயமாக இருந்தது. அவர்கள் இசை பாடும்போது, சொல்லைத் தேனில் குழைத்து நமது செவிக்குள் பாய்ச்சுவதுபோல இருக்கும்; இல்லை, நமது இதயத்துக்குள்ளேயே தேனைப் பாய்ச்சுவார்கள். அவர்களுக்கு இருக்கிற பக்தி வேகம், அவர்களுடைய சங்கீதத்துக்கு உயிரையும் உருவத்தையும் கொடுத்திருக்கிறது. முற்பிறப்பில் இறைவனுக்குக் குடம் குடமாகத் தேனாபிஷேகம் செய்தவர்களுக்குத்தான் இந்தப் பிறப்பில் இனிய சாரீர சம்பத்து கிடைக்கும் என்று சொல்வார்கள். அவர்களுடைய சாரீர வளம் அப்படித் தேனாக இருக்கிறது. அவர்களுடைய இசைப் புலமையைப்பற்றி 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி 30 ஆண்டுகளுக்கு முன்னரேயே பாராட்டி இருக்கிறார்கள். அவர்களுடைய இசை, பண்டிதர்களுக்கு மாத்திரமல்ல. பாமரர்களுக்கும் ரஞ்சகமாக இருக்கிறது. அவர்கள் இந்த விழாவுக்குத் தலைமை தாங்குவது மிகமிகப் பொருத்தம். அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து அவர்களுடைய இசையை தமிழர்களுடைய பக்திக்காக அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இந்த விழாவைத் தொடங்கிவைக்க வந்திருப்பவர்கள் மாண்புமிகு சிலம்புச் செல்வர். தம் உழைப்பினால் ஓங்கி உயர்ந்த உத்தமர். அச்சுக் கோப்பவராக இருந்து, பல அரிய ஆழ்ந்த நூல்களை எழுதிய பேராசிரியராக மலர்ந்தவர்கள். வீதியில் கொடி பிடித்துக்கொண்டு சென்ற எளிய தொண்டராக இருந்து தமிழ்நாட்டு மேலவைத் தலைவராகத் திகழ்பவர்கள். தமிழின் எல்லைக் காவலர்; தமிழ்க் காவலர். இப்போது தமிழ் இசைக் காவலராக முன்வந்திருக்கிறார்கள். எதைப்பற்றிப் பேசினாலும் தனித்த நுணுக்கத்தோடும் கூர்மையோடும் ஆழத்தோடும் பேச வல்லவர்கள்.

இங்கு வந்திருக்கும் பெரியோர்கள் எல்லோருக்கும் வரவேற்புக் கூறி என் வணக்கத்தைச் செலுத்துகிறேன். உங்கள் வரவு நல்வரவாகுக.

V நான் பார்த்த டி.கே.சி.



டி.கே.சி.



ரா.பி.சேதுப்பிள்ளை அறக்கட்டளை சார்பில்
அண்ணாதுரையிடம் செக் அளிக்கிறார்



பாண்டிச்சேரி கம்பன் திருவிழா...
வேங்கடசுப்பாரெட்டி, ஃபரூக் மரைக்காயருடன்...

1. ரசிகமணி டி.கே.சி.

ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் இந்த மண்ணுலகில் வாழ்ந்த காலம் 71 ஆண்டுகள், 6 மாதங்கள். 1950-ல் கண்ணப்ப சுவாமிகள் என்ற ஒரு ஞானியை அழைத்துக்கொண்டு டி.கே.சி-யைப் பார்க்கச் சென்றேன். குற்றாலத்தில் ஐந்தருவிச் சாலையில் உள்ள அவர்கள் இல்லத்தில் 3 மணி நேரம் டி.கே.சி-யோடு உரையாடிவிட்டுத் தென்காசிக்குத் திரும்பினோம். திரும்பும்போது, "டி.கே.சி. கந்தர்வ லோகத்தைச் சேர்ந்தவர், வழி தப்பி மண்ணுலகுக்கு வந்து சேர்ந்துவிட்டார்" என்று கண்ணப்ப சுவாமிகள் என்னிடம் சொன்னார்.

அவ்வாறு வழி தப்பி மண்ணுலகுக்கு டி.கே.சி. வந்த காலம் 1882, ஆகஸ்டு மாதம். தென்காசிக்கு அருகே உள்ள களங்காடு என்ற கிராமத்தில் தீர்த்தாரப்ப முதலியார் என்ற ஒரு பண்ணையாருடைய மகனாகப் பிறந்தார் ரசிகமணி.

சிறு வயதில் ஓடியாடி நல்ல உடற்பயிற்சி செய்தார்; திருக் குற்றாலத்துக்குப் போய் அங்குள்ள அருவியில் குளிக்காமல், அருவி விழுந்து பொங்கிவரும் பொங்குமாங் கடலில் அடிக்கடி அந்தர் அடித்துக் குதித்துக் குளிப்பார். பொங்குமாங் கடலில் அடித் தரை

வரையிலும் சென்று அங்குள்ள மண்ணைக் கையில் கவ்விக்கொண்டு வருவார். இத்தகைய விளையாட்டுகள் எல்லாம் அவர்களுடைய பொன் மேனிக்கு வன்மையையும், உறுதியையும், அழகையும் தந்தன. வயதான பின்னர் பொங்குமாங் கடலில் அந்தர் அடித்துக் குளிப்பதை நிறுத்திவிட்டார். ஆனால், இலக்கியத்திலும், கலையிலும், சமயத்திலும் இருக்கும் ஆழமான பொங்குமாங் கடல்களில் துணிச்சலோடு அவர்கள் குதிப்பார்கள். குதித்து அங்குள்ள அரிய முத்துக்களைக் கையில் ஏந்தி வந்து தமிழர்களுக்கு வழங்குவார்.

திருநெல்வேலியில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, திருச்சி செயின்ட் ஜோஸப் கல்லூரியில் எஃப்.ஏ. படிப்பையும், பின்னர் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் பி.ஏ. படிப்பையும் படித்து முடித்தார். பள்ளிப் படிப்பு சுவையற்றதாக இருந்தது. ஆகவே, பாடப் புத்தகங்களை ஒதுக்கிவிட்டு, தமக்குப் பிடித்தமான நூல்களைப் படித்தார். சிறப்பாக உயிரியல்பற்றிய (Biology) நூல்களைப் படித்தார். 'டார்வின்', 'டிண்டல்', 'ஜூலியன் ஹக்ஸ்லி' முதலிய விஞ்ஞானிகளுடைய நூல்களையும், 'ஹெர்பர்ட் ஸ்பென்சர்' எழுதிய தத்துவ நூல்களையும், 'ஷேக்ஸ்பியர்' இயற்றிய நாடகங்களையும், 'ராபரட் பர்ன்ஸ்', 'கீட்ஸ்' முதலியோருடைய கவிதைகளையும் ஊன்றிப் படித்தார். ஆங்கில வசன கர்த்தாக்களில் 'ஏ.ஜி.கார்டினருடைய' நூல்களே டி.கே.சி-க்கு மிகமிக விருப்பமானவை. "உரை நடை என்றால் கார்டினருடைய நடைபோல் இருக்க வேண்டும்" என்று அடிக்கடி டி.கே.சி. சொல்வார். இந்த மாதிரி நூல்களைப் படித்ததன் விளைவாக, டி.கே.சி-யின் உள்ளம் நன்றாகப் பண்பட்டது. எதையும் விஞ்ஞான அடிப்படையில் அணுகும் திறனும், உணர்ச்சியோடும், உண்மையோடும் ஒட்டிப் பழகும் பாங்கும், அனுபவத்துக்கும் உண்மைக்கும் ஒவ்வாத எதையும் ஒதுக்கித் தள்ளும் துணிச்சலும் அவருக்கு ஏற்பட்டன. ரவீந்திரநாத் தாகூரின் கருத்துக்கள் டி.கே.சி-யின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன.

சென்னையில் பி.எல். பட்டம் பெற்ற பின்னர், 1915-ல் திருநெல்வேலியில் வழக்கறிஞராக வேலை பயிலத் தொடங்கினார். 1927-ல் சென்னை மேல் சட்டசபை உறுப்பினராகத் தேர்தலில் வெற்றி பெறும் வரை, அதாவது, 12 ஆண்டுகள் வழக்கறிஞர் போர்டு அவர்கள் வீட்டு முகப்பில் தொங்கிக்கொண்டு இருந்தது. ஆனால், தமிழருடைய அதிர்ஷ்டம், வழக்கறிஞர் தொழிலில் அவர் அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. காரணம், கடுமையான மலேரியா ஜுரம் அவரைத் தாக்கிப் படுக்கையில் இருத்தி வைத்துவிட்டது.

"மலேரியா ஜுரத்தால் கஷ்டப்பட்ட 12 ஆண்டுகளிலும் எனக்குத் துணையாக இருந்தவை இரண்டு. கம்ப ராமாயணமும், ஒரு பச்சைக் கம்பளியும்" என்று டி.கே.சி-யே அடிக்கடி சொல்வார். திருநெல்வேலி கைலாசபுரத்தில் வழக்கறிஞராக இருந்த எம்.எஸ்.சுப்பையா முதலியாரே டி.கே.சி-யை கம்பனிடத்தில் ஆற்றுப்படுத்தியவர். கங்கைப் படலம் முதலிய முக்கியமான படலங்களை டி.கே.சி-க்கு வாசித்துக்காட்டி, கம்பனுடைய பெருமையைப்பற்றி அடிக்கடி டி.கே.சி-க்குச் சொல்லி வந்தவர் சுப்பையா முதலியார். அவருடைய தூண்டுதலின் பேரில் டி.கே. சி. கம்ப ராமாயணம் முழுவதையும் படித்து முடித்தார்.

அப்படிப் படித்தபோதுதான் டி.கே.சி. கீழ்க்காணும் உண்மைகளைக் கண்டுபிடித்தார்: 12,000 பாடல்களுக்கு மேல் உள்ள கம்ப ராமாயணத்தில் சில கட்டங்கள் மிக உயர்வாக இருக்கும். உலக இலக்கியத்திலேயே இவ்வளவு உயர்வான, உன்னதமான சிகரங்கள் கிடையாது என்று சொல்லும்படி இருக்கும். கம்பனுடைய கவிதைச் சிகரங்களில் நின்று அவனை மெச்சிக்கொண்டு இருக்கும் நம்மை, திடீரென்று சில இளைச்சுப் போன பாடல்கள் வந்து அதல பாதாளத்தில் தள்ளிவிடும்.

குகன், கும்பகர்ணன் போன்ற பாத்திரங்களை அற்புதமாகப் படைத்திருப்பான் கம்பன். வான்மீகி அந்தப் பாத்திரங்களை வார்த்த வார்ப்பு வேறு; கம்பன் அவற்றை வார்த்த வார்ப்பு வேறு. இதை அறியாமல், சிலர் வான்மீகியின் பாடல்களைத் தமிழில் அப்படி அப்படியே மொழிபெயர்த்து, அந்தப் பாடல்களையும் இடைச் செருகலாக ஏட்டில் செருகி இருப்பார்கள். அந்தப் பாடல்கள் கம்பனுடைய பாத்திரங்களின் தனித்த சிறப்பைக் கெடுத்துவிடும். இடைச் செருகல்களைக் களைந்துவிட்டுப் பார்த்தால், கம்பனுடைய பாத்திர சிருஷ்டி, பளிங்கில் வைத்துக் காட்டின மாதிரி தெரியும். நான்கு வரிகள்கொண்ட சில பாடல்களில் மூன்று வரிகள் பிரமாதமாக இருக்கும். ஒரு வரி மாத்திரம் அபஸ்வரம்போல் மற்ற வரிகளோடு இணங்காமல் பிய்ந்து தொங்கிக்கொண்டு நிற்கும்.

கவித்துவ இதயம் படைத்த டி.கே.சி., கம்பன் இதயத்தோடு பழகிப் பழகித் தம்மையே கம்பனுடைய மேதா விலாசத்தில் கரைத்துக்கொண்ட டி.கே.சி., மணிக்கணக்காக கம்பன் பாட்டைச் சொல்லிச் சொல்லிச் சமாதி நிலையை அடையவல்ல டி.கே.சி., மிகுந்த கவலையோடும் பக்தி சிரத்தையோடும் பிழை எப்படி ஏற்பட்டது என்று ஆய்ந்து அறிந்து பிழையைத் திருத்துவார்.

உடனே, அதுவரையிலும் அபத்தமாக இருந்த கம்பன் பாடல் ஒரு புதிய பொருளும், ஒலியும் பெற்று மிளிரத் தொடங்கிவிடும்.

1927-ம் ஆண்டு முதல் *1930* வரை டி.கே.சி. சென்னை மேல் சட்டசபை உறுப்பினராக இருந்தார். சட்டசபைக் கூட்டத்துக்குப் போகும்போதுகூட டி.கே.சி. கையில் கம்ப ராமாயணப் புத்தகம் இருக்கும்.

"என்ன சார், சட்டசபைக்குப் போகும்போதுகூடவா கம்ப ராமாயணம்?" என்று ஒரு நண்பர் கேட்டாராம். சரி, இனி மேல் அட்டை போடாமல் கம்பனைப் படிப்பதில்லை என்று டி.கே.சி. ஒரு சபதம் செய்துகொண்டாராம்.

1930-ம் ஆண்டு முதல் *1935* வரை 'இந்துமத பரிபாலன போர்டின்' கமிஷனராக டி.கே.சி. வேலை பார்த்தார். இந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் உள்ள மடம், கோயில், சிற்பம், ஓவியம், சமயச் சடங்கு ஆகியவற்றை எல்லாம் டி.கே.சி. கூர்ந்து கவனித்தார். அவற்றின் உட்பொருளை உவந்து அனுபவித்தார். அவர்களுடைய அனுபவங்களை உணர்ச்சியும், ஆனந்தமும் மிக்க தமிழில் தமிழர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

"புதுடெல்லியை *100* கோடி ரூபாய் செலவழித்துக் கட்டி இருக்கிறார்கள். எல்லாம் செங்கல்லும் சுண்ணாம்புந்தான். இயற்கை அழகு என்பது ரொம்ப ரொம்பக் குறைவு. குதுப்மினார், செங்கோட்டை மாளிகை எல்லாம் பார்த்தேன். மனுஷனையும் அவனது ஆணவத்தையும் சிறப்பித்துக் காட்டுபவை அவை. கடவுளைச் சுட்டிக்காட்ட வேண்டுமானால் தமிழ் நாட்டுக் கோயில்களைத்தான் பார்க்க வேண்டும்" என்று டி.கே.சி. சொல்வார்.

தமிழ் இசையும், சிற்பமும், ஓவியமும், பரத நாட்டியமும், சமய ஞானமும், தமிழ்க் கவிதையும் கோயிலைச் சுற்றியே வளர்ந்து வந்தவை. தமிழர் வாழ்க்கையும், சமயமும் ஒன்றோடு ஒன்று விரவிக் கலந்தவை; ஆணவத்தை அகற்றி ஆனந்தத்தை விளைவிப்பவை. இந்த அரிய பண்பாட்டைச் சீதனமாகத் தமிழர்கள் உலகத்துக்கே கொடுக்கலாம் என்று டி.கே.சி. சொல்வார்.

கமிஷனர் வேலையில் இருந்து *1935*-ல் ஓய்வுபெற்ற பின்னர், டி.கே.சி. திருநெல்வேலியில் ஒரு பகுதியான வண்ணார்பேட்டைக்கு வந்தார். வந்தவுடன் 'வட்டத்தொட்டி'யை தன் இல்லத்திலேயே தொடங்கினார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கூட்டம் நடக்கும். பல அரிய விஷயங்களைப்பற்றித் தெளிவோடும், உறுதியோடும் டி.கே.சி. பேசுவார்கள். பிற்காலத்தில் சிறந்த

எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், நாவலாசிரியர்களாகவும் பெயர் வாங்கப்போகிற பலர் டி.கே.சி-யால் உருவாக்கப்பட்டார்கள். ராஜாஜி, பி.ஸ்ரீ.ஆச்சார்யா, ஏ.வி.சுப்பிரமணிய ஐயர், மகரபூஷணம், ஆவுடையப்ப பிள்ளை, கல்கி, பாஸ்கரத் தொண்டைமான், பேராசிரியர் சீனிவாச ராகவன், ஆ.முத்துசிவம், நான், சுந்தா, சோமு, சுகி, மாறன், ல.ஷண்முகசுந்தரம், துறைவன் முதலியோர் வட்டத்தொட்டியின் உறுப்பினர்கள்.

ஆங்கிலம் படித்த மேதைகள் பலர் டி.கே.சி-யின் மூலமாகவும், டி.கே.சி-யின் வட்டத்தொட்டி சீடர்கள் மூலமாகவும், தமிழ்க் கவிதையின் சிறப்பையும், தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பையும் உணர்ந்து தமிழ்க் காதலர்களானார்கள். அது மாத்திரமல்ல, இலக்கியச் சுவையைத் தமிழ் நாட்டில் வளர்ப்பதற்கும், கவிதையையும், கலைகளையும் தமிழர்கள் உணர்ந்து அனுபவிப்பதற்கும் டி.கே.சி-யின் பள்ளிக்கூடம் டி.கே.சி-யின் தலைமையில் மகத்தான சேவை செய்து இருக்கிறது. 1935-ம் ஆண்டு முதல் 1954 வரை டி.கே.சி. எழுதிய நூல்கள் இதய ஒலி, கம்பர் தரும் ராமாயணம், கம்பர் யார்?, முத்தொள்ளாயிரம், தமிழ்க் களஞ்சியம் ஆகியவை.

பெரும்பாணாற்றுப்படையை உயர்ந்த கவிதை நூல் என்று பலர் அந்தக் காலத்தில் உச்சிமேல் வைத்து ஆடுவார்கள். "அது கவிதை அல்ல. முத்தொள்ளாயிரம், குறள், தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பாடல்கள், கம்ப ராமாயணம், கலிங்கத்துப் பரணி, நந்திக் கலம்பகம், குற்றாலக் குறவஞ்சி, ராமலிங்கர் பாடல்கள், பாரதி பாடல்கள், தேசிக விநாயகம் பிள்ளை பாடல்கள் இவற்றில்தான் கவிதை இருக்கிறது, அதை அனுபவியுங்கள்" என்று டி.கே.சி. சொல்வார்.

ஆனால், பெரும்பாணாற்றுப் படை, காஞ்சி புராணம் முதலியவற்றையே கவிதை என்று நினைத்து மயங்கிக்கொண்டு இருந்தவர்களுக்கு, டி.கே.சி. சுட்டிக்காட்டிய உண்மைக் கவிதையில் ருசி காண முடியவில்லை. அவர்களைப் பார்த்துக் கழி பேரிரக்கத்தோடு டி.கே.சி., "கருப்பஞ்சாறு ஆறாகப் போய்க்கொண்டு இருக்கிறது. அதை விட்டுவிட்டுச் சோளத் தட்டையைச் சுவை போட்டுக்கொண்டு இருக்கிறீர்களே" என்பார்.

"எலும்பைக் கடித்துப் பழகியபின் கரும்பு இளைத்துத்தானே இருக்கும்?" என்று பழக்கத்தால் வந்த கொடுமையை ரசிகமணி விளக்குவார்.

'கலையுலகம் பாழ்பட்ட உலகம் என்று சொல்லலாம். தமிழ்க் கவியை எடுத்துக்கொண்டால் தணிகைப் புராணம், காஞ்சிப் புராணம், வில்லிபுத்தூரார் எல்லாரும் போட்ட கூப்பாட்டில் கம்பர் போன இடம் தெரியாமல் போய்விட்டது. காளமேகத்துக்கு முன்னால் பட்டினத்தாரும், திருமூலரும் ஓட்டம் பிடித்தார்கள். கவி என்பது அற்புத ஒளிவிடும் ரத்தினம். அந்த ஒளியைக் காண்பது எளிதல்ல. கண்ணுக்குப் புலப்பட்டுவிட்டால், முடிவில்லாத ஒளி ஊற்றாக அது இருக்கும். ஆனால், அதைப் பிரகாசிக்க யார் இடம் கொடுக்கிறார்கள்? கீல் எண்ணெய், மோட்டார் மசகு எண்ணெய் இரண்டையும் கலந்து கவிதா தெய்வத்தின் மேல் அபிஷேகம் செய்துகொண்டே இருக்கிறார்கள்! பிறகு யார் காண அந்தத் தெய்வ ஒளியை?' என்று எனக்கு எழுதிய கடிதத்தில் டி.கே.சி. வருந்தி இருக்கிறார்.

டி.கே.சி. 'கம்பன் பாடல் இல்லை' என்று விட்ட பாடல்களைச் சில புலவர்கள் வேண்டுமென்றே எடுத்து, 'ஆஹா, ஓஹோ, இப்படியுண்டா?' என்று வியாக்கியானம் செய்வார்கள். இந்தக் காட்சிகளைக் கண்ட டி.கே.சி-க்கு கம்பனிடத்தில் இரக்கமே ஏற்பட்டுவிடும். "இப்படி எல்லாம் வைக்கோல் புரிகளை கம்பன் தலையில் சரிகைத் தலைப்பாகை என்று கட்டுகிறார்களே" என்று இரங்குவார்கள்.

வட்டத்தொட்டியில் கவிதையைப்பற்றி மாத்திரமல்ல, பரத நாட்டியத்தைப்பற்றியும், சங்கீதத்தைப்பற்றியும், சிற்பத்தைப்பற்றியும், டி.கே.சி. விளக்குவார். பால சரஸ்வதியையும், கவி தேசிக விநாயகம் பிள்ளையையும், முத்தொள்ளாயிரத்தையும் கண்டெடுத்துப் போற்றி உலகம் எல்லாம் ஒப்புக்கொள்ளச் செய்தது டி.கே.சி-தான்.

'கவிதையைப் படிக்கக் கூடாது, ராகத்தோடு பாட வேண்டும்' என்று டி.கே.சி. வற்புறுத்துவார். தனக்குப் பிரியமான வசந்தா, சாவேரி, நாதநாமக்கிரியை, சங்கராபரணம் முதலிய ராகங்களில் தமிழ்ப் பாடல்களை டி.கே.சி. உணர்ச்சியில் நின்று பாடும்போது, தேவாமிர்தத்தை நமக்கு ஊட்டுவதுபோல் இருக்கும். அவருடைய வாழ்க்கை ஆனந்தம் நிறைந்த வாழ்க்கை. அவரோடு இருந்தவர்களுக்கு டி.கே.சி. ஆனந்தத்தை வாரி, வாரி வழங்கிக் கொண்டு இருந்தார். மறைவதற்கு முன்னால் அவர் பேசிய கடைசி வார்த்தைகள் இவை: "ஓர் ஆனந்த லோகத்துக்கு என்னை இழுத்துக்கொண்டு போகிறது என் மனது. ஆகையினால்தான் உங்களோடு எல்லாம் பேச முடியவில்லை."

டி.கே.சி-யே, "சென்ற 40, 50 ஆண்டுகளாக நான் தமிழ்க் கவிதையைப்பற்றியும், சமயத்தைப்பற்றியும் தெளிவாகப் பேசி

வந்து இருக்கிறேன். ஆனால், என்னைப் புரிந்துகொண்டவர்கள் அரை டஜன் பேர்தான். அவர்களிலும் சிலர் என் முன்னிலையில் புரிந்துகொண்டதுபோல இருப்பார்கள். என்னைவிட்டுப்போன பின், பழைய இருட்டடிப்புதான்" என்பார்.

"சூரியனாலேயே இருட்டை ஒரேயடியாக ஒழிக்க முடிய வில்லையே; நம்மால் எப்படி முடியும்?" என்று டி.கே.சி. தமக்கே சமாதானம் சொல்லிக்கொள்வார்.

"சூரியன் தினம் தினம் வருகிறான். ஏன் ஒரேயடியாக இருட்டை ஒழிக்க முடியவில்லை அவனுக்கு? அப்பாவி, என்ன செய்வான்? மாலை 6 மணிக்கு மறைகிறான். அந்தக் கணமே இருள் மூடிக்கொள்கிறது" என்பது டி.கே.சி-யின் விளக்கம். தமிழ் இலக்கிய வானில் டி.கே.சி. என்ற ஸ்தூல சூரியன் 16-2-1954-ம் தேதி மறைந்துவிட்டாலும், பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உள்ளத்தில் டி.கே.சி. என்ற சூட்சும சூரியன் ஒளிவீசிக்கொண்டே நிற்கும்.

2. சீலம் சிறந்த சிதம்பரநாதன்

ஒரு நாள் குற்றாலத்தில் ரசிகமணி டி.கே.சி-யோடு நான் சொல்லாக்கத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.

அப்போது டி.கே.சி., "தமிழில் புதிய சொல் ஒன்றை உண்டாக்கி அதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வது என்பது கடினமான காரியந்தான். பாருங்கள், நாம் இத்தனை காலமாக ஒரு சொல்லைத் தானே உண்டாக்க முடிந்தது, 'பண்பாடு' என்ற சொல்லை. அது பூர்வீகமாக இருந்த சொல்லைப்போல நன்றாகத் தமிழோடு ஒட்டிக் கொண்டது. பண்பாடு என்றால் வெகு காலம் உள்ளம் பண்படுத்தப் பட்டதால் ஏற்பட்ட நாகரிகந்தானே? 'கல்ச்சர்' என்ற ஆங்கிலச் சொல்லும் 'கல்டிவேட்' (பண்படுத்துதல் அல்லது பயிரிடுதல்) என்ற சொல்லிலிருந்து வந்ததுதான்.

குற்றாலத்துக்கு அருகே கடவாய்க் காத்தி என்ற செழிப்பான நன்செய் நிலம் இருக்கிறது. 2,000 அல்லது 3,000 ஆண்டுகளாக உழுது பயிரிட்டு வந்த நிலம். ஆண்டுக்கு மூன்று போகம் விளையும். அவ்வளவு செழிப்பான மண். நல்ல உழவன் ஒருவன் அந்த மண்ணைக் கையில் அள்ளித் தொட்டுப் பார்த்தாலே 'இது 3,000 ஆண்டுகள் பண்பட்ட நன்செய்' என்று சொல்லிவிடுவான். தமிழ்ப் பண்பாடு 3,000 ஆண்டுகளாகப் பண்பட்டு வளர்ந்து வந்தது. அது என்னவென்று ஒரு வெள்ளைக்காரன் எளிதில்

விளக்கிவிட முடியாது. கடவாய்க் காத்தி மண்ணை ஒரு பிடி அள்ளி அவன் வாயில் போட்டால் அதன் நயத்தைப்பற்றி அவனால் புரிந்து கொள்ளவா முடியும்?" என்றார்.

பண்பாடு என்பது என்ன என்று மேற்கண்டபடி விளக்கிய டி.கே.சி., வாழ்க்கையில் பண்பாட்டுக்கே உரிய, அரிய ஓர் எடுத்துக் காட்டாக வாழ்ந்தார்.

கம்பனிடத்தில் டி.கே.சி-க்கு இருந்த பக்தி அளக்க முடியாதது. ஆனால், மக்களிடத்தில் அவருக்கு இருந்த மரியாதையும் மதிப்பும் கம்பன் மீது இருந்த பக்தியையும் மிஞ்சி நின்றன. டி.கே.சி-யின் இல்லத்துக்கு நான் ஒரு நாள் போயிருந்தபோது அவர், "நேற்று ராமசாமிப் பெரியார் இங்கு வந்திருந்தார். அவர் வந்தபோது நான் 7, 8 நண்பர்களுக்கு கம்ப ராமாயணத்தில் உள்ள வாலி வதைப் படலப் பாடல்களை விளக்கிக்கொண்டு இருந்தேன். ஆனால், பெரியாரைப் பார்த்ததும் கம்ப ராமாயணத்தை மூடி வைத்துவிட்டு. திருக்குறளில் பல பாடல்களை எடுத்துச் சொன்னேன். பெரியாருக்கு ஒரே ஆர்வமும் மகிழ்ச்சியும். சிலருக்கு வெண்டைக்காய் பிடிக்கும், பாவக்காய் பிடிக்காது. அவர்களிடத்தில் பாவக்காயையே போட்டுத் தாளித்துக்கொண்டு இருப்பது பண்பாடு இல்லை. வெண்டைக்காய், முருங்கக்காய், புடலங்காய் என்று எத்தனை, எத்தனையோ பொது விஷயங்கள் இருக்கத்தானே செய்கின்றன? அவற்றைப் பேசி ஆனந்தத்தை உண்டாக்கலாம் அல்லவா?" என்றார்.

இதைக் கேட்ட பிறகு, 'பிறர் மனங்கோணும்படி நாம் நடக்கக் கூடாது' என்ற ஆசை, டி.கே.சி-க்கு கம்பனிடம் இருந்த ஆசையையும் வென்றுவிட்டது என்று தெரிந்தது. எல்லோரையும் மகிழ்விக்க வேண்டும், எல்லோரிடமும் இங்கிதமாக நடந்துகொள்ள வேண்டும் என்ற முனைப்பில் உண்மைப் பண்பாட்டின் ஆழத்தைக் காண்கிறோம்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் காரைக்குடி கம்பன் விழாவின் ஆதரவில் டி.கே.சி-யின் தலைமையில் பல புலவர்கள் பேசினார்கள். அந்தப் புலவர் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் மகோபாத்யாய கதிரேசன் செட்டியார். சிறந்த அறிவாளி. தமிழ்நாட்டில் - சிறப்பாக செட்டிநாட்டில் - அவருக்குப் பெருமதிப்பு இருந்தது. அவர் டி.கே.சி. தலைமையில் பேசும்போது மிகுந்த ஆங்காரத்தோடு டி.கே.சி. செய்து வந்த திருத்தங்களைப்பற்றிக் கண்டித்தார். டி.கே.சி-யோ சிரித்துக்கொண்டே பேச்சைக் கேட்டுகொண்டு இருந்தார்.

அவருடைய சிரிப்பைப் பார்த்ததும் கதிரேசன் செட்டியாருக்குப் பெரும் சிற்றமே ஏற்பட்டுவிட்டது. உடனே, அவர் டி.கே.சி-யைப்

பார்த்து, "ஏன் ஐயா, சிரிப்பு வேறு கேடா? உங்கள் அக்கிரமத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். உடம்பில் தைக்கவே இல்லையோ நான் சொல்வது? மானம் இருந்தால்தானே?" என்று ஒரு போடு போட்டுவிட்டு அமர்ந்தார். வந்திருந்தவர்கள் எல்லோரும் ஒரு பெரும் போர் விளையப்போகிறது என்று எதிர்பார்த்தார்கள்.

டி.கே.சி. எழுந்து நின்று, "அவையோர்களே! செட்டியார் வெகு அழகாகப் பேசினார்கள்..." என்று தொடங்கி, செட்டியார் பேச்சிலிருந்த நல்ல கருத்துக்களை எல்லாம் எடுத்துப் பாராட்டிப் பேசினார். கேட்டுக்கொண்டு இருந்தவர்கள் எல்லோரும், 'பெருந்தன்மை என்றால், இந்த மனிதனிடம் அல்லவா இருக்கிறது? பண்பாடு என்றால் இதுதான் பண்பாடு' என்று டி.கே.சி-யைப் பலபடப் புகழ்ந்தார்கள். அந்த நாளிலிருந்து மகாமகோபாத்யாயரை கம்பர் விழாவுக்கு அழைப்பது அறவே நின்றுவிட்டது.

ராஜாஜி கவர்னர் ஜனரலாக இருந்தபோது திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்தில் கல் நாட்டு விழாவுக்காக வந்தார். அப்போது மணியம்மையாரை பெரியார் மணக்கப்போவது குறித்துத் தமிழ் நாட்டில் பெரிய விவாதம் நடந்துகொண்டு இருந்தது. தன் பழைய நண்பரான ராஜாஜியைக் கலந்து யோசனை செய்து முடிவு கட்டப் போவதாகப் பெரியார் ஓர் அறிக்கைவிட்டிருந்தார்.

ராஜாஜி இதைப் போன்ற காரியங்களில் மிகவும் கடுமையானவர். ஆனால், டி.கே.சி-யோ ஒருவருடைய சொந்த விஷயத்தில் மற்றவர்கள் குறுக்கிடக் கூடாது என்ற கொள்கையுடையவர். திருமணம் செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருப்பவர்களையும், அரசியல் தேர்தலில் நிற்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களையும் தடுப்பது தவறு, பயன் இல்லாதது என்று டி.கே.சி. சொல்வார்.

திருவண்ணாமலைக்குப் போகும் புகைவண்டியில் ஒரே பெட்டியில் ராஜாஜியோடு டி.கே.சி-யும் அவர்களுடைய செயலாளர்களும் பயணம் செய்துகொண்டு இருந்தார்கள். இடை வழியில் ஒரு புகைவண்டி நிலையத்தில் பெரியாரும் ராஜாஜி இருந்த பெட்டியில் ஏறிக்கொண்டார். ஏறியவுடனேயே, பெரியார் ராஜாஜியிடம் தன் சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார். ராஜாஜி தன் ஆலோசனையைச் சொல்லும் முன்பே, டி.கே.சி. முந்திக்கொண்டு, "உங்கள் விருப்பம் அப்படி இருக்குமானால் திருமணத்தைச் செய்து முடிப்பதே நல்லது" என்று சொன்னார்.

ராஜாஜியும், "ஆமாம். அப்படிச் செய்வதே நலம்" என்று சொல்லி விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். பெரியாரை

ராஜாஜி கடுமையான சோதனைக்கு உள்ளாக்கிவிடக் கூடாதே என்று அஞ்சியே டி.கே.சி. மேற்கண்டவாறு செய்ததாக உடன் இருந்தவர்கள் நினைக்கிறார்கள்.

1948 கோடை விடுமுறையில் என் குடும்பத்தார் எல்லோரும் குற்றாலத்துக்கு வந்து தன்னோடு தங்க வேண்டும் என்று டி.கே.சி. அழைத்திருந்தார். எட்டு அறைகளில் டி.கே.சி. இருந்தது முதல் இரண்டு அறைகளில். என் குடும்பம் தங்குவதற்கு நான்காவது அறையை டி.கே.சி-யே ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், உணவு எல்லாம் டி.கே.சி. இல்லத்தில்தான்.

ஒரு நாள் டி.கே.சி-யும் நானும் தனியாக இருந்தோம். அன்று எங்களுக்குள் ஒரு கடுமையான விவாதம் தொடங்கியது.

"சொர்க்கம் நரகம் என்றெல்லாம் கிடையாது. இறந்தவுடன் எல்லா மனிதர்களும் இறைவனுடைய வஸ்துவில் கலந்து விடுகிறார்கள். மறு பிறப்பு என்பதே கிடையாது" என்று டி.கே.சி. வாதாடினார்.

"நீங்கள் சொல்லும் கட்சியை நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். கர்மவினைக்கு ஏற்ற பிறவி என்று சைவம் சொல்கிறது. 'சாமர்செட் மாம்' என்ற புகழ் பெற்ற நாவலாசிரியர்கூட 'வேறு ஒரு சமயம் சொல்லாத ஒரு கொள்கையை இந்து மதம் மாத்திரம் சொல்கிறது. அதுதான் கர்மவினையைப் பற்றிய கொள்கை. பிறவியில் குருடர்களாகவும் மூடர்களாகவும் பலர் பிறக்கிறார்கள். ஏன்? கர்மவினை கொள்கைப்படி, முன் பிறவியில் செய்த தீவினையினால் அவர்கள் ஊனமுற்றிருக்கிறார்கள். இந்தக் கொள்கையை மறுத்தால், இறைவன் அநீதியுள்ளவன், காரணம் இல்லாமல் மக்களுக்குத் துன்பம் கொடுக்கிறான் என்றல்லவா சொல்ல வேண்டும்?' என்று தன், 'தி சம்மிங் அப்' என்ற நூலில் எழுதி இருக்கிறார்" என்றேன்.

இதைக் கேட்ட டி.கே.சி., "ஒரு பாட்டில் சிவவாக்கியரே என் கருத்தை உறுதிப்படுத்துகிறார். இதோ பாடல்:

கறந்த பால் முலை புகா, கடைந்த வெண்ணெய் மோர் புகா,
இறந்தவர் பிறப்பதில்லை, இல்லை இல்லை இல்லையே.

சிவவாக்கியரை ஆமோதிக்கிறார் ஜெர்மன் தத்துவ ஞானி ஷோப்பன்ஹாவர். அவர் சொல்வதைக் கேளுங்கள். 'இறந்த பின் எல்லா மனிதர்களுமே பேரின்பத்தை அடைகிறார்கள். இந்த உண்மையை அறிந்தால் எத்தனையோ பேர் உடனடியாகத் தற்கொலை செய்துகொண்டு பேரின்பத்தை அடைவார்கள்" என்றார்.

இதைக் கேட்டதும் எனக்குக் கோபம் தாங்க முடியவில்லை. "உங்கள் கொள்கைப்படி அயோக்கியனும் இறந்தவுடன் பேரின்பத்தை அடைகிறான். யோக்கியனும் பேரின்பத்தை அடைகிறான். இந்தக் கொள்கையைக் கேட்கும் மனிதர்கள், 'இம்மையில் அயோக்கியர்களாக இருந்து என்ன அக்கிரமும் செய்யலாம். மறுமையில் எப்படியும் பேரின்பம் நமக்குக் கிட்டுமே' என்றுதானே நினைப்பார்கள்?" என்று டி.கே.சியிடம் சொல்லிவிட்டு மிக்க சீற்றத்தோடு எழுந்து வெளியே போய் நான்காவது அறையில் உட்கார்ந்து கொண்டேன்.

அரை மணி நேரம் அங்கே முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். அப்போது, நோய்வாய்ப்பட்டிருந்த டி.கே.சி. மெல்ல மெல்ல அங்கே நடந்து வந்து, "என்ன! மணி 12.30 ஆச்சே. இலை போட்டாகிவிட்டது. சாப்பிட வாருங்கள்" என்றார். இதைக் கேட்ட பின்னும் நான் மௌனம் சாதித்தேன். ஆனால், ரசிகமணியோ என் கையைப் பிடித்து தூக்கி, "வாருங்கள், வாருங்கள்" என்று கெஞ்சும் குரலில் அழைத்தார்.

என்னைக் காட்டிலும் 33 வயது மூத்தவரான அவருடைய சீலத்தைக் கண்டு நான் உருகிவிட்டேன். அவருடைய குழந்தை உள்ளத்தைப் புண்படுத்திவிட்டோமே என்ற உணர்வு என்னை வருத்தியது. மறுவார்த்தை பேசாமல் அவர் பின் சென்று அவர் அளித்த உணவு விருந்தையும், கவிதை விருந்தையும் உண்டு களித்தேன். இத்தகைய டி.கே.சி-யின் அரிய பண்பாட்டை விதம் விதமான கோணங்களிலிருந்து அனுபவித்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. அந்த அனுபவம் கவிதையாக வடிவெடுக்கிறது:

சீலம் சிறந்த சிதம்பரநாத வள்ளல்,
சால நீ வாழ்க தழைத்து.

3. திருந்தத் திருத்திய கை

"கவிஞனைப் பார்த்து, 'கவிதைக்கு இலக்கணம் கூறு', என்று கேட்பது பூனையைப் பார்த்து, 'எலிக்கு இலக்கணம் கூறு' என்று கேட்ட கணக்குத்தான். எலியைக் கண்டால் பூனைக்கு எவ்வளவு கொண்டாட்டமோ, அவ்வளவு கொண்டாட்டம் கவியைக் கண்டவுடன் கவிஞனாகிய எனக்கு ஏற்படுகிறது. ஆனால், எங்கள் இருவருக்குமே நாங்கள் அனுபவிக்கும் பொருளுக்கு இலக்கணம்

கூறத் தெரியாது என்றாலும், அந்தப் பொருளை இனம் காணத் தெரியும்" என்று சொன்னார் ஓர் ஆங்கிலக் கவிஞர்.

எலியைக் கண்டவுடன் பூனைக்கும், கவிதையைக் கண்டவுடன் கவிஞனுக்கும் ஆர்வம் பொங்குகிறது. உள்ளம் உவக்கிறது, ரோமம் சிலிர்க்கிறது. இந்த நிகழ்ச்சிகளையும், மெய்ப்பாடுகளையும் கொண்டு தன் முன் இருப்பது முறையே எலி அல்லது கவிதை என்பதை இருவரும் எளிதில் ஊகித்துக்கொள்கிறார்கள். ஆனால், அறிவியல் அடிப்படையில், இந்த ஊகத்துக்குக் காரணம் சொல்வது எளிதல்ல.

ரசிகமணியோ கவிதையின் உயிர் நிலை இருக்கும் இடத்தை எப்படி எப்படியோ தொட்டுக் காட்டிவிடுவார்கள். கவியோடு பல வருடங்களாக உருண்டு, புரண்டு, கவிதையை உள்ளுணர்வோடு ஊன்றிக் கவனித்த காரணத்தால் கவிஞனாலும் செய்ய முடியாத செயற்கரிய செயலை டி.கே.சி செய்து காட்ட முடிந்தது.

கவியின் உயிர் நிலை அதன் வடிவத்தில்தான் இருக்கிறது. அதன் பொருளில் இல்லை என்பதை டி.கே.சி. அடிக்கடி வலியுறுத்தினார். இந்த வடிவத்தை உருவாக்குவதும் உணர்ச்சியே. பொருள் அல்ல. உண்மையான உணர்ச்சி ஒரு கவிஞனுடைய இதயத்தை ஆட் கொண்டுவிட்டால், அவன் அதற்கு மேல் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை; அவனுடைய தாய் மொழி அவனது இதயத்தில் பாய்ந்து, அந்த உணர்ச்சியை ஆவி சேர்த்துக் கட்டி, அதை ஒரு கவியாக உறைத்துவிடுகிறது. கவிஞனுக்கும் கவிக்கும் இதற்கு மேல் சம்பந்தம் இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம். உண்மையான, வளமான ஓர் உணர்ச்சியை அவன் பெற வேண்டும், அவ்வளவுதான்; அவனது உள் மனம் அந்த உணர்ச்சிக்குக் கவி உருவம் கொடுத்து விடும்; தேன் இறுகி, இறுகிக் கற்கண்டாவதுபோல, உணர்ச்சி இறுகி இறுகிக் கவியாக வடிவெடுத்துவிடும்.

கவிஞனுடைய உள் மனத்தில் அவன் கற்ற யாப்பிலக்கண அறிவு, மொழி அறிவு, அனுபவ அறிவு - எல்லாம் படிந்து கிடக்கின்றன. உண்மை உணர்ச்சி இந்த அறிவை எல்லாம், கவிஞனைக் கேட்காமலேயே, பயன்படுத்திக்கொண்டு, கவி உருவத்தை உண்டாக்குகிறது.

உரைநடையிலிருந்து கவிதையை வேறுபடுத்திக் காட்டுவது தாளம். இந்தத் தாளம் தமிழ்க் கவிதையில் அமைவதுபோல் ஆங்கிலக் கவிதையில் அவ்வளவாக அமைவதில்லை என்று டி.கே.சி. கூறுவார். தாளக் கருவிகளாக அமைந்திருப்பவை எதுகையும் மோனையும். ஆங்கிலக் கவிதையில், அடியின் கடைசியிலேயே எதுகை வரும். தட்டுப் பொறியில், 'டைப்ரைட்டரில்'

ஒரு வரி முடியும்போது 'டிங்' என்று மணியடித்துவிடும். சொல் முடிந்துவிட்டதா என்பதைப்பற்றி அந்த அணி கவலைப்படுவதில்லை. பாதிச் சொல்லை அடித்துக்கொண்டு இருக்கும் போதே தாட்சண்யம் இல்லாமல் தட்டுப் பொறி 'டிங்' என்று அடித்துவிடும். சொல்லை முடிப்பதற்கு வேண்டிய மிச்சம் இருக்கும் எழுத்துக்களை அடுத்த வரியில்தான் அடித்துத் தொலைக்க வேண்டும்.

அதைப்போலவே, ஆங்கிலக் கவியின் இறுதியில் வரும் எதுகை வசங்கெட்ட இடத்தில் 'டிங்' அடித்து, இயல்பான தாளத்தைக் கெடுப்பதாக அமைந்துவிடுகிறது. ஆனால், தமிழ்க் கவிதையிலோ, வரியின் தொடக்கத்திலேயே எதுகை அமைந்துவிடுகிறது. இதன் காரணமாக ஆங்கிலக் கவிதையில் இல்லாத வசதி தமிழ்க் கவிதைக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வசதியை உளவறிந்து பயன்படுத்திய தமிழ்க் கவிஞர்கள் கம்பர் போன்று வெகு சிலரே.

உதாரணமாகக் கீழ்க்காணும் கம்ப ராமாயணப் பாடலை டி.கே.சி. அடிக்கடி எடுத்துச் சொல்வார்.

கான் ஆள நில மகளைக்
கைவிட்டுப் போனவனைக்
காத்துப் பின்பு

போனானும் ஒரு தம்பி,
போனவர்கள் வரும் அவதி
போயிற்று என்னா

ஆனாத உயிர்விட என்று
அமைவானும் ஒரு தம்பி,
அயலே நாணாது

யானாம் இவ் அரசாள்வென்?
என்னே இவ் அரசாட்சி!
இனிதே அம்மா!

"பூனை பதி போட்டுப் பாய்வதுபோல, முந்தின வரியில் கவிதை பதி போட்டு, அடுத்த வரியில் உள்ள எதுகையில் பாயும்போது, உணர்ச்சிக்கு அதிக வேகமும் அழுத்தமும் ஏற்பட்டுவிடுகிறது. இவ்வாறு எதுகையாலும் மோனையாலும் சொற் கட்டுகளாலும் ஏற்படும் தாளம் கவிதைக்கு உயிராக அமைந்திருக்கிறது" என்று டி.கே.சி. விளக்குவார்.

அலை இல்லாமல் அமைதியாக இருக்கும் ஒரு குளத்தின் நீர்ப் பரப்பில் தட்டை ஓட்டுச் சல்லி ஒன்றை வீசினால், அது தவளையைப் போலத் தத்தித் தத்திச் சென்று சுமார் 50 அடிக்கு அப்பால்

தண்ணீருக்குள் மூழ்கிவிடும். அலை வீசிக்கொண்டு இருக்கும் குளத்தில் 'தவளை' விட்டால், தவளை அலை மேல் சவாரி செய்து கொண்டே 150 அடி தூரம்கூடப் போகும். ஏன்? அலையின் உச்சியில் பட்டதும், வேகம் குறைந்த ஓட்டுக்குப் புது வேகத்தைக் கொடுக்கிறது அலை. ஓட்டுக்கு அலை புது வேகத்தைக் கொடுப்பது போல, தாளத்தோடு கூடிய எதுகையும் மோனையும் உணர்ச்சிக்குப் புது வேகத்தைக் கொடுக்கின்றன என்று டி.கே.சி. சொல்வார்.

ஆனால், கூர்ந்து கவனிப்பவர்களுக்கு மட்டுமே கவிதையில் தாளம் செய்கிற வேலை என்ன என்பது புலப்படும். சென்னை பட்டணத்தையும், போலீஸ்காரர்களையும் பார்த்திராத ஒரு பத்தாம்பசலிப் பட்டிக்காட்டானைத் திடீரென்று சென்னை மவுண்ட் ரோட்டில் நிறுத்திவிட்டால், அவன் காணும் காட்சி அவனுக்கு எவ்வளவு திகைப்பாக இருக்கும்!

'கிழக்கும் மேற்குமாகவும், வடக்கும் தெற்குமாகவும் கார்களும் லாரிகளும் சாரி சாரியாகப் போய்க்கொண்டு இருக்கும் ஒரு சந்தியில் நின்றுகொண்டு ஒருவன் கையை நீட்டுவதும், மடக்குவதுமாக இருக்கிறானே, என்ன பைத்தியக்காரத்தனம் இது?' என்று எண்ணுவான் பட்டிக்காட்டான். ஆனால், அந்த ஆள் போலீஸ்காரன் என்றும், அவன் அங்கு நின்றுகொண்டு சமிக்ஞை காட்டாமல் இருந்தால், காரோடு கார் மோதி, எத்தனையோ விபத்துக்கள் ஏற்படும் என்றும் நமக்குத் தெரியும்.

இதைப்போலத்தான் எதுகையும், மோனையும் கவிச் சந்திகளில் நின்றுகொண்டு சொற்களை ஆண்டும் அடக்கியும், அவற்றுக்குத் தேவையான உணர்ச்சியையும் அழகையும் ஊட்டிக்கொண்டும் இருக்கின்றன. அவை இவ்வாறு அதிகாரம் செய்யவில்லை என்றால், தாளம் தப்பிவிடும்; தாளம் தப்பினால், கவிக் கூளமே மிஞ்சும். இவ்வாறு எல்லாம் டி.கே.சி. பல உதாரணங்கள் கொடுத்து விளக்கினாலும் கவியின் அந்தரங்கம் நமக்குப் பிடிபடுவதில்லை.

கவி நயம் குறைந்த பாடல் ஒன்று டி.கே.சி. திருத்திய பின் எப்படிக் கவித்துவத்தால் நிறைந்துவிடுகிறது என்பதற்கு ஓர் உதாரணம் காட்டினால், டி.கே.சி-யின் கருத்து தெளிவாகிவிடும்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன், 'செட்டிநாடு' என்ற பத்திரிகையில் ஒரு வெண்பா வெளிவந்தது. இயற்றியவர் பெயர் வெளி வரவில்லை. வெண்பாவைப் படித்ததும், "இதோ, தமிழுக்கு ஒரு கவி கிடைத்துவிட்டது!" என்று டி.கே.சி. முழங்கினார்கள். முருகனைப்பற்றிய கவி அது.

கவியில் இரண்டு திருத்தங்கள் செய்தார்கள் ரசிகமணி. திருத்துவதற்கு முன் அந்தப் பாடலின் உருவம் கீழ்க்காணுமாறு:

மன்றல் கமழ் குழல் சேர் வள்ளிக்கு வாய்த்தானை
வென்றி மயிலேறும் வித்தகனை - ஒன்றின்
முளையானை, யாவர்க்கும் மூத்தானை, யானைக்கு
இளையானை நெஞ்சமே ஏத்து.

ரசிகமணியின் திருந்திய கை பட்ட பிறகு பாடல் கீழ்க்காணுமாறு திருத்தம் பெற்றது:

மன்றல் குழல் கமழும் வள்ளிக்கு வாய்த்தவனை
வென்றி மயிலேறும் வித்தகனை - ஒன்றின்
முளையானை, யாவர்க்கும் மூத்தானை, யானைக்கு
இளையானை, நெஞ்சமே, ஏத்து.

(மன்றல் குழல் - புஷ்ப மாலை சூடிய கூந்தல்; ஒன்றின் முளையானை - அநாதியான வஸ்து, வேறொரு வஸ்துவிலிருந்து வராத தத்துவம்; யாவர்க்கும் மூத்தானை - அவனுக்கு முன் யாரும் இருந்ததில்லை.)

திருத்திய பாடல் தாள லயத்தில் சிறந்து நிற்கிறது என்பதை நாம் உணர்கிறோம். ஆனால், சிறப்புக்குக் காரணம் என்னவென்று நம்மால் சுட்டிக் காட்ட முடியவில்லை.

ஒரு கடிதத்தில் டி.கே.சி.யே காரணத்தை விளக்குகிறார்:

"முதல் அடியில் பாடம் 'மன்றல் கமழ் குழல் சேர்' என்றிருந்தது. இதில் 'சேர்' என்ற வார்த்தை பிய்ந்து தொங்குவது மாதிரி இருக்கிறது. 'வள்ளி'யோடு அங்கமாகப் பொருந்தவில்லை. 'குழல் கமழும் வள்ளி' என்று சொல்லும்போது அங்கமாகப் பொருந்தி நிற்கிறது. இது ஒரு சிறு திருத்தந்தான்."

ஆனால், 'வாய்த்தவனை' என்ற திருத்தந்தான் முக்கியமான திருத்தம். பத்திரிகையில் வாய்த்தானை என்று இருக்கிறது. அது வித்தகனை என்ற இரண்டாம் அடியில் வரும் இளக்கமான இலக்கணப் பாங்குக்கு மேலாகப் போய்விடுகிறது.

'வாய்த்தவனை', 'வித்தகனை' இரண்டும் இளக்கமான நீண்டு செல்லும் ஓசை ஆனால், 'முளையானை', 'மூத்தானை', 'இளையானை' என்னும் உருவங்கள் எழுத்துக் குறுகி, வேகத்தோடு ஒலிப்பன. 'வாய்த்தானை' என்று முதல் அடியில் வரும் வேகம்கொண்ட உருவம்; மூன்றாவது நான்காவது அடிகளில் வரும் அற்புதமான, பொருள் பொதிந்த வேகத்தைக் கெடுத்துவிடுகிறது. கெடுக்காமல் இருப்பதற்காகவே திருத்தம்.

மறுபடியும் வெண்பாவைத் திருத்தத்துடன் சொல்லிப் பார்க்கலாம்.

கவியில் விஷயம், வேகம், ஓசை எல்லாம் அமைந்து இருக்கின்றன.

பாட்டின் வடிவினை முடியக் கண்டவர்கள்தான் முதல் அடியில் உள்ள ஓசை எவ்வாறு மூன்றாவது, நான்காவது அடிகளின் இங்கிதத்தையும் வேகத்தையும் கெடுக்கிறது என்று கண்டுகொள்ள முடியும்.

பாடலை வெறும் சொற் குப்பையாகப் பார்க்காமல், உயிர்த் துடிப்போடும் உணர்ச்சியோடும் நடனமாடும் ஒரு மங்கையாகக் கண்டார் டி.கே.சி.

"அபிநயக் கலையில் கண்ணும் இதழும் கையும் காலும் எப்படி அங்கங்களாக இருந்து உணர்ச்சிகளைக் காட்டுகின்றனவோ, அப்படியே கவியில் உள்ள சீர், எதுகை, மோனை ஆகிய எல்லாம் அங்கங்களாக இருந்து உணர்ச்சிகளை எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்க் கவி என்றால் மேலே சொன்ன மாதிரி உணர்ச்சிகளை எடுத்துக் காட்ட வேண்டும். அப்படி உணர்ச்சிகளைக் காட்டாதபடி ஏதோ அலங்காரத்துக்காக எதுகை, மோனை, சீர்களை உபயோகப் படுத்தினால், அது கவியல்ல. அதனிடத்தில் பாவம் இல்லை, ரசம் இல்லை என்று சொல்லிவிட நேரும். ஏதோ சொல்லை வைத்து விளையாடிய வெறும் செய்யுளாகத்தான் இருக்கும். அவற்றை அனுபவிக்க முடியாது. அவற்றை வாசிப்பது எல்லாம் ஆயாசந்தான். தொந்தரவுதான்" என்பதே ரசிகமணியின் தெளிந்த முடிவு.

மாசற்ற காட்சி படைத்திருந்த காரணத்தாலும், கவிதையின் வளைவு நெளிவுகளை எல்லாம் நுண்ணறிவோடு பார்க்கும் திறம் பெற்றிருந்த காரணத்தாலும், செருகு கவிகளையும், போலிப் பாடல்களையும் உடனடியாகக் கண்டுபிடித்து அவற்றை ஈவிரக்கம் இல்லாமல் களைந்தெறியும் துணிச்சல் ரசிகமணியிடம் இருந்தது.

4. டி.கே.சி-யின் உள்ளுணர்வு

தன் மார்பில் தைத்தது ராம பாணம் என்று தெரிந்தவுடன் வாலி, ராமனைப் பார்த்து, "உங்கள் குலத்தில் தோன்றியவர்களுக்கு எல்லாம் அரச தர்மம் உடமை அல்லவா? ஆனால், நீ லட்சியத்தை

விட்டுத் தவறிவிட்டாயே?" என்று கேட்கிறான். அப்படிக் கூறிக்கொண்டு இருக்கும்போதே, ராமனுடைய நீலமயமான திரு மேனியில் வாலி ஈடுபடுகிறான். இதை கம்பர் அரிய ஒரு பாட்டில் எடுத்துச் சொல்கிறார்:

கோ இயல் தருமம் நுங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம்
ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய் உடைமையன்றோ?
ஆவியை சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை?

-என்பது கம்பர் பாடல்.

இதில், 'ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்' என்ற வாசகத்துக்கு எல்லா உரையாசிரியர்களுமே மேலெழுந்தவாரியாக உரை சொல்வார்கள். ஆனால், ரசிகமணி ஓவியக் கலையின் நுட்பத்தை உணர்ந்தவர் ஆகையால், அவருடைய உரை உள்ளுணர்வோடு பேசுகிறது. எப்படி?

பொதுவாக ஒருவர் முகத்திலும், உடல் அமைப்பிலும் அழகின் அம்சங்கள் ஆங்காங்கு சிதறிக் கிடக்கும். சாமான்யமாகப் பார்ப்பவர்களுக்கு அவை தென்படாமல் போய்விடலாம். ஆனால், சித்திரக்காரன் என்ன செய்கிறான்? அந்த அம்சங்களை மாத்திரம் எடுத்து, அவற்றுக்கு அழுத்தம் கொடுத்துவிடுகிறான். இந்தத் தெளித்தல் காரணமாக இயற்கையில் உள்ள அழகைவிட சித்திரத்தில் அழகு அதிகமாகிவிடுகிறது. ஆனால், ராமனிடத்திலோ எல்லா அம்சங்களும் அழகுடன் நிற்கின்றன. தெளிப்பதற்கு இடம் இல்லை. சித்திரக் கலை தெளிப்பதனாலேயே குறைபட்டுவிடுகிறது. ராமனது இயற்கை அழகு அவ்வளவு பூரணமாக இருக்கிறது என்று பொருள். ஆகவேதான் ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய் என்று கம்பர் ராமனுடைய அழகை வர்ணிக்கிறார்.

இப்படியாக டி.கே.சி. விளக்கம் உள்ளுணர்வில் இருந்து வந்து உண்மைக்கு மத்தாப்பூப் போட்டுக் காட்டும்.

ஆதி தேவர் அவர் எம் அறிவினுக்கு அறிவரோ?

-என்று இறைவன் இருக்குமிடத்தைத் தொட்டுக் காட்டுகிறார் கம்பர். ஆனால், அது என்னவென்று நமக்குப் புரிவதில்லை. டி.கே.சி-யின் விளக்கம் அற்புதமாக அதைத் தெளிவுபடுத்துகிறது.

'ஒரு புஸ்தகத்தை எடுத்து வாசிக்கிறோம். எழுத்துக்கள் தெளிவாக இல்லை. கண்ணாடியைப் போட்டுப் பார்க்கிறோம். எழுத்துக்கள் தெளிவாகிவிடுகின்றன. அப்போது கண்ணின் பார்வைக்குக் கண்ணாடி கருவியாக இருக்கிறது. கண்ணாடிக்குக் கர்த்தாவாக இருப்பது கண்.

இன்னும் உள்ளே சென்று பார்த்தால், கண்ணும் ஒரு கருவியே என்று தோன்றும். கண்ணைக் கருவியாக வைத்துப் பார்ப்பது நமது அறிவு. இந்த முறையில் ஆராய்ந்து அறிவு தத்துவத்துக்குப் போவோமானால், நம்முடைய அறிவு ஒரு கருவிதான் என்று தெரியும்.

அந்த அறிவாகிய கருவியை உபயோகிப்பது எது? எங்கும் நிறைந்த அறிவுமயமாக இருக்கிற கடவுள்தான். ஆகவே, கண்ணுக்கு எப்படி நம் ஆணவ அறிவு கர்த்தாவாக அமைந்து இருக்கிறதோ, அப்படியேதான் நம்முடைய ஆணவ அறிவுக்குக் கடவுளாகிய பேரறிவு கர்த்தாவாக அமைந்து இருக்கிறது.'

இப்படியாக, அறிவினுக்கறிவரோ என்ற கம்ப சூத்திரத்தின் உட்பொருளை டி.கே.சி-யின் விளக்கம் நமக்கு எப்படியோ உணர்த்திவிடுகிறது.

5. டி.கே.சி–யும் அழகு உணர்ச்சியும்

கவிஞர்கள் அழகுக் காட்சிகளைப் படைப்பதோடு நின்றுவிடாமல், அந்தக் காட்சிகளை அனுபவிப்பதற்கு வசதியான கண்களையும் வாசகர்களுக்குக் கொடுக்க வேண்டும். இது கவிஞர்களுடைய கடமை. இந்தக் கடமையில் கவிஞர்கள் தவறும் போது டி.கே.சி-யைப் போன்ற ரசிகமணிகள் தம்முடைய கவிக் கண்களை நமக்கு நல்கிக் கவிக் காட்சிகளை நாம் அனுபவிக்கும்படி உதவுகிறார்கள்.

நகரை நீங்கி வனத்தில் தங்கி இருக்கும் ராமனைச் சுமந்திரன் அயோத்திக்கு வர வேண்டும் என்று கெஞ்சிக் கேட்கிறான். அயோத்தி வர மறுத்துவிட்டு பதில் சொல்கிறான் ராமன்:

"என்னைப் பெற்றெடுத்த தாயார் மூவர்க்கும் என் நெடு வணக்கத்தைக் கூறு. பரதனுடைய துயர் துடைத்து அவன் பக்கத்தில் இரு." இப்படி அன்பு கனியச் சொன்னவன் யார் என்று கம்பர் சொல்கிறார்:

மறைகளை மறைந்து போய் வனத்துள் வைகுவான்

இறைவனாகிய ராமன் வேதங்களில் இருந்து மறைந்துபோய், வனத்துக்குள் உட்கார்ந்துகொண்டானாம். இந்தக் கருத்தைப் புரியவைக்கிறார்கள் டி.கே.சி. கடவுளைக் காண்பதற்கு ஆணவம் நம்மைவிட்டு நீங்க வேண்டும். நாட்டுக்குள்ளும், நகரத்துக்குள்ளும் நாம் இருக்கும்போது, நான் இந்தக் கட்டடத்தைக் கட்டினேன்,

எங்கள் தாத்தா அந்த வயலைத் திருத்தினார் என்றுதான் சொல்லத் தோன்றும். காரணம், வீடு, வயல் எல்லாம் மனுஷனுடைய செயலால் விளைவது. வனத்துக்குள் போய்விட்டாலோ, ஓங்கி உயர்ந்த மரங்களைப் பார்க்கிறோம். பச்சையிலேயே 200 விதமான பச்சைகள். மனிதச் செயல் என்று சொல்லக்கூடிய பொருள் ஒன்றுமில்லை வனத்திலே. எல்லாம் இறைவனுடைய செயல் என்ற எண்ணம் வனத்தில் நமக்கு ஏற்படுகிறது. நம்முடைய ஆணவச் செயல் பம்முகிறது. இதைத்தான் கம்பர் சொன்னார்.

இப்படியாக டி.கே.சி. விளக்கும்போதுதான் ஒரு புதிய காட்சி நமக்குக் கிட்டுகிறது.

ஒரு நாள் ஆற்றங்கரைப் படுகையில் உட்கார்ந்திருந்தான் ராமன். அங்கே ஒரு காட்சி. அன்னம் ஒன்று வந்து ராமன் பக்கமாக அசைந்து அசைந்து போயிற்று. அந்த நடையைப் பார்த்த ராமன், தன்னை நோக்கி வந்துகொண்டு இருந்த சீதையின் குழைந்து நெளிந்து நடக்கும் நடையை உற்றுப்பார்த்து சிறியதொரு முறுவல் செய்தான். சீதை என்ன செய்தாள்? அங்கு வந்து தண்ணீரைக் குடித்துவிட்டுப் போய்க்கொண்டு இருந்த கம்பீரமான ஆண் யானை ஒன்றின் நடையை நோக்கிப் புதியதொரு முறுவல் பூத்தாள். இவ்வாறு பேசுகிறது ஒரு கம்பர் பாடல்:

ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன், உழையளாகும்
சீதை தன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவள் தானும், ஆண்டு வந்து நீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்

இதற்கு டி.கே.சி. கொடுக்கும் விளக்கம் இது:

'உலகத்தில் நமக்கு உவந்த பொருளின் செயல் எல்லாம் அழகாக இருக்கிறது. அந்தச் செயல்களோடு இசைந்து வேறொரு பொருளின் செயல் நிகழுமானால், அந்தச் செயலுக்குள்ளும் அழகு ஏறிவிடுகிறது. அதன் பிறகு மாறி, மாறி அழகு அந்தப் பொருட்களிடத்தில் பாய்கிறது. பெண்களின் நடை அழகாக இருக்கிற காரணத்தால், அதைப்போல நடக்கும் அன்னத்தின் நடையும் அழகாக இருக்கிறது. பிறகு, அன்னத்தின் நடையை மனதில் வைத்துக்கொண்டு, பெண்ணின் நடையைப் பார்ப்போமானால், முன் கண்ட அழகை விட அதிகமான அழகைப் பெண்ணின் நடையில் காண்கிறோம். இந்தவிதமாக அழகு மாறி மாறிப் பாய்ந்து பெண்ணின் நடையிலும், அன்னத்தின் நடையிலும் வளர்ந்தேறும் ரசத்தைப் பார்க்கிறோம். இது அழகு தத்துவத்தில் காணும் அரிய ஓர் உண்மை.'

இப்படியாக அழகு விளக்கம் கொடுத்து, கண்டறியாதனவற்றைக் காணச் செய்வார் ரசிகமணி.

6. டி.கே.சி. ஜாதகம்

முப்பது ஆண்டுகளுக்கு முன் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் ஒரு தேநீர் விருந்து நடந்தது. ஸ்காட்லேண்ட் தேசத்திலிருந்து வந்த பாதிரியார் ஒருவரை வரவேற்று உபசரிப்பதற்காக நடந்தது விருந்து. கல்லூரியின் பழைய மாணவரான டி.கே.சிதம்பரநாத முதலியாரையும் விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

காட்டுமிராண்டிகளாகிய இந்துக்களை எப்படியும் திருத்திவிட வேண்டும் என்று கச்சை கட்டிக்கொண்டு வந்தவர் பாதிரியார். அவரிடத்தில் டி.கே.சி-யை அறிமுகப்படுத்தினார்கள். உடனே துரை, டி.கே.சி-யைப் பார்த்து, ஏளன பாவத்தோடு பல கேள்விகளைச் சரமாரியாகப் பொழிந்தார். குறிப்பிடத்தக்க கேள்வி ஒன்று கீழ்க்காணுமாறு கேட்கப்பட்டது.

“ஸ்காட்லேண்ட் தேசத்திலுள்ள எங்களுக்கு மரங்கள் என்றால் ரொம்பப் பிரியம். இந்தியர்களாகிய உங்களுக்கு எப்படியோ?” என்று கேட்டார் பாதிரியார்.

இந்தக் கேள்விக்கு டி.கே.சி., “மரங்களிடத்தில் எங்களுக்குப் பிரியம் கிடையாது..! பக்தியே செலுத்துகிறோம்” என்றார்கள்.

“தமிழ் நாட்டில், ஒவ்வொரு கோயிலுக்கும் ஸ்தல விருட்சம் என்று ஒன்று இருக்கிறது. குற்றாலத்தில் பலா மரம்; திருநெல்வேலியில் மூங்கில் மரம்; திருப்பெருந்துறையில் குருந்த மரம்; இப்படியாக ஒவ்வொரு கோயிலுக்கும் மூலஸ்தானமாக அமைந்திருப்பது ஒரு மரந்தான். அந்த மரம் துளிர்ப்பதும், பூப்பதும், காய்ப்பதும், கனிவதும் கண்டு அதிசயித்தார்கள் எங்கள் முன்னோர்கள். ஒவ்வொரு மரத்துக்குள் இருக்கும் ரசாயன விந்தைகள், இன்ஜினீயரிங் ஜாலங்கள், சிற்ப மர்மங்கள் இவற்றைக் கண்டு அனுபவித்தார்கள்.

அதற்கு மேலே ஒவ்வொரு மரத்துக்குள்ளேயும் ஒரு ஞாபக சக்தியல்லவா இருக்கிறது! ஆயிரக்கணக்கான ஆலமரங்களைப் பார்த்துத்தான் இருக்கிறோம்; ஆனால், எந்த ஆலமரமாவது தப்பித் தவறி ஒரு பலாக்காயைக் காய்த்ததுண்டா! ரோஜா ஒன்றைப் பதியன் போடுகிறோம். நடும்போது அது ஒரு வெற்றுக் கம்பாகத்தான் இருக்கிறது. பிறகு அதற்குள்ளிருந்து அற்புதமான ஒரு ரோஜா மலர் வெளிவருகிறது. அந்த மலருக்கு ஒரு தனித் தன்மை, தனி வண்ணம், தனி மணம். எந்த ரோஜாச் செடியாவது ஞாபக மறதியால் ஒரு பிச்சிப் பூவைப் பூத்ததுண்டா?

இப்படியாகத் தாவர வர்க்கங்களுக்குள் அதிசயமான ஒரு ஞாபக சக்தியும் உயிர்த் தத்துவமும் இருந்துகொண்டு அவற்றை இயக்குவதை உணர்ந்தார்கள் தமிழர்கள். இவற்றை எல்லாம் பார்த்த பிறகு, மரத்துக்குள் அல்லவா இறைவன் இருந்து தொழிற் படுகிறான் என்று அறிந்தார்கள். ஆகவே, மரங்களுக்குக் கோயில் கட்டியே வணங்கி வருகிறோம் நாங்கள்" என்று டி.கே.சி. விளக்கம் கொடுத்தார்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் சென்னைக்கு வினோபா பாவே வந்திருந்தார். சத்தியத்தை நாடி, நாடி வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணம் செய்த மகான் வினோபா. டி.கே.சி-யோ பரிபூரண சௌந்தர்யம் எங்கெங்கே இருக்கிறதோ (பாதாளத்தில் இருந்தாலும் சரி) அங்கு எல்லாம் துணிச்சலோடு சென்று, அதை தரிசித்து ஆனந்தத்தில் திளைக்கும் அபூர்வப் பிறவி. காலஞ்சென்ற 'கல்கி' செய்த தீவிர முயற்சியின் பயனாக, டி.கே.சி-யும் வினோபாஜியும் சென்னையில் சந்தித்தார்கள் - சத்தியமும் சௌந்தர்யமும் சந்தித்ததுபோல.

கம்பர் எழுதிய இரண்யவதைப் படலத்தில், 'சாணினும் உளன்' என்று தொடங்கும் பாடலை எடுத்து ஒரு மணி நேரம் விளக்கினார் டி.கே.சி. 'கடவுள் இல்லை' என்று சொன்ன இரண்யனைப் பார்த்து மகன் பிரகலாதன் பேசுகிற கட்டம்.

"இறைவன் ஒரு சாண் இடத்திலும் இருக்கிறான். அணுவை நூறு பாகமாக வைத்த கோணிலும் (துகளிலும்) இருக்கிறான். மேரு மலையிலும் நிறைந்து இருக்கிறான். இதோ உன் பக்கத்தில் தூண் இருக்கிறதே, அதிலும் இருக்கிறான். 'கடவுளாவது, ஒன்றாவது' என்று நீ சொன்னாயே, அந்தச் சொல்லுக்குள்ளும் அவன் ஒளிந்து கொண்டு இருக்கிறான். 'இல்லை' என்று சொன்னது நீயா? இல்லை. இறைவன் உன் வேஷத்தில் நின்றுகொண்டு சொன்ன வார்த்தைதான். 'நீ' என்று ஒருவனே இல்லை" என்று பிறவி ஞானியான பிரகலாதன் சொன்னான்.

இதைக் கேட்டுக்கொண்டு இருந்த இரண்யன், "பலே, பலே! இந்தச் சின்னப் பயலுக்கு இவ்வளவு வேதாந்தமா?" என்று ஏளனத்தோடு சிரிக்கிறான். வருகிறது கம்பன் பாட்டு.

"சாணினும் உளன் ஓர் தன்மை அணுவினைச்
சத கூறு இட்ட கோணினும் உளன், மாமேருக்
குன்றிலும் உளன், இந்நின்ற தூணிலும் உளன், நீ சொன்ன
சொல்லினும் உளன்; இத்தன்மை
காணுதி விரைவின்" என்றான்–
நன்று எனக் கனகன் நக்கான்

இந்தப் பாட்டை டி.கே.சி. தமக்கே உரிய நாதத்தோடும் கம்பீரத்தோடும், சவுக்கத்தில் பாடி, வினோபாஜிக்கு விளக்கம் செய்தார்.

'நீ சொன்ன சொல்லினும் உளன்' என்ற வாக்கியத்தைக் கேட்ட மாத்திரத்தில் வினோபாஜி உருகிவிட்டார். "எல்லா இந்திய மொழிகளிலும் இரண்ய வதையைப்பற்றிப் பல கவிஞர்கள் பாடித்தான் இருக்கிறார்கள். ஆனால், கம்பனைப்போல், 'நீ சொன்ன சொல்லினும் உளன்' என்று இதர மொழிக் கவிஞன் ஒருவனாவது சொன்னது கிடையாது" என்று வெகுவாகப் பாராட்டினார் வினோபா பாவே. அதோடு நின்றுவிடவில்லை. கம்ப ராமாயணப் பிரதி ஒன்றை வாங்கிப்போய் அதை ஒழுங்காகவே படிக்கத் தொடங்கிவிட்டார் அவர்.

டி.கே.சி-யைச் சந்தித்து ஏழெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் சில தினங்களுக்கு முன் வினோபாஜி அந்தச் சந்திப்பைப் பற்றி ஓர் உருக்கமான கடிதம் (இந்தியில்) பின்வருமாறு எனக்கு எழுதியிருந்தார்:

'அன்று அவரைச் சந்தித்த சந்திப்பு என்னுடைய ஞாபகத்தில் மிக மிக அழுத்தமாகப் பதிந்து கிடக்கிறது. அதற்கு முன் டி.கே.சி-யை நான் பார்த்ததில்லை. ஆனால், அன்று அவர் மனந் திறந்து என்னோடு ஊடாடியபோது நீண்ட நெடுங்காலமாகப் பழகிவந்த நண்பர் அவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. வெளிப் பகட்டை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, கவிதையின் இதயத் துடிப்பை அப்படியே எடுத்துக் கூறக்கூடிய 'மர்மக்ஞ ரசிகர்' அவர். அவரைப் போன்ற ரசிகரைக் காண்பது அரிதினும் அரிது.'

இப்படியாக அன்னியர்கள்கூட தமிழ்க் கவிதையையும் பண்பாட்டையும் அறிந்து அனுபவிக்கும் முறையில் டி.கே.சி-யின் விளக்கம் அமைந்திருக்கும்.

சுமார் எட்டு வருடங்களுக்கு முன், டி.கே.சி-யும், கல்கியும், சதாசிவம் தம்பதியும் பம்பாய்க்குப் போயிருந்தார்கள். போனதும், சோபியா வாடியா (Madam Sophia Wadia) என்ற இலக்கிய மேதை டி.கே.சி-யைத் தன் வீட்டுக்கு அழைத்து விருந்தளித்து உபசரித்தார். அந்த அம்மாள் ஃபிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்தவர்; தமிழ் தெரியவே தெரியாது; ஆனாலும் பன்மொழிப் புலமை வாய்ந்தவர்; இலக்கியத்திலும், கவிதையிலும் சிறந்த பயிற்சியுடையவர்; இந்திய எழுத்தாளர் சங்கத்தின் தலைவர். அவருக்கு ரசிகமணி திருவாசகத்திலிருந்து ஒரு பாடலைப் பாடி, ஆங்கிலத்தில் பொருளை விளக்கினார்கள்.

"ஒரு குடத்தில் ஆற்றுத் தண்ணீரை எடுத்து, வீட்டுக்குக் கொண்டு வந்து, மச்சுப் படியேறி மாடிக்குக்கொண்டு போய்ச் சேர்ப்பதற்குள், அப்பாடி! திணறிப் போகிறோம் நாம். இந்தச் சின்னக் காரியத்தைச் செய்து முடிப்பதற்கு அவ்வளவு ஆற்றல் வேண்டி இருக்கிறது. நம்முடைய ஆற்றலை வைத்து, இறைவனுடைய ஆற்றலை அளந்து பார்த்தோமேயானால், அதை இப்படி, அப்படி என்று சொல்லி முடியாது. இந்து மகா சமுத்திரத்தில் உள்ள நீரை, ஆவியாக மாற்றி அதை வானத்தில் பத்து, இருபது மைல் உயரம் கொண்டுபோய், மேகமாகச் சேமித்துவைத்து, பருவ காலம் பார்த்து, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள, ரஷ்யாவில் மழையாகக் கொட்டுகிறான் இறைவன். கோடானுகோடி குடம் தண்ணீரை இப்படிச் சமுத்திரத்திலிருந்து தலை மேல் வைத்துத் தூக்கிப்போய் எவ்வளவு கருணையோடு உலகம் எல்லாம் செழிக்க மழையாகப் பொழிகிறான்!

இந்தச் சக்தியையும் கருணையையும் உணர்ந்து வியந்த நம் முன்னோர்கள், சிவன் தன் தலை மேல் கங்கையையே குடமாக வைத்து இருக்கிறான் என்று கற்பனை செய்து ரசித்தார்கள். 'அப்பார் சடையன்' என்றார்கள். 'அப்பு' என்றால், 'தண்ணீர்' என்று பொருள். அப்பார் சடையனைத் தஞ்சம் என்று நம்பி, எல்லாம் அவன் செயல். நமக்குச் செயல் என்பதே இல்லை என்று தெரிந்து, தம்மையே அவனிடத்தில் ஒப்படைத்துவிடுகிறார்கள் ஞானிகள். அதன் மூலம் கவலை எல்லாம் நீங்கி ஆனந்தத்தை அடைகிறார்கள். இப்பேர்ப்பட்ட ஞானிகளுடைய இதயத்தில் புகுந்து சம்மணம் போட்டு உட்கார்ந்துகொள்கிறான் இறைவன். அவ்வளவுக்கு எளியவன்தான் அவன். அண்டம் கடந்து அகண்டமும் கடந்து எங்கேயோ தூரத் தொலைவில் இருக்கிற பேர்வழியாகவும் அவன் இருக்கிறான். இந்த முரண்பாட்டு ரகசியத்தை மாணிக்கவாசகர் எடுத்துச் சொல்கிறார்.

அப்பார் சடையப்பன் ஆனந்த வார் கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலுக்கு அப்பாலைப் பாடுதுங் காண் அம்மானாய்.

இந்தப் பாடலை சோபியா வாடியாவுக்குப் பாடிக் காட்டினார்கள். பாட்டு முடிந்ததும், "சரி, போய் வருகிறேன்" என்று சொல்லி டி.கே.சி. எழுந்தார்கள்.

உடனே அந்த அம்மாள், "இன்னும் கொஞ்ச நேரம் தங்க வேண்டும். தாங்கள் சொன்ன பாட்டை இன்னும் ஒரு முறை பாடிக் காட்ட வேண்டும். கருத்தைக் கவனிக்காமல், பாட்டின் ஒலி இன்பத்தை மட்டும் நான் அனுபவித்துப் பார்க்க வேண்டும்"

என்று கேட்டுக்கொண்டார்கள். டி.கே.சி-க்கு ஒரே உற்சாகம் பிறந்துவிட்டது. மறுபடியும் அந்தப் பாட்டைப் பாடினார்கள்.

இதைக் கேட்டுக்கொண்டு இருந்த பரங்கி மாது, "தமிழ் மொழியில் ஓர் அபூர்வமான மந்திர சக்தி இருக்கிறது. பாட்டின் ஒலியைக் கேட்கும்போது எனக்கு ஓர் ஆனந்த மயக்கம் ஏற்படுகிறது" என்றார்.

ஃபிரான்ஸ் தேசத்துப் பெண்மணியின் வாக்குமூலம் டி.கே.சி-யின் அடிப்படைக் கொள்கையை வலியுறுத்தியது. தமிழ்க் கவிதையில் ஓர் அபூர்வமான தாள லயம் இருக்கிறது. கிரேக்க மொழியில்கூட இல்லாத நளினமும் துல்லியமும் தமிழ் மொழிக்கு இருக்கிறது என்று ஆங்கிலப் புலவர் வின்ஸ்லோ சொன்னாரே! அதை அடிக்கடி டி.கே.சி. சொல்லி வந்தார்கள். சோபியா வாடியாவின் வாக்கு இந்தக் கொள்கையை ஊர்ஜிதம் செய்தது.

பல நூற்றாண்டுகளுக்கு முன், சேரன் செங்குட்டுவன் இமயம் சென்று கல்லில் மீனைப் 'பொறித்து' வந்த வரலாற்றை மேடைப் பேச்சுகளில் அடிக்கடி கேட்டு வருகிறேன். மீன் பொறியலை எடுத்து எடுத்து புலவர் பெருமக்கள் பரிமாறுவதையும் "பார்த்தீர்களா தமிழன் வீரத்தை" என்று தொண்டை கிழியக் கத்துவதையும் பார்த்து அலுத்துவிட்டோம். மீனைப் பொறித்து வந்த காரணத்தால், தமிழன் வீரம் இமயத்தைத் தொட்டுவிடவில்லை.

சேரன் செங்குட்டுவனையும் மிஞ்சிய நிகழ்ச்சி ஒன்று சமீப காலத்தில் நடந்தது. புலவர் உலகம் அதை உணர்ந்து அனுபவித்ததாகவே தெரியவில்லை. பத்து வருடங்களுக்கு முன் குற்றாலக் குறவஞ்சி என்ற அரிய தமிழ் நூல் இந்து மகா சமுத்திரத்தையும், அட்லான்டிக் சமுத்திரத்தையும் தாண்டி அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகர நாடக மேடையில் அரங்கேற்றப்பட்டது.

அடையாறில் இருக்கும் திருமதி ருக்மணிதேவி கோஷ்டியார் நடன நாடகமாக அதை அரங்கேற்றியபோது ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் தமிழ் ஒலியையும், இசையையும், நாட்டியத்தையும், கவிதையையும் அனுபவித்து, 'ஒன்ஸ் மோர்' போட்டார்கள். இப்படியாகத் தமிழ்ப் பண்பாட்டையே அமெரிக்க மக்கள் உள்ளத்தில் பொறித்து வைத்துவிட்டு வந்து இருக்கிறார்கள் கலாக்ஷேத்திரக் கலைஞர்கள். இந்தப் படையெடுப்புக்கும், வெற்றிக்கும் மூல காரணமாக இருந்தவர் டி.கே.சி. அவர்களே.

1933-ல் சென்னையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்துக்குத் தலைவர் டி.கே.சி. பேசியவரோ டாக்டர்

அருண்டேல். அவர் சிறந்த அறிஞர்; பிரம்மஞான சபையின் தலைவர்; ருக்மணிதேவியின் கணவர்; ஆஸ்திரேலியாவில் பிறந்தவர். முதன்முதலாக அந்தக் கூட்டத்தில்தான் டி.கே.சி-யைச் சந்தித்தார் டாக்டர் அருண்டேல். அவர், டி.கே.சி. தமிழில் பேசிய முடிவுரையைக் கேட்டார். தமிழ் தெரியாதவராக இருந்தபோதிலும் டி.கே.சி. பேச்சில் இருந்த நயங்களை அருண்டேல் எப்படியோ கண்டுகொண்டார்.

கூட்டம் முடிந்ததும் அடையாறுக்குப் போய் தன் மனைவியாரிடத்தில் அவர், "டி.கே.சி. என்ற அபூர்வமான மனிதரை நான் இன்று சந்தித்தேன்; நீ அவரைக் கட்டாயம் சந்திக்க வேண்டும். இந்தியப் பண்பாட்டைப் பார்க்க வேண்டும் என்றால் டி.கே.சி-யைப் பார்த்தாலே போதும்" என்றார். இந்த சம்பவத்துக்குப் பின், டி.கே.சி-க்கும் அருண்டேல் தம்பதிக்கும் இடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

சில ஆண்டுகளுக்குப் பின் ருக்மணிதேவியும் டாக்டர் அருண்டேலும் குற்றாலத்துக்குச் சென்றார்கள். சாரல் காலம். திருவாங்கூர் மாளிகையின் முற்றத்தில் ஒரு மாமரத்தடியில் அமர்ந்து டி.கே.சி-யிடம் இருவரும் குற்றாலக் குறவஞ்சியை நாட்கணக்கில் கேட்டார்கள். பாடம் முடிந்ததும் சிருஷ்டி உற்சாகமே ஏற்பட்டுவிட்டது ருக்மணிதேவிக்கு. குறவஞ்சியை நடன நாடகமாக நடிக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்தார். அதன் பயனாக, தமிழ்ப் பண்பாட்டின் குரல் அமெரிக்காவையும் எட்டிவிட்டது.

"ருக்மணிதேவி தமிழர். அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது சாமானிய காரியம். ஆஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்த டாக்டர் அருண்டேல் பத்து நாட்களாக டி.கே.சி. பாடிக் காட்டிய குறவஞ்சியைத் தமிழ் தெரியாமலேயே எப்படி அனுபவித்தார்?" என்று கேட்கலாம். இதே கேள்வியை டி.கே.சி-யே டாக்டர் அருண்டேலிடம் கேட்டார்கள்.

"தமிழ் மொழி எனக்குத் தெரியாதுதான். அதனால் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நீங்கள் தமிழ்ப் பாடல்களைப் பாடும்போது உங்களுடைய இதயம் என்னுடைய இதயத்தோடு ஒட்டி எனக்குப் பொருளை விளக்கிவிடுகிறது. உங்கள் குரல் மூலமும், முகப் பொலிவின் மூலமும் கவிதையின் உட்பொருளை நான் கண்டு கொண்டேன்" என்று சொன்னார் டாக்டர் அருண்டேல்.

ஸ்காட்லேண்ட் தேசத்துப் பாதிரியாரும், வினோபா பாவேயும், சோபியா வாடியாவும், டாக்டர் அருண்டேலும் தமிழ் தெரியாத

அன்னியர்கள். ஆனாலும், டி.கே.சி-யின் இதய ஒலி அவர்களுடைய இதயத்தை எல்லாம் தொட்டுக் கரைத்துவிட்டது. தமிழ் தெரிந்த நம்முடைய தோற் செவிக்குள்ளேதான் அந்த ஒலி பிரவேசிக்க முடியவில்லை.

சில மாதங்களுக்கு முன் தமிழ்ப் பண்பாட்டைப்பற்றிப் புதுக்கோட்டை டவுன் ஹாலில் ஒரு புலவர் சிகாமணி மேடை மேலேறிப் பேசினார். பரீட்சை எழுதி டாக்டர் பட்டம் பெற்ற தமிழ்ப் புலவர் அவர்.

"டி.கே.சி. ஒழிந்துவிட்டார்; இனிமேல் தமிழ்ப் பண்பாட்டுக்கும் தமிழுக்கும் யோகம்தான்" என்று அவர் கர்ஜித்தார். புலவர் நல்லவர்தான்; ஆனால், உண்மைப் பண்பாட்டை அறிவது அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது அவருக்கு. தமிழின் அருமைப் பாடுகள் அவருக்கு எட்டாத வஸ்துக்களாகப் போய்விட்டன. டி.கே.சி. கொடுக்கும் விளக்கமோ அவருக்கு இருட்டடிப்பாகத் தெரிகிறது. டி.கே.சி. ஜாதகத்தில் இப்படி ஒரு கோளாறு விழுந்துவிட்டது.

தமிழின் ஆழமும், தமிழின் எளிமையும் ஒன்று சேர்ந்து சூழ்ச்சி செய்து, சில புலவர்களை வேண்டுமென்றே ஏமாற்றிக்கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. போதாக்குறைக்கு, இந்தச் சூழ்ச்சியில் சேர்ந்துகொண்டது டி.கே.சி-யின் ஜாதகம்.

இந்தச் சக்திக்கு முன் நாம் யார்?

7. ரச ஞானி டி.கே.சி.

கொறநாட்டுப் புடவையை வெறுங்கையாலேயே முழம் போட்டுவிடலாம். அது பருப் பொருளாக இருப்பதால் தொட்டுப் பார்த்தே, அதன் நீள அகலத்தை நிதானித்துவிடுவோம்.

மொச்சைக் கொட்டையை அளப்பதோ அதைக் காட்டிலும் எளிது. தடித் தடியாக அல்லவா இருக்கிறது அது? உரி, உழக்கு, நாழி, பட்டணம் பக்கா என்று எத்தனையோ கருவிகள் வைத்து இருக்கிறோம். அந்தக் கருவிகளைக்கொண்டு, மொச்சைக் கொட்டையை அளந்து, மூட்டை மூட்டையாகக் குவித்துத் தள்ளி விடுவோம்.

ஆனால், சூட்சுமமான பொருட்களை அளக்க வேண்டும் என்றால், கஷ்டப்படத்தான் செய்கிறோம். பண்பாடு, கலை,

தத்துவம் என்று சொன்னால் நமக்குத் திகைப்பு ஏற்பட்டு விடுகிறது. மொச்சைக் கொட்டை மாதிரி, அவை மசிவதில்லை. நம்முடைய கண்ணை உறுத்துவதில்லை. கலையை முழம் போடுவதற்கு நம்மிடம் அளவுகோல் இல்லை. தத்துவத்தையும், பண்பாட்டையும் அளக்கப் பட்டணம் படி கிடையாது. கலையிலுள்ள - சிறப்பாகத் தமிழ்க் கலையிலுள்ள - தெளிவும், ஆழமும் அவ்வளவு நுட்பமாக இருப்பதால் அது நம்மோடு கண்ணாம் பொத்தி விளையாடிவிடுகிறது. அதை இனம் கண்டுகொள்ள முடியவில்லை. படித்தவர்களுக்குக்கூட, கலைச் சுவை இன்னது என்று தெரியவில்லை; சுவையுள்ளது எது, சுவையற்றது எது என்று நிர்ணயம் பண்ணவும் முடியவில்லை.

கலையை அனுபவிப்பதற்கு, படிப்பு இருந்தால் போதாது! உள் உணர்வு வேண்டும். அதோடு, பரிவும் பவ்வியமும் வேண்டும். கலையுலகத்துக்குள் பிரவேசிக்க வேண்டும் என்றால், காலில் போட்டிருக்கும் செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு, 'நான்' என்ற திமிரைக் கொஞ்சம் பம்மவைத்துக்கொண்டு, மேல் வேட்டியை அரையில் கட்டிக்கொண்டு, வால் இருந்தால், வாலைச் சுருட்டி வைத்துக்கொண்டு, அதற்குப் பின் கலை வாசலுக்குள் எட்டி அடி வைக்கலாம்; அல்லாத பட்சம், கலை உலகம் வழி திறவாது.

இப்படி எல்லாம் நோன்பு இருந்து, மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டு, கலை உலகத்தினுள் புகுவோமேயானால், ஆணவம் அற்ற ஆனந்த நிலை நமக்குக் கிட்டும். இந்த அரிய உண்மையை நேரடியாக எடுத்துக் காட்டினார்கள் ரசிகமணி டி.கே.சி.

தேனுக்குள் விழுந்த வண்டு எப்படி மயங்கிக் கிடக்குமோ, அதைப்போல, தமிழ்ப் பாடல் ஒன்றில் டி.கே.சி. இறங்கி, அதில் முங்கி, மூழ்கி, மணிக்கணக்கில் அந்தப் பாடலோடு ஒன்றிக் கரைந்து நிற்பார்கள். அதோடு பாடலைக் கேட்டுக்கொண்டு இருக்கும் நம்மையும் அந்த அத்வைத நிலையில் இருத்தி வைக்கும் வல்லமையும் அவர்களிடம் இருந்தது.

டி.கே.சி-யே, "கலை என்றால் எப்படி இருக்க வேண்டும்? அது நம்முடைய உணர்ச்சித் தத்துவத்தில் போய்க் கலந்து, நம்மை வேறு வஸ்து ஆக்கிவிட வேண்டும். அதனால் நமக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டுகிறது. அதுதான் கலை." என்பார்.

கலையைச் சுவைப்பது எப்படி, சுவைத்துக் கணிப்பது எப்படி என்று தெரிந்துகொள்வதற்கு, ஒரு சுலபமான வழி இருக்கிறது. ரசிகமணியின் கையை இறுகப் பிடித்துக்கொண்டு, கலையுலகத்தை ஒரு சுற்று, சுற்றிவர வேண்டும். சுற்றி வரும்போது டி.கே.சி-யின் இதயத்தோடு ஒட்டி, நாமும் விஷயங்களை அனுபவிக்க வேண்டும். அவ்வளவுதான்! கலையைச் சுவைக்கும் முறை நமக்கு எளிதில் கைவந்துவிடும்!

முதன்முதலாக, டி.கே.சி-யோடு திருச்சியில் நடந்துகொண்டு இருக்கும் திருவள்ளுவர் கூட்டத்துக்குப் போவோம். கூட்டத்தில் எட்டுப் பேர் பேசுகிறார்கள். கெட்டிக்காரத்தனமாகவே பேசுகிறார்கள். என்ன இருந்தாலும், அவர்களில் ஒருவராவது நம்முடைய இதயத்தையோ, வள்ளுவருடைய இதயத்தையோ தொட்ட பாடாக இல்லை. காரணம் தெரியாமல், ரசிகமணியை ஜாடையாகப் பார்க்கிறோம். மீசையை ஒதுக்கிவிட்டுக்கொண்டே, காரணத்தை விளக்குகிறார் டி.கே.சி:

"ஒவ்வொருவருக்கும் திருவள்ளுவர் கெட்டிக்காரர் என்று பட்டது. ஏன்? தாங்கள் நினைத்திருந்ததை அவர் சொல்லிவிட்டாராம்! அப்படியானால், கெட்டிக்காரர் அல்லாமல் வேறு எப்படி இருக்கக்கூடும்? எந்த விதத்திலோ, அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது - திருவள்ளுவர் மேல் அல்ல. தங்கள் மேல்தான்."

டி.கே.சி-யின் விளக்கம், பேச்சாளர்களுடைய குறையை எடுத்துக் காட்டிவிட்டது. தன் மரியாதை மிதமிஞ்சிப் போய்விட்டபடியால், அவர்களால் வள்ளுவருக்கு மரியாதை காட்ட முடியவில்லை. ஆகவே, அவர்களுடைய வாய் வீச்சுக்கு எல்லாம் தப்பி ஓடி ஒளிந்துகொள்கிறார் வள்ளுவர்.

அரிஸ்டாட்டில், ப்ளேட்டோ என்று கத்திக்கொண்டு, ஒன்பதாவது பிரசங்கி மேடைமேல் ஏறிப் பேச ஆரம்பித்து விட்டார்.

அவரும் வள்ளுவரைப்பற்றிப் பேசுவதாக ஐதிகம். ஆனால், வள்ளுவரைத் தவிர மற்ற ஆசிரியர்கள்தான் அவர் பேச்சில் அடிக்கு ஒரு தரம் தலையைக் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். வள்ளுவரைப்பற்றிப் பேச்சாளருக்குக் கவலை இல்லை. தான் படித்த அபத்தப் படிப்பை எல்லாம் மாட்டித் தொங்கவிடுவதற்கு ஏற்ற 'கோட் ஸ்டாண்ட்' என்று குறளாசிரியரை அவர் கருதி விடுகிறார். ஆகவே, மேற்கோள் அருவி திம் திம் என்று குதித்து, குறளையும் வள்ளுவரையும் ஒரே அமுக்காக அமுக்கிவிடுகிறது.

ஒரு குறளையாவது வாழ்க்கையோடு பொருத்தி அனுபவித்து விட்டால், அதை அழகாகவும் உணர்ச்சியோடும் மற்றவர்களுக்கு விநியோகம் செய்துவிடலாம். அப்படி அனுபவிக்காதவர்கள், இரவல் சரக்கை (மேற்கோளை) விலைக்கு விற்க வேண்டி இருக்கிறது. மேற்கோள் 'நயகரா'வின் கையில் அகப்பட்டுக் கதி கலங்கி நிற்கும் நம்மைப் பார்த்து, டி.கே.சி. உபதேசம் செய்கிறார்கள்.

"பூரணமான இதர ஆசிரியர்களைப்பற்றிப் பேசக் கூடாது என்று நான் சொல்லவில்லை. நானே அடிக்கடி ஆங்கில, இத்தாலிய

நிபுணர்களை வரவழைக்கத்தான் செய்கிறேன்; விருந்தாளியாக அல்ல. பெட்டியில் போட்டு வாக்குமூலத்தை வாங்கிக்கொள்ளத் தான்; வேறொன்றுக்கும் அல்ல." ஓர் உண்மையைத் தெளிவுபடுத்திக் கொண்டு இருக்கும்போது அதற்கு ஊர்ஜிதம் கொடுப்பதற்காக வேறு போக்கு இல்லை என்றால், மேற்கோளைக் கையாளலாம் என்று தெரிந்துகொண்டோம்.

இனி, திருச்சியிலிருந்து புறப்பட்டு, ரசிகமணியின் கையைப் பிடித்துக்கொண்டே திருவாரூருக்குப் போவோம். அங்கே தமிழ் வளர்ச்சிக் கழக விழா அலங்காரமாகவும், ஆரவாரத்தோடும் நடக்கிறது. 'காந்திக்கு ஜே!' என்று பலர் கத்திக்கொண்டு இருக்கிறார்கள். இதை எல்லாம் கேட்ட நமக்கு, "அடே, தமிழ் வளர்ந்துவிட்டதே" என்ற மயக்கம் ஏற்படுகிறது.

ஆனால், பக்கத்தில் இருக்கும் டி.கே.சி., "இதெல்லாம் தமிழ் வளர்ச்சி என்று நினைத்துவிடாதே" என்று எச்சரிக்கை செய்கிறார்கள். இங்கே நடக்கும் பேச்சுக்களைப்பற்றிய டி.கே.சி. விமர்சனம் கீழ்க்காணும்படி:

"டாக்டர் கிருஷ்ணன் பெரிய நிபுணர். பூமி பிறந்த காலம், சூரியன் பிறந்த காலம் என்ற விஷயமாக உள்ள சில கணக்குகளைத் தமிழில் எடுத்து விளக்கினார். இது எப்படித் தமிழை வளர்த்ததாகும்? ஸ்ரீவில்லிபுத்தூர்க்காரன் ஒருவன் மதுரைக்கு வழி இன்னது என்று எடுத்துச் சொல்லிவிட்டால், தமிழ். ஆகா! வளர்ந்துவிட்டது. 'ஹே, ஹா, ஹோ' என்று கத்த வேண்டியதுண்டா?

ஆர்.கே.சண்முகம் செட்டியாரும், நம் நாட்டுக்கும், இதர நாடுகளுக்கும் உள்ள பொருளாதார விஷயங்களைத் தெளிவாக எடுத்து விளக்கினார். எதில்? தமிழில். அது காரணமாகத் தமிழ் வளர்ந்துவிட்டது என்று சொல்ல வேண்டியதுண்டோ?

இந்த விஷயங்களுக்குத் தமிழ் உபயோகப்படாமல் இருந்தால், அது ஒரு மொழி ஆகுமா? ஆனால், ஒன்று. தமிழ் வித்வான்கள் எந்த விஷயத்தையுமே தமிழில் விளக்க முடியாதுதான். இடைப் பிற வரல், சிலேடை, மடக்கு ஆகிய பல அசந்தர்ப்பங்கள் வந்து விழுந்து விஷயத்தைக் குழப்பிவிடும்.

'கல்கி' அவர்கள் பேசிய வந்தனோபசாரம், அபாரமாக, ரசமாக, கேட்போர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டதாக இருந்தது - தமிழ் வளர்ந்துவிட்டது."

தமிழ் வளர வேண்டும் என்றால், விஷயத்தைத் தெளிவாகச் சொன்னால் மாத்திரம் போதாது. உணர்ச்சியோடும், அபிநயத்தோடும் தமிழ் மொழி சல்லாபம் செய்ய வேண்டும் என்று டி.கே.சி. பேச்சிலிருந்து தெரிந்துகொண்டோம்.

திருவாரூரிலிருந்து தேரழுந்தூர் வெகு தூரம் அல்ல. அங்கே நடக்கும் கம்பர் விழாவுக்குப் போகிறோம். 'கம்பர் மேட்டி'லிருந்து கவிதையை விளக்கிக்கொண்டு இருக்கிறார் ஒரு பேச்சாளர். கவிதை என்றால் ஒரு பொல்லாத காரியம். அதை விளக்குவதற்கு அபாரமான உள்ளுணர்வும், சொல்லாற்றலும் வேண்டும். இவருக்கோ இரண்டும் பூஜ்யம். ஆனால், ரொம்ப ரொம்பப் படித்தவர். ஆகவே, கவிதை உலகத்துக்குள் புகுந்து, ஒரு கலக்கு, கலக்கிக்கொண்டு இருக்கிறார் - எருமை மாடு குட்டையைக் கலக்கின கணக்கில். பேச்சைக் கேட்டுக்கொண்டு இருந்த ரசிகமணி நம்மிடம், "இவரிடம் அமிர்தத்தையே கொடுங்களேன்; ஒரு நிமிஷத்தில் அதை அப்படியே விளக்கெண்ணெய் ஆக்கிவிடுவார்" என்று சொல்கிறார்கள்.

இப்படிக் கவிதையைத் தொட்டுக் கரியாக்கிவிட்டு இவர் போய் விடுகிறார். அடுத்தாற்போல் வந்த பேச்சாளர், உப்புச்சப்பில்லாத ஒரு விருதாப் பாட்டைக் கவிதை என்று சொல்லிக் கூத்தாடுகிறார். "வெண்ணெய் தின்கிறோம், வெண்ணெய் தின்கிறோம்" என்று சொல்லிக்கொண்டே களி மண்ணை உருட்டி உருட்டித் தன் வாயில் போட்டுக்கொள்கிறார். 'பெரு மக்கள்' வாயிலிலும் திணிக்கப் பார்க்கிறார். இவரைப் பார்த்து இரக்கமே வந்துவிடுகிறது டி.கே.சி-க்கு. "கருப்பஞ் சாறு ஆறாக ஓடிக்கொண்டு இருக்கும்போது, சோளத் தட்டையைக் கடித்துச் சுவைக்கிறார்களே!" என்று ஆற்றாமைப்படுகிறார்கள்.

இதற்குள்ளாக அடுத்த கம்ப ராமாயணப் பிரசங்கி மேடையேறி விட்டார். கம்பர் எழுதாத பாட்டின் ஓர் அடியை எடுத்துக்கொண்டு, தனக்குத் தெரியாத பொருளைத் தெரிந்த பாவனையில் அவர் விஸ்தரித்துக்கொண்டு இருக்கிறார்: 'பேரன்புமிக்கப் பெரு மக்களோ' கொட்டாவிவிட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

ரசிகமணி பிரசங்கியை ஏற, இறங்கப் பார்த்து, "ஐயா! கம்பனுக்குக் கிரீடம் சூட்டுவதாகச் சொல்லிக்கொண்டு, அவன் தலையில் வைக்கோல் புரியை அல்லவா வளைய வளையச் சுற்றுகிறீர்கள்!"

இனி, வைக்கோலையும், சோளத் தட்டைகளையும் தாண்டி நாம் சென்னைக்கு ரயில் ஏறுகிறோம். போகிற வழி எல்லாம், விழாவைப்பற்றிய பேச்சுத்தான். ராமாயணப் பிரசங்கம் நடந்த போது, கூட்டத்தில் இருந்த ராமாயண விரோதி ஒருவர், "சூர்ப்பணகை மூக்கை அரிந்தது அக்கிரமம்" என்று கூப்பாடு போட்டாரே, அவரைப்பற்றிப் பேச்சு வருகிறது. அவர் சூர்ப்பணகைக்கு வக்காலத்து வாங்கியதற்குக் காரணம் என்ன? அரசியல் துவேஷம் காரணமாக கம்ப ராமாயணப் பாத்திரங்களைப் பரிவோடு அனுபவிக்க முடியவில்லை அவருக்கு.

பரிவில்லை என்றால், கம்பனுடைய அற்புத சிருஷ்டிகளை அனுபவிக்க முடியாது. போதாக்குறைக்கு, அரசியல் துவேஷமும் சேர்ந்துவிட்டால், கவிச் சக்கரவர்த்தியின் சந்நிதானத்தை மலைபோல் நின்று, அது மறைந்துவிடுகிறது. அந்த ஆசாமி பேச்சை எடுத்தவுடனேயே டி.கே.சி-யின் மீசை துடிக்கிறது. அவரை முன்னிலைப்படுத்திக்கொண்டு, "ஏலே! சூர்ப்பணகை உங்கள் அக்காளோலே?" என்று திருநெல்வேலிப் பச்சைத் தமிழில் ஒரு போடு, போடுகிறார்கள்.

இதற்குள் நம் ரயில் வண்டி சென்னை வந்து சேர்ந்துவிட்டது. கலையைப்பற்றியும், கவிதையைப்பற்றியும், டி.கே.சி-யோடு பேசிக்கொண்டு இருக்கும்போது நேரம் போவதே தெரியாது. வெள்ளித் தண்டவாளத்தில், தங்கச் சக்கரம் பூண்டு, நேரம் ஓடிக் கொண்டு இருக்கும். கலையுலகத்தில் ஓர் உண்மையோடு நாம் ஒட்டி நிற்கும்போது காலம், இடம் என்ற தத்துவங்கள் அடங்கி ஒடுங்கி, இல்லாமலேயே போய்விடுகின்றன.

பெரும்பாலும் நம்முடைய பேச்சாளர்களுக்கு ஒரு நிமிஷத்துக்கு மேல் ஓர் உண்மையோடு ஒட்டி நிற்க முடியாது. மர நடு விழாவில் பேசச் சொன்னால், சங்க இலக்கியத்தைப்பற்றிப் பேசுவார்கள். கவிதையைப்பற்றிப் பேசச் சொன்னால் உணவு உற்பத்தியைப்பற்றியே பேசுவார்கள். சென்னையில் நடந்துகொண்டு இருக்கும் தமிழ்த் திருநாளில்கூட, அனேகமாக அப்படித்தான். விதிவிலக்காக டி.கே.சி-யும் இரண்டொருவரும் தமிழ்க் கவியைப்பற்றிப் பேசுகிறார்கள். "இப்படியும் விதிவிலக்காக நீங்கள் அமையலாமா?" என்று கேட்கிறோம்.

சிரிப்போடு வருகிறது டி.கே.சி.யின் பதில்: "ஆம்! கவியைப் பற்றித்தான் பேசினேன். தமிழ்த் திருநாளில் அதுதானே செய்ய வேண்டும். உணவைப் பெருக்க வேண்டும் என்ற வெற்றுரைக்கும், தமிழ்ப் புலவருக்கும் என்ன சம்பந்தமோ? 'டிராக்டர்கள்' முதலிய எந்திரங்களைத் தமிழ்த் திருநாளில் செய்துகொண்டு இருக்கவா வேண்டும்? அமெரிக்காவில், ஆங்கில பாஷையையும் அதன் இனிமையைப்பற்றியும் பேசக் கூடினால், விவசாய எந்திரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டா இருப்பார்கள்? அவற்றைப்பற்றிப் பேச மாட்டார்கள். அவற்றை வெளியிலே (நாட்டில்தான்) செய்து கொண்டு இருப்பார்கள். நம்முடையவன் காரியம் எப்படி இருக்கிறது என்றால், விவசாயத்தைப்பற்றியும், 'புல்டோசரை'ப் பற்றியும் ஆலோசிக்கக் கூடினால், புறநானூற்றையும், தொல் காப்பியத்தின் பொருளதிகாரத்தைப்பற்றியும் பேசித் தொலைப்பான். அண்டாவில் விறகைப் போட்டு, நெருப்பை மூட்டுவான். அடுப்பில், தண்ணீரையும் அரிசியையும் கொட்டுவான்."

சென்னையிலிருந்து தென்காசிக்குப் போகிறோம். திருவள்ளுவர் கழகத்தின் ஆண்டு விழா அங்கே விமரிசையாக நடந்துகொண்டு இருக்கிறது. கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான பெண்டிரும், ஆடவர்களும் வந்து இருக்கிறார்கள். பொதுவாகப் பேச்சுகள் இங்கே ரசமாகவே இருக்கும்.

ஆனால், நாம் போகும் தருணத்தில் ஓயா மொழிப் புலவர் ஒருவர் மணிக்கணக்கில் பேசிக்கொண்டு இருக்கிறார். பேச்சு இப்படி நீண்டுகொண்டே போகிறதே என்று செயலாளரை நாம் முறைத்துப் பார்க்கிறோம். அவர் என்ன செய்வார்! புலவர், 'மூன்று மணி நேரத்துக்குக் குறைந்து என்னால் பேச முடியாது' என்று கடிதமே எழுதிவிட்டாராம். இதைக் கேட்டுக்கொண்டு இருந்த டி.கே.சி. நம்மிடம் சொல்கிறார்கள்:

"ஆமாம். உமியும், மணலும், குப்பையுமாக அவ்வளவு தலைக்குள் குவிந்திருக்கும்போது என்ன செய்வார்? அப்பாவி, ஊருக்கு எளியவன் பிள்ளையார் கோயில் ஆண்டி, தென்காசிக்காரன் என்று கண்டு, அவ்வளவையும் அவன் தலையில் கொட்டுகிறார். கொட்டியது ஒரு வருடத்துக்குப் போதும்."

ஓயா மொழிப் புலவர் ஓய்ந்து, அடுத்த பேச்சாளர் பேச ஆரம்பிக்கிறார். 'அப்பாடா!' என்று சபையோர் பெருமூச்சுவிட்டு, விடாயாற்றிக்கொள்கிறார்கள். புதிதாக வந்தவராவது புதிதாக ஏதாவது சொல்ல மாட்டாரா என்று ஏங்கிக்கொண்டு இருக்கிறோம். அவரோ பழையவர் சொன்ன குறளையே எடுத்துப் பிய்த்துப் பிய்த்து, துவையல் அரைத்துக்கொண்டு இருக்கிறார். இந்த அலங்கோலத்தைப்பற்றிக் கீழ்க்காணும்படி டி.கே.சி. விமர்சனம் செய்கிறார்கள்.

"திருவள்ளுவர் பட்ட பாட்டை இன்னது என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவரும் குத்தின இடத்திலேயே குத்திக் குத்திச் சித்திரவதை செய்துவிட்டார்கள்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை

இந்தக் குறளைப் பாடிய முகூர்த்தம், அடடா, ரொம்ப ரொம்பப் பொல்லாத முகூர்த்தம். தெய்வம் பட்ட பாட்டையும் கொழுநன் பட்ட பாட்டையும், இருவரையும்விட, புத்தி கெட்டுப்போய்த் தொழுதாளே, அந்த அம்மாள் பட்ட பாட்டையும், எல்லோரையும் விட, வள்ளுவர் பட்ட பாட்டையும் லேசில் சொல்லிவிட முடியாது. இதிகாசந்தான் எழுத வேண்டும். தென்காசிக்காரனும், தென்காசிக்காரியும் பிழைத்தோம் பிழைத்தோம் என்று வீடு

போய்ச் சேர்ந்தார்கள். இன்னும் ஒரு வருடத்துக்குத் திருவள்ளுவர் சங்கத்து ஆண்டு விழா கிடையாது. சுபம்."

இனி, டி.கே.சி-யின் இருக்கையாகிய திருக்குற்றாலத்துக்குப் போவோம். ஐந்தருவிச் சாலையில் முதலில் இருப்பது டி.கே.சி-யின் இல்லம். 'அடையா நெடுங் கத'வை உடைய இல்லம். அறுசுவை உண்டி அருந்திவிட்டு ரசிகர் குழாம் ரசிகமணியைச் சுற்றி மொய்த்துக்கொண்டு இருக்கிறது. சாய்வு நாற்காலியில், தூய வெள்ளை ஆடை உடுத்தி, அமர்ந்து இருக்கிற டி.கே.சி. தமிழ்ப் பண்பாட்டின் நயங்களை எடுத்துச் சொல்லி, நம்மைப் பரவசப் படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

. அதோ இருக்கிற நடராஜ விக்கிரகத்தைப்பற்றிப் பேச்சு நடந்து கொண்டு இருக்கிறது. அந்த அழகின் பல கட்டங்களையும் உணர்ந்து அனுபவிக்க, 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்ற பாட்டைப் பாடிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில், அசட்டுத்தனமாக ஒருவர் குறுக்கிட்டு, "இந்தச் சிலை கல்கண்டினால் செய்ததல்லவா? இதைத் தின்று பார்த்தால் இனிப்பாக இருக்குமே" என்று சொல்கிறார். இந்த விரசப் பேச்சைக் கேட்டவுடனே, தன்னை மறந்த லயத்தில் இருக்கும் டி.கே.சி. நிஷ்டையைக் கலைத்துவிட்டு, முகத்தைச் சுளிக்கிறார்கள்.

கல்கண்டு என்ற நினைப்பும், அதைத் தின்று பார்க்க வேண்டுமே என்ற துடிப்பும், சுயநலத்தோடும், ஆணவத்தோடும் கலந்த காரியங்கள். அப்பேர்ப்பட்ட நினைப்புக்கள் குறுக்கிட்ட மாத்திரத்திலேயே, நாம் கலையுலகத்தின் உன்னதத்திலிருந்து மண்ணுலகத்தின் படுகுழிக்குள் விழுந்துவிடுகிறோம்; ஆனந்தம் கெட்டு, ஆணவம்தான் மிஞ்சுகிறது. இதையே நவம் நவமான கோணங்களிலிருந்து கண்டிக்கிறது டி.கே.சி-யின் குரல்.

ஒருமுறை சுற்றுப் பிரயாணம் செய்தபோது, டி.கே.சி-யின் வெள்ளி டம்ளர் ஒன்று காணாமல் போய்விட்டது. தேடித் தேடிப் பார்த்தும் காணவில்லை. இதனால் மனதுக்குக் கொஞ்சம் கஷ்டம் தான். சில நாட்கள் கழித்து அந்த வெள்ளி டம்ளரைக் கண்டுபிடித்து ஒரு நண்பர் டி.கே.சி-யிடமே ஒப்படைத்து விடுகிறார். காணாமல் போன பொருள் கிடைத்துவிட்டதே என்று டி.கே.சி-க்கு மிக்க மகிழ்ச்சி. ரூபாய், அணா, பைசாக் கணக்கில் அந்த உணர்ச்சியை அவர்கள் மதிக்கவில்லை. அப்படி மதித்தால் அதில் கலைப் பாங்கு இருக்க முடியாது. சுயநலம்தான் இருக்கும்; டி.கே.சி-யும் டி.கே.சி-யாக இருக்க மாட்டார்கள். எந்த அளவுகோலைக்கொண்டு அந்த மகிழ்ச்சியை அளக்கிறார்கள் என்று பார்ப்போம்:

"வெள்ளி டம்ளர் கிடைத்துவிட்டது. காணாமல் போன டம்ளர் கைக்கு வந்துவிட்டதே! பொருள் அல்ல விஷயம். கைக்கு வந்துவிட்டதே, அதுதான் விஷயம்" என்று சொல்கிறார்கள் ரசிகமணி.

சுயநலத்தில் இருக்கும் நாம், வெள்ளி டம்ளர் எத்தனை ரூபாய் எடை இருக்கும்? அது காணாமல் போனதால் எத்தனை ரூபாய் நஷ்டம்? அது திரும்பக் கிடைத்ததால், நமக்கு எத்தனை ரூபாய் லாபம் என்ற தோரணையில் கணக்குப் போட்டுப் பார்க்கிறோம். ஆனால், ரசிகமணியின் பேரேட்டில் பற்று, வரவு மதிப்பே அலாதி. காணாமல் போனது வெள்ளியாக இருந்தால் என்ன, மண்ணாங்கட்டியாய் இருந்தால் என்ன. அது திரும்பக் கிடைக்கும்போது ஏற்பட்ட உணர்ச்சி இருக்கிறதே! அதுதான் மதிக்கத்தக்கது. டம்ளரைத் திரும்பவும் இழக்கலாம். ஆனால், திரும்பக் கிடைத்தபோது இருக்கும் உணர்ச்சியை இழக்க வேண்டியது இல்லையே. அது போதும்.

வெள்ளி டம்ளர் இருக்கட்டும். அழகிலும் அறிவிலும் சிறந்த தம் அருமை மகனை - ஒரே மகனை - டி.கே.சி. இழந்தார்கள். ஆணவ உலகத்தில் இருந்த டி.கே.சி-க்கு எல்லை இல்லாத துயரம் ஏற்பட்டது. செல்லையாவோடு (டி.கே.சி-யின் மகன்) நெருங்கிப் பழகிய கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தம் துயரத்தை ஒரு வெண்பாவில் வடித்து, அதை டி.கே.சி-க்கே அனுப்பினார்கள்.

சிந்தை குளிரச் சிரித்து ஒளிரும் நின் முகத்தை
எந்த நாள் காண்பேன் இனி?

-என்று முடிந்தது அந்த வெண்பா. வெண்பாவைப் பார்த்த டி.கே.சி. சோகத்தால் மூர்ச்சையாகி விழவில்லை. வெண்பா கிடைப்பதற்கு முன்னால், சோகத்தால் மொத்துண்டு இருந்த டி.கே.சி. வெண்பாவைப் பார்த்த பிறகு, தன்னை மறந்த ஓர் ஆனந்த சமாதிக்குள் புகுந்துவிடுகிறார்கள். பாடலைப் பாடிப் பாடித் திளைக்கிறார்கள்.

"இப்படியும் ஓர் அற்புதமான கவி தமிழுக்குக் கிடைக்குமானால், உயிரைக் கொடுத்துக்கூட அதை வாங்கலாம்" என்று சொல்லி வியக்கிறார்கள்.

மறுபடியும் பாடலைச் சவுக்கத்தில் பாடுகிறார்கள். இந்த சுகானந்த நிலையில், தந்தை - மகன் என்ற உறவு ஒழிந்தது. காலம் - இடம் என்ற கல்கோட்டை தகர்ந்தது. டி.கே.சி. என்ற மானிடன் இறந்தான் - டி.கே.சி. என்ற ரச ஞானி பிறந்ததால்!

8. கடித இலக்கியம்

ரசிகமணி மாணவனாக இருந்த காலம் சுமார் 55 ஆண்டுகளுக்கு முன். அந்தக் காலத்துத் தமிழ் வசன நடை, ரொம்பப் படித்தவர்கள் கையில் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டு இருந்தது. நாவல் ஆசிரியர்கள்கூட நவ நாகரிகக் காட்சிகளை 2,000 ஆண்டுகளுக்கு முன் இருந்த, வழக்கு ஒழிந்த தமிழ்ச் சொல்லில் வர்ணித்துக்கொண்டு இருந்தார்கள்.

தங்கசாலை வீதியில் நடக்கும் காதல் காட்சியை, சங்க இலக்கியத்தைக் கரைத்துக் குடித்த முது பெரும் புலவர் ஒருவர், கீழ்க்காணும்படி வர்ணிக்கிறார்:

'அவ் வீட்டின் மாடத்தும்பர், ஓர் அறையின் கண்ணேயின்னிசைப் பாட்டும், மன்னிசைக் கவ்வியும் வல்லளாய், எழிலும் குணமுமியைந்த பூங்கொம்பராய் மிளர் தரும் ஓர் இளம் பருவத்துப் பெண் தனது வார் குழல் கோதி முடித்துக்கொண்டு நின்றாள். அப்போழ்து, கரிய மாலனைய காளையொருவன் அவட்குப் பின்புறல் போந்து, அவடன் விழிகளிரண்டையும் தன்னிருகையாலிறுகப் புதைத்துக் கொண்டு நின்றான். அன்னணம் ஒருவன் கண் புதைத்த துணர்த்த அந்நங்கை, 'நீ என்னைத் தொடற்பாலையல்லை' என்றனள்.'

இப்பேர்ப்பட்ட கரடுமுரடான, விறைத்துப் போன பாஷையில் நாடோடி சம்பவங்களைத் தமிழ் ஆசிரியர்கள் விஸ்தரித்து வந்தார்கள். பிரமாண்டமான சர்க்கஸ் யானை, ஐம்பொறிகளையும் அடக்கி, ஒருமுகப்படுத்திக் கீழே கிடைக்கும் பட்டாணிக் கடலையை எடுப்பதில் முக்கி, முனைந்து எப்படித் திக்குமுக்காடுமோ அப்படி அவஸ்தைப்பட்டார்கள் அந்தக் காலத்துக் தமிழ் எழுத்தாளர்கள். கருத்துக்கு ஒவ்வாத வார்த்தைப் படாடோபமும், திருகுமுறுகலும், சுவையற்ற கோணல் தமிழும் புலமை வேஷம் போட்டுக்கொண்டு நடமாடிய காலம் அது.

அந்தக் காலத்தில் பள்ளி மாணவனாக இருந்த ரசிகமணிக்கு இந்தக் கொடுங்கோன்மை எல்லாம் தாங்க முடியவில்லை. உரை நடை எப்படி இருக்க வேண்டும் என்ற ஆராய்ச்சியில் இறங்கி, சில முடிவுகளுக்கு வந்தார்கள். எடுத்துக்கொண்ட விஷயத்தை உண்மையோடும் நேருக்கு நேர் சொல்லவும் கற்றுக்கொள்ள வேண்டும். கருத்தும் சொல்லும் சுகமாகக் கலந்து கைகோத்து நடக்க வேண்டும். அடுப்பங்கரையில் பெண்கள் பேசுகிற தமிழில் எவ்வளவு ஆற்றலும் உணர்ச்சியும் இருக்கின்றன. நாட்டுப்புறத்தில் பட்டிக்காட்டான் பேசுகிற தமிழில் வகை வகையான சுவை

இருக்கிறதே. விஷயத்தைக் குறி பார்த்து அடித்த மாதிரி அல்லவா அவன் சொல்லிவிடுகிறான்? இதை எல்லாம் சிரத்தையோடு தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்து கொச்சையை அகற்றிவிட்டு, நாடோடித் தமிழில் உள்ள ரசத்தைப் பிழிந்து தமிழ் வசனத்தில் பெய்துவிட வேண்டும். அப்போதுதான் தமிழ் எழுத்துக்கு வல்லமையும். வளமும் ஏற்படும் என்று டி.கே.சி. வற்புறுத்தி வந்தார். பேச்சுத் தமிழின் வளைவு, நெளிவுகளோடும், பம்மல் பாய்ச்சல்களோடும் பழகினால்தான் ஓர் எழுத்தாளனுடைய தனித்துவம், அவனுக்கே உரிய நடையில் வெளிப்படும். நடை என்றால் என்ன என்பதை அபூர்வமான தெளிவோடும் அதிகாரத்தோடும் ரசிகமணியின் கடிதம் கீழ்க்காணும்படி விளக்குகிறது.

'ஆங்கில ஆசிரியர்கள் 'ஸ்டைலை'ப்பற்றி என்னவெல்லாமோ எழுதுகிறார்கள். எழுத்தில் முக்கியமான காரியம் அதுதான் என்று சொல்வார்கள். ஆனால், அது எளிதில் அமைகிறதில்லை என்றும் சொல்வார்கள். ஆங்கில ஆசிரியர்களது ஸ்டைல், 'இன்னது. இப்படி இருக்கிறது' என்றும் நமக்கு எளிதில் தெரிகிறதில்லை. இருட்டுக்குள் ஆளை இனங் காணுகிற கணக்கில்தான் ஏதோ தெரிகிறது.

ஆனால், தமிழுக்கு வந்தால் (பண்டித உலகத்தைவிட்டு வெளியேதான்) இன்னது ஸ்டைல் என்று லகுவாகத் தெரிகிறது. ஏன், அன்னம்மாள் தங்கம்மாளுக்கு எழுதிய கடிதத்தில் அவளுடைய தனித்துவம் வெகு ஜோராகத் துள்ளி ஓடுகிறது. கருத்தும் சொல்லும் சுகமாகக் கலந்து கை கோத்து நடக்கின்றன. பெண் குழந்தைகளைப் பார்த்து நாம் பயப்பட வேண்டியதாகத்தான் இருக்கிறது.

கவி என்பதற்கு வந்தால் கம்பரிடத்தில்தான் ஸ்டைல் என்று சொல்ல வேண்டி இருக்கிறது. தற்காலத்துக் கவியில் தேசிக விநாயகம் பிள்ளையின் கவியில்தான் ஸ்டைல் இருக்கிறது. கவியில் அவர்களது எளிய தூய உள்ளம் பளிங்கில் வைத்த மாதிரி தெரிகிறது. ஆனாலும் இந்த ஸ்டைலில் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது எழுதுகிறவர்க்கு அது தெரியாது என்று சொல்லலாம். ஏனென்றால் அவருக்கே தெரியாமல் அனாயாசமாக வருவது அது. நாம் தெருவில் நடந்து போகிறோம் (மிலிட்டரி மார்ச் அல்ல). இயல்பாக நடக்கிறோம். அந்த நடையில் நூற்றுக்கணக்கான அம்சங்கள் இருக்கின்றன. ஏன் இருக்காது? உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை எத்தனையோ எலும்புக் கட்டுகள், தசைகள், நரம்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு கணக்குப்படி இசைந்து வேலை செய்கின்றன. நாம் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லலாம்.

ஆனால், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் நடையின் தனிப் பண்பை உடனே கண்டுகொள்கிறார்கள். ஆயிரம் பேர் நடந்து போய்க்கொண்டு இருக்கலாம். ஆனாலும், நம் முகத்தைப் பாராமலேயே நம் நடையை இனம் கண்டுகொள்கிறார்கள். நடையில் (உடம்பு சம்பந்தமான நடையில்) எல்லாருக்கும் ஸ்டைல் வந்துவிடுகிறது. காரணம் என்ன? பாடமாக வைத்துப் பள்ளிக் கூடத்தில் நடக்கும் நடையைக் கற்பிப்பதில்லை. ஆகவே, நடக்கும் நடை ஸ்டைல் சுலபமாக வந்துவிடுகிறது. ஆனால், எழுத்தில் ஸ்டைல் வரமாட்டேன் என்று சாதிக்கிறது. பள்ளிக்கூடத்துப் பயிற்சிதான் காரணம். மனுஷ தத்துவத்தை எடுத்துவிட்டு, எந்திர தத்துவத்தை மாணவர்களுக்குள் புகுத்திவிடுகிறது. இந்த எந்திரத்துவத்தின் கோணல்கள், 'முட்டி, முட்டி'க் கடைசியில் பரிமேலழகர் நச்சினார்க்கினியர்களாக முடிகின்றன.

நடையில் ஸ்டைல் இருக்க வேண்டும் என்றால் (கால் இருந்தால் போதாது) உடலுக்குள் உயிர் இருக்க வேண்டும். அதுபோல எழுத்தில் ஸ்டைல் இருக்க வேண்டும் என்றால் (வார்த்தைகள் இருந்தால் போதாது) உள்ளத்தில் உயிர், அதாவது உண்மை இருக்க வேண்டும்.

ஏதோ, 'டைம்ஸ் சப்ளிமெண்டுக்கு'க் கட்டுரை எழுதுவதுபோல் எழுத்து நீண்டுவிட்டது. பிள்ளையார் இப்படி ஆயிற்று. இருக்கட்டும். தாங்கள் இருக்கும்போது, எந்தக் கஷ்டமான விஷயத்தையும் தைரியமாக எழுதத் தோன்றுகிறது, பேசக்கூடத் தோன்றும் அல்லவா? அப்படியே எழுதவும் தோன்றுகிறது.'

மேற்கண்ட கடிதத்தைப் படிக்கும்போது, பேச்சைக் கேட்பது போன்ற பிரமை நமக்கு ஏற்படுகிறது. ஆனால், பேச்சுத் தமிழை அப்படி அப்படியே காகிதத்தில் எழுதிவிட்டால் சுவையும் இருக்காது; ஸ்டைலும் இருக்காது. டி.கே.சி-யின் கடிதத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும், எழுத்திலுமே பொருள் முட்டித் ததும்பிக்கொண்டு நிற்கிறது. அபாரமான தெளிவும், உணர்ச்சியும் ஒளியும் இருக்கின்றன. வெறும் கொச்சைப் பேச்சை வைத்துக்கொண்டு இந்த மாதிரி ஜால வித்தை பண்ணிவிட முடியாது. வருடக்கணக்கில் பேச்சுத் தமிழின் உயிர் நிலையை ஆராய்ந்து, அதன் மர்ம ஸ்தானத்தை உணர்ந்து அனுபவித்து, இந்த அனுபவத்தால் பெற்ற மொழி அறிவைக் கலைப் பாங்கோடு கையாளக் கற்றுக்கொண்டால்தான் டி.கே.சி-யைப்போல, பேச்சுத் தமிழுக்கு எழுதும் வன்மையைக் கொடுக்க முடியும்.

தமிழர்கள், கடிதம் எழுதுவதென்றால், விஷயத்துக்காகத்தான் எழுதுவார்கள். 'இவ்விடம் க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பதில்

எழுதவும்', 'ஊருக்கு சௌக்கியமாக வந்து தேர்ந்தேன்', 'புண்ணாக்கு விலை ஏறிக்கொண்டு இருக்கிறது. நெல் விலை எப்படி இருக்கிறது?' என்னும் அரிய விஷயங்களைப்பற்றித்தான் எழுதுவார்கள். வந்த உடனேயே கடிதத்தைக் கிழித்து எறிந்துவிடலாம். பாதுகாக்க வேண்டிய அவசியமே கிடையாது.

ஆனால், டி.கே.சி-யின் கடிதங்கள் எல்லாம் கலை அந்தஸ்து பெற்றவை; ஒரே ஹாஸ்யமும், உல்லாசமும் உணர்ச்சியுமாக இருக்கும். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இலக்கிய ரத்தினங்கள் அவை. டி.கே.சி. கடிதம் எழுதுவதைக் கைக்கொண்ட பின்தான் கடித இலக்கியம் என்று ஒன்று தமிழ் நாட்டில் பிறந்தது.

ஒவ்வொரு கடிதமும், நேருக்கு நேர் நின்று பேசும். உடல் நிலை மோசமாயிருப்பது கேட்டு வருந்தி எழுதியிருந்தேன். அடுத்த தபாலில் கீழ்க்காணும் பதில் வந்தது:

'என் உடலைப்பற்றித் தாங்கள் மிக்க கவலைகொள்வதாகத் தெரிகிறது. அது வேண்டாம். உடம்பு சரியாகத்தான் இருக்கிறது. இன்சுலின் இன்ஜெக்ஷன் கிடையாது. மற்ற குத்துக்களும் இல்லை. மலை ஏற முடியாது. மரம் ஏற முடியாது. அவ்வளவுதான்.'

நீரிழிவும், காசநோயும் டி.கே.சி-யின் உடலைத் தாங்கி முற்றுகை போட்டன. ஆனால், கடைசி வரை, அவர் உள்ளத்தில் இருந்த ஹாஸ்யத்தையும், உல்லாசத்தையும் அவை பாதிக்க முடிய வில்லை.

வாய்க்கு ருசியான ஆகாரங்களை அவர் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தார்கள். இப்படியும் கடும் பத்தியம் போடலாமா என்று கேட்டு எழுதியிருந்தேன். ஆறுதலுக்காக வந்த கடிதம் இது:

'உளுந்து தோசை, ருக்மிணி அம்மாள் அனுப்பிய நாரத்தங்காய் ஊறுகாய், இட்லி, தயிர் எல்லாம் சேர்ந்து வாய்க்கு ருசியான ஆகாரம் ஆகிவிடுகிறது. போதும்தானே. மற்றவர்கள் என்னத்தைச் சாப்பிட்டால் நமக்கென்ன? ரசம், மோர்க் குழம்பு, மாம்பழம், பலாப்பழம் எல்லாவற்றையும் சாப்பிட்டால் சாப்பிடட்டும். அது நம்மைப் பாதிப்பானேன்? எருமை கோரைப் புல்லை, லவக்கு, லவக்கு என்று தின்று குதப்புகிறது. அதைப் பார்த்து 'ஐயோ! கோரையைத் தின்ன முடியவில்லையே' என்று ஒப்பாரி வைப்பார் உண்டோ? வள்ளுவரும் இந்த அபிப்பிராயம்கொண்டவர்தான்.'

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

டி.கே.சி. தமிழின் எளிமையைப் பார்க்கும்போது 'அடே, நாம்கூட இப்படி எல்லாம் வெளுத்து வாங்கிவிடலாம்' என்று

தோன்றும். ஆனால், உட்கார்ந்து எழுதிப் பார்த்தால், அது நமக்குக் கை வராது என்று தெரியும். எளிய தமிழ் என்றால் வெள்ளைத் தமிழல்ல; மொட்டைத் தமிழும் அல்ல. நமக்கு எட்டாத ஆழத்திலும் தெளிவிலும் இருந்து உருவான எளிமை அது. பரிணாம நெறியை ஒட்டிப் பார்த்தால்தான் எளிமையைப்பற்றி டி.கே.சி. இப்படி எல்லாம் ஏன் பிரமாதப்படுத்தினார்கள் என்று விளங்கும்.

இயற்கை அன்னை, விதம் விதமான பிராணிகளை உண்டாக்கி வந்திருக்கிறாள். நாளா வட்டத்தில் உருவங்களைச் செய்து செய்து, அவள் கை திருந்திக்கொண்டே வந்திருக்கிறது. பத்து கால், மூன்று கண் உள்ள பிராணிகளை உண்டாக்கினாள். அவை வசதியோடும் புத்தியோடும் வாழ முடியவில்லை. அவற்றை அழித்துப் புது உருவங்களை உண்டு பண்ணிப் பார்த்தாள். இப்படி எத்தனை, எத்தனையோ திருத்தங்களைச் செய்து, கடைசியாக மனித உருவத்தைக் கண்டு பிடித்தாள். இரண்டே கால் போதும். பத்து கால்கள் வேண்டியதில்லை; இரண்டே கண் போதும், மூன்று கண் வேண்டியதில்லை என்று இயற்கைதேவி கண்டுபிடிப்பதற்கே லட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டன. உயிருள்ள வஸ்துகளுள் மனித உருவம் ரொம்ப எளிமையானது. ஆனால், அந்த எளிமை கை வருவதற்குள் இயற்கை அன்னை எத்தனை பாடு பட்டிருக்கிறாள்!

கலை உலகத்தில் எளிமை ஏற்பட்ட கதையும், கிட்டத்தட்ட மேற்சொன்ன மாதிரிதான். இந்த உண்மையை எல்லாம் பரிணாம நெறியை ஒட்டி உணர்ந்து அனுபவித்தார் டி.கே.சி. ஆகையால், எந்தத் துறையில் எளிமையைக் கண்டாலும் அதை அபாரமாக அனுபவித்து வந்தார்.

ஒரு நாள் வீட்டுக்கு வந்திருந்தார். முற்றத்தில் மாப்பொடியினால் கோலம் போட்டிருந்தது. அதைப் பார்த்து பார்த்து ஒரு மணி நேரம் ரசித்துக்கொண்டு இருந்தார். எங்கள் குருட்டுக் கண்ணுக்கு, அவர்கள் எடுத்துச் சொன்ன பிறகுதான் கோலத்தின் அழகு தெரிய வந்தது. ஊருக்குப் போன பிறகு, ஒரு கடிதம் எழுதினார்:

'இங்கேயும் வீடுகளில் எத்தனையோ கோலங்கள் போடத்தான் செய்கிறார்கள். நூற்றுக்கணக்கான பொட்டுகள்; நூற்றுக்கணக்கான கோடுகள். எல்லாம் சேர்ந்து ஒரே கசாபுசா. அம்மாள் கோல ரகத்தில் எளிமையும், கருத்தழகும் சேர்ந்து கலையாக விளங்குகிறது. அந்தக் கலையை உணர்வதற்கு மற்றக் கோலங்களையும் பார்க்க வேண்டும். கம்பர் செய்யுளின் எளிமையை அனுபவிப்பதற்கு கந்த புராணச் செய்யுட்களையும், சீவக சிந்தாமணிச் செய்யுட்களையும் பார்க்க வேண்டும். பாரதியும். தேசிக விநாயகம் பிள்ளையும்

கவிஞர்களானதால் எளிமையைக் கையாண்டு இருக்கிறார்கள். விஷயத்தை இப்படிச் சொல்லுவதை விட்டுவிட்டு, எல்லாருக்கும் விளங்குவதற்காக லேசாக எழுதி இருக்கிறார்கள் என்று மாறாய்ச் சொல்லுகிறார்கள் கவிஞர்கள். தங்களுக்கே விளங்க வேண்டும் அல்லவா? அதற்காக எளிமையைக் கையாள்கிறார்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

பூண்டுகள்கூட காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்காக எளிமையைக் கையாண்டு இருக்கின்றன. எட்டுத் திசையிலிருந்தும், பதினாறு கோணத்திலிருந்தும் மகரந்தத் தூள்களை வண்டுகள் கொண்டுவர வேண்டும். அதற்காகப் பதினாறு இதழ்களையா விரிக்கிறது? ஐந்து போதும் என்றுதானே வைத்துக்கொண்டது? 'ரேடியல் சிமெட்ரி' ஐந்து பட்டங்களால் ஆகிவிடுகிறது. பல அடுக்குப் பூக்கள் எல்லாம் கஷ்டப்படுகிற பூக்கள்தான். கோலத்தை எளிமையுடன் போடவில்லை அவை.'

இப்படியாக கோலத்திலிருந்து கவிதைக்கும், கவிதையிலிருந்து சிருஷ்டி தத்துவத்துக்குமே டி.கே.சி-யின் எளிமைக் கடிதங்கள் நம்மை இழுத்துச் சென்று, விளக்கிக்கொண்டு இருக்கும்போதே அரிய உண்மைகள் எல்லாம் அந்த ஒளியில் தெளிவாகிவிடும். விஞ்ஞானம், சமயம், கடவுள் தத்துவம் - எல்லாவற்றையும் மத்தாப்பூ போட்டுவிடும் அந்தக் கடிதங்கள்.

போறிஞர்கள் பலரைப் பார்த்திருக்கிறோம். அரசியல் பொருளாதாரம், சமூக இயல், விஞ்ஞானம், இலக்கியம், சங்கீதம், கலை, சமயம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் அவர்கள் ஒரு முடிவு கட்டி வைத்திருப்பார்கள். அவர்களுக்கு ஒரு துறையில் ஒரு கொள்கை இருக்கும். இந்தக் கொள்கைகளுக்கு இடையே அடிப்படையான ஒற்றுமை இருக்காது; பெரும்பாலும் முரண்பாடு தான். ஆனால், ரசிகமணி காரியம் அப்படியல்ல, எந்தத் துறையானாலும் சரி, அடிப்படையான ஒரே கோணத்தில் இருந்து தான் விஷயங்களைக் கண்டு முடிவு கட்டுவார்கள். கிளைகள் எத்தனை இருந்தால்தான் என்ன? ஒரே கொப்பிலிருந்து முளைத்து எழுந்த கிளைகள்தான்.

தென்காசியிருந்து ரயிலில் சென்னைக்குப் போய்க்கொண்டு இருந்தார் டி.கே.சி. ரயிலடியிலாவது சந்திக்கலாம் என்று போயிருந்தோம். சந்தித்து இரண்டு வார்த்தை பேசுவதற்குள், ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேஷனைவிட்டு ரயில் நகர்ந்துவிட்டது. ஒரே ஏமாற்றம்! சென்னையிலிருந்து வந்த டி.கே.சி-யின் கீழ்க்காணும் கடிதம் எங்கள் ஏமாற்றத்தைத் தெரிவிக்கிறது:

'எவ்வளவோ ஆத்திரத்தோடு, தாங்கள் வந்தீர்கள்; ஓடி வந்தீர்கள். ஆனால், ரயிலும் கால தேவதையும் ரொம்பக் கேலி பண்ணிவிட்டன.

இரண்டு வார்த்தை பேசுவதற்குள் வாய்க் குருவியை (விசில்) ஊதிவிட்டான்... வெறும் இருட்டில் இருந்து இந்த உலகத்துக்கு வருகிறோம். கண்ணைத் துடைக்கவே பத்து இருபது வருடம் (நிமிடம்தான்) ஆகிறது. அதைக் கொஞ்சம் பார்க்கிறோம். இதைக் கொஞ்சம் பார்க்கிறோம். ஏதோ குருடன் தடவித் தடவிப் பார்க்கிற கணக்குத்தான். ஆனால், ஒன்று தெரிகிறது. எவ்வளவோ பார்க்க வேண்டி இருக்கிறதே எவ்வளவோ அறிய வேண்டி இருக்கிறதே என்பதாகவும் கற்றதும் ஒன்றும் இல்லையே என்பதாகவும் திகைப்பு ஏற்படுகிறது. அப்போது உலக - ஒட்டி, சங்கை ஊதிவிடுகிறான். அடாடா! உலகத்தோடு ஒன்றும் பேசவில்லையே என்று தோன்றுகிறது.'

இருபது வருடங்கள் அவர்களிடம் அறிய வேண்டி இருக்கிறதே என்று பட்டது. அதற்குள், உலக - ஒட்டி சங்கை ஊதிவிட்டான். டி.கே.சி. தத்துவம் மறைந்துவிட்டது. திகைப்புத்தான் மிஞ்சுகிறது!

9. கவிமணியும் ரசிகமணியும்

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களைத் திருநெல்வேலியில் சந்தித்தேன். அப்போது அவர்கள் கல்வெட்டு ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டு இருந்தார்கள்.

அவர்களைப் பார்த்து, "கல்வெட்டு ஆராய்ச்சிக்கு எத்தனையோ பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். தாங்களோ அபூர்வப் பிறவி; கவி எழுதுவதற்காகவே பிறவி எடுத்திருக்கிறீர்கள்; ஆகையால், கல்வெட்டு ஆராய்ச்சியை எல்லாம் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, தாங்கள் அடிக்கடி கவி எழுத வேண்டும்; கவி எழுதித் தமிழுக்கு உதவ வேண்டும்" என்று விண்ணப்பம் செய்துகொண்டேன்.

இதைக் கேட்டுக்கொண்டு இருந்த கவிஞர் 'சரேல்' என்று சிரித்துவிட்டார்கள். பிறகு, அவர்களுக்கே உரிய பரிவோடும் இரக்கத்தோடும் என்னைப் பார்த்து, "நீரிழிவு நோய் என்னை கொஞ்ச காலமாக அல்லற்படுத்தி வருகிறது. ஒரு வெண்பாவை நான் எழுதி முடிப்பதற்குள், நீரில் இனிப்பு மிகுந்துவிடுகிறது. ஆகவேதான், கவி எழுதும் தொழிலை நான் மட்டுப்படுத்திக்கொண்டு இருக்கிறேன்" என்றார்.

அப்போதுதான் தெரிந்தது. உண்மையான, உணர்ச்சிமிக்க கவி ஒன்று நமக்குக் கிடைக்க வேண்டும் என்றால், கவிஞன் தன் உடம்பையும் உயிரையுமே பிழிந்து அதில் கொட்ட வேண்டி இருக்கிறது என்று.

சிலந்திப்பூச்சி தனக்கு வீடு கட்டுகிறது என்றால், கடைக்குப் போய்ச் சுண்ணாம்பும் செங்கல்லும் வாங்கியா வீடு கட்டுகிறது? தன் உடம்பில் உள்ள ஒரு பிசினைப் பிதுக்குகிறது; அதைக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக அற்புத வலை ஒன்றைப் பின்னுகிறது. பசுவின் பால் நமக்குச் சுவையாக இருக்கிறது. ஆனால், தன் ரத்தத்தில் இருந்தல்லவா பாலைப் பசு நமக்கு உற்பத்தி செய்து கொடுக்கிறது?

அதைப்போலவே, நமக்கு ஆனந்தம் கொடுப்பதற்காகக் கவிஞன் தன் உடல் சத்தையும் உயிர்ச் சத்தையுமே தன் கவிதையில் பெய்து வைக்கிறான்.

கவி என்பது பலசரக்குக் கடையில் வாங்கக்கூடிய பொருளல்ல; சப்பாத்திக் கள்ளியில் படரக்கூடிய பொருளும் அல்ல. இதைக் கருத்தில்கொண்ட பொதெலெயர் (Baudelaire) என்ற ஃபிரெஞ்சுக் கவி, “உருவமற்ற கருத்து ஒன்றுக்குக் கலை உருவம் கொடுப்பதற்குள் கலைஞன் உடம்பையும் உள்ளத்தையும் வருத்தி வேலை வாங்க வேண்டி இருக்கிறது” என்றார்.

ஆனால், கவியை அல்லது கலையைத் துய்க்கும் ரசிகனுக்குக் கிடைப்பது எல்லாம் கலப்படம் இல்லாத ஆனந்தம். வேதனை என்பது அவன் ஏட்டிலேயே கிடையாது.

ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கும், கவிமணியைப்போல, நீரிழிவு நோய் இருக்கத்தான் செய்தது. ஆனால், அவர்கள் கவியை அனுபவிக்கத் தொடங்கிவிட்டால் அவர்களைப் பற்றியிருந்த நோய்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடிவிடும்.

ஒரு நாள் அவர்களுக்குக் கடுமையான காய்ச்சல் அடித்துக் கொண்டு இருந்தபோது, அவர்களைப் பார்க்க குற்றாலம் போயிருந்தேன். என்னைக் கண்டதும் அவர்கள் படுக்கையைவிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

நாக்கில் தெர்மாமீட்டரை வைத்துப் பார்த்தேன். ஜுரம் 103 டிகிரி இருந்தது.

“உடம்பை அலட்டிக்கொள்ள வேண்டாம். நன்றாக ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்” என்று சொல்லி, மெல்ல நழுவப் பார்த்தேன். ஆனால் அவர்கள் விடுவதாக இல்லை.

"கவியை அனுபவிக்கும்போது நான் என்னை மறந்துவிடுகிறேன். நோயும் என்னை மறந்துவிடுகிறது. உங்களோடு சேர்ந்து அனுபவிக்கும்போது கவிதை எனக்கு ஒரு டானிக்காகவே இருக்கிறது. ஆகையால், இருங்கள். ஒரு பாடலைக் கேளுங்கள்" என்று சொல்லி, தேசிக விநாயகம் பிள்ளையுடைய கவி ஒன்றை எடுத்துப் பாடினார்கள். பாட்டைப் பாடப் பாட அவர்கள் முகத்தில் ஒரு பொலிவு தோன்றியது. சோர்வு பறந்தோடி விட்டது.

தில்லைப் பதி உடையான் சிற்றம்பலந் தன்னில்
அல்லும் பகலும் நின்றாடுகின்றான் – எல்லைக் கண்
அண்ணாமலை மன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து.

-என்ற பாடலை விளக்கினார்கள்.

"அண்ணா... ஆ... ஆ... ஆ... மலை மன் என்ற வாய் நிறைந்த சொல்லை எப்படிக் கவிஞர் அனுபவித்துவிட்டார், பாருங்கள்!" என்று சொல்லிப் பல முறை பாடலை ஆர்வத்தோடு பாடிக் காட்டினார்கள். பாடலுக்கு விளக்கம் ஒரு மணி நேரம் கிடைத்தது. விளக்கம் முடிந்ததும், காய்ச்சலைப்பற்றிய நினைவு எனக்கு வந்தது. மறுபடியும் தெர்மாமீட்டரை எடுத்து அவர்களுடைய நாக்கு அடியில் வைத்துப் பார்த்தேன். 98.45 டிகிரிக்கு இறங்கிவிட்டது சூடு!

ஒருமித்த உணர்ச்சியோடு டி.கே.சி-யைப் போல் அனுபவிக்கக் கூடிய ரசிகனுக்காகவே தவங்கிடக்கிறான் கவிஞன். அப்படி ஒரு ரசிகன் கிடைப்பதற்குப் பல நூற்றாண்டுகள் ஆகலாம். கம்பனைப் போன்ற ஒரு ரசிகன் கிடைப்பதற்கு வள்ளுவர் எழுநூறு ஆண்டுகள் காத்திருந்தார். டி.கே.சி-யைப் போன்ற ஒரு ரசிகன் கிடைப்பதற்கு கம்பன் ஆயிரம் ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்தது. ஆனால், கவிமணிக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டம் என்னவென்றால், தம் வாழ்நாளிலேயே அத்தகைய ரசிகனைப் பெற்று, அந்த ரசிகனோடு நெருங்கி உறவாடும் வாய்ப்பையும் பெற்றார்கள். இவ்வாறு ஒரு ரசிகன் கிடைத்த மாத்திரத்தில் கவிஞனுக்குப் பிறவிப் பெரும்பயனே கிட்டிவிடுகிறது; ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் நிலை பேற்றை அடைந்துவிடுகிறான் அவன்.

1944-ல் தென்காசி திருவள்ளுவர் கழகத்தில் கவிமணிக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. விழாவுக்குத் தலைமை வகித்தது டி.கே.சி. கவிமணிக்கு ஒரு பொன்னாடையைப் போர்த்தி, அவர்களை ஏற இறங்கப் பார்த்து அனுபவித்துக்கொண்டு இருந்தார்கள். டி.கே.சி. பாராட்டுரை "கவிஞரேறே" என்ற

சொல்லோடு தொடங்கியது. 'ரே, றே' என்ற ஒலிகளில் ஓர் அழுத்தம் கொடுத்து, கவிஞரோடு தமக்கிருக்கும் தோழமையை ரசிகமணி வெளியிட்டார்கள். பிறகு, கவிமணியின் பாடல்களைப் பாடிக் காட்டினார்கள். கவிஞருடைய இதயத்தோடு ஒட்டிப் பாடலோடு கரைந்துவிட்டார்கள். பேசியது டி.கே.சி-யா, கவிமணியா என்று தெரியாத வகையில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசி முடித்தார்கள்.

பாராட்டுரையைக் கேட்டுக்கொண்டு இருந்த கவிமணி அப்படியே உருகிவிட்டார்கள். "என்னைப் போன்ற கவிஞனுக்கு உயிர் மூச்சைக் கொடுப்பது பாராட்டுத்தான். ஏதோ எத்தனையோ கவிக் குழந்தைகளை நான் பெற்றுப் போட்டுவிட்டேன். அவற்றின் அருமை எனக்குத் தெரியாமல் இருந்தது, ஆனால் டி.கே.சி. அந்தக் குழந்தைகளை எடுத்துக் குளிப்பாட்டி, உச்சி மோந்து, தலை சீவி, பொட்டு இட்டு, முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவும்போதுதான், நான் பெற்ற பிள்ளைகளுக்கும் இவ்வளவு அழகிருக்கிறதா என்று உணர்ந்தேன்" என்று சொல்லி வியப்பும் களிப்பும் அடைந்தார்கள் கவிமணி.

நல்லதொன்றைக் கண்டுவிட்டால் தலை மேல் வைத்துக் கூத்தாடும் வஞ்சகமற்ற குழந்தை உள்ளம் படைத்தவர் டி.கே.சி. "கண்ணாரக் காண்பதற்கு ஒரு கவிஞர் நமக்குக் கிடைத்துவிட்டார்" என்று கவிமணியைப்பற்றி ஊர் ஊராகப் பிரசாரம் செய்தார்கள் டி.கே.சி. பால சரஸ்வதியின் அற்புதமான அபிநயக் கலையையும் வியந்து வியந்து பாராட்டி உலகமறியச் செய்தார்கள். இந்த இரண்டு கலைஞர்களையும் கண்டெடுத்தவர்கள் டி.கே.சி. என்று சொல்ல வேண்டும்.

இந்த அபூர்வமான சீலத்தை உடனிருந்து உணர்ந்து அனுபவித்த கவிமணி பாடினார்கள்:

என் அருமை நண்பா! இனிய கலை ரசிகா!
தென்னர் தமிழ் வளர்த்த தேசிகா! – நன்னயச்
சீலம் சிறந்த சிதம்பரநாத வள்ளல்
சால நீ வாழ்க தழைத்து.

மேற்கண்ட வெண்பாவில் இருக்கும் எளிமையும், அருமைப்பாடும், நன்றி உணர்வும், நிறைவும் அபூர்வமானவை. பாடலை எழுதிய கவிமணியும் பாட்டுடைத் தலைவரான ரசிகமணியும் மறைந்து விட்டார்கள். ஆனால், கவிஞனுக்கும் ரசிகனுக்கும் இருந்த, இருக்க வேண்டிய ஆனந்தப் பேருறவை, பாடல் என்றென்றும் உணர்த்திக் கொண்டு நிற்கும்.

10. ராஜாஜியும் டி.கே.சி-யும்

ராஜாஜியோடும் டி.கே.சி-யோடும் நெருங்கிப் பழகும் பேற்றைப் பெற்றவர்களுக்கு அறிவு வளத்தின் கொடுமுடியையும் இதய வளவத்தின் கொடுமுடியையும் ஒருங்கே தொடும் பேறு கிட்டியது.

ராஜாஜியோடு கொஞ்ச நேரம் உரையாடிக்கொண்டு இருந்தால் போதும், அவர்களுடைய அறிவின் வீச்சு எவ்வளவு பிரமாண்டமானது என்று தெரிந்துகொள்ளலாம். எல்லை இல்லாத ஒரு சமுத்திரத்தையோ ஓங்கி உயர்ந்து வானத்தை முட்டிக்கொண்டு நிற்கும் ஒரு மலையையோ பார்க்கும்போது நம் உள்ளத்தில் ஏற்படுகிற அகண்ட உணர்ச்சி ராஜாஜியின் அறிவுத் தத்துவத்தின் நீள அகல ஆழங்களை ஊன்றிக் கவனித்துக்கொண்டு இருக்கும்போது நமக்கு உண்டாகும்.

ஒரு நாள் மணிக்கணக்காக ராஜாஜியோடு பேசிவிட்டு அவரைவிட்டுப் பிரியும்போது நான், “கடவுள் இல்லை என்று சொல்கிறவர்கள் உங்களுடைய அறிவின் கூர்மையையும் வன்மையையும் ஆய்ந்து பார்த்தால், கடவுள் என்று ஒருவர் இருக்கவே செய்கிறார் என்றும் அவரைத் தவிர வேறொருவராலும் அதிசயிக்கத்தக்க உங்கள் அறிவைப் படைத்திருக்க முடியாது என்றும் உணர்வார்கள்” என்று சொன்னேன். இதைக் கேட்ட ராஜாஜி ஒரு புன்முறுவல் செய்துவிட்டு மௌனமாக இருந்தார்.

டி.கே.சி-யோடு பழகும்போதோ, அவர்களுடைய எல்லையற்ற இதயத்தின் கதகதப்பு நமக்குக் கிடைத்துகொண்டே இருக்கும். நம் தலையை நீட்டினால் போதும். குற்றாலத்து அருவியைப்போல, டி.கே.சி-யின் பேரன்பு நம்மை அப்படியே குளிப்பாட்டிவிடும். என்னுடைய 66 ஆண்டு மண்ணுலக வாழ்வில் டி.கே.சி-யிடத்தில் நான் கண்ட அன்பில் நூற்றில் ஒரு பங்கைக்கூட வேறொருவரிடம் கண்டதில்லை.

திருக்குற்றாலம் ஐந்தருவிச் சாலையில் உள்ள டி.கே.சி. வீட்டில் ஒரு நாள் நானும் டி.கே.சி-யும் மறுபிறவியைப் பற்றி வெகு நேரம், கொஞ்சம் சூடாகவே, விவாதித்துக்கொண்டு இருந்தோம். அவருடைய வாதத்தை என்னால் ஏற்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் ஆத்திரத்தோடு எழுந்து, போய்விட்டேன். ஒரே கோபாவேசத்தில் இருந்த என்னைச் சமாதானம் செய்வதற்காக, அரை மணி நேரம் கழித்து அங்கு வந்து, மிகுந்த பரிவோடு வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி, என் கையைப் பிடித்துக்கொண்டு தம் வீட்டுக்கு அழைத்து வந்து ஆயிரம் உபசாரம் செய்தார்.

டி.கே.சி. என்ற இதயத் தத்துவத்தையும் ராஜாஜி என்றஅறிவுத் தத்துவத்தையும் இணைத்து வைத்தவர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி. இந்த இணைப்பினால் இலக்கியம், இசை, கலை, அரசியல் ஆகிய துறைகளில் வரலாற்றுப் புகழ்ப்பெற்ற பல விளைவுகள் விளைந்தன. ராஜாஜியின் நட்பினால் டி.கே.சி-க்குப் பெரியவர்களுடைய அங்கீகாரம் கிடைத்தது. காந்திஜி, வினோபாஜி, நேருஜி போன்ற சான்றோர்கள் டி.கே.சி-யை நேரில் சந்தித்து மதிக்கத் தொடங்கினார்கள்.

உயர்ந்த பதவிகளில் இருந்த ஐ.சி.எஸ். அதிகாரிகள், அமைச்சர்கள், நீதிபதிகள் ஆகியோர் 'டி.கே.சி-யோடு பழகுவதே நமக்கு ஒரு பெருமை' என்று நினைத்தனர். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்ற புலவர்களுடைய வசவுக்கு ஆளாகிப் புண்பட்டு போயிருந்த டி.கே.சி-க்கு அரசியல் செல்வாக்கும், சாகாப் புகழும் பெற்றிருந்த ராஜாஜியின் நட்பும், ராஜாஜி குழாத்தின் நட்பும் இதயத்துக்கு இங்கிதமாக இருந்தது.

டி.கே.சி-யின் நட்பினால் ராஜாஜிக்கு ஆன்ம அமைதியும் ஆனந்தமும் கிடைத்தன. அரசியல் பரபரப்பில் வேஷதாரிகளுக்கும் ஆஷாடபூதிகளுக்கும் இடையே பெற்ற சொல்லாணாத வேதனையை எல்லாம் ராஜாஜி, டி.கே.சி. என்ற அன்பு தத்துவத்தில் மூழ்கி, மூழ்கி மறக்கக் கற்றுக்கொண்டார்கள். அரசியல் அஞ்ஞாத வாசத்தில் இருந்த நாட்களை எல்லாம் இருபதாம் நூற்றாண்டு பீஷ்மராகிய ராஜாஜி, குற்றால முனிவரான டி.கே.சி-யின் அரவணைப்பில் குதூகலத்தோடு கழித்தார்கள்.

அவருடைய கறுப்புக் கண்ணாடிக்குப் பின், அரம் போலும் கூர்மையான, ஆனால், ஈரம் அற்ற அறிவுதான் இருந்தது என்று அரசியல்வாதிகளில் சிலர் நினைப்பார்கள். உண்மையில் ராஜாஜி உறைந்த பனிக்கட்டியால் மூடப்பட்ட எரிமலை போன்றவர். நரமாமிசப் பட்சிணிகளோடு பழகும்போது, தமக்குள்ளே அலைமோதிக்கொண்டு நிற்கும் அன்பை அவர்கள் பார்க்க ஒட்டாமல் முகமூடியைப் போட்டு மறைக்கவும், தம் கண்ணோட்டத்தை அவர்கள் கண்டுவிடாமல் கறுப்புக் கண்ணாடி போட்டு ஒளிக்கவும் வேண்டியது தமது கடமை என்ற ராஜாஜி நினைத்தார்கள்.

தம்மிடத்தில் ஒரு விதமான பிரதிபலனும் எதிர்பார்க்காத டி.கே. சி-யைப் போன்ற தன்னலமற்ற உத்தமர்களோடு பழகும்போது, ராஜாஜி தம்முடைய முகமூடியையும் கறுப்புக் கண்ணாடியையும் கழற்றி எறிந்துவிட்டு இயல்பான அன்பைக் கொட்டிக்கொண்டு இருப்பார்கள்.

டி.கே.சி. மறைந்த சில மாதங்களுக்குப் பின் சென்னைக்கு வந்து ராஜாஜியை, அவர்களுடைய பசுல்லா சாலை வீட்டில் சந்தித்தேன்.

"உங்களைக் கண்டதும் டி.கே.சி-யைக் கண்டதுபோல இருக்கிறது" என்று மாறி, மாறிச் சொன்னார்கள் ராஜாஜி. அதோடு நிற்கவில்லை. எனக்கு லஜ்ஜை ஏற்படும் அளவுக்கு, டி.கே.சி-க்குச் செய்யும் தனி உபசாரத்தை எனக்கும் செய்யத் தொடங்கினார். அன்று எங்கள் உரையாடல் டி.கே.சி.மயமாக இருந்தது.

சானட்டோஜனை ஒரு கோப்பைத் தயிரில் போட்டு ஒரு தேக்கரண்டியில் மசித்துச் சாப்பிட்டுக் கொண்டே, ராஜாஜி, "நாம் ஒரு தப்புப் பண்ணி விட்டோம், சானட்டோஜனில் நல்ல புரோட்டீன் சத்து இருக்கிறது. இதை நாம் டி.கே.சி-க்குக் கொடுத்திருக்க வேண்டும், கொடுத்திருந்தால் இன்னும் ஐந்தாண்டு காலம் அவர் நம்மோடு வாழ்ந்திருப்பார்" என்றார்.

அவ்வாறு சொல்லும்போது ராஜாஜியின் தொண்டை உணர்ச்சி மிகுதியால் அடைத்துக்கொண்டது. இந்தச் சோகமான கட்டத்தைப் சமாளிப்பதற்காக, "நீங்கள் சானட்டோஜன் சாப்பிடுகிறீர்கள். நானும் சாப்பிடுகிறேன். உடம்புக்கு நன்றாகத்தான் இருக்கிறது" என்று அசட்டுத்தனமாக சொல்லிவைத்தேன்.

இதைக் கேட்ட ராஜாஜி மிகுந்த பரபரப்போடு, "நீங்களும் நானும் அதைச் சாப்பிட்டு என்னத்துக்கு?" என்று ஒரு போடு போட்டார்கள். அந்த கேள்விக்குள்ளிருந்து பொத்துக்கொண்டு வந்த வேதனையும் துன்பமும் என்னைத் தூக்கிவாரிப் போட்டன.

டி.கே.சி. மறைந்து ஓர் ஆண்டுக்குப் பின், ரசிகமணி எழுதிய 'கம்பர் தரும் ராமாயணத்தின்' மூன்றாம் பாகம் வெளிவந்தது. அதற்கு எழுதிய முன்னுரையில் ராஜாஜிக்கு டி.கே.சி-யிடம் இருந்த அன்பும், டி.கே.சி. மறைந்ததால் அவர்களுக்கு ஏற்பட்ட ஏக்கத்தையும் சோகத்தையும் பார்க்கலாம். இதோ ராஜாஜியின் வாசகம்:

'டி.கே.சி., கம்பனுடைய உள்ளத்தில் புகுந்து, அதன் அந்தரங்கத்தை அறிந்து, கம்பன் பாடல்களைப் பாடி, கவி வானம் உண்டாக்கி அமுத மழை பொழியச் செய்வார். அதை நேரில் அனுபவித்த நூற்றுக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அறிவார்கள் அதன் மகிழ்ச்சியை. எழுத்தில் ஓரளவுதான் தொனிக்கும். ஆனால், இப்போது டி.கே.சி. ஊனுடலைவிட்டுப் போய்விட்டார். நிற்பது என்னைப் போன்ற பித்தரின் உள்ளத்தில் இருக்கும் நினைவுகளும் இந்த நூலும்.'

ராஜாஜி தம் ஆற்றாமையை அறிவினால் எவ்வளவு அடக்கிப் பார்த்தாலும் அது அத்து மீறிக்கொண்டு எப்படி எல்லாம் கொந்தளிக்கிறது என்பதை இந்த வாசகத்தின் வாயிலாக நாம் கண்கூடாகக் காணலாம்.

உணர்ச்சிகளை அடக்கியும் ஒடுக்கியும் அழுத்தியும் வைக்க வேண்டும் என்பது ராஜாஜியின் கொள்கை. ஆனால், டி.கே.சி-யின் கொள்கையோ இதற்கு நேர்மாறானது. உணர்ச்சிக்குப் போக்கு இடம் இல்லை என்றால் அவை உள் மனத்தில் புதைந்து உட்கார்ந்து கொண்டு பல திருகுமுறுகல்களையும் முண்டு முடிச்சுகளையும் உண்டாக்கும் என்பது டி.கே.சி-யின் கருத்து; நல்லது ஒன்றைக் கண்டுவிட்டால் அதை மனதுக்குள் அழுக்கி வைத்துக்கொண்டு இருக்க முடியாது டி.கே.சி-க்கு. 'பலே', 'பேஷ்', 'சபாஷ்', 'அப்படிச் சொல்லுங்கள்', 'அடேடே' என்றெல்லாம் கூறி ஆர்வமூட்டுவார். கல்கி இந்த இருவருக்கும் உள்ள வேறுபாட்டை பொட்டில் அடித்த மாதிரி எடுத்துச் சொன்னார்:

"நான் என்ன செய்தாலும் அதில் உள்ள குற்றத்தை எடுத்து சொல்லி என்னைக் கண்டித்து வளர்த்தவர் ராஜாஜி. நான் என்ன செய்தாலும் அதில் உள்ள நல்ல அம்சங்களை எடுத்து பாராட்டி எனக்கு உற்சாகமூட்டி வளர்த்தவர் டி.கே.சி."

ஆனந்தத்தை எப்படி எல்லாம் வளர்க்க முடியுமோ அப்படி எல்லாம் அதை வளர்த்து வந்தார்கள் டி.கே.சி. ஆனந்தமே இறைவன், ஆனந்தம் எங்கே இருக்கிறதோ அங்கே இறைவன் இருக்கிறான் என்று உணர்ந்தவர்கள் டி.கே.சி. புலன்களை அடக்கியும் கடுமையான பிரம்மசர்யத்தை அனுஷ்டித்தும் மலை கலங்கினும் மனங் கலங்காத துறவு நிலையில் நின்றவர்கள் ராஜாஜி. இப்படிக் கண்டிப்பான துறவு நிலையில் உள்ளவர்களுக்கு ஆனந்தத்தை அனுபவிப்பதில் தயக்கம் ஏற்படுவது இயல்பு.

திருக்குற்றாலத்தில் பெரிய, பெரிய உண்மைகளை எல்லாம் உள்ளுணர்வோடு டி.கே.சி. பேசிக்கொண்டு இருப்பார். அப்போது ராஜாஜியின் மேதமையை, சான்றாண்மையை தசரதனுக்குச் சமமாக வைத்துப் பாராட்டுவார். அப்படி பாராட்டும்போதே துறவிகளுக்கு உண்டான சங்கடங்களைப்பற்றியும் பேசுவார்.

"'பால சரஸ்வதியின் அபிநயத்தைப்போல உலகத்திலேயே ஓர் அதிசயத்தைப் பார்க்க முடியாது. நீங்கள் அதைப் பார்க்க வேண்டும்' என்று ராஜாஜியிடம் சொல்லி வந்தேன். ஆனால், ராஜாஜி அதைக் காது கொடுத்துக் கேட்பதாக இல்லை. கடைசியாக 1934-ல் சென்னையில் நான் இருந்தபோது ராஜாஜிக்கு என்றே பால சரஸ்வதியின் அபிநயக் கச்சேரியை என் வீட்டில் ஏற்பாடு

செய்திருந்தேன். ராஜாஜியும் வேண்டாவெறுப்பாகக் கச்சேரிக்கு வந்தார்கள். 'தாயே யசோதா', 'தெருவில் வாரானோ' முதலிய பதங்களை ஜெயம்மாள் பாட பால சரஸ்வதி அற்புதமாக அபிநயம் பிடித்தார். எங்களை எல்லாம் - ராஜாஜியையும் சேர்த்தே - மண்ணுலகைவிட்டு ஓர் ஆனந்த லோகத்துக்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டது அபிநயக் கலை. ஒரு மணி நேரம் தம்மை மறந்து கச்சேரியை அனுபவித்துக்கொண்டு இருந்த ராஜாஜிக்கு 'ஆனந்தத்தை அனுபவித்து ஒரு பாவத்தைச் செய்துவிட்டோமோ?' என்ற நினைப்பு வந்துவிட்டது.

காந்திஜியும் அப்படி ஒரு பெரிய மகான்தான். ஆனாலும், ஆனந்தத்தை அனுபவிக்கக் கூடாது என்ற கொள்கை உடையவர். நல்ல சாப்பாடு சாப்பிடுவதற்கு முன்னால் வேப்பிலையைச் சாப்பிடச் சொல்வார். ருசியான பொருட்களை அனுபவித்து விடக் கூடாது. அதற்காக எல்லாவற்றையுமே கசப்பாக்க வேண்டும் என்ற ஆத்திரம். பிரம்மசர்யத்தில் இருப்பவரல்லவா காந்திஜி? யாராவது ஒரு பெண் அவருடைய ஆஸ்ரமத்தில் தங்கி இருக்க வேண்டும் என்று விரும்பினால், அவளுக்குத் தலை அலங்காரம் கூடாது. மொட்டை அடித்தால்தான் ஆஸ்ரமத்தில் இருக்கலாம் என்று சொல்வார். அவரோடு பழகிய தோஷத்தால் ராஜாஜியும் ஆனந்தத்தை அவ்வளவாக விரும்புவதில்லை.

ஆகவே, 3 மணி நேரம் நடக்க வேண்டிய பால சரஸ்வதியின் பரத நாட்டியக் கச்சேரி ஒரு மணி நேரம் ஆனவுடன், 'உடனே நிறுத்த வேண்டும்' என்று சொல்லிவிட்டார் ராஜாஜி. வந்திருந்தவர்களுக்கு எல்லாம் 'பக்'கென்று இருந்தது. என்ன செய்ய? கச்சேரியைத் திடீரென்று நிறுத்தும்படி சொன்னேன். ஜெயம்மாளும் பால சரஸ்வதியும் கலைத் தெய்வங்கள். ஆனால், அவர்களுடைய அற்புதக் கலைக் கச்சேரியை முழுமையாக அன்று அனுபவிக்க முடியவில்லை. கட்டாயப்படுத்தியல்லவா அவர்களை நிறுத்திவிட்டேன்?

அதன் பிறகு, 'உலகத்திலேயே இப்படி ஒரு கலையில்லை. ஆனந்தத்தின் மூலமாக இறைவனுடைய சந்நிதானத்துக்கே அது நம்மை இழுத்துக்கொண்டு சென்றுவிடும்' என்று பல ஆண்டுகளாகப் பல முறை ராஜாஜியிடம் சொல்லி வந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களும் நம்முடைய கட்சியை ஏற்றுக் கொண்டார். வங்காள கவர்னராக இருந்தபோது ராஜாஜி பால சரஸ்வதியை கல்கத்தாவுக்கு அழைத்து பரத நாட்டியக் கச்சேரியை செய்யச் சொன்னார். அதோடு தாமே அந்த கச்சேரிக்குத் தலைமை வகித்தார். தலைமை உரையில் வந்திருந்த வங்காளிகளுக்கு பால சரஸ்வதி யார் என்று இனங் காட்டினார்: 'தென்னாட்டின்

பண்பாட்டுத் தூதராக வங்காளத்துக்கு வந்திருக்கிறார் பால சரஸ்வதி' என்று சொல்லிப் பாராட்டினார். இப்படியாகத் தமிழ் நாட்டுப் பரதநாட்டியக் கலைக்குத் துணையாக ராஜாஜியின் உன்னதமான செல்வாக்கு நமக்குக் கிடைத்தது" என்று டி.கே.சி. அடிக்கடி சொல்லி மகிழ்வார்கள்.

17-ம், 18-ம் நூற்றாண்டுகளில் ஃபிரான்ஸ் நாட்டில் பெரிய சீமாட்டிகள் நாட்டின் சிறந்த அறிஞர்களையும் கலைஞர்களையும் தங்கள் மாளிகைகளுக்கு அழைத்து வளமான விருந்துகள் அளித்து உபசாரம் செய்து அவர்களுடைய உரையாடல்களைக் கேட்டு மகிழ்வார்கள். இந்த மாளிகைகளுக்கு ஸலோன் (Salon) என்று பெயர் ஃபிரெஞ்சு இலக்கியத்தையும் கலையையும் இந்த ஸலோன்களிலேயே ஃபிரெஞ்சுக்காரர்கள் வளர்த்தார்கள்.

தமிழ் நாட்டில் அப்படி விருந்தோம்பலோடு கலைகளையும் இலக்கியத்தையும் ஓம்பி வளர்க்கும் குழுவை நடத்தியது சடையப்ப வள்ளலுக்குப் பின் டி.கே.சி-தான். கலைஞர்கள், கவிஞர், நடிகர், அரசியல்வாதி, புலவர், வழக்கறிஞர், நீதிபதி, அயல்நாட்டு மேதை, சாமானிய மக்கள் - இப்படியாகப் பல திறப்பட்டவர்கள் டி.கே.சி-யின் இல்லத்தில் பல நாட்கள் விருந்தாளிகளாக இருந்து அவருடைய ஆனந்த வாழ்க்கையிலும் கவிதை நிஷ்டையிலும் பங்குகொண்டு தம்மை மறந்திருக்கிறார்கள். அவ்வாறு வரும் விருந்தாளிகளில் எல்லாம் மிக்க சரித்திரப் புகழ்பெற்ற மேதை ராஜாஜி என்றே சொல்ல வேண்டும்.

ராஜாஜியும் டி.கே.சி-யும் ஒருவருக்கொருவர் மிக்க பக்தியோடு நடந்துகொள்வார்கள். ஆனால், சில சமயங்களில் உறவு நெருக்கத்தை ஒருவருக்கொருவர் கிண்டல் செய்து காட்டிக்கொள்வதும் உண்டு. ராஜாஜி சைவ பரிபாஷையையும், டி.கே.சி. வைணவ பரி பாஷையையும் மரியாதையோடு நையாண்டி செய்வார்கள். அபூர்வமாக, இவருக்கும் இடையே வாதப் பிரதிவாதங்கள் நடக்கும். பக்கத்தில் இருப்பவர்களுக்கு இரண்டு பெரிய ஜாம்பவான்கள் மோதிக்கொள்ளும்போது உள்ள பரபரப்பும் சுவையும் ஏற்படும்.

1943-ல் இருவருக்கும் ஒரு சர்ச்சை நடந்தபோது நானும் எனது பேராசிரியர் ஸ்ரீநிவாசராகவனும் சில நண்பர்களும் கூட இருந்து அனுபவித்துக்கொண்டு இருந்தோம்.

"சத்திய வேட்கைக்கு அடிப்படையாக இருப்பது உணர்ச்சிதான். அறிவு அல்ல. நல்ல கவிதை எழுதுவதற்கு எவ்வளவு உணர்ச்சி அவசியமோ, அவ்வளவு உணர்ச்சி விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளுக்கும் அவசியம்" என்று டி.கே.சி. சொன்னார்.

இதைக் கேட்டு ராஜாஜி, "விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கு அவசியமாக இருப்பது நுண்ணறிவுதான், உணர்ச்சி அல்ல கணக்குக்குக்கூட உணர்ச்சி அவசியம் என்று டி.கே.சி. சொல்வார்" என்று ஒரு போடு போட்டார்.

இந்த வாதத்தை மறுத்து டி.கே.சி., "அப்படியல்ல. அறிவு நல்ல முறையில் இயங்குவதற்குத் தூண்டுதலாக இருப்பது அன்புதான். உண்மையைக் காண்பதில் அன்பும் ஆர்வமும் இல்லை என்றால் விஞ்ஞானிகள் புதுக்கண்டுபிடிப்புகளைக் காண முடியாது" என்றார்.

இப்படியாக வாதப் பிரதிவாதங்கள் வெகுநேரம் நடந்தன. சில ஆண்டுகளுக்குப் பின்னால் ஐன்ஸ்டீன் சொன்ன கீழ்க்காணும் கூற்றை ஹேவ்லாக் எல்லிஸ், தம் நூல் ஒன்றில் மேற்கோளாகக் கொடுத்திருந்தார்: "ஒரு விஞ்ஞானி உண்மையை ஆர்வத்தோடு பார்க்கும் பார்வை, ஒரு பக்தன் இறைவனைப் பார்க்கும் பார்வைக்கும் ஒரு காதலி தன் காதலனைப் பார்க்கும் பார்வைக்கும் நிகராக இருக்கிறது."

இந்த மேற்கோளைப் படித்தவுடன் நான் டி.கே.சி-க்கு, "பல ஆண்டுகளுக்கு முன்னால் உங்களுக்கும் ராஜாஜிக்கும் ஒரு தர்க்கம் நடந்தது. அதில் ராஜாஜி அறிவுக் கட்சிக்கு வக்காலத்து வாங்கிப் பேசினார். நீங்கள் உணர்ச்சிக் கட்சிக்காக வாதாடினீர்கள். இப்போது ஐன்ஸ்டீன் உங்கள் கட்சியை ஆதரித்துவிட்டார்" என்று, ஐன்ஸ்டீன் சொன்ன கூற்றையும் மேற்கோள் காட்டி எழுதினேன். அதோடு நிற்காமல் திரு. ஈ.ஆர்.கோவிந்தன் நடத்தி வந்த, 'ஃப்ரீ இன்டியா' என்ற வாரப் பத்திரிகையில் 'டி.கே.சி. தி மேன் ஆஃப் லெட்டர்ஸ்' என்ற கட்டுரையை 'இன்காக்னிடோ' என்ற புனைப் பெயரில் வெளியிட்டேன். அதில் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டேன்.

இந்தப் பத்திரிகையை டி.கே.சி-க்கும் ராஜாஜிக்கும் அனுப்பிவிட்டார் பத்திரிகை ஆசிரியர். அப்போது ராஜாஜி வங்காள கவர்னராக இருந்தார். கட்டுரையைப் படித்துவிட்டு ராஜாஜி "ஏதோ தர்க்கத்துக்காக நான் எப்போதோ சொன்ன வாதத்தை இப்படி ஒரு பத்திரிகையில் எழுதி விளம்பரம் செய்திருக்க வேண்டாம்" என்று எழுதினார். உடனே டி.கே.சி. ராஜாஜிக்கு *5-4-1948*-ல் ஒரு கடிதம் எழுதினார்.

' 'ஃப்ரீ இன்டியாவில் என்னைப் பற்றி எழுதியவர் மகராஜ பிள்ளை (ஸ்ரீவில்லிபுத்தூர் டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பு) தங்களுக்கு நன்றாகத் தெரிந்தவர்தான். வி.வி.ஸ்ரீநிவாச ஐயங்காரிடத்திலும், தங்களிடத்திலும் மிக்க மதிப்புள்ளவர். இலக்கியக் கவன்

வீசும்போது லட்சியம் கொஞ்சம் அதிகமாகவே போய்விடும். ஏதோ தர்க்க முறையில் உணர்ச்சியைப் பற்றியும் அறிவைப் பற்றியும் பேசிக்கொண்டு இருப்பது வழக்கந்தானே நமக்கு? அந்தத் தர்க்க விளையாட்டை தன்னுடைய இலக்கிய வீச்சுக்குக் கொஞ்சம் உபயோகித்துக்கொண்டார். அவ்வளவுதான். உண்மையில் நம்முடைய லட்சியங்களில் ஒன்றாகக் கலந்து அனுபவிக்கிறவர் அவர் ஒருவர்தான் என்றால் மிகையாகாது. அவர் போன, இடம் எல்லாம்...' - இதற்கு மேல் ஒரு பக்கம் என் மேல் உள்ள அன்பைக் கொட்டிய எழுத்துக்கள்.

இப்படி என்னைப்பற்றி ஒரு கடிதம் எழுதியதை எனக்குத் தெரிவிப்பதில் டி.கே.சி. கொஞ்சம் தயங்கி இருக்கிறார்கள். ஆனால், மேற்சொன்ன கடிதத்துக்கு ஒரு நகலை 8-4-1948-ல் எனக்கு அனுப்பி, அதற்கான காரணத்தையும் கீழ்க்காணும்படி விளக்கினார்கள்:

"ராஜாஜிக்கு நான் எழுதிய கடிதத்துக்கு நகல் இத்துடன். என் அபிப்பிராயத்தை, அல்ல, அல்ல, என் உணர்ச்சியைக் கடிதம் விளக்கும்... அரசியல் நிர்வாகத்தில் மனம் புண்பட்டு இருக்கிறவர்களுக்குப் பழைய, கழிந்த விவகாரங்களை ஞாபகப் படுத்துவதில் மனத் தளர்ச்சி ஏற்படுவது இயல்பு. அது காரணமாகக் கொஞ்சம் தைலம் தேய்த்து இதம் செய்திருக்கிறேன். அப்படி எல்லாம் செய்ய வேண்டியதும் தொண்டுதானே? கடிதத்தில் அத்தகைய தொண்டு கொஞ்சம் செய்திருக்கிறேன். அவ்வளவு தான்." தமக்கு வேண்டியவர்களுக்கு இடையே உள்ள நல்லுறவை முறியாமல் பார்த்துக்கொள்வதில் டி.கே.சி-க்கு அவ்வளவு அக்கறை.

பி.ஸ்ரீ.ஆச்சார்யாவும் டி.கே.சி-யும் நெருங்கிய நண்பர்கள், மனம் ஒருமித்து இருந்தவர்கள். ஏதோ சில காரணங்களால் அவர்களுக்கு இடையே மனக் கசப்பு ஏற்பட்டது. ஆகவே, பல ஆண்டுகளாக இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்காமலேயே இருந்தார்கள். பிரிவாற்றாமையால் டி.கே.சி-க்கு ஏற்பட்ட வேதனை அப்படி இப்படியென்று சொல்ல முடியாது. இதை உணர்ந்த நான் 1952-ல் தென்காசி திருவள்ளுவர் கழகத்துப் பொன் விழாவுக்கு பி.ஸ்ரீ-யை அழைத்து மூன்று நாட்கள் டி.கே.சி-யோடு திருக்குற்றாலத்தில் தங்கும்படி ஏற்பாடு செய்தேன். டி.கே.சி. தமக்கு ஏற்பட்ட ஆனந்தத்தைக் குழந்தை உள்ளத்தோடு எனக்கு விவரித்தார்கள்:

"மகராஜ பிள்ளைவாள், (பிள்ளைப் பட்டத்தை நான் விரும்புவ தில்லை என்று எத்தனை முறை சொன்னாலும் டி.கே.சி-க்கு நான் சொல்வது காதில் விழுவதில்லை) நெருங்கிய நண்பர்களைப் பிரித்து வைப்பதில்தான் உலகத்தில் உள்ள பலருக்குச் சந்தோஷம்

உண்டாகிறது. ஆனால், பிரிந்திருந்த என்னையும், பி.ஸ்ரீ-யையும் நீங்கள் சேர்த்து வைத்தீர்களே, இதனால் என் வாழ்க்கையில் ஒரு பெரிய ஆனந்தம் கிடைத்துவிட்டது. மறக்க முடியாத ஆனந்தம்."

டி.கே.சி-க்கும் ராஜாஜிக்கும் இடையே நடந்த இன்னொரு சுவையான உரையாடல் நினைவுக்கு வருகிறது.

கன்னல் எனம் கருங் குருவி ககன மழைக்கு ஆற்றாது
மின்னல் எனும் புழு எடுத்து விளக்கு ஏற்றும் கார் காலம்

-என்ற தனிப் பாடலை டி.கே.சி. பாடி விளக்கிக் காட்டிக்கொண்டு இருந்தார்.

தூக்கணாங்குருவி இருட் காலத்தில் மின்மினிப் பூச்சியைத் தன் கூட்டில் செருகி விளக்கேற்றி வைக்குமாம். இதை நினைவில் வைத்திருந்த கவிஞர் இருட்டையே (கன்னலையே) ஒரு கருங் குருவியாகக் கற்பனை செய்கிறார். மாரிக் காலத்து மழைக்கு ஆற்றாமல் கன்னல் என்ற அந்தக் கருங் குருவி என்ன செய்கிறது? மின்னல் என்ற புழுவை (மின்மினிப் பூச்சியை) எடுத்து தன் கூட்டில் செருகி விளக்கேற்றுகிறதாம்.

இந்தக் கருத்தை தனக்கே உரிய பாணியில் டி.கே.சி. விளக்கிவிட்டு, ராஜாஜியைப் பார்த்து, "தமிழ் லெக்ஸிகனில் 'கன்னல்' என்ற சொல்லுக்கு அர்த்தம் போட்டிருப்பதைப் பார்த்தீர்களா?" என்று சொல்லிக் கொண்டே தமிழ் அகராதியை ராஜாஜி கையில் கொடுத்தார். அதில், கன்னல் என்றால் ஒரு வகைக் குருவி என்று சொல்லியிருந்தது! அதோடு இந்த அனர்த்தத்துக்கு உதாரணமாக 'கன்னல் எனும் கருங் குருவி' என்ற தனிப் பாடலை உதாரணமாகக் காட்டியிருந்தது. இதைப் பார்த்துவிட்டு ராஜாஜி இந்தப் பிழையில் இருந்த ரசத்தைச் சிரிடா சிரி என்று சிரித்து அனுபவித்தார்.

அப்போது, நான், "'மின்னல்' என்ற சொல்லுக்கு லெக்சிகனில் என்ன பொருள் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டுமே" என்றேன்.

ராஜாஜி, "எதற்காக?" என்று கேட்டார்கள்.

"இல்லை, 'மின்னல் என்பது ஒரு வகைப் புழு' என்று பொருள் கூறி, உதாரணத்துக்கு, 'மின்னல் எனும் புழுவெடுத்து' என்ற வரியை மேற்கோள் கூறி இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும்" என்று சொன்னேன்.

இதைக்கேட்ட டி.கே.சி. "பலே, பலே. நல்ல போடு போட்டீர்கள்" என்று சொல்லிக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

இப்படியாக ராஜாஜி - டி.கே.சி. சங்கத்தில் கழித்த நாட்கள் பலப் பல. அவர்கள் முன்னிலையில் காலம் என்ற தத்துவம் தங்கச் சக்கரம் பூண்டு வெள்ளித் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டு இருக்கும் என்று நான் அவர்களிடமே சொல்வதுண்டு. அவர்களும் அந்த முழு மனதோடு ஆமோதிப்பார்கள். இதய நாடிகள் சுருதி சேர்த்து பேசும்போது காலத் தத்துவத்தையே கடந்துவிடுகிறோம், அதாவது காலனை உதைத்துத் தள்ளிவிடுகிறோம்.

சென்னை காரணேஸ்வரன் கோயில் தெரு வீட்டில் நண்பர் மீ.ப.சோமசுந்தரம் (சோமு) இருந்தபோது, ராஜாஜி வாரந்தோறும் ஒரு நாள் சோமு வீட்டுக்கு வந்து மணிக்கணக்கில் பல அரிய விஷயங்களைப் பேசிக்கொண்டு இருப்பார். நான் புதுவை பிரதம நீதிபதியாக இருந்தபோது 4-10-1965-ல் சென்னைக்கு வந்து சோமு வீட்டில் தங்கியிருந்தேன். அன்று மாலை சுமார் 6 மணிக்கு ராஜாஜி அங்கு வந்தார். என்னைக் கண்டவுடன், ராஜாஜி, "ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சோமுவைச் சந்திக்கவில்லை என்றால் அந்த வாரம் எனக்குப் பூர்த்தியாவதில்லை" என்று சொல்லித் தமக்கும் சோமுவுக்கும் இருந்த அரிய இலக்கிய நட்பை மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்.

பிறகு, சமயத்தைப் பற்றி மூவருமே பேசிக்கொண்டு இருந்தோம். கீழ்க்காணும் கருத்தை ராஜாஜி அன்று வற்புறுத்திக்கொண்டு இருந்தார்கள்:

"எல்லா சமயங்களும் சரிசமமானவையே என்று பலர் சொல்லி வருகிறார்கள். இது ஒரு விளக்கெண்ணெய் சமரசம். தத்தம் சமயத்தில் நம்பிக்கை இல்லாதவர்களே இப்படிப் பேசி வருகிறார்கள். இது தவறு. கிறிஸ்துவன் கிறிஸ்துவத்தில் ஊன்றி நிற்க வேண்டும். முஸ்லிம் இஸ்லாமில் உறுதியோடு நிற்க வேண்டும். வைஷ்ணவன் அப்படியே வைஷ்ணவத்திலும், சைவன் அப்படியே சைவத்திலும் ஊன்றி நிற்க வேண்டும்."

இதைக்கேட்ட நான், "தாங்கள் சொல்வது முழுவதும் உண்மை. ஆனால், தாங்கள் சொல்கிற முறை சமயப் பூசலுக்கு இடங் கொடுக்குமோ என்று அஞ்சுகிறேன்" என்று சொன்னேன்.

உடனே ராஜாஜி, "அப்படியானால். எப்படி இந்த உண்மையைச் சொல்ல வேண்டும் என்று சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

"திருமூலர் இந்த உண்மையை வேறுவிதமாகச் சொல்கிறார்; கடவுள் ஒருவன்தான். மக்கள் தங்கள் பக்குவத்துக்கு ஏற்றபடி பல நாம ரூபங்களைக் கொடுக்கிறார்கள். அந்த இறைவன் என்னிடம் வந்து ஓர் உபதேசம் செய்தான். எனக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு.

அத்தனை நாமங்களையும் பிடித்துத் தொங்காதே. ஏதாவது ஒரு நாமத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள். அந்த நாமத்தில் முங்கி, முழுகி விளையாடு. அப்படிச் செய்தால் என்னுடைய அருள் முழுவதும் உனக்குக் கிடைக்கும் என்று உபதேசம் செய்தான்.

பேர் ஆயிரம் உடைப் பெம்மான் பேர் ஒன்றில்
ஆரா அருட் கடல் ஆடுகின்றானே

-என்று விளக்கம் கொடுக்கிறார். தாங்கள் சுட்டிய உண்மையை இப்படிச் சொல்லும்போது, சமயங்களுக்கு இடையே உள்ள பூசல்கள் தீரும்" என்று சொன்னேன்.

"அடடா, என்ன அருமையான திருமந்திரம் அது!" என்று பாட்டை வியந்து போற்றினார்கள் ராஜாஜி. அன்று ராஜாஜி எங்களை விட்டுப் போகும்போது இரவு மணி 12.15.

அடுத்த நாள் காலை தமிழக அரசின் நிதித் துறைச் செயலாளரும் எனது அருமை நண்பருமான திரு. வேங்கடரமணனைச் (ஐ.ஏ.எஸ்) சந்தித்தேன். முந்தின இரவு 6 மணி நேர உரையாடலைப் பற்றி அவரிடம் குறிப்பிட்டபோது, அவர், "அடேயப்பா! ஆறு மணி நேரமா!" என்று வியந்தார். அமெரிக்கத் தூதர், ராஜாஜியோடு அரை மணி நேரம் பேட்டி காண வேண்டும் என்று மிகவும் விரும்பினார். அவர் சார்பில் நான் ராஜாஜியிடம் தொடர்பு கொண்டேன். 15 நிமிஷத்துக்கு மேல் பேட்டி கொடுக்க முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் ராஜாஜி.

"நேற்று உங்களோடு செலவழித்த 6 மணி நேரத்தில் 15 நிமிஷத்தை ஒதுக்கி அமெரிக்கத் தூதருக்குக் கொடுத்திருக்கலாகாதா?" என்றார்.

"அமெரிக்கத் தூதரிடம் அரசியல் பேசுவதென்றால் எவ்வளவு எச்சரிக்கையாகப் பேச வேண்டும்? கணக்கு அறிந்து பேசுகிறவர் ராஜாஜி. ராஜாஜியின் உரையை உலகத்தில் உள்ள பத்திரிகைகள் எல்லாம் வெளியிடும். அதனால் இந்திய அரசுக்கே சங்கடங்கள் உண்டாகலாம்... ஆனால், சமயத்தைப் பற்றிப் பேசுவது ஆத்ம சாந்தியைக் கொடுக்கும். எச்சரிக்கைக்கு அவசியமில்லை" என்றேன்.

இதைக் கேட்ட பிறகும், "என்ன இருந்தாலும், கூடப் பதினைந்து நிமிடம் ராஜாஜி கொடுத்திருக்கலாம்" என்று சொல்லி, சடைத்துக் கொண்டார் நண்பர் வேங்கடரமணன்.

அமெரிக்கத் தூதர் மாத்திரமல்ல, நம்மவர்களுமே, 'ராஜாஜியைப் பேட்டி காண்பது அவ்வளவு எளிது அல்ல' என்று முணு முணுப்பார்கள். ஆனால், டி.கே.சி. மறைந்த பின் டி.கே.சி-யின்

சீடர்களைச் சந்திப்பதிலும் அவர்கள் மீது அன்பைப் பொழிவதிலும் தனி அக்கறை காட்டினார் ராஜாஜி. 1957-ல் சென்னையில் ராஜாஜியின் 77-ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம் நவரத்ன ராமராவின் தலைமையில் மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபாவில் நடந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்துக்கே வந்திருந்தார்கள். நான் புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு இதற்காகவே வந்திருந்தேன். சோமுவும் நானும் ஒன்றாகக் கூட்டத்துக்குப் போனோம். மேடையில் அமர்ந்திருந்த ராஜாஜி எங்களைப் பார்த்ததும் எங்களையும் மேடையில் வந்து அமரும்படி சொன்னார்.

மேடையில் ஒரு படே, படே பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவர் இந்தியாவில் பல உயர்ந்த பதவிகளை எல்லாம் வகித்து ஓய்வு பெற்றவர். அவரிடத்தில் என்னை ராஜாஜி அறிமுகப்படுத்தினார்.

“இவர்தான் மகராஜன். புதுக்கோட்டை சப் ஜட்ஜாக இருக்கிறார்” என்று ராஜாஜி சொல்லியும் அந்தப் பெரியவர் ‘உம்’ என்றுகூடக் கேட்கவில்லை. மறுபடியும் அறிமுகப்படுத்தினார் ராஜாஜி. அந்தப் பெரியவர் என்னை ஓர் உருப்படியாகவே எண்ணவில்லை. அவர் வகித்து வந்த பதவிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சப் ஜட்ஜெல்லாம் சுண்டைக்காய்க்குச் சமானம். இருந்தாலும் மனுஷத் தரத்துக்கு மதிப்பு வைத்து, “அப்படியா!” என்று சொல்லித் தலையை ஆட்டி இருக்கலாம் அந்தப் பெரியவர். அப்படிச் செய்யவில்லை என்று எனக்குக் கொஞ்சம் வருத்தந்தான்.

ராஜாஜிக்கு கறுப்புக் கண்ணாடி மறைத்துக்கொண்டு இருந்ததால், என்னைக் காட்டிலும் அவருக்கு வருத்தம் என்பதை உடனே நான் தெரிந்துகொள்ளவில்லை. கூட்டம் விமரிசையாக இரண்டு மணி நேரம் நடந்தது. அதன் பிறகு அந்தப் பெரியவரும் மற்றவர்களும புடை சூழ ராஜாஜி மேடையிலிருந்து இறங்கி சபை வாசலை அடைந்தார். கூட்டத்தில் நான் பின் தங்கிவிட்டேன். தம்முடைய காருக்கு போனதும் ராஜாஜி, “மகராஜன் எங்கே... மகராஜன் எங்கே?” என்று கேட்டார். உடனே பலர் ஓடோடியும் வந்து என்னை ராஜாஜி இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

என்னை லட்சியம் செய்யாமலிருந்த பெரியவர் அங்கு நின்று கொண்டு இருந்தார். அவரும் இப்போது என்னைக் கவனிக்கத் தொடங்கினார். ராஜாஜியின் ஃபியட் காரில் பின் சீட்டில் வலது ஓரத்தில் ராஜாஜி அமர்வதற்காக ஒரு பலகைச் சட்டமும் அதில் ஒரு திண்டும் இருந்தன. ராஜாஜி காரின் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு என்னைப் பார்த்து, “மகராஜன்! நீங்கள் அந்த சீட்டில் உட்கார வேண்டும்” என்றார்.

“தாங்கள் உட்கார வேண்டிய சீட் அல்லவா அது? நான் இடது ஓரத்தில் உட்காருகிறேன்” என்றேன்.

“இல்லை, என் ஆசனத்தில்தான் நீங்கள் உட்கார வேண்டும்” என்று என்னைக் கட்டாயப்படுத்தி அங்கே அமரச் செய்துவிட்டு, தாம் காரின் பின்புறமாகச் சுற்றி வந்து, கதவைத் திறந்து, இடது ஓரத்தில் உட்கார்ந்துகொண்டார்.

கார் ‘கல்கி’ அலுவலகத்துக்குச் சென்றது. அங்கே சுமார் 50 பேருக்கு அன்று விருந்து. ஒரு மேஜையைச் சுற்றி நான்கு நாற்காலிகள் போட்டு நால்வர் அமர்ந்து உண்பதற்காக ஏற்பாடு செய்திருந்தார்கள். மற்றவர்கள் எல்லோரும் தரையில் விரித்திருந்த பாயில் உட்கார்ந்து சாப்பிட வேண்டியது. ராஜாஜி சதாசிவம் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னார். உடனே, சதாசிவம் ராஜாஜி, நவரத்னராமராவ், மோனிகா ஃபெல்டன் என்ற ஓர் ஆங்கிலப் பெண், நான் ஆகிய நால்வரையும் அந்த நாற்காலிகளில் அமரும்படி செய்தார்.

என்னை ராஜாஜி அறிமுகப்படுத்தியும் பராமுகமாக இருந்தாரே, அந்தப் பெரியவர்தான் அன்று நியாயமாக நாற்காலியில் உட்கார்ந்து சாப்பிட வேண்டியவர். ஆனால், அவரைக் கீழேயே உட்கார்த்தி வைத்துவிட்டார். என்னை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் காட்டிலும் என்னை அவமதித்தவருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணமே ராஜாஜியின் உள்ளத்தில் மேலோங்கி நின்றது. இப்படி எல்லாம் அமரர் டி.கே.சி-யின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தினார் ராஜாஜி.

‘கல்கி’யில் ராஜாஜி எழுதிய கட்டுரை ஒன்றைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதியிருந்தேன். “தங்கப் பதக்கம் போன்ற தங்கள் கடிதம் கிடைத்தது” என்று பதில் வந்தது. அந்த வாக்கியத்துக்குள்ளேதான் எவ்வளவு செறிவு! ராஜாஜிக்கு தமிழில் பெரும் புலமையிருந்தது என்று சொல்ல முடியாது. ஆனால், அவர்களுடைய அறிவின் மேதாவிலாசம் தமிழ் மொழியைப் புதுக் குரலோடு பேசச் செய்தது.

ராஜாஜியின் அறிவு எப்போதும் விழிப்பு நிலையில் இருக்கும்; அதோடு, மின்னல் வெட்டும் வேகத்தில் அது இயங்கும். 1959-ல் நான் வட ஆர்காடு மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாக இருந்தேன். அப்போது உள் நாட்டுத் துறை அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் சென்னை கம்பன் கழகத்தில் நிரந்தரத் தலைவராக இருந்தார். அவர்கள் அனுப்பிய அழைப்பின் பேரில் இரண்டு நாள் கம்பன் விழாவுக்குத் தலைமை தாங்குவதற்காக நான் சென்னைக்கு வந்திருந்தேன். விழா ராஜாஜி ஹாலில் நடந்தது. ஹால் நிரம்பி

வழிந்தது. 2-வது நாள் விழாவில் பேசிய ஒரு நல்லறிஞர் கும்பகர்ணனுடைய குணாதிசயங்களைப் பற்றிப் புகழ்ந்து பேசி, தமிழர் சமுதாயத்துக்கு ஒரு லட்சிய வீரனாக கும்பகர்ணனையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார். என்னுடைய முடிவுரையில் நான் சொன்னேன்:

"கும்பகர்ணனை மெச்சத்தக்க பாத்திரமாக கம்பர் படைத்து விட்டார், உண்மைதான். ஆனால், அவனைக் காட்டிலும் போற்றத் தக்க பாத்திரமாக விபீஷணனைப் படைத்திருக்கிறார். லட்சியம் என்று எடுத்துக்கொண்டால், விபீஷணனே கும்பகர்ணனைக் காட்டிலும் ஓங்கி உயர்ந்து நிற்கிறான். அறத்துக்கு ஏதாவது ஆபத்து வந்தால் அதைப் பாதுகாப்பதற்காக எதையும் தியாகம் செய்ய முடிந்தது அவனால். தன் அண்ணன், தம்பி, குடும்பம், ஏன், தன் இனத்தையே தியாகம் செய்தான். நம்முடைய குற்றங் குறைகள், ஆசாபாசங்கள் எல்லாம் கும்பகர்ணனிடம் இருப்பதால், அவனிடத்தில் நமக்குப் பரிவு ஏற்படுகிறது. விபீஷணனோ நமக்கு எட்டாத உயரத்தில் இருக்கிறான், ஆகையால் அவனிடத்தில் நமக்குக் கோபமே உண்டாகிறது.

இருந்தாலும் தமிழ் சமுதாயத்துக்கு லட்சிய வீரனாக ஒருவனை நாம் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அது கும்பகர்ணனாக இருக்கக் கூடாது. விபீஷணனாகவே இருக்க வேண்டும்..."

இவ்வாறு நான் பேசிக்கொண்டு இருந்தபோதே கும்பகர்ணனைப் போற்றிப் பேசிய அறிஞர் என் பேச்சில் குறுக்கிட்டு, "நீங்கள் சொல்வது தவறு. இதைப் பற்றி விவாதம் நடத்த வேண்டும் என்று உங்களுக்குச் சவால்விடுகிறேன்" என்று முழங்கினார். அவர் சவாலை ஏற்று எனக்குத் தெரிந்த பதிலைச் சொன்னேன். இந்த நிகழ்ச்சியால் கூட்டத்தில் பெருத்த பரபரப்பு உண்டாயிற்று. அடுத்த நாள் காலையில் ஒரு பத்திரிகையில் இந்தக் கூட்டத்தில் நடந்ததைக் கொட்டை எழுத்தில் வெளியிட்டிருந்தார்கள்.

காமராஜர் முதலமைச்சராக இருந்த காலம். ராஜாஜி காமராஜரையும் காங்கிரசையும் கடுமையாக எதிர்த்துக்கொண்டு இருந்த காலம். விழாவுக்கு அடுத்த நாள் முற்பகல் 11 மணிக்கு நானும் சோமுவும் ராஜாஜியைச் சந்தித்தோம். விழாவில் நடந்த சர்ச்சையைப் பற்றி ராஜாஜி குறிப்பிட்டுவிட்டு, சோமுவைப் பார்த்து, "கும்பகர்ணனுக்குப் பரிந்து பேசினாரே, அவர் என்ன வேலை பார்க்கிறார்?" என்று கேட்டார்.

சோமு, "தமிழக அரசாங்கத்தில் உயர்ந்த வேலையில் இருக்கிறார் அவர்" என்று சொன்னதும், ராஜாஜி "ஓ! அப்படியா? ராவண

தர்பாரில் அவர் வேலை பார்க்கிறாரா?" என்று கொஞ்சம் கோபம் கலந்த சிரிப்போடு கேட்டார். இப்படியாக அவர்ருடைய பயங்கர அறிவு மண்ணுக்கும் விண்ணுக்கும் மின்னல் பாய்ச்சலில் பாய்ந்துகொண்டே இருக்கும்.

ரசிகமணி மறைந்து 13 ஆண்டுகளுக்குப் பின்னால், ராஜாஜி 10-9-67 'கல்கி' மலரில், 'பூரண ஹரியும் பூரண ரசிகமணியும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். ராமாவதாரம் பூரண அவதாரம் இல்லை என்றும், கிருஷ்ணாவதாரமே பூரண அவதாரம் என்றும் அந்தக் கட்டுரை விளக்குகிறது. அவ்வாறு விளக்கிவிட்டு டி.கே.சி-யையும் கண்ணனையும் ஒரே பீடத்தில் அமர்த்தி வைக்கிறது. கட்டுரையின் தொடக்க வாசகம் இது:

'சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்த நாள். அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க் கவிதை தரும் மகிழ்ச்சியின் ரகசியம், தமிழ் வசன நடை முன்னேற்றத்தின் ரகசியம். தாளமும் ராகமும் சேர்ந்த நல்லிசையின் ரகசியம். அன்பின் பரம மகிழ்ச்சி, வேஷங்களின் பொய்மை அனைத்தையும் நன்றாகக் கண்ட பூரண ரசிகமணி டி.கே.சி. பிறந்த நாளும் அன்றைக்குத்தான்...'

ராஜாஜி தம் கட்டுரையில் கண்ண பகவான் ரோகிணி நட்சத்திரத்தில் அவதரித்தான் என்றும் ரோகிணி நட்சத்திரக் கூட்டம் வண்டியைப்போல் இருப்பதாலும் வண்டியின் முக்கிய பாகம் அச்சு மரம் ஆகையாலும், கண்ணனை, 'அதோக்ஷஜ!' அல்லது அச்சு மரத்தடியில் அவதரித்தவன் என்று சொல்வது உண்டு என்றும் கூறிவிட்டு, கட்டுரையைக் கீழ்க்காணும்படி முடிக்கிறார்:

"இந்த அச்சு மரத்தடியில் மற்றொருவர் அவதரித்தார். தமிழ்க் கவிக் காதலர் டி.கே.சி. என்ற பெயரைப் பெற்ற மகான் சிதம்பரநாத முதலியார். இவர்தான் 'கல்கி' கூட்டத்தின் குலபதியாக இருந்து பல்லாண்டு அந்தப் பத்திரிகையையும் அதை நடத்தியவர்களையும் அதைப் படித்தவர்களையும் ஆசீர்வதித்து வந்தார். அவரைக் 'கல்கி' மறக்க முடியுமா? ஸ்ரீஜயந்தி என்றால் கண்ணன் பிறந்த நாள், டி.கே.சி. பிறந்த நாள். என்றும் தமிழர் கொண்டாட வேண்டிய நாள்."

கண்ணனோடு டி.கே.சி-யை இணைத்து எழுதிய பரம பாகவதரான ராஜாஜியின் துணிச்சலைப் பாராட்டி, தாங்கள் பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்தி நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்குப் பதிலாக ராஜாஜியிடமிருந்து வந்த கடிதம் இதோ:

'தங்களுடைய கடிதம் படித்து, அமிர்தம் குடித்த தேவர்கள்போல், உன்மத்தம் ஏறி, என்ன எழுதுவது என்று தெரியாமல் திகைக்கிறேன். மகராஜனுக்கு பல்லாண்டு.

ராஜகோபாலாசாரி'

இந்தக் கடிதத்தில் ஒரு பின் குறிப்பும் இருந்தது: 'தங்கள் கடிதத்தை சோமுவும் பார்த்து ஆனந்தம் பொங்கி மகிழ்ந்தார்.'

இவ்வாறு எல்லாம் எழுதி அருளிய ராஜாஜியும், டி.கே.சி-யைப்போல அமரத்துவம் அடைந்துவிட்டார்கள். சௌந்தர்யத்தோடு சத்தியம் கலந்ததுபோல ஆனந்தத்தோடு அறிவு கலந்துவிட்டது. ராஜாஜி நூற்றாண்டு விழாவில் இந்த இனிய உணர்வு நமது இதயத்தைப் புனிதப்படுத்துமாக.

11. டி.கே.சி–யும் மேற்கோள்களும்

பல ஆண்டுகளுக்கு முன் புனலூர் பேப்பர் மில்லுக்குப் போயிருந்தேன். அங்கு நான் கண்ட காட்சி என் கண்ணுக்குள்ளேயே இன்னும் நின்றுகொண்டு இருக்கிறது. வைக்கோல் சண்டு, கந்தல் துணி, கூளம் முதலியவற்றை ஒரு தொட்டியில் கொட்டுவார்கள். இந்தக் குப்பை, குழாய்கள் வழியாகப் பல யந்திரங்களுக்குள்ளே புகுந்து சில நிமிஷங்களில் வெளியே வந்து விழும். வெளியில் வருகிறதென்றால், குப்பையாக வராது; வெள்ளை, வெளேர் என்று பேப்பராக வரும். ரீம் ரீமாக குபுகுபு என்று இன்னொரு தொட்டியில் வந்து விழும். அழுக்கு நிறைந்த கந்தலும் கூளமும் சில நிமிடங்களில் நிர்மலமான பேப்பராக மாறி கண்ணைக் கவரும் வெள்ளி அருவியைப்போல வெளியே வந்து பாயும் காட்சியை அனுபவித்துக் கொண்டே இருக்கலாம்; கண்கொள்ளாத காட்சி அது.

ரசிகமணியோடு நான் பழகிக்கொண்டு இருந்த 20 ஆண்டுகளும், மேற்சொன்ன விந்தை எனக்கு அடிக்கடி நினைவுக்கு வரும். நான் அரைகுறையாகப் புரிந்துகொண்டு இருந்த ஆங்கில மேற்கோள்களை அவர்களிடம் சமர்ப்பணம் செய்வேன். அவற்றை அவர்கள் உள்ளத்தினுள் வாங்கி, சில விநாடிகளில் ஜீரணம் செய்து, திரும்பவும் நம்மிடம் விநியோகம் செய்யும்போது, ஒரே அதிசயமாக இருக்கும். ஆழ்ந்த அறிவும், புத்திகூர்மையும், பரந்த அனுபவமும், கலை உணர்வும், கற்பனை வளமும் நிறைந்த அந்த மேதையின் உள்ளத்தில் மேற்கோள் புகுந்து பவனி வந்த மாத்திரத்தில்,

மேற்கோளுக்கு அதற்கு முன்பு இல்லாத பக்குவமும் கனிவும் புதுமையும் ஏற்பட்டுவிடும். டி.கே.சி-யின் அனுபவ முத்திரை பெற்று, உண்மை ஒளி வீசி, ஒய்யார நடை போட்டு வெளிவரும் மேற்கோள்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் டி.கே.சி-க்கு எழுதிய கடிதத்தில் ஓர் ஆங்கிலேயர் சொன்ன, 'Sense of humour was given to man to console him for what he is', என்ற வாசகத்தைக் குறிப்பிட்டு இருந்தேன். அதாவது, மனிதனிடத்தில் எத்தனையோ குறைபாடுகள் உண்டு, குறைபாடுகளையே நினைந்து அவன் வாடி வதங்கிப் போய்விடக் கூடாதே என்று அஞ்சி, ஆறுதலுக்காக அவனுக்கு ஹாஸ்ய உணர்ச்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவே அந்த வாசகத்தின் பொருள்.

இந்த மேற்கோளைப் படித்துவிட்டு எனக்குக் கீழ்க்காணும் கடிதம் எழுதினார்கள் டி.கே.சி:

"ஆட்டினிடத்துப் பால் மடி இருக்கத்தானே செய்கிறது. அதை விட்டுவிட்டு, கழுத்தில் தொங்கும் 'அதரை'ச் சுவைத்துக்கொண்டு இருப்பானேன். கர்மவினைதான். இந்த விசித்திரக் காட்சியைத்தான் தமிழ் நாடு எங்கும் காண்கிறோம். நாம் பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டிய காரியம் எத்தனையோ இருக்கின்றன. ஆனால், எத்தனையோ விதத்தில் அசுவாரசியமாக இருக்கிற உலகத்தில் இந்தக் காட்சி நமக்குக் கிடைக்கிறதல்லவா?

தங்கள் மேற்கொள் வெகு ரசமாக, உண்மையை எடுத்துச் சொல்லுகிறது.

மேலே சொன்ன காட்சியைப் பார்க்கிறதென்றும் ஏற்பட்டு, சிரிக்கவும் முடியாது போயிருந்தால், நம்முடைய பாடு எப்படி இருந்திருக்கும்? விதியின் கருணையை நாம் ரொம்பவும் பாராட்ட வேண்டும்."

டி.கே.சி-யின் உள்ளத்தில் புகுந்து புதிய வீச்சோடு மேற்கோள் வெளிவருகிறது.

'ட்ரூத் இஸ் ப்யூட்டி' என்று கீட்ஸ் சொன்ன சூத்திரத்தை அந்தக் காலத்தில் எங்கள் ஆசிரியர்கள் எங்களுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள்; கிளிப்பிள்ளைபோலச் சொல்வார்கள். நாங்களும் பொருள் விளங்கிவிட்டது போன்ற மயக்கத்தில் இருப்போம். அந்தச் சூத்திரத்துள் இருக்கும் நீள, அகல, ஆழங்களை அனுபவ ரீதியாக நாங்கள் கண்டுகொள்ளவில்லை. என் தமக்கையாருக்கு எழுதிய கடிதத்தில் டி.கே.சி. மேற்படி சூத்திரத்தை எப்படி விளக்குகிறார்கள் என்று பார்ப்போம்.

'ட்ரூத் இஸ் ப்யூட்டி' என்ற ஒரு பெரிய உண்மையை கீட்ஸ் என்ற கவிஞர் சிறு பிராயத்திலேயே எப்படியோ கண்டுவிட்டார். அழகாகவும் அழுத்தமாகவும் வெளியிட்டுவிட்டார். ஆனால், புரொஃபசர்கள் பாடும் மாணவர்கள் பாடும் கஷ்டமாகப் போய்விட்டது. இன்றைக்கும் அது விளங்காத காரியந்தான். 'ட்ரூத்' என்பதை என்றைக்காவது கண்டிருந்தால் அல்லவா 'ப்யூட்டி' என்பதைக் காண முடியும். இரண்டையும் காணாத 'சௌகரியமான' நிலையில் இருக்கிறார்கள் அவர்கள்.

கலிங்கத்துப்பரணி ஆசிரியர் சிங்காரம் சுவைபடப் பாடுவதில் வெகு சமர்த்தர். ஆனாலும் பேய்களையும் அவற்றின் கோர சொரூபங்களையும் வர்ணிப்பதில் அவர் இணை இல்லாதவர் என்றே சொல்லிவிடலாம். அவ்வளவு அழகாக இருக்கும் கோர வர்ணனை.

கோம்பி பாம்பிடைக் கோத்தணி தாலிய

(கோம்பி - பச்சோந்தி)

தாலியை எப்படி அற்புதமாக வர்ணித்துவிட்டார் !

மனக் கண்ணால் பேயையும் தாலியையும் பார்த்தார். அந்த உண்மையைப் பாடிவிட்டார். ட்ரூத் இஸ் ப்யூட்டி - சந்தேகமே இல்லை!

கீட்ஸ் சொல்லிய வாக்கியம் காலேஜ்காரர்களுக்கும் யூனிவர்சிடிக் காரர்களுக்கும் புதிர்தான் என்று தங்களுக்குத் தெரியாது; ஆனால், தம்பிக்குத் தெரிந்த காரியந்தான்.

'அருமைச் சுப்பு, பேபியைப்பற்றிய உண்மைகளையே கொட்டுவாள். அவளுடைய வார்த்தைகள்தான் உண்மை பொதிந்தன, அழகு வாய்ந்தன. சந்தேகமே இல்லை. என்னுடைய வார்த்தைகளும் அப்படிப்பட்டவைதான்; ஆனால், நானே எப்படிச் சொல்லிக்கொள்வது. அங்கேதான் கஷ்டம்."

டி.கே.சி-க்குத் தன் சத்திய தரிசனத்தில் உள்ள நம்பிக்கையை நினைக்கும்போது நமக்கு உடம்பு புல்லரிக்கிறது.

ஐன்ஸ்டீன் சொன்ன கூற்றை மேற்கோள் காட்டி இருந்தேன் ஒரு கடிதத்தில். 'The emotional condition which fits a scientist for his task is akin to that of a devotee or a lover' என்று சொன்னார் ஐன்ஸ்டீன். 'புதுக் கண்டுபிடிப்புகளை நோக்கி ஆர்வத்தோடு விரைந்துகொண்டு இருக்கும் விஞ்ஞானியின் உளப் பாங்கு ஒரு பக்தனுடைய அல்லது காதலனுடைய உளப் பாங்குக்கு நிகர்த்தது' என்பது அர்த்தம். இதைப் படித்துவிட்டு டி.கே.சி. எனக்கு எழுதிய பதில் கீழ்வருமாறு:

"ஏது, ஐன்ஸ்டீனுக்குப் பக்தி இன்னது என்று தெரிகிறது! அதோடு, காதல்கூட தெரிகிறது! தமிழே தெரியுமா அவருக்கு! பக்திப் பாட்டும் காதல் பாட்டும் தமிழில்தானே இருக்கிறது. தமிழில் இருக்கும் வடிவம் ஆங்கிலத்தில் இல்லை, வங்காளத்தில் இல்லை, வடமொழியில் இல்லை என்று உறுதியாகச் சொல்கிறார்கள் ஆர்.வி.சாஸ்திரிகள்."

கடைசியாக, ஒரு மேற்கோள். 'பெரினியல் பிலாசபி' என்ற தலைப்பில் ஆல்டஸ் ஹக்ஸ்லி எழுதிய நூலைப் படித்துவிட்டு, அதில் உள்ள ஆழமான வாசகம் ஒன்றை எடுத்து டி.கே.சி-க்கு எழுதி இருந்தேன். 'Knowledge is a function of being' என்பது வாசகம். 'வாழ்வின் செயற்பாடு அறிவு' என்பது பொருள். செறிவு நிறைந்த கூற்று அது. அதன் முழு உண்மையையும் நான் புரிந்துகொள்ள முடியவில்லை. டி.கே.சி-யிடம் அதைச் சொல்லி, அவர்களுடைய நுண்ணிய கலை உள்ளம் அதை எப்படி வாங்கிக்கொள்கிறது என்பதை அறிந்துகொள்வதற்காகவே, மேற்படி வாசகத்தை எழுதி அனுப்பி, அவர்களுடைய கருத்தென்ன என்று கேட்டிருந்தேன்.

அவர்களுடைய அற்புதமான பதில் பின்வருமாறு:

"ஆல்டஸ் ஹக்ஸ்லி சொன்னது மிகவும் அடிப்படையான உண்மையைத் தழுவி நிற்கிறது.

ஒரு குழந்தையை அறிகிற காரியத்தைப் பார்த்தால், ஆடவர் அறிகிறது ஒரு விதம், பெண்டிர் அறிகிறது முற்றிலும் வேறு விதம். இரண்டுக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்லலாம். நாம் நம்முடைய அமைப்பில் விநாடிதோறும் மாறுகிறோம்; 'ஆஸிட்', 'ஆல்கலி' முதலான தாதுக்களின் அளவு மாறுகிறது. ஆகவே, உணர்ச்சி மாறும், அறிகிற புலனும் மாறவே செய்யும். நேற்று ஒரு செய்யுளை அனுபவித்தேன். அதை இன்று அனுபவிப்பது வேறு விதத்தில்தான்.

ஒரு மனுதனுடைய அறிவே அப்படி வேறுபடும்போது, மனுதர்கள்தோறும் அறிவு மாறுபடும். ஆனாலும், நாம் சேர்ந்து ஒரு கலை உருவத்தை, கவியை, சங்கீதத்தை இணைந்து அறிகிறோம். அது பெரிய காரியம். அவ்வளவுக்கு நாம் அந்த பிரம்மனுக்கு நன்றி செலுத்த வேண்டும். கலையாவது ஒரு ஏகதேச அளவுகோலை நமக்கு அளித்திருக்கிறதே! மிக்க சந்தோஷம்.

தமிழ் ஸ்காலர்களுக்கும் நமக்கும் ஸ்நானப்ராப்தி இல்லை என்ற கணக்கில் நாம் எல்லோருமே இருந்துவிட்டால் காரியம் என்ன ஆகும்?

ஒரு வாரத்துக்கு முன் டி.எம்.கிருஷ்ணசாமி ஐயரைப் பார்க்கப் போயிருந்தேன். நடராஜனும் பலராமும் உடன் வந்திருந்தார்கள்.

திருப்புகழ் மணியிடம்,

மன்றல் குழல் கமழும் வள்ளிக்கு வாய்த்தவனை...

-என்ற பாடலைப் பாடிக் காட்டினேன். அவர்கள் முகத்தில் அரிய ஓர் ஆனந்தம் வந்து விம்மிவிட்டது.

பாடலை எழுதிக் கொடுக்கச் சொன்னார்கள், எழுதிக் கொடுத்தேன், பிறகு, நடராஜனைப் பார்த்து, 'ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் தாத்தாவிடம் ஒரு காகிதத்தைக் கொடு, ஒரு பாடலை எழுதச் சொல்லு. அதை அப்படியே எனக்குப் போஸ்டில் அனுப்பிவிடு' என்று ஆர்வத்தோடு சொன்னார்கள்.

திருப்புகழ் மணியும் தன்னுடைய அமைப்புக்குத் தக்கபடி பாடலை அறிந்தார்கள், அதாவது அனுபவித்தார்கள், அப்படிக் கிடக்கிறது ஹக்ஸ்லியின் வாக்கியத்தின் பொருள். ஹக்ஸ்லி சொன்ன வாக்கியத்தை ஆராய, ஆராய அனுபவம் விரிந்து கொண்டே போகும்; நல்ல ரசமான ஆராய்ச்சி."

இப்படியாக டி.கே.சி-யோடு இலக்கியக் கொடுக்கல் வாங்கல் செய்தவர்களுடைய அனுபவமும் விரிந்துகொண்டே போகும்.

12. சமயச் சடங்குகளும் டி.கே.சி–யும்

❖ **பி**ரான்ஸ் நாட்டில் 19-ம் நூற்றாண்டில் ஒரு டி.கே.சி. வாழ்ந்தார். அவருடைய பெயர் மல்லார்மே (Mallarme). மிகச் சிறந்த ரசிகர்; கவியுங்கூட. 'கவிதையே என்னுடைய சமயம்' என்று துணிந்து கூறியவர். கவிதையின் உளப்பாட்டை உள்ளுணர்வோடு அறிந்த காரணத்தால் அவர் அப்படித் துணிந்து கூறினார். அதோடு நிற்கவில்லை. உணர்வற்றவர்கள் கவிதையோடு பழகும்போது கவிதாதேவிக்கே அபாயம் ஏற்படும் என்று உணர்ந்தவர் அவர். ஆகவேதான், அவர்,"கவிதைக்கென்று தனிச் சடங்குகள் உண்டாக்கி அதைத் திரைபோட்டுப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால், கவிதை உணர்வு அற்றவர்கள் கவிதையில் கைவைத்து அதைத் தீட்டுப்படுத்திவிடுவார்கள்" என்றார்.

உண்மைகளைக் கண்டு அனுபவித்த நம் முன்னோர்களுக்கும் 'மல்லார்மே'வுக்கு ஏற்பட்ட அதே அச்சம் ஏற்பட்டது. புல்லர்கள் அந்த உண்மைகளின் புனிதத் தன்மையை உணராமல் அவற்றை உதாசீனம் செய்துவிடுவார்களே அல்லது கேவலப்படுத்தி

விடுவார்களே என்று பயந்தார்கள். ஆகவே, அவர்கள் அழகிய சடங்குகளைக் கற்பனை செய்து, அந்தச் சடங்குகளுக்குள் உண்மைகளைப் பொதித்துவைத்துக் காபந்து செய்திருக்கிறார்கள்.

ஆனால், நாளாவட்டத்தில், சடங்குகளின் பொருள் நமக்குப் புலப்படாமல் போய்விட்டது; சடங்குக்குள் இருக்கும் உண்மையையும் நாம் அனுபவிக்க இயலாமல் போய்விட்டோம். டி.கே.சி-யைப் போன்ற ஞானிகள், அவற்றை விளக்கும்போதுதான், நமக்குச் சடங்குகளின் மர்மம் தெரிகிறது. தெரிந்ததும் தெளிவும் ஆனந்தமும் ஏற்படுகின்றன.

'நம்முடைய வீட்டுச் சடங்குகள், கோயில் வழிபாடுகள், சமயக் குறியீடுகள், இவற்றில் எல்லாம் (மக்கள் எவ்வளவு தவறாக எண்ணி நடந்தபோதிலும்) ஓர் அடிப்படை உண்மை, அதாவது, பயன் இருக்கவே செய்யும். காலதேச வர்த்தமானங்களுக்கு உரிய 'டிஸ்கவுன்டு'களைக் கழித்துப் பார்த்தால், நம் முன்னோர்களைவிட பண்பட்டவர்கள் கிடையாது என்றே சொல்லத் தோன்றும்' என்று டி.கே.சி. ஒரு கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

சமுதாய வளர்ச்சியில் சடங்குகளுக்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு என்பதைக் கண்டவர்கள் டி.கே.சி. ஆனால், சடங்குகளின் பொருளை இழந்துவிட்டு சடங்குகளை மாத்திரம் உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு தொங்குகிற சமுதாயம் டி.கே.சி-யின் ஏளனத்துக்கு இலக்காகிறது. நண்பர் சதாசிவம் வீட்டில் நடந்த ஒரு திருமணத்தைப்பற்றி டி.கே.சி. எழுதிய கடிதம் வருமாறு:

'இங்கே ஒரே கும்மாளிதான். எல்லாருமாகச் சேர்ந்து பெண்ணைத் தாக்குகிறது. மாப்பிள்ளையும் அதில் கலந்துகொள்வான். அப்படியே மாப்பிள்ளைக்கும் மண்டகப்படி நடக்கும். அதில் பெண் சேர்ந்து கொள்ளும். அப்படியானால், கும்மாளிக்குக் கேட்பானேன். இந்த வேடிக்கைகளைப் பார்க்க ரூ. 5 கொடுத்து டிக்கெட் வாங்கலாம். இப்படி எல்லாம் கோலாகலமாக இருக்கிற சந்தர்ப்பத்தில், கரடியை பிராமண போஜனத்தில் விட்ட மாதிரி, பத்துப் புரோகிதர்கள் இன்று காலை வந்து மாப்பிள்ளைக்காக ஒரு கிரியை நடத்தினார்கள். ஓமம் வளர்த்தார்கள். காற்றுவாக்கில் மாப்பிள்ளை, சதாசிவம், எம்.எஸ். மூன்று பேரையும் ஓம குண்டத்தை ஒட்டி உட்காரச் செய்தார்கள். ஓம அக்னியும், புகையும் மூவரையும் வேண்டுமென்றே தாக்கின. அவற்றோடு வன்மம் நிற்கவில்லை. புரோகிதர் சமஸ்கிருதத்தில் மந்திரங்களை அசுரக் குரலில் உச்சரித்தார்.

அனேகமாக, 'இங்கே உட்கார், எழுந்திரு, உட்கார், கையை நீட்டு, என் கையில் போடு, கிழக்கே பார்த்து உட்கார், அவர் கையில் இதைப் போடு' என்பதற்கான மந்திரங்கள். வளைத்து, வளைத்து சொல்லிக்கொண்டே இருந்தார்கள். 2½ மணி நேரம் எல்லாரையும் பாடாய்ப்படுத்திவிட்டார்கள். பொருளோ இல்லை, மடக்கி மடக்கிச் சொல்லலாம், யாருக்கும் விளங்குவதில்லை. இப்படி ஒரு சமுதாயத்தைப் பல நூற்றாண்டுகளாக, ஹிம்சைக்கு உள்ளாக்கி இருக்கிறார்கள். பிறகு, யோசனை ஏது? எல்லாம் கிளிப்பிள்ளை மயம். சமஸ்கிருதம் விட்ட பாக்கியை, இங்கிலீஷ் வந்து பூர்த்தி செய்துவிட்டது. ஆனால், சங்க நூல்கள் வந்து அவர்களை ஒன்றும் செய்யவில்லை. அவ்வளவுக்கு அவர்கள் தப்பினார்கள்.'

நமக்கோ, ஓமகுண்டம், சமஸ்கிருதம், இங்கிலீஷ், சங்கத் தமிழ் நாலுமே வந்து குட்டிச்சுவர் அடித்துவிட்டன. உண்மையில், கிரியைகள் சந்தோஷத்தை உண்டுபண்ண வேண்டும். பொருள் இருக்க வேண்டும். எல்லாரும் அனுபவிக்க வேண்டும். இதற்கு எல்லாம் நேர்மாறாக நம்மை ஹிம்சைக்கு உள்ளாக்குகின்றன.

கிரியைகள், அலங்காரமாக ஆனந்தத்தை விளைக்கக்கூடியனவாக இருந்துவிட்டால், நம்முடையவர்களுக்கு புத்தியே வந்துவிடும். எல்லாத் துறைகளிலும் நிபுணர்கள் ஆகிவிடுவார்கள். உண்மையோடு ஒட்டிப் பேசுவார்கள். தில்லை நடராஜர் கோயில் திருவாதிரை உத்ஸவத்தில் பக்த ஜனங்களுக்கு ரிட்டயர்ட் ஜில்லா ஜட்ஜ் ஒருவர் ஆங்கிலத்தில் இரண்டு மணி நேரம் பேசினார் என்ற அபவாதம் ஏற்படுமா?

அர்த்தம் இல்லாமல் பேசுகிறது என்பது அளவற்ற கேட்டுக்கு விளை நிலம்.

நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று.

-என்றார் குறளாசிரியர். இப்போது எங்கே பார்த்தாலும் பயனில் சொல்லைத்தானே காண்கிறோம். காரணம், மேலே சொன்னபடி மூன்று: வடமொழி, இங்கிலீஷ், செந்தமிழ்.

டி.கே.சி. சொன்னதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது மூன்று:

1. சடங்குகள் பொருள் பொதிந்தனவாக இருக்க வேண்டும்.

2. கேட்பவர்களுக்குப் புரியக்கூடிய மொழியில் சடங்கு மந்திரங்கள் அமைய வேண்டும்.

3. மேற்சொன்னவாறு சடங்குகள் அமைந்துவிட்டால், சமுதாயத்தில் ஆனந்த வளம் பெருகும். விஞ்ஞானம், தத்துவம், கலை, கல்வி எல்லாம் மேலோங்கி வளரும்.

'மொத்தத்தில், ஆனந்தத்தை வளர்ப்பதற்கு உரிய வழிகளை அறிந்து பிராமணர்கள் தம் சமுதாயப் பழக்கங்களையும், சடங்குகளையும் அமைத்திருக்கிறார்கள். ஆனால், பிராமணர் அல்லாதாரோ, துன்பத்தை நீடிக்கச் செய்யும் வகையில் பல பழக்கங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள்' என்று அடிக்கடி டி.கே.சி. சொல்வார்கள்.

'உதாரணமாக, ஒரு பிராமணன் வீட்டிலே மரணம் ஏற்பட்டால் உடனே பிரேதத்தை இழுத்துக்கொண்டு வந்து ரேழியில் போட்டு, அக்கம்பக்கத்தாரை எதிர்பார்க்காமல் தகனக் காரியங்களை முடித்துவிடுவான். ஆனால், பிராமணர் அல்லாதவன் இழவுச் சடங்கை 16 நாள் இழுத்துக் கடத்தி, தன்னைத் துன்புறுத்திக் கொள்வதோடு மற்றவர்களையும் துன்புறுத்துவான். கலியாண காரியம் ஆனந்தத்தைக் கொடுப்பதால், பிராமணன் அதை நாலைந்து நாள் நீட்டிவைத்து அனுபவிப்பான். ஆனால், 'நம்ம பயல்' ஒரே நாளில் அதை, சட்புட்டென்று முடித்துவிடுவான்' என்று ஆற்றாமைப்படுவார்கள் டி.கே.சி.

ஆனால், சைவ மடங்களிலாவது ஆனந்தம் கொடுக்கும் சடங்குகளைக் காப்பாற்றி வருகிறார்களே என்று டி.கே.சி. திருப்தி அடைவார்கள். தருமபுரம் மடத்தில் தங்கியிருந்தபோது அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு:

'இரண்டு நாளாக மடத்தில் தங்குகிறோம். தமிழ் நாட்டுப் பண்பாடு நிறைந்த நிலையத்தில் தங்குகிறோம். மகாசந்நிதானம் நடத்துகிற பூஜையும், பக்தியும் வெகு ரம்மியமானவை. சைவத்தின் அழகும், ஆனந்தமும் மனதுக்கு உவந்தவை. இத்தகைய சமயப் பண்பாட்டை வேறு எங்கும் காண முடியாதுதான்.

சாந்தி நிகேதனத்துக்குப் போய்த்தான் இருக்கிறேன். சமயப் பண்பாடு என்றால், வறண்ட நிலைதான். கிறிஸ்து மார்க்கத்தின் சாயல்தான். பிரார்த்தனைக்கான இடத்தைச் சுற்றிக் கல்லறைகள் இல்லை. அவ்வளவுதான்.

இங்கோ மூர்த்தி என்ன, தீபாராதனையின் அழகு என்ன, பாடல் என்ன! எல்லாம் கண்ணையும், மனதையும் கவர்ந்துவிடுகின்றன. சாந்திநிகேதனில் எல்லாம் லெக்சர்தான்.'

கவி ரவீந்திரநாத் தாகூர், ஆனந்த அனுபவம் நிறைந்தவர்தான். ஆனாலும் அவருடைய ஆனந்தத்தை அவருக்குப்பின் வரும்

சந்ததியாருக்கு அவரால் வழங்க முடியவில்லை. ஆகவேதான் சாந்தி நிகேதனத்தில் எஞ்சி நிற்பது எல்லாம் விருதா லெக்சர்தான் (வீண் லெக்சர்) என்பது டி.கே.சி-யின் கருத்து.

அப்படியானால், ஆனந்தத்தை ஒரு சமுதாய அனுபவமாக நிலைநிறுத்துவதற்கு வழி என்ன என்பதை 'சரஸ்வதி அல்லது மனோ தத்துவம்' என்ற, 'இதய ஒலி' கட்டுரையில், மிகுந்த நுணுக்கத்தோடும் கலைப் பாங்கோடும் டி.கே.சி. எடுத்து விளக்கி இருக்கிறார்கள். அவர்களுடைய விளக்கத்தைச் சற்றுக் காது கொடுத்துக் கேட்போம்.

டி.கே.சி. பேசுகிறார்:

"இயற்கை தன் மடிக்குள் ஒளித்து வைத்திருக்கிற அதிசயங்களைக் கண்டுபிடிக்க முயல்வதிலும், கண்டுபிடிக்கிற திறத்திலும், கண்டு பிடித்தவுடன் உண்டாகும் ஆனந்தத்திலும் மனிதன் தனித்தே நிற்கிறான். இதோடு நிற்கவில்லை; அந்த ஆனந்தத்தை மற்ற மக்களுடன் கூடி அனுபவிப்பதிலும், தலைமுறை தலைமுறையாக மக்கள் சமுதாயம் அனுபவிக்கும்படியான விழாக்கள் ஏற்படுத்துவதிலும், நூல்கள் எழுதி வைப்பதிலும் அப்படியே தனித்து நிற்கிறான்.

சூரிய கிரகணம் பத்து நாழிகைக்கு ஆரம்பிக்கும் என்றால், ஒன்பதரை மணிக்கே முற்றத்திலும், தெருவிலும் வந்து அண்ணாந்து பார்க்க ஆரம்பித்துவிடுவார்கள்.

கிரகணம் பிடிக்க ஆரம்பித்தவுடன் ஐந்து வயதுப் பேரன் அறுபது வயதுப் பாட்டனுக்குச் சுட்டிக் காட்டுகிறான். அப்படியே மாறி, பாட்டன் பேரனுக்குக் காட்டிப் பரவசமாகிறான். பெண்டுகள் தாளிதத்தையே விட்டுவிட்டு முற்றத்துக்கு ஓடி வந்து அண்ணாந்து பார்க்கிறார்கள். அடுத்த வீட்டு அக்காளையும், பாட்டியையும் உரக்கக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்கிறார்கள். அவர்களும் அண்ணாந்து பார்த்து கன்னத்தில் கைவைத்த வண்ணமாக அதிசயித்து நிற்கிறார்கள். இவை எல்லாம் உண்மை ஒன்றைக் கண்டுகொள்வதில் உண்டாகும் உவகையிலிருந்து நிகழ்கின்றன.

இப்படி உண்டாகிற சமுதாய உணர்ச்சியிலும், உத்ஸாகத்திலும் இருந்துதான் சூரிய கிரகணத்தையே விழாவாக ஏற்படுத்தி ஆயிரக் கணக்கான வருஷங்களாகக் கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

சூரியன் தெற்கு ஓரத்திலிருந்து வடக்கு முகமாகச் செல்ல ஆரம்பிக்கும் முறைமையைக் கண்டு அனுபவித்து சங்கராந்திக் கொண்டாட்டம் ஏற்பட்டது. அப்படியே, ஆடி மாதம் காவேரிக்கரை எல்லாம் பதினெட்டாம் பெருக்கின் விழாக் கொண்டாட்டம்.

ஆகவே, இயற்கையில் நிகழும் நிகழ்ச்சிகளில் பதுங்கிக் கிடக்கும் உண்மையைக் கண்டுகொண்ட மாத்திரத்தில் மக்களுக்கு மனம் பூரிக்கிறது.

மக்கள் ஒழித்த மற்றப் பிராணிகளிடத்தில் முடியாத காரியம் இது. எந்த மாட்டு மந்தையாவது சூரிய கிரகணத்தை அண்ணாந்து பார்க்குமா? அண்ணாந்து பார்ப்பதை அதால் செய்ய முடியுமா?"

இவ்வாறு விளக்கம் கொடுத்துவிட்டு, சரஸ்வதியை வெண்தாமரை மலர் மேல் உட்கார்த்தி வைத்திருக்கிறோமே, அந்தச் சடங்கின் மர்மத்தை டி.கே.சி. சொல்கிறார்கள்:

"பேரண்டத்திலுள்ள பொருட்களில் எல்லாம் சிறந்த பொருள் மனிதன். மனிதனிடத்தில் உள்ள பொருட்களில் எல்லாம் சிறந்தது மனது. இத்தகைய அதி அற்புதமான பொருள் - மனது - எப்படி உற்பத்தியாயிற்று, ஏன் மற்ற ஜீவராசிகளிடத்தில் காணப்படுவது இல்லை என்றெல்லாம் மக்களில் சிலர் எண்ண ஆரம்பித்தனர். ஜடப் பொருளான நம் உடலுக்குள் மனதின் தத்துவங்கள் ஒவ்வொன்றாக வளர்ந்து தெளிவடைந்து பிரகாசிப்பதை நோக்கும் போது, 'இருள்மயமான' தண்ணீர்த் தடாகத்திலிருந்து முளைத்து எழுந்து மலர்ந்த வெண்தாமரை மலர் ஞாபகத்துக்கு வருதல் இயல்பு. வெண்தாமரை ஒன்று பூப்பதில் எவ்வளவோ அற்புதம், எவ்வளவோ தெய்வீகத் தத்துவம். அப்படியே, உள்ளுணர்வு முளைத்தெழுந்து வளர்ந்து பிரகாசிப்பதிலும் எவ்வளவோ அதிசயமும் தெய்வீகத் தத்துவமும் நிறைந்து கிடக்கின்றன. இத்தகைய கருத்துக்களில் இருந்து, 'சரஸ்வதி' என்ற தெய்வத்தை உள்ளத்தில் பாவனை செய்யவும், அந்தத் தெய்வத்தைச் சமரசப் படுத்தி அந்த வெண்தாமரை மலரின் மீதே ஏற்றி வைக்கவும் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் வெள்ளைக் கலையும், வெள்ளைப் பணியும் அவளுக்குக் கிடைத்தன."

இப்படியாக, சமயக் குறியீடுகளுக்கும், அடையாளங்களுக்கும், சடங்குகளுக்கும் டி.கே.சி. வியாக்யானம் கொடுப்பார்கள். பிறைச் சந்திரனையும், கங்கையையும் சிவன் தலை மேலே ஏற்றி வைத்ததற்கான காரணங்களைத் தெளிவு செய்வார்கள். நடராஜ மூர்த்தியின் ஆனந்த நடனத்தை விளக்கிவிட்டு, அவர் காலடியில் முயலகனை இடைச் செருகலாகச் செருகிவிட்டார்கள் பிற் காலத்தார் என்று சொல்லிக் கண்டிப்பார்கள்.

ஒரு மரப் பொந்து கிடைத்துவிட்டால் போதும். அதற்கு மாணிக்கவாசகர் ஒரு திருவிழாவே நடத்திவிடுவார் என்று சொல்வார்கள். மருத மரத்தைப் பார்த்தாராம் திருவாசக ஆசிரியர்.

அந்த மரத்தில் கடவுள் தத்துவம் நிறைந்திருப்பதை உணர்ந்தார். மருத மரத்தின் கம்பீரமும் தொன்மையும் அவருக்குக் கடவுளை ஞாபகப்படுத்தின. அதுவும், பொந்து விழுந்த மிகத் தொன்மையான மரமாக இருந்தது. ஆகையால்தான், பழமைக்கும் பழமையான பரம்பொருளை அது நினைவுறுத்தியது. உடனே பாடுகிறார்:

அந்த இடை மருதில் ஆனந்தத் தேன் இருந்த
பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ?

இப்படியாக, பொந்துக்கும், அறுகம்புல்லுக்கும் விழாக் கொண்டாடினார்கள் நம்முடைய மூதாதையர் என்பதை அடிக்கடி உணர்ச்சியோடு எடுத்துச் சொல்வார்கள் டி.கே.சி.

அவர்கள் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன் திருவாதிரை அன்று காலை 5.30 மணிக்கு, சித்திரசபையிலிருந்து வரும் நாகஸ்வர இசையைக் கேட்டுக்கொண்டே டி.கே.சி. எழுதிய ஒரு கடிதத்தைக் குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை முடித்துவிடுகிறேன்.

கடிதம் கீழ்க்காணுமாறு பேசுகிறது:

'இன்று இங்கே அழகாக திருவாதிரை உத்ஸவம். சித்திரசபையில் நடராஜ மூர்த்தி பச்சை சாத்தி எழுந்தருளுகிறார். நடன தீபம் எல்லாம் வெகு அழகாக இருக்கும். பக்த கோடிகளுக்கு என்றே அருவி ஓடி வந்து 'திம்திம்' என்று விழுந்துகொண்டு இருக்கிறது. நடனத்துக்கான தாளத்துடன் விழுகிறது.

அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே – அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கிமாரே
இன்ப வடிவாய்ச் சபையில் பாங்கிமாரே – நடம்
இட்டவர் மேல் இட்டம் வைத்தேன் பாங்கிமாரே.

கற்பனை எல்லாம் கடந்தார் பாங்கிமாரே – என்தன்
கற்பனைக்குள் படுவாரோ பாங்கிமாரே
கல் மனம் எல்லாம் கரைப்பார் பாங்கிமாரே – மனம்
கரையார் என் அளவிலே பாங்கிமாரே

மண்ணையும், விண்ணையும் சேர்த்து அனுபவிக்கிறார் ராமலிங்க சுவாமிகள். பாடலும் விண்ணுக்கும் மண்ணுக்குமாகத் துள்ளிப் பாய்கிறது.

சித்திரசபையிலிருந்து எழுந்தருளி கோயிலுக்கு இறங்குகிறார் நடராஜப் பெருமானார். காலை 5.30 மணி. மேள வாத்தியம் கேட்கிறது.'

13. டி.கே.சி-யும் எழிலியலும்

எழிலியலில் (aesthetics) உள்ளத்தைப் பறிகொடுத்தவர் ரசிகமணி டி.கே.சி. நேர்க்கோட்டில் அழகு அவ்வளவு இருப்பதில்லை. ஆனால், வளை கோட்டில் அழகு அதிகம் இருக்கிறது என்று சொல்வார். ஆனால், நேர்கோடு நேர்மையையும் அசையாமையையும் குறிக்கிறது. ஒரு கோபுரத்தில் அல்லது நெடுஞ் சுவரில் உள்ள நேர்க்கோடு என்றுமே அசைக்க முடியாததோ என்ற எண்ணத்தை நமக்குக் கொடுக்கும் என்பார் டி.கே.சி.

உதாரணமாக, ஒன்றை எடுத்துச் சொல்வார். இலங்கைத் தீவில் கோட்டை மதிலும் கோபுரமுமாக எழுந்து நிற்கின்றன. எங்கே நிற்கின்றன? சமுத்திரக் கரையோரத்தில் நீருக்குள் இருந்தே எழுந்து நிற்கின்றன. பெரும் பெரும் அலைகள் வந்து மதில்கள் மீதும் கோபுரத்தின் அடியிலும் மோதுகின்றன. அப்படி மோதுவதைப் பார்த்தால், 'ஏதோ, 'நிலையாமை, நிலையாமை' என்று சொல்கிறார்களே, அதற்கு எல்லாம் மாறாக, என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மையை இதோ பார்க்கிறோமே கல் மதிலிலும் கோபுரத்திலும்' என்று சொல்லத் தோன்றும்;

நிலை கிடந்த நெடு மதிட் கோபுரத்து
அலை கிடந்த இலங்கையின் அண்ணலை

(நிலை கிடந்த - அழியாத நிலைத்த தத்துவம் கிடந்த)

ஆனால், பனை மரம் நேர்க்கோடாகத்தான் நிற்கிறது. அதை நம்மால் நெடு நேரம் பார்த்து அனுபவிக்க முடியவில்லை. ஏன்? நம் கண்ணும் மனதும் அதில் நின்று நிலைத்து அனுபவிப்பதற்கு அதில் வசதிகள் வைக்கப்படவில்லை. முண்டும் முடிச்சுமாக இருக்கும் மஞ்சணத்தி மரம் எத்தனையோ கோணல்களோடு நிற்கிறது. அந்தக் கோணல்களில் நின்று தங்கி அனுபவிப்பதற்கு நம் மனதுக்கு முடிகிறது. அதன் முண்டு முடிச்சுகளை மணிக் கணக்காக நம் கண் பார்த்துக்கொண்டே இருக்கிறது. கண்ணை மேலுங் கீழுமாகவும், இடப்புறமும் வலப்புறமுமாகவும் புரட்டிப் பொருளின் அளவை நிதானித்துக்கொள்கிறோம். பார்க்கும் பொருள் பார்க்கப்படும் பொருளை ஊடுருவிப் பார்க்கிறது; பார்ப்பது எது, பார்க்கப்படுவது எது, பார்வை எது என்ற பேதங்கள் இன்றி ஒரு காட்சி கிடைக்கும்போது ஆனந்தம் கிடைக்கிறது. கலையின் மூலமாக இந்த இன்ப நிலையை அடையலாம் என்று கண்டவர்கள் நம் முன்னோர்கள்.

ஒரு பொருளை நினைக்கும்போது அதன் குணங்கள் சில, வேறு சில பொருட்களை நினைவுபடுத்திவிடும். ஆகவே, நினைவு - ஈர்ப்பினால் ஏற்படும் பொருளும் அந்தப் பொருளுக்கு ஏற்பட்டு விடுகிறது.

"ஒரு மரத்தில் கடவுள் தத்துவம் நிறைந்திருக்கிறது. மருதமரத்தின் காம்பீரியம், தொன்மை எல்லாம் கடவுளை ஞாபகப்படுத்துகின்றன. பொந்து விழுந்த பழைய மரமாக இருந்துவிட்டால் அதை அனுபவியாமல் இருக்க முடியாது. மாணிக்கவாசகர் அபாரமாக அனுபவித்தார். அத்தகைய தொன்மையான பொந்து விழுந்த மருதமரத்தை பாடினார்" என்பார் டி.கே.சி.

'எனக்குத் தந்தை கடவுள்தான். தாய், சுற்றத்தார், செல்வம் எல்லாமும் கடவுள்தான். என்னுடைய பாண்டி மன்னன்தான் அந்தக் கடவுள்.'

இப்படி அனுபவிக்கிறார் கடவுளை. கடவுளை அனுபவிக்கிற காரியமோ போரானந்தந்தான். ஆனந்தத் தேன்தான்.

எந்தை! என் தாய்! சுற்றம்! மற்றும் எல்லாம்! என்னுடைய
பந்தம் அறுத்து என்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்,
அந்த இடைமருகில் ஆனந்தத் தேன் இருந்த
பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ?

சதுரத்தைக் காட்டிலும் அமைதி நிறைந்தது வட்டம். வட்டத்தோடு ஆழமும் சேர்ந்துவிட்டாலோ, அதை ஆனந்தத் தேன் இருந்த பொந்தாக, இறைவனாகவே பரவி மகிழலாம். மகிழ்கிறார் மாணிக்கவாசகர்.

இப்படி ஒரு ரசிக மகரிஷியைப் பார்க்க முடியாதே என்ற ஆற்றாமையில் ராஜாஜி சொன்ன கூற்று இது:

"ஒரு கவியை விளக்கும்போது, டி.கே.சி. தம்மை மறந்து கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, கவிஞனுடைய கவிதைப் பட்டறையில் இருந்துகொண்டு அவனுடைய படைப்பாற்றலையும் உள் உணர்வையும் கண்டு அவற்றை நாம் புரிந்துகொள்ளும் மொழியில் எடுத்துச் சொல்வார்."

மாதிரிக்கு ஒரு கம்பன் பாடல்.

நேரம் நடு நிசி. அசோக வனம் நிசப்தமாக இருக்கிறது. யாரும் விழித்திருக்க மாட்டார்கள். ஆகவே, இப்போதே சென்று சீதையை காண்போம் என்று எண்ணுகிறான் மரத்தில் அமர்ந்திருக்கும் அனுமன்.

காண்டற்கு ஒத்த காலமும் ஈதே

அடுத்தாற்போல் கொஞ்சம் கீழேயுள்ள கிளையில் இறங்கிப் பார்க்கிறான். சீதையைச்சுற்றிப் பல அரக்கிகள் வட்டமிட்டு உட்கார்ந்து இருக்கிறார்கள். எச்சரிக்கையோடு விழித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் சுதாரிப்பாக இருப்பதைப் பார்த்தான். காவலுக்கு என்று ஓர் அதி தேவதை உண்டே, அந்தத் தேவதைக்குக் கொஞ்சம் அயர்ந்து தூக்கம் வந்தால், அதை ஓர் அடி அடித்து, “ஏய், என்ன தூக்கம்?” என்று சொல்லித் தூண்டிவிடுவார்களாம் அந்த அரக்கிகள். அவர்கள் முகத்திலோ கண்களிலோ சோர்வு கொஞ்சமும் இல்லையாம். அவர்களைப் பார்த்ததும் அனுமனுக்கு மனம் சோர்ந்துவிட்டது.

...தெறு காவல்
தூண்டற்கு ஒத்த சிந்தையினாரோ துயில்கில்லார்!

ஆனாலும், அந்தச் சமயத்தில் தன்னுடைய மந்திர சக்தி அனுமனுக்கு நினைவுக்கு வந்தது. உடனே அவனுக்குச் சிரிப்பு வந்தது. ‘இந்த அரக்கிகளுக்கு நான் ஒரு வேண்டுகோள் விட்டால், தூங்காமல் இருப்பார்களா?’ என்று நினைத்துச் சிரித்துக்கொண்டு ஒரு மந்திரத்தை ஜபித்தான். உடனே அரக்கியர் எல்லாம் மாண்டவர்போன்று ஒரு பேருறக்கத்தில் சாய்ந்துவிட்டார்கள்.

வேண்டத் துஞ்சார் என்று ஒரு விஞ்சை வினை செய்தான்.

காண்டற்கு ஒத்த காலமும் ஈதே – தெறு காவல்
தூண்டற்கு ஒத்த சிந்தையினாரோ துயில்கில்லார்;
வேண்டத் துஞ்சார் என்றொரு விஞ்சை வினை செய்தான்;
மாண்டற்கு உற்றாராம் என எல்லாம் மயர்வு உற்றார்.

இந்தப் பாட்டில் ‘தெறு காவல் தூண்டற்கு ஒத்த சிந்தையினாரோ துயில்கில்லார்’ என்ற வரிக்கு உரை ஆசிரியர் ஒருவருக்குக் உரை தெரியவில்லை. டி.கே.சி. கம்பனுடைய உள்ளத்தோடு இசைந்திருந்து பார்க்கும் உள்ளுணர்வு பெற்றிருந்த காரணத்தால், அவர் ‘தெறு காவல்’ என்றால் என்ன என்று விளக்கினார்.

காளி கோயில் முன்பு வாசலில் பயங்கரமான இரண்டு பெருத்த உருவங்கள் செய்து வைத்திருக்கும். பயத்தை உண்டாக்க வேண்டும் அல்லவா? கையில் பெரிய வாள் ஒன்றை ஏந்தி ஓங்கியவண்ணமாக இருக்கும். இவைதான் காவலுக்கு அதி தேவதைகளின் சிலைகள். மீறிச் செல்பவர்களை வாள்கொண்டு வெட்டிவிடும் (-தெறும்) என்பது குறிப்பு. அத்தகைய காவல் தெய்வத்தை, தூண்டற்கொத்த சிந்தையினரோ - தூண்டி ஜாக்கிரதை பண்ணக்கூடிய அரக்கிகளோ துயில்கில்லார் - தூங்கவே மாட்டார்கள். இவ்வாறு சொல்லி இந்தச் சொற்றொடரைப் புரிய வைத்தவர் டி.கே.சி.

"புராணக் கதைகளை நாம் கேட்கும்போது, சொல்லுக்குச் சொல் என்ன பொருள் என்று கண்டுபிடிக்கிறோம்" என்று சொல்வார் தாகூர். ஆனால், கதைகளின் உட்பொருளை நாம் தெரிந்து கொண்டால் அதன் பலனைப் பெறலாம். பகுத்தறிவில் மாத்திரம் நம்பிக்கை உடையவர்களும் ஏற்றுக்கொள்ளும்படி ரசிகமணி இப்பேர்ப்பட்ட கதைகளை எடுத்தச் சொல்லிவிடுவார். மாதிரிக்கு ஒரு கதை.

அவுணர்கள் என்ற வேண்டாத வர்க்கத்தவர் இருந்தார்கள். அவர்கள் உலகத்தில் உள்ள அரிய வஸ்துக்களை எடுத்துக்கொண்டு போய் சமுத்திரத்துக்குள் ஒளித்து வைத்துவிட்டார்கள். தேவர்கள் போய் அகத்திய முனிவரிடம் குறை இரந்தார்கள். விஷயத்தைத் தெரிந்துகொண்டு சமுத்திரத்தை உள்ளங்கையில் வாரி முகந்து அப்படியே உண்டுவிட்டார் அகஸ்தியர். தேவர்கள் உமிழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவரும் உமிழ்ந்தார். சிறந்த பொருள் எல்லாம் உலகத்துக்குக் கிடைத்தன. அதாவது உயர்ந்த கலைகள் மக்களுக்கு மீண்டு வந்தன. இதை கம்பர் பாடல் சொல்கிறது:

'பண்டு அவுணர் மூழ்கினர் படார் என வானோர்
எண் தவ! எமக்கு அருள்' எனக் குறை இரந்தார்
கண்டு ஒரு கை வாரினன் முகந்த கடல் எல்லாம்
உண்டு, அவர்கள் பின், 'உமிழ்க' என்றதும் உமிழ்ந்தான்.

இந்தக் கதையின் உட்கருத்து என்ன என்பதை டி.கே.சி. இவ்வாறு விளக்குகிறார்: 2,000 வருடங்களுக்கு முன்பு கிரேக்கர்கள் மிக உயர்ந்த பாணியில் கலைகளையும் இலக்கியங்களையும் அமைத்து வைத்திருந்தார்கள். அவர்களுடைய ரசிகத்தன்மை அபூர்வமாக இருந்தது. பிற்காலத்தில் ரோமாபுரியில் உள்ளவர்கள் கிரேக்கக் கலைகளைக் கற்கத் தொடங்கினார்கள். ஆனால், அந்தக் கலைகளின் உண்மைத் தத்துவமும் ரசமும் அவர்களுக்குப் பிடி படவில்லை. அதனால் இலக்கண கர்த்தாக்களும் வியாக்கியான கர்த்தாக்களும் புற்றீசல்போல் அவதரித்துவிட்டார்கள். உண்மை உணர்ச்சி குறையக் குறைய வியாக்கியான கர்த்தாக்களின் ஆதிக்கம் அதிகமாகப் போய்விட்டது. கலைக்கு அவர்கள் எல்லாம் அசுரர்களே ஆனார்கள். உண்மைக் கலையை, தாங்கள் எழுதி உள்ள கணக்கு இல்லாத வியாக்கியானங் களுக்குள் இருக்கிற இடம் தெரியாதபடி புதைத்துவிட்டார்கள். உண்மைக் கலை ஒன்று இருப்பதாக, அவர்களுக்குச் சொல்ல முடியாமலேயே போயிற்று.

இந்த நிலையில் பெரியவர் ஒருவர் வியாக்கியான கர்த்தாக்களையும் அவர்களது படாடோபங்களையும் கண்டித்து

ஒதுக்கத் தலைப் பட்டார். அதற்காக எவ்வளவோ நூல்களை எத்தனையோ ஆண்டுகளாக ஆராய்ந்தார். ஆராய்ந்ததன் பலனை உலகத்துக்கு எடுத்துச் சொன்னார். மறைந்து போன பூர்வ கலை அவரால் மக்களுக்கு உதவ வந்தது. (இது நடந்து 500 வருடங்கள் ஆகிவிட்டன)- சவனரோலா என்பது அவருடைய பெயர்.

உயர்ந்த பண்பாடுகள் மறைந்துபோகவும் மறுபடி அவற்றை மீட்டது கம்பர் காலத்திலேயே. ஆதிபூர்வ காலத்திலும் அப்படியே கதைகள் மறைந்து, அகத்திய முனிவர் அவற்றை விரிந்த ஆராய்ச்சியினால் மீட்டு உலகத்துக்கு உதவினார்.

இதையே கம்பர் அடையாள மொழியில் புராண உருவத்தில் சொல்கிறார்.

இந்த அற்புதமான விளக்கம் பகுத்தறிவாளர்களுக்குக்கூட ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது.

14. டி.கே.சி. நூற்றாண்டு விழா

மாண்புமிகு டாக்டர் ம.பொ.சி. அவர்களே, மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களே, முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர், ஜஸ்டிஸ் இஸ்மாயில் அவர்களே, மற்றும் இங்கு கூடி இருக்கும் பெரியோர்களே!

ரசிகமணி நூற்றாண்டு விழாவை இன்று தமிழக அரசே மேற்கொண்டு நடத்தத் தொடங்கி இருக்கிறது என்றால் இது வெறும் ஆடம்பரம் அல்ல. ரசிகமணி வாழ்க்கையில் உள்ள அருமைப்பாடுகளை நன்றாக உணர்ந்த காரணத்தால்தான் தமிழக அரசு இந்தக் கொண்டாட்டத்தில் ஆர்வத்தோடு பங்கெடுத்துக் கொள்கிறது.

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம்.ஜி.ராமச்சந்திரன் ரசிகமணியை எவ்வளவு தூரம் ரசித்து இருக்கிறார்கள் என்பது அவர்களுடைய பேச்சுக்களில் இருந்து நன்றாகத் துலங்குகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் முதல்வர் பேசும்போது, "ரசிகமணி டி.கே.சி. கல்கியில் பல ஆண்டுகள் கம்ப ராமாயணத்தின் அழகுகளை எடுத்துச் சொல்லாமல் இருந்திருந்தால் கம்ப ராமாயணம் இருந்த இடம் தெரியாமல் போயிருந்திருக்கும்" என்று சொன்னார்கள்.

வள்ளுவர் கோட்டத்தில் வள்ளுவர் விழாவில் சென்ற ஜனவரி மாதம் பேசும்போது முதல்வர், "'இதுதான் கம்பன், இது கம்பன் இல்லை' என்று ரசிகமணியைப்போல துணிச்சலோடு சொன்ன தமிழ்ப் புலவர் எவராவது உண்டா? ஒவ்வொரு தமிழனும் ரசிகமணியின் வாழ்க்கையில் இருந்து இந்தத் துணிச்சலைக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று உறுதியோடு சொன்னார்கள்.

அதே விழாவில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர்.எம்.வீரப்பன் தம் பேச்சில், "தமிழர்க்குத் தமிழே துணை என்று ரசிகமணி சொல்லி இருக்கிறார்கள். இப்படி ஆழ்ந்த தமிழ் ஆர்வம் எத்தனை தமிழர்களுக்கு இருக்கிறது?" என்று மிகப் பூரிப்போடு கேட்டார்கள்.

அதோடு இன்று இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருக்கும் டாக்டர் ம.பொ.சி., முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர் ஜஸ்டிஸ் மு.மு.இஸ்மாயில், மாண்புமிகு நீதிபதிகள், மற்றும் பேரறிஞர்கள் ஆகியோரை மனக் கண்ணால் பார்க்கும்போது தமிழக அரசு மாத்திரமல்ல, தமிழக மக்கள் எல்லோருமே இந்த விழாவில் பெருமிதத்தோடு கலந்துகொள்கிறார்கள் என்ற மன நிறைவு ஏற்படுகிறது.

ரசிகமணி மரணப்படுக்கையில் இருந்தபோது என்னிடம் விடுத்த வேண்டுகோளை இந்தப் பேரவையில் எடுத்துச் சொல்ல வேண்டியது எனது கடமை என்று நினைக்கிறேன். 1953 டிசம்பர் மாதத்தில் குற்றாலம் ஐந்தருவிச் சாலையில் அவர்கள் வாழ்ந்த இல்லத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த டி.கே.சி. கட்டிலில் படுத்துக் கொண்டே என்னிடம், "சென்ற 40 - 50 ஆண்டுகளாகத் தமிழின் பெருமையைப்பற்றியும், கம்பர் கவிதையின் மேன்மையைப்பற்றியும் தமிழ் மக்களுக்கு எடுத்துச்சொல்லி வந்திருக்கிறேன். ஆனாலும்! தமிழ் மக்கள் நான் சொன்னதைச் செவிமடுத்துக் கேட்டதாகத் தெரியவில்லை. ஏதோ என்னோடு நெருங்கிப் பழகிய 5 - 6 பேர் தான் நான் சொல்லி வந்ததை ஓரளவு உணர்ந்துகொண்டார்கள். அவர்களும் என் கூற்றைப் பூரணமாக உணர்ந்துவிட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆகையால் உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் தமிழ் மக்களிடம் இதைச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். எதை? 'டி.கே.சி. என்ற ஒருவன் இருந்தான். அவன் 'தமிழைப் போன்ற உயர்ந்த மொழி உலகத்திலேயே கிடையாது. கம்பனைப் போன்ற உயர்ந்த கவிஞன் உலக இலக்கியத்தில் கிடையாது' என்று சொல்வான் என்பதை நீங்கள் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். மற்றவற்றையும் சொல்ல வேண்டும். 500 ஆண்டுகள் அல்லது 1,000 ஆண்டுகள் கழிந்த

பின்னாவது நான் சொன்னதை உண்மை என்று உலகமே ஒப்புக் கொள்ளும்" என்றார்கள்.

ரசிகமணி கட்டளைப்படி அவர்கள் வேண்டுகோளை இந்தப் பேரவையின் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன். இந்த வேண்டு கோளுக்குப் பின் இருக்கிற உறுதிப்பாடுதான் எப்பேர்ப்பட்டது? பன்மொழி ஞானமும், கவிதா ரசனையும் உள்ள ஒரு பேரறிஞருடைய அசைக்க முடியாத நம்பிக்கையை அல்லவா இந்த வேண்டுகோள் காட்டுகிறது? 'தமில் வால்க' என்று கூப்பாடு போடுகிறவர்களுடைய கூச்சலுக்கும், அறிஞர்களால் 'குற்றால முனிவர்' என்று பாராட்டப் படுகிற ரசிகமணியின் தீர்ப்புக்கும் வேறுபாடு தெரிந்த பேரவை இது. ஆகவேதான் கடைசிக் காலத்தில் ரசிகமணி என்னிடம் விடுத்த வேண்டுகோளை உங்களைுக்கு நினைவூட்டி அதை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு டி.கே.சி. வட்டத்தொட்டியின் சார்பில் என்னுடைய சொந்த வேண்டுகோள் ஒன்றைத் தமிழக அரசுக்குச் சமர்ப்பிக்கிறேன். ரசிகமணி பல ஆண்டுகள் வாழ்ந்து புனிதப்படுத்திய இரண்டு வீடுகளும் குற்றாலம் ஐந்தருவிச் சாலையில் இருக்கின்றன. அவை இரண்டும் எளிமையான ஓடு போட்ட வீடுகள். அந்த வீடுகளில்தான் எத்தனை எத்தனையோ பெரியார்கள் ரசிகமணியோடு உரையாடி விருந்து உண்டு அவர்கள் பரப்பிய ஆனந்தத்தை மாந்தி மாந்திச் சென்றிருக்கிறார்கள்.

கவர்னர் ஜனரல் ராஜாஜியும், ராமசாமிப் பெரியாரும், ருக்மணி தேவியும், டாக்டர் அருண்டேலும், ஜஸ்டிஸ் என்.சோமசுந்தரமும், பெருந் தலைவர் காமராஜரும் என்.எஸ்.கிருஷ்ணன் - மதுரமும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும், ராஜா சர் அண்ணாமலை செட்டியாரும், கவர்னர் ஸ்ரீபிரகாசாவும், சர் ஆர்.கே.சண்முகம் செட்டியாரும், திவான் பகதூர் ஆவுடையப்பப் பிள்ளையும். தெருத் தெருவாக அலைந்து, வீடு வீடாகச் சென்று பொடுட்களை விற்று வந்த 'பை இண்டியன் லீக்' கிருஷ்ண ஐயரும் ஃபாதர் தனிநாயகமும், 'ஹோட்டல் வெய்ட்டர்' ரரம ஐயங்காரும் கல்கியும் எம்.எஸ்ஸூம் ஜெயம்மாளும் பால சரஸ்வதியும் பண்டிதர்களும் பரமரர்களும் அந்த இரு வீடுகளில்தான் டி கே.சி-யோடு அளவளாவி அவர்களுடைய விருந்தோம்பலோடு கவிதையையும் கலையையும் ரசித்து நிறைவு பெற்றிருக்கிறார்கள்.

அந்த வீடுகளில் ஒன்றின் முன் வாசலில் ஒரு நாள் ரசிகமணி நின்றுகொண்டு குற்றால மலையையும் அருவியையும் அண்ணாந்து பார்த்து ரசித்துக்கொண்டு இருந்தார். அப்போது தூத்துக்குடி

வழக்குரைஞரும் சிறந்த அறிஞருமான ஏ.சி.பால் நாடார், ரெவரெண்ட் கெய்த்தான் என்ற அமெரிக்க மிஷனரியை டி.கே.சி-யிடம் அறிமுகப்படுத்துவதற்கு அழைத்து வந்தார்கள். ஐந்தருவிச் சாலையில் அவர்கள் ஏறி நடந்து வந்தபோது ஏறக்குறைய 100 அடிக்கு அப்பால் நின்றுகொண்டு இருந்த கெய்த்தான், "இது யார்?" என்று பால் நாடாரிடம் கேட்டார்.

"இதுதான் ரசிகமணி டி.கே.சி." என்று பதில் உரைத்தார் பால் நாடார். உடனே அந்த அமெரிக்கர் ஸ்தம்பித்துப் போய் ஒரு நிமிடம் நின்றார்.

பிறகு, "ஐரோப்பா அல்லது அமெரிக்கா பூராவும் தேடிப் பார்த்தாலும் இப்படி ஒரு முகத்தைப் பார்க்க முடியாது" என்று சொல்லி அதிசயத்தில் மூழ்கினார். ரசிகமணியின் பாதங்கள் பட்ட புனிதமான வீடுகள், அவர்களுடைய கவிதையின் இன்ப நாதத்தை எதிரொலித்துக்கொண்டு இருக்கும் அந்த வீடுகள் இரண்டுமே திருக்குற்றால தேவஸ்தானத்துக்குப் பாத்தியப்பட்டவை. தமிழக அரசு தேவஸ்தானத்திடமிருந்து அவற்றை விலைக்கு வாங்கி அவற்றை டி.கே.சி-யின் நினைவு இல்லங்களாக அல்லது நூல் நிலையங்களாக அமைத்துச் சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கூட்டத்துக்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் வந்திருக்கிறார்கள். இந்த வேண்டுகோளை அரசின் சார்பில் அவர்களை ஏற்றுக்கொள்ளும்படியும் வேண்டுகிறேன்.

வாழ்க டி.கே.சி. நாமம்! வாழ்க தமிழும் கம்பனும்!

வி.ஐ.பி. பார்வையில்...



நீதியரசர் மகராஜன் என்ற மாமனிதர் தோன்றி நூற்றாண்டு நிறைகின்ற காலம் இது. அந்த அறிஞர் பெருமகன் பல நூற்றாண்டுகள் நினைக்கப்படுவதற்கான அரும் பணிகள் ஆற்றி இருக்கிறார்.

ஷேக்ஸ்பியரின் கவிகளை மொழிபெயர்த்துத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியதும் கம்பனின் கவிகளை மொழிபெயர்த்து ஆங்கிலத்துக்கு அறிமுகப்படுத்தியதும் வேறு எவரும் ஆற்றியிராத தனிச் சிறப்பு.

ரசிகமணி டி.கே.சி-யின் ரசிக வாரிசு என்று நீதியரசர் மகராஜனை மட்டுமே சொல்ல முடியும். ‘ஆனந்தமே கடவுள்; கடவுளே ஆனந்தம்’ என்பதுதான் நீதியரசர் மகராஜனின் வாழ்வியல் தத்துவம். மனிதனே ஆனந்தத்தின் குழந்தைதான்; கடவுளே ஆனந்தத்தின் தேடல்தான். இதைத் தன் ஆசான் ரசிகமணி மூலமாக நெஞ்சார உணர்ந்துகொண்டார்.

அந்த மாமனிதரோடு நான் பழகிய நாட்கள் சுகமானவை. தமிழ்நாடு சட்டத் துறை ஆட்சி மொழி ஆணையத்தில் அவர் தலைவராகவும் நான் ஓர் அலுவலராகவும் பழகிக்கொள்ளவில்லை. தந்தை மகன் என்ற பாசத்தோடு பழகி வந்தோம்.

பொதிகைக் காற்று குற்றாலத்தில் வீசும் காலம் வரை தமிழ் உலகில் அவர் புகழ் வீசிக் கொண்டே இருக்கும்!

– கவிப்பேரரசு வைரமுத்து

விகடன் பிரசுரம்

AADA THERIYADHA KADAVUL

₹ 150

ISBN 978-81-8476-437-6

9788184764376